உ

# சமரச ஞானக் கோவை

ஆசிரியர்:
க. இராமச்சந்திரன்

பதிப்பகம்:
ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி,
இலங்கை.

1967.

# சமரச ஞானக் கோவை

ஆசிரியர்:
க. இராமச்சந்திரன்

பதிப்பகம்:
ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி,
இலங்கை.

1967.

முதற் பதிப்பு - ஜூன், 1967.—1000 பிரதிகள்.

உரிமை நூலாசிரியருக்கே.

விலை: ரூபா. 5/-

அச்சுப்பதிவு: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம், நாவலப்பிட்டி.

# பதிப்புரை

சில நூல்களை அச்சேற்றும்போது அச்சேற்றப்படும் நூல் குறித்த அச்சகத்திற்குப் புகழைத்தேடிக் கொடுக்கின்றது. வேறு சில நூல்கள் அச்சகத்தினால் பெருமையும் சிறப்பும் பெறுகின்றன. இந்த வகையில், இன்றைய மெய்ஞ்ஞான – விஞ்ஞான உலகு வேண்டிநிற்கும் ஓர் முக்கிய தேவையை மிக அழகாகப் பூர்த்தி செய்யும் இச்''சமரச ஞானக் கோவை''யை அச்சேற்றியதனால், ஸ்ரீ ஆத்ம ஜோதி அச்சகமானது, புகழும் புண்ணியமும் ஈட்டியுள்ளதெனத் தயங்காமற் கூறலாம்.

ஆத்மஜோதி நிலையம் வேறு, இந்நூலின் ஆசிரியர்: திரு. க. இராமச்சந்திரனார் வேறல்ல. அவரின் தீர்க்கதரிசனமே ஆத்மஜோதி மலர்; உலகுய்ய உதித்த உத்தமர்கள் பலரிடமிருந்து அவர் தேடித்தந்த ஆசியே, இந்த நிலையத்தின் மூலநிதியாகும்.

இற்றைக்குப் பத்தொன்பது ஆண்டுகட்கு முன் ''ஆத்மஜோதி'' என்னும் திங்கள் வெளியீடு மூலம் சமரச ஞானப் பணியை ஆரம்பிக்கு முன்னரே, திரு. இராமச்சந்திரனார் இலங்கை வானொலிமூலமும், வீரகேசரி, தினகரன், இந்துசாதனம், ஈழகேசரி முதலாய பத்திரிகைகள் மூலமும், சமயசமரஸத் தொண்டைச் செய்துள்ளார்கள். அதேதொண்டினையே, ''ஆத்மஜோதி''யின் கௌரவ ஆசிரியராகவிருந்து தொடர்ந்து செய்து வருகிறார். மேலும்சமரசத்தொண்டு, அவரால் ஆங்கிலத்தில் பன்னிரண்டு ஆண்டுகட்கு முன் ஆரம்பிக்கப்பட்ட ''சமய

மஞ்சரி'' (Religious Digest) என்னும் சஞ்சிகையின் மூலம் இன்று உலகெங்கும் பரவியுள்ளது.

எனவே, அவரது கட்டுரைகள் அநேகம்; பல ஆயிரம் பக்கங்கள் கொண்டவை. அவற்றிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவையே, இந்நூலில் அடங்கிய விஷயங்களாகும். விரிவஞ்சி விலக்கப்பட்டவைகளுள் அநேகம் முக்கியமானவை. அவற்றையும் சேர்க்க முடியாதுவிட்டது குறித்து வருந்துகிறோம். இரண்டாவது ''வால்யூம்'' ஒன்று அச்சிடக்கூடிய சந்தர்ப்பம் கிடைப்பின் அவைகளும் வெளிவரும். இந்நூலில், சேர்க்கப்பட்ட கட்டுரைகள், வெவ்வேறு சந்தர்ப்பங்களில், வெவ்வேறு பத்திரிகைகட்கும், ஆண்டு மலர்கட்கும் வழங்கப்பட்ட விஷயதானங்களிலிருந்து தொகுக்கப்பட்டமையால், ஒன்றில் வருங்கருத்துக்கள், பிறிதொன்றிலும் வந்துள்ளன. இது தவிர்க்க முடியாததொன்றென்பதை வாசகர்கள் நன்கறிவர்.

தமிழ்மொழிப்பணிக்கும், சமயத்தொண்டிற்கும், தங்கள்வாழ்க்கையைஅர்ப்பணித்துள்ளநான்குபெருமக்கள் அளித்தபாராட்டுரைகள், இந்நூல்விளக்கும் சமரசஞானக்கருத்துக்கள் இன்றையசமய உலகுக்கு எவ்வளவு முக்கியமானவையென்ற உண்மையைத் தெளிவாகவிளக்குகின்றன. முன்னுரைஉவந்தளித்த கலைமகள் ஆசிரியர்: திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கட்கும், சிறப்புரை அருளிய கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள் திருவடிக்கும், அணிந்துரை வழங்கிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கட்கும், மதிப்புரை உதவிய மதுரைச் சர்வகலாசாலை உபவேந்தர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கட்கும் எமது அன்பார்ந்த நன்றியைச் செலுத்துகின்றோம். இந்நால்வரையும், தமிழ்பேசும் நல்லுலகு முழுவதும் இன்று நன்கு அறியும். இந்

நூல், நீடூழி நிலவுவதற்கு இந்நால்வரின் ஆசியே போதிய சான்ருகும்.

எமது விண்ணப்பத்திற்கிணங்கி, நூலுக்கு அழகிய வெளியுறையை அச்சிட்டு உதவிய மெய்கண்டான் அச்சக அதிபர் திரு. நா. இரத்தினசபாபதி அவர்களுடைய பரநலத் தொண்டையும் வாழ்த்துகின்ருேம்.

இறுதியாக, இந்நூல் வெளிவரத் தோன்ருத் துணையாகவிருந்த தெய்வத் திருவருளுக்கும் மகான்களுடைய ஆசிக்கும் அஞ்சலிசெய்து, அடியார்கள் அன்பர்கள் பலரின் ஆதரவுக்கும் அன்புகனிந்த நன்றி கூறுகின்ருேம்.

ஆத்மஜோதி நிலையம்
நாவலப்பிட்டி, இலங்கை.
பிலவங்க ஞு ஆனி மீ 14உ,
28-6-1967.

நா. முத்தையா.
பதிப்பாசிரியர்.

''கலைமகள்'' ஆசிரியர்:

திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் உவந்தளித்த

# முன்னுரை

இன்று உலகம் முழுவதும் விஞ்ஞானத்தின் பெருமையைப் பாராட்டிப் பேசுகிறது. இந்த விஞ்ஞானத்தில் பலவகைகள் இருக்கின்றன. நாளாக ஆக ஒவ்வொருவகையும் விரிந்து பரந்து பலகால்களாகப் பிரிந்து செல்கின்றன. இந்த விரிவுக்கு எல்லையே இல்லை என்று தோன்றுகிறது. ''அறிதோறறியாமை கண்டற்றால்'' என்ற திருக்குறளின் பொருட்சிறப்பு இப்போது நன்றாக விளங்குகிறது. எத்தனையோ புதிய நுட்பங்களைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகள், தாம் காண்பதற்குரியவை இன்னும் பலப்பல என்று கூறுகிறார்கள்.

புறப்பொருள்களை ஆராய்ந்து, பூதங்களின் அமைப்பினுள் நுழைந்து யோசித்து, மேகமண்டலத்தையும் கடந்து வெளியூடே சென்று உலாவி, எத்தனையோ அற்புதங்களை நிகழ்த்துகின்றார்கள், விஞ்ஞானிகள். அவ்வளவும் சடப்பொருள்களின் ஆராய்ச்சி. எல்லாம் வெளிமுகச் சோதனை. அவற்றை நாம் பாராட்டத்தான் வேண்டும்.

ஆனால் விஞ்ஞான ஆராய்ச்சியின் முடிபுகளை உலகம் அறிந்து பாராட்டுவதற்கு முன்பே மெய்ஞ்ஞான ஆராய்ச்சி பாரத நாட்டில் நிகழ்ந்தது. சித்துப் பொருளைப்பற்றிய ஆராய்ச்சியாக, உண்முகச் சோதனையாக விளங்கிய அந்த மெய்ஞ்ஞான ஆராய்ச்சிக்கு உரிய ஆய்வுக் கூடமாக இந்தப்பாரதநாடு விளங்கியது. இந்த ஆய்வினால் கண்டுபிடித்த உண்மை முடிந்த முடிபாக இருக்கிறது. அதை மாற்றிச்சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

அந்த உண்மையைக் கடைப்பிடித்து வாழ்ந்து, அத ஞல்வரும் இன்பத்தை நுகர்வதே நம்முடைய கடமையாகும்.

இந்தப் பரமார்த்திக வாழ்வை வேதகால முதல் இந்தநாடு அறிந்து உலகமக்களுக்கும் போதித்து வருகிறது. அவ்வாறு வாழ்ந்தவர்கள் அனுபூதிமான்களாக இருந்து வந்திருக்கிஞர்கள். இன்றும் இருந்து வருகிஞர்கள். இனிப் புதியதாக உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பது இல்லை. கிடைத்த உண்மையை உணர்ந்து அனுபவம் பெறுவதற்குரிய நெறியில் நம்மைச் செலுத்துவதற்கு வேத முதலாய மெய்ஞ்ஞான நூல்கள் வழிகாட்டுகின்றன. உண்மையை உணர்த்தும் நூல்களைச் சாத்திரம் என்று சொல்கிறேம்.

வடமொழியாலும்தென்மொழியாலும் பல சாத்திரங்கள் தோன்றியுள்ளன. உபநிடதம் முதல் சிவஞானசித்தியார் வரையில் சாத்திரங்கள் அளவுக்கு அகப்படாமல் எழுந்திருக்கின்றன. உண்மையை உணர்ந்தஞானியர்கள் தம் அனுபவநிலையில் நின்று அந்த ஆனந்த அதிசயத்தால் பாடிய தேவாரங்கள் பல இருக்கின்றன. அவற்றை அப்பெரியார்கள் ஆனந்த விருந்துண்டதஞல் வந்த ஏப்பம் என்று சொல்லலாம்.

சாத்திரங்கள் அறிவுக்குத் தெளிவு தருபவை; தோத்திரங்கள் உணர்வை வளர்த்து அநுபவத்துக்கு வழிகூட்டுபவை. இந்த இரண்டுவகையிலும் அமைந்த வடமொழி தென்மொழி நூல்கள் பலப்பல.

இவற்றையெல்லாம் தெரிந்து கொள்வதன் பயன் நாமும் இந்தப் பரமார்த்திக நெறியில் வாழ

முயல்வதே. அன்பைப் பிடித்துக் கொண்டு, தூய் மையை வளர்த்து இறைவனுடைய அருளுக்காக ஏங்கி வாழும் வாழ்விலே தலைப்படவேண்டும்.

இறைவனை உருவமுடையவனாக வைத்து, அவனுடைய அருள்விளையாடல்களின் தத்துவத்தை உணர்ந்து வழிபடவேண்டும். உண்முகத்திலே விளக்காகவும் சுடராகவும், சோதியாகவும் வளரும்படி தியானித்து அமைதியான மோனஇன்ப வெள்ளத்தில் அமிழ்ந்து கிடக்கவேண்டும்.

இந்த அழகிய வழியைக் காட்டும் கட்டுரைகளை இந்தக் கட்டுரைக் கோவை தருகிறது. இந்தக் கட்டுரைகளின் அடிநாதமாக இருப்பது சமரசம்; அதன்மேல் எழும்பும் இசை அன்பு; அதனால் விளையும் இன்பம் உபசாந்தநிலை.

இதன் ஆசிரியர் வடமொழி நூற்கருத்துக்களை நன்கு உணர்ந்தவர். தமிழ்ச் சமய சாத்திர தோத்திரங்களில் தோய்ந்தவர். உலகத்து ஞானியர் பலருடைய அருள்மொழிகளைப் பயின்றவர். சமயவாதியாக வாழ்வதுபயன் அற்றது என்பதை உணர்ந்து சமயவாணராக வாழ முற்பட்டவர்.

சமயத்தை வாதப் பொருளாக்குவதால் வேறுபாடும், பிரிவு மனப்பான்மையும், விருப்புவெறுப்பும், அகந்தையுமே உண்டாகும். அதை வாழ்வதற்குரிய வழியாக்கிக் கொண்டால் அறிவிலே தெளிவு உண்டாகும், உணர்விலே உணர்ச்சியுண்டாகும், உயிரிலே அருட்பதிவு ஏற்படும்.

முற்கால ஞானியர் வரலாறுகளையும் வாய்மொழிகளையும் உணர்ந்ததோடன்றி இக்கால ஞானியர்களின் தொடர்பும் அவர்களுடைய வாய்மொழி

களில் அறிவும் உள்ளவர் திரு. இராமச்சந்திரனர். உலகத்து ஞானியருடைய உபதேசங் களில் ஒருமைப்பாட்டைக் காண்கிறவர். வட மொழி தென்மொழியிடையே பொதுமையைப் பார்க்கிறவர். வேதாந்த சித்தாந்தங்களின் ஒப்பு மையைத் தெரிந்தவர். இந்தப் பண்புகளை எல்லாம் இந்தச் சமரச ஞானக் கோவையிலுள்ள கட்டுரை கள் காட்டும்.

திருமூலர் திருமந்திரத்தையும், சிவஞானசித்தி யாரையும், குமரகுருபரர் திருவாக்கையும், தாயு மானவர் பாடலையும், அருட்பாவையும் நன்கு ஓதித்திளைத்த உள்ளத்தில் எழுந்த சமரச அலை களின் ஒலியை இவற்றிற் கேட்கிறோம். பகவத் கீதையையும், பாரதத்தையும், உபநிடதங்களையும் மதிப்புடன் அறிந்த விரிவான அறிவின் ஒளியை இவற்றிற் காண்கிறோம். லலிதாசகசிரநாமத்தையும் சௌந்தரிய லகரியையும் அபிராமி அந்தாதியையும் ஆழ்ந்து உணர்ந்து நுளைந்து எடுத்த முத்துக்களையும் பார்க்கிறோம்.

வேதாந்தமும் சித்தாந்தமும் கைகோத்து நட மாடுகின்றன இந்தக் கட்டுரைகளில், சிவனும் முரு கனும் அம்பிகையும் கண்ணனும் குலாவுகிறார்கள். மணிவாசகரும், சங்கரரும், ரமணரும் சிவானந் தரும் தம்முடைய குரலைக் காட்டுகின்றனர். கந்தன் காட்டும் விசுவரூபமும் கண்ணன் காட்டும் விசுவரூபமும் அருகருகே நின்று காட்சி அளிக்கின் றன.

சரித்திர ஆராய்ச்சியிற் கண்ட உண்மைகளையும் பிறநாட்டுத் தத்துவநூல்களிற் கண்ட கருத்துக் களையும், விஞ்ஞானிகள் கூறும் பொருள்களையும், அங்கங்கே பொருத்தமாகக் காட்டுகிறார் ஆசிரியர்.

சங்கராச்சாரியார் எல்லா மதங்களுக்கும் உரம் கொடுத்தவர் என்பதும், பகவத்கீதை உலகத்துக்கே வழிகாட்ட வந்த நூலென்றும் நம்புகிறவர் இவ்வாசிரியர். அறத்தின் வகையை உறுதியுடன் எடுத்துக் கூறும் திருக்குறளையும் அன்பின் கொழுந்தாக நிலவும் திருவாசகத்தையும் தலைமேல்வைத்துக் கொண்டாடுகிறவர்.

எதையும் தெளிவாகவும் யார் உள்ளமும் புண்படாதவகையிலும் நடுநிலையான பார்வையுடனும் சொல்லத் தெரிந்தவர் இவ்வாசிரியர். சக்தி வழிபாடு எவ்வாறு பழங்கால முதல் உலகம் முழுவதும் இருந்து வருகிறது என்பதைப் பல மேற்கோள்களுடன் காட்டியிருக்கும் பகுதிகள் அறிந்து போற்றுதற்குரியன. ''அன்னையின் பாதத்தை முத்தமிடுகிறவன் சொர்க்கத்திற்குப் போகிறான்'' என்று நபிகள் நாயகம் அருளியதை ஓரிடத்தில் மேற்கோள் காட்டுகிறார். ஆதி சங்கராச்சாரியாரைப்பற்றிக் கூறும்போது, ''அந்த மகா புருஷரை அத்துவித வேதாந்தியாக மாத்திரம் கருதுவோர், அவர் சைவத்திற்கும் வைஷ்ணவத்திற்கும் செய்த அருஞ்சேவையை அறியாதவர்களாவர் இந்துமதமென்னும் கற்பகதருவுக்குப் புத்துயிர் கொடுத்து, அதன் கிளைகள் மறுபடியும் உயர்ந்தும் விரிந்தும் வளர்ந்து சாந்த நிழல் பரப்பச் செய்தவர் அவரேயாம்'', என்று பாராட்டுகிறார். திருமூலரையும், பணிவாசகரையும், இராமகிருஷ்ணரையும், விவேகானந்தரையும், ரமண பகவானையும் போற்றி எழுதும் இடங்கள் பெருமக்களிடம் இவருக்குள்ள சிறந்த பக்தியைப் புலப்படுத்துகின்றன.

திருக்குறளையும், பகவத்கீதையையும் அடுத்தடுத்து வைத்துப் புகழுகிறார்; ''அறநூல்களுள் மிகச் சிலவே, உலகமக்கள் யாவர்க்கும் எக்காலத்தும் எந்

நிலையிலும் பயன்படும் சிறப்புப் பொருந்தியவை. இந்தமுறையில் தலைசிறந்து விளங்குவன இரண்டு: ஒன்று தமிழ்த்தாய் அளித்த திருக்குறள்; மற்றது ஆரியத்தந்தை அருளிய பகவத்கீதை. பாரதநாட்டின் பழம் பெருமை அன்றுபோல் இன்றும் உலக ளாவி நிற்பதற்கு முக்கிய காரணம் இவ்விரு நூல்களே எனில் மிகையாகாது".

அந்த அந்த மொழியிலுள்ள சிறப்புகளை உணர்ந்து காழ்ப்பின்றி அவற்றைப் பாராட்டும் தகைமை இவ்வாசிரியருக்கு இருப்பதை, "ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனிச்சிறப்புண்டு. தமிழுடன் பக்தியும் இனிமையும் இணைந்திருப்பதுபோல், வடமொழிக்கு மந்திரசக்தி பொருந்தியுள்ளது", என்பதனல் கொள்ளலாம். வேதாந்தமும் வைதிக சைவ சித்தாந்தமும் நாம் உய்வடைவதற்கு ஒரே வித வழிகாட்டிகள் என்பது இவர் கருத்து.

ஓர் அறைக்குள் இருப்பவனுக்கு அந்த அறை மட்டும் தெரியும். வீதியில் வந்து நிற்பவனுக்கு வீதி இருமருங்கும் தெரியும். குன்றின் மேல் ஏறியவனுக்கு மிக விரிந்த நிலப்பரப்புத் தெரியும். இதுபோலவே மனிதன் உள்ளத்தினல் உயர உயர அவனுடைய பார்வை விரியும். எல்லாவற்றையும் நடுநிலைமையில் நின்று பார்க்கும் விரிவு உண்டாகும். உயர்ந்த நிலையுலுள்ளவர்கள் சமரச நோக்கோடு எல்லாவற்றையும் பார்ப்பார்கள். அத்தகைய பார்வையை இந்தக் கட்டுரைகளின் வாக்கியங்கள் காட்டுகின்றன. ஆகவே யார் படித்தாலும் விருப்புடன் படிக்கும் வண்ணம் அமைந்துள்ளன இதில் உள்ள கட்டுரைகள்.

தெளிவும் விரிவும் உடைய அறிவே மனிதனை உயர்த்தும். அன்பே அவனுக்கு வளர்ச்சியை உண்

டாக்கும். இந்த அறிவும் அன்பும் ஒருங்கிணைந்த உள்ளத்திலிருந்து எழுந்த மணிக்கருத்துக்களை இந்த அழகிய சமரச ஞானக் கோவையிலே காண்கிறோம்.

கோவையை வாழ்த்துகிறேன்! இதனைத் தந்த கோவையும் வாழ்த்துகிறேன்!!

**கி. வா. ஜகந்நாதன்.**

''காந்தமலை''
கல்யாண நகர்,
சென்னை.
28-6-67.

## யோக சமாஜம், சென்னை.

ஸ்தாபகர்—தலைவர்

மகரிஷி, கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

அருளிய

# சிறப்புரை

### அரிய அறிவுச் சுரங்கம்

இலங்கை என்றால் ஒரு நெடுந்திருவாளர் என் முன் நிற்பார். அவரே க. இராமச்சந்திரனார். அவரது சொல்லும் அழுத்தம்; செயலும் அழுத்தம் அவர் உள்ளம் உலகுள்ளம். அதில் துடிப்பது ''நான்'' என்னும் தூய ஆன்மா. இந்த ஆன்மவுணர்வினால் உந்தப்பட்ட இல்லறத்துறவி நமது இராமச்சந்திரர். அவர் ஆங்கிலமும் தமிழும் ஆழ்ந்து கற்றவர், உலக வாழ்விலும் உயர்ந்த அளவில் நடாத்தி வெற்றி பெற்றவர். இலங்கையின் புகைவண்டி நிலையங்களைத் தகைபெற நிர்வகித்தவர். இல்லற வாழ்விலும், நிறைமுறையான வெற்றி பெற்றவர். இராமச்சந்திரர் செயல் வீறு பெற்ற செம்மல். சமயவுணர்ச்சிக்குப் புதிய எழுச்சி தந்து இலங்கையில் ஒரு தெய்வீக ஒளி பரப்பினவர் இராமச்சந்திரர். எனது இலங்கைச் சுற்று விழாவில் அணுக்கத்துணைவராயிருந்து அவர் செய்த பேருதவியை மறக்க முடியாது.

Religious Digest, ஆத்மஜோதி, ஆகிய இரண்டுமலர்களால் அவர் உலகில் அருள் மணம் பரப்பி வருகிறார். அவரது ஆங்கிலக் கட்டுரைகளை அறிஞர் நன்கு வரவேற்றனர். இப்போது அவரது தமிழ்க்

கட்டுரைகள் நூலாக வந்துள்ளன. ஒவ்வொரு பக்கமும் செவ்விய கருத்துடையது. தாயுமானூர் முதல் யோக சுவாமிகள் வரையில் உலகின் அருளாளர் உள்ளம் அதில் துடிக்கிறது. அத்துவா மார்க்கம் முதல் ஸ்ரீ சக்கர ரகசியம் வரை எத்தனையோ தத்துவப் பொக்கிஷமாக விளங்கும் இந்நூலைத் தமிழுலகம் படித்து நலம் பெறவேண்டும். உள்ளிருந்து மலர்ந்த தெள்ளிய மலர்த்தேனை அள்ளிப் பருகி அமரராவோம்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!
அன்பே நிறைக அருளே பெருக!

3-6-67. சுத்தானந்த பாரதி.

யாழ்ப்பாணம், திருநெல்வேலி ஆசிரியர் கலாசாலை
முன்னைநாட் பேராசிரியரும்
கந்தப்புராணம் தக்ஷகாண்டப் பேருரையாசிரியருமான
**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்**
வழங்கிய

# அணிந்துரை

திரு. க. இராமச்சந்திரன் அவர்கள் தெய்வ பக்தி முதிர்ந்து கனிந்ததோரன்புக்கனி. சமயதத்துவம், இலக்கியம், கவிதை, சரித்திரம், வானசாத்திரம் என்றற்றொடக்கத்துப் பல்வேறு துறைகளில் முழுகித் திளைத்தவர்கள் அவர்கள். காலந்தோறும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு ஆத்மஜோதி முதலிய இதழ்களில் அவர்கள் எழுதிய கட்டுரைகள் பல துறைப்பட்டவைகள். அவைகள், அவ்வத்துறை கைவந்தவர்களுக்குச் சிறப்பாகப் பயன்படுதல் மாத்திரையினமையாது, சமய பத்தியை வளர்த்தலினலே யாவருக்கும் பொதுவாகவும் பயன்படுபவை.

ஒவ்வோரிதழிலும் பத்தி என்கின்ற தேன்துளி சொட்டிக் கொகண்டிருப்பதோரருமந்த புஷ்பம் இக்கட்டுரைத் தொகுதி. திரு. இராமச்சந்திரன் அவர்கள் இயற்றிய பக்திக் கவிதைகளிற் கிடைத்தவைகளைப் படித்துச் சுவைப்பதில் நான் தவறுவதில்லை. அவ்வாறே அவரது கட்டுரைகளையும் படித்து அனுபவிப்பதுண்டு.

சி. கணபதிப்பிள்ளை.

# MADURAI UNIVERSITY

University Buildings,
MUDURAI-2.

## மதிப்புரை

திரு. க. இராமச்சந்திரன் அவர்களை இலங்கையுடன் தொடர்பு உடையவர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். பழைய இந்தியத் தத்துவ உலகத்தைத் தமிழ் உலகத்திற்கும் மேல் நாட்டுக்கும் அறிமுகம் செய்துவரும் அரிய தொண்டினை ஆற்றி வருகிறார். இவர் ஒரு சைவப் பெரியார் என்று சைவர்கள் கொண்டாடுகிறார்கள். மற்றவர்கள் சமரச ஞானப் பேரறிஞர் என்று போற்றுகிறார்கள். ஆண்டிலும் அறிவிலும் பழுத்த பழமாக இன்று காட்சியளிக்கிறார். இவர் கற்றவற்றையும் அனுபவித்துக் கண்டவற்றையும் பிழிந்தெடுத்து சமரச ஞானக்கோவை நூல் வடிவில் அருள் செய்கின்றார். இலங்கையில் சைவ சமயப் பாடத்திற்கு ஒன்பதாம் வகுப்பிற்கு நல்ல துணை நூல் ஒன்று வேண்டியிருக்கின்றது. சமரச ஞானக் கோவை அத்தகைய துணை நூலாக அமைந்துள்ளது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

வாழ்க திரு. இராமச்சந்திரனார்!
வாழ்க சைவம்!
வாழ்க ஈழம்!

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்
துணைவேந்தர்

மதுரைப் பல்கலைக்கழகம்,
மதுரை-2.
22-5-1967.

# பிழை திருத்தம்

| பிழை | திருத்தம் | பக்கம் | வரி |
|---|---|---|---|
| கிரேதாயுக | திரேதாயுக | 13 | 7 |
| தளேத்திட | தழைத்திட | 21 | பாடல் |
| நூற்பரியம் | தாற்பரியம் | 47 | 11 |
| அதில் | அதின் | 47 | 11 |
| பித்து | பிந்து | 52 | 15 |
| —. | சூரன். | 71 | 9 |
| அவனுடைவ | அவனுடைய | 71 | 11 |
| படனத்தில் | படலத்தில் | 78 | 24 |
| யிளே | யிணே | 82 | 7 |
| லிங்கோற்பவ | இலிங்கோற்பவ | 84 | 3 |
| மூளேயில் | மூலேயில் | 102 | 28 |
| —. | இம்முறை. | 104 | 18 |
| கவளே | கவலே | 120 | 10 |
| சில | சிலா | 124 | 20 |
| பணி | பனி | 127 | பாடல் |
| போணலா | பேணலா | 134 | பாடல் |
| றை | ரை | 155 | 8 |
| ய் | ந் | 158 | 13 |
| ட | டை | 164 | கடைசி |
| தொ | கொ | 168 | 20 |
| போது | பொது | 271 | பாடல் |
| அடி | அடிச் | 279 | 22 |
| அங்கு | — | 285 | 1 |
| கிளற்சி | கிளர்ச்சி | 294 | 18 |
| பௌஸனற் | பௌஸன்ற் | 207 | 31 |
| Realiy | Reality | 399 | 32 |
| மகரமென் | மகரமென | 312 | 9 |

# பொருளடக்கம்


பக்கம்

| | |
|---|---|
| பதிப்புரை | iii |
| முன்னுரை | vi |
| சிறப்புரை | xii |
| அணிந்துரை | xv |
| மதிப்புரை | xvi |
| பிழை திருத்தம் | xvii |

I-ம் பாகம்—தத்துவஞானம்

| | | |
|---|---|---|
| 1 | அத்துவா மார்க்கம் | 1 |
| 2 | ஜோதி வழிபாடு | 11 |
| 3 | சக்தி வழிபாடு | 16 |
| 4 | தேவி வழிபாடு | 23 |
| 5 | தேவி உபாசனை | 30 |
| 6 | லலிதா சஹஸ்ர நாமம் | 36 |
| 7 | சௌந்தர்ய லஹரிக்கோர் முன்னுரை | 41 |
| 8 | ஸ்ரீ வித்தையும் ஸ்ரீ சக்கர பூஜையும் | 48 |
| 9 | முருகன் வழிபாடு அதின் பழமையும் புதுமையும் | 55 |
| 10 | எங்குந் தனது உருவாகி இருக்கின்ற சொருபம் | 65 |
| 11 | கதிர்காம மஹிமை | 73 |
| 12 | ஆறுமுகப் பெருமானின் வீறுபுகழ்பெறு விரதம் | 77 |
| 13 | உயிர்நோயை அகற்றும் திருவாசகத்தேன் | 83 |
| 14 | மகாபாரதம் புகட்டும் அரிய படிப்பினைகள் | 92 |
| 15 | தமிழகத்துத் தவநூலுக்கோர் தனிப்பெரும் ஆராய்ச்சியுரை | 100 |
| 16 | பகவத்கீதையின் ஒப்பற்ற தன்மை | 110 |

17 அன்பும் அறமும் 114
18 தில்லையும் திருநடன தத்துமும் 121

## 2-ம் பாகம்—மெய்ஞ்ஞானிகள்

19 அடியார் பெருமை 129
20 சாதுக்கள் சகவாசம் 136
21 சித்தருலகை விட்டு மண்ணுலகில் மனித உடலில் தோன்றிய முத்தர் 141
22 நவபாரதத்தின் மகாபுருஷரது இலங்கை விஜயம் பற்றிய நினைவுகள் 146
23 குரு வழிபாடு 159
24 பகவான் புத்தர் காட்டிய புனிதப் பாதை 166
25 ஸ்ரீ சங்கரர் ஜெயந்தி 172
26 குமரகுருபர சுவாமிகள் 187
27 தாயுமானவர் தத்துவம் 196
28 ஆன்மநேய ஒருமைப்பாடு விளக்கும் திருவருட்பிரகாச வள்ளலார் 202
29 ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அவதார மகிமை 207
30 யாழ்ப்பாணம் கடையிற் சுவாமிகள் 210
31 அருணஜோதி ஓங்கி ஒளிர வந்த ரமணஜோதி 219
32 பகவான் ஸ்ரீ அரவிந்தரும் அமரவாழ்வும் 226
33 ஸ்ரீ அரவிந்தரின் பூரணயோகம் 233
34 ஸ்ரீ யோக சுவாமிகள் 242
35 அனகாரிக தர்மபாலர் 244
36 வள்ளிமலைத் திருப்புகழ்ச் சுவாமிகள் 252
37 காந்திஜியும்-வினோபாஜியும் 259
38 தர்ம ராஜ்யம் 268
39 ஸ்ரீ வாஸ்வானி மாமுனி 273
44 ஸ்ரீ ஆனந்த மாயி அம்மையாரின் அற்புத வாழ்க்கை 279
41 இமயஜோதி சிவானந்தர் 286
42 கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் 290

43 தத்துவஞானி கிருஷ்ணமூர்த்தி 266
44 யாழ்ப்பாணம் பொன்னப்ப சுவாமிகள் 303
45 ராம நாம மகிமை 307

## 3-ம் பாகம்—உலக யாத்திரை

46 எனது ஜப்பான் தேசத்து யாத்திரை அனுபவங்கள் 313
47 எனது ஜப்பான் தேசத்து யாத்திரை அனுபவங்கள் (தொடர்ச்சி) 223
48 ஜப்பானிய புண்ணியவதி 332
49 எனது ஐரோப்பிய யாத்திரை அனுபவங்கள் 338

## 4-ம் பாகம்—பொது

50 புது வருடப் பிறப்பில் அடங்கிய வானூல் தத்துவங்கள் 372
51 உரிமையும் கடமையும் 379
52 சரணாஞ்சலி 384



திரு. க. இராமச்சந்திரன்

# அத்துவா மார்க்கம்

"அத்துவா மார்க்கமாறும் அகற்றியே அடியனேனைத்
தத்துவா தீதனுக்கும் சற்குரு தாள்கள்வாழ்க!

ஆக்கை நீயல்லை நீயோ ஆன்மாவென்றெனக்குச் சொல்லித்
தீக்கைவைத் தாண்டுகொண்ட தேசிகன் திருத்தாள்வாழ்க!

இருவினை நீக்கிஎம்மை இன்பமாம்நிலத்தில் வைக்கத்
திருவுருத் தாங்கிவந்த செல்வ!நின் திருத்தாள்வாழ்க!''

இலங்கைப் பெரியார், எங்கள் வணக்கத்திற்குரியார், அன்புக்கினியாரான ஸ்ரீ யோகர் சுவாமி அவர்களின் கட்டளையைச் சிரமேற் கொண்டு இப் புனித விழாவில் பேசுவதற்கு முன் வந்துள்ளேன். அவரின் ஞானதிருஷ்டி தூண்டி எனக்குத் தரப் பட்ட விஷயம்:

''அத்துவா மார்க்கம்''

ஆரம்பத்தில் என்னால் பாடப்பட்ட நற்சிந்தனைத் திருத்தாள் வாழ்த்தில், மண் முதல் நாதம் வரையிலுள்ள முப்பத்தாறு தத்துவங்கட்கும் அதீதமாய் ஆன்மா நிற்கும் அனுபவ நிலையும், அதை அடைவதற்கு முன் அத்துவா மார்க்கங்கள் ஆறும் அகற்றப்பட வேண்டுமென்ற நியதியும் தரப்பட்டுள்ளன. ஆன்மாக்கள் பரகதி அடைவதற்குரிய வழி வடமொழியில் அத்துவாவென அழைக்கப்படுகின்றது. அது மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலை என ஆறாகும். இந்த அறு வகைப்பட்ட அத்துவா வடிவாகச் சிவனைப் பாவிப்பது சைவசமயத்தின் சிறப்பான கொள்கை. இக் காரணம் பற்றியே, சிவபெருமானுக்கு 'அத்துவா

மூர்த்தி' யென்ற திருநாமம் தோன்றியதாகும். அதாவது எல்லாமாய் அல்லவுமாய், உடனுமாய், சடப்பிரபஞ்சத்திலுங் கூடக்கலந்து நின்று சேடிப்பன் எங்கள் சிவன்; சித்தியார் சுபக்கம் முதலாவது சூத்திரத்தில்,

**"உருமேனி தரித்துக் கொண்ட தென்றலும் உருவி றந்த**
**அருமேனி யதுவுங் கண்டோம் அருவுரு வான போது**
**திருமேனி உபயம் பெற்றோம் செப்பிய மூன்றும் நந்தங்**
**கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே"**

எனவரும் பாடலைத் தொடர்ந்து,

**"அத்துவா மூர்த்தி யாக அறைகுவ தென்னை என்னின்**
**நித்தனுய் நிறைந்த வற்றின் நீங்கிடா நிலைமை யானும்**
**சித்துடன் அசித்திற் கெல்லாம் சேட்டித னாத லானும்**
**வைத்ததாம் அத்து வாவும் வடிவென மறைக ளெல்லாம்"**

என விளக்கப்பட்டுள்ள அருமையை உற்று நோக்குக.! அத்துவாவும் என்னும் 'உம்மை' அது உபசார வடிவமாகும் என்னும் உண்மையை நமக்கு நன்கு உணர்த்துகின்றது.

ஆறு அத்துவா வடிவங்களுள் முந்திய மூன்றும் ஓசையுலகிலும் பிந்திய மூன்றும் பொருளுலகிலும் அடங்கும். முதன் மூன்றுள் மந்திர வடிவமே சிறந்தெடுத்தோதப்படுவதோடு, ஏனைய மந்திர வடிவங்கட்கெல்லாம் முற்படத் தோன்றிய காரணம் பற்றியும், பயன் கருதியும், பஞ்சப் பிரம வடிவம் தனிச் சிறப்புப் பெறுகின்றது. அத்துவா மூர்த்தி, மந்திர மூர்த்தி, பஞ்சப் பிரம மூர்த்திகளெல்லாம் திரோதான சக்தியால் செலுத்தப்படும் உபசார வடிவங்களாகும்.

"தத்துவம் ஆறாறு தன்மனு ஏழ்கோடி
மெய்த்தகு வன்னம்ஐம் பானொன்று மேதினி
யொத்திரு நூற்றிரு பானான்கெண் பானொன்று
வைதத பதங்கலை யோரைந்தும் வந்தவே''

என்பது திருமூலர் திருவாக்கு. இதன் கருத்து தத்துவம் முப்பத்தாறு, மந்திரம் சப்த கோடி, வர்ணம் ஐம்பத்தொன்று, புவனம் இருநூற்று இருபத்து நான்கு, பதம் எண்பத்தொன்று, கலை ஐந்து. இவற்றின் விரிவான விளக்கத்தையும் அவற்றைச் சுத்திபண்ணும் விதத்தையும் சிவஞான பாடியம் பொது அதிகாரத்தில் காண்க.

மந்திரம், பதம், வர்ணம், மூன்றும் வாக்காலும், புவனங்கள் காயத்தாலும், தத்துவங்கள் மனத்தாலும் கர்மம் ஈட்டப்படுவதற்கு வழிகளாம். கலையோ மூவிதத்திலும் கர்மம் ஈட்டுவதற்கு உபகரணம் ஆகின்றது. முதல் ஐந்து அத்துவாக்களும் கலைகளினுள் வியாபித்து நிற்பனவாம். கலைகள் நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை என ஐந்தாம். இவையொவ்வொன்றினுள்ளும் இரண்டு மந்திரம் உள. அவை முறையே, சத்தியோசாதம், இருதயம்; வாமதேவம், சிரசு; அகோரம், சிகை; தற்புருடம், கவசம்; ஈசானம், அத்திரம்என அழைக்கப்படும். பஞ்சாக்ஷர தீட்சை பெற்ற உங்கள் பலருக்கு இவற்றின் கருத்துக்கள் நன்கு விளங்கும்; இந்த ஐந்து கலைகளின் அதிட்டான மூர்த்திகள் முறையே பிரமன், மாயன், உருத்திரன், மகேசுரன், சதாசிவன் ஆவர்.

நிவிர்த்தி கலையாவது: தன்னையடைந்த பக்குவான்மாக்கட்குச் சனன, மரணத்துக்கு ஏதுவான

சங்கற்பங்களை நிவிர்த்திப்பதாம்; பிரதிட்டா கலை யாவது: பக்குவான்மாக்களின் சனன, மரணங்களை நாசஞ் செய்யும் சன்மார்க்க சங்கற்பங்களில் அவர் களை நிலை நிறுத்துவதாம்; வித்தியாகலையாவது: பக்குவான்மாக்களின் அறிவைப் பிரகாசிப்பதாம்; சாந்தி கலையாவது: ஆன்மாக்களுக்கு இராகத் துவேஷ முதலாய குணங்களைப் போக்கி, பரம சாந்தியைத் தருவதாம்; சாந்தியாதீத கலையாவது: ஆன்மாக்களுக்குச் சாந்தி அதீதத்தைத் தருவதாம். தத்துவமுதல் ஐந்து அத்துவாக்களையும் தம்முள் அடக்கி நிற்கும் இப் பஞ்சகலைகள் திரோதாயிரூப மான ஆதிசக்தியிலடங்க, சிவசக்தி சிவன் கண் அடங்கும். பஞ்ச கலைகளினுள் மந்திர முதலிய அத்துவாக்கள் வியாபித்திருப்பன என்பதற்குப் பிரமாணம், சிவஞான சித்தியார் - சுபக்கம் - எட் டாஞ் சூத்திரத்தில், 'மந்திரங்கள் முதல் ஐந்தும்'; 'வித்தையின் மந்திர மிரண்டு'; 'சாந்தியாதீத கலை தன்னின்' என வரும் 259ம், 260ம், 261ம் பாடல்களிற் காண்க.

இவ்விதம் சோபான முறையில் அமைந்த நமது சைவ சமயத்தின் ஞானபாதத்தில் உயர்வற உயர்ந்த நெறி அத்துவா மார்க்கமாகும். அத்து வாக்களின் பிறப்புகட்குக் காரணமான கர்மங்களை யெல்லாம் நசிக்கச் செய்து, சுத்திகரித்து, சத்திநி பாதம் வரப்பெற்ற ஆன்மாக்கள் பரிபக்குவ மடைந்து சிவனை வழிபடும் மார்க்கம் இதுவாகும். இது அத்துவா சைவமெனவும் அழைக்கப்படும். இக் கருத்தை உளத்தில் வைத்தே, வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித் தர் கணத்தை வழுத்திய தாயுமான சுவாமிகள்,

**"அத்துவா வெல்லாம் அடங்கச் சோதித்தபடிச்
சித்துருவாய் நின்ருர் தெளிவறிவ தெந்நாளோ?"**

எனப் பாடியுள்ளார்.

அன்பர்களே! இத் தத்துவங்களெல்லாம் நமது புத்திக்கு விளங்க முடியாதவையென்று கருதிவிடாதீர்கள். நவீன கல்விமுறையில் நம் தாய் மொழியைப் பயின்ருேர்க்கு இவற்றை அறிந்து கொள்வது கஷ்டந்தான். ஆனல் பிற்காலத்தில் தோன்றிய மகான்கள் சிலர் இக் கஷ்டத்தைத் தவிர்க்கும் பொருட்டுப் போலும் எளிய இனிய நடையில் நூல்கள் அருளியுள்ளார்கள். குமர குருபரர், தாயுமானவர், இராமலிங்க சுவாமிகள் போன்ற பெரியார்கள் நமது சமயசாஸ்திர நுட்பமான கருத்துக்களை, உள்ளத்தை உருக்கும் தோத்திரப் பாடல்களில் அமைத்துள்ள அருமையை நம்முட் பலர் இன்னும் நன்கு அறிந்து கொள்ளவில்லை. இவர்கள் மூவரும் முறையே 17-ம், 18-ம், 19-ம் நூற்ருண்டுகளில் தோன்றிக் காலம் தேவைப்பட்டிருந்த சிவதொண்டை நிறைவேற்றியவர்கள். அருட்பிரகாச வள்ளலார் அருளிய மகாதேவ மாலையும் குமரகுருபரர் இயற்றிய கந்தர் கலிவெண்பாவும் அவற்றுள் முக்கியமானவை.

இவ்விரு நூல்களைப்பற்றி இங்குசிறிதுகுறிப்பிட விரும்புகிறேன். ஐந்து வயது வரையில் ஊமையாகவிருந்த குமரகுருபரர் திருச்செந்தூர் கந்தப் பெருமானின் கருணையினல் வாக்கு வல்லமை பெற்றதும் முதலில் இயற்றிய நூல் கந்தர் கலிவெண்பா. சைவ சித்தாந்த சாஸ்திர உண்மைகளை வடித்தெடுத்துத் தெளிவாகத் தரும் இச் சிறுநூல் ஓர் அரிய தோத்திர நூலாகும். இற்றைக்கு ஐம்பது அறுபது

ஆண்டுகட்கு முன் யாழ்ப்பாணத்திலிருந்த சைவப் பள்ளிக்கூடங்களில், கல்வி பயின்ற மாணவர்கள் மூன்றும் நான்காம் வகுப்பில் படிக்கும் போதே,- அவர்களின் ஒன்பதாம் பத்தாம் வயதளவில்,- இக் கலிவெண்பாவை முழுக் கருத்தும் விளங்காமலே மனனம் பண்ணி நித்தியபாராயணம் செய்யும் வழக்கத்தை அக்கால ஆசிரியர் மூலம் பெற்ற துண்டு. பின்னர் வயது முதிர முதிர, அறிவு மலர மலர, பாடலின் கருத்தையுந் தெரிந்து கொள்வார்கள். இனிய, அந்தச் சிறிய, அரிய பெரிய நூலினுள் சற்றே புகுந்து பார்ப்போம்.

முதலில், கந்தபுராணம் திருவிளையாட்டுப் படலத்தில் சிவபெருமான் உமாதேவியார்க்குக் குமரன் பெருமை கூறும் இடத்தில் வரும் பாடல் ஒன்றை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். ஏனெனில், முருகக் கடவுளுக்கும் சிவபெருமானுக்கும் வேற்றுமை இன்மையை நாம் உணர்ந்து கொண்டாற்றான் குமரகுருபரர் தமது பாடலின் முற்பாகத்தில் முருகப் பெருமானுக்கு ஏற்றிக் கூறும் விசேடணத்தை நாம் விளங்கமுடியும்.

**"ஆதலின்னமதுசத்தியறு முகனவனும்யாமும்**
**பேதகமன்றுனம்போற்பிரிவிலன்யாண்டுநின்றுன்**
**னேதமில்குழவிபோல்வான்யாவையு முணர்ந்தான்சீரும்**
**போதமுமழிவில்வீடும்போற்றினர்க்கருளவல்லான்"**

இது சிவபெருமான் வாக்கு.

கலிவெண்பா ஆரம்பத்தில் குமரகுருபரர் முருகப் பெருமானை பிரமாவாலும் வேதங்களாலும் அளவிடற்கு முடியாத, நாத தத்துவமும் அறிவும் காண முடியாத பரஞ்சுடராய், குறியும் குணமும்

ஒரு கோலமுமற்றெங்கும் செறியும் பரம சிவமாய், கருவின்றிநின்ற கருவாய், அருளே உருவின்றி நின்ற உருவாய், உருவும் அருவும் உருவருவுமாகி, ஆன்ம கோடிகளின் பக்குவத்திற்கேற்ப நலந்தரு பேத மாய் விளக்குகிறார். பின்னர்,

"— — — — — — — நால்வகையாம்
சத்திநி பாதந் தருதற் கிருவினையும்
ஒத்து வருங் காலம, உளவாகிப்-பெத்த
மல பரிபாகம் வருமளவிற் பன்னாள்
அலமருதல் கண்ணுற் றருளி
அறிவுக் கறிவாகி அவ்வறிவுக் கெட்டா
நெறியிற் செறிந்த நிலை நீங்கிப் பிறியாக்
கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென்றோர் திருப்பேர் கொண்டு-திருநோக்கால்
ஊழ்வினையைப் போக்கி உடலறுபத்தெட்டு நிலம்
ஏழும் அத்துவாக்களிரு மூன்றும்-பாழாக
ஆணவமான படலங்கிழித் தறிவிற்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்-பூணும்
அடிஞானத்தாற் பொருளும் ஆன்மாவுங் காட்டிக்
கடியார் புவனமுற்றுங் காட்டி"

என்ற முறையில், அப் பரம்பொருள் குருபரனாய் அவனியில் தோன்றி பக்குவான்மாக்களை ஆட் கொண்டு அருள் சுரக்கும் விதத்தை விளக்கிவிட்டு, அடுத்து வரும் கண்ணிகளில் முருகப் பெருமானின் திருவுருவ வர்ணனை தருகின்றாம். அதில் அத்து வாக்கள் அருமையான விளக்கம் பெறுகின்றன.

"மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்-பந்தனையால்
ஒத்த புவனத் துருவே யுரோமமாத்
தத்துவங்களேசத்த தாதுவா·வைத்த

கலையே யவயவமாய்க் காட்டுமத்து வாவின்
நிலையே வடிவமாய் நின்றோய்''

என்பது அவர் திருவாக்கு. அதாவது, மந்திரம் இரத்தம்; பதம் முடி; வர்ணம் தோல்; புவனம் உரோமம்; தத்துவங்கள் சப்ததாதுக்கள்; கலை அவயவங்கள் ஆகும். அதன்மேல் கந்தபுராண சாரத்தை, திருவவதாரம், திருவிளையாடல், திருமணம் முதலாய வரலாறுகளை, சிறு குழந்தைகள் மனதில்கூட பசுமரத்தாணிபோல் பதியக்கூடிய விதத்தில் எளிய இனிய சொற்களில் தந்துவிட்டு, தமது இறுதியான வேண்டுகோளைக் கூறுகிறார்.

''இம்மைப் பிறப்பிலிருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கண் மோசித்துத்-தம்மைவிடுத்
தாயும் பழைய வடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்-சேய
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி யாட்கொண்
டடியேற்கு முன்னின் றருள்''

இந்த விண்ணப்பம் மனிதப்பிறவியின் விழுமிய நோக்கத்தை, அத்துவாமார்க்கம் மூலம் நாம் அடைய வேண்டிய உத்தம கதியை, அருமையாக விளக்குகின்றது. சிவஞானபோதம் இறுதிச் சூத்திரத்தின்,

''செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ''

என்னும் இருவரிகளின் அருங்கருத்து அடங்கியிருக்கும் அழகைப் பாருங்கள்! எனவே, குமரகுருபரர் தமக்காக மாத்திரமன்றி நம்மெல்லோருக்குமாகவே இந்த வேண்டுகோளைச் சமர்ப்பித்துள்ளார்.

அப்படிச் செய்யும்போது அவருக்கு வயது ஐந்து. ஆகையால், இந்தக் கந்தர் கலிவெண்பாவை, நமது பிள்ளைகள் ஐந்து வயதடைந்ததும், அவர்கட்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியது பெற்றோராகிய உங்கள் கடமையென்பதை அன்புடனும் வணக்கத் துடனும் நினைவூட்ட விரும்புகின்றேன்.

இனி, அருட்பிரகாச வள்ளலார் அருளிய அற் புத சாஸ்திர - தோத்திரமான மஹாதேவ மாலை யிலிருந்து ஒரு பாடலை மாத்திரம் எடுத்துக்காட்டி இக் கட்டுரையை முடிக்க விரும்புகின்றேன். நூறு திருவிருத்தங்களைக் கொண்ட அந்த நூலின் இரு பதாம் பாடல் பின்வருமாறு:-

**"மந்திரமாய்ப் பதமாகி வன்னமாகி**
**வளர்கலையாய்த் தத்துவமாய்ப் புவனமாகிச்**
**சந்திரனு யிந்திரனு யிரவியாகித்**
**தானவராய் வானவராய்த் தயங்காநின்ற**
**தந்திரமா யிவையொன்று மல்லவாகித்**
**தானுகித் தனதாகித் தானன்காட்டா**
**வந்தரமா யப்பாலா யதற்கப்பாலா**
**யப்பாலுக் கப்பாலாய மர்ந்ததேவே!"**

அருள்வெளி, பராபரவெளி, பெருவெளி, பெருஞ்சுகவெளி ஆகிய நான்கும் இப் பாடலில் படிப்படியாக, ஒன்றன்மேல் ஒன்ருகத் தரப்பட் டுள்ள அழகை உற்று நோக்குக! உயிர்க்குயிராகிய சிவத்தையும் உயிரையும் வேறு பிரித்து உணராத வண்ணம் இரண்டறக் கலந்து நிற்கும் சுவானுபூதி நிலையை "தானன் காட்டா வந்தரமாய்" எனச் சுருங்க வைத்து விளங்கச் செய்த அருமையும் பன் முறை சிந்தித்து இன்புறுதற்குரியது. இத் திரு விருத்தத்தின் முதற் பாதத்தால் அத்துவாக்கள்

ஆறும் உணர்த்தப்படுகின்றன. விரிவஞ்சி இத்துடன் நிறுத்துகின்றேன்.

"ஐயமேன் காணுமென்றே அடியனேன்
தன்னை நோக்கி
உய்ய நல்லருளைத் தந்த
உத்தமன் பாதம் வாழ்க!"

*(கொழும்பில் 1962ஆம் ஆண்டில் நடைபெற்ற சிவ தொண்டன் வெள்ளி விழாவில் ஆற்றிய சொற்பொழிவைத் தழுவி வரையப் பெற்றது இக் கட்டுரை.)*

# ஜோதி வழிபாடு

ஜோதி வணக்கம் சரித்திர காலத்துக்கப்பாற் பட்டது. அது தொன்று தொட்டுப் பல நாடுக ளில் வெவ்வேறு சாதியினராலும் கையாளப்பட்டு வந்த வழக்கமாகும். உருவவழிபாடு அஞ்ஞானத் தின் பாற்பட்டதெனக் கருதும் மதநூல்களே ஆண் டவன் ஒருவருக்கு அக்கினிச் சுவாலையாகத் தோன் றினர், இன்னொருவர் தலைமீது புருவாக இறங்கி னர் என்று கூறுகின்றன.

இன்று பம்பாயில் வசிக்கும் பார்ஸிகளிடையே தேவ தேவனைத் திவ்விய ஜோதியாகப் பாவிக்கும் வழக்கம் தனிமுறையில் இருப்பதால், அவர்களின் மூதாதையர் அதனைத் தங்கள் தாய்நாடான இரா னியாவில் இருந்து இந்தியாவுக்குக் கொணர்ந்திருக் கலாமெனச் சிலர் கருதுகின்றனர். இது தவறுன அபிப்பிராயமாகும். பார்ஸிகளின் வேதமான ''ஜெந்தவஸ்தா'' ஜரதுஷ்டரின் உபதேசங்கள் அடங்கிய நூலாகும். உயிர்க்குயிரானவன் உண் மைச் சோதியேயென்று அனுபவத்தில் கண்ட இந்த மகான் காசியில் வசித்தவர்; வேத உபநிடதங்களை நன்கு கற்றவர். ஆகையால், அவற்றில் கண்ட உண்மைகளையே அவர் தமது உபதேசங்களிற் கலந்துள்ளாரெனலாம்.

அக்கினிக் கடவுள் தோத்திரமே ஈசோபநிட தத்தின் சாரமாகும். கடோபநிடதத்தின்படி யம னிடம் மூன்று வரம் கேட்ட நசிகேதஸ், சுவர்க் கத்தையும் அமிருதத்தையும் பெறுதற்கு வழிகாட் டுவது என்னவென்று கேட்ட போது, இயமன் கொடுத்த பதில் உள்ளக்கனலையே குறிப்பிடுகின் றது. பூர்வ புண்ணிய வசத்தால் சூரபத்மனுக்கு

சுப்பிரமணியப் பெருமானின் விசுவரூபதரிசனங் கிடைத்தபோது அவன் பெற்ற காட்சியை "செஞ் சுடரநந்தகோடி செறிந்தொருங் குதித்ததென்ன, விஞ்சிய கதிர் கான்றுள்ள வியன் பெரு வடிவு" என விளக்குகின்றது கந்தபுராணம். பார்த்தன் பார்த்த விசுவரூபக் காட்சியை கீதை பதினோராம் அத்தியாயம் பன்னிரண்டாம் சுலோகம் "கதிர்கள் ஆயிரங் காந்திடுஞ் சோதி கண் கொளா வியன் காட்சி" என்னும் போது, அதே கருத்தை விளக்கு கின்றது.

வேதகாலம், உபநிடதகாலம், புராண இதி காச காலம் எல்லாவற்றிற்கும் அப்பாலாய், பல் லாயிரம் வருடங்களைக் கடந்து நிற்கின்றது, திரு வண்ணாமலையில் பிரமா, விஷ்ணு இருவரின் மயக் கந் தீர்க்க பரம் பொருள் அழற் பிழம்பாய்த் தோன்றிய திருக்காட்சி. சிவபெருமானின் மகே சுவர வடிவங்களுள் முதலாவதான இலிங்கோற்பவ மூர்த்தியைக் குறித்து நிற்கும் இந்த நிகழ்ச்சி ஓர் பிரளய காலத்தில் நடந்ததென்பதே எமது ஆன் றோர் வாக்கு.

"ஆதியரு ணாசலப்பே ரற்புதலிங் கத்துருக்கொ
ளாதிநாண் மார்கழியி லாதிரையச் - சோதியெழு
மீசனை மான் முன்னமர ரேத்திவழி பட்டநாண்
மாசிசிவ ராத்திரியா மற்று"

என்று பகவான் ரமணமூர்த்தி அருளி இருப் பதின்படி சைவர்களுக்கு மிக விசேடித்த தினங்க ளான மாசி சிவராத்திரி, கார்த்திகைத் திருக் கார்த்திகை, மார்கழித் திருவாதிரை ஆகிய மூன் றும் ஒரே தொடர்ச்சியுடையனவாகும். உலகமக் கள் உய்யும் பொருட்டு, ஒவ்வொரு கார்த்திகை

மாசத்திலும் கார்த்திகை நட்சத்திரத்தன்று இறைவன் சோதியாய்க் காட்சியளிப்பது பிரமா விஷ்ணுவின் வேண்டுகோளுக் கிணங்கியேயாம். தாம் பெற்ற இன்பம் இத்தரணியும் பெற வேண்டும் என்பதே அவ்விருவரும் கேட்ட வரம்.

ஐம்பூதங்களின் மத்தியிலமைந்த தேயுலிங்க ஸ்தலமான இத் திருவண்ணுமலை கிரேதாயுகத்தில் இப் பூமண்டலத்தின் மத்தியாக அமைந்திருந்ததாகக் கருதப்படுகின்றது. ஞானநூல் வல்லுனரும் திருவண்ணுமலை இமயம் முதலிய மலைத் தொடர்கள் தோன்றுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தோன்றியிருக்க வேண்டுமென்கின்றனர். எனவே, ஆதிமக்களாம் தமிழரின் நாகரிகம் உச்ச நிலையில் இருந்தபோது, கடல் கொண்ட குமரிகண்டம் மேற்கே ஆபிரிக்கா தொடக்கம் கிழக்கே அமெரிக்கா வரைக்கும் உள்ள இடத்தை நிலப்பரப்பாய்த் தன்னுள் கொண்டிருந்த காலத்து, திருவண்ணுமலை அந்தப் பழைய கண்டத்தின் முகட்டின் உச்சிபோல் அமைந்திருந்ததெனை எண்ணுவதற்கு இடமுண்டு.

மணிவாசகப் பெருமான் திருவண்ணுமலைக்கு யாத்திரை செய்தபோது, அவரது திவ்விய திருஷ்டிக்கு முதலில் தென்பட்டது "ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் சோதியே"யாம். பின்னர் வேறோரிடத்தில், "சோதியே சுடரே சூழொளி விளக்கே" என அவர் பாடியபோது, அந்த அருட்பெரும் சோதிக் காட்சியின் நுட்பமான தத்துவத்தையே அழகாய் விளக்கியுள்ளாரெனலாம். கடவுள் எல்லாவற்றையுங் கடந்தும், எல்லாவற்றிலுங் கலந்தும் உறையும் சத்திய வஸ்து. முந்தியதில் வாக்கு மனங்

கடந்த அருவாயுள்ளார். பிந்தியதில் இயற்கையை உடலாகக் கொண்டு இலங்குகின்றார். பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனப்படும் ஐம் பூதங்கள், ஞாயிறு, திங்கள், சீவர்கள் ஆகிய எட்டுமே இயற்கையின் கூறுகள். சைவ சித்தாந் தம் இவற்றை இறைவனின் அட்ட மூர்த்தங்கள் என அழைக்கும். வைஷ்ணவமும் அதே கருத் துடைத்து. "ஏகமூர்த்தி இருமூர்த்தி மூன்று மூர்த்தி, பல மூர்த்தி ஆக ஐந்து பூதமாய் இரண்டு சுடராய் அருவாகி நாகமேறி நடுக்கடலுள் துயின்ற நாரணனே" என்கிறார் திருவாய் மொழியில் சட கோபர்.

மேற்கூறிய அட்ட மூர்த்தங்களை மணிவாசகர் மூன்று பிரிவுகளுள் அடக்கி, சோதி, சுடர், விளக்கு என விளக்கியுள்ளார். பஞ்சபூத சக்திகள் பிரண வத்தில் சேர்ந்து அதன் உச்சியில் பிரகாசிப்பதைச் சோதி எனவும், பிரணவத்தைச் சுற்றி எப்பக்கத் திலும் மின்னும் சூரிய சந்திரக் கதிர்களைச் சுட ரெனவும், பிரணவத்தின் மத்தியான இருதயக் கமலத்தில் பிரகாசிக்கும் அக்கினிக் கொழுந்தை விளக்கெனவும் கூறியுள்ளார். சுத்தான்மப் பிர காசம் இதய நடுவில் விளக்காயும், புருவ மத்தி யில் சுடராயும், உச்சித்தாமரையில் சோதியாயும் விளங்குகின்றதென்பர் யோகிகள். குண்டலிசக்தி பிரம்மரந்திரத்தை அடைந்தால் சோதி நடனங் காணலாமெனவும் அவர்கள் கூறுகிறார்கள். பிரம் மமே இதயத்தில் ஆத்ம சொரூபமாகப் பிரகாசிக் கின்றதென்பர் ஞானிகள். "அலையு மனத்தைப் பிடித்து வைத்து, அதில் உறையுமிருட்டுக் கருக்க லுக்கு நின் அழகு விளக்கைப் பதித்து" எனவும் "அகந்தைக் கிழங்கையகழ்ந் தெடுக்குந் தொழும் பருளக் கோயிற்கேற்றும் விளக்கு" எனவும் கூறுவர்

அருணகிரிநாதர், குமரகுருபரசுவாமிகள் போன்ற பக்தர்கள். "சுருள்மன மாயை வினையிருள் நீக்கி அருள் விளக்கேற்றி" என்கிறார், இராமலிங்கர் அதே கருத்தில். எனவே பல மொழிகளில் வெவ்வேறு விதத்தில் எல்லாரும் விளக்கியுள்ளது "ஆத்மஜோதி"யையேயாம். இப் பெயர் கொண்ட திங்கள் வெளியீட்டின் முதல் சுடரை, மிகவும் பொருத்தமான முறையில், திருக்கார்த்திகைத் தீப தினத்தன்று பிரசுரிக்கச் செய்த திருவருளைத் திரிகரண சுத்தியுடன் போற்றுவோமாக!

*(ஆத்மஜோதியின் ஆரம்ப (1948) இதழிலிருந்து எடுக்கப் பட்டது.)*

# சக்தி வழிபாடு

மனிதன் என்று சக்தியை விரும்பத் தொடங்கினனே அன்றே அவனல் சக்தியை வழிபடும் முறையும் ஆரம்பித்திருக்க வேண்டும். விரும்பும் ஒன்றைப் போற்றிப் பாராட்டுவது மனித இயல்பு. உலகில் நல்லாரும், பொல்லாருமாய எல்லோருமே சக்தியை விரும்புகிறார்கள். அணுக்குண்டு முதலாம் அபார தூல சக்திப் பொருள்களை எல்லாம் தங்கள் அதிகாரத்திற்கு உட்படுத்த அல்லும் பகலும் உழைக்கும் பௌதிக சாஸ்திரிகள் தாமும் சக்தி உபாசகர்களே. இவ்விதம் சகலரையும் கவர்ச்சி பண்ணும் காரணம் பற்றியே சக்திக்குப் பெண்வடிவு அமைந்ததாகும்.

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே சிந்து நதிக் கரையில் வாழ்ந்த அதிபுராதன நாகரிக மக்கள் இயற்கைத்தாயைத் தெய்வமாகப் போற்றினர். அக் கொள்கை உலகின் வேறு பகுதிகளிலும் பரவியிருந்ததாகும். மோல்ராவில் பண்டை நாகரிகத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்து ஜோர்ச் என்னும் அறிஞர் அங்கே இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே மக்கள் நாகரிமாக வாழ்ந்தனரெனவும், இலிங்கவழிபாடு, பெண்தெய்வவணக்கம் இரண்டும் இருந்தனவென்பதற்குப் புறச்சான்றுகள் பலஉள்ளனவெனவும் கூறுகின்றார். எனவே சிவவழிபாடு உலகெங்கும் பரவியிருந்த காலத்தில், சக்தி வழிபாடுஞ் சேர்ந்திருந்ததென்பது வெளிப்படை.

போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனை நிலையில் பரம்பொருளைச் சிவமெனவும், அப்பொருளே போக்கும் வரவும் புணர்வுமாகிய இயக்கத்தைச் செய்யும் புண்ணியவதியாக மாறும்

போது அதனைச் சக்தியென்றும், மஹாமாயை என்றும் ஆன்றோர் அழைத்தனர். அதாவது பரம் பொருள் தன்னைத் தோற்றத்துக்கு உட்படுத்தும் போது மாயாசக்தி என்னும் பெயர் பெறுகின்றது, பெண்பாலாகக் கருதப்படும் பிந்திய நிலையின் மகிமையே உலக நடைமுறையாகும். குமரகுருபரர் அருளிய மீனாக்ஷி அம்மை பிள்ளைத் தமிழின் செங்கீரைப்பருவத்தில், உலகின் தோற்றத்தையும் ஒடுக்கத்தையும் சிவத்தினதும் சக்தியினதும் விளையாட்டுகளாக விபரித்துக் கற்பனை செய்யும் அழகிய கவியொன்றுண்டு. அதிலடங்கிய அரிய கருத்துக்களை அப்பெரியாரே சுருக்கமாக 'மீனாக்ஷி அம்மை குறம்' என்னும் நூலில்

'வைத்த பகிரண்டமெனும் மணற்சிற்றில் இழைத்திழைத்தோர்
பித்தனுடன் விளையாடும் பெய்வளையைப் பாடுவனே'

'ஒன்றாகி அனைத்துயிர்க்கும் உயிராகி யெப்பொருளும்
அன்றாகி அவையனைத்தும் ஆனாளைப் பாடுவனே'

எனத் தந்துள்ளார்.

சூரியனுக்கு இரண்டு இயல்புகள் உண்டு: ஒன்று தன்னை விளக்குவது; மற்றையது விடயங்களை விளக்குவது. முந்திய நிலையில் கதிரோனாகவும், பிந்திய நிலையில் கதிராகவும், அழைக்கப்படுகின்றது. ஆனால், பொருளால் இரண்டும் ஒன்றேயாம். இதைப் போலவே, சிவமும் சக்தியும் தாதான்மியத் தான் இருதிறப்பட்டியைந்து நிற்கின்றன. அறிவு மாத்திரையாய் அவாவாமல் நிற்பது சிவம்; புறப் பொருளை நோக்கி நிற்பது சக்தி. குணங்கடந்த சிவமாகிய நிற்குணப் பிரமத்திலிருந்து ஆலமர விழுது போலக் கீழிறங்கும் சக்தியானது சாத்வீகம், ராசதம், தாமசம் ஆகிய மூன்று குணங்களோடு சகுணப்

பிரமமாகின்றது. இதனைச் சாதகர்கள் சக்தியாக வழிபடுவர். பிரபஞ்சம் அனைத்தும் இம்முக்குணங்களுள் அடங்கி நிற்பதால் அதற்கு அரசி அவளே. அகில அண்டங்களும், பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் ஆகிய மூன்றினுள் அடங்கி நிற்கின்ற படியால், அவளே எல்லா அண்டங்களுக்கும் நாயகியாகின்றாள். அத்தோடு மானிட வாழ்க்கையில் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தியாகிய மூன்று அவஸ்தைகளின் சரீரங்களான தூலம், சூக்குமம், காரணம் ஆகிய மூன்றுக்கும் அவளே நாயகியாய் நிற்கின்றாள். இவ்விதம் மூன்றாகப் பிரிந்து நிற்கும் வெவ்வேறு தத்துவங்களை எல்லாம் உள்ளடக்கியே ஆதிசக்திக்குத் திரிபுர சுந்தரி எனவும் திருநாமம் சூட்டப்பட்டதாகும்.

ஆதிசக்தியின் விபூதிகளின் விபரங்களைப் பரக்கத்தரும் நூல் திருமந்திரம். அதில் நாலாந் தந்திரத்தில் அடங்கியிராத சக்தி தத்துவம் வேறெந்த நூலிலுமே கிடையாது. இந்த அற்புத சாஸ்திரத்தை அருளிய திருமூலர்,

**''அவளை யறியா அமரரும் இல்லை**
**அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை**
**அவளன்றி ஐவரால் ஆவதும் இல்லை**
**அவளன்றி யூர் புகுமா றறியேனே''**

எனத் தமது சொந்த அனுபவ மூலம் சக்தி வழிபாட்டின் அத்தியாவசியகத்தை வற்புறுத்தியுள்ளார். குறித்த பாட்டின் மூன்றாம் வரியிலடங்கிய கருத்தையே, அத்வைத ஞான ஒப்பற்ற செல்வரான ஆதிசங்கராசாரியரும், தாமியற்றிய ஆனந்த லகரி என்னும் நூலில் மிகவும் அழகாய் விளக்கியுள்ளார்.

'சிவமெனும் பொருளும் ஆதிசக்தியொடு சேரின் எத்தொழி லும் வல்லதாம், இவள் பிரிந்திடின் இயங்குதற்கும் அரிதெனு மறை இசைக்குமால்''

என்கிறார் அந்தமகான்.

மணிவாசகரும் தமக்குச் செம்மையேயாய சிவபதமளித்த செல்வத்தை அன்பினில் விளைந்த ஆரமுதமாகவும், ஒப்பிலாமணியாகவும், அப்பனாக வும் வாழ்த்துமுன் 'அம்மையே' என்றே போற்றி யிருப்பதையும் நோக்குக.

ஆதிசக்திக்குச் சூட்டப்பெற்ற திருநாமங்களும், குண பேதங்களும், வல்லமைகளும் காலத்தாலும் இடத்தாலும் வேறுபட்டு நிற்கின்றன. துர்க்கா தேவியாக வழிபடும் வடநாட்டுச் சாக்தர்கள் சரஸ் வதி, லக்ஷ்மி, கணேசர், சுப்பிரமணியர் ஆகிய நால்வரையும் அவளின் முக்கிய விபூதிகளென்பர். துர்க்கம் என்றால் மலைக்கோட்டை. துர்க்கை என் றால் மலைக்கோட்டை போன்ற பிரகிருதிக்குள் நாம் சிறைப்பட்டுள்ளோம். முக்குண மயமான அவளை நிராகரித்து நம்மால் ஒன்றுமே செய்ய முடியாது. ஆகையால் அவளது ஆதரவைப் பெற வேண்டும் என்பதே கருத்து. தேவியானவள் பார்க்குமிட மெங்கும் நீக்கமற நிறைந்துநின்று ஆணை செலுத்து பவள் என்பதை விளக்கவே, துர்க்கையின் பிரதி மைக்கு நமது ஆன்றோர் பத்துக் கரங்கள் அமைத் துள்ளனர். இப்பூமியின் எட்டுத்திக்குகளோடு, மேல் நோக்கியும் கீழ் நோக்கியும் செல்லும் மார்க் கங்களையும் சேர்த்தால் மொத்தம் திசைகள் பத்தா கின்றன: எனவே அவளின் கரம் அணைக்கவோ அடிக்கவோ போகாத இடம் இல்லை என்பதாம்.

சைவசித்தாந்தம், சிவசக்தியை, படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய

ஐந்தொழில்களை நடாத்தும் பஞ்சசக்திகளென்னும், அவற்றோடு கௌமாரி, வராகி முதலாம் சத்த மாதர்களையும், வாமை, காளி, முதலாம் நவசக்திகளையும் சிவசக்தியின் மூர்த்தங்களாய் ஏற்றுக்கொள்ளும். பகவான் அரவிந்தர் தாம் விளக்கும் புது யோகத்தில் அன்னையின் சக்தி வியக்திகளை முக்கியமான நான்கு மஹா ரூபங்களில் அடக்குகிறார். சாந்த விரிவு, தெளிந்த அருள், வற்றாக்கருணை நிறைந்த ரூபத்தை மகேஸ்வரி எனவும், அற்புத பல பராக்கிரமம்,வீராவேசம், பிரசண்டவேகம் பொருந்திய ரூபத்தை மஹாகாளி எனவும், தெளிவு, கனிவு, அழகு, கவர்ச்சி, மோகன சௌந்தரியம் கூடிய ரூபத்தை மஹா லக்ஷ்மி எனவும், நுண்ணறிவு, செய்கைத்திறன், அமைதி, சரியான நிறைவு பொருந்திய ரூபத்தை மஹா சரஸ்வதி எனவும் அழைக்கின்றார். இப்பிரிவு நவீன அறிவுலகு ஏற்றுக் கொள்ளும் தரத்ததாகும்.

நிற்க, ஆதிமக்களாம் தமிழர் மேலே விபரிக்கப்பட்ட பிரிவுகளெல்லாம் தோன்றுவதற்குப் பல்லாயிரம் வருஷங்கட்கு முன்னரேயே, இச்சை, கிரியை, ஞானம் ஆகியமூன்று சக்திகளையும் ஒருங்கே அமைத்துள்ள அற்புத முருகன் வழிபாட்டைத் தந்துள்ளார்கள். வள்ளியம்மை இச்சையையும் தெய்வயானை கிரியையும், வேல் ஞானத்தையும் குறிக்க முருகப்பெருமான் அம்மூவகைச் சக்திகளை ஆளும் முதல்வராய்க் காட்சி யளிக்கின்றார். அப் பெருமான் வழிபாடு ஒன்றே சக்திகள் அனைத்தையும் தரும் சிறந்த சாதனமென ஆன்றோர்கள் தமது சொந்த அனுபவங்கொண்டு விளக்கியுமுள்ளார்கள். முருகன் அமர்ந்து செல்லும் மயில் விந்துவையும், அவனது கொடியாகிய கோழி விந்துவுக்குமேல் நிற்கும் நாதத்தையும் குறிப்பன; ஆகையால், நாதங்கடந்த நிலை

யில்தான் நம்முள் ஒடுங்கிக் கிடக்கும் இச்சா, கிரியா, ஞானசக்திகள் தொழிற்படும் என்பதுவெளிப்படை. தக்க சாதனையின் பயனாகவே நாம் இச்சக்திகளின் எழுச்சியைப் பெறமுடியும், இம் மூன்று சக்திகளும் மக்களிடம் அமைந்துள்ளன என்ற உண்மையை நவீன மனோதத்துவ விற்பன்னர்களே ஏற்றுள்ளனர். வேண்டப்படுவது முறையான வழிபாடும் தியானமுமேயாம். பெறுதற்கரிய மனிதப் பிறவியின் விழுமிய நோக்கத்தை நன்குணர்ந்த நிலையில் தான் சாதனை வலுப்பெற்று சத்திகளின் எழுச்சி தீவிரமாகும். இன்று இதற்கு ஓர் ஒப்பற்ற உதாரணமாக விளங்குபவர் அன்னை கிருஷ்ணபாயாவர். அவரிடம் நாம் காணக்கிடக்கும் அன்பு; அழகு; இனிமை, ஆனந்தம், ஆற்றல், ஒழுங்கு, கைத்திறன், அறிவு, அமைதி முதலாம் தெய்வ சம்பத்துக்களெல்லாம் அன்னார் இச்சா, கிரியா, ஞான சக்திகளின் ஒளிபெற்றவரென்பதை நன்கு விளக்குகின்றன. நவீன நாகரீகமென்னும் மாயவலையிற் சிக்கி; 'சமத்துவம்', 'சுதந்திரம்', 'விடுதலை', என்ற போலி மந்திரங்கட்கு அடிமைகளாய் அல்லற்படும் எங்கள் இந்துப் பெண்ணுலகுக்கு தூய அன்னை கிருஷ்ணாபாயின் வாழ்வானது ஓர் மலை விளக்குப்போல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. காரைக் காலம்மையார், ஆண்டாள், மீராபாய், சக்குபாய் முதலாம் ஸ்திரீ இரத்தினங்களின் பக்தித்திறனையும் ஆத்ம சக்தியையும் தியாகத்தின் மாண்பையும் அது நினைவூட்டுகின்றது.

**கோதிலாப் புகழுடைய குரு ராம தாஸரின்**
**குற்றமில் சக்தியாகிக்**
**குவலயந் தனைத்திடக் குருகுலந் தனை நிறுவிக்**
**கோடிதவ மாற்றுமன்னாய்!**
**ஓதரிய வேதமுடன் ஆகமத் துட்பொருளை**
**உள்ளனு பவத்துணர்ந்தே**

ஓடிவந் தனேயன்பர் உளவிருள் கடிந்திடும்
ஒப்பிலாச் சோதி வடிவே!
வாதமிடு பலசமய வாதிகளும் வந்தடி
வணங்கிடும் ஞான நிறைவே
வந்தனே செயுமடியர் புந்தியில் தங்கியருள்
வழங்கிடும் கற்ப தருவே!
ஆதரவு இல்லையென் றழுதழுது வருதொண்டர்க்
காதர வளிக்கும் அமுதே!
ஆனந்த நிலையத்தில் அழகுடன் அமர்ந்திடும்
அன்னையே! கிருஷ்ண பாயே!

(ஆத்மஜோதியிலிருந்து எடுக்கப்பட்டது)

# தேவி வழிபாடு

அன்னையைத் தெய்வமாக வழிபடும் முறை உலகெங்கணும் தொன்றுதொட்டு இருந்துவரும் ஓர் நல்ல வழக்கமாகும். அது எந்நாட்டினர்க்கும், எம் மொழியினர்ச்கும், எச்சாதியினர்க்கும் பொதுவானதுமாகும். ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்னும் மணிவாக்கு உலகின் பல மொழிகளிலுமுண்டு. ''அன்னையின் பாதத்தை முத்தமிடுகிறவன் சொர்க்கத்திற்குப் போகிருன்'' என்ருர் நபிநாயகம்.

இதுவரையில் பல அறிஞர்கள் செய்துள்ள ஆராய்ச்சியின் முடிவாய், தெய்வத்தை அன்னையாகப் பாவித்து வழிபடும் கொள்கை முதலில் தோன்றியது சிந்துவெளியில் என்ற உண்மை தெளிவாகின்றது. எனவே, இது வேதகாலத்திற்கும் முற்பட்டதென்பது வெளிப்படை. இருக்கு வேதத்தில் தேவி தோத்திரம் புகுந்ததும் அந்தப் பழைய வழக்கை ஒட்டியேயாம் என்பது ஆராய்ச்சியாளர் பலர் கண்ட முடிபு. அவர்களிற் சிலர் சிந்துவெளி நாகரிகமும், தாஸ்சியு (Dasyu) நாகரிகமும் ஒன்றே எனக் கருதுகின்றனர். 'தாஸ்சியு' என்ற பதம் ஆதி காலத்தில் வானூல் சாஸ்திரி குலத்தைக் குறித்ததென்றும், பின்னர் அது 'அடிமைகள்' என்ற கருத்துடைய சொல்லாக மாற்றப்பட்டதென்பதும் அவர்களுடைய அபிப்பிராயம். வேத காலத்தில் ஆண் தெய்வங்களாக வணங்கப்பட்ட இந்திரன், மித்திரன் ஆகிய இருவருங்கூட ஆரம்பத்தில் பெண் தெய்வங்களாம்.

அக்காலத்தில் வழக்கில் இருந்த இராசி மண்டலம் இன்றுபோல் பன்னிரண்டு இராசிகளைக்

கொண்டதல்ல; மொத்தம் எட்டே கணிக்கப்பட்டன. இந்த உண்மையை முதலில் தோன்றிய இருக்கு வேதமும் ஏற்றுள்ளது. அந்த எட்டு இராசிகளுள் முக்கிய இடம் பெறுவது கன்னி. தேவி வழிபாட்டின் தொன்மைக்கு இந்த வானூல் சாஸ்திரக் கணிப்பும் சாட்சி கூறுகின்றதெனலாம். பல்லாயிரம் வருடங்கட்குப்பின்னரும், நவராத்திரி பூஜை கன்னி மாசத்திலேயே (புரட்டாசியில்) கொண்டாடப் பட்டு வருவதே அதற்குப் போதிய சான்றாகும். ஏனைய பூஜைகளைப் போலில்லாமல், இந்த வழிபாடு மாத்திரம் ஒவ்வொருவர் இல்லத்திலும், மடங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் நடைபெறுவதிலிருந்தே தேவி ஆராதனையானது ஆலயங்கள் தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வழக்கில் இருந்து வந்ததென்பதும் வெளிப்படை.

மொஹெஞ்சதாரோ, ஹரப்பா மக்கள் தேவி வழிபாட்டில் ஈடுபட்டிருந்த காலத்தில், மெசெப்பெற்றேமியா, எகிப்து, மோல்ரா முதலாய தேசங்களில் நாகரிக வாழ்வு நடாத்திய மக்களும் அதே வழிபாடு செய்தனர். பூமாதேவியென இன்று இந்துக்கள் வணங்கும் தெய்வம் பழைய ஈறாக்கில் இனன்னுவென்றும், பின்னர் இஷ்டார் என்றும் அழைக்கப்பட்டது. எகிப்தியர் ஐசிஸ் என்னும் பெண் தெய்வத்தைப் பூரண அறிவுக் கடவுளாக (அதாவது சரஸ்வதியாக) வழிபட்டனர். கிரேக்கர் கேயியா என்ற பேரால் வணங்கியதும் அந்த அறிவுத் தேவதையேயாம். அத்தேவியின் புத்திரியான தேமிஸ் அவர்களால் நீதித் தேவதையாகப் போற்றப் பட்டது. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க கவிஞர் சோபோகிள்ஸின் ஆராய்ச்சிப்படி மனித சமுதாயம் முதலில் வழிபட்ட கடவுள் பூமாதேவியேயாம். 'மா' 'கா' என்ற இரு எழுத்துக்

களும் அந்த வழிபாட்டு முறைக்கு மூலமந்திரமாக அமைந்துள்ளன.

தமிழர்களின் சங்க இலக்கிய காலத்து 'காடு கிழாள்' என அழைக்கப்பட்ட தேவதையும், பிறிஜியா என்னும் நாட்டில் கிபேலே என அழைக்கப்பட்ட போர்த் தெய்வமும் ஒரே தன்மையினராகும் காளி, துர்க்கை இருவர்க்குமுள்ள குணங்களை யெல்லாம் அவ்விரு தேவதைகளில் காண்கின்றோம். கிபேலேயின் வாகனமுங்கூட சிங்கமாகும். கி. மு. மூன்றும் நூற்றாண்டில் ஹனிபோலுடன் நடந்த பெரும் போரில் வெற்றிகொள்ள ரோமாபுரி மக்கள் முதன் முதலாவதாக இத்தேவதையை வழிபட்ட வரலாறு உலக சரித்திரத்தில் இடம்பெற்றுள்ளது. ஐசிஸ்சும், கிபேலேயும் இறந்துபோன தங்கள் பதிகளான ஒசிறிசையும், அற்றிசையும் உயிர்த்தெழச் செய்த அற்புத நிகழ்ச்சிகள், சாவித்திரி-சத்தியவான் கதையில் நாம் படித்துள்ள சம்பவங்களை நினைவூட்டுந் தரத்தன. சாவித்திரியைப் போலவே அவ்விரு தேவதைகளும் வாழ்வு, மரணம் ஆகிய இரண்டின் பரம இரகசியத்தை நன்கு உணர்ந்திருந்தனர். இந்த முறையில் உலகில் தோன்றிய பழைய சமயக் கொள்கைகளைச் சரித்திர ரீதியாகத் துருவி ஆராய்வோமானால், தேவி வழிபாடே அவற்றிற்கெல்லாம் மூலவேராக அமைந்திருந்த உண்மையும், அந்தச் சமயங்களெல்லாவற்றிற்கும் இடையேயுள்ள அடிப்படை ஒற்றுமையும் தெற்றென விளங்கும்.

நாகரீக ஏணியில் ஆரம்பப்படிகள் சிலவற்றைத் தாண்டிய மனிதன் தன்னைச் சுற்றியிருந்த இயற்கை அன்னையின்குணங்கள் பல தன்னைப் பெற்றுவளர்த்த தாயின் குணங்களை ஒத்திருப்பதைக் கண்டதும், தாயைப்போலவே இயற்கையையும் தெய்வமாகப் பாவித்து வணங்கியிருக்க வேண்டும். பின்னர் நாக

ரீக முதிர்ச்சியில் அவனுக்குச் சக்தியில் விருப்பு எழுந்ததும், சக்தி வழிபாடு ஓர் சமயக்கொள்கையாக உலகெங்கும் பரவியதாகும். நவீன விஞ்ஞானிகள் பல்லாண்டுகள் பிரயாசைப்பட்டு, சடப்பொருள் (Matter) சக்தி (Energy) யென இரண்டு உண்மையில்லையென்றும், முந்தியது பிந்தியதின் மயமேயென்றும் இன்றுவற்புறுத்துகின்றனர். இந்த உண்மையை நமது மூதாதையர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே உள்ளனுபவத்தால் உணர்ந்து அதற்குப் பிரகிருதியென்ற தனிப்பெயரும் சூட்டியுள்ளனர். மாறிமாறி ஒடுங்கியும், விரிந்தும் வரும் சக்தியானது அநாதியானதென்றும், அழிவற்றதென்றும் அவர்கள் தெரிந்து, சித்தாகிய பரம்பொருளே சக்திக்கு மூலமாதலின், சக்தியைக் கண்ட இடத்திலெல்லாம் பலவித தெய்வத் தன்மையையே கண்டு. அத்தன்மைகட்குப் பொருந்த வெவ்வேறு நாமஞ் சூட்டி வழிபடலாயினர். இந்த முறையில், சக்தி வழிபாடானது முத்தியை அடைதற்குரிய உன்னத நெறியாக விளங்கலாயிற்று.

இடைக்காலத்தில் சக்தி உபாசகர்கள் வலது சாரி, இடதுசாரியென இரு கூட்டமாப் பிரிந்தனர். பிந்திய கூட்டமாகிய வாமா சாரக் கொள்கையினர் பெருந்தொகையாயினர். நாடெங்கும், முக்கியமாக வட இந்தியாவில், வாழ்வில் ஒழுக்கங் குன்றவே, போலித்துறவு மலிந்து, மந்திர, யந்திர, தந்திரக் கொள்கைகள் வசியம், மோகனம், தம்பனம் முதலான கீழ்த்தரமான கலைகளைச்சிருஷ்டித்தன. இந்த அனுசாரங்களும், தீச்செயல்களும் ஸைவம், வைஷ்ணவம் ஆகிய இரு சமயங்களுக்கும் இழுக்கைத் தேடியதோடு, புத்த மதத்தையும் மிகக் கீழான நிலைக்குக் கொணர்ந்தனவெனலாம். ஆதி சங்கராச்சாரியார் தோன்றியபோது நாட்டில் இருந்த சமய நிலை இதுவாகும், அந்த

மகா புருஷரை அத்துவித வேதாந்தியாக மாத்திரம் கருதுவோர், அவர் சைவத்திற்கும். வைஷ்ணவத் திற்கும், சக்தி வழிபாட்டிற்கும் செய்த அருஞ்சே வையை அறியாதவர்களாவர். இந்து மதமென் னும் கற்பக தருவுக்குப் புத்துயிர் கொடுத்து அதன் கிளைகள் மறுபடியும் உயர்ந்தும், விரிந்தும் வளர்ந்து சாந்த நிழல் பரப்பச்செய்தவர் அவரேயாம். வேத உபநிடத உண்மைகளை அனுபூதியிலுணர்ந்து, அவற் றிற்கு விரிவுரை வரைந்த அந்த மஹான், அந்த உண்மைகளுக்கு அப்பாலுள்ள தேவியின் சொரூபத் தைக் காண்பதோ, உரைப்பதோ இலகுவான காரிய மல்லவென மிகப்பணிவுடனும், அடக்கத்துடனும் கூறியிருப்பதிலிருந்தே, தேவி வழிபாட்டின் மகத்து வத்தை நாம் உய்த்துணரலாம். சங்கரர் கருத்துக் களையே பெரிதுந்தழுவி தமிழில் தேவி தோத்திரம் (அந்தாதி) பாடிய அபிராமிபட்டர்,

**"துணையுந் தொழுந்தெய்வமும் பெற்றதாயுஞ் சுருதிகளின்**
**பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்**
**கணையும் கருப்புச் சிலையு மென் பாசாங்கு சமுங்கையில்**
**அணையும் திரிபுர சுந்தரியாவ தறிந்தனமே"**

என ஆதி பராசக்தியை மிகவும் அருமையான முறை யில் வர்ணித்துள்ளார். தேவியே வேதமாகிய கற் பகத்தருவின் வடிவுகொண்டு தன் மகிமையை நமக்கு அறிவுறுத்துகிருளாம். பரந்து விரிந்த கிளை களாகவிருந்து அடியார்களுக்கு வேண்டியதை அருளு வதோடு, அக்கிளைகளின் உச்சியில் ஞானக்கொழுந் தாகவும் இலங்குகிருளாம். அதாவது வேதங்களின் ஞானபாகமான உபநிடதங்களும் அவள் வடிவங் களே. அத்தோடு வெளிக்குத் தெரியாமல் மறைந்து பதிந்து இருக்கும் வேரும் அவளே என்கின்ருர். இங்கே வேர் குறித்து நிற்பது பிரணவத்தை.

தேவி வழிபாட்டில் ஈடுபடுவோர்க்கு பெரும் பயன் தரக்கூடிய பல தோத்திரப் பாடல்களை வட மொழியில் சங்கரர் அருளியுள்ளார். அவற்றுள் முதலிடம் பெறுவது சௌந்தர்யலஹரி. மேலும், ஸ்ரீ லலிதாத்ரிசதீ ஸ்தோத்திரத்திற்கும் அவர் பாஷ்யம் வரைந்துதவியுள்ளார். தேவி உபாசகர் கட்கு இத் திரிசதீ நாம ஸ்தோத்திரம் எவ்வளவுமுக் கியமானதென்பது இதனுல் தெரியக்கிடக்கின்றது. ஸ்ரீ பஞ்ச தசாக்ஷரீ என்னும் மஹாவித்தையான பதினைந்து அக்ஷரங்களுக்கும், ஒவ்வொன்றுக்கு இரு பது நாமங்கள் வீதம் மொத்தம் முந்நூறு நாமங் களைக்கொண்ட இந்த ஸ்தோத்திரத்தைக் கேவலம் பெயர்கள்தானே எனக் கருதப்படாது. இவைகள் மேல் பார்வைக்கு நாமங்களைப்போலிருந்த போதி லும் உண்மையில் அவை மந்திர சொரூபமுடைய வைகளாகும். இந்தஇரகசியம் ஒவ்வொருசாதகனும் தன் சொந்த அனுபவத்தில் கண்டின்புற வேண்டிய தொன்று.

தேவி வழிபாட்டின் ஒப்பற்ற மகிமையையும், புனிதத் தன்மையையும் சென்ற நூற்ருண்டில் உல குக்கு வாக்காலும், வாழ்க்கையாலும் விளக்கிய பெருமை ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவ ரைச் சார்ந்ததாகும். அவர் அருமையாக விளக்கிய நெறியில், சக்தியைப் போற்றி வழிபட்டு ஈடேற்றம் அடைவதற்குப் பதிலாக, இயற்கைச்சக்தியை அடக் கியாண்டு அணுக்குண்டு, ஜலவாயுக்குண்டு முத லாய நாசகாரிகளைச் சிருஷ்டித்து அமைதி இழந்து அல்லல்படும் வல்லரசுகளின் தலைவர்கள் இனியா வது தங்கள் ஆசை ஆணவங்களைத் தேவியின் திருப் பாதங்களில் சமர்ப்பித்து உலகிற்கு உய்வழி காட்டு வாராக!

"ஆதவனுக் கவன்கிரணத் தங்கியைக் கொண்
டாலாத்தி சுழற்றலென்கோ,
சீதமதிக் கவன் நிலவி னெழுகுசிலைப்
புனல் கொடுபசரிப்பதென்கோ,
மோதியமைக் கடல்வேந்தை யவன் புனலான்
முழுக் காட்டு முறைமை யென்கோ,
நீதரு சொற்கவி கொடுனைப் பாடியுன
தருள்பெறு மென்னீதியம்மே!"

(சௌந்தர்யலஹரி)
*(வீரை கவிராஜ பண்டிதர் தமிழாக்கம்)*

*(திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின்
பொன் விழா மலருக்கென வரையப்பட்டது)*

# தேவி உபாசனை

''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்பது பழந்தமிழ் வாக்கு. அன்னையின் பாதத்தை முத்தம் இடுகின்றவன் சொர்க்கத்திற்குப் போகின்றான் என்றார் நபிநாயகம். ஆனால், தெய்வத்தை அன்னையாகப் பாவித்து வழிபடும் கொள்கை எங்கள் இந்து மதத்திலேயே தோன்றியதெனலாம். அது இன்று சிறப்பாக விளங்குவது அம்மதத்திலேயாம்.

நாகரீக ஏணியில் ஆரம்பப்படிகள் சிலவற்றைத் தாண்டிய மனிதன் தன்னைச் சுற்றியிருந்த இயற்கை அன்னையின் குணங்கள்பல தாயின் குணங்களை ஒத்திருப்பதைக் கண்டதும் தாயைப் போலவே இயற்கையையும் தெய்வமாகப் போற்றியிருக்கவேண்டும். பின்னர் நாகரிக முதிர்ச்சியில் அவனுக்குச் சக்தியில் விருட்பு எழுந்ததும், சக்தி வழிபாடு ஓர்சமயக்கொள்கையாகப் பரவியதாகும். அத்தொடர்பில் சடப்பொருள்களின் தன்மையையும், சக்தியின் தன்மையையும் துருவி ஆராய்ந்தநமது மூதாதையர் அவை இரண்டும் ஒன்றேயெனக்கண்டு, அதற்குப் பிரகிருதி யென்ற தனிப்பெயர் கொடுத்ததோடு, அது சக்திமயமானதெனவும் முடிபு கட்டினர். மேல்நாட்டு நவீன விஞ்ஞான விற்பன்னரும் சடப்பொருள், சக்தியென இரண்டு உண்மையில் இல்லையென்றும் முந்தியது, பிந்தியதின் மயமே என்றும், எனவே உண்மையில் உள்ளது ஒன்றே என்றும் இன்று வற்புறுத்துகின்றனர். அதுமாத்திரமன்றி, இச்சக்திக்கு அழிவில்லை யென்பதையும் அவர்கள் ஏற்றுக்கொண்டனர். இவர்கள் பல்லாண்டுகளாகப் பிரயாசைப்பட்டுக் கண்டு பிடித்த சக்தியைப் போற்றி வழிபடுவதற்குப் பதிலாக, அதனை அடக்கியாண்டு தங்களுக்கு உலக இன்பங்களையும் போக

போக்கியப் பொருள்களையும், பெருக்குவதில் மாத்திரம் கவனத்தைச்செலுத்தியதினலேயேஇன்றைய உலகம் அணுக்குண்டுக்கும், நீர்க்குண்டுக்கும் அஞ்சி அல்லற்படும் நிலைக்கு வந்துள்ளது. தொன்று தொட்டு தொடர்பு இழக்காமல்அத்யாத்மவாழ்வில் தலை சிறந்து விளங்கிய தென்னட்டில்கூட 'அறிவை அளித்தது அணுச்சக்தி அழிவைத் தருவது ஓம்சக்தி' என்பனபோன்ற வாக்கியங்கள் கோயில்கள், பள்ளிக்கூடங்கள் முதலியவற்றின் சுவர்களில் எழுதப்பட்டிருக்கும் காட்சியைக் காண்கின்றோம்.

பல்லாயிரம் வருஷங்கட்கு முன் சக்தியின் இயல்பை நன்கு ஆராய்ந்த இந்துமத ஞானிகளும், யோகிகளும் புற உலகம், அக உலகம் இரண்டையும் தாண்டி, அதற்கு மூலகாரணம் என்பதைத் திவ்விய திருஷ்டியால் அறிந்தனர், மாறி மாறி ஒடுங்கியும் விரிந்தும் வரும் சக்தியானது அநாதியானதென்றும் அழிவற்றதென்றும் அவர்கள் உணர்ந்து, சித்தாகிய பரம்பொருளே சக்திக்கு மூலமாதலின், சக்தியைக் கண்ட இடத்திலெல்லாம் தெய்வத்தன்மையையே கண்டு வழிபடலாயினர். எனவே, சக்தி வழிபாடு முத்தியை அடைதற்குரிய நெறியாக விளங்கலாயிற்று. நாளடைவில் இது ஆசியாவின் மேற்றிசை நோக்கிச் சென்று சீரியா, எகிப்து, மோல்ற்ரா முதலிய இடங்களில் பரவியிருந்ததற்குப் போதிய சான்றுகள் புதை பொருளாராய்ச்சியின் மூலம் கிடைத்துள்ளன. பழைய பூமண்டலப் பரப்பில் கீழ்மேலுலகில் அதலம், விதலம் எனக்குறித்தது மேற்கண்ட நாடுகளையாம். கிறிஸ்த்துவிற்கு முன் பதினன்காம் நூற்றாண்டில் தற்போது டெல்லல்—அமர்ணவென அழைக்கப்படும் இடத்தைத் தலைநகராகக்கொண்டு எகிப்து தேசத்தைப் புகழுடன் ஆண்ட ஆமென்ஹோடெப் என்னும் சக்கரவர்த்தியினுலும் அவனது அறிவிலும் பதியன்பிலும் சிறந்த

ராணியாம் நெபெட்டிதியாலும், பழைய தலைநக ரான தேநீஸில் வாழ்ந்த வைதீக குருமார்களின் கொடுமையான கட்டுப்பாடுகளிலிருந்து மக்களுக்கு விடுதலை தரும்முறையில் நிறுவப்பட்ட ஆத்மமத சித்தாந்தத்தில் தெய்வம் இப்புவனத்தைப் படைத் துக்காக்கும் அப்பன், அம்மையாகப் போற்றப்பட் டுள்ளது. சிவபெருமானின் அஷ்டமூர்த்த தத்து வம் ஒன்றிலிருந்து இரண்டாகி மேலும் கூடிக் கொண்டு வந்திருக்கவேண்டு மென்பதற்கு ஆமத் மதத் தோத்திரங்களில் அத்தாட்சியுள்ளன.

யாம் காணும் உலகமும் சர்வசிருஷ்டிகளும் ஒரு கற்பகாலத்தில் அழிந்து ஆதிசக்தியில் ஒடுங்கும், அந் தச் சக்தியும் சிவத்தி லொடுங்கும். அப்போது சிவம் தானே தானாக தற்பரநிலையில் யாதாமொரு செயலு மற்றிருக்கும். பிறப்பு நீக்கி இளைப்பாறியிருக்கும், உயிர்கட்கு அனுக்கிரகம் செய்யும் பொருட்டு சிருஷ்டி முதலாய தொழில்களைச் செய்வதற்குத் திருவுளங்கொண்ட சிவம் மீளவும் சக்தி சமேதராக விளங்குவர் என்பதே சைவ சமயக் கருத்தாகும். சிவமதமானது தத்துவ ரீதியாக இந்த உச்சநிலையை அடைவதற்கு எத்தனை ஆயிரம் வருஷம் எடுத்ததோ யார் அறிவர்?

தென்னாட்டைப் பொறுத்தமட்டில் சங்க காலத் தில் சைவம், வைஷ்ணவம், புத்தம், சமணம் ஆகிய நான்கும் சிறப்பான நிலையில் சமரசமாக இருந்த உண்மையை எவரும் மறக்க முடியாது. அப்போது சக்திவழிபாடு, கௌமாரம், காணபத்யம், பைர வம், போல் சைவத்தின் ஒரு கிளையாகவே இருந்து வந்தது. ஒழுக்கமற்ற தாந்திரிக வழக்கங்களாலும், உட்பிரிவுகளாலும் சமயநிலை இழுக்குற்றபோது, கௌமாரம் ஒன்றே மலினமெல்லாந் தீர்ந்த சுத்த சிவ அத்வைத மார்க்கமாகவும், ஏனையவை மலினப்

பட்ட சைவமெனவும் அழைக்கப்பட்டன. இன்று வரைக்கும் குருவின் வழிபாடு சிறப்பாகஇருந்து வருகிறதற்கு முக்கிய காரணம் இதுவெனலாம் சக்தி உபாசகர்கள் வலது சாரி, இடது சாரியென்ற இரு கூறுகப் பிரிந்ததும் அக்காலத்திலேயாம். ஏறக் குறைய நானூறு பாடல்களால் சக்தி வழிபாட்டை விளக்கும் திருமந்திர நூலிலேயே இதற்குச் சான்றுகள் காணலாம்.

> "சக்தியென் பாளொரு சாதகப் பெண்பிள்ளை
> முக்திக்கு நாயகி என்ப தறிகிலர்
> பத்தியைப் பாழில் உகுத்தஅப் பாவிகள்
> கந்திய நாய்போற கதறுகின் றரே."

என்கிறார் திருமூலர், நாலாந் தந்திரத்தில் ஆதார வாதேயத் தலைப்பின் கீழ். முன்னிரண்டு வரிகளில் வசிஷ்டர், சுகர், சனகர், சனந்தனர், சனற்குமாரர் ஆகிய ஐவர்களும் அருளிய ஸம்ஹிதைகளின் கருத்தை விளக்கிய பின், அடுத்த இரண்டு வரிகளில் மஹா வைரவ, கால வைரவ, சாமுண்டி, வாதுளம் முதலாய அறுபத்துநான்கு தாந்திரங்களைப் பின்பற்றிய வாமாசாரக் கொள்கையினரைக் குறிப்பிட்டுள்ளார். பிந்திய கூட்டத்தினரின் அனுசாரங்களும் தீச்செயல்களும் சைவம், வைஷ்ணவம் இரண்டையும் கெடுத்ததுமன்றி புத்த மதத்தையும் மிகவும் கீழான நிலைக்குக் கொணர்ந்ததெனலாம். சங்கரர் தோன்றியபோது நாட்டில் இருந்த சமயநிலை இதுவாகும். நாடெங்கும் முக்கியமாக வடக்குப் பிரதேசங்களில், வாழ்வின் எல்லாத் துறைகளிலும் சீர்கேடு பரவி இருந்தது. போலித்துறவு மலிந்து மந்திர யந்திர, தந்திரக் கொள்கைகள் வசியம், மோகனம், தம்பனம் முதலான வற்றைக் கலைகளாக்கிவிட்டன. இழுக்குற்றிருந்த புத்த மதத்தை மிகவும் நுட்பமான தத்துவ சாஸ்திர விளக்கத்தால்

இருந்த இடம் தெரியாமல் மறையச் செய்ததுடன் சங்கரர் நின்றுவிடவில்லை. அவரை, அத்துவித வேதாந்தியாக மாத்திரம் கருதுவோர் அவர் சைவத்திற்கும், வைஷ்ணவத்திற்கும், தேவிவழிபாட்டிற்கும் செய்த அருஞ்சேவையை அறியாதவர்களாவர். இந்து மதமென்னும் கற்பக தருவுக்கு புத்துயிர் கொடுத்து அதன் கிளைகளை மறுபடியும் உயர்ந்தும், விரிந்தும் வளர்ந்து சாந்தி நிழல் பரப்பச் செய்தவர் அவரேயாம். அவர் அருளிய சிவானந்த லஹரீ, சௌந்தர்ய லஹரீ, சுப்ரமண்ய புஜங்கம், கணேச பஞ்சரத்தினம், கௌரிதசகம் முதலிய தோத்திர நூல்கள் அவரது அரிய பக்தியை நமக்குத் தெரியச் செய்வதுடன் அவர் ஆற்றியுள்ள ஒப்பற்ற சிவத் தொண்டையும் நமக்கு விளக்கி நிற்கின்றன. வேத உபநிடத உண்மைகளை அனுபூதியிலுணர்ந்து அவற்றிற்கு விரிவுரை வரைந்த சங்கரர் அந்த உண்மைகளுக்கு அப்பாலுள்ள தேவியின் சொரூபத்தைக் காண்பதோ உரைப்பதோ இலகுவான காரியமல்லவெனப் பணிவுடனும் மிகுந்த அடக்கத்துடனும் கூறியிருப்பதையும் நோக்குக.

தேவி வழிபாட்டில் ஈடுபடுவோர்க்கு இரு கண்கள்போல் அமைந்துள்ளவை மேலே குறிப்பிட்ட சௌந்தர்ய லஹரீயும், லலிதா சஹஸ்ர நாமமுமாகும். முந்தியதிற்கும், திருமூலர் பாடல்களுக்கும் நெருங்கிய கருத்தொற்றுமையுண்டு. பிந்தியது பிரமாண்ட புராணத்தின் ஓர் பகுதியான லலிதோபாக்கியானத்தைத் தொடர்ந்து தேவியின் ஆயிர நாமங்களைத் தோத்திர முறையில் எடுத்துரைக்கும் நூலாகும். இதற்கு இணையான தோத்திர நூல் பிறிதொன்றில்லையென்பதே அறிஞர் முடிவு. சரஸ்வதி தேவியே லலிதா பரமேஸ்வரியின் கட்டளைப்படி இத்தோத்திரத்தைப் பாடியதாகப் புராணங்

கூறுகின்றது. இதைப்பற்றிய ஏனைய விபரங்கள் 'ஆத்மஜோதியில்' சந்தர்ப்பங் கிட்டும்போது வெளிவரும்.

தேவி வழிபாட்டின் உயர்வற உயர்ந்த புனிதத்தன்மையை இருபதாம் நூற்றாண்டில் உலகுக்கு வாக்காலும் வாழ்க்கையாலும் விளக்கிய பெருமை பகவான் இராமகிருஷ்ணரைச் சார்ந்ததாகும். அவர் சாரதாமணி தேவியாருடன் நடாத்திக் காட்டிய வாழ்வு தாந்திரிக சாஸ்திரங்களின் உன்னத லட்சியத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இன்று ஆனந்தா ஆச்சிரமத்தில் உடல் கொண்டுலாவும் அன்னை கிருஷ்ணபாயும் தேவியின் அழகு, அன்பு, கருணை முதலான மங்கள குணங்களுக்கு ஓர் அரிய உதாரணமாக விளங்குகின்றார். அன்னாரின் பிறந்த தினம் புரட்டாதி மாதம், 15-ம் தேதி, திங்கட்கிழமையன்று பொருந்தியுள்ளது. இம்முறை நவராத்திரி பூஜையும், அத்தினத்திலேயே ஆரம்பிக்கின்றது. இக்காரணங்கள் பற்றியே 'ஆத்மஜோதி' ''பத்துக்கரத்தி பராபரன்பைந்தொடி, வித்தகி என்னுள்ளம் மேவி நின்றாளே'' என்ற திருமூலர் வாக்கிற்கிணங்க தேவி மலராகத் தோற்றமளிக்கின்றது.

**"வாழ்வை யெல்லாம் கலையாக்கும் மதியம் வேண்டும்**<br>
**மாசற்ற பேரறிவு வளமும் வேண்டும்**<br>
**தாழ்மையிலே பெருமை கொளுந் தகைமை வேண்டும்**<br>
**சகவுயிரில் உனைக்காணும் சுகமும் வேண்டும்**<br>
**பாழ்படுத்தும் பிணிகளெல்லாம் பறக்க வேண்டும்**<br>
**பந்தங்களற்ற பெரும்பலமும் வேண்டும்**<br>
**ஊழ்கடக்கச் சிவஞான சக்தி வேண்டும்**<br>
**உனையன்றி அருள்பவர்யார் ஒப்பில் அன்னாய்?"**

# லலிதா ஸஹஸ்ர நாமம்

ஈசனரு ளிச்சையறி, வியற்ற லின்ப
    மிலயமொடு போக மதிகார மாகித்
தேசருவ மருவுருவ முருவ மாகித்
    தேவியுமாய்த் தேசமொடு செல்வ மாகிப்
பேசரிய வுயிரையெலாம் பெற்று நோக்கிப்
    பெரும்போக மவையளித்துப் பிறப்பினையு மொழித்திட்டு
ஆசகலு மடியருளத் தப்பனுட னிருக்கு
    மன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம்.

—சிவஞானசித்தியார்.

பரம்பொருளைத் தாயாக வழிபடும் வழக்கம் மிகவுந் தொன்மையானது. பூமி, அறிவு, வீரம் ஆகிய மூன்றும் பண்டைக்காலத்தில் பலநாடுகளில், பலமொழிகளில் பெண் தெய்வங்களாக வழிபடப் பட்ட உண்மை பழைய சமயங்களில் சரித்திர ஆராய்ச்சியால் வெளிவந்துள்ளது. மனித சமுதாயம் முதலில் வழிபட்ட கடவுள் பூமாதேவி யென்றும், அத்தேவி வழிபாட்டிற்கு 'மா', 'கா' என்ற இரு எழுத்துக்களும் மூலமந்திரம் என்றும் எழுதியுள் ளார் கிரேக்க கவிஞர் சோபோகிள்ஸ். (Scphccles) இவர் காலம் கி. மு. ஐந்தாம் நூற்றுண்டாகும்.

குறித்த இத்தெய்வக் கொள்கை முதலில் தோன்றியது சிந்து வெளியில் என்பது பல ஆராய்ச்சி யாளர் கண்ட முடிபு. இருக்கு வேதத்தில் தேவி தோத்திரம் புகுந்தது அந்தப் பழைய வழக்கத்தை ஒட்டியே போலும். இவ்வித பழமையான சக்தி வழிபாட்டிற்கு முறையான ஆகம சாஸ்திரங்க ளமைத்து அதற்குரிய யந்திரங்களையும் மந்திர தோத்திரங்களையும் சேர்த்துக் கொண்ட பெருமை

இந்துக்களைச் சார்ந்ததாகும். இடைக்காலத்தில் வாமாசாரக் கொள்கையினர் தோன்றி வசியம், மோகனம், தம்பனம் முதலான கீழ்த்தரமான கலைகளைச் சிருஷ்டித்து, சக்திவழிபாட்டை இழுக்குறச் செய்த வேளையில் ஆதி சங்கரர் அவதாரஞ் செய்து, அதனைப் புனிதமாக்கி வைத்தனர்.

அந்த மஹா புருஷரை அத்துவித வேதாந்தியாக மாத்திரம் கருதுவோர், அவர் சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணபத்யம், கௌமாரம், சௌரம் ஆகிய அறு சமயங்களுக்குஞ் செய்த அருஞ் சேவைகளை அறியாதவர்களாவர்; அல்லது அறிந்திருந்தும் மறந்தவர்களாவர். இந்த அறியாமை நாளடைவில் இந்தியாவின் பலபாகங்களில் மறைந்து விட்டது. இப்போது சிறிது எஞ்சியிருப்பது சைவர்களான தனித்தமிழ்ப் பண்டிதர்களிடை மாத்திரமே.

மேலே குறித்த ஆறுசமயங்களுள் சாக்தமானது ஏனைய ஐந்தையும் பிணைத்து நிற்கின்ற காரணத்தால், சக்திவழிபாடானது இந்து சமுதாயம் முழுவதற்குமே சொந்தமாய் விட்டது. வேத உபநிடத உண்மைகளை அனுபூதியிலுணர்ந்து, அவற்றிற்கு விரிவுரை வரைந்த சங்கராசாரியரே, அந்த உண்மைகளுக் சப்பாலுள்ள தேவியின் சொரூபத்தைக் காண்பதோ உரைப்பதோ இலகுவானகாரியமல்லவென மிகப்பணிவுடனும், அடக்கத்துடனும் கூறியிருப்பதிலிருந்து, தேவி வழிபாட்டின்ம மகத்வத்தை நாம் உய்த்துணரலாம். ''ஸர்வ வேதாந்த ஸித்தாந்த ஸூதத்வாயை'' என்பது தேவியின் திருநாமங்களுள் ஒன்று. ஆகையால் எந்தவித வேதாந்த—சித்தாந்தவாதமோ அவளது வழிபாட்டில் தலைகாட்ட முடியாதென்பது வெளிப்படை.

தேவி உபாசனைக்கு உகந்தவை நாமஸ்தோத்திரங்களும் நாமாவளிகளுமாகும். முந்தியவை படித்துப் பாராயணம் செய்வதற்கு மாத்திரம் உரியன; பிந்தியவைபடித்துப்பாராயணம்செய்வதோடு மலரோ, பத்திரமோ, குங்குமமோ தூவி அர்ச்சனை செய்யவும் உரியனவாகும். சக்திகளுக்குள் எவ்வாறு லலிதா தேவியே சிறந்தவளோ, மந்திரங்களுள் எவ்வாறு ஸ்ரீவித்தை சிறந்ததாகவுள்ளதோ, அவ்வாறே பத்துவித ஸஹஸ்ர நாமங்களுள் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமாவளி சிறந்ததாகக் கருதப்படுகின்றது. இதன் வரலாறு வியாசர் அருளிய பதினெண் புராணங்களுள் கடைசியான ஸ்ரீபிரமாண்ட புராணத்தின் இரண்டாம் பாகத்தில் மூன்று அத்தியாயங்களில் தரப்பட்டுள்ளது. மொத்தம் சுலோகம் முந்நூற்றிருபது.

முதல் அத்தியாயத்தில் அடங்கிய ஐம்பத்தொரு சுலோகங்களுள் ஐம்பதும் அகஸ்தியர், சூதர், ஹயக்ரீவர், தேவி ஆகிய ஐவரின் திருவாக்குகள் கொண்டவை. இவை, குறித்த ஸஹஸ்ர நாமத்திற்கு முகவுரையாக அமைந்துள்ளன. இறுதிச் சுலோகம் (51 ஆவது) தியான சுலோகமாகும். இரண்டாம் அத்தியாயத்தில் நூற்றெண்பத்திரண்டரை சுலோகங்கள் நாமங்களை அடக்கியுள்ளன. மூன்றும் அத்தியாயத்தில் எண்பத்தாறரை சுலோகங்கள் பல சுருதியென அழைக்கப்படும். இப் பல சுருதியில் விபரிக்கப்பட்டுள்ள சித்திகள் வெறும் பாராட்டு மொழிகளோ அல்லது புகழ்ச்சியுரைகளோ வல்ல. பல நூற்றூண்டுகளாகத் தேவி உபாசகர்களால் அனுபவத்திற் கண்ட உண்மைகளாகும். பதினெட்டாம் நூற்றூண்டில் வாழ்ந்த பாஸ்கரராயரின் வாழ்க்கையும் அவரால் இயற்றப்பட்ட பாஷ்யமாகிய சௌபாக்கிய பாஸ்கரம்' என்னும் நூலும் இதற்குப் போதிய சான்றூகும்.

ஒப்பும் உயர்வுமற்ற இந்த ஸ்ரீலலிதாரஹஸிய ஸஹஸ்ர நாமாவளியைப் பக்தி சிரத்தையோடு தினந்தோறும் தவறுது பாராயணம் செய்து வருகின்ற சீலர்கள், இன்றைக்கும் இந்தியாவில் பலர் இருக்கின்றனர். இலங்கையிலுஞ் சிலர் உளர். அந்தச் சிலருள் ஒருவர் பிரம்ம ஸ்ரீ. க. வை. ஆத்மநாத சர்மா அவர்கள். அவரே 'அன்னை லலிதாம்பிகை அருட்பேராயிரம்' என்று தமிழில் ஆசிரியப்பாவாக அமைந்துள்ள இந்த மொழிபெயர்ப்பு நூலை நமக்கு அளித்துள்ளார். தாம்பெற்ற இன்பம் வடமொழிப் பயிற்சியில்லாத தமிழ் மக்களும் பெறவேண்டுமென்ற ஆர்வத்தால் உந்தப்பட்டு, தேவியின் திருவருளை முற்கொண்டு, இந்த அரும்பணியை ஆற்றி உள்ளார். இருபத்தைந்து ஆண்டுகட்கு மேலாக அவர் செய்துள்ள சாதனையின் பலனை இந்த நூலிற் காணலாம் எனக் கூறுதல் மிகையாகாது.

ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனிச்சிறப்புண்டு. தமிழுடன் பக்தியும் இனிமையும் இணைந்திருப்பது போல், வடமொழிக்கு மந்திரசக்தி பொருந்தியுள்ளது. எவரும் மறுக்க முடியாத உண்மையிது. அந்தச் சக்தியை மொழி பெயர்ப்புகளிலும் மிளிரச் செய்வது மிகவும் அரிதான செயலாகும். ஆயினும், இதுபோன்ற மொழிபெயர்ப்பைக் கருத்தூன்றிக் கற்பதால் ஆலயங்களில் லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை நடைபெறும் போதோ அல்லது வேறு எங்காயினும் அது பாராயணம் செய்யப்படும்போதோ, நாம் நமது முழுக்கவனத்தையும் அதிற் செலுத்தி நற்பயன் அடைய முடியும். எனவே, இந்த நூல் சைவ இல்லம் ஒவ்வொன்றிலும் பிரார்த்தனைப் புத்தகமாக இருக்கவேண்டுமென்பது எமது பேரவா. ஈழத்தில் தமிழ் பேசும் நன்மக்கட்கு இன்று முக்கியமாகத் தேவைப்படுவது தேவியின் திருக்கடைக் கண்

பார்வை. மக்கள் உள்ளத்தில் ஆர்வக்கனல் பொங்கி எழுந்தால், அவள் கருணை இறங்குமென்பது திண்ணம்.

வடமொழி சிறிதேனும் அறியாத தமிழர்களும் தேவி உபாசனைக்குரிய வடமொழி நூல்களைப் பாராயணம் பண்ணும் பொருட்டு, மயிலாப்பூர் இராமகிருஷ்ணமடம், சென்னை குஹானந்த மண்டலி, பிரம்மவித்தியா விவர்சனீ, திருவல்லிக்கேணி கிரி அச்சகம் முதலான நிலையங்கள் அத்தோத்திர நூல்களை தேவநாகரியோடு, தமிழ் எழுத்துக்களில் பதவுரையுடன் வெளியிட்டுதவி வருகிறார்கள். இவர்கட்கு வழிகாட்டிய பெருமை யாழ்ப்பாணம் வித்தியாதரிசியாக இருந்து காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ.யா. தி. சதாசிவ ஐயர் அவர்களைச் சார்ந்ததாகும், அவர் ஆரம்பித்து வைத்துப்போன அருந்தொண்டை ஆத்மநாதசர்மா அவர்கள் தொடர்ந்து செய்வதோடு அதனை விரிவாக்கியுமுள்ளார். அவரைப் போலவே இவரும் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தேர்ச்சியுடையவர். இவரது பயன் கருதாப் பணி மேலும், மேலும் சிறப்புற்றோங்குமாறு எல்லாம் வல்ல லலிதாம்பிகையை வேண்டுகின்றோம். இந்த முன்னுரையை எழுதும் புண்ணியம் எமக்குக் கிட்டியது அப்பெருமாட்டியின் கருணையினாலேயாம். அதற்காகவும் அவளுக்குத் துதி செலுத்துகின்றோம்.

"கரிமா முகனும் கருணை கரராம்
குருமா முனியும் குணவாணியு நீ
திருமா மகளுஞ் சிவை பார்வதி நீ
முருகா வெனமுன் வருவாய் லலிதே!"

(பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாத சர்மா அவர்கள் இயற்றிய
"அன்னை லலிதாம்பிகை, அருட்பேராயிரம்"
என்னும் நூலுக்கு எழுதப்பட்ட முன்னுரை)

# ஸௌந்தர்ய லஹரிக்கோர்

## முன்னுரை

வேதாகமங்களேயும் உபநிடதங்களேயும் புராண இதிகாசங்களேயும் துருவி ஆராய்ந்து பார்த்தால் அவற்றில் சக்திக்கே பிரதானமான இடம் கொடுத்திருப்பதைக் காணலாம். தத்துவப் பதங்கள் சிறிது மற்ற எளிய கதை ரூபமான ஓர் உதாரணத்தை எடுப்போம்.

அயோத்திமாநகரில் அஸ்வமேத மஹா மண்டபத்தில் இராமாயணம் பக்கவாத்தியங்களுடன் கதாப்பிரசங்கமாக எடுத்து விளக்கப்படுகிறது. அதனைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த ஸ்ரீராமர் அச்சரித்திரம் தமக்குமே கீர்த்தியைத் தரக்கூடியது என பகிரங்கமாய் எடுத்துச் சொல்லி அதில் பிரதானமான இடம் சீதாதேவிக்கேயன்றித் தமக்கல்லவென்ற உண்மையை மிகவும், நுட்பமான முறையில் சனங்களுக்குத் தெரியச் செய்தனர். இராமாயணம் என்றே அந்த இதிகாசம் அழைக்கப்பட்டாலும், அதற்கு நாமகரணம் சூட்டிய வால்மீகி சீதையினுடைய சரித்திரம் என்றே கூறிவிட்டார். சிறிது கிஷ்கிந்தா காண்டத்திற்குச் செல்வோமாயின், இதன் முக்கிய காரணத்தை இலகுவில் தெரிந்து கொள்ளலாம்.

சீதையைப் பிரிந்து வாடிவதங்கி வரும் இராமலட்சுமணரை சுக்கிரீவன் சந்திக்கிறுன். தனது கஷ்டத்தைக்கூறி, அவர்கள் துயரத்தை அறிந்ததும், புஷ்பக விமானத்திலிருந்து ஓர் பெண்ணுல் கீழே போடப்பட்டு தான் கவனமாய் வைத்திருந்த பீதாம்பரத்தையும், ஆபரணங்களேயும் காண்பிக்

கிறுன் சுக்கிரீவன். அவன் தனது தேவியினுல், அடையாளமாகப் போடப்பட்ட பொருள்களை உணர்ந்து கொண்ட இராமர், லட்சுமணனின் அபிப்பிராயத்தையும் அறிந்தே தீர்மானிக்க வேண்டிய விஷயம் போல் நடித்துக் காட்டினர். லட்சுமணனே தேவியின் பாதங்களின் அணிகளாகிய தண்டைகளைத் தவிர வளையலேயோ, காதணியையோ, மூக்குத்தியையோ, முத்து மாலையையோ தான் ஒரு காலமும் பார்த்ததில்லை யென்றுன். அப்படி அறிந்து கொள்ளாமைக்குக் காரணம் கூறுமாறு கேட்கப்பட்ட லட்சுமணன் தண்டைகளணிந்த பாதங்களைத்தவிர, தேவியின் ஏனைய அங்கங்களைப் பார்க்க வேண்டிய காரணம் ஏற்படவில்லை யென்றனன். லட்சுமணனின் பதிலில் இரண்டு அரிய உண்மைகள் அடங்கியுள்ளன. ஒன்று அவனின் ஒழுக்கத்தின் உயர்வும், தமையன் மனைவியைத் தாய் போலப் பேணிய புனிதத்தன்மையும்; மற்றையது பரமார்த்திகத் துறையில் தேவியின் திருப்பாதக் காட்சியொன்றே போதுமென்ற தத்துவம். இதே கருத்தை வைத்துப் போலும் ஆதிசங்கரர் 'ஆண் வடிவுள்ள தெய்வத்துக்குப் புத்தி முத்திகளை அடியார்க்கு வழங்குவதற்கு கைகளிற்றுன் சக்தியுண்டு. பெண்வடிவு கொண்ட பராசக்திக்கோ, பக்தர்கள் கோரும் வரங்களைக் கேட்டதற்குப் பன்மடங்காக அளிக்குஞ் சக்தி அவளது திருப்பாதங்களிலேயே உள்ளது' என ஸௌந்தர்ய லகரி நாலாவது பாட்டில் வர்ணித்துள்ளார்.

அத்துவிதம் போதித்த சங்கரர், பாஷ்யங்கள் வரைந்த சங்கரர், என்று மாத்திரம் பகவத் பாதாசாரியாரை அறிந்தோர் அவரின் அவதார நோக்கத்தை மட்டும் படித்தவர்களாவார். உயர்வற உயர்ந்த அனுபூதிநிலைக்கு ஞானத்தைஅடிப்படையாகக் கொண்ட பத்தியே சாதனையாகும். அவ்வித சாதகர்

கட்கு ஞானம் வேறு, பக்தி வேறு என்ற பேத புத்தியே வரமாட்டாது. இந்த உண்மையை மாந்தர் உள்ளத்தில் முதலில் பதியச் செய்து, கால தேவி வேண்டி நின்ற அத்யாத்ம சேவையை செவ்வனே செய்யும் பொருட்டே சங்கரர் முதலில் ஞான நூல்களை இயற்றி கன்னியாகுமரி தொடக்கம், கைலாசம் வரைக்கும் அவற்றின் பிரசாரத்தை அற்புதமாகச் செய்தனர். அப்பணி பரிபூரணமாய் நிறைவேறி, தாம் கோரிய நிலை நாடெங்கும் பரவிய பின்னரே பக்திசாதனைக்குரிய தோத்திரங்களைப் பாடியருளினார்.

சங்கரர் அருளிய தோத்திரப் பாடல்கள் இந்து மதத்தின் முக்கிய தெய்வங்கள் எல்லார்மீதுமாகும். சிவன், கணபதி, சுப்ரமண்யர், கிருஷ்ணர், சரஸ்வதி, கௌரி, லலிதா, திரிபுரசுந்தரி, ஹனுமான் ஆகியோர் மீது பக்தி ததும்பும் பாடல்கள் அருளியுள்ளார். சுப்பிரமணியபுஜங்கம், பஜகோவிந்தம் போன்ற தோத்திரங்கள் எளிதில் பாராயணஞ் செய்யக்கூடிய இனிய சந்தப் பாக்களாகும். அவரது தோத்திர நூல்களுள் பெரியதும் தலையாயதும் ஸௌந்தர்யலகரியெனும் தேவி தோத்திரமாகும். இந்தியாவின் பல பாகங்களில் இதற்கு ஏறக்குறைய ஐம்பது விரிவுரைகள் இருக்கும் பெருமையொன்றே இதன் மகிமைக்குப் போதிய சான்றாகும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர். இந்நூலில் மொத்தப் பாடல்கள் நூறு. ஆனால் சில பிரதிகளில் மூன்று பாடல்கள் கூடவும் உள்ளன. அவற்றுள் 94ம் 99ம் 102ம் பாடல்கள் மூன்றும் சங்கரர் இயற்றியவையல்ல, இடைச் செருகல்கள் என்கிறார் அரியதேவி உபாசகரும் விரிவுரையாளருமான லக்ஷ்மிதார். பாஸ்கரராயருக்கு அடுத்த படியில் இருக்கக் கூடியவர் இவரே. அண்மையில் வெளிவந்த பிரதிகளில் இம்மூன்று பிரதிகளும்

விலக்கப்பட்டேயுள்ளன. எனினும் 99ம் பாடலின் அரிய தத்துவத்தை ஸ்ரீ ராமகிருஷ்ணரின் வாழ்க் கையில் கண்கூடாகக் கண்ட அரிய சில உண்மை களோடு ஒப்பிடும் போது அந்தப் பாடலும் ஆதி சங்கரர் திருவாய் மலர்ந்ததாய் இருக்கலாமென்ற எண்ணம் உதிக்கின்றது.

இருபது பாடல்களை உடைய ஆனந்த லஹ ரியை ''தேவி! உன் மகிமையை எடுத்துரைப்ப தற்கு நான்கு முகமுள்ள பிரமாவினுலோ, ஐந்து முகமுள்ள பரமசிவனுலோ, ஆறுமுகமுள்ள தேவ சேனுதிபதியாலோ, ஆயிரம் தலையுள்ள ஆதிசேட னுலோ முடியாது. அப்படியிருக்க ஒருமுகமுள்ள சாதாரண மனிதனுன என்னுல் முடியுமா? உன் னைத் துதிக்க உன்னருளே வேண்டும்' என்று அள வற்ற பணிவுடனும் அடக்கத்துடனும் ஆரம்பித்து, ''மனத்தை ஒரு தடாகமாக்கி அதில் தேவியைத் தோழிமார்களோடு நீர்விளையாட்டில் இன்புறும்படி செய்தால் அவளுடைய குளிர்ச்சி பொருந்திய கரு ணையினுலே பிறவி நோயின் வெப்பந் தணியும். பேரின்பம் பெறலாம். சேரவாரும் செகத்தீரே'' என அறைகூவி முடித்த சங்கரர், பின்னரும் ஏன் தேவிமீது ஸௌந்தர்யலஹரியென்ற பெரிய தோத் திரத்தைப் பாடவேண்டுமென்ற கேள்வியுண்டு.

இந்துமத சாஸ்திரங்களான சமுத்திரத்தை உள்ளங்கையில் வைத்து ஆசமனம் பண்ணிய சங் கரருக்கு கீதை ஏழாம் அத்தியாயத்தின் மூன்றும் பதின்மூன்றும் சுலோகங்களின் முக்கியத்துவங்கள் சதா ஞாபகத்தில் இருக்காமல் தவற முடியுமா? கடவுளை வழிபடுவோரில் துன்புற்றுரும் பயனை வேண்டுவோருமே, அதாவது ஒரே கோரிக்கையா கவே ஆராதிப்போரே, பெரும்பாலாரென்பதை அவர் மறந்திருக்க முடியுமா? கோடி மனிதரில்

ஒருவனே கடவுளுக்காகவே பக்தி செலுத்த முடியும் என்பதை அவர் நன்கறிந்தவரல்லவோ! ஆகையால்தான் சாதாரண மக்கள் சகலவிதமான கஷ்டங்களிலுமிருந்து விடுபட்டு வாழ்க்கை நலன்களைத் துய்ப்பதற்காக இந்த சிந்தாமணியை அருளினரெனலாம். அவர் காலத்தில் மக்கள் இஷ்டசித்திகளைப் பெறும் பொருட்டுக் கையாண்ட மந்திர தந்திரங்கள், வழிபாட்டு முறைகள் அருவருக்கத் தக்கனவாயிருந்தன. சக்தி வழிபாட்டின் உன்னத புனித நெறியான சமய மார்க்கம் மறைந்து வாமசாரமே நாடெங்கும் பரவியிருந்தது. இந்துக்கள் மாத்திரமன்றி க்ஷீணதிசையுற்றிருந்த புத்த சமயிகளும் அதே கேவல முறைகளைப் பின்பற்றினர். அந்த அழுக்குகளையும் அவலட்சணங்களையும் ஆபாசங்களையும் சமய வாழ்விலிருந்து கழுவி விடுவதற்கே ஸௌந்தர்யலஹரியென்னும் பொருத்தமான பேருடைய அரியநூலை அருளிச் செய்தனர். அது நாடெங்கும் பெருக்கெடுத்துப் பரவிய பின்னரே கௌலமார்க்கத்தின் துர்நாற்றம் மறைந்து சமய மார்க்கத்தின் மணம் வீசியதாகும்.

இதே கட்டுரையில் குறித்த பெரிய நூலின் விபரங்களையோ கருத்துக்களையோ விளக்க முடியாது. அப்படிச் செய்வது எமது நோக்கமுமல்ல. வாசகர்களின் கவனத்தை கற்பக விருட்சம்போன்ற இத் தோத்திர நூலின்மீது ஈர்த்துவிட வேண்டுமென்பதே எமது நோக்கமாகும். சங்கரர் இயற்றிய ஏனைய நூல்கள் கனிகள் போன்றவையெனலாம். சிவமெனும் பொருளானது ஆதிசக்தியோடு சேர்ந்தால்தான் எத்தொழிலையாவது செய்ய முடியும். அவள் பிரிந்திடில் அதனுல் இயங்கவே முடியாது என்ற கருத்தை ஆரம்பத்தில் விளக்கியபின்னரே ஏனைய விபரங்கள் தொடர்ந்து வருகின்றன. தேவியின் பாத தூளியின் மகிமை அளப்பரிது.

சகல ஐஸ்வரியங்களையும் இகவாழ்வில் தருவதுடன் மாயா பாசத்திலிருந்து விடுபெறும் ஞானமார்க்கத்தையும் அளிக்கக் கூடியது இந்தத் தோத்திர நூல். ஆகையால் அன்பர்கள் பக்தி சிரத்தையுடன் இதனைப் பாராயணஞ் செய்து இம்மைப் பயன்களையும் இஷ்ட சித்திகளையும் மறுமைப்பேற்றையும் பெறுவார்களாக.

வாமசார இழுக்குகளைத் துடைக்க வந்த இந்தப் புனித நூலில் வரும் சில பாடல்களையே, ஆசாரியர்களின் தூய ஞானக் கருத்துக்களுக்கு முரண்படு முறையில் அவற்றிலுள்ள மந்திர சக்தியை யந்திரம் மூலம் துர்ப்பிரயோகஞ் செய்வோருமுளர். உதாரணமாக தேவியின் கடைக்கண் பார்வையின் மகிமையை விளக்கும் பதின்மூன்றுவது பாடலையோ, அல்லது பதினெட்டாம் அறுபத்தொன்பதாம் பாடல்களையோ பெண்களை வசியம் செய்வதற்காகவே பாராயணஞ் செய்யும் சாதகர்கள் (பாதகர்கள்) உளர். அரையில் அல்லது மார்பில் யந்திரமும் அணிந்து கொள்வார்கள். முக்கோண சுவர்ணத் தகட்டில் யந்திரம் வரைந்து, தினம் ஆயிரந்தரமாக எழுபத்திரண்டாவது பாடலை நாற்பத்தைந்து நாள் உச்சாடனம் பண்ணி தேன் வைத்துப் பூசை பண்ணி அந்த யந்திரத்தைக் கைத்தடியின் பூணுள் மறைத்து வைத்துக் கொண்டு பிரயாண வழிக்குத் துணையாகவோ எதிரிகளிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டோ அப் பிரம்பை சதா எடுத்துச் செல்லும் பக்தர்களும் உளர். 'பயந்த தனி வழிக்குத் துணை வடிவேலுஞ் செங்கோடன் மயூரமுமே' என்பதற்கிணங்க முருகனின் நாமத்திலோ அல்லது தேவியின் மந்திரத்திலோ உண்மையான விசுவாசமும் நம்பிக்கையுமுள்ளோர் இவ்வித சில்லறைச் செப்படி வித்தைகளை எட்டியும்

பாரார். நெறியற்ற முறையில் தோத்திரங்களையும் மந்திர யந்திரங்களையும் பாவிப்போர் விஷயத்தில் எச்சரிக்கையுடன் வாழவேண்டியது அறிவுடைய சாதகர்களின் கடமையாகும். அதனை நினைவூட்டவே அனுபவத்தில் கண்ட சில உண்மைகளை இக்கட்டுரையில் தந்துள்ளோம்.

ஸௌந்தர்யலஹரியின் அவையடக்கம் துதியின் மகிமையைக் கூறும் இறுதிப்பாடலில் அமைந்திருப்பது இந்நூலிற் காணப்படும் முக்கிய விஷயங்களில் ஒன்றாகும். தேவியே இத் தோத்திர நூலியற்றிய கர்த்தாவென்பதே நூற்பரியம். அதில் தமிழ் மொழிபெயர்ப்பை வீரகவிராஜ பண்டிதர் வாக்கில் கீழே காண்கிறோம்:

ஆதவனுக் கவன்கிரணத் தங்கிகையக்கொண்
டாலாத்தி சுழற்றறென்கோ
சீதமதிக் கவன்நிலவி ஞெழுகுசிலைப்
புனல்கொடுப சரிப்பதென்கோ
மோதியமைக் கடல்வேந்தை யவன்புனலான்
முழுக்காட்டு முறைமையென்கோ
நீதருசொற் கவிகொடுனைப் பாடியுன
தருள் பெறுமென் னீதியம்மே!

(ஆத்மஜோதியிலிருந்து எடுக்கப்பட்டது)

# ஸ்ரீவித்தையும் ஸ்ரீசக்கர பூஜையும்

பரப்பிரம்மத்தின் சொரூபத்தை விளக்க முயன்ற வேதங்கள் அது இப்படித்தான் உள்ளதென கூறமுடியாது, இதுவல்ல, இதுவல்ல, (நேதி நேதி) என்று இதரவஸ்துக்களுக்கு விலக்கானதாக அதனை வர்ணிப்பதுடன் நின்றுவிட்டன. எனவே மனம், வாக்கு இரண்டிற்கும் அடங்காத அந்த நிர்க்குண நிஷ்களரூபரஹிதமான பிரம்மத்தை நாம்மனதில் அனுசந்தானம் பண்ணமுயலும்போது நமக்கு நல்ல பழக்கமானதும் நாம் விசேடமாகக் கருதுவதுமான மனிதரூபம் போன்ற ஒரு வடிவத்தைத்தான் கற்பனை செய்து தியானிக்க முடியும். இதையே, சகுணவழிபாடு என்கிறோம். ஆணுமில்லாத பெண்ணுமில்லாத, அப்பரம் பொருளுக்கு நாம் கொடுக்கும் உருவம் நம்முடைய இச்சைக்கும், மனப்பக்குவத்திற்கும் பூர்வஜென்ம வாசனைகட்கும் பொருந்தவே அமைவதுமாகும்.

பிரம்மத்தைச் சக்தி ரூபமாக உபாசிப்பது அனாதிகாலந் தொட்ட வழக்கமாகும். கடவுளைத் தாயாக தியானிப்பதில் நமது மனத்திற்கு சாந்தி உண்டென்பதை எவரும் மறுக்கமுடியாது. குழந்தை குற்றஞ் செய்தால், தண்டித்து திருத்துபவன் தந்தை என்பதும் அதனை மன்னித்து ஆறுதல் தருபவள் தாய் என்பதும், சாதாரண உலக வாழ்வில் யாமெல்லோரும் அனுபவத்தில் அறிந்த உண்மையன்றோ? மனிதப் பிறவியெடுத்து, சதாதவறுதல் புரிந்துவரும் நமது தாபங்களையும், பாபங்களையும் நமக்கு உடலளித்த தாய்மார்களால் போக்கமுடி

யாது. சகல சீவராசிகளின் தாயாகிய பராசக்திக் குத்தான் அது முடியும். ஆதலால் தான், அம்பாளை ஸ்ரீமாதா என்று விசேஷமான பெயர் கொண்டு வழி படுகிறோம்.

சைவம், வைஷ்ணவம், காணுபத்யம், கௌமாரம், வேதாந்தம், சித்தாந்தம், அத்துவிதம், துவிதம் முதலாய பல கிளைகளையுடைய இந்துமதமென்னும் கற்பக தருவின் மூலவேர்போல் அமைந்துள்ளது இந்தச் சக்தி வழிபாடு. அது புறக்கணிக்கப்பட்ட காலத்திலோ அல்லது இழுக்குற்ற போதிலோ தான் இந்துமதம் தனது சீருஞ் சிறப்புங்குன்றி சுதந்திர மிழந்துவிட்ட உண்மையை சரித்திர ஆராய்ச்சியினுல் அறியலாம். சிவமும், சக்தியும் அபேதமாயிருப்பது போலவே சக்தியும், விஷ்ணுவும் அபேதமானவை. பரமசிவனுக்குரிய கோரம் அகோரமென்ற இருமுகங்களில் அகோரமான தக்ஷிணமுகமே அம்பாளுடைய தென்றும் அதுவே, விஷ்ணுவென்றும் சாஸ்த்திரங்கள் கூறுகின்றன. அத்துவித நெறிவிளக்கவும், சக்தி உபாசனையை மறுபடியும் புனிதமாக்கவும், அவதரித்த ஆதிசங்கரர் அருளிய அரிய தோத்திர நூல்களைப் படிப்போர்க்கு இந்த உண்மை தெற்றென விளங்கும். அதனை அறியாதவர்களே சிவம் உயர்ந்தது சக்தி தாழ்ந்தது சைவம் வேறு வைஷ்ணவம் வேறு என்ற வீணவாதங்களால் வேற்றுமையை விளைவிப்பவர்கள்.

பலவகைப்பட்டஅம்பாள்உபாசனைகளில்தக்ஷிண மார்க்கம், வாமமார்க்கம் என்ற இரண்டுமே முக்கியமானவை; அவை முறையே சமயமார்க்கம் கௌலமார்க்கம் எனவும் அழைக்கப்படும், தேவி வழிபாடு மானசீகமாக நடைபெற வேண்டுமென்பதே சமயமார்க்கத்தின் சித்தாந்தம்; அதாவது அம்பாளை யோக சாதனையால் சகஸ்ரதள கமலத்திற்கு

அழைத்துச்சென்று அந்த இடத்தில் அவளைப்பூஜிக்க வேண்டுமென்கிறது. அம்பாளின் இருப்பிடம் தமது சூக்ஷ்ம சரீரத்திலுள்ள சஹஸ்ரதள கமலமென உணரும் அந்தர்முக உபாசகர்கட்கு அந்தக் கமலமே ஸ்ரீ சக்கரம் ஆகின்றது. அவர்களுட் சிலர் இருதய கமலமே ஸ்ரீ சக்கரம் என்பார்கள், வேறு சிலர் தேகமே ஸ்ரீ சக்கரம், உலகமே ஸ்ரீ சக்கரம் என்பர். இந்த வேற்றுமைகளெல்லாம் சாதகர்களின் உள்வாழ்வின் பண்பாட்டிற்கும் அத்யாத்ம நோக்கின் ஆழத்திற்கும், விரிவிற்கும் பொருந்தத் தோன்றுபவைகளாகும். தேவியின் மகிமையுள்ள பெயர்களுள் ஒன்றாகிய திரிபுரசுந்தரி என்னும் திருநாமம், மந்திரம், யந்திரம், ரூபம் என்ற மூன்றினையும், சத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்றையும், அன்னம், பிராணன், மனம் என்ற மூன்றையும் முறையே முப்புரங்களாக அடக்கியிருப்பதையும் இங்கே உற்று நோக்குக.

மேலே விபரிக்கப்பட்ட மானசீக வழிபாட்டிற்கு மனேதிட மற்றவர்கள் தேவியைப் பகிர் முகமாகப் பூஜிக்கவேண்டுமென்பதே சாஸ்திரவிதி, இதுபாஹ்ய பூஜை என அழைக்கப்படும், இதனை அனுஷ்டிப்போர் கௌலமார்க்கிகள். பொதுவாகவே அம்பாளுடைய உபாசனை சபல சித்தமுடையோர்க்குச் சாத்தியமானதல்ல. கௌல மார்க்கத்திற் செல்வோரோ கத்தி முனையில் நடப்பவர்கட்குச் சமானமாவர். முன்னரேயே இதர மார்க்கங்களில் உபாஸித்து பரிபக்குவம் அடைந்தவர்க்கே அது உரியது. ஒழுக்கமற்றவர்கள் அதை அனுஷ்டித்தால்அனர்த்தமாகமுடியுமென்று சிலநூல்கள் வற்புறுத்தியுள்ளன. இந்த எச்சரிக்கைக்கு காரணம் இடைக்காலத்தில் வாமசார வழக்கத்தில் தோன்றிய அநாசாரங்களும் ஆபாசங்களுமாக இருக்கவேண்டும். ஏனெனில் பழைய சிகரங்கள் சௌமார்க்க 'தத்பரஸேவிதா' என்பது ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமத்திலடங்கிய

பெயருமாகும். அதற்குப் பாஷ்யம் எழுதிய பாஸ்கர ராயரின் வாழ்க்கையும், வாக்கும் பின்னுளில்கௌல மார்க்கத்திற்குப் பெருமையையே கொடுத்துள்ளன.

ஸ்ரீ வித்யை என்னும் பதம் அம்பாளைப் பிரதி பாதிக்கும் சாஸ்த்திரத்தைக் குறிப்பதுடன் அவளுடைய மந்திரத்தின் பெயருமாகும். புருஷரூபமாய் தெய்வத்தையுடையதற்கு மந்திரமென்றும் ஸ்திரீரூபமான தேவதையை உடையதற்கு வித்யையென்றும் பெயர். எனினும் சிவ சக்தி ஐக்கியரூபமானபரப்பிரம்மமானது அம்பிகா ரூபிணியாகஇந்த வித்யையின் மூலமாக உபாசிக்கப்படுங் காரணத்தால் ஸ்ரீ வித்தையை மந்திரமென்றும் சகல மந்திரங்களுள்ளும் அதுவே மிகவும் விசேஷித்ததென்றும் பல சாஸ்த்திரங்கள் வற்புறுத்துகின்றன. மோக்ஷத்திற்கு வழிகாட்டும் ஸ்ரீ வித்யையை அறிந்தவனே உண்மையில் வித்துவான் எனும் பட்டத்திற்குரியவனென ஸ்ரீ லலிதா திரிசதீ என்னும் நூல் கூறியிருக்கின்றது. இன்றைய வெறும் பட்டதாரிகள் இந்த உண்மையை கவனிப்பார்களாக!

சமயமார்க்கத்தின்படி ஒன்பது தாதுக்களாலான நமது உடம்பாகிய ஸ்ரீ சக்கரத்தின் பிந்துஸ்தானமாகிய இருதய கமலத்திலுள்ள இடைவெளியில் அம்பாளைத் தியானிப்பதால் சகலசி த்திகளையும் பெறமுடியும். கௌல மார்க்கத்தின் பாஹ்யபூஜைக்காக தங்கத்திலோ வெள்ளியிலோ பஞ்ச லோகத்திலோ செய்யப்பட்ட ஸ்ரீ சக்கரத்தில் மேலே கூறப்பட்ட ஒன்பது தாதுக்களே ஒன்பது திரிகோணங்களாய் அமைகின்றன. இவை ஒன்பது யோனிகளென்றும் அழைக்கப்படும். ஸ்ரீ சக்கரப் படத்தைக் கவனித்தால் கீழ் நோக்கிய ஐந்து திரிகோணங்களையும் மேலே நோக்கிய நான்கு திரிகோணங்களையும் காணலாம். இந்த ஒன்பது கோ

ணங்களின் மத்தியிலுள்ள மிகச்சிறிய கோணம் பத்தாவது யோனியென்ற பிந்துவாகும். ஸ்ரீ சக்கரத்திற்கு நாயகியான தேவியின் இருப்பிடம் இதுவே, அவளைப் பூஜிக்கவேண்டிய இடமும் இதுவே. தோல், இரத்தம், தசை, எலும்பு, இரசம் ஆகிய ஐந்து தாதுக்களும் கீழ்நோக்கிய சக்தி கோணங்களாகவும் மூளை, சுக்கிலம், பிராணன், சீவன் ஆகிய நான்கு தாதுக்களும் மேல் நோக்கிய சிவ கோணங்களாகவும் ஸ்ரீ சக்கரத்தில் அமைந்துள்ளன. இவ்விரு வித திரிகோணங்களின் தொடர்பில் அமைந்த கோணங்கள் நாற்பத்து நான்காகும். இவற்றிற்கு மேல் எட்டுத் தளபத்மமும் அதனைச் சுற்றி பதினறு தளபத்மமும் உள்ளன. பிந்தியதை வட்டமாகச் சுற்றியுள்ள மூன்று ரேகைகளும் பிராகார வலயமென அழைக்கப்படும். பிந்துவை அடக்கியுள்ள திரிகோணத்திலும் அதைச் சுற்றிய அருகிலுள்ள எட்டுக் கோணங்களிலும் அம்பாளின் பூஜாவிதானப்படி ஏற்பட்டுள்ள ஒன்பது ஆவரண தேவதைகளும் அடங்கி இருக்கிறார்கள். அவளின் பரிபூரணச் சொரூபம் அதில் நித்திய சாந் நித்தியத்தை அடைந்திருப்பதினல், பூஜைசெய்யவேண்டிய இடம் பிந்துதான் என்பதை மறுபடியும் வற்புறுத்த விரும்புகின்றேம். ஸ்ரீ சக்கரத்தின் நாலு பக்கங்களிலுமுள்ள துவாரங்களானவை பரமேச்வரியின் ராஜதானியாகிய ஸ்ரீபுர நகரத்தின் கோட்டை வாசல்களாக அமைந்துள்ளன. அங்கே, கந்தாகர்ஷிணீ, ரஸாகர்ஷிணீ, ரூபாகர்ஷிணீ, ஸ்பர்ஸாகர்ஷிணீ என்ற நான்கு சக்திகள் துவார தேவதைகளாக அமர்ந்துள்ளனரெனப் பாவித்து, அவர்களையும் கூடச் சேர்த்தே பர தேவதையைப் பூஜிக்கவேண்டும். தங்கம் முதலாய லோகங்களில் ஸ்ரீ சக்கரம் கிடைக்காவிடில் பூர்ஜ விருட்சத்தின் பட்டையில் அல்லது மேன்மையான தூய வஸ்

திரத்தில் எழுதப்பட்ட ஸ்ரீசக்கரத்தில் பூஜிக்கலாம். அவை தானும் இல்லாவிடத்து சந்தனத்தில் எழுதியும் பூஜிக்கலாம். அம்பிகையானவள் கருணைரூபிணியாயும், ஜகன்மாதாவாகவும் இருக்கிறபடியால், அவளுடைய குழந்தைகளாகிய நாம் உள்ளன்போடும் பக்தியோடும் எப்படி உபாசித்தாலும் அதனை ஏற்று அருள்புரிய அவள் எப்போதும் ஆயத்தமாயிருக்கிறாள். அவள் நம்மிடம் கிரியா கிரமத்தையோ அதனைப்பற்றிய முழு ஞானத்தையோ எதிர்பார்க்கவில்லை. அந்தர்முக, பகிர்முக வழிபாடு இரண்டையும் மிக அழகாக விளக்கி அருளிய ஆதிசங்கரரே ஸ்ரீ சக்கர பூஜைக்கு விசேட உரிமையுள்ளவர்கள் கிருகலஷ்மிகளென்று (ஸுவாஜினி) ஸௌந்தர்யலஹரி 28ம் 29ம் சுலோகங்களில் கூறியுள்ளார். பத்தாவின் ஆயுளுக்காகவும் குடும்பத்தில் சகல மங்களத்திற்காகவும் பத்தினி செய்யும் பூஜையில் பராசக்தி அதிக திருப்தியடைகின்றாளென்பது தாத்பரியம். அமிர்தத்தை உண்டு சாகாவரம் பெற்ற தேவர்களெல்லாம் பிரளய காலத்தில் மறைந்து போக நஞ்சை உண்டு கண்டங் கறுத்த பரமசிவன் மாத்திரம் அழியாமலிருப்பதற்குக் காரணம் பராசக்தி தோடாக அணிந்துள்ள ஸ்ரீ சக்கரத்தின் மகிமையென அவரே பாடியுள்ளார் பிறிதோரிடத்தில். நமது பாட்டிமார் அணிந்த பொன் தோடுகள் வட்டமாகச் சக்கரம்போலிருந்தது அதே காரணம் பற்றிப் போலும்! இந்தியாவில் சில பாகங்களில் இன்றும் இவ்வித தாடகங்களைக் காணலாம்.

நாடு செழிக்கவும் சைவம் தழைக்கவும் நாடோறும் இல்லங்களில் தமிழ் வேதம் ஓதுமாறும் மாதத்தில் ஒரு தினமாவது வேள்வி செய்யுமாறும் முன்னரேயே வாசகர்களைக் கேட்டுள்ளோம். மனையறம் சகல மங்களங்களுடன் சிறப்புற்றோங்குமாறு தேவி

பூஜையை வாரத்தில் ஒருமுறையாவது (வெள்ளிக் கிழமைகளில்) கந்தம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்தியமாகிய ஐந்து உபசாரங்களுடன் அவரவர் இல்லங்களிலேயே பக்தி சிரத்தையுடன் செய்யும்படி இந்துமத சகோதரிகளைக் கேட்டுக் கொள்கிறோம். நவராத்திரி தொடர்பில் தேவி படத்தையும் ஸ்ரீ சக்கரத்தையும் ஒருங்கே வெளியிட்டிருப்பதும் இந்த விண்ணப்பத்தை வாசகருள்ளத்திற் பதியச் செய்யும் நோக்குடனேயாம்.

(ஆத்மஜோதியிலிருந்து எடுக்கப்பட்டது)

# முருகன் வழிபாடு
— அதின் —
# பழமையும் புதுமையும்

காந்தியடிகளின் ஒரு தனிச் சீடராய் அந்தப் பெரியார் போதித்த அஹிம்ஸா தர்மத்தை விளக்கிய வண்ணம் அன்புப்பணி செய்துவரும் ஆசாரி விநோபா அவர்கள் சில வாரங்கட்குமுன் சர்வோதய சம்மேளனத்தின் சார்பில் பல பிரசங்கங்கள் செய்துள்ளார். அவைகளெல்லாம் கருத்துக் களஞ்சியங்களாகவும் ஆராய்ச்சிப் பொக்கிஷங்களாகவும் மிளிர்கின்றன.

நமக்கு நேரிடையாகத் தெரிந்துள்ளது மானிட சமூகத்தின் ஐந்து அல்லது பத்தாயிர வருஷ சரித்திரமே. ஆயினும் இந்த மண்ணுலகில் மனித வாழ்க்கை ஆரம்பமாகி பத்து லக்ஷம் வருடத்திற்கு மேலாகிவிட்டது. ஆகவே இந்த நீண்ட காலத்தில் மனித வாழ்க்கை மென்மேலும் வளர்ந்து, மலர்ந்து கொண்டே வந்திருக்கிறது. மனிதன் ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு குணமாக வளர்ந்து கொண்டே வந்திருக்கிறான் என்றார் விநோபாஜி ஓர் இடத்தில். நவீன வானூல் வல்லுனரும் ஞானநூல் விற்பன்னரும் இதே கருத்தையே வற்புறுத்துகின்றனர். பல்லாயிரக்கணக்கான வருஷங்களாக அழற்பிழம்பாய்க்கிடந்த உலகம் படிப்படியாகச் சூடு தணியத் தொடங்கி அனலின் அலைகளின் வன்மைக்கும் மென்மைக்கும் பொருந்த வெப்பமும் தண்மையும் அமைந்து, உயிர்வாழ்வு ஆரம்பித்ததென்பது அவர்களின் ஆராய்ச்சி முடிபு. அவ்விதம் அனலாவியைக் கக்கிக்கொண்டிருந்த உலகில் முதல் முதலாக வெப்பம்

தணிந்த இடம் இன்றைய தமிழ் நாடுதான் என்பது ஆராய்ச்சி மூலம் வெளிவந்துள்ள உண்மையாகும்.

மண்ணுக்கு முன் தோன்றியது கல். தனது குலப் பழமையையும் வீரக் குணத்தையும் நாடக பாத்திரம்போல் எடுத்துக் கூறவந்த மறவர் தலைவன்,

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்த குடி'

எனப் புறப்பொருள் வெண்பா மாலையில் விளக்கியிருப்பது காண்க. குறித்த கல் பெரியமலை யாகவே இருந்தது. பயிர்களும் உயிர்களும் வாழக்கூடிய தன்மை பெற்ற முதல் மலையில் தோன்றிய ஆதி மனிதன், அதற்கு வடக்கே இன்னும் அனலாவியைக் கக்கி ஒளி வீசிக்கொண்டிருந்த பிறிதோர் மலையைக் கண்டு அஞ்சி அந்த அனற் பிழம்பை வழிபட்டதில் வியப்பொன்றுமில்லை. இந்த முறையில் ஜோதி வணக்கமாக ஆரம்பித்த இறைவழிபாடு நெடுங்காலம் சூரிய நமஸ்காரமாகவும் அக்கினி வழிபாடாகவும் இருந்து, இயற்கையில் பசுமையும், மணமும், அழகும் செழிக்கத் தொடங்கிய பின்னர், இயற்கை வழிபாடாகமாறி, மக்கள் வாழ்வில் காதலும், வீரமும், கலையும் மிளிரவே முருகன் வழிபாடாக உலகெங்கும் பரவியதெனலாம். இந்த உண்மைகளை யாம் உணரும் போதுதான் நிலப்பரப்பை ஐந்து வகையாகப் பிரித்த பழம் தமிழனின் கூர்ந்த மதிநுட்பம் நமக்கு விளங்கும். மலையையும் மலையைச் சார்ந்த இடத்தையும் முதல் திணையான குறிஞ்சியாக வைத்ததற்கு முதல் காரணம் காலப் பழமையாகும்! அதே காரணம் குறிஞ்சி நிலத் தெய்வமான முருகனுக்குண்டு. இந்த உண்மை கால வெள்ளத்தில்

கரைந்து போகக் கூடாதெனக் கருதிய நமது மூதாதையர்கள் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க் கணக்கென மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ள கடைச்சங்க காலத்து முப்பத்தாறு நூல்களில், முருகாற்றுப் படையை முதலில் வைத்தனர். தமிழர் குலம் முருகன்மேல் வைத்த பேரன்பைப் புலப்படுத்த இது ஒன்றே போதிய சான்ருகும். அவர்களின் பிற்சந்ததியரான சைவர்கள் முருகாற்றுப் படையை தோத்திர வகையில் பதினேராந்திரு முறையாகச் சேர்த்து 'திருமுருகாற்றுப்படை' ஆக்கிவிட்டனர். 'அரும் பெறல் மரபிற் பெரும் பெயர் முருக' என நக்கீரர் முருகன் என்ற பெயருக்கு அளித்துள்ள சிறப்பானது தமிழ்மொழி உள்ளளவும் இம் மண்ணுலகில் நிலவவே செய்யும்.

இனி, பழந்தமிழ் நாட்டையும் தமிழ் மொழியிலுள்ள வரலாறுகளையும் விடுத்து, சிறிது வடக்கே சென்று வடமொழி நூல்கள் முருகனைப்பற்றி என்ன கூறுகின்றன என்பதை ஆராய்வோம். கீதை பத்தாம் அத்தியாயத்தில் கிருஷ்ண பரமாத்மா தம்மை வீரர்களுள் இராமனுகவும் சேனுதிபதிகளுள் கந்தனுகவும் விளக்கியுள்ளார். இதிலிருந்து இவ்விருவர் புகழ் கிருஷ்ணவதாரத்திற்கு முன்னரேயே பரவியிருந்ததென்பது வெளிப்படை. இராமபிரானுக்கு ஞானேபதேசம் செய்த வசிஷ்ட முனிவரிடமிருந்தே முசுகுந்தச் சக்கரவர்த்தி சுப்பிரமணியக் கடவுளுக்குரியகந்தசஷ்டி, கார்த்திகைமுதலியவிரதங்களின் மகிமையை அறிந்து, அவற்றை அனுஷ்டித்து இகபர சித்திகளை அடைந்ததாகப் படிக்கின்ருேம். மகாவிஷ்ணுவின் கட்டளைப்படி இந்தச் சக்கரவர்த்தியே இப் பூமண்டலத்தில் சோமாஸ்கந்த மூர்த்தி வழிபாட்டை ஆரம்பித்தார் என்பது இங்கு குறிப்பிட வேண்டியதாகும். எனவே இராம அவதாரத்திற்குப் பல நூற்ருண்டுகளுக்கு முன்னரேயே முருகன்

உபாசனை இருந்துள்ளதென்பது அறியக்கிடக்கின்றது. புராணங்களும் இதிகாசங்களும் பெரிதும் கற்பனையின் பாற்பட்டன வெனினும், அவற்றுள் சாதாரண மக்கள் எளிதில் அறிந்துகொள்ளும் முறையில் சமய தத்துவங்கள் விளக்கப்பட்டிருப்பதோடு, சரித்திரக் குறிப்புகளும் அடங்கியிருப்பதை எவரும் மறுக்க முடியாது.

திருச்செந்தூரிற் கோயில் கொண்டெழுந்தருளிய பெருமான்மீது சங்கராச்சாரியர் வடமொழியில் 'சுப்ரமண்ய புஜங்கம்' என்னும் அரிய தோத்திர நூல் பாடியுள்ளார். சொற்சுவை, பொருட்சுவை, பக்திரசம் இவற்றுடன் திகழும் இந்நூல் வேதாந்த சித்தாந்த நுட்பங்களை அடக்கியிருப்பதுடன் முருகனின் பெருமையை மிகவும் அழகாக வர்ணிக்கின்றது. பிள்ளையார் காப்புக்கடுத்த செய்யுளில் ஆச்சாரியார் தமது விநயபாவத்தை எடுத்துக்காட்டும் முறையில் தமது உள்ளத்தில் ஓர் ஒளியானது அறுமுகங்களுடன் சதா பிரகாசித்துக் கொண்டிருக்கிறதென்பதைக் கூறிவிட்டு, அடுத்தபடியாக,

''மயூராதி ரூடம் மஹா வாக்யகூடம்
மனோஹாரி தேஹம் மகச்சித்த கேஹம்
மஹீதேவ தேவம் மஹாவேத பாவம்
மஹாதேவ பாலம் பஜே லோகபாலம்''

எனத் துதிக்கிறார். இந்தச் சுலோகத்தின் முதல் ஒரு வரியிலேயே முருகனின் ஒப்பற்ற தன்மையை அவர் விளக்கியிருக்கும் விதத்தை நோக்குங்கள்! சகல வேதங்களும் பெருமானின் சொரூபத்தைப் போதிக்கும் சக்தியின்மையால் ஒன்றாகச் சேர்ந்து அவரைத் தாங்கும் வாகனமாகி நின்றன என ஸ்கந்தோபநிஷத் விளக்கியுள்ள அருங்கருத்தும், வேதங்களின் மஹா வாக்கியங்களான (1) பிரக்ஞானம் பிரம்மம் (2) அயமாத்மா பிரம்மம் (3) தத்வ

மஸி (4) அஹம் பிரம்மாஸ்மி எனும் நான்கில் ரக சியமாகப் பிரகாசிக்கும் பரம்பொருளே முருகன் என்ற பேருண்மையும் இதில் அமைந்துள்ளன. சங் கரரின் அவதாரமாகப் புகழப்படும் பகவத் பாத பரமாசாரியரே உண்மைத் தெய்வமான முருகனைச் சதா நினைவின் கண் வைத்தேன் எனப்பாடி இருக் கும்போது அப்பெருமானுரின் அளப்பரும் மகிமை யை அறிய வேறெவரிடமும் யாம் போகவேண்டிய தில்லை.

தமிழ் மக்களுக்குச் சிறப்பாகவும் ஏனைய சாதி யினர் சகலருக்கும் பொதுவாகவும் விளங்கும் முரு கன் தன்னிகரில்லாப் பரம்பொருளாவன். என்றும் இளையோனுன அப்பெருமானை வழிபடும் மார்க்க மும் தொன்மையோடு புதுமையும் உடைத்தாகும். மக்களிடத்தில், அழகுணர்ச்சி, இளமை விருப்பு, காதல், வீரம் முதலாய பண்புக் குணங்கள் இருக் கும் வரையில் முருகன் வழிபாடும் உலகில் நிலவவே செய்யும் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற தமிழனின் லட்சியத்திற்குப் பொருந்திய தெய்வமும் அவனேயாம். அவன் கருணைகூர் முகங் களாறும், கரங்கள் பன்னிரண்டுங்கொண்டு, உல குய்யத் திருமேனி பூண்டவிதத்தில் விஞ்ஞானம் மிளிர்கின்றது. அவனது உருவ அமைப்பிலும் அற் புத திருவிளையாடல்களிலும் ஞானதத்துவங்களும் சமய சாஸ்திர நுட்பங்களும் மலிந்துள்ளன. ஆறு முகம் ஓங்காரத்துடன் கூடிய பஞ்சாட்சரமென்றும் சிவத்தின் ஐந்து முகத்தோடு சக்தியின் ஒரு முகமும் சேர்ந்த தோற்றமென்றும் விளங்குவர் அனுபூதிச் செல்வர். இவ்விரு கருத்துக்களை விடப்பிறவும் உள. தத்துவ ஞானிகள் அதில் ஆறுசமயங்களையும் ஆறுகுணங்களையும் காண்பர். பக்தர்கள் ஆறு செயல்களின் காட்சி பெறுவர். யோகிகள் ஆறு ஆதார கமலங்களாகப் பாவிப்பர். திருக்கரத்தி

லுள்ள வேல் உயிர்களின் அஞ்ஞானத்தைப் போக்கும் ஞானத்தையும், இருமருங்கிலுமுள்ள தேவிமார் கிரியா, இச்சா சக்திகளேயும் குறித்து நிற்கும். அதுமாத்திரமன்றி, தெய்வயானே வைதீக கர்மானுஷ்டானங்களேப் பேணும் அடியார்களின் பிரதிநிதியாகவும், வள்ளியம்மை சடங்குகளற்ற சுத்த சமரஸ பக்திமார்க்கத்தினரின் பிரதிநிதியாகவும் விளங்குகிருர்களெனவும் கருதலாம். கந்தபுராணத்தில் வள்ளியம்மை திருமணத்தை விளக்கும் பாகம் சிவஞானபோதம் எட்டாஞ் சூத்திரத்தின் விரிவுரை போல அமைந்துள்ளது. தேவியாரின் விண்ணப்பத்திற்கிரங்கிய முருகனருளால் திரும்பவும் உயிர்பெற்றெழுந்த வேடுவர்கள் கரணங்களும் இந்திரியங்களுமாவர். நமது ஆன்ருேர்கள் ''மாறிப் பிறத்தல்'' என உரைத்ததும் இந்த உண்மையையே. இதன் பூரண விளக்கத்தை உலகுக்களித்த பெருமை பகவான் அரவிந்தரைச் சார்ந்ததாகும். அவர் இயற்றிய 'திவ்யஜீவனம்' என்ற அரிய நூலில், யோக சாதனேயால் எழுந்த தெய்வசைதன்யம் உடல், உயிர், மனம் ஆகிய கீழ்க் கோசங்களேயும் தெய்வமயமாக்குவதை ரூபாந்திரமென விளக்கியுள்ளார். முருகனேப் பற்றிய தத்துவ விளக்கத்தை விரிவஞ்சி இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேம்.

ஆறுமுகனின் பாதமே தஞ்சமென்று அடைந்தோர் நெஞ்சத்தில் அஞ்சாமை குடிகொள்ளும். இந்த நிலேயை அருணகிரிநாதர் 'சலங்காணும் வேந்தர் தமக்கும் அஞ்சார், யமன் சண்டைக்கஞ்சார்' என்ற அலங்காரப் பாட்டில் விபரித்துள்ளார். ஆனல், இங்கு ஓர் அபாய முண்டாதலால், ஆத்மீக சாதனே புரிவோரும் சமயத் தொண்டில் ஈடுபடுவோரும் மிகவும் சாக்கிரதையாக இருக்கவேண்டும். நமது மனம் பொல்லாதது. அஞ்சாமைக்கும் ஆணவத்திற்கும் வித்தியாசமில்லாதது போல் மயக்கந்தர

வல்லது. எத்தனையோ முருகன் உபாசகர்கள் இந்த மயக்கத்திற் கிரையாகி வீழ்ச்சியடைந்ததைக் கண்டுள்ளோம். அஞ்சாமையை உயர்த்திக்கூறிய அருணகிரி நாதரே, தாம் முருகனிடம் பெற்ற எல்லா நன்மைகட்கும் நன்றிகூறும் முறையிலும், பெருமானின் அருளின் திறத்தை சகல உலகமும் உணரச் செய்யும் விதத்திலும், பாடிய 'ஆனுதஞான புத்தியைக் கொடுத்ததும்' என ஆரம்பிக்கும் திருப்புகழில், 'எனக்கனுக்கிரகித்ததும் மறவேனே' எனக்கூறிநல்ல எச்சரிக்கை தந்துள்ளார். நாம் சதா நம்மை ஆண்டவனின் கருவியாகப் பாவித்துக் கொள்வதே அவனது அருளை மறவாதிருப்பதற்கு அறிகுறியாகும். அப்படியில்லாமல், உலகைத் திருத்தவோ, பிறரை உய்விக்கவோ நாம் ஏதோ பணிப்படைக்கிறோமென்ற அபிமானங்கொள்வோமாகில், முருகன் நமக்குக் கட்டாயம் ஓர் குட்டுத்தந்து திருத்தவே செய்வன். பிரமாவைக் குட்டிச் சிறைவைத்த அவனின் திருவிளையாடல் நமக்கு இந்தப் படிப்பினையையே கற்பிக்கின்றது. என் கோழி கூவித்தான் பொழுது விடிகின்றதென்ற கிழவியின் மனப்பான்மைக்கு ஆத்மீக வாழ்வில் இடமேயில்லை. அரசியல், சமுதாயம், வியாபாரம் முதலாய துறைகளில் கையாளப்படும் ஆடம்பரம் பிரசாரம், தற்புகழ்ச்சி விளம்பரம், தம்பட்ட அடிப்பு ஆகியவை பாரமார்த்திகப் பணியில் முற்றும் விலக்கப்பட்டனவாகும். முருகன் குகனுமாவன்—அதாவது இருதய குகையில் வாழ்பவன், அந்தர்யாமி. அவன் நமது உள்ளத்திலுள்ள உணர்ச்சியையும் நோக்கத்தையும் கவனிப்பவன். சிற்றறிவும் சிறு தொழிலுமுள்ள மக்கள் போல் வெளித் தோற்றத்தைக் கண்டு மயங்குபவனல்ல.

**“வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்த பிறப்பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே’**

என மணிவாசகர் காட்டியுள்ள லட்சியத்தைப் பேணி ஆத்ம நெறியிற் செல்வோர்க்கு மேலே குறிப்பிட்ட ஆபத்து ஒருக லும் நேரவேமாட்டாது.

முருகன் வழிபாடும், விரதங்களும், விழாக்களும் தோன்றிய தமிழ் நாட்டில் இன்று அவை பெரிதும் அருகி வருகின்றன. அங்கே எங்கு பார்த்தாலும் தெய்வதூஷணையே பரவியுள்ளது. அப்பெருமானின், படைவீடுகள் மீதும் ஏனைய ஆலய எல்லைகளிலும் நாஸ்திகப் படையெடுப்பு மும்முரமாய் நடக்கிறது. இந்தக் கொடுமையைத் தவிர்க்கப் போதிய ஆத்மீக எதிர்ப்பு இருப்பதாகவுந் தெரிய வில்லை. இலங்கையைப் பொறுத்தமட்டில், நிலைபரம் முழுதும் வித்தியாசமாக உள்ளதெனக் கூறுதல் புகழ்ச்சியுரையாகாது. இங்குள்ள பல ஆலயங்களில் முருகன் வழிபாடு புதுமைப் போர்வையுடன் நடைபெறுகின்றது. ஆலயத்திற்குப்போக முடியாதவர்களும் வீட்டிலிருந்து கொண்டே வானொலிமூலம் முருகன் நாமசங்கீர்த்தனத்தைக் கேட்டின்புறுகின்றனர். சென்ற மாதம் நடந்த கதிர்காமத்தீர்த்த விழாவில் லட்சக்கணக்கான மக்கள் வெகு தூரங்களிலிருந்தே இந்த அனுபவம் பெற்றனர். நாட்டின் நாலாபக்கங்களிலுள்ள கிராமச் சிறு கோவில்களிலும், மடங்களிலும், இல்லங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் ஒழுங்காக வாரந்தோறும் கூட்டு வழிபாடுகள் நடைபெறுகின்றன. அம்மட்டோ! சிறைச்சாலைகளிலும் அப்பெருமான் திருப்புகழ் முழங்குகின்றது. அவன் திருநாம சங்கீர்த்தனம் ஒலிக்கின்றது. இத்துறையில் அன்பர்கள் திரு

விளங்கம், சுந்தரம் முதலியோர் செய்துவரும் அருஞ் சேவை பெரிதும் பாராட்டத்தக்கது. அது தமிழ் நாட்டினர்க்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இம்முறை, கதிர்காமத்தில் நடந்த அற்புத நிகழ்ச்சிகளைப்பற்றிய விபரங்களை பலர் பத்திரிகைகள் மூலம் நன்கறிவர். இருபது நூற்றுண்டுக்கு முன் நக்கீரர் பழமுதிர் சோலையில் பார்த்து இன்புற்ற முருகன் வழிபாட்டுச் சிறப்பை இருபதாம் நூற்றுண்டில் பழமையும் புதுமையும் கலந்த முறையில் கண்டின்புறக்கூடிய ஸ்தலம் கதிர்காமம் ஒன்றே. நாஸ்திகம் பேசி நாத்தழும் பேறிஞேரும் வேடிக்கை விளையாட்டிற்காக மோட்டார் ரதத்தில் உல்லாசமாக வருபவர்தாமும் மாணிக்க கங்கையில் கால்முகங் கழுவி கதிர்காமத்தின் காற்றைச் சுவாசித்தும் ஆஸ்திகராய் மாறும் அற்புதம் வருஷாவருஷம் நிகழ்கிறது. 'முரணினர் உட்க முருகாற்றுப் படுத்த உருவெழுவியன் நகர்' என நக்கீரர் விபரித்த பழமுதிர் சோலை கடைசிப்படை வீடான கதிர்காமமே என்பதில் ஐயமில்லை. முரணினர் என்பதற்கு நச்சிஞர்க்கினியர் 'தெய்வம் இல்லை யென்று சொல்லும் மாறுபாட்டை உடையவர், எனக் கருத்துத் தந்துள்ளார். சமத்துவம், பொதுமை என்பவை, மந்திரம் போல் உருச்செய்யப்படும் இந்நாளில் சாதிமத நிறபேதமின்றி, சாஸ்திர, கோத்திர உபத்திரவம் எதுவுமற்ற முறையில் கதிர்காமத்தில் நடைபெறும் வழிபாடு முருக வழிபாட்டின் பழமை எவ்வளவு புதுமையான தென்பதை நினைவூட்டுகின்றது. இக்காரணம் பற்றியே 'ஆத்மஜோதி' இம்

மாசம் (கரஹூ ஆவணிமீ) முருகன் மலராக மணம் வீசுகின்றது. தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்து பொன்னுடனும் புகழுடனும் திரும்பும் பாடகர்களும் பிரசங்கிமாரும் யாம் இக் கட்டுரையின் இறுதியில்குறிப்பிட்ட உண்மைகளுள் சிலவற்றையும் தம்முடன் தாய் நாட்டுக்கு எடுத்துச்சென்று அங்கும் இங்கே நடக்கும் முறையில் முருகன் பணியில் ஈடுபடுவார்களானல் நாடு நற்பயனடையும். அவர்களது ஆத்மீக வாழ்வும் சிறப்புறும்.

(ஆத்மஜோதியிலிருந்து எடுக்கப்பட்டது)

# "எங்குந் தனது உருவாகி இருக்கின்ற சொரூபம்"

"வாரி வீழ்தரும் புன்னுனித் துள்ளிகண் மான
நேரி லாதமர் குமரவேள் நெடியபே ருருவின்
ஒரு ரோமத்தின் உலப்பிலா வண்டங்கள் உதிக்கும்
ஆர வன்றிரு மேனியின் பெருமையை யறிவார்"

— கந்தபுராணம், அவைபுகு படலம். வீரவாகுதேவர் வாக்கு.

மேலே தரப்பட்டுள்ள தலையங்கம் ஸ்ரீ சம்பந்த சரணலய சுவாமிகளின் அருள்வாக்கு. கந்த புராணம் சூரபன்மன் வதைப் படலத்தில், அந்த அசுரனின் மயக்கறுத்து ஞானோபதேசஞ் செய்யக் கருணை கொண்ட சுப்பிரமணியப் பெருமான், அவன் காணும் வண்ணம் எடுத்துக் கொண்ட விசுவரூபத்தை விளக்குவது இந்த வசனம். அதற்கு முன்னுரையாக அமைந்திருப்பது,

"மெய்ப்பார் கடலேழும் புவியேழும் பிற யாவும்
வீறொன்றிய தான்அல்லது வேறொன் றிலை என்ன
ஒப்பாகிய தில்லா ஒருவடிவம்"

என்னும் அரிய வரிகள். கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் வாக்கில் வந்துள்ளவை: "வியன்பெரு வடிவம்" ; "திருப்பெரு வடிவம்" ; "இறுதியு முதலுமில்லா விப்பெரு வடிவம்" என்பவையாம்.

நமது புராண இதிகாசங்களில் இந்த விசுவரூப தரிசனத்தைப் பற்றிய விளக்கம் இரு நூல்களில் வருகின்றது: (1) கந்தபுராணம்; (2) மகாபாரதம், மகாபாரதத்தில் வீடுமபருவத்தின் நடுநாயகமா

யமைந்துள்ள பகவத்கீதை பதினெராம் அத்தியா யத்தில், கிருஷ்ண பரமாத்மா அர்ச்சுனனுக்குக் காட்டியருளிய விசுவரூப தரிசனம் விளக்கம் பெறு கின்றது.

''பரமேசுவரா! தாங்கள் இதுவரையிற் கூறிய வற்றை உணர்ந்தேன். இனி தங்கள் அழிவில்லாத ஈசுவர வடிவத்தைக் காண விரும்புகிறேன். அதனை என்னுல் பார்ப்பதற்குச் சாத்தியமென்று கருதுவீர் களானுல் காண்பிப்பீராக!'' என்று பிரார்த்தித்த அர்ச்சுனனுக்கு, பகவான் முதலில் அவனது ஞானக் கண்ணைத் திறந்து வைத்து, ''பாராய்! ஞாலமாகு மென் கோலத்தை நன்றே'' என்றருளினுர். கதிர் கள் ஆயிரங் காந்திடு சோதியாய், அண்டமும் அப் பாலானவையும் ஒன்ருகுந் தன்மைத்தாய், விண் ணும் மண்ணும் விரிந்தொளிர் தோற்றமாய், கண் கொளா வியன் காட்சியாய்க் கண்டனன் அர்ச்சுனன் விசுவரூபத்தை. இந்த அற்புதத் தோற்றம் முத லில் அவனுக்கு வியப்பை யளித்தது. பரவச மடைந்து வணங்கிப் போற்றியவன் பின்னர் அச்ச முற்றனன். ''போதும் இந்த உருத்திரக் காட்சி, இனி, பிரபுவே! தங்கள் முன்னைய இனிய வடிவத் தில் தோன்றுக!'' என விண்ணப்பித்தனன். உட னே பகவான் அவனுக்கருளிய ஞானக்கண்ணை மறைத்து, ஊனக் கண்ணுல் காணக்கூடிய மானுட வடிவில் காட்சியளித்தார்.

விசுவரூபம் பற்றி கீதையில் வரும் விபரங்கள் அத்தனையும் வட மொழி ஸ்காந்தத்தில் வரும் வரு ணனையைப் பின்பற்றியவையேயாம். இந்தச் சந் தர்ப்பத்தில் வாசகர்களின் மனத்தில் இந்த இரண் டில் உண்மையில் எது முந்தியதோவென்ற சந்தேகம் எழலாம். முருகன் அவதாரம் கிருஷ்ண அவதாரத் திற்கு முந்தியதென்பதற்குப் பல ஆதாரங்கள் உள.

அவற்றுள் மிகவும் முக்கியமானது கீதையின் விபூதி யோகத்தில் உள்ளது. யாம் இங்கு குறிப்பது பத்தாம் அத்தியாயம் இருபத்துநான்காவது சுலோகமாகும்.

"பார்த்தா! புரோகிதர்களுள் முக்கியமான பிரஹஸ்பதி நான் என்று அறிக! சேனைத் தலைவர்களுள் கந்தவேள் நான் என்று அறிக!" என்பது அச் சுலோகத்தின் சாரம். இந்த உண்மைகளை அணுவேனும் அறியாத, தமிழ் மொழியில் ஆழ்ந்த அறிவற்ற ஓர் கிறிஸ்தவ ஆங்கில மொழி உபாத்தியாயர் அண்மையில் கொழும்பு டெயிலி நியூஸ் பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையொன்றில், தமிழர்கள் கொண்டாடும் முருக வழிபாடானது கிரேக்க படைத் தலைவன் அலெக்சான்றர் இந்தியாவுக்கு வந்து திரும்பிய பின் தோன்றியதென்றும், முருகனுக்கு மயிலானது வாகனமாக வந்தது அந்த மன்னனின் மயில் உருவில் அமைந்த சிம்மாசனத்தைப் பின்பற்றியென்றும் அசம்பாவிதமான, இலங்கையில் முருகன் வழிபாட்டின் தொன்மைக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டிருந்தார். உடனே அதைக் கண்டித்து, உண்மையான வரலாற்றை எடுத்துக் காட்டி சைவப் பெரியார் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் மறுப்புக் கொடுத்தார்.

கவிச் சக்ரவர்த்தியான கம்பர் எப்படித் தமிழ் இராமாயணத்தை வால்மீகி பாடிய வடமொழி இராமாயணத்திலும் பார்க்க விசேடமான முறையில் இயற்றினரோ, அதேபோல் கச்சியப்பசிவாசாரிய சுவாமிகளும் வேத வியாசரின் வடமொழி ஸ்காந்தத்தை சொல்நயம், பொருள்நயம், பக்திச்சுவை ஆகிய மூன்றினும் வெல்லும் முறையில் தமிழ் மொழிக் காவியமான கந்த புராணத்தை இயற்றி

யுள்ளாரென்பது, இரு மொழியிலும் விற்பன்னரான ஆராய்ச்சி அறிஞர்கண்ட முடிவாகும். தோத்திர நூல்களாகிய தேவாரம் திருவாசகங்களைப் போல அருட்பாக்கள் நிறைந்துள்ள நூல் கந்த புராணம். அத்தோடு, சாத்திர நூலாகிய சிவஞான சித்தியாரைப் போல் சைவ சமய உண்மைகளையும் அடக்கியுள்ளது இந்தப் புராணம். இனி, இப்புராணத்தின் சூரபன்மன வதைப்படலத்தில் வரும் விசுவரூபக் காட்சியைப் பற்றிச் சிறிது விரிவாய் ஆராய்வோம். இக்கட்டுரையின் முக்கிய நோக்கம் அதுவன்றோ?

மொத்தம் 10,346 செய்யுட்களை 141 படலங்கள் கொண்ட ஆறு காண்டங்களில் அடக்கியுள்ள இந்த மகா காவியத்தின் இருதயம்போல் அமைந்திருப்பது சூரபன்மன் வதைப்படலம். இப்படலத்தில் அடங்கிய 507 செய்யுட்களில் விசுவரூப தரிசனத்தை விளக்கும் பாகம் 32 பாடல்களைக் கொண்டது. இந்தப் பாகத்தை நித்திய பாராயணஞ் செய்யும் நியதி தென்னிந்தியாவிலும், யாழ்ப்பாணத்திலும் தொன்று தொட்டு இருந்து வந்தது. யான் சிறு பிள்ளையாய் இருக்கும்போது என் அருமைத் தாயார் இந்தப் பாசுரங்களைப் பக்தி சிரத்தையுடன் பாராயணஞ் செய்வதைக் கேட்டுள்ளேன். அவற்றில் அடங்கிய முருகன் மகிமையை எனக்கு உபதேசித்தருளிய முதல் குரு அவரேயாவர். பின்னாளில் யான் சமய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த போது, அந்த 32 பாசுரங்களைப் பாராட்டி சைவப் பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள் எழுதியதைப் படிக்கும் பாக்கியம் கிடைத்தது. அப்பெரியாரின் கருத்துப்படி இந்தப் பாகமும், அவை புகு படலம், அமைச்சியற் படலம் ஆகிய இரண்டும் கந்த புராணத்தின் முக் கண்கள் போன்றவை. 'இம்

மூன்றையும் கல்லாதவர் வறியர்; இவற்றைக் கற்றவர் செல்வருட் செல்வர்' என்னும் அவரது மணிவசனத்தின் உண்மையை எவரும் அனுட்டானத்தின் மூலம் அனுபவித்துணரலாம்.

சூரபன்மனுடைய தம்பிமார், புத்திரர்கள் சகலரும் போரில் மடிந்தொழிந்தனர்; சேனைகள் யாவும் அழிந்து விட்டன. எனவே, அவன் தன்னந் தனியாய் நின்று போர் செய்ய நேர்ந்தது. அந்த நிலையில், தான் கற்றிருந்த மாயை வித்தைகளைக் கையாண்டு பெருமானை அச்சுறுத்தவெண்ணி, கோடிக் கணக்கான மாயா வடிவங்களை எடுத்து அவரைச் சூழ்ந்து நின்றான். அவற்றையெல்லாம் பெருமான் நொடிப்பொழுதில் அழித்தொழித்தனர். மறுபடியும் தனியனான சூரபன்மன் மனத்தளர்ச்சியுற்றான். அதனால் அவனது அகந்தை தணிந்தது. நடந்தவற்றையெல்லாம் இராகத் துவேஷமின்றிச் சிந்திக்கும் சந்தர்ப்பம் அவனுக்குக் கிடைத்தது. அவனைத் தடுத்தாட்கொள்ளத் திருவுளங்கொண்ட கருணைத் தெய்வம், அவனுக்கு உபதேசஞ் செய்ய இதுவே தகுந்த சமயமெனக் கண்டு பின்வருமாறு திருவாய் மலர்ந்தருளினார்:-

> ''முகிலுக்கிடையே தோன்றி மறையும் மின்னலைப்போன்ற உன் வடிவங்கள் பலவற்றை நீ எனக்குக் காட்டினாய். அவற்றை யெல்லாம் ஒரு கணப் பொழுதில் எமது அம்பு அழித்து விட்டது. 'அழிவிலாத நம் பெருவடிவங் கொள்வன். நன்று கண்டிடுதி!''

''நன்று கண்டிடுதி'' என்ற கட்டளையில், தாம் எடுக்கப் போகும் இறுதியும் முதலுமில்லாத் திருப்பெரு வடிவத்தைக் காண்பதற்கு வேண்டிய ஞான திருஷ்டி சூரபத்மனுக்கு அருளப்பட்டதான உண்மையும் அடங்கியுள்ளது. அடுத்து வரும் ஏழு பாசு

ரங்களில் அந்த வடிவத்தின் வருணனை அழகாகத் தரப்படுகின்றது. அதனைக் கண்ணுற்ற அசுரன் விம்மிதப்பட்டான். பெருமான் அருளிய நல் லுணர்ச்சியின் வயப்பட்டு அவர் மகிமையைப் புகழ்ந்து பாராட்டிப் பணிந்தனன். நூற்றெட்டு யுகங்களாக ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கு ஏகச் சக்ரவர்த்தியாக இருந்ததில் அவன் கொண்டிருந்த செருக்கும் அகந்தையும், அந்த ஆயிரத்தெட்டு அண் டங்களும் அப் பெருமானின் திருப்பாதமொன்றி லுள்ள ஒரு மயிரில் தொங்குவதைப் பார்த்ததும் மறைந்தன. பழைய நினைவுகள் பல அவன் மன தில் தோன்றின. தூதுவராய் வந்த வீரவாகு தேவர் உரைத்தவை, தம்பியான சிங்கமுகாசுரனும் தனய ஞன இரணியனும் குமரக் கடவுளின் பெருமையைக் கூறிச் செய்த எச்சரிக்கைகள் எல்லாம் ஒன்றன் பின் ஒன்ருக அவன் மனத்திரையில் காட்சியளித்தன. கச்சியப்ப சிவாசாரியார் இந்த மனோநிலையை நமக் குப் பதினேழு பாசுரங்களில் மிகவும் அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிருர். அவற்றுள் விரிவஞ்சி இரண்டை மாத்திரம் இங்கே தருகின்ருேம்:

''கோலமா மஞ்ஞை தன்னிற்
குலவிய குமரன் றன்னைப்
பால னென்றிருந்தே னந்நாட்
பரிசிவை யுணர்ந்திலேன் யான்
மால யன்றனக்கு மேனை
வானவர் தமக்கும் யார்க்கும்
மூல காரணமாய் நின்ற
மூர்த்தி யிம்மூர்த்தி யன்ருே''

''ஆயிர கோடி காமரழகெலாம்
திரண் டொன்ருகி
மேயின வெனினுஞ் செவ்வேள்
விமலமாஞ் சரணந்தன்னில்

தூயநல் லெழிலுக் காற்று
தென்றிடி னிணைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லா
முவமையார் வகுக்க வல்லார்''

அதன் மேல், ''புவன மெங்கும் மேயின பொருள்கள் முற்றும் வெளிப்படுகின்ற விண்ணோர் நாயகன் வடிவங் கண்டேன் நற்றவப் பயனீதன்றே'' என்று தான் முன் ஜென்மத்தில் செய்த தவத்தின் சிறப்பையுன்னிப் பெருமிதம் கொள்கின்றான். இப் பிறப்பில் அவன் செய்தது உலக போகம் கோரிய யாகமேயாம். அவனுடைய கால்கள் அவரை வலம் வர விரும்பின. கைகள் தொழுதலை விரும்பின. சென்னி அவரை வணங்க விரும்பியது; நெஞ்சம் அவருக்கே ஆளாகி வாழவேண்டுமெனத் துடித்தது. ஆனால் தான் ஓர் வீரன், சூரன் என்ற மதிப்புக் காரணமாக எழுந்த மானமானது குறித்த வழிபாடு எதையும் செய்ய விடாமல் தடுத்துவிட்டது. அண்டமெங்கும் பரவியிருந்த வீரத் தன்மையின் புகழை இழக்க அவனுக்கு மனம் வரவில்லை. உடனே, பெருமான் தாம் தம் பெருமையை அறிவுறுத்த எடுத்த திருப் பெரு வடிவத்தை விடுத்து, அவனுக்கு அருளிய நல்லுணர்ச்சியை மாற்றிவிட்டு, முன்போல் மயில் வாகனத்தமர்ந்த பால வடிவில் காட்சி யளித்தார். இறுதியில், சூரன் சமுத்திரத்தின் மத்தியில் பெரிய மாமரமாக நின்றதும், குமரன் வேல் அதனை இரு கூறுக்கவே, ஒன்று மயிலாகவும் மற்றையது சேவலாகவும் மாற, அவற்றுள் முந்தியதை வாகனமாகவும் பிந்தியதைக் கொடியாகவும் அமர்த்திக் கொண்டதும் முருகன் அடியார் எல்லோரும் நன்கறிந்த உண்மைகளாகும்.

விசுவரூபதரிசனம் என்னும் வியன்பெரு காட்சி ஓர் மிக அரிய நிகழ்ச்சி. இதனைக் கச்சியப்ப சிவா

சாரிய சுவாமிகள் பெறவில்லை. ஆனால், சூரன் பெற்றதை வர்ணிக்கும் பெரும் புண்ணியமும் பாக்கியமும் அவருக்குக் கிடைத்தது. அதனால் அப்பெரு வடிவத்தைத் தாமும் தோத்திரித்து வணங்கவேண்டுமென்ற ஆர்வம் அவர் உள்ளத்தில் உதித்து விட்டது. இறுதிப் பாட்டில் இந்த ஆர்வத்தைப் பூர்த்தி செய்து கொண்டார். அப்பாடலையும் தந்து இக் கட்டுரையை முடிக்கின்றோம்.

"காரணனாகித் தானே கருணையா லெவையு நல்கி
ஆருயிர் முழுதுமேவி யனைத்தையு மியற்றி நிற்கும்
பூரண முதல்வன் மைந்தன் போதக மளித்து மாற்றிச்
சூரனை மயக்கஞ் செய்யுஞ் சூழ்ச்சியோ வரியதன்றே"

(நாவலப்பிட்டி, கதிரேசன் கல்லூரி மலரிலிருந்து எடுக்கப்பட்டது)

# கதிர்காம மகிமை

ஆறுமுக மதியாட ஈறிருகண் மலராட் ஆறிரு கரங்களாட
ஆறிருதிண் புயமாட ஆரவட மேலாட ஆறுபடை வீடுமாட
தேறுமுக மின்றிந் திரிந்திட்ட தேவர்க்குத் தேற்றமளி பாதமாட
தெய்வானை யிடமாட குறவள்ளி வலமாட தேவர்கள் சுற்றியாட
ஏறுமயில் முன்னுட ஏறூர்தி நின்ருட எழுச்சிதருஞ் சேவலாட
எழுபிறப்பும் உன்னை மறவாது பாடியே ஏத்திடும் அன்பராட
காருட வாகனன் களித்தாட எனைநாடிக் கதிர்வேலோ டாடிவருவாய்
கதிர்காம க்ஷேத்திரந் தனிலமர்ந் தடியர்க்குக் கருணைமழை பொழிதெய்வமே!

---

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றிலும் சிறப்புடையது கதிர்காமம்

---

ஆங்குள்ள சந்நிதான அமைப்புகள் விசித்திர கருத்துக்கள் பொருந்தியவை

முருகன் வழிபாடு மிகவுந் தொன்மையானது; சரித்திர காலத்தைத் தாண்டி நிற்பது; புராண இதிகாசங்களில் இடம்பெறுவது. ''இயற்கையிலுள்ள முருகை முதல் முதல் கண்டவர் தமிழ் நாட்டார். முருகனுக்குரிய செவ்வாய்க் கோளுக்குந் தமிழ் நாட்டுக்குந் தொடர்புண்டு. முருகன் உண்மை கண்டு, இயற்கை வாழ்வு செலுத்தி, நோன்பு காத்து அழியாப் பேறுபெற்ற சித்தர்கள் வாழ்ந்த நாடு தமிழ் நாடு. முருகன் நோன்பும் வழிபாடும் பிறவும் இன்னும் தமிழ் நாட்டில் நடைபெற்று வருகின்றன. ஆனல் அவைகளின் முறைப்பாடுகள் இந்நாளில்

குலைந்துவிட்டன. நோன்பையும் வழிபாட்டையும் ஒழுங்குபட நிகழ்த்தினால் மீண்டும் பழந்தமிழ் நாட்டைக் காணலாம்; சித்தர்களைக் காணலாம்.'' என்கிறார் திரு. வி. கலியாணசுந்தர முதலியார். ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்கு முன் எழுதப்பட்ட இந்த அரிய வசனம் இன்றைய ஈழத் தமிழர்கட்கு அறிவுறுத்தும் தன்மையில் அமைந்துள்ளது.

## கதிர்காமம்

எம்பெருமான் முருகன் தமிழ் நாட்டவரால் முதல் முதல் வழிபட்ட தெய்வமாயினும், அப்பழங்குடியினர் கடைப்பிடித்த இந்த உயர்நெறி கீதையைப்போல் பக்தி, ஞானம், கர்மம், யோகம் ஆகிய நான்கினையும் அடக்கியுள்ள உன்னத சமரச சன்மார்க்கம்—உலகிலுள்ள சகலர்க்கும் பொதுவானதுமாகும்.

இந்த உண்மைக்கு ஓர் இணையற்ற எடுத்துக்காட்டாக இன்று விளங்கும் க்ஷேத்திரம் கதிர்காமம். இஃது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றினாலும் சிறப்புடைத்து, இந்தத் தலத்தின் விரிவான அருமையான ஆராய்ச்சியோடு கூடிய, வரலாற்றை அன்பர் திரு. குலசபாநாதன் அவர்கள் இயற்றிய கதிர்காமம் என்னும் நூலில் காணலாம்.

## முருக தத்துவம்

முருக தத்துவமானது எவ்வளவு அற்புதமானதோ, அதேபோல அற்புதமும் மிகவும் இரகசியமான கருத்துக்களும் பொருந்தியவை கதிர்காமத்தினுள்ள நான்கு முக்கிய சந்நிதானங்களின் விசித்திரமான அமைப்புக்கள். கதிர்காமநாதன் சந்நிதியானது தெற்கு நோக்கியுள்ளது. இதை முதலில் தரி

சிக்கும் சைவ நன்மக்களின் உள்ளத்தில் சிவபிரானின் தட்சிணு மூர்த்தித் தத்துவமும், சிதம்பரத்தில் நடராசப் பெருமான் தெற்கு நோக்கி நின்ருடும் தன்மையும் கட்டாயமாகத் தோன்றும்.

## தெற்குப் பார்த்த சந்நிதானம்

*"காலனூரை யடையத் தெற்கு நோக்கிச் செல்லும் மக்களே! சற்றே எதிர்ப்பக்கந் திரும்பி என்னைப் பாருங்கள்! உங்கள் பாவங்கள் கழியும்; கஷ்டங்கள் நீங்கும்; பிறவிப்பிணி ஒழியும். அப்பனின் ஐந்து முகங்களோடு அதோ முகமுங்கொண்டு யான் அவதரித்தது இக்கலியுகத்தில் உங்களைக் காலன் கையில் சிக்காமல் காப்பாற்ற வல்லவோ?" என்று நமக்கு வற்புறுத்துகிறது இந்தத் தெற்குப் பார்த்த சந்நிதானம்.*

## வடக்குப் பார்த்த சந்நிதானம்

*தமது தலைவனைச் சதா தரிசிக்கக்கூடிய தன்மையில் அமரவேண்டுமென்ற ஆர்வத்தாற் போலும் வள்ளியம்மைத் தாயார் வடக்கு நோக்கி சுவாமி சந்நிதானத்துக்கு நேராக வீற்றிருக்கின்ருர்.*

## கிழக்குப் பார்த்த சந்நிதானம்

*இந்த பரமாத்ம-சீவாத்ம ஐக்கியத்தில் கிரியா சக்தி தலையிடவே கூடாதென்ற கருத்தை நினைவூட்டப்போலும் தெய்வானை அம்மையார் கிழக்கு நோக்கித் திரும்பிக்கொண்டார்.*

## மூத்துலிங்கச் சித்தர் சந்நிதானம்

முத்துலிங்கச் சித்தனரோ, குறித்த மூவரின் தரிசனங் கோரிவரும் பக்தகோடிகட்கு நல்வரவு கூறி வழிகாட்டும் முறையில், தமக்கு அளப்பருங் கருணை காட்டி ஆட்கொண்ட வள்ளியம்மைத் தாயாரின் அருகிலேயே, மேற்கு நோக்கி மாணிக்க கங்கையைப் பார்த்த வண்ணம் அமர்ந்துள்ளார். அவர் தாம் பெற்ற இன்பம் இத்தரணியோர் எல்லாரும் பெற வேண்டுமென்ற கருணை காரணமாகவல்லவோ, ஜென்ம பூமியாகிய வட இந்தியாவைத் துறந்து, கதிர்காமத்தில் சமாதிநிலை கொண்டனர்.

*(வீரகேசரியில் வெளிவந்த கட்டுரை இது)*

# ஆறுமுகப் பெருமானின்
## வீறு புகழ்பெறுவிரதம்

முருகனுண்மை கண்டு, இயற்கை வாழ்வு செலுத்தி, நோன்புகாத்து, அழியாப் பேறுபெற்ற சித்தர்கள் வாழ்ந்த நாடு நமது தமிழ் நாடு. முருகன் நோன்பும், வழிபாடும், பிறவும் இன்னும் தமிழ் நாட்டில் நடைபெற்று வருகின்றன. ஆனல் அவைகளின் முறைப்பாடுகள் இந்நாளில் குலைந்து விட்டன. நோன்பையும், வழிபாட்டையும் ஒழுங்குபட நிகழ்த்தினல், மீண்டும் பழந் தமிழ் நாட்டைக் காணலாம்; சித்தர்களைக் காணலாம். பண்டை நாளில் தமிழ் நாட்டினின்றும் மக்கள் வாழ்வுக்குரிய அன்புத் துறைகள் உலகில் பரவியதுபோல இந்நாளிலும் பரவும்.

**''இப்பொழுது உலகிற்கு வேண்டற்பாலன நோன்பும் இயற்கை வழிபாடும். இவைகளை மீண்டும் உலகில் உயிர்ப்பிக்கும் பொறுப்பைத் தமிழ் நாடு ஏற்றுக்கொள்ளல் வேண்டும்''** என்பது தமிழ் நாட்டுப் பெரியார், சைவ சித்தாந்த விற்பன்னரான திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இற்றைக்கு நாற்பத்தைந்து ஆண்டுகட்கு முன் தமிழ் பேசும் மக்களுக்கு விடுத்த விண்ணப்பம்.

அவர் விசனத்துடன் குறிப்பிட்ட குறைபாடுகள் அன்றிலும் பார்க்க இன்று பன்மடங்காய்ப் பெருகிவிட்டனவென்று தயங்காமற் கூறலாம்.

## கந்தபுராண படனம்

யாழ்ப்பாணத்துச் சைவ நன்மக்களைப் பொறுத்தமட்டில், தாய்மார்கள் தங்கள் குழந்தைகட்குத் தாய்ப் பாலுடன் முருக பக்தியையுங் கலந்தூட்டி வளர்த்த முறை எனது சொந்த வாழ்விலேயே கண்டுங்கேட்டும் அநுபவித்தும் உணர்ந்த ஒன்றாகும். ஆலயங்களில் கந்தபுராண படனம் ஒழுங்காக நடைபெற்றதுண்டு; எல்லோரும், முக்கியமாகப் பாட்டிமாரும் தாய்மாரும், பக்தி சிரத்தையுடன் அதைக் கேட்டு அறிவு மலர்ச்சிபெற்றனர்.

இல்லங்களில் வாரத்திற்கு ஒருமுறை வெள்ளிக்கிழமையிலும், மாதம் ஒருமுறை கார்த்திகை நட்சத்திரத்திலும், வருடம் ஒருமுறை ஐப்பசி மாசக் கந்தசட்டி ஆறு நாட்களிலும் கந்தவிரதங்கள் அனுஷ்டிக்கப்பட்டன. பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் அவ்விரதங்களை அனுஷ்டிப்பதோடு நின்றுவிடாது, அவற்றின் மகிமையைப்பற்றி மாணவ மாணவிகட்கு உபதேசித்தனர். இந்த அருமையான முறையில் இளம் வயசிலேயே முருகன் பெருமையை உய்த்துணரும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைத்தது.

முக்கியமாகக் கருதப்படும் இந்த மூன்று விரதங்களைப்பற்றி, முசுகுந்தச் சக்கரவர்த்தி கேட்க, விசிட்டம் அடைந்த வசிட்ட முனிவர் அருளிய விளக்கத்தை கந்தபுராணம் கந்த விரதப்படலத்தில் விரிவாகக் காணலாம். ஆறு கண்டங்களும் 141 படலங்களும், 10,346 செய்யுட்களும் கொண்டது ஸ்ரீலஸ்ரீ கச்சியப்ப சிவாச்சாரியார் தமிழில் இயற்றிய கந்தபுராணம் என்ற காவியம்.

இந்தப் பெரிய காவியத்தைத் தனி ஆத்மீக சாதனைக்காக ஒருவர் பாராயணம் செய்வது கஷ்ட

மென்பதை பதினேழாம் நூற்றுண்டிலேயே பல முருக பக்தர்கள் உணர்ந்தனர். அவர்களுள் ஒருவர் அக்காலத்தில் மைசூர் மன்னராக இருந்த இரண்டாவது பெட்டதசாமராஜு உடையார் என்பவர். அன்னாரின் வேண்டுகோளுக்கிணங்கி, ஸ்ரீசம்பந்த சரணுலய சுவாமிகளால் இயற்றப்பட்டது கந்தபுராணச் சுருக்கம் என்னும் நூல். இது மொத்தம் 1048 செய்யுட்களைக் கொண்டது, சரியாகப் பத்துக்கு ஒன்ருக கந்தபுராணத்தைக் கருத்துச் சிதைவின்றிச் சுருக்கி அடக்கியுள்ள ஆசிரியரது கவித்திறம் போற்றற்குரியது.

## தொகுத்தல் எனும் வகை

நான்கு வகையான யாப்புக்களுள் தொகுத்தல் என்னும் வகையைச் சேர்ந்தது கந்தபுராணச் சுருக்கம். கந்தசட்டிவிரத ஆறு நாட்களுள் படனம் செய்வதற்கு மிகவும் பொருத்தமானது.

முருகப் பெருமானைப் பரவி நாம் உய்வுபெற நமக்குக் கிடைத்துள்ள தோத்திரங்கள் கணக்கில. திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, திருச்செந்தூர் அகவல், கந்தர் கலிவெண்பா, முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ், திருப்போரூர் சந்நிதி முறை முதலாயவை சகலரும் அறிந்தவை. இவற்றைவிட, செந்தூர், சேயூர், பழனி, தணிகை, மயிலம், கம்பை, திருமலை, முதலாய ஸ்தலங்களில் எழுந்தருளியிருக்கும் பெருமான் மீது, வெவ்வேறு காலத்தில் பாடப்பெற்ற பிள்ளைத் தமிழ்கள் உள. ஈழத்துச் சைவர்களுக்குப் பெரிதும் பயன்பட கதிர்காமம், நல்லூர், செல்லச் சந்நிதிப் பதிகங்களும் உள. இவற்றுள் எதையும் கந்தசட்டி விரதம் அனுஷ்டிப்போர் பாராயணஞ் செய்யலாம்.

கந்தபுராணம், கந்தபுராணச் சுருக்கம், கந்தர் கலிவெண்பா மூன்றும் முருகன் அடியார்களுக்கு அப்பெருமான் அளித்துள்ள பெருநிதிகளென்பது அறிஞர் கண்ட முடிவு.

## கந்தர் கலிவெண்பா

வடமொழி ஸ்காந்தம் பால் என்றால், கந்த புராணம் தயிர் என்றும், கந்தபுராணச் சுருக்கம் அதிலிருந்து கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணெய் என்றும், கலிவெண்பா அந்த வெண்ணெயை உருக்கி எடுக்கப்பட்ட நெய்யென்றும் அநுபூதிச் செல்வர்கள் கருதுகிறார்கள். சின்னஞ் சிறுவயசிலிருந்தே கந்தர் கலிவெண்பாவை நித்திய பாராயணஞ் செய்து, பின்னர் கந்தபுராணம், கந்தபுராணச் சுருக்கம் ஆகிய இரு நூல்களையும் கருத்தூன்றிக் கற்றோர்க்கு இந்த உண்மை தெற்றெனை விளங்கும்.

நாவலர் பெருமானின் தொண்டைப் பின்பற்றி ஆலயங்களில் புராணபடனம் செய்யும் நற்பழக்கத்தை யாழ்ப்பாணமெங்கும் பரவச் செய்த பெருமை வித்துவசிரோமணி த. ச. பொன்னம்பல பிள்ளையவர்களைச் சார்ந்ததாகும். ஆலயங்களில் விசேஷ புராண படனம் நடக்கும்போது அன்பர்களும் அபிமானிகளும் இப்பெரியாரை இரந்து அழைத்துச் சென்று அர்த்தஞ் சொல்லச் செய்வதுண்டு. இயல்பாகவே அமைந்த இனிய குரலில் இராகங்கள் நன்கமைய அவர் கருத்து விளக்குவதைக் கேட்க மக்கள் ஆயிரக்கணக்கில் கூடுவதுண்டு. அவர் அர்த்தஞ் சொல்லும் வேளையில் ஏடுபிடிக்க (அதாவது பாட்டைச் சொல்ல) பண்டிதர்கள் போட்டியிடுவதுண்டு.

கந்த சட்டி ஆறு நாட்களிலும் கோயில்களில் கூட்டமாக விரதம் அனுஷ்டிப்போரின் ஆன்மலாபம் கருதி மயூரகிரிப் புராண படனத்தை அவர் ஆரம்பித்து வைத்தார். அந்த நூலைப் பிழையறப் பரிசோதித்து சிறந்த பொழிப்புரையுடன், சைவப் பிரகாசயந்திரசாலையில் அச்சிட்டு வெளியிட்டவரும் அவரே. இந்த அரும்பெரும் தொண்டு அவரால் பார்த்திப வருடம் (1885) ஆவணி மாசத்தில் நிறைவேறியது.

## குன்றக்குடி எனும் மயூரகிரி

கந்த விரதங்களின் மகத்துவத்தை விரித்துரைக்கும் இந்நூல், வடமொழி மயூரகிரி மான்மியத்தின் மொழி பெயர்ப்பாகும். இன்று நாம் குன்றக்குடியென அழைக்கும் சுப்பிரமணிய ஸ்தலமே மயூரகிரி. தமிழ் மொழியில் முருகன் திருவருள் முன்னின்று இப்புராணத்தை இயற்றியவர் சிவகங்கை வித்துவான் சுப்பிரமணிய பிள்ளை அவர்கள். இவர் காலம் பதினெட்டாம் நூற்றுண்டு. இந்நூலின் முதற்பதிப்பின் நூன்முகத்தில், வித்துவ சிரோமணி "இம்மையில் வேண்டிய பயன்களையும் மறுமையில் முத்தியின்பத்தையும் அடைய விரும்புவோர் இதனைச் சுப்பிரமணிய ஆலயங்கள்தோறும் மெய்யன்போடு ஓதல், கேட்டல் செய்வார்களாயின் அவர்கள் அப்பயன்களை ஒரு தடையின்றிப் பெறுவார்களென்பது நிச்சயம்" என்று வற்புறுத்தியிருப்பதை அன்பர்கட்கு நினைவூட்ட விரும்புகின்ருேம்.

மேலே குறிப்பிட்ட மூன்று முக்கிய கந்த விரதங்களை விவரிக்க ஒவ்வொன்றுக்குந் தனிச் சருக்கம் அமைந்துள்ளது. ஏழாவது சருக்கம் சட்டி விரதங் குறித்தது. அச்சருக்கத்திலிருந்து எமது கருத்தைக் கவர்ந்த ஒரு தனிப் பாடலைக் கீழே தருகின்ருேம்:—

''பலன்விழையாது நோற்கிற்
பாவமதொழிந்து சிந்தை
நலமுறைமுமுட்சுவாகிக் குருவினுன்
ஞானம் பெற்றுப்
புலன் வழிச் செலவுநீக்கிப் போத
பூரணவானந்த
அலைகடல் வடிவாங் கந்தனடியினை
நீழல் சேர்வார்''

அதாவது, பயன் விரும்பாது கந்த சட்டி விரதம் அனுஷ்டிப்போர் இப்பிறப்பில் எல்லாத் தீமைகளிலுமிருந்து விடுபட்டு, கந்தப்பெருமானின் திருவடி நீழலின் கீழ்ச்சேருவார் என்பதாம். பக்தி நெறியில் பல படிகள் உள, அவற்றில் உயர்வற உயர்ந்த படி பக்திக்காகப் பக்தி செய்வதேயாம். இறைவனிடம் அன்பிற்காகவே அன்பு செய்யும்படி பெற வேண்டின் அனைத்தையும் அவனுக்கு அர்ப்பணஞ் செய்யும் மனோநிலை அமைதல் வேண்டும். அதன் மேல் நமக்குக் கிடைக்கும் அருநிதியங்கள்:

'இன்பமே எந்நாளுந் துன்பமில்லை;' 'அஞ்சுவதியாதொன்று மில்லை, அஞ்ச வருவதுமில்லை;' 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே' என்பவையாம். எல்லாவித ஆராதனைகளின் விரதங்களின், நோன்புகளின், தவங்களின் நோக்கம் இறுதியில் இதுவேயன்றோ?

''வெற்றி வடிவேலன்-அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதேபோ! பகையே!
துள்ளி வருகுது வேல்.''

(பாரதியார்)

# உயிர்நோயை அகற்றும் திருவாசகத் தேன்

''திருவாதிரை மலர்'' என்றதும் எத்தனை விஞ்ஞான மெய்ஞ்ஞானக் கருத்துக்கள் மனதில் எழுகின்றன! இந்து வானூல் சாஸ்திரப்படி இருபத்தேழு நட்சத்திரங்கள் உள. அவற்றுள் 'திரு' வென்ற அடைமொழி பெற்றுச் சிறப்புற்றவை இரண்டேயாம்; ஒன்று திருவாதிரை; மற்றையது திருவோணம். முந்தியது சிவபெருமான் சம்பந்தமுடைத்து; ''ஆதிரைநாதன்'' என்பது பரமசிவத்தின் பழைய பெயர்களுள் ஒன்று. அத் தொடர்பில் வந்த தேவிநாமம் 'திருவா திரை நாச்சியார்' என்பதாம், பிந்தியது திருமாலைக் குறிப்பது. திருமாலுக்குரிய பழைய நாமங்களுள் 'ஓணப்பிரான்' என்பது முக்கிய இடம் பெறுகின்றது. எனவே, மண்ணுலகில் சைவம், வைணவம் இரண்டுக்குமுரிய பழமைக்கும் மகிமைக்கும் விண்ணுலகிலிருந்து சதா சாட்சி கூறுவதுபோல் அமைந்துள்ளன, குறிப்பிட்ட இரு நட்சத்திரங்களும்.

சைவர்களுக்கு மிக விசேடித்த புனித தினங்களான மாசி சிவராத்திரி, கார்த்திகைத்தீபம், மார்கழித் திருவாதிரை ஆகிய மூன்றும் வானூல் ரீதியில் நெருங்கிய தொடர்புடையன.

**''ஆதியரு ணசலப்பே ரற்புதலிங் கத்துருக்கொ**
**ளாதிநாண் மார்கழியி லாதிரையச்—சோதியெழு**
**மீசனைமான் முன்னமர ரேத்திவழி பட்டநாண்**
**மாசிசிவ ராத்திரியா மற்று.''**

என்பது ஸ்ரீ ரமணமூர்த்தியின் திருவாய்மொழி. சிவபெருமானின் மகேசுவர வடிவங்களுள் முதலாவதான லிங்கோற்பவ மூர்த்தியைக் குறித்து நிற்கும் இந்த நிகழ்ச்சி, ஓர் பிரளய காலத்தில் திருவண்ணுமலையில் பல்லாயிரம் வருஷங்கட்குமுன் பிரமா விஷ்ணு இருவரின் மயக்கந்தீர்க்க நடந்த தென்பது எமது ஆன்ருேர் வாக்கு. அதனை இருபதாம் நூற்ருண்டில் உறுதிப்படுத்தியது ஸ்ரீ ரமணரின் வாழ்க்கையும் வாக்கும்.

சைவ சித்தாந்தப்படி ஆண்டவனை அடையும் மார்க்கம் நான்கு படிகளை உடைத்து; சரியை, கிரியை, யோகம், ஞானம். இவை முறையே தாச மார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன் மார்க்கம் என அழைக்கப்படும். ஆண்டான் அடிமைத்திறம் முதலில் அடங்கியுள்ளது. இதனை நமக்கு எடுத்துக்காட்டியவர் திருநாவுக்கரசர். தந்தையும் மைந்தனுமாக நிற்றல் இரண்டாவது மார்க்கத்தில் தரப்பட்டுள்ளது. இதனை நிலைநாட்டியவர் திருஞானசம்பந்தர். இறைவனை நமக்குத் தோழனுகக் கருதி வழிபடும் மூன்ருவது மார்க்கம் சுந்தரரால் விளக்கப்பட்டது. நான்காவதான சன்மார்க்கம் நாயக-நாயகி நெறியாகும்; அதாவது இறைவனைக் கணவனுகக் கொண்டு ஆன்மா நாயகியாக நின்று அன்பு செய்தல்; இதனை விளக்கியவர் மணிவாசகர்.

உலகில் தோன்றியுள்ள பல்வேறு சமயங்களின் அடிப்படைக் கொள்கைகளைத் துருவி ஆராய்ந்து பார்த்தால் அவையெல்லாம் ஆரம்பத்தில் அச்சத்தை அத்திவாரமாகக் கொண்டெழும்பிய உண்மை தெற்றென விளங்கும். இந்த அச்சத்தில் சிறிது தாசமார்க்கத்தில் இன்னும் இருக்கவே செய்கின்றது. அடுத்த இரு மார்க்கங்களில் உரிமை பற்றிய அன்பு

படிப்படியாக உயருகின்றது. நான்காவது நெறியில் நாயகனுடைய உடைமைகளையெல்லாம் அனுபவிப்பதோடு, நாயகனையே அனுபவிக்கும் வாய்ப்பும் நாயகிக்குக் கிடைக்கின்றது. எனவே இது இரண்டறக் கலந்து இன்புறும் மார்க்கமாகின்றது. மணிவாசகர் தம்பொருட்டும் எம்பொருட்டும் பாடிய திருவாசகமும், சிற்சபேசன் வேண்டுகோளுக்கிணங்கி இயற்றிய திருக்கோவையாரும் இந்தச் சன்மார்க்கத்தை நன்கு விளக்குகின்றன.

''நால்வர் பாடல்கள்'' என நாம் இன்று அடிக்கடி கேட்கும் சொற்றொடர் பின்னுளில் தோன்றிய ஒன்ருகும். ஒன்பதாம் நூற்ருண்டில் இயற்றப்பட்டதாகக் கருதப்படும்,

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்-கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்''

என்ற ஔவைப்பிராட்டியாரின் அருள்வாக்கில், மூவர் தமிழ் திருவாசகத்திலிருந்து பிரித்துக் கூறியிருப்பதை உற்று நோக்குக! ''கோவை திருவாசகம்'' என்னும் இரு நூல்களையும் பிரிக்காது பிணைத்துக் கூறுவதே சைவ மரபாகும். நம்பியாண்டார் நம்பி அவர்களால் ஆரம்பத்தில் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டது மூவர் தமிழ் மாத்திரமேயாம். இதுவும் நமது கவனத்தில் இருக்க வேண்டிய ஓர் பேருண்மையாகும்.

மணிவாசகப் பெருமானின் மகிமையையும், அவர் நமக்குத் தேடி வைத்துப் போன திருவாசகத்தேனின் அருமை பெருமையையும் உணராத தமிழர், சைவர் இருக்க முடியாது. பிறநாட்டில்

பிறந்து, பிறமதச்சார்பில் ஒழுகும் அன்னியர்தாமும் தமிழ்மொழி பயிலும் பாக்கியம் பெறின், திருவாசகத்தின் தனிச்சிறப்பை அறிந்து அதனைப் பாராயணஞ் செய்து பாராட்டவே செய்வர். கலாநிதி G.U. போப் அவர்கள், சேர் சாள்ஸ் எலியற் போன்ற மேல்நாட்டு அறிஞர்கள் செய்துள்ள ஆழ்ந்த ஆராய்ச்சியின் பயனாகவே, ''திருவாசகமானது உண்மையில் திருவாதவூரடிகளது ஆன்மீக வாழ்க்கையின் சுயசரிதம்; அது சாதி, நிற, மொழி, மத வேறுபாடுகள் எல்லாவற்றையும் தாண்டி, ஆன்மீக சாதகர்கள் சகலருக்கும் தனிப்பட்ட முறையில் நல்வழிகாட்டியாக அமைந்துள்ளது'' என்ற பாராட்டு மொழி நம்மவர்களிடையே பரவியதாகும். ''திருவாசகத்தில் உருகாதார் ஒரு வாசகத்திலும் உருகார்'' என்ற பழமொழியில் அடங்கியுள்ள உண்மை பன்மொழிப் புலவர் பலரால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அவர்களுட் சிலர் திரோதானசுத்தி குறிக்கும் திருப்பள்ளி எழுச்சியையும், வேறுசிலர் முத்திக்கலப்புரைக்கும் பிடித்த பத்தையும் முக்கியமாக அதின் மூன்றும், ஒன்பதாம், பத்தாம் பாடல்களையும் எடுத்துக் காட்டாகக் கூறியுமுள்ளார்கள். திருவாசக ஆராய்ச்சிப் பேருரை ஆசிரியர் பண்டிதமணி நவநீத கிருஷ்ண பாரதியார் அவர்கள் இப் பிடித்த பத்தின் திருப்பாட்டுகள் 7,8,4,5,9,6,3,1,2,10 எனப் பொருளுக்கேற்ப அடைவுறும் என்று அட்டவணை சேர்த்து விளக்கியுள்ள அருமை பண்டிதர்கட்குப் பெரும் விருந்தாகும்.

திருவாசகத்தைப் பக்தி சிரத்தையுடன் ஓதும் சாதனையை ஆரம்பிக்குமுன் ஒருவர் திருவாதவூரர் புராணத்தைக் கருத்தூன்றிப் படித்தலால் விசேஷ பலனை அடைய முடியும். சென்ற நூற்றாண்டில் நமது சைவப்பாடசாலைகளில் இருந்த

கல்விமுறை இதற்குப் பெரிதும் ஆதரவளித்தது. கடவுண்மா முனிவர் திருவாதவூரரின் வாழ்க்கைக் குறிப்புகளை மாத்திரங் கொண்டு அப்புராணத்தை இயற்றவில்லை. திருவாசகத் தேனைப் பருகித் தெவிட்டாது திளைத்த நிலையில்இருந்து கொண்டே அதனை அருளியுள்ளாரென்பதற்கு அவரது நூலில் அகச்சான்றுகள் நிறைய உள. வாதவூரரின் வரலாற்றுச் சுருக்கத்தை அவரது பிறப்பு, வளர்ச்சி, மந்திரிப்பதவி, உள்ளத் துறவு, குருவைத்தேடல், சரணுகதி, சைவப்பணி, சிவக்கலப்பு என்ற எட்டுத் தலைப்பின் கீழ், கீழ்க்கண்ட ஒன்பது பாடல்களில் அமைத்துவிடலாம்:-

"பொய்ம்மையா முலகின் மாயப் பொங்கிருளகல வன்னோர்
தம்மையாழ் நரகிற்றள்ளுஞ் சமயதா ரகைமழுங்க
எம்மையா ளுடையானன்ப ரிதயதா மரைகளெல்லாஞ்
செம்மையாய் மலரஞான தினகரருதயஞ் செய்தார்"

"தவமெனும் பெரிய வித்துட் டங்கியே யங்குரித்துப்
பவமெனும் பங்க நீங்கிப் பயிலருட் குருத்துண்டாகி
யவமெனும் களைகணீங் யாக்குவோ னருளாலுண்மைச்
சிவமெனும் விளைவுண்டாக வளர்ந்தது தெய்வச்சாலி"

"காதலித் தறஞ்செய் வோர்க்குக் கவசமுங் கண்ணுமாகி
யேதிலர்க் கிடும்பையாகி யிறைஞ்சினர்க் கின்பமாகி
யாதுலர்க் கன்னையாகி யரனடிக் கன்புமிக்கார்
பூதலத் திறைவனுணை பொதுவற நடத்துநாளில்"

"தீத்திற வினையினலே சிறைப்படு முயிரையெல்லாம்
பார்த்தன ருலகவாழ்விற் பயனிலையென்று தேர்ந்து
கூத்தினர் தன்மைவேறு கோலம்வே றுருகுமாபோ
னீத்தனர் மனத்தின் முன்போ னிகழ்த்தினர் வழுதிநீதி"

"மற்கடவிலங்கு தன்னல் வளங்கெழு விளவின் மேவு
நற்கனி கொள்ளவேண்டி நயந்துகல் லெறிவார் போலச்

சற்குருவுளனே யென்று நாடுவார் தர்க்கமெல்லாஞ்
சொற்கலை ஞானசைவர் தம் முடன்சொல்லலுற்றார்''

''மின்னினு நிலைமையில்லா விழுப்பொருள் யாவும்வேண்டேன்
உன்னடி யடைந்து நாயேனுறுபவ மொழித்தல் வேண்டு
மென்னையின் றடிமைக்கொள்வா யெம்முயிர்க் கிறைவா
வென்று
முன்னுற வணங்கிநின்றார் முகமெலாங் கண்ணீர் வார''

''திருச்சதக முதலாகச் சிறந்ததமிழறு நூறும்
விரித்தவகப் பொருட் கோவை விளங்கவொரு நானூறு
முரைத்தனர் பின்முடிந்த விடத்துயர்வாத வூரன்மொழி
தரித்தெழுது மம்பலவ னெழுத்தென்று சாற்றினார்''

''நின்றபுகழ்ப் புலியூரர் நேயமுடன் புடைசூழச்
சென்றருளுக் கிடமான செம்பொனினம் பல மெய்தி
யொன்றிய வித்தமிழ்மாலைப் பொருளிவ ரென்றுரை செய்து
மன்றதனிற் கடிதேகி மறைந்தனரங் கவர்காண''

செய்காட்டுங் கமுகடவித் தில்லையுள்ளார் பொருள்கேட்கக்
கைகாட்டித் தம்முருவங் காட்டாமன் மறைந்தாரை
பைகாட்டும் பேரரவப் பணியுடையார் தமக்கன்பு
மெய்காட்டிப் பாலுடனே மேவிய நீராக்கினார்''

சாதாரண மக்களாகிய யாம் மெய்யடியார்களை நம்மினும் வேறுபட்ட மேன்மக்களாகவும், தனிப் பட்ட பெருமக்களாகவும் பேணிப்பணிகின்றோம். ஆனால் அவர்களோ தம்மை நம்மைப்போன்ற சாதா ரண மக்களாகவும், இறைவனது அருட்பிரசாதத்தி னாலேயே தாம் உயர்ந்த நிலையை அடைந்ததாகவும் கருதி, தாம் பெற்ற இன்பம் இத்தரணியோரும் பெறவேண்டுமென்ற கருணை நோக்குடன் பாடியும், போதித்தும் செல்கிறார்கள். சில வேளைகளில் நம் மிடமுள்ள குறைகள், குற்றங்கள், குணக்கேடுகள் சகலத்தையும் தம் தலைமீது சுமத்திப் பாடிவிடுவது

முண்டு. இந்தக் கருணைநெறியை மணிவாசகப் பெருமானின் பாடல்களில் பரக்கக் காணலாம். உதாரணமாக சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று படிகளையுந் தாண்டி ஞானநிலையில் நின்று சன்மார்க்கம் உபதேசித்த இப்பெருமான் திருச்சதகம் அறிவுறுத்தல் பதிகத்தில், ''ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்'' எனவரும் திருப்பாடலில், சரியைக்குரிய நியமங்களை விடுத்தமையால் தமது பிறப்பு அவமாகி இறப்பை நோக்கி விரைந்து செல்கிறதென்று துயருறுவதைச் சிந்திக்குக.

வேத வேதாந்த உபநிடதங்களின் அத்யாத்ம கருத்துகளை திருவாசகத்தில் பரக்கக் காணலாம். சீவன் சிவனுடன் இரண்டறக் கலந்தின்புறும் முத்தி நிலையை ஆரம்பத்தில் குறிப்பிட்டோம். இதுவே அத்வைத மார்க்கமும் ஆகும்.

**'பொய் கண்டார் காணுப் புனிதமெனும் அத்துவித**
**மெய் கண்ட நாதனருள் மேவுநாளெந் நாளோ''**

என்ற எந்நாட் கண்ணியில் தாயுமானவர் மெய்கண்டதேவரை அத்வைத நெறிக்கு, உயர்ந்த எடுத்காட்டாகப் போற்றுகிறுர். தேவரின் நேர் சீடரான சிவஞான வள்ளலார் (அருணந்தி சிவசாரியருடன் குரு உபதேசம் பெற்றவர்)

**''சைவசித்தாந்த மெல்லாம் தானவனுகி நிற்றல்**
**மையறு வேத சித்தமற்றது நானேயென்னல்**
**உய்வகைக் கிரண்டு மொன்றே''**

யென்று அத்வைத வேதாந்தமும் வைதிக சைவ சித்தாந்தமும் நாம் உய்வடைவதற்கு ஒரேவித வழி காட்டிகள் என வற்புறுத்தியுள்ள பெற்றியை உற்று நோக்குக.

இனி, ''பரம்பொருளே எல்லாமாய்த் தோன்று கிறது; 'சீவனும் பரம்பொருளும் வேறல்ல'; 'பரம் பொருள் நிர்க்குணமானது' என்னும் அத்வைத வேதாந்தக் கொள்கைகளை ஆதரிக்கும் திருவாசகப் பகுதிகளைச் சிறிது ஆராய்வோம். ஆரம்பத்தில் உள்ள சிவபுராணத்திலேயே, 'இன்பமும் துன்பமுமில்லா னே உள்ளானே, அன்பருக்கன்பனே யாவையுமாயல் லையுமாஞ் சோதியனே துன்னிருளே'; 'பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி'; 'மெய்ஞ் ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே'; 'போக்கும் வரவும் புணர்வு மிலாப் புண்ணியனே' முதலாய அருங்கருத்துக்களைக் காணலாம். கோயிற்றிருப் பதிகத்தில் 'நீயலாற் பிறிது மற்றின்மை ஒன்று நீயல்லை யன்றி ஒன்றில்லை'; திருத்தோணேக்கத் தில், 'பூத்தாரும் பொய்கைப் புனலிதுவேயெனக் கருதிப் பேய்த்தேர் முயக்குறும் பேதை குணமா காமே தீர்த்தாய்'; திருச்சதகத்தில் 'ஈசனே நீயல்ல தில்லை இங்குமங்கும் என்பதும், பேசினேனேர் பேத மின்மை': கண்டபத்தில், 'சிந்தைதனைத் தெளிவித் துச் சிவமாக்கியெனை யாண்ட'; அச்சோப்பதிகத் தில், 'சித்தமலமறுவித்துச் சிவமாக்கியெனை யாண்ட'; திருவண்டப்பகுதியில், 'சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க, சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க'; நூலுணர்வுணரா நுண்ணி யோன் காண்க' எனப் பல்வேறு ஆதாரங்களைக் காணலாம். விரிவஞ்சி இத்துடன் நிறுத்துகின் றோம்.

கடவுண்மா முனிவர்போல் திருவாசகத் தேனை ப்பருகித் திளைத்தவர் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள். அன்னார் சிவஞான வள்ளலார், கண் ணுடைய வள்ளலார்போல் திருஞானசம்பந்தப் பெருமானைக் குருவாகப் பேணியவர். ஆளுடைய பிள்ளையார் அருள்மாலையில் 'சித்தநற் காழி ஞான

சம்பந்தச் செல்வமே எனது சற்குருவே!' எனப் போற்றுகிறார். ஒழிவிலொடுக்கம் என்னும் நூலின் பாயிரச் செய்யுளுக்கு வரைந்த விருத்தியுரையில் அக்குருவின் மகிமை மேலும் அவரால் சிறப்பிக்கப் பட்டுள்ளது. ஆனால், அருட்பிரகாசவள்ளலார் தமிழ் மொழியில் தோன்றிய தோத்திர நூல்களில் முதலிடத்தை திருவாசகத்திற்கே அளித்துள்ளார். எனவே, அவரது ஆளுடைய அடிகள் (மாணிக்க வாசகர்) அருள்மாலையிலிருந்து இரு எளிய, இனிய பாடல்களைத் தந்து இக்கட்டுரையை முடிக்கின்றோம்.

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து வுவட்டாமலினிப்பதுவே''

'வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தை
கேட்டபொழுதங் கிருந்தகீழ்ப் பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளு மெய்ஞ்ஞான
நாட்டமுறு மென்னிலிங்கு நானடைதல் வியப்பன்றே!''

(ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானம் (காரைநகர்)
திருவாதிரை மலரிலிருந்து எடுக்கப்பட்டது)

# மகாபாரதம் புகட்டும் அரிய படிப்பினைகள்

தர்மம் தலை காக்கும்,
நீதி நிலைநிற்கும்,
சத்தியம் வெல்லும்.

பகவத் கீதையானது ஓர் இந்து மத சாஸ்திரம் என்பது பலரின் அபிப்பிராயம். இது தவறானதாகும். அந்த நூலின் எழுநூறு சுலோகங்களில் ஒன்றிலாவது, 'இந்து', 'சைவம்', 'வைஷ்ணவம்,' 'சாக்தம்' ஆகிய பதங்களில் எதையாவது காண முடியாது. "பல்வேறு திசைகளிலிருந்து மக்கள் தத்தம் பரிபக்குவத்திற்கு ஏற்றவாறுபேணும் மார்க்கங்களெல்லாம் என்னையே நோக்கி வருகின்றன" என்று கிருஷ்ண பரமாத்மா கூறியிருப்பதிலிருந்து, கீதையானது மனிதசமுதாயம் முழுவதற்குமே உரித்தான ஒப்பற்ற யோக சாஸ்திரமாகும். நவீன உலகு இந்த உண்மையை சிறிது சிறிதாக உணர்ந்து வருகின்றது.

கீதையைப் போலவே, அதனை வீட்டுமபர்வத்தில் நடு நாயகமாகக் கொண்டுள்ள மகா பாரதமும் உலகத்திற்குப் பொதுவான நீதி நூலாகும். பாரத மக்களின் பழைய வரலாற்றையும், அவர்களின் பண்பாட்டையும், கலாசாரத்தையும் எடுத்துக் கூறுவது அதன் நோக்கமாயிருந்த போதிலும், அதன் அமைப்பு உலகிலுள்ள எந்நாட்டினர்க்கும் எக்காலத்திற்கும் பொருத்தமானதாகும். அரசியல், பொருளாதாரம், சமுதாயம், கல்வி முறை, சமயம்

முதலாய பல துறைகளில் இன்று மக்களை வாட்டும் பிரச்சினைகளையெல்லாம் பூரணதிருப்திகரமாகத் தீர்த்து வைக்கக்கூடிய போதனைகளையும், தக்க உதாரணங்களுடன் கூடிய படிப்பினைகளையும் இந்தக் கலைக் களஞ்சியத்தில், ஞான பொக்கிஷத்தில் காணலாம். அதன் தனிச் சிறப்பு, அது காலத்தை வென்று நிற்கும் தன்மையிலே அடங்கியுள்ளது. ''ஒருவர் தோள் மேல் ஒருவர் கை வைத்து ஊன்றிக்கொண்டு அந்த மூன்று விருத்தர்களும் (திருதராஷ்டிரன், காந்தாரி, குந்தி) வனம்போன இந்தச் சித்திரம் நேற்று நம் வீட்டில் நடந்த ஒரு சோக நிகழ்ச்சி போலிருக்கிறது'' என்கிறார் ராஜாஜி, அவர் தமிழ் மக்களுக்கு உவந்தளித்த வியாசர் விருந்தில். மகாபாரதத்தைக் கருத்தூன்றிக் கற்பவர்க்கு இது போன்ற பல காட்சிகள் தனி மனித வாழ்விலும் சரி நேர் முன் தோன்றவே செய்யும்.

''தர்மம் ஆவது ஏது? சத்தியமும் நீதியும் இக்காலத்தில் எங்கேயுண்டு?'' என்று கேட்பவர்களையும், ''கண்கெட்ட தெய்வமே உனக்குக் கருணையில்லையா? எங்களை ஏன் இப்படி வருத்துகிறாய்?'' என்று இறைவனை நொந்து கொள்பவர்களையும் இப்பரந்த உலகில் எங்கும் காணலாம். இது 20ம் நூற்றாண்டுப் பிரச்சினையல்ல. கலியுகம் ஆரம்பிக்கு முன்னரும் இருந்தது. துஷ்டனான துரியோதனன் நாடாள, தர்மமும் சத்தியமும் உருவான யுதிஷ்டிரன் தம்பிமார்களுடனும் மனைவியுடனும் காடாளச் சென்ற காட்சி கிருஷ்ணனின் தமையனரான பலராமர் உள்ளத்தைத் துயரில் ஆழ்த்திவிட்டது. அத்துயரினால் ஏற்பட்ட மயக்கத்தினால் தருமமும் அதருமமும் வாழ்வில் பயன் கொடுத்த காலம் மறைந்துவிட்டதெனத்

தோன்றியது அவருக்கு. சாஸ்திரங்கள் கூறுவ தெல்லாம் வெறும் பேச்சென்றுகூட சொல்லத் துணிந்தார். அத்தோடு, இந்த அநீதியைக் கண்ட பிரஜைகளிடத்தில் தெய்வ நம்பிக்கையே அற்றுப் போய்விட்டதென்ருர். இதனைக் கேட்டுக்கொண்டி ருந்த பரமாத்மா மிகவும் அமைதியாக, ''நீ சொல்வதுசரியே. ஆனல் பாண்டவர்கள் அதர் மத்தைத் தர்ம வழியில்தான் வெல்ல விரும்புவர். அவர்கள் அப்படி வெல்லுவதும் நிச்சயம். பொறு மையைப் பேண வேண்டும்'' என்று கூறினர். இந்தச் சம்பாஷணையை அருகில் நின்று கேட்ட தர்ம புத்திரனின் உள்ளம் பூரித்தது. "கோவிந் தனே என்னை உள்ளபடி அறிந்தவன்; ராஜ்யமன்று, சத்தியமே காக்கத் தக்கது. தருமத்தைப் பேணி வாழ்வோம். பகவான் அருள் கூட்டும் போது சேரு வோம்'' என வணக்கத்துடன் கூறி வழி அனுப்பி வைத்தனன்.

கிருஷ்ண பகவானுடன் ஒருங்குகூடி மகா விஷ்ணுவின் எட்டாவது அவதாரமாகத் தோன்றிய வராகக் கருதப்படும் பலராமருக்கே இவ்வித மயக்க மும் சந்தேகமும் ஏற்பட்டதெனின், இன்றைய சாதாரண மக்களைப்பற்றி என்ன சொல்வது? பிறி தோர் சந்தர்ப்பத்தில், அதாவது துரியோதனன் வதையில், பலராமர் கொண்ட சீற்றத்தை மாற்றி, ''ஒரு நிகழ்ச்சியை மாத்திரங்கொண்டு தர்மவிமர் சனம் செய்யத்துணிவது நீதியின்பாற்படாது. அறிவுடைமையும் ஆகாது'' என கிருஷ்ணபகவான் தமையனுக்கருளிய உபதேசத்திலடங்கிய தத்து வம் என்றும் மறக்கமுடியாத உண்மையைக் கொண்டதாகும். மேலும், தர்ம சொரூபியான, சத்திய தீரனை யுதிஷ்டிரன்கூட வாழ்வில் பல முறை சோர்வும் தோல்வி மனப்பான்மையும்

அடைந்ததாக அறிகின்றோம். தன்னைப் போல் துர்ப்பாக்கியன் உலகில் வாழ்ந்ததேயில்லையென்று அவன் எண்ணி எண்ணி மனம் புண்ணுன வேளையில்தான், பிருகதசு வமகரிஷி பாண்டவர்கள் இருக்குமிடம் தேடி வந்து, நளமகாராசன் பட்ட கஷ்டத்தையும் முடிவில் அவன் க்ஷேமம் அடைந்த விதத்தையும் விபரமாக எடுத்துக் கூறி, ''துயரப் பட வேண்டாம். மனித வாழ்வில் சோதனைகள் நேருவது புதிதல்ல'' என்று உபதேசித்து ஆறுதல் அளித்ததாகும்.

இனி, மகாபாரதத்தின் 'பெரும் பலம்' என வியாசரினுலேயே வியந்து கூறப்பட்ட சாந்திபர் வத்திற்குள் சிறிது நுழைவோம். இம்மண்ணுலகு உள்ளளவும் மனிதன் தெரியவேண்டிய, தெரிந்து கையாள வேண்டிய, ராஜதர்ம உண்மைகள் இங்கே தான் மிளிர்கின்றன. சாந்திபர்வத்தை இருபாகங்களாகப் பிரிக்கலாம். முதல் பாகம் ராஜதர்மம், ஆபத் தர்மம் என அழைக்கப்படும். 2-வது பாகம் மோக்ஷதர்மமாகும். முந்தியது மொத்தம் 172 அத்தியாயங்களைக் கொண்டது. அவற்றுள் முதல் 130-ம் ராஜதர்ம போதனைகளைக் கொண்டவையாகும். தமையனுகிய கர்ணனைக் கொன்ற பாவத்தைக் குறித்து மனம் புழுங்கிய தர்மபுத்திரனுக்கு நாரத முனிவர் கர்ணனின் வரலாற்றையும் அவன் செய்த பாவங்களையும் அவற்றின் காரணமாகப் பெற்ற சாபத்தையும் எடுத்துக்கூறி பதிலளித்த உபதேசத்துடன் சாந்திபர்வம் ஆரம்பமாகின்றது. அதைத் தொடர்ந்து குந்தியின் உபதேசமும், பாண்டவர்கட்கிடையே இல்லறமா, சந்நியாசமா, கர்மமா விசேஷித்தது என்பது பற்றிய வாக்குவாதமும் வருகின்றன. இங்கே பகவத்கீதையின் எதிரொலி

யைக் கேட்கின்றோம். அதன்மேல், வியாசரும் கிருஷ்ணனும் வற்புறுத்தியதினால் தர்மபுத்திரன் குருக்ஷேத்திரத்தில் அம்புப்படுக்கையின் மேலிருந்த வீடுமரையடைந்து பெற்ற உபதேசம் வருகின்றது. வீடுமருக்குத் தெரிந்திருந்த தர்மங்கள் உலகில் பிறிதொருவருக்குமே தெரியாதபடியால் அவருடன் அவை மறையாமலிருப்பதற்காகவே கிருஷ்ண பகவான் ஒரு சூழ்ச்சி செய்தனரெனலாம்.

பாரத யுத்தத்தின் 10-ம் நாட்போரில், உடல் முழுவதிலும் அர்ச்சுனன் எய்த அம்புகள் மொய்த்திருக்க வீடுமர் தேரிலிருந்து கீழே விழுந்தார். விழுந்ததும் உடல் நிலத்தைத் தீண்டவில்லை. தலைமாத்திரம் தொங்கிக்கொண்டிருந்தது. அதற்கும் ஓர் அம்புத் தலையணையை அர்ச்சுனன் கையினாலேயே அமைப்பித்துக்கொண்டு, தென் திசையை நோக்கிய சூரியன் வட திசை திரும்பும் வரையில் அந்த அம்புப் படுக்கையிலேயே உயிருடன் இருக்கப்போவதாகக் கூறிவிட்டனர். மைந்தன் விரும்பினாலன்றி மரணம் அவனை அணுகமுடியாதென்று தந்தையான சந்தனு அளித்த வரம் அது. வீடுமன் அம்புப் படுக்கை ஏற்ற இருபத்தொன்பதாவது நாளில் தான் அவர் தருமருக்கு ராஜதர்ம உபதேசத்தை ஆரம்பித்ததாகும். அது எப்படியெனில், வீடுமர் வீழ்ந்த பின் யுத்தம் நடந்த எட்டு நாளும் துரியோதனனின் இறப்பு ஆசௌசதினம் பதினாறும் சேர்த்து மொத்தம் இருபத்து நான்கு நாட்கள் கழிந்தபின்னரேயே சிரார்த்த கர்மங்கள் நடைபெற்றன. இருபத்தாறும் நாள் அஸ்தினாபுரம் சேர்ந்த பாண்டவர்கள் அடுத்த நாளே பட்டாபிஷேகத்தை வைத்து இரண்டாம் நாள் பிரஜைகளை ஏற்றனர். எனவே, வீடுமரின் தர்

மோபதேசம் கேட்ட நாள் அதற்கு அடுத்த தினமாகவே யிருக்க முடியும். அதன் மேல் அவரது ஆன்மா உடலை விட்டுப் பிரியாதிருந்தது ஒரு மாச காலமேயாம்.

சாந்திபர்வத்தின் 62-வது அத்தியாயத்தில் ராஜதர்மச் சிறப்பு ஆரம்பமாகிறது. அதற்குமேல் 100-வது அத்தியாயம் வரையில் உள்ள விஷயங் களுட் பல, அரசியல் துறையில் செல்வோர் சகலரும் கற்றுத் தெளியவேண்டியவை. பிரம்ம ஞானியான உசத்தியர் மாந்தாதா மன்னனுக்கு ரைத்த தர்மங்களையே தாம் எடுத்துச் சொல்வ தாகக் கூறியுள்ளார் வீடுமர். அந்த உபதேசங் களிலிருந்து சில மணிகளை அத்தியாய இலக்கத் துடன் கீழே தருகின்றோம்.

**1** மனத்தினுலாவது அரசனுக்குக் கேடு விளை விக்கும் மனிதன் இம்மையில் துன்பப்படுவதுடன் மறுமையில் நரகத்தையடைவான். அரசனை மனித உருவத்திலுள்ள தெய்வமாகவே கருதவேண்டும். காலத்துக்குத் தக்கபடி அவன் அக்கினி, ஆதித்தன், மிருத்யு குபேரன், யமன், ஆகிய ஐந்து தேவரு பியாவன். அதர்மத்தில் செல்லும் மக்களைக் கடுமையாகத் தண்டித்து, தர்மாத்மாக்களைக் காக்கும்போது அரசன் யமனுகின்றான். (67)

**2** ஓ, யுதிஷ்டிர! கிரேதாயுகத்தில் அதர்மமின்றித் தர்மமொன்றே நிலவும்; திரேதா யுகத்தில் தர்மம் மூன்று பாகமாகவும் அதர்மம் ஒருபாகமாகவும் இருக்கும்; துவாபரத்தில் இரண்டும் சரிசமனுகக் கலந்து நிற்கும்; அரசன் தண்ட நீதியை முற்றி லும் விலக்கிவிட்டு கெட்ட வழியில் பிரஜைக ளைத் துன்புறுத்தும்போது கலியுகம் நடைபெறும். ஆகையால் நீதிப்படி தர்மமாகப் பிரஜைகளைப் பரிபாலனஞ் செய். (69)

3 ஓ, குருநந்தன! ஜாக்கிரதையுள்ளவனாக, தர்மமான வியவஹாரத்துடன் பிரஜைகளைப் பரிபாலிப்பாயாயின், மனக்கவலையற்ற வாழ்வைப் பெறுவாய். முடிவில் சுவர்க்கத்தையும் அடைவாய். பிரஜைகளைப் பயத்தினின்றும் பாதுகாவாத பாவத்தைச் செய்யும் அரசன் ஆயிரம் வருஷங்கள் நரகத்தை அனுபவிப்பான். (71)

4 பிரம்மதேவர் பிராணிகளின் பெருமைக்காகத் தர்மத்தைப் படைத்தார். ஆகையால் பிரஜைகளின் க்ஷேமத்திற்காக நீ தர்மத்தை விருத்தி செய்யவேண்டும். அகங்காரமென்பது லக்ஷ்மிக்கு அதர்மத்தினிடமுண்டான புத்திரனென்று சுருதி கூறுகிறது. இந்த அகங்காரத்தினால் பல தேவர்களும் அசுரர்களும், அரசர்களும், பல ராஜரிஷிகளும்கூட நாசமடைந்துள்ளார்கள். ஆகையால் அகங்காரத்துடன் கூடிய அதர்மத்தை விலக்கிநட. (90)

5 துர்ப்பலர்களின் அருகிற் செல்லாதே. அப்பா! பலத்தைவிடப் பலமில்லாமை மிகப்பெரிது. அது அதிக பலமுள்ள பலம். அவமதிக்கப்பட்டவனும், அடிக்கப்பட்டவனும், துன்பமடைந்தவனும் ரக்ஷகனை அடையாமற்போனால் அத்தேசத்தில் தெய்வத்தால் செய்யப்படும் தண்டம் அரசனைக் கொல்லும். எந்தத் தேசத்தில் பாபிகள் வெளிப்படையாகச் சஞ்சரிக்கிறார்களோ, அந்தத் தேசத்து அரச சபையைக் கலியடைகிறது. (91)

6 துஷ்டர்களும் மிக்க பாபிகளுமான மந்திரிகளுள்ளவனும், தர்மத்தைக் கெடுப்பவனுமான

அரசன் சீக்கிரமாகவே பரிவாரத்துடன் நாச மடைவான். அவனிடமிருந்து அறம், பொருள் ஆகிய இரண்டும் விரைந்து விலகிவிடும். 92.

**7** அறிவில்லாதவனும் கெட்ட நடத்தையுள்ள வனும், மறைந்திருந்து விரோதஞ் சாதிப்பவனும், பல கல்வி கல்லாதவனும், பெருந்தன்மை யற்ற வனுமான மனிதனிடம் பொறுப்பான காரியத் தை ஒப்படைக்கும் அரசனைவிட்டு லக்ஷ்மி விலகி விடுவாள். (93)

**8** நிலையற்ற நடையுள்ளவர்களின் ஐசுவரியம் போல நிலையற்ற சுபாவமுள்ள மன்னவர்களின் பதவியும் நிலையற்றதாகும். சாந்தனுயிருப்பவனை அவமதிப்பார்கள்; கடுமையாயிருப்பவனிடம் உலகம் நடுக்கமடையும். நீ கொடியவனுகவுமி ராதே; மிருதுவாகவுமிராதே. இரு குணத்தையும் தேவைக்குப் பொருந்தப் பேணி நட. (103)

---

லண்டன் B. B. C. யில் செய்த தமிழ்ப் பிரசங்கத்தைத் தழுவி வரையப்பட்டது.

# தமிழகத்துத் தவநூலுக்கோர் தனிப்பெரும் ஆராய்ச்சியுரை

'திருவாசகத்துக்குருகாதார் வேறொரு வாசகத்துக்கும் உருகார்' என்பது ஆன்றோர் வாக்கு. அது முற்றிலும் உண்மை. அருள் மணங்கமழ்ந்து, பேரின்பத்தேன் பிலிற்றும் வாடா நாண்மலரனைய தமிழ்ப் பக்திப்பாடல்களுள் தலைசிறந்து விளங்குவது திருவாசகம். காலத்தால் தேவார திவ்விய பிரபந்தங்கட்குப் பிந்தியது; அடியார்களாகிய உள்ளங்களாகிய வண்டுகளை ஈர்த்து அருள்வசப் படுத்தும் தன்மையால் முதன்மை பெற்றது.

வேதம், உபநிடதம், ஆகமம் ஆகியவற்றின் சாரம் முழுவதையும் தன்னுள் அடக்கிய ஞானப் பனுவலாய், சைவசித்தாந்த சாஸ்திர நுட்பங்களின் கருவூலமாய் விளங்கும் திருவாசகமானது, பிறவிப் பெருநோய் தீர்க்கும் பெருமருந்தென அடியார்களாலும் அறிஞர்களாலும் கொண்டாடப் படுகின்றது. இத் தவநூலைத் தமிழகத்திற்கு அருளுமுன், அதன் ஆசிரியரான வாதவூரடிகள், ஆத்மீக வாழ்வில் எவ்வித உயர்வற உயர்ந்த நிலையை அடைந்திருந்தாரென்பதை யாம் முதலில் சிறிது ஆராய வேண்டும்.

அரிமர்த்தன பாண்டியனால் தம் திருவடிகளில் சமர்ப்பிக்கப்பட்ட புவியரசைத் துறந்து, சிவராஜ்யத்தை நாடிச்சென்ற வாதவூரெங்கோன்,

> "வழுதியால் விடுக்கப்பட்ட வாதவூர் முனிகடம்மைப்
> பழுதிலாப் பாடல் கொள்வார் பதிபல பணிந்து"

போயினர் எனவும்,

"ஒன்றரிய புலன் கரணவழி நீந்தி
மெய்யன்பி னுருவமானர்"

எனவும்,

"நிறைசிவமாம் விதைவிதைத்துப் பசுபோதங்
களைந்தரு ணன்னீர் கால்பாய,
அறிவுருவாய் விளைந்த தனிப்பரானந்த
வமுதருந் தாதருந்தி நின்ருர்"

எனவும் வர்ணிக்கிருர் பரஞ்சோதி முனிவர்.

இவ்விதம் மெய்யன்பினுருவாயும், அறிவாற் சிவனேயாயும் சிறப்புற்ற பெரியாரின் உன்னத தடத்தில் மலர்ந்த அரிய அருள் மலர்களுக்குப் பொருள் விரித்தல் முறையா? அப்படிச் செய்ய வல்லவர் எவராவது உளரா? என்ற கேள்விகள் நெடுங்காலமாக எழுந்தவைகள். பொருள் விளக்குமாறு ஆசிரியரிடம் கேட்ட அடியார்களுக்கு அம்பலக்கூத்தரைச் சுட்டிக்காட்டி, 'அவரே பொருள்' என்று கூறி சிவசாயுச்சியமடைந்த அற்புத நிகழ்ச்சியை எடுத்துக்காட்டி, திருவாசகத்திற்கு உரை எழுதுதல் தவறு என்ற அபிப்பிராயங்கூட சைவ மக்கள் மனதில் பதிந்து விட்டதெனலாம். இக் கொள்கை தப்பானதென்று கூறிவிட முடியாது. சாஸ்திர நூல்களில் சொல்லுக்குள் மறைந்து கிடக்கும் பொருளே அந்நூலின் உயிர். தோத்திர நூல்கள் அப்படியல்ல; அவற்றின் வடிவமே உயிர். ஆகையால் உரைநடையில் மாற்றி எழுதப்பட்ட பாடல் உயிரிழந்த பிராணியைப்போல் கிடக்குமென்பதை எவரும் மறுக்க முடியாது. பதவுரையும், விளக்கவுரையும், இலக்கணக் குறிப்புஞ் சேர்த்துவிட்டதால், அண்மையில் ராஜாஜி அழகாய் விளக்கியதுபோல், அது சவச்சோதனை ஆலய

மாகத்தான் பயன்படும். ''பிரேத சோதனையில் அறிவு வளர்ச்சிக்கு மிக்க பயன் உண்டு. ஆனால் அழகில்லை; ஒளியில்லை; உயிரில்லை; பாடலின் தனிப் பயன் இல்லை'' என்கிறார் ராஜாஜி.

பழைய காலக் கல்வி முறை வேறு, இன்றுள்ள முறை வேறு. அக் காலத்தில் திருவாசகம் போன்ற அருள் நூல்களைப் படிப்பித்த ஆசிரியர்கள் பொருளுணர்ந்தே பாடஞ் சொல்லிக் கொடுத்தனர். அவர்களிடம் பாடம் பயின்ற மாணவர்களும் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்னும் மூன்றினையும் பேணினர். ஆளுக்கொரு ஏடோ புத்தகமோ இருக்கவில்லை. ஞாபக சக்தியின் உதவி கொண்டே பாடங் கேட்டனர். அதே கருவியின் மூலமே கருத்தையும் ஆசாரியனிடம் கேட்டுத் தெளிந்து கொண்டனர். ஆகையால் உரைநூல்களின் தேவையே தோன்றவில்லை. இன்றைய நிலையோ முற்றிலும் மாறினது. ஆசிரியர்களுள் பெரும்பாலானவர்களே அகராதியும் கையுமாக வாழ்நாள் கழிக்கின்றனர். இந்த இன்றைய நிலையில், தமிழ்மொழியும் சைவமும் வேண்டி நிற்கும் அருந்தொண்டையே பண்டித மணி க. சு. நவநீத கிருஷ்ண பாரதியார் அவர்கள் செய்து முடித்துள்ளார். திருவருள் முன்னின்றே இப்பெரும்பணி, பெருஞ் செலவில் நிறைவேறியுள்ளதெனலாம்.

பண்டிதச் செருக்குக்கும் பக்திப் பெருக்குக்கும் வெகுதூரம். சரஸ்வதியும் லட்சுமியும்கூட ஒரே மூளையில் எழுந்தருள இசைந்து விடலாம். ஆனால் பாண்டித்தியமும் பக்தியும் ஒரே மூளையில் கூடிக் குடித்தனம் நடத்த இணங்குவது மிகவும் அருமை. இந்த அருமையான இணைப்பில் தோன்றியதே திருவாசகம் ஆராய்ச்சிப் பேருரை. பண்

டிதமணி அவர்களின் பேச்சில் கேட்டின்புற்ற உணர்ச்சிப் பெருக்கை அவரது உரைநடையிலும் நாம் காணலாம். அவரது பக்தி உணர்ச்சி உயர்ந்து சென்றமையும் தன்மைக்குப் பொருந்த அவர் தரும் உரையும் புத்தம் புதிய கருத்துக்களுடன் ஒளி வீசுகின்றது.

ஆயிரத்து இருநூற்றிருபத்திரண்டு பக்கங்கள் கொண்ட இந்த அரிய பெரிய நூலைக் கையிலெடுத்ததும், 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்' என்னும் மணிவாசகமும், 'சொற்பாவும் பொருள் தெரிந்து தூய்மை நோக்கித் தூங்காதார் மனத்திருளை வாங்காதானை' என்னும் அப்பர் திருவாக்கும் பளிச்சென்று நமது ஞாபகத்திற்கு வருகின்றன. நூலைத் திறந்து, உரையுள் எடுத்தாண்ட எழுபத்தொன்றுக்கு மேற்பட்ட நூல்களின் விபரங்களைப் பார்த்ததும், உரையாசிரியரின் வடமொழித் தென்மொழிப் புலமையும், பழைய சங்க இலக்கியங்களில் அவருக்குள்ள பரிச்சயமும், சமயத்துறையில் அவர் அனுட்டிக்கும் சமரச நெறியும் நமது கவனத்தை ஈர்க்கின்றன.

இந்தக் காலத்தில் ஓர் புத்தகத்தையோ, திங்கள் வெளியீட்டையோ, பத்திரிகையையோ வாங்குபவர்கள் முதலில் தேடிப் பார்ப்பது அவற்றிலுள்ள படங்களையேயாம். இக் குழந்தை மனப்பான்மையுடன், இந்த நூலின் பக்கங்களைப் புரட்டும்போது, எதிர்பாராத முறையில் நம்மை வசீகரிக்கும் பல படங்களைக் காணலாம். நாம் இங்கு குறிப்பிடுவது உரை ஆசிரியர் வரைந்துள்ள பதிக முன்னுரைகளையாகும். குழந்தைகளுக்குப் புத்தகங்களில் படம் பார்க்கும் ஆசை எப்படி அடக்க முடியாததோ, அதேபோல் வாசகர்களும் நூலை

ஒழுங்காய்ப் படிக்க ஆரம்பிக்குமுன் இந்த முன்னுரைகளையே முதலில் படிக்க விரும்புவார்களென்பது நிச்சயம். அவ்வளவு அருமையான புதுமுறையில், பண்டிதர்க்கும் பக்தர்க்கும் ஒருங்கே அரும் விருந்தாகும் விதத்தில் அமைந்துள்ளன இப்பதிக முன்னுரைகள். இவற்றிற்கெல்லாம் முன்னுரையாகக் காட்சியளிப்பது 'திருவாசகப் பேறு'' என்னுந் தலைப்பின் கீழ்,

> **''தொல்லை இரும்பிறவி சூழுந்தளை நீக்கி**
> **அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை**
> **மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்**
> **திருவாசக மென்னும் தேன்''**

என்னும் வெண்பாவிற்கு பண்டிதமணி தந்துள்ள விளக்கவுரை: திருவாசகத்திற்கு இதற்கு முன் உரை எழுதிய எவரும் கண்டிராத புதுமுறையிது. ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம், ஸ்ரீமத் பாகவதம் முதலாய வடமொழி நூல்களில் வரும் பல சுருதியைத் தழுவியதெனலாம்.

பண்டிதமணி அவர்கள் திருவாசகத்தை ஓர் பக்திப் பாடல் நூலாக மட்டுமன்றித் தமிழ்ப் பேரிலக்கியங்களில் முதன்மை பெறுதற்குரிய நூலாகவும் பேணியே உரை எழுதியுள்ளார். அதுவும் திருக்கோவையாரும் ஒரு திருநூலின் இரு பேருறுப்புகளென்பதே அவரது உள்ளக்கிடக்கை. ஆகையால், தொல்காப்பியத்தை அதற்கு இலக்கணமாகக் கொண்டு மாணிக்கவாசகர் அன்பின் ஐந்திணை நெறிக்குத் தக்கவர் என்பதையும், திருவாசகம் அதற்குநிமித்தம்என்பதையும்தெளிவாகஅவர்விளக்கியுள்ளார். சிவபுராணம் நூலின் தற்சிறப்புப்பாயிரமாகவும், கீர்த்தித்திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித்திருவகவல் மூன்றும் அதின் வரலாருகவும்

உரைநூலில் ஒளிவீசுகின்றன. ஏனைய பாடல்கள் மணிவாசகர் தம்மைத் தலைமகளாகப் பாவனை பண்ணிய நிலையில், இறைவனுகிய தலைமகன் தமக்குக் காட்டிய அருளையும், அதனுல் உண்டாய குழைவையும், தலைவன் பிரிவால் நேர்ந்த துயரையும், பின்னரும் அவனைக் கூடவேண்டுமென்ற வேட்கை மிகுதியையும், வேறுஞ் சில காதற் பாவனைகளையும் வெளிப்படுத்துவனவாகும்.

பதிக முன்னுரைகளில் தரப்பட்டுள்ள, பொருட்பிரிவு, உட்பிரிவு முதலாய கருத்துக்கள் அடங்கிய அட்டவணைகள் ஆழ்ந்து சிந்தித்துக் கற்கவேண்டியவை. உதாரணமாக, பிரார்த்தனைப் பத்தில் பதினெரு பாடல்கள் வந்துள்ள காரணம் எதுவாயிருக்கலாமென்பது குறித்தும், பாடல்கள் அந்தாதித் தொடையமையக் கூறியிருப்பது பற்றியும் உரையாசிரியர் தந்துள்ளவிளக்கம் உன்னஉன்ன களிபேருவகை தருகின்றது. அவர் தமது அட்டவணையில் 'கூடிக்கூடிஉன் அடியார் குளிப்பார், சிரிப்பார்' எனவரும் பதினேராம் திருப்பாட்டை முதலாவதாக அமைத்ததற்குக் கூறியுள்ள காரணம் மறுக்கமுடியா ஒன்ருகும். தமது கருத்துக்கள் ஆன்ேறோர் கருத்துக்களுடன் முரண்படும் இடங்களிலெல்லாம், அவர் தமது சொந்த அபிப்பிராயத்தையே வாசகர் உள்ளத்தில் வற்புறுத்தாமல், ஆன்ேறோர் கருத்தையும்அருகில் சேர்த்து, இரண்டையும் சீர் தூக்கி நன்கு ஆராய்ந்து சரி எது என்பதைக் கண்டு கொள்ளும் பொறுப்பை வாசகர்களுக்கே விட்டுள்ள உரையாசிரியரின் பெருந்தன்மை பாராட்டுதற்குரியதாகும். திருவாசகம் முழுவதையும் பல்லாண்டுகளாக ஒவ்வொரு சொல்லாய், ஒவ்வொரு எழுத்தாய் கற்றுத்தெளிந்த பக்தி உள்ளத்திலிருந்து இவ்வித பணிவும் அடக்கமுமல்லாமல் வேறு என்ன குணங்கள்தான் வெளிவர முடியும்?

திருவாசகம் ஆராய்ச்சிப் பேருரையென அழைக்கப்படும் இப் பரமானந்தப் பழங்கடலுள் ஆழ்ந்துமூழ்கி, அங்கு மறைந்து கிடக்கும் ஆணி முத்துக்கள் சிலவற்றைத் தெரிந்தெடுத்து வாசகர் கட்கு அளிக்கலாமென்ற ஆர்வத்துடன் இக் கட்டுரையை ஆரம்பித்தோம். ஆனால், எந்த முத்துச் சிப்பியை எடுப்பது, எதை விடுவது என்று பிரித்தறிய முடியாது மயங்கு நிலை ஏற்பட்டு விட்டபடியால், அவைகள் பரந்து கிடக்கும் சில முக்கிய இடங்களை மாத்திரம் இங்கு குறிப்பிடுகின்றோம். அதற்கு மிஞ்சிய தொண்டு எமது அறிவுக்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட ஒன்றாகும்.

சிவபுராணம், கீர்த்தித் திருவகவல் இரண்டிற்கும் உரை விரிவாய் தரப்பட்டுள்ளது. பிந்தியதில், எம்பெருமானின் திருவிளையாடல்கள், சிவத்தல மகிமைகள், ஆகம விளக்கம், அந்தணர் இயல்பு முதலாயின மிகவும் விசேடித்த முறையில் விளக்கம் பெற்றுள்ளன. 'ஆரியனாய் அமர்ந்தருளியும்' என்ற சொற்றொடருக்கு ஆசானாக அமர்ந்தருளி பக்குவரைப் பயில்வித்தனர் என உரைகூறி, அந்தணனாகி வந்து அடிகளுக்கு தமிழ் ஆகமத்தை உணர்த்திய உண்மையையும் நினைவூட்டுவதோடு நின்றுவிடாது, ''ஆரிய திராவிட வேறுபாட்டினை ஈண்டுப் புகுத்தி மலையற்க. ஆரியமும் செந்தமிழும் பொதுவும் சிறப்புமாய இருபெரு மூல மொழிகளாகும். தெய்வ மொழியென வடமொழியைக் கூறுவது அப் பொதுமை பற்றியேயாம். ஆதலின் அஃது எல்லார்க்குமுரிய மொழி என்பது சொல்லாமலே அமையும்.'' என்ற அறிவுரையுஞ் சேர்த்துள்ளார்.

திருவெம்பாவை, திருவம்மானை திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருச்சாழல்,

திருப்பூவல்லி முதலானவற்றின் உரை சைவமக ளிர் சகலரும் கருத்தூன்றிக் கற்க வேண்டியவை. பெண்பாலாரின் விளையாட்டாகச் செய்யும் வழி பாட்டைக் குறிக்கும் இப்பகுதிகள், அன்பின் ஐந் திணைநெறிமூலம், மனமாசகன்று பேரின்ப நிலையை நாம் அடைவதற்கு வழிகாட்டுவன. திருப்படை யாட்சி இறுதிப்பாட்டுக்குத் தந்துள்ள விளக்கத்தை ஓர் முக்கிய குறிப்புடன் முடித்துள்ளார் உரை ஆசி ரியர். அக்குறிப்பு திருவாசகத்தின் திரண்ட பொ ருள் முழுவதையுமே பற்றி நிற்பதால், அதனை வாசகர்களும் உடனே படித்து இன்புறுமாறு, கீழே தருகின்றோம்:-

''இறைவனாற் காதல் நெறிக்காகப் படைக்கப் பட்டது இவ்வுலகம். ஆதலால் கற்புநெறி புகுந்து காமத்தை ஒழுங்கு செய்யாது, அக்காமத்தை விதி விலக்குகளால் தடைப்படுத்தின் மனப்பித்தும் உடற் பிணியும் சொற்பிதற்றுதலும் உடையாராகி, இம்மை மறுமை யிரண்டும் இழப்பர் ஆதலின் கற்புக்காத லியோடு காதன்மை பூண்டொழுகி உலகத்தொண்டு பேணிவர, இறைவன் திருவருள் அறிவுறுத்த இக் காதலெல்லாந் திரண்டு ஓர் உருவாகி அவனைப்பற்றி அப்பற்றே பற்றுக ஒழிந்த பிறபற்றெல்லாம் நீங்கி அவனே காதலனாகவும் தாம் காதலியாகவும் பேரின் பம் நுகர்ந்து வருவதே திருவாசகத்தின் பொருளா கும். கருவிலே திருவுடையார்க்காயின் இயல்பாகிய துறவும் பொருந்துமென்க''.

மாணிக்கவாசகர் திருவம்மானையில் இறைவ னுக்கு வைத்துப் பாடிய உவமைகள் அத்தனையை யும் இராமலிங்க சுவாமிகள் திருவாசகத்திற்குச் சூட்டியுள்ளார். ''ஊனையும் நின்றுருக்கி என் வினையை ஓட்டுகந்து, தேனையும் பாலையுங் கன்ன லையும் ஒத்தினிய'' என்றும், ''ஊனாய் உயிராய்

உணர்வாய் என்னுட் கலந்த தேனாய் அமுதமு மாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்'' என்றும் வரு வன மணிவாசகர் திருவாக்குகள். வான் கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை, நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே, தேன்கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்தென், ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் உவப்ப துவே'' என்று பாடினார் அருட் பிரகாச வள்ளலார். அவர் திருஞானசம்பந்தரைத் தமது குருவாகக் கொண்ட போதிலும், திருவாசகத்தையே தமது நித்திய சாதனை நூலாகக் கொண்டு அதிலேயே திளைத்தவர். அவர் போல் நாமும் திருவாசகத்தை எண்ணுந்தோறும் ''காமமிகு காதலன்றன் கலவி தனைக் கருதுகின்ற ஏமமுறு கற்புடையாளின் பினு மின்பெய்த' வேண்டின், பண்டிதமணி நவநீத கிருஷ்ண பாரதியார் வரைந்துள்ள உதவியுடன் அந்தப் பாடல்களைத் தினந்தோறும் ஓதல் வேண் டும்.

இந்த ஆராய்ச்சியுரை ஆரம்பிக்கப்பட்டது ஆறுண்டுகளுக்கு முன்னரென முகவுரை கூறுகின் றது. நூலைக் கருத்தூன்றிக் கற்பவர் எவராவது இக்கூற்றை நம்ப முடியாது. எழுதுகோலும் காகி தமும் எடுத்தாளப்பட்ட காலத்தைப் பொறுத்த ளவில் மாத்திரம் இது உண்மையாயிருக்கலாம். வள்ளல் சேர். பொன். இராமநாதன் அவர்களின் அழைப்புக்கிணங்கி, ஈழத்தில் தமிழ்த்தொண்டும் சைவப் பணியும் செய்வதற்கு வருமுன், பாரதி யார் திருவாவடுதுறை ஆதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ. அம் பலவாண தேசிக சுவாமிகளோடு திருமுறை ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவர். அப்போது அவ ருக்கு வயசு இருபத்தாறு. அக்காலத்திலிருந்தே இந்தப் பேருரை அவரது உள்ளத்தில் முகிழ்த்து, அடுத்த முப்பத்து நான்கு வருஷ சமய சாஸ்திர

ஆராய்ச்சியையும் சாதனையையுந் துணைகொண்டு மலர்ந்துள்ளதெனக் கூறுதலே பொருத்தமாகும். அவருக்கு இப்போது அறுபத்தாறுவது வயசு நடக்கின்றது. அவர் இன்னும் பல ஆண்டுகள் பூரண உடல்நலத்துடனும் மதிநுட்பத்துடனும் வாழ்ந்து, தமிழுக்கும் சைவத்திற்கும் இதுபோன்ற அரிய தொண்டு புரிய எல்லாம் வல்ல தில்லை அப்பன் நல்லருள் பாலிப்பானாக!

"செத்திடமும் பிறந்திடமும் இனிச்சாவா திருந்திடமும்
அத்தனையும் அறியாதார் அறியுமறிவு எவ்வறிவோ
ஒத்தநிலம் ஒத்தபொருள் ஒருபொருளாம் பெரும்பயனை
அத்தன் எனக்கு அருளியவா(று) ஆர்பெறுவார் அச்சோவே"

*(13.6.1954 ஞாயிற்றுக்கிழமை வீரகேசரியிலிருந்து எடுக்கப்பட்டது.*

# பகவத்கீதையின் ஒப்பற்ற தன்மை

உலகில் தத்துவ விற்பன்னர்களாலும், விஞ்ஞானிகளாலும், யோகிகளாலும் பல மொழிகளில் எழுதப்பட்ட நூல்களுக்குக் கணக்கேயில்லை. தொன்று தொட்டு வடமொழியிலும் தமிழிலும் தோன்றிய நூல்களே அளப்பில. அவற்றுள் தாம் தோன்றிய காலம் எவ்வளவு முற்பட்டதாயினும் அதை விட்டு விலகி தம்மைக் கற்போரின் காலத்திற்கு வந்து அவர்கட்குப் புத்தம் புதிய கருத்துக்களை விளக்கி உய்யச் செய்யும் நீதி நூல்களுஞ் சமய சாஸ்திரங்களுமே உண்மையில் நல்வாழ்விற்கு அரிய வழிகாட்டிகளாகும். இவ்வித அற நூல்களுள் மிகச் சிலவே உலக மக்கள் யாவர்க்கும் எக்காலத்தும் எந்நிலையிலும் பயன்படும் சிறப்புப் பொருந்தியவை. இந்த முறையில் தலைசிறந்து விளங்குவன இரண்டு. ஒன்று தமிழ்த்தாய் அளித்த திருக்குறள். மற்றது ஆரியத் தந்தையருளிய பகவத்கீதை. பாரதநாட்டின் பழம் பெருமை அன்று போல் இன்றும் உலகளாவி நிற்பதற்கு முக்கிய காரணம் இவ்விரு நூல்களேயெனில் புகழ்ச்சியுரையாகாது. ஈரடிகளால் இயற்றப்பட்ட இவ்விரு அற்புத நூல்களும் மனிதனை வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வ நிலையை அடையச்செய்யும் பெற்றி வாய்ந்தவை.

தமிழ் மொழியில் தோன்றிய நூல்களெல்லாவற்றுள்ளும் சிறந்தவை எவையென்று தீர்மானிக்க வெவ்வேறு காலத்தில் ஆராய்ச்சி செய்த அறிஞர்கள் திருக்குறளை ஏழில் தலையானதாகவும், ஆறில் முதன்மையானதாகவும், நான்கனுள் சிறப்புடையதாகவும், மூன்றில் நடுநாயகமானதெனவும் இரண்

டில் ஒன்றாகவும் போற்றியுள்ளனர். இதேமுறையில் உலகின் எல்லா மொழிகளிலும் தோன்றிய நூல்களுட் சிறந்தவை எவை என்று நவீன அறிஞர் உலகு ஆராய்ச்சி செய்யுமாயின், கீதையையும் குறளையும் ஆறினுள் இரண்டாகத் தொடங்கி, இரண்டில் ஒன்றென்ற முடிவுக்கே வருமெனத் தயங்காமற் கூறலாம். கீதைக்கு நிகர் குறளே, குறளுக்கு நிகர் கீதையே.

எவ்விதத்தில் குறளானது தமிழர் நாகரிகத்தின் உரைகல்லாகி, அவர்களின் அகப்புற வாழ்வின் விளக்கமாய் இம்மையிலேயே மறுமைப் பயனைத் தந்துதவும் இன்ப ஊற்றாயமைந்து தமிழின் முதுமைக்கும் இளமைக்கும் ஒப்பற்ற சான்றாய் விளங்குகின்றதோ, அதேவிதத்தில் கீதையும் வேத-உபநிடதங்களின் சாரமாய், மண்ணுலக வாழ்வுடன் விண்ணுலக வாழ்வைப் பிணைக்கும் பெற்றிய தாய் உள்ளது. உலகின் கால நிலைக்கும் மாந்தரின் சூழலுக்கும் மனப் பக்குவத்திற்கும் பொருந்தத் தோன்றிய பல்வேறு சமயங்கள் போதிக்கும் பக்தி, ஞான, யோக, சேவை மார்க்கங்களின் தொகுப்பாயும், அவைகட்கு அருளூற்றாயும் அமைந்துள்ள கீதையானது இந்து மதத்தின் பழமைக்கும் புதுமைக்கும் ஓர் ஒப்பற்ற உதாரணமாகவும் விளங்குகின்றது. இரண்டாவது கொடிய உலகப் போரின் இறுதியில் அணுக்குண்டு செய்யக்கூடிய நாசவேலையை அனுபவத்தில் கண்டு அஞ்சி நடுங்கும் உலகில், அமைதியை நிறுவச் செய்யும் ஆற்றலுள்ளது எதுவாயினும் உண்டோவென ஆராய்ந்த வெவ்வேறு நாட்டு அறிஞர்கள் பகவத்கீதையையே தெரிந்துள்ளனர். சென்ற ஐந்து ஆண்டினுள், அமெரிக்கா, ஐரோப்பா, இந்தியா மூன்று தேசங்களிலுமிருந்து உலக மொழியாகிய ஆங்கிலத்தில் மாத்திரம் ஏறக்குறைய ஐம்பது விரிவுரைகள்

கீதைக்கு வரையப்பட்டிருக்கும் உண்மையினால் அதன் தனிப் பெருஞ் சிறப்பை உலகம் ஏற்றுக் கொண்டு விட்டதெனலாம். இவ்வித சிறப்பை குறள் பெறாமைக்குக் காரணம், வள்ளுவரின் வாழ்க்கையிலிருந்தே தோன்றிய அப் பெரும் நூல் அவருக்குப் பின் காந்தியடிகளின் தோற்றம்வரைக் கும் வாழ்க்கை நூலாக விளங்காது கற்றபடி நிற் கப் பழகாத வித்துவான்களின் மூளைக்கு மாத்தி ரம் பிரயோசனப்படுவதாய், ஆதர்ச நூலாக மாறி விட்டதேயாம். கீதையைப் பொறுத்த மட்டில், அதனை உண்மையில் வாழ்க்கை நூலாக வாழ்வால் விளக்கிய மகான்கள் சரித்திர காலத்தில் சங்கரர் காலந் தொட்டு காந்தி சகாப்தம் வரையில், தவ றாது தோன்றியேயுள்ளனர். பத்தொன்பதாவது நூற்றாண்டில் இராமகிருஷ்ணர், விவேகாநந்தர், இராமதீர்த்தர், வாழ்ந்தனர். இருபதாம் நூற் றாண்டில் காந்தி, ரமணர், அரவிந்தர், இராமதா ஸர், சிவானந்தர் போன்ற மகான்கள் தோன்றி கீதையின் மகத்துவத்தை விளக்கியுள்ளார்கள்.

கீதையை ஏனைய சமய சாஸ்திரங்களிலிருந்து பிரித்து எடுத்து, அதற்குத் தனிப் பெருமையளித்து நிற்பது அதில் அடங்கியுள்ள சர்வ சமரஸமாகும். நான்காம் அத்தியாயம் பதினோராஞ் சுலோகத்தில், ''யாவர் என்னை எங்ஙனம் வேண்டுகின்றார்களோ, அவர்களை நான் அங்ஙனமேசார்கிறேன். பார்த்தா! மனிதர்கள் எங்கிலும் என் வழியையே பின்பற்று கிறார்கள்'' என்று பகவான் கூறியிருப்பதை உற்று நோக்குக. வைஷ்ணவ நூல்களிலும், சைவசித் தாந்த சாஸ்திரங்களிலும், தோத்திரங்களிலும் இன்று யாம் காணக் கிடக்கும் சமரசக் கருத்துக் கள் அனைத்தும் மேலே கூறப்பட்ட கீதையின் சுலோ கத்தைப் பின்பற்றியவையேயாம்.

கீதையின் பெருமையை நன்கு உணருவதற்கு உபநிடதங்களின் அளப்பருஞ் சிறப்பை முதலில் அறிய வேண்டும். அர்ச்சுனன் என்னும் பசுக்கன்றின் பசி தீர்க்க கிருஷ்ணன் என்னும் ஆ மேய்ப்போன் உபநிடதங்களென்ற பசுவிலிருந்து கறந்தளித்த பாலே கீதையென்ற அறிஞர் உரை, இக்கருத்தை அடக்கியே உதித்ததாகும். வேறு சில அறிஞர்களின் வாக்கின்படி உபநிடதங்கள் என்ற கற்பக விருட்சத்தில் மலர்ந்த மலர் கீதை; அந்த மலரில் கனிந்த பழமே முப்பத்து மூன்று கோடி இந்துக்களின் இதயத்தில் மிளிரும் பக்தியாகும். கர்மம், யோகம், பக்தி, ஞானம் ஆகிய நான்கும் இந்த அற்புத நூலில் இடம் பெற்றுள்ளன. மாந்தர் தங்கள் குணநலத்திற்குப் பொருந்தவும் பக்குவத்திற்கும் சூழலுக்கும் ஏற்கவும் இந்த நான்கினுள் ஒரு நெறியை முக்கியமாகப் பேணலாம். ஆனால், அந்த நெறிதான் கீதையின் முழு உபதேசமென்று கூறத் துணிதல், யானை கண்ட குருடர் கதை போலிருக்கும். ஏனெனில் இந்த வெவ்வேறு மார்க்கங்கள் பிரிக்க முடியாத முறையில் கீதையில் பிணைக்கப்பட்டுள்ளன. இந்த உண்மைக்கு ஓர் அகண்ட விரிவுரை போலவும், கீதை விளக்கும் சரணாகதிக்கு ஓர் ஒப்பற்ற எடுத்துக்காட்டாகவும் விளங்கியவரே பகவான் இராமகிருஷ்ணர். இம்மாசம் அவரது ஜயந்தி விழாவை முன்னிட்டு இந்த ஆத்மஜோதிச் சுடர் அவரது திருமுகத்தின் ஒளியோடு வெளிவருகின்றது.

(ஆத்மஜோதியிலிருந்து தெரியப்பட்டது)

# அன்பும் அறமும்

அன்பு பல கிளைகளையும் விழுதுகளையும் கொண்ட ஆலமரம் போன்றது. ஆசை, வாஞ்சை, பாசம், நேசம், தயை, தாட்சண்ணியம், புண்ணியம், விருப்பம், இரக்கம், காதல், கருணை, அஹிம்சை, அருள், பக்தியாகிய பதங்களெல்லாம் அன்பின் வெவ்வேறு நிலைகளை விளக்கி நிற்கின்றன. அவை ஏனைய பல பதங்களைப் போல் ஒரே கருத்தைத் தரும் பல சொற்களல்ல. உலக ஆசை, சகோதர வாஞ்சை, புத்திரபாசம், நண்பர் நேசம், உறவினர் விருப்பம், தாயின் தயை, சீவகாருண்யம், கன்னியின் காதல், ஈசன் அருள், கடவுள் பக்தி என்பவை நித்திய வழக்கில் காணப்படும் சொற்றொடர்கள். இவற்றிலிருந்து உடல் - உயிர், உலகு-இறை, தாய்-சேய், காதலன்-காதலி கடவுள்-அடியார், முதலாய எல்லா உறவுகளுக்கும் அன்பே உள்ளமாயிருப்பதைக் காண்கின்றோம்.

உலகில் அன்பு இல்லாத இடமே கிடையாது. அஃதில்லையேல் நாம் வாழும் இந்த உலகம் ஒரு கணப் பொழுதுதானும் நிலை பெற்றிராது. நம்மைச் சுற்றிலுமுள்ள இயற்கை முழுவதும் அன்பையே பேசி நமக்குத் தினந்தினம் அன்பு மார்க்கத்தையே விளக்கி நிற்கின்றது. காலையில் புன்னகையுடன் தென்றலுக்கு மண விருந்தும் வண்டுக்குத் தேன் விருந்தும் அளிக்கும் நாண்மலர்களும், இளங் காற்றில் அசைந்தாடி நமது கண்களுக்குக் குளிர்ச்சி தரும் பசும் பயிர்களும், சூரியன் ஒளிவர இருள் நீங்கியதும் தங்கள் கூடுகளில் விழித்தெழுந்து வெளிவரும் புட்களின் சிறகடிப்பும், பாடல்களும், உயிர்களையும், பயிர்களையும் தழைக்கச் செய்தவண்ணம் செல்லும் நதிகளின் நீரோட்

டமும், சமுத்திரத்தின் அலைகளும் சதா அன்பையே நமக்குப் புகட்டுகின்றன. விண்ணில் தோன்றும் இருபெருஞ் சுடர்களும் நட்சத்திரங்களும் காலந் தவறாது அன்புப் பணியே புரிகின்றன. இல்லற மாகிய நல்லறம் செவ்வனவே நடப்பது காதல் அன்பால். மன்னரறம் தழைப்பதும் நீதி செழிப் பதும் அன்பினாலேயே. அம்மட்டோ! உலகில் அருளறம் நிலைப்பதும் கடவுள்மீது மக்கள் காட் டும் அன்பினாலன்றோ?

அன்பின் ஆற்றலை அளவிட முடியாது. அது அற்ப கூழை அமுதமாக்கும்; சிறு குடிலைப் பெரிய மாளிகையாக்கும். துன்பக் கணையைத் தடுக்கவல் லது அன்புக் கணையே. இன்னல்களைப் போக்கி இடர் களைவது அன்பே. "ஈர அன்பினர் யாதும் குறைவிலர் வீரர்" என்பது ஆன்றோர் வாக்கு.

அன்பின் படிகள் பல. தன்னல அன்பு, தன் குல அன்பு, தன் நாட்டன்பு, உலகப் பொதுநல அன்பு, கடவுளன்பு என்பன ஒன்றிலிருந்து மனி தன் ஒன்றுக்கு மேலேறிச் செல்லும் பாதையைக் காட்டுகின்றன. தனித்து வாழ்ந்த ஒருவனின் அன்பு ஆரம்பத்தில் ஒருத்தி அன்புடன் இணைகின் றது. அடுத்தபடியாக அவ்விருவர் அன்பு அவர்களுடைய குழந்தைகளிடம் செல்கின்றது. பின்னர் உற்றார் உறவினர்க்கு உறுதுணையாகின்றது. பிறகு ஊருக்கு நல்ல காரியங்களைச் செய்வதில் ஈடுபடுகிறது. அதன் பின் ஊர்கள் பல சேர்ந்த நாட்டின் நற்சேவை யில் அன்பு மகிழ்வடைகின்றது. அப்பால் உலகின் நன்மையே தன் சொந்த நன்மையாகக் கருதும் உயர்ந்த நிலையை அடைகின்றது. அனைத்திலும் தன்னையும், தன்னை அனைத்திலும் கண்டு பிறருக் குப் பயன் கருதாது செய்யப்படும் நற் கருமமே அறமென அழைக்கப்படும். நமது மனத்திலுள்ள

மாசுகளை அறுப்பதும் அறம். கைம்மாறு வேண்டாது, புகழையும் பதவியையும் கருதாது, நாம் எவ்வளவுக் கெவ்வளவு உலகிற்கு உபகாரம் செய்கிறேமோ அவ்வளவுக்கவ்வளவு நமது அன்பு விரிவடைகிறது. பாசஅன்பு பதி அன்பாக மாறுவது இந்த முறையிலாகும். அப்படி வளர்ச்சி பெருத பாச அன்பு ஒருநாள் துயரத்தையே தந்து நாசமாவது நிச்சயம். பதியன்பு ஒன்றே நமக்கு நற்கதி காட்டும்.

இக் காரணம் பற்றியே அனுபூதிச் செல்வர்கள் எல்லாம் இறைவனை அன்பே வடிவினனைக் கண்டின்புற்றனர். "அன்பே சிவம்" "உலகுக்குயிரானவன்காண்" "பல்லுயிர்க்கும் தாய் தந்தையான தயாபரன்" எனக் கடவுளை வர்ணித்தனர். எல்லாச் சமயங்கட்கும் அடிப்படையான அன்பு மறைந்த போதெல்லாம் மதங்கள் சீர்கேடடைந்தன.

திருமூலர் இக்கருத்தை அழகாய் விளக்கியுள்ளார்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்திலர்
அன்பே சிவமாவதாரு மறிந்த பின்
அன்பே சிவமா யமர்ந் திருந்தாரே"

என்கிறார் அவர். "எவ்வுயிரும் நீங்காதுறையும் இறை சிவன் என்று எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என்பது ஓர் சைவப் பெரியார் வாக்கு. ஔவையார் அருளிய குறளிலும் "எல்லாவுயிரையும் ஈசனெனக் கருதின், நில்லானே வீசனிலைத்து" "ஈசனெனக் கருதி யெல்லா உயிர்களையும் நேசத்தாற் பார்த்துக் கொளல்" என அருளி இருத்தலைக் காண்க. எல்லாச் சீவராசிகளி

டத்திலும் தெய்வத்தன்மையுள்ளதென உணர்ந்து அன்பு செய்வதே உண்மையான அன்பாகும்.

மன்னுயிரைத் தன்னுயிர் போல் பாவிக்கும் நிலையை அடைதற்கு இதுவே சாதனமாகும்.

உலகில் அன்புண்மைக்கு அறிகுறியாக விளங்குவது வளர்ச்சியே. வளர்ச்சியற்ற உலகம் இருக்கவே முடியாது. மலை, மரம், பட்சி, விலங்கு முதலாய அஃறிணை உலகும், மக்களைக் கொண்ட உயர்திணை உலகும் வளர்ந்த வண்ணமே உள்ளன. இந்த வளர்ச்சியைத் தூண்டும் பண்பு அன்பினிடத்திருந்தே வருகின்றது. மனிதப் பிறவி விழுமியதெனக் கூறப்படுவதற்குக் காரணம் இந்த அன்பு வளர்ச்சிக்குரிய அரிய வாய்ப்பை அது ஒன்றே பெற்றிருப்பதினுலேயாம். ஓரறிவுள்ள மரம் முதல் ஆறறிவுள்ள மனிதன் வரையில் எல்லாம் இன்பத்தையே நாடுகின்றன. ஐயறிவுள்ள விலங்குகள் உண்டு, உறங்கி, கூடி இனத்தைப் பெருக்குவதுடன் நின்று விடுகின்றன. மனிதன் அவ்வித புலனின்பத்துடன் திருப்தியடையவில்லை. அவனுக்கு மனம் முதலாய அந்தக் கரணங்கள் உள. அவற்றையெல்லாம் தாண்டி நிற்கும் உள்ளத்தில் வதியும் அந்தராத்மாவை அறிந்து அது பரம்பொருளுடன் இரண்டறக் கலக்கும் போது பெறும் பேரின்பமே மனிதப் பிறவியின் உன்னத இலட்சியமாகும். இந்த இலட்சியத்தையடைய முயல்பவர்களுள், இயற்கையான முறையில் இல்வாழ்க்கை நடத்துபவனே தலைசிறந்தவனெனத் தமது சொந்த அனுபவங் கொண்டு விளக்க வந்த திருவள்ளுவர்,

**"அன்பும் அறனுமுடைத்தாயின் இல்வாழ்க்கை<br>பண்பும் பயனும் அது"**

எனச் சுருக்கமாகக் கூறிவிட்டார். இவ்வுலகத்திலேயே தெய்வத் தன்மையைப் பெறுமாறு வையத்தில் வாழ்வாங்கு வாழ்வது எப்படி? என்ற கேள்விக்கு அன்பும் அறனும் பொருந்திய இல்லற வாழ்வைப் பேணி, நன்றிக்கு வித்தான நல்லொழுக்கத்தைப் போற்றி, பழி, பாவம், பகை விலக்கி உள்ளததால் பொய்யாது ஒழுகினுல் போதும் என்பதே அவர் தந்த விடையாகும். மேலும் சத்தியத்திலும் உயர்ந்த அறம் இல்லாமையால், மனம், வாக்கு, காயம் மூன்றினுலும் பொய்யாது வாழ்பவர்கள் வேறு ஒரு அறமும் செய்ய வேண்டிய தேவையற்றவர்களெனவும், பேராசை, பொறாமை, கோபம் முதலாய மாசுகளை மனத்திலிருந்து ஒழிப்பதே நல்லறம் என்றும் ஏனையவை எல்லாம் வெறும் பகட்டு எனவும் வற்புறுத்தி விட்டார். இத்தகைய அறத்திஞல் எய்தும் வாழ்வுப் பயனே அழியாத இன்பமாகும். திருவள்ளுவர் கண்ட இந்த நெறியில் அன்பு மனமாசைக் கழுவும் கருவியாகிறது. மனமாசற்ற நிலையே அறம் ஆகிறது. எனவே அறத்தை விளங்க வைப்பது அன்பு என்பது வெளிப்படை.

இவ்விதம் வாழ்க்கைக் கலையை அன்பால் தெளிந்த அறத்தின் அடிப்படையில் எழுப்பிய பழந் தமிழர், ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்ற உயர்ந்த கொள்கையைக் கொண்டிருந்தனர். பின்னுளில் தோன்றிய சாதி மதப் பிரிவுகள், பொறாமைகள், போட்டிகள், போர்கள், கண்மூடி வழக்கங்கள் பழைய செந் நெறிக்குக்கேடு சூழ்வித்தன. ஆயினும், ''உலகம் ஒரு குலம்'' என்ற தமிழரின் குறிக்கோள் அறிஞரின் உள்ளத்தை விட்டு முற்றிலும் மறைய வில்லை. விஞ்ஞான முதிர்ச்சியில் கிடைத்துள்ள அறிவு அந்தக் குறிக்கோளை நோக்

கியே யாத்திரை செய்கின்றது. இன்று நாம் புது உலகம், உலக சமஷ்டி அரசாங்கம், ஐக்கிய தேச சபை, முதலாய புதுப்புது இயக்கங்களைப் பற்றி அடிக்கடி படிக்கின்றோம். உள்ளது சிறத்தல் என்பது உலகின் இயற்கையான வளர்ச்சியாகும். அதற்குத் தடைகள் நேரிடும் போது, அவற்றைக்களைந்தெறிய இயற்கை செய்யும் முயற்சியை நாம் புரட்சியென அழைக்கின்றோம். சகோதரத்துவம், சமத்துவம், பொதுமை என்பவையெல்லாம் இப்புரட்சியின் இலட்சியங்களாகும்.

புதிய நல்ல உலகை மூர்க்கப் புரட்சியால் படைக்க முடியாது. அதற்கு வேண்டப்படுவது அறப்புரட்சியென்ற அரிய உண்மையை இருபதாம் நூற்றாண்டில் உலக வல்லரசுகளுக்கு வற்புறுத்திய பெருமை காந்தியடிகளைச் சார்ந்ததாகும். இந்த அறப்புரட்சியே காந்தீயம் என்ற பேர் கொண்டு உலகில் இன்று பரவி வருகின்றது. துவேஷத்தை யும் அதனால் விளையும் போரையும் மூர்க்கத்தையும் கருவிகளாகக் கொண்ட பொதுவுடைமைப் புரட்சி பின்னரும் மூர்க்கத்தையும் பகையையுமே வளர்த் துப் போரிலேயே முடியு மென்பதும் அதனால் உலகில் அமைதியை நிறுவ முடியாது என்பதும் காந்தீயத் தின் அடிப்படையான கொள்கைகளாகும். நமது பழைய புராணங்களும் இதிகாசங்களும் போதித்து வந்தது இதே தத்துவத்தை யாகும். உதாரணமாக இராமாயணத்தை எடுப்போம்.

இராசாதி இராசனான இராவணன் ஆண்ட இலங்கையின் மணிநகரில் மெல்லிய தென்றல் தவழ்ந்ததேயன்றி, காற்று வேகமாக வீசியதே யில்லை யெனவும், சூரியனின் வெம்மையும் யமனின் கொடுமையும் புகுவதில்லை யெனவும் வர்ணிக்கத்

தொடங்கிய கம்ப நாடார் அவ்விதம் நாகரிக உச்சியில் நின்ற அரசு அழிந்து மறைந்த காரணத்தையும் அதே இடத்தில் வர்ணித்துள்ள அழகைப் பாருங்கள்.

''கறங்கு கால்புகா கார்புகா கதிர்புகா மறலி
மறம்பு காதெனின் வானவர் புகாரென்கை வம்பே
திறம்பு காலத்தும் யாவையுஞ் சிதையினுஞ் சிதையா
அறம்பு காதிந்த வணிமதிட் கிடக்கை நின்றகத்தின்''

வயிறார உண்டு, பசியும் நோயுமின்றி, கவலை யென்னும் கடும் பிணியையும் வேரறுத்து மக்கள் வாழ்ந்த இலங்கை மாநகரில், அழியாத் தன்மை பொருந்திய அறம் சென்று அடைய வில்லையாம்! அழியுந் தன்மை வாய்ந்த இவ்வுலகில் என்றும் அழியாது நிற்பது அறம் ஒன்றேயாகும் என்ற பேருண்மையைக் கம்பர் விளக்கிய அற்புத முறையை உற்று நோக்குக! அற நெறிக்கு மாறாக ஒருவன் தேடும் பொருளும், அதனால் அவன் பெறும் இன்பமும் பொருந்தி வளர்வன போலத் தோன்றினாலும், சின்னாளிற் பொன்றி ஒழிந்தே போகும் என்பதற்கு இராவணனின் இலங்கை மாநகரே இணையற்ற சான்றாகும். ஆகையால்

"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல''

''அன்றறிவாம் என்னாது அறஞ் செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை''

என்ற வள்ளுவர் வாக்கை உள்ளத்தில் பதியச் செய்து வாழ்வை நடத்துவோமாக!

# தில்லேயும் திருநடன தத்துவமும்

நடராச உபாசகர்கட்கு மிகவும் விசேடித்த தினங்கள் வருஷத்தில் இரண்டு. ஒன்று தட்சிணு யனத்தின் இறுதியில் வரும் மார்கழித் திருவாதிரை; மற்றையது உத்தராயணத்தின் இறுதியில் வரும் ஆனி உத்தரம். முந்தியது விடியற்கால ஆருத்ரா தரிசனத்தையும், பிந்தியது மாலேக்கால அபிஷேக ஆராதனேயையும் குறித்துள்ளன. நமது ஒரு வருஷ மானது தேவர்கட்கு ஒருநாளாகுமெனக்கூறும புராணக்கதையில் மிகவும் நுட்பமான வானூல் கணித சாஸ்திரம் அடங்கியுள்ளது.

> ''ஆதி அருணுசலப்பேர் அற்புதலிங்கத்துருக் கொள்
> ஆதி நாண் மார்கழியில் ஆதிரை அச்-சோதியெழும்
> ஈசனே மால் முன்னமரர் ஏத்திவழிபட்ட நாள்
> மாசிசிவராத்திரியா மற்று.''

இந்த வெண்பாவில் விளக்கப்பெற்ற லிங்கரூபத் தோற்றம் மகேசுர வடிவங்கள் இருபத்தைந்தனுள் முதலாவதான லிங்கோற்பவமூர்த்தியைக்குறிப்பதா கும். மார்கழித் திருவாதிரை வழிபாடு அதே தொடர்பில் ஆரம்பித்து முதல் முதலாகத் தேவர் கள் பெற்ற காலேத்தரிசனத்தை இது விளக்கிநிற்க, அன்று மாலே அந்த லிங்கத்திற்கு அவர்கள் செய்த அபிஷேக ஆராதனேயை மக்களுக்கு நினேவூட்டுவது ஆனித்திரு மஞ்சனமென அழைக்கப்படும் உத்தரத் திருவிழா. சிவராத்திரியும் கார்த்திகைத் தீபக்காட் சியும் இவ்விரண்டிற்கும் முந்தி நடந்த வைபவங்க ளாகும். இந்நான்கிற்கும் இடையேயுள்ள நாட்களே நாழிகைகளாகக் கொண்டு கணித்துப் பார்த்தால் அரிய பெரிய உண்மைகள் புலனுகும். வேறு எந்த சிவஸ்தலங்களுக்கு மிடையே காணமுடியாத அத்

யாத்மத் தொடர்பு திருவண்ணுமலைக்கும் சிதம்பரத்திற்கு மிடையே உண்டென்பதும் தென்படும். மணிவாசகரால் திருவண்ணுமலையில் இயற்றப்பட்ட திருவெம்பாவை சிதம்பரத்திலேயே முதலிடம் பெற்றிருப்பது அதற்கு ஓர் அகச்சான்ருகும்.

சிதம்பரத்தின் தொன்மை சரித்திர காலத்தைத் தாண்டி நிற்பது. குகைக்கோயில்கள் கற்கோயில்கள் தோன்றுவதற்குப் பல்லாயிரம் ஆண்டு கட்கு முன்னரேயே மரத்தால் கட்டப் பட்ட சிற்றம்பலம் பொன்னம்பலம் இருந்தனவாம். காசியில் இறக்க முத்தி, கமலையில் பிறக்கமுத்தி, அருணையை நினைக்கமுத்தி, தில்லையைத் தரிசிக்க முத்தி என்கின்றது ஓர் பழைய வடமொழிச் சுலோகம். மறையின் சிகரமான உபநிடதங்களில் சாந்தோக்கியம் மைத்திரேயம் இரண்டிலும் சிதம்பரத்தின் தத்துவமும் பழமையும் இடம் பெற்றுள்ளன. 'விராட் புருஷவடிவில் விளங்கும் உலகிற்கு சிதம்பரம் இதயம்' என்கின்றன வேறு பல நூல்கள். இலங்கையை நோக்கிச் செல்லும் பிங்கல நாடிக்கு, மத்தியிலுள்ள சுழிமுனைநாடி நேரே நோக்கிச் செல்லுமிடமே அம்பலம் என்கிருர்கள் திருமூலர் போன்ற யோகிகள், இவ்வாறு பலவிதத்தில் பெருமை பெற்ற சிதம்பரம் பூலோக கைலாயமெனப் புகழப் படுகின்றது. இத்தலத்திற்கு தில்லை, திருச்சிற்றம்பலம், கோயில், புலியூர், மன்று, பொது, கனகாபுரி, செம்பொனம்பலம், பெரும் பற்றப் புலியூர் முதலாய அநேகம் மறுபெயர்கள் உள. திருமூலர், மாணிக்கவாசகர் காலந்தொட்டு இருபதாம் நூற்ருண்டில் சுத்தானந்தர் வரையில் தென்ஞட்டில் தோன்றிய பக்தர்கள், யோகிகள், சித்தர்களெல்லாம் சிதம்பரதரிசனம் பெற்றுப் பாமாலைகள் சாற்றியுள்ளனர். உலகின் வேறு எந்த

ஸ்தலத்திற்காவது இவ்வளவு தொகையான தோத்திரங்களைக் காணமுடியாது.

சிதம்பரத்தில் உள்ள சபைகள் ஐந்து. அவை யாவன சிற்சபை, கனகசபை, தேவசபை, நிருத்த சபை, ராஜசபை இவற்றுள் முதல் மூன்றும் முறையே சிற்றம்பலம், பொன்னம்பலம், பேரம்பலம் என அழைக்கப்படும். சிற்றம்பலத்தை சிவாயநம என்ற பஞ்சாக்ஷரம் எழுதப்பெற்ற பொன்னேடுகளால் வேய்ந்தவன் முதற் பராந்தகன். அதனைப் பின்பற்றி பேரம்பலத்தையும் பொன்மயமாக்கியவன் அனபாயன். கனகசபைக்குப் பொன் வேய்ந்தவன் மணவிற்கூத்தன் காலிங்கன். உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியிருக்கும் சபையே பேரம்பலம். திருவம்பலச் சக்கரம் மந்திர ரூபமாய் அமைக்கப்பட்டுள்ள சிதம்பர இரகசியம் சிற்சபையில் நடராஜப் பெருமானின் வலது புறத்திலுள்ளது. இங்கே உள்ள திரை வெளியே கறுப்பாகவும், உள்ளே சிவப்பாகவும் இருப்பதானது மறைப்புச்சக்தியே அருட்சக்தியாகமாறி ஆன்மாக்களை உய்விக்கின்றதென்பதை அருமையாக விளக்குகின்றது. சிதம்பரத்திலுள்ள நாற்றிசைக் கோபுரங்கள் சைவத்தின் நான்கு பாதங்களைக் குறித்து நிற்கும் அற்புத தத்துவமும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய முக்கிய விஷயமாகும். கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு முறையே நான்கும் மாணிக்கர், சம்பந்தர், அப்பர், சுந்தரர் விளக்கிய சன்மார்க்கம், சற்புத்திரமார்க்கம், தாசமார்க்கம், சகமார்க்கம் (ஞானம், கிரியை, சரியை, யோகம்) நான்கினையும் அறிவுறுத்தி நிற்கின்றன.

இப்போது அங்கே நாம் காணும் ஆலயங்கள், மண்டபங்கள், கோபுரங்கள் எல்லாம் ஒரே காலத்தில் ஒருவர் இருவரால் கட்டப்பட்டனவல்ல. 1500 வருஷங்களாக நடந்தேறிய திருப்பணிகள் ஒருங்கு சேர்ந்தே நமக்கு இன்று காட்சி தருகின்றன. சோழதேசபாண்டியர்களும் இத்திருப்பணியில் பங்கெடுத்துப் புண்ணியந் தேடியுள்ளனர். இவர்களுள் சோழமன்னர்களின் சிவப்பணியே சிறந்ததாகும். தஞ்சாவூரில் இன்று புகழுடன் விளங்கும் பெரிய கோயிலைக்கட்டுவித்த ராஜாராஜனுக்கே சேர்ந்ததாகும் சிதம்பரம் நடராஜர் சந்நிதியை பெரிதாக்கிப் புதிதாக்கிய புண்ணியம். சைவசமயாசாரியர்களதும் வைஷ்ணவ ஆழ்வார்களதும் பக்திரசம் ததும்பும் தெய்வீகக்காதல் கொண்ட பாடல்களின் பயனால் நாடெங்கும் பரவிய தெய்வபக்தி மக்களின் உள்ளத்தில் ஒரு புது உணர்ச்சியைக் கிழப்பியது சோழமன்னர்களின் காலத்திலாகும். இந்த மதவுணர்ச்சி சிறப்புற்ற போதுதான் தென்னாட்டில் ஓவியமும் சிற்பமும் உன்னத நிலையை அடைந்தன. சில பிம்பங்களாகவும் அபிஷேகத்திற்குரிய சிறு உலோக பிம்பங்களாகவும் இருந்த மூர்த்திகள் பெரிய திருவிழாக்களுக்கும் ஊர்வலங்களுக்கும் பொருந்தும் முறையில், தாமிரத்திலும் பின்னர் பஞ்சலோகங்களிலும் சித்திரக்கலைகளைப் போல் சீர்மை பெற்ற வேலைப்பாடுள்ள உற்சவமூர்த்திகளாய் மாறின. அக்காலத்தில் சிற்பிகள் ஒவ்வொரு விக்கிரகத்தையும் பக்திவினயத்துடனும், இயம நிமயங்களுடனும், மந்திரசக்தியுடனும், வார்த்தெடுத்தார்கள். அந்த விக்கிரகங்கள் நாடெங்கும் ஆலயங்களில் ஒழுக்க சீலர்களான குருக்கள்மாரால் மந்திர தந்திரங்கள் மூலம் பிராண பிரதிஷ்டையுடன் ஸ்தாபனமாகி மன்னர்களின் ஆதரவில்

மக்களால் ஒழுங்காகப் பூஜிக்கப்பட்டன. நாடு செழிப்புற்று மக்கள் நல்வாழ்வு பெற்றனர்.

இவ்விதம் தோன்றிய விக்கிரகங்களில் தலை சிறந்து விளங்குவது நடராஜ வடிவம். இதிலடங்கியுள்ள அழகிய தத்துவங்களை இனிச்சிறிது ஆராய்வோம். சிவகாமசுந்தரி பார்த்துக்களிக்க நடராசப் பெருமான் நடிக்கும் ஆனந்தத் தாண்டவத்தையே எடுத்துக்கொள்வோம். அப்பனும் அம்மையும் கூடிய இந்தத் தோற்றத்தில் அவர்கள் ஒருவரை ஒருவர் காதலுடன் நோக்குங்காட்சி முதலில் தென்படுகின்றது. இருவரது முகவிலாசங்களில் ஒளிரும் புன்சிரிப்பு அவர்களின் கண்மாத்திரமன்றிக் கருத்தும் ஒன்றியிருப்பதற்கு அறிகுறியாக மிளிர ஆனந்த நடனம் நடக்கின்றது. இந்த இன்பக்காட்சியைத் தமது தூய மனக்கண்ணால் காணும் பாக்கியம் பெற்ற சேக்கிழார் பெருமான்,

"அத்திருப்பதியில் நம்மை ஆளுடை
மெய்த் தவக்கொடி காண விருப்புடன்
நித்தன் நீடிய அம்பலத்தாடும் மற்
றித்திறம் பெறலாந்திசை எத்திசை?"

என்று ஒரு கேள்வி போடுகிறார். அதாவது, நம்மை ஆட்கொள்ளும் நாயகியாரான சிவகாம சுந்தரி அம்மையார் விருப்புடன் என்றுங்காண நடராசப் பெருமான் ஆடுங்காட்சியை என்றுமுள்ள திருவம்பலத்தை விட வேறு எந்தத்திசை பெற்றுப் பெருமையடைந்துள்ளது என்கிறார். 'விருப்பு டன்' என்ற பதம் காண்பவர்க்கு மாத்திரமன்றி ஆடுபவர்க்கும் பொருந்தியுள்ள அழகை நோக்குக. அப்பனைப் போலவே அம்மையும் வேண்டுதல் வேண்டாமையற்றவர். அப்படியிருந்தும், அவர்கட்கு விருப்பேன், கூத்தேன் என்ற கேள்விகள் எழலாம்.

இவற்றை எதிர் பார்த்துப் போலும் 'நம்மையா ளுடை' என முதலில் கூறி, அவர்களின் விருப்பு தம்பொருட்டன்றி உயிர்கள் உய்ய வேண்டுமென்று உலகின்மேல் வைத்தகருணை காரணமானதெனக் குறித்தனர் சேக்கிழார். இறைவன் விருப்புடன் ஆடும் ஆனந்தத்தாண்டவத்தை தங்கள் ஊனக் கண்ணால் காண்பதற்கு மன்னுயிர்கள் வலிமையில் லாதவர்கள். ஆதலின் சிவகாமி அம்மையார் தாமே அதனைக்கண்டு அக்காட்சியின் பயனை உயிர்களுக்கு ஊட்டுவதென்பதாம். ஒப்பற்ற இக்கருணைச் செயலை குமரகுருபரர் தாம் இயற்றிய சிதம்பர மும்மணிக் கோவையில் அழகாய் விளக்கியுள்ளார். ஒரு தாயா னவள், தன் குழந்தையின் குடர் மருந்தைச் சீரணிக் கும் சக்தியற்றதென உணர்ந்து தானே அம்மருந் தை உட்கொண்டு அதன் பயனைத் தனது முலைப் பாலின் வழியே குழந்தை பெறும்படி செய்வது போல அம்பிகை நடராஜ மூர்த்தியின் திருநடனத் தைத் தானே விரும்பிக்கண்டு அதன் பலனை உயிர் கள் நுகரவைப்பாள் என்பதாம்.

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் உயிர் கள் உய்யும் பொருட்டுச் செய்தருளும் இத்திருக் கூத்தில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், ஆகிய ஐந்தொழில்களும் அடங்கியுள்ளன. இவற்றின் விரிவான விளக்கங்களை திருமூலர் திருமந்திரத்திலும், நால்வர் பாடல்க ளிலும், சிவாகமங்களிலும் சித்தாந்த சாஸ்திரங்க ளிலும், பெரிய புராணத்திலும் பரக்கக்காணலாம். தோற்றப் பொருள்கள் அனைத்திற்கும் ஒலியே ஆதாரமாயிருப்பதால் உயர நீட்டிய வலக்கரத்தி லேந்திய டமருகம் சிருஷ்டித் தொழிலைக் குறிக் கின்றது; 'அஞ்சாதீர்கள்' எனுங்குறிப்பைக் காட்டும் மற்றவலக்கரம் காத்தல் தொழிலைச் செய்கின்றது.

உயர்த்திய இடது கரத்திலேந்திய அக்கினி சங்காரத் தொழிலைச் செய்கின்றது; முயலவனை ஆணவத்தை மிதித்து நிற்கும் வலப்பாதம் மறைத்தல் தொழிலைச் செய்கின்றது; தூக்கிய திருவடி முத்தியை அருளுகின்றது; கீழ் நோக்கிய இடது கரமானது குஞ்சிதபாத நிழலில் அமர்ந்து ஆனந்தத்தை அனுபவியுங்கள் என ஆன்ம கோடிகளை அழைக்கும் முறையில் அமைந்துள்ளது.

மக்கள் கண்ணினைப்பெற்ற பயன் இந்த ஆனந்த நடனத்தைக் காண்பதேயாம். 'தில்லையம்பலத்தாடுகின்ற அத்தா உன்னுடைய காண்பான் அடியனேன் வந்தவாறே' எனத் தம்மை நடராஜப் பெருமானுக்கு அறிமுகப் படுத்திக்கொண்ட அப்பர் சுவாமிகள், அந்த ஆனந்தக்காட்சி பெற்றதும் அம்பலச் கூத்தனைத் தினைத்துணைப் பொழுதும் தம்மால் மறந்துய்ய முடியாதெனச் சத்தியங்கூறி, தாம் பெற்ற இன்பம் இத்தரணியும் பெறவேண்டுமென்ற கருணையால் உந்தப்பட்டு, 'பெரும் பற்றப்புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' என உலகமக்களுக்கு அறிவுறுத்தி, அவர்களை அயலவர்கள் பிணமென்று பெயர் வைத்து எரிசுற்றப்படுவதன் முன்பு திருச் சிற்றம்பலஞ் சென்றடைந்துய்மினோ' என அழைக்கின்றார்.

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ் வாயிற்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற்
பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
மாநிலத்தே''

என்பது அவரின் அனுபவ முதிர்ச்சியில் கனிந்த அரிய தேவாரம். இதே கருத்தில் உள்ளந் தோய்ந்த சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தின் பாயிரத்தில், மலர் சிலம்படியை வாழ்த்தி வணங்கியதன் பயன் கூறுமுகத்தால், காப்புச் செய்யுளுக்கு அடுத்தபடியாகவே.

"ஊனடைந்த உடம்பின் பிறவியே
தானடைந்த உறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்ப்பொழிற் றில்லையுள்
மாநடஞ்செய் வரதர் பொற்றடொழ"

என்கிறார். ஆதலால் நாம் அனைவரும் நடராஜப் பெருமானின் திருவுருவ தத்துவத்தை உணர்ந்து அதின் சிறப்பினை நினைந்து வழிபட்டு மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சேரா நிலையை எய்துவோமாக.

"வாழி திருமன்றங் கண்ட மலர்க் கண்கள்
வாழி பெருமான் புகழ் கேட்ட வார் செவிகள்
வாழி யவனை வணங்கு முடிச்சென்னி
வாழி யவன் சீர்பாடும் வாய்"

# அடியார் பெருமை

'அடியார், என்னும் பதத்திற்கு உண்மையான பூரணமான பொருள் தெரியவேண்டுமாயின், முதலில் நாம் திருமந்திரம் என்னும் இணையற்ற சாத்திரநூலையே சொற் சுருக்க அகராதியாகக் கொள்ளல் வேண்டும். பின்னர் பெரிய புராணம் என்னும் அரும்பெரும் காவியத்தைப் பேரகராதியாகக் கொண்டு ஆராயலாம்.

சங்க காலத்தில் அடியார்கள், அறவோர், துறவோர், அந்தணர், நீத்தார் என்பவை போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டனர்.

தமிழ்ப்பிராட்டி ஔவையார் திருக்குறளின் பாயிரத்தைக் கருத்தூன்றிப் படித்துப்பார்த்தார். அப்போது பாட்டியாருக்கு,

''துறந்தார் பெருமை துணைக் கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண்டற்று''

என்ற வள்ளுவர் வாக்கு அடியார் பெருமையைப் போதிய அளவு விளக்கவில்லை யெனத் தோன்றியிருக்க வேண்டும். அல்லாவிட்டால், அந்த மூதாட்டி,

''பெரிது பெரிது இப்புவனம் பெரிது
புவனமோ நாண்முகன் படைப்பு
நான்முகனே கரியமா லுந்திவந்தோன்
கரியமாலோ அலைகடற் றுயின்றோன்
அலைகடலோ குறுமுனிகையி லடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்

கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கொருதலைப்பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையவளோ விறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டருள் அடக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே''

என்று நீண்ட விளக்கம் பாடவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கமாட்டாது. சொற் சுருக்கத்தைப் போதித்த ஔவைப் பிராட்டியையே சொற்பெருக்கத்தில் இறங்கச்செய்த பெருமை அடியார் பெருமையெனத் தயங்காமற் கூறலாம்.

சென்ற நூற்றூண்டின் பிற்பகுதியில் மேல் நாட்டுப் பௌதிக சாஸ்திரம் முதிர்ச்சி யடைந்த போது, விஞ்ஞான விற்பன்னர்கள் சிலரின் மூளை ஓர் விசித்திரமான ஆராய்ச்சியில் முனைந்தது. அவர்களின் மூதாதையர்கள் உலக சிருஷ்டியைப்பற்றியும், புவனத்தின் நிலையைப்பற்றியும் கொண்டிருந்த அபிப்பிராயத்தைப் பின்பற்றி, கடவுள் வாழும் பரலோகம் அல்லது பரமண்டலம் நம் கண்ணுக்குத் தென்படும் முகில்களுக்குப் பின்னுல், நட்சத்திரக் கூட்டங்களுக்கப்பால் இருக்கும் இடமென அவர்கள் கருதினுர்கள். நமது பூமியிலிருந்து கோடிக்கணக்கான மைல்கள் தூரத்திலிருக்கும் கோள்களையும், நட்சத்திரங்களையும் தூரதிருஷ்டிக் கண்ணுடிகொண்டு கண்டு பிடித்த வெற்றி உணர்ச்சியுடன், ஞாயிறுதோறும் குருமார் விபரித்த பரமண்டலத்தையும் தேடமுயன்றனர். அது தென்படவில்லை. உடனே ''கடவுளுமில்லை, கடவுள் வாழும் பரலோகமுமில்லை; எல்லாம் வெறுங் கற்பனையே'' என்ற முடிவுக்கு வந்தனர். மேல்

நாட்டில் நாஸ்திக விதையை முதலில் விதைத்தது இந்த வித அரைகுறையான விஞ்ஞான அறிவும் ஆராய்ச்சியுமேயாம்.

பல்லாயிரக்கணக்கான வருடங்கட்குமுன் நமது மூதாதையர்கள் அதே முயற்சியில் இறங்கிய போது, அவர்கள் தெரிந்தெடுத்த கருவி தெளிந்த அறிவு அல்லது மெய்யுணர்வு என்பதாம். அதனால் கிடைத்த திவ்விய திருஷ்டியின் துணை கொண்டு தேடிக் கடவுள் உண்மையைக் கண்டு பிடித்தனர். வாழையடி வாழையாக ரிஷி பரம்பரையில் தோன்றிய தாயுமானவர் இதனைத் தமது பாடல் ஒன்றில் மிக அருமையாக விளக்குகிறார். நவீன விஞ்ஞானிகள் எண்ணிய கருத்துக்களில் சில கூட அவரது ஆராய்ச்சியில் அடங்கி யுள்ளன. சுத்த நிர்க்குணமான பரதெய்வம் எழுந்தருளி யிருக்கும் இடத்தைக் குறித்து உளவு கேட்கத் துணிந்த அப்பெரியார், 'அண்டமுடி தன்னிலோ பகிரண்ட மதனிலோ' எனத் தமது பாட்டை ஆரம் பிக்கிறார்; இடையில் 'விக்கிரக வடிவிலோ, பர வெளியிலோ, விந்துநாதங்களின் நிலையிலோ, வேதாந்த சித்தாந்த நிலைகளிலோ?' என்று பல வாகக் கேட்டுக்கொண்டு, இறுதியில், 'கருவி கரணங்க ளோய்ந்த தொண்டர்களிடத்திலோ நீ வீற்றிருப்பது?' என்று கேள்வியைக்கிளப்பி, எங்கும் வியாபகமாயுள்ள இறைவனுக்கு தொண்டர்களின் இருதய கமலமே சிறந்த தானமென்பதைக் குறிப் பாற் காட்டுகிறார். பின்னர், அந்த ஞானச் செல்வரே,

**''இனப்பிரிந்த மான்போல் நான் இடையாவண்ணம்**
**இன்பமுற அன்பர்பக்க லிருத்தி வைத்துக்**
**கனந்தருமாகனமே''**

என்று அடியாருறவின் பெருமையைப் பாடியுள்ளார்.

அடியார் பெருமை உலகின் பல்வேறு மொழிகளில் பேசப்பட்டுள்ளது; பேசப்படுகின்றது. மெய்யடியார்களே மண்ணுலகிற்கு உய்வளிக்கும் உப்பு. அவர்களே மனித சமுதாயத்தின் இரட்சகர்கள் என்று ஆங்கிலத்தில் ஓர் அரிய வசன முண்டு.

சத்திய உளம் படைத்த, இறை அன்பும் ஜீவ காருண்யமும் கொண்ட மகாத்மாக்களின் ஆன்ம சக்தி ஒன்றே மனிதனுக்கு நித்தியானந்தத்தைக் கொடுக்க வல்லது. இந்தப் பேருண்மையை அறிஞர் உலகு இன்று நன்கு உணர்கின்றது.

வடமொழியில் அடியார் உறவு 'ஸத் ஸங்க' என அழைக்கப்படுகின்றது. ஆதி சங்கரர் அருளிய 'பஜகோவிந்தம்' என்னும் அரிய நூலில்,

"ஸத் ஸங்கத்வே நிஸ் ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத் வம்
நிர்மோஹத்வே நிஸ்சல சித்தம்
நிஸ்சலசித்தே ஜீவன் முக்தி"

என்னும் பாடல் உள்ளது. அதனை வடமொழிச் சந்தத்திலேயே தமிழில் பாடப்போனல்,

"நல்லது நல்லது நல்லவர் நேசம்
நில்லாது போம்நமை வாட்டும் பாசம்
பாசங் குறையப் போகும் மோகம்
மோகந் தீரச் சேரும் சாந்தி
அதுவே உயிருடன் வீடாகுமே"

எனலாம்.

புண்ணியவசத்தால் கிடைத்த இம்மனிதவுடலில் உயிர் இருக்கும்பொழுதே வீடுபேற்றை அடைய வேண்டுமாயின், முதலில் மெய்யடியார்களின் சகவாசத்தைப் பேணவேண்டுமென்பதே சங்கரர் உபதேசம். இந்த மணிமொழியின் சாரம் இந்தியாவில் வழக்கிலுள்ள எல்லா மொழிகளிலும் நெடுங்காலமாகச் செறிந்துள்ளது. உலகில் நிலையான மூன்று பொருள்களைத் துருவி ஆராய்ந்த பட்டினத்தடிகள் சங்கரரின் முடிவுக்கே வந்தார். அவர் 'நின்பூசை நேசமும் ஞானமுமே' என்பதற்கு முன் 'நல்லாரிணக்கமும்' என்பதை வைத்துப் பாடிய முறையை நோக்குங்கள். பிறிதோரிடத்தில் அப்பழுதறு துறவி 'அடியாருறவும் அரன்பூசை நேயமும் அன்புமன்றிப் படிமீதில் வேறு பயனுளதோ?', எனவும் பாடியுள்ளார்.

சமயத்துறையில் அடியார் தொடர்பில், தமிழகத்திற்கும், தமிழ்மொழிக்கும் தனிச்சிறப்புண்டு. திருவாரூர் நகரத்துக்கு சுகமலர்போல் அமைந்த பூங்கோயிலின் திருமதில் வாயிலை அடுத்துக் காணப்பெறும் தேவாசிரயமெனும் மண்டபம் போன்ற ஒன்றை உலகில் வேறெங்குமே இருந்ததில்லை; அம்மண்டபத்தில் இற்றைக்குப் பதினொரு நூற்றாண்டுகட்கு முன் குழுமியிருந்த திருக்கூட்டத்தின் ஞான ஒளியால் மலர்ந்த திருத்தொண்டத்தொகையினை முதனூலாகக் கொண்டு தோன்றிய திருத்தொண்டர் புராணம் போல் இறைவனுக்குத் தொண்டு செய்யும் அன்பர்களது அடிமைத் திறத்தை விரித்துரைக்கும் பெருநூல் உலகின் வேறு எந்த மொழியிலுங் கிடையாது. செயற்கரிய செயல் செய்த பெரியோர்களின் புகழைப் பாடுங் காரணத்தால் இந்நூல் பெரிய புராணமென

அழைக்கப்படுகின்றது. தமிழும் சைவமும் தழைக்கச் செய்ய நாவலூரில் அவதரித்த சுந்தரர் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானை வழிபட ஆலயத்தை அணைந்தபோது, முதலில் அவர் கண்டின்புற்றது தேவாசிரய மண்டபத்தில் அளவில்லாத அடியார்கள் கூடியிருந்த காட்சியேயாம். உடனே அவரது உயிர்க்கிளி 'இவர்களுக்கெல்லாம் நான் அடியான் ஆகும்நாள் எந்நாளோ? 'எனக்கூவியது. அன்பனின் ஆர்வத்தைப் பூர்த்திசெய்யத் திருவுளங்கொண்ட ஆண்டவன் காட்சியளித்து, தம்மைப் போலவே தமது அடியார்களும் தாம் உணர்த்திடலன்றி உணரவும் ஓதவும் முடியாத இலக்கணமுடையவர்கள் என்பது கருதி, அந்த அடியார்களின் மகிமையை,

''பெருமையாற் றம்மையொப்பார்
பேணலா லெம்மைப் பெற்றார்;
ஒருமையால் உலகை வெல்வார்;
ஊனமே லொன்று மில்லார்;
அருமையா நிலையி னின்றார்;
அன்பினா லின்ப மார்வார்;
இருமையுங் கடந்து நின்றார்;
இவரை நீ யடைவா யென்று''

எடுத்தி விளக்கி, அவர்கள் மீது பதிகம் பாட 'தில்லைவா ழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடியெடுத்துக்கொடுத்து மறைந்தனர். சிவபெருமான் வாக்காகச் சேக்கிழார் தந்துள்ள அறிமுகப் பத்திரத்தில் அடங்கியுள்ள சொல்நயத்தையும் பொருள்நயத்தையும் சிந்திக்க வேண்டும். அந்த அடியார்கள் எல்லாரும் பெருமையினாலே தமக்குத்தாமே நிகரானவர்களாம்; பேணிப் போற்றிச் சிவத்தைத் தமதாக்கிக்கொண்டவர்க

ளாம்; சிவத்துடன் அத்துவிதமாய் நிற்கும் தன்மையால் உலகத்தை வென்றவர்களாம்; அன்பு நிறைதலினுலே ஆனந்தானுபவர்களாகி, இம்மை மறுமை இரண்டையும் கடந்தவர்களாம்! பிறவி நீங்கிய உயர்வற உயர்ந்த நிலையை அடைந்தவர்களாம். அடியார்கள் பெருமையை இதற்கு மேல் எவர்தான் விபரிக்க முடியும்?

*(வீரகேசரி-26.6.1955)*

# சாதுக்கள் சகவாசம்

''கோதிலா ஞானகுணத்தவரே சற்குணத்தோர்
ஏதிலார் மற்றை யிழிகுணத்தோர் — ஆதலாற்
பொய்தீர்த்த மெய்யுறுமப் புண்ணியர்தம் பக்கலே
உய்திபெற வேண்டு முணர்.''

மெய்த்தொண்டர்களின் பெருமையைப் பாராட்டாத பெரியார்கள் கிடையாது. எமது சாஸ்திரதோத்திர நூல்களெல்லாம் அவர்களின் சகவாசத்தால் கிடைக்கும் அரும்பயனை நன்கு விளக்குகின்றன. பொருந்தா ஒழுக்கம் பூண்டோரும் நற்றவத்தொண்டர் கூட்டத்தில் பழகுவதால் அவர்களது சிவபாவனைக்கோ, கிருஷ்ண, முருக, ராம — பாவனைக்கோ உட்பட்டுத் தாங்களும் புல்லறிவு நீக்கி நல்லறிவு பெறுவது நிச்சயமென்பதே பலமஹான்களின் திருவாக்காகும். சந்தன மரத்தோப்பிலுள்ள காட்டு மரமும் சந்தனவாசம் வீசுவது போல, நல்லவர்களுடைய சேர்க்கையால் எத்தனையோ தீயவர்களும் திருந்தியிருப்பது உலகறிந்த உண்மையாகும்.

மக்களாய்ப் பிறத்தலரிது. அப்படிப் பிறந்தாலும் மோட்சத்தை இலட்சியமாகக் கொண்டு வாழ்க்கை நடத்துவோர் அரிதிலும் அரிது. அதனாற்றான், சாதன சதுட்டயத்தில் முமூட்சுத்துவம் கடைசியாக வைக்கப்பட்டுள்ளது. விவேகம், வைராக்கியம் சட்சம்பத்து ஆகிய மூன்றும் தோன்றிய பின்னரே ஒருவனுக்கு வீடு பேற்றிலுள்ள வாஞ்சை ஸ்திரமாக முடியும். இராமருக்கு வசிட்டர் அருளிய உபதேசங்களடங்கிய ஞானவாசிட்டத்தின் முமூட்சுப்பிரகரணத்தில் மேற்கூறப்பட்ட கருத்துக்கள்

விளக்கப்பட்டிருப்பதோடு, மோட்ச வாசலின் நான்கு காவலர்கள் சாந்தி, விசாரம், சந்தோஷம், சத்சங்கம் என்பதும் அவற்றுள் சத்சங்கத்தின் ஒப்பற்ற தன்மையையும், அது ஒன்று கிடைத்த பின் ஏனைய மூன்றும் தாமாகவே வருமென்னும் உண்மையும், நன்கு வற்புறுத்தப்பட்டுள்ளது. ''சகமெனுமாமாயை வெல்லத்தக்கதோர்க் கெல்லாந்தப்பாத சகாயமாஞ்சாதுசங்கம்'', ''சிறுவர் கூட்டம் எளிதரிது தெரிந்தோர் கூட்டம்'' என்பவை வசிட்டர் வாக்குகள். இதே கருத்தைப் பின்பற்றி ஜகத்குரு சங்காரச்சாரியாரும் தாம் அருளிய ''விவேக சூடாமணி'' என்னும் ஞான நூலில் அனந்த கோடி ஜென்மங்களிற் புரிந்துள்ள புண்ணியங்களாலன்றிக் கிடையாத மோட்சமானது திருவருள் காரணமாய் அருமையான மனிதப்பிறவி, முமூட்சுத்துவம், மகாத்மாக்களின் சங்கம் என்னும் மூன்றுங் கிடைப்பின், சித்திக்குமெனக் கூறியுள்ளார். ஆதிசங்கரர் உபதேசித்த அத்வைத நெறியை அறிஞர் உலகு முழுவதற்கும் நவீன மனோதத்துவசாஸ்திர முறையில் அறிவுறுத்த அவதரித்த பகவான் ஸ்ரீ ரமணமூர்த்தியும் சத்சங்கத்தினும் சிறந்த சாதனை வேறேயில்லையென்கிறார்.

ஏனெனில், அவர்களின் தரிசன மாத்திரத்திலே சந்திரனால் தணிகின்ற தாபமும், கற்பகத்தால் ஒழிகின்ற தரித்திரமும், கங்கையால் தொலைகின்ற பாவமும் ஒருங்கே நீங்கி விடுகின்றன. சாதுக்களின் சகவாசத்தால் புறப்பற்றொழிந்து அதனால் அகப்பற்றும் அழியும். அகப்பற்றொழிந்தோர் ஆத்மநிஷ்டையுற்று ஜீவன் முக்தியும் பெற்றோராவர்.

ஆதலால் ஆத்மீக சாதகர்களுச்கு சத்சகவாசம் அத்திய அவசியமென்கிறுர் பகவான். ஐம்பது ஆண்டுகளுக்கு முன், சாந்தம் என்னும் கவசம் பூண்டு இடைவிடாது இராப் பகலாய் சமாதி நிலேயில் ஆழ்ந்திருந்த போது அவர் தமது பக்தர் களின் வேண்டு கோளுக்கிணங்கிப் பாடியருளிய 'அருணசல அக்ஷரமணமாலே' யில்'','' அன்பொடுன் ஞமங்கேள் அன்பர் தம் அன்பர்க்கு அன்பஞகியிட அருள் அருணசலா'' என்னுங் கண்ணி திருமூலரின் கீழ்க்கண்ட திரு மந்திரத்தை நினைவூட்டுகின்றது.

''அடியார் அடியார் அடியார்க் கடிமைக்
கடியனுய் நல்கிட் டடிமையும் பூண்டேன்
அடியார் அருளால் அவனடி கூட
அடியா னிவனென் றடிமை கொண்டானே''

இன்ப நிலே எய்துவதற்கு அன்பர்பணி ஒன்றே போது மெனப் பாடிய தாயுமானுர், ''இனம் பிரிந்த மான்போல நான் இடையாவண்ணம் இன்பமுற அன்பர் பக்கத் திருத்திவைத்துக் கனந் தருமாகனமே'' என அடியாருறவின் பெருமை யைப் புகழ்ந்தார். பட்டணத்தடிகள் ''நின்பூசை நேசமும் ஞானமும்'' என்பதற்கு முன் நல்லாரி ணக்கமும் என்ருர். மணிவாசகர் பொன்னம்பலத் தெம்முடியா முதலே நோக்கி ''அடியேன் உன்னடி யார் நடுவுள் இருக்கும் அருளேப் புரியாய்'' எனப் பரிந்தார். இராமலிங்க சுவாமிகள் முருகனே ஒருமையுடன் வழிபடும் உத்தமரின் உறவை வேண்டி நின்ருர் முக்கிய வரமாக. குமரகுருபரர் தமது ஐந்தாம் வயதில் செந்தூர் கந்தனருளால் ஊமைத் தன்மை நீங்கி வாக்கு வன்மை பெற்றதும் இயற் றிய கலி வெண்பாவின் இறுதியில், ஓர் அற்புதமான ஆத்மீக ஏணிகட்டி அதன் உச்சத்திலுள்ள பேரின்ப அநுபவமாகிய உயர்ந்த நிலேக்கு, அடுத்த கீழ்ப்படி யாக அடியார் உறவை அழகாய் அமைத்துள்ளார்.

''தம்மை விடுத்து, ஆயும் பழைய அடியாருடன் கூட்டித், தோயும்பரபோகம் துய்ப்பித்து'' என்னும் கண்ணியின் அரிய கருத்தை ஆழ்ந்து நோக்குக. இதற்கு விளக்க உரையும் விரிவுரையும் போல அமைந்துள்ளவையே அவர் பின்னர் இயற்றிய சிதம்பர மும்மணிக் கோவையின் பத்தாம் பாட்டும் பண்டார மும்மணிக் கோவைவின் நான்காம் பாட்டும். மாசற்ற தூய உள்ளமுடைய மகான்களின் பாவனையானது போலியை மெய்மையாக்கும் விதத்தை முந்திய பாட்டில் விளக்கிப் பிந்திய தில் நாவுக்கரசரின் ''சங்கநிதி பதுமநிதி'' என ஆரம்பிக்கும் தனித் திருத்தாண்டகத்தின் கருத்தைப் பின்பற்றி, தமது சற்குரு நாதன் பொன்னடியைப் புகலாக அடைந்த தொண்டர்கள் திருவமுதுண்டு தெருக்கடை வீசிய பரிகலம் அருந்தும் தவமிக்க நாயாகும் பிறவியை வேண்டியுள்ளார் குமரகுருபரர். இவ்விதம் மாசிலாமணித் தேசிகர் மீது பாடிய நேரிசை யாசிரியப்பாவின் சாரத்தை முகவைக் கண்ண முருகனார் தமது குரு தேவராகிய பகவான் ரமணர் மீது பாடிய கீழ்க் கண்ட கொச்சகக்கலிப்பாவில் தந்திருப்பதும் இங்கு நினைவுக்கு வருகிறது.

**வீயாப் பொருவளஞ்சேர் விண்ணரசும் யான் வேண்டேன்**
**சேயாய்ப்பிறந்த திருவேங்கட ரமணன்**
**பாயாக் குருகட்ட பண்ணவன்சே ராச்சிரம**
**நாயாய்ப் பிறக்கு நலனுடையே னவேனே.''**

இவ்வாறாக அநுபூதிமான்களே தங்களைச் சற்சன சங்கத்துடன் கூட்டிவைக்குமாறும், நற்றவத் தொண்டரின் அடியார்க்கடியராய் வாழும் பாக்

கியத்தைத் தருமாறும் இரந்து நின்ருரெனில், எம் போன்ற சாதாரண மக்களுக்கு சற்சனர் உறவு எத்துணை அத்திய அவசிய மென்பதைச் சொல்ல வும் வேண்டுமோ? பெறுதற்கரிய மனிதப் பிறவி யைப் பெற்ற நாமெல்லோரும் பவசாகரத்தைத் தாண்டி உபசாந்தத் துறையைச் சேரவேண்டு மெனில், நற்றவத் தொண்டர்களின் நட்பையும் மெய்ச்சாதுக்களின் சகவாசத்தையும் உண்மை ஞானிகளின் உறவையும், மகாத்மாக்களின் தரி சனத்தையும் பெறவேண்டும். தொன்று தொட்டு தூயதுறவிகட்குப் பிறப்பிடமாய இந்தியாவில் இன்று பல இடங்களில் ஆத்மசக்தியை வளர்க்கும் அருள் நிலையங்கள் தொண்டாற்றுகின்றன. அவற் றுள் ''ஆத்மஜோதி''யின் முதலாண்டுச் சுடர்களில் விபரிக்கப்பட்ட ரமணாச்சிரமம் ஆனந்தாச் சிரமம், அரவிந்தாச்சிரமம், ஆனந்தக் குடீர் [ரிஷிகேசம்] நான்கும் முக்கியமானவை. அவை உலகப் பிரசித்தி பெற்றவை. சாதி, மத, நிற வித்தியாசமின்றிச் சகலரும் வந்து தங்கிச் செல்லும் தவச்சாலைக ளாகும். ஞானமும், பக்தியும், தியானமும் யோக மும் ஒளிவீசும் இந்த ஆச்சிரமங்களில் ஆனந்த வெள்ளம் பெருகிப் பாய்கிறது.

அன்பர்களே! அதனை வாரியுண்ண எழுமின்!! விரைமின்!!!

# சித்தருலகை விட்டு மண்ணுலகில் மனித உடலில் தோன்றிய நித்திய முத்தர்

''நீளிரவு கழிகின்றது! நம்மை வாட்டும் இன்னல்கள் ஒழிகின்றன! பிணமாய் விறைத்துக் கிடந்தது மறுபடியும் விழிக்கின்றது; ஒரு திவ்ய வாணி உதிக்கின்றது; நமது தாய்நாடான இந்தியா இணையற்ற ஞானஹிமாலயம்; அன்பும் வினைத்திறனும் பெற்றது; சாந்தமும் உறுதியும் பொருந்தியது. அதன வாக்குறுதி வலுக்கிறது. அது புத்துயிர் பெறுகிறது. சோம்பல் நீங்கி பாரததேவி நீண்ட உறக்கத்திலிருந்து விழித்தெழுந்து விட்டாள். அவளையாரும் இனித் தடுக்க முடியாது.

''நான் ஆன்மா; நான் சுதந்திரன்; அழிவற்றவன்; நான் அறிவு; நான் சக்தி'' என்று ஆயிரந்தரம் சொல்லுங்கள். ஆண், பெண் அனைவருங் கடவுளென மதியுங்கள்; ஆருயிர்ப் பணியை ஆண்டவன் பணியெனக் கருதுங்கள். உலகில் எங்கும் எவர்க்கும் ஞானவொளி பரப்புங்கள்; மக்களின் உள்ளத்தை ஒளியுறுத்த, உறுதி செய்ய வேதாந்த ஞானமே வேண்டும். அதுவே பாரதநாட்டின் அருஞ் செல்வம்''.

*மூன்று ஆண்டுகளாக அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் இந்து மதப் பிரசாரஞ் செய்து, வேதாந்தக்கொடி உயர்த்திவிட்டு தாய்நாடு திரும்பியதும் சுவாமி விவேகானந்தர் அவர்களின் திருவாக்கிலிருந்து மலர்ந்த மணிமொழிகள் இவை.*

இவற்றில் அடங்கியுள்ள தந்நம்பிக்கையையும், தெய்வவிசுவாசத்தையும் தீர்க்க தரிசனப்புஷ்டியையும் சிந்திக்க வேண்டிய நன்னாள் இது.

இன்று அப் பெரியாரின் நூற்றாண்டு விழா ஆரம்ப மாகின்றது. உலகின் நாலா பக்கங்களிலும் அதின் மணி ஓசை கேட்கின்றது. இருபதாம் நூற்றாண்டில் பரமார்த்திகத் தொடர்பில், இந்த விழாவுக்குள்ள தனிச் சிறப்பு இதுவரையில் பிறிதொன்றுக்கும் இருந்ததே யில்லையெனத் தயங்காமற் கூறலாம்.

அவர் பிறந்த இடமான கல்கத்தாவில் அவர் திருப் பெயர் தாங்கிய ஓர் சர்வகலாசாலை எழும்புகின்றது. அவர் அருந்தவஞ் செய்து தேவியின் திருக்காட்சியும், அவள் அருளும் தான் இனிச் செய்ய வேண்டிய கடமை குறித்த உபதேசமும் பெற்ற கன்னியா குமரியில் ஓர் பெரிய நிலையம் நிறுவப்படப் போகின்றது. அவர் சாதி, மத, நிற, மொழிப்பேதம் எதுவுமின்றி அளித்துச் சென்ற ஞானக் களஞ்சியங்கள் உலகில் பல்வேறு மொழிகளில் அச்சுவாகனமேறி பூமிவலஞ் செய்யப் போகின்றன. உர்துமொழியிற் கூட அவை வெளிவருவதானது எவ்வளவு மகிழ்சிக்குரிய விஷயம்?

காலத்திற்குக் காலம், உலகிற்கு உய்வழி காட்டத் தோன்றும் உத்தமர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்: (1) முத்த புருடர்கள் - கஷ்டப்பட்டு உலக பந்தங்களினின்றும் தம்மை விடுவித்துக்கொண்டு பிறர்க்கு ஓர் எடுத்துக் காட்டாக வாழ்பவர்கள்; (2) நித்திய முத்தர்கள் - சிறுவயதிலிருந்தே உலக வாசனையின்றி வாழ்ந்து தெய்வானுபூதி பெற்று, தாம் பெற்ற இன்பம் இத் தர

ணியும் பெறும் பொருட்டு ஆன்மீக சேவை செய்பவர்; (3) அவதார புருடர்கள் பிறக்கும் பொழுதே அளவிடற்கரிய அன்பும், அருளும், ஆற்றலும், ஞானமும் உடையவர்கள்; அதாவது மனித உருவில் தெய்வத்தன்மையின் திரண்ட வடிவானவர்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர் உலகம் முழுவதற்கும் ஞான ஒளிபரப்பத் தோன்றிய ஒரு அவதார புருடர். அவரது சாதன வாழ்க்கையில் நாம் காணக்கிடைக்கும் சிறப்பியல்புகள் உன்னற்கரியவை; உரைத்தற்கு முடியாத அவ்வளவு அற்புதமானவை. அவரது உள்ள மானது தேவியின் திருக்காட்சி பெறுவதற்காகத் துடித்த துடிப்பு அவரது சரிதத்தைப் படிப்போர் உள்ளங்களை உருக்கும் தரத்தது. தூய அன்னை சாரதா தேவியாரோடு அப் பெருமான் வாழ்ந்து காட்டிய இல்லற வாழ்க்கை எந்த மத சம்பிரதாயத்திலும் கண்டும் கேட்டுமிராத புனிதத் தன்மை வாய்ந்தது. சிவ சக்தி தத்துவத்தின் மகிமையை விஞ்ஞான உலகுக்கு விளக்க வந்த தெய்வப்பிணைப்பாகும் அது. இவ்வித பல சிறப்புகள் பொருந்திய ஸ்ரீராமகிருஷ்ண தேவரின் அவதார நோக்கத்தைப் பூர்த்தி செய்ய, சித்தருலகை விட்டு இம் மண்ணுலகிற்கு மனித உடலில் தோன்றிய நித்திய முத்தரே சுவாமி விவேகானந்தர். மிகப்புராதன, புனித இந்துமத சமரஸக் கோயிலின் மூல விக்கிரஹம் பரமஹம்ஸ தேவரெனின், விவேகானந்தரை அதின் எழுந்தருள் மூர்த்தி எனலாம்.

விவேகானந்தர் உடல் கொண்டுலாவியது முப்பத்தொன்பதரை ஆண்டுகளேயாம். அந்த சொற்ப ஆயுளில். அவர் அத்யாத்ம சேவையில் கழித்தது பத்து வருஷங்கள் மாத்திரமே. இச் சிறிய காலத்துள், பலர் பல நூற்றாண்டுக் கால எல்லைக்குள் செய்து முடிக்க இயலாத எத்தனையோ அரும் பெருங் காரியங்களை அவர் நிறைவேற்றியுள்ளார். அவரின் தவ வலிமைக்கும் அவரது குருநாதரின் அற்புதமான ஆத்ம சக்திக்கும் அவை இணையற்ற எடுத்துக் காட்டுகளாக மிளிர்கின்றன.

சைவசமயத்தொடர்பில், தமிழ் இலக்கிய மரபில் அவரது மகிமையைக் கூறப்புகின், திருவாதவூரரான மணிவாசகப் பெருமானின் புராணம் அருளிய கடவுண்மா முனிவரின் பாடல்கள் சாலவும் பொருத்த முடைத்து. இரவு வேளையில் விண்ணில் பல்லாயிரம் நட்சத்திரங்கள் ஒளிவீசிக் கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். ஆனால் காலையில் சூரியன் உதயமானதும் அவைகள் நமது கண்களுக்குத் தென்படுவதில்லை. அவைகள் விண்ணிலிருந்து விழுந்து போகவில்லை. இருந்த இடத்திலேயே உள்ளன. ஒளிமங்கிய நிலையில், பத்தொன்பதாம் நூற்றாண்டில், இந்தியாவில், முக்கியமாக வங்க நாட்டில் ஐரோப்பிய நாகரீகத்தின் மயக்கத்தால் தோன்றிய சமய நிலை மிகவும் வெட்கத்திற்குரிய ஒன்றாகும். "முன்னையோர் நமதுநாட்டின் முனிவரர் தேடிவைத்த முழுமுதல் ஞானமெல்லாம் மூட நம்பிக்கையென்ற கொள்கை" ஆங்கிலம் கற்றோர் மூளையைப் பற்றிக் கொண்டது. அவர்கள் தத்தம் போக்கின்படியும் பக்திக்கேற்றவாறும் புதுப்புது இயக்கங்களைத் தோற்றுவித்தனர். அந்நிய மதத்தினருக்கு இது ஓர் அரிய சூழ் நிலையைச் சேர்த்துக் கொடுத்தது.

இனி முனிவரின் பாடலுக்குச் சென்று அதன் பொருத்தத்தைச் சிந்திப்போம்:-

"பொய்மையா முலகின் மாயப் பொங்கிருளகல வன்னோர்
தம்மையாழ் நரகிற்றள்ளுஞ் சமய தாரகை மழுங்க
எம்மையாளுடையா னன்ப ரிதய தாமரைகளெல்லாஞ்
செம்மையாய் மலரஞான தினகர ருதயஞ் செய்தார்"

விவேகானந்தர் குருவைத் தேடிய விதமும் திருவாதவூரர் குருவைத் தேடிய விதமும், இருவரும் சரண்புகுந்து உபதேசம் பெற்ற முறையும் ஒரே தன்மையன. ஆகவே கடவுண்மாமுனிவரின் பாடல்களையே திரும்பவுந் தருகின்றோம்.

"மற்கட விலங்கு தன்னால் வளங்கெழு விளவின்மேவு
நற்கனி கொள்ளவேண்டி நயந்து கல்லெறிவார் போலச்
சற்குருவுளரோ வென்று நாடுவார் தர்க்கமெல்லாஞ்
சொற்கலை ஞானசைவர் தம்முடன் சொல்லலுற்றார்"

"மின்னினு நிலைமையில்லா விழுப்பொருள்யாவும் வேண்டேன்
உன்னடியணைந்து நாயேனுறு பவமொழித்தல் வேண்டும்
என்னையின்றடிமைக் கொள்வா யெம்முயிர்க்கிறைவாவென்று
முன்னுற வணங்கி நின்றார் முகமெலாங் கண்ணீர் வார"

*(வீரகேசரி 17-1-63ல் வெளிவந்தது)*

# நவ பாரதத்தின் மகா புருஷரது இலங்கை விஜயம் பற்றிய நி னை வு க ள்

இன்று மகர சங்கிராந்தி. இற்றைக்குச் சரீயாக நூறு வருஷங்கட்கு முன், இதே புண்ணிய தினத்தில் (12-1-1863) அவதரித்த மஹா புருஷரான சுவாமி விவேகானந்தரைப் பற்றி இன்று சிந்திக்க வேண்டியது இந்துக்களாகிய நமது முக்கிய கடமையாகும். சர்வ தர்ம சமரஸ குருமூர்த்தியான அப் பெரியாரை, நவபாரதத்தின் புதுயுக நபியென அழைக்க விரும்புகின்றோம். அவரது நூற்றாண்டு விழாவை மிகவும் விசேடித்த முறையில் உலகின் நாலா பக்கங்களிலும் கொண்டாடுவதற்கு ஸ்ரீராம கிருஷ்ண சங்கம் பல ஒழுங்குகள் செய்துள்ளது. வடக்கே அவர் பிறந்த கல்கத்தா நகரில் அவர் திருப்பெயரால் சர்வகலாசாலை நிறுவப்படுகிறது. தெற்கே அவர் தவம் புரிந்து தீர்க்கதரிசனம் பெற்ற கன்னியா குமரியில் ஓர் பெரிய நிலையம் எழும்பப் போகிறது. அவரது உபதேசங்களனைத்தும் திரட்டப்பட்டு இந்தியாவின் முக்கிய மொழிகளிலெல்லாம் பிரசுரமாகின்றன. உர்து மொழியில் கூட அவை வெளிவர இருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

மேல்நாட்டு நவீன நாகரிகத்தின் வளர்ச்சியையும் தளர்ச்சியையும் பற்றி ஆராய்ச்சி செய்த சரித்திர விற்பன்னர்கள், அது கி. பி. 1871-ம் ஆண்டையடுத்து ஆரம்பித்ததாக முடிவு செய்துள்ளார்கள்.

ஏறக்குறைய அதே காலத்திலேயே பாரதநாட்டில் சனாதன தர்மத்தின் மறுமலர்ச்சிச் சக்கரமும் மேல் நோக்கிச் சுழலத் தொடங்கியதாகும். இக்கால சக்கரத்தில் ஏழு சட்டங்கள் போலத் திட்டமாக அழகுடன் அமைந்திருப்பவை:—

1. வேதகாலம், 2. உபநிடத காலம், 3. இராமர் அவதாரமும் ஞானவாசிட்டமும், 4. கிருஷ்ணர் அவதாரமும் கீதோபதேசமும், 5. புத்தர் தருமம், 6. சங்கரர் அத்வைதம், 7. விவேகானந்தர் திக்கு விஜயம்.

எனவே பாரததேசத்தின் வரலாற்றை எமது புராதன சமய ரீதியாகக் கூறின், இப்போது நடப்பது இராமகிருஷ்ண-விவேகானந்த சகாப்தமாகும். "முன்னையோர் நமது நாட்டில் முனிவரர் தேடி வைத்த முழுமுதல் ஞானமெல்லாம் மூடநம்பிக்கை'' என்ற கொள்கை பரவிய காலத்தில் அவர்கள் தோன்றி அம் மயக்கத்தை இந்து மக்களின் மனதிலிருந்து களைந்தனர். விவேகானந்தரும் பரமஹம்ஸதேவரும் பூவும் மணமும், அறிவும் ஆற்றலும், மணியும் ஒளியும் போன்று ஒன்றே ஆனவர்கள். விவேகானந்தர் வாக்கில் வேதாந்த கர்ஜனையாக வெளிவந்த அத்தனையும் பரமஹம்ஸரின் சக்தியேயாம். இராமகிருஷ்ணரை சர்வமத சமரஸக் கோயிலின் மூல விக்கிரஹமென்றால், விவேகானந்தரை அக் கோயிலின் எழுந்தருள் விக்கிரஹமெனலாம். "நரேந்திரன் என் பக்கத்திலிருந்தால் போதும், நான் பிரம்மானுபூதியை அடைந்தவண்ணமேயிருப்பேன்'' என்று ஒருமுறை கூறிய பரமஹம்ஸர் மேலும் தொடர்ந்து சொல்லிய பாராட்டு மொழிகளை இங்கு வாசகர்கட்கு நினைவூட்ட விரும்புகின்றோம்.

''என்னைச் சுற்றி மலர்களை யொத்த மனமுடைய பக்தர்கள் பலருளர். அவர்களுள் சிலர் பத்து இதழ்களுள்ள மலர்களாகவும், சிலர் பதினாறு இதழ்களுடைய மலர்களாகவும், இன்னுஞ் சிலர் நூறு இதழ்களுடைய மலர்களாகவும் பல திறத்தினராக இருக்கின்றனர். அவர்களுள் சகஸ்ர தள அரவிந்தனாய் விளங்குகின்றான் நரேந்திரன்''. இதுவே அந்த அவதார மூர்த்தியின் அருள் வாக்கு.

தமிழ் நாட்டுப் பக்தி முறையில் தமிழ் இலக்கிய மரபைத் தழுவி விவேகானந்தர் அவதார மகிமையை விளக்க விரும்பின், கடவுண்மாமுனிவர் பாடல்கள் சகலவும் பொருத்தமுடைத்து. திருவாதவூரர் தோன்றிய காலத்திருந்த சமய நிலையை அந்த முனிவர் மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார். இரவில் விண்ணிலிருந்து ஒளிவீசும் நட்சத்திரங்கள் பகலில் நமது கண்களுக்குத் தெரிவதில்லை. அவைகள் விண்ணிலிருந்து மண்ணில் வீழ்ந்து மறைந்து விடவில்லை, முன்போலவே மேலேயே உள்ளன. இதனால் சூரியனின் பிரகாசத்தின் முன் ஒளி மழுங்கி இருந்தவிடம் தெரியாமல் மறைந்துள்ளன. அதேபோல் அநாதியான சைவத்ன் மறுமலர்ச்சிச் சூரியன் உதயமாகவே, புறசமயங்களின் ஒளி மழுங்கி இருந்தவிடம் தெரியாமல் மறைந்துள்ளன. அதேபோல் அநாதியான மறுமலர்ச்சிச் சூரியன் உதயமாகவே, புற சமயங்களின் ஒளி மங்கிவிட்டது என்கிறார் முனிவர்.

**''பொய்ம்மையா முலகின் மாயப் பொங்கிருளகல வன்றோர்
தம்மையாழ் நரகிற்றள்ளுஞ் சமயதாரகை மழுங்க
எம்மையாளுடையா னன்பரிதய தாமரைகளெல்லாஞ்
செம்மையாய் மலரஞான தினகரருதயஞ் செய்தார்''**

இங்கே குறிப்பிட்டிருப்பது மணிவாசகர் தோற்றம். இதே நிலையே சென்ற நூற்றாண்டில் இராம

கிருஷ்ணர்-விவேகானந்தர் வருகையில் காண்கின்றோம். அம்மட்டோ! விவேகானந்தர் குருவைத் தேடிய விதமும் திருவாதவூரர் ஆசானை நாடியடைந்தருள் பெற்ற விதமும் ஒரே தன்மையினவாம. ஐயா! தாங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா? அப்படியானால் அவரை எனக்கும் காட்ட முடியுமா?'' என்பவையே ஈசப்பித்துப் பிடித்திருந்த நரேந்திரனின் உதட்டிலிருந்து பிறந்த கேள்விகள். வெறும் புத்தகப் பூச்சிகளோடு அவர் செய்த தர்க்கங்கள் கொஞ்சமல்ல. இத் தர்க்கங்களெல்லாம் பழங்களைத் தாங்கிய விளா மரத்திலிருந்த குரங்கை நோக்கிக் கல் வீசிய முறையிலேயே அமைந்திருந்தன. கடவுண்மா முனிவர் பாடல் எவ்வளவு அருமையாக இதனை நமக்கு விளக்குகின்றது பார்ப்போம்.

'மற்கடலிலங்கு தண்ணூர் வளங்கெழு விளவின் மேவு
' நற்கனி கொள்ளவேண்டி நயந்து கல்லெறிவார் போலச்
சற்குருவுளரோ வென்று நாடுவார் தர்க்கமெல்லாஞ்
சொற்கலை ஞானசைவர் தம்முடன் சொல்லலுற்றார்.''

விவேகானந்தர் உலகெங்கும் உபதேசித்தது உபநிடத மார்க்கம். உபநிடதங்களையெல்லாம் அவர் கடைந்து கண்டுபிடித்த உண்மை 'சக்தி' என்ற ஒன்றேயாம். அதையே அவர் பாரத தேச மக்களுக்கு வற்புறுத்தினார். அவர் உடல் கொண்டுலாவியது முப்பது வருஷங்களேயாம். இந்த சுருங்கிய கால எல்லையுள் கால்பாகம் மாத்திரம் சமயப்பணியில் கழிந்ததாகும். அப் பத்தாண்டு காலத்தில் பலர் நூற்றாண்டு செய்யும் தொண்டை ஆற்றி வெற்றி கண்டார். இக் கட்டுரையானது பெரிதும் விவேகானந்தரின் இலங்கை திக்குவிஜயம் பற்றி இருக்க வேண்டுமென்பது ''ஈழநாடு'' ஆசிரியர் கட்டளை. ஆகையால் இத்துடன் அவர் வர

லாற்றை முடித்துக் கொண்டு குறித்த விஷயத் திற்குச் செல்வோம்.

மூன்று வருஷகாலம் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இந்துமதப் பணியாற்றி நமக்கு இறவாப் புகழைத் தேடிக் கொடுத்த மகானை முத லில் வரவேற்று உபசரிக்கும் பாக்கியம் கொழும் பில் வாழ்ந்த சைவ மக்களுக்கு அவர்கள் எதிர் பாராத முறையில் கிடைத்தது. இப் பேறு அவர் களின் பூர்வ புண்ணியத்தின் பயனாக வந்ததென லாம். சுவாமிகள் நேபிள்ஸிலிருந்து பிரயாணஞ் செய்த நீராவிக் கப்பல் 1897-ம் ஆு ஜனவரி மீ 15உ வெள்ளிக்கிழமை பிற்பகல் கொழும்புத் துறைமுகத்தை அடைந்தது. அவருடன் சேவியர் தம்பதிகளும் குட்வின் என்ற பக்தரும் கூட வந் தனர். பிந்தியவர் ஓர் சுருக்கெழுத்தாளர். அவ ரின் பக்தியும் உற்சாகமும் அயரா முயற்சியும் ஒன்று சேர்ந்து ஆற்றிய அருந் தொண்டின் பய னை, கொழும்பிலிருந்து கல்கத்தா வரையில் சுவா மிகளுக்கு அளிக்கப்பட்ட குதூகலமான வரவேற்பு களின் விபரங்களையெல்லாம் நாம் இன்று படித்து இன்புறுகின்றோம்.

கொழும்பில் இந்துக்கள் சார்பில் கனம் பொ. குமாரசுவாமி அவர்களையும், திரு. ஏ. குலவீரசிங் கம் அவர்களையும், முறையே தலைவராகவும் காரிய தரிசியாகவும் கொண்ட ஓர் வரவேற்புக் குழு நிறு வப்பட்டிருந்தது. சுவாமிகள் தங்குவதற்கு கறு வாத் தோட்டத்திலுள்ள வாண்ஸ் பிளேஸ் என் னும் வீதியில் ஓர் மாளிகை ஒழுங்கு செய்யப்பட் டிருந்தது. துறைமுகத்திலிருந்து அந்த மாளிகை வரைக்கும் அவரை இரண்டு குதிரைகள் பூட்டிய இரதமொன்றில் ஊர்வலமாக அழைத்துச் செல் லப்பட்ட காட்சி அதற்குமுன் கொழும்பு நகரில்

கண்டிராத ஒன்றாகும். தெருக்களெல்லாம் அலங் கரிக்கப்பட்டிருந்தன. இடைஇடையே அமைக்கப் பட்டிருந்த தோரணப் பந்தல்களில் "சுவாமிகளின் வரவு நல்வரவாகுக!" என்று எழுதப் பெற்றிருந் தது. மாளிகைக்கு முன்புறத்தில் அமைக்கப்பட் டிருந்த மேடையில் சுவாமிகள் அமர்ந்ததும் தேவா ரம் பாடப்பட்டது. அதன்பின் தலைவர் குமார சுவாமி அவர்கள் எழுந்து சாஷ்டாங்கமாக வணக் கஞ் செலுத்தி விட்டு உபசாரப் பத்திரத்தை வாசித் துக் கொடுத்தார். அதில் கீழ்க்கண்ட வசனங்கள் அடங்கியிருந்தன.

"மேல் நாட்டில் தாங்கள் மேற் கொண்ட பெரிய விரதத்தைப் பூர்த்தி செய்து தாங்கள் ஜென்ம பூமியை நோக்கி வருங்காலையில் தங்களை உபசரிப்பதில் நாங்களே முதன்மையராயிருக்கக் கைகூடியதை எங்கள் பாக்கியமென்றே கருதுகின் றோம்".

"சர்வசமய சம்பிரதாயங்களையும் நேர் சீர் படுத்தி ஒவ்வொரு சீவனையும் அதன் மன பரிபக் குவ நிலைக்குத் தகுந்தவாறு மதானுஷ்டானங்களில் சேர்ந்து இறைவனுக்கருகில் அன்புடன் கொண்டு போய்விடும் மதமாகிய இந்துக்களின் சர்வ சமய சமரச நெறியை ஐரோப்பா, அமெரிக்கா வாசிக ளுக்குத் தேவரீர் விளக்கி விட்டீர்கள்."

"மேல் நாட்டார்கள் தங்கள் உபதேசங் கார ணமாக பாரத பூமியின் பரமார்த்திக ஞானத்தின் சிறப்பை உணரும் அரும் பாக்கியத்தைப் பெற்றுள் ளார்கள். அம்மட்டோ! நமது நாட்டிலும் பலர் மேல்நாட்டு நாகரிக மயக்கத்திலிருந்து மீண்டு, நமது உன்னத புராதன ஞான நிதியின் உயர் வைக் காணச் செய்துள்ளீர்கள்.

இந்த உபசாரப் பத்திரத்திற்கு சுவாமிகள் அளித்த பதில் மிகவும் சுருக்கமானது. சனத்திரளில் இருக்கவோ நிற்கவோ இடமில்லாமல் ஒருவரை ஒருவர் மோதிக் கொண்டிருந்த மக்களை அதிகநேரம் சிரமப்படவிட மனமில்லாதவராய், கீழ்க்கண்ட அமிர்த வசனங்களை அருளிப் பேச்சை முடித்துக் கொண்டார்.

''அன்பர்களே! அரசியல் பதவியில் உயர்ந்த நிலை அடைந்த ஒருவனுக்காவது, செல்வத்தில் குபேரனை ஒத்தவனுக்காவது அல்லது ஓர் படை வீரனுக்காவது கிடைத்தற்கரிய விசேட மரியாதையைக் கேவலம் பிச்சை எடுக்கும் துறவியாகிய எனக்கு நீங்கள் செய்ததானது, நமது இந்து மக்களுடைய உள்ளம் எப்பொழுதும் சமயப்பற்று நிறைந்தது என்னும் பேருண்மையை நிரூபித்துக் காட்டுகிறது. நீங்கள் என்றும் மதானுஷ்டானங்களைப் பேணி வாழ வேண்டும். நமது தாய்நாடு க்ஷேமமாய் உயர்வுற்று விளங்க அதுவே வழியாகும். இத்தகைய சிறப்பு எனக்குக் கிடைத்ததென்னும் காரணம் பற்றி நான் மகிழ்ச்சியடையவில்லை. உங்களது மதாபிமானத்தை இந்த வைபவம் வெளியிடுகிறதென்பது கருதியே என் உள்ளம் பூரிக்கின்றது.''

கொழும்பிலிருந்து அடுத்த நாளே சென்னைக்குப் போகத் திட்டம் போடப்பட்டிருந்தது. ஆனால், தென்னிந்திய நகரவாசிகளினதும் இலங்கைத் தீவிலுள்ள இந்துக்களினதும் வேண்டுகோட்கிணங்கி அத் திட்டம் மாற்றப்பட்டது. அம் மாற்றங்காரணமாகவே கண்டி, மாத்தளை, அனுராதபுரம், வவனியா, யாழ்ப்பாணம் முதலிய நகரவாசிகளும் அவருக்கு நல்வரவு கூறும் பாக்கியத்தைப் பெற்றனர். தொடர்ந்து மூன்று நாட்கள் கொழும்பில்

தங்கவும் இசைந்தனர். சனிக்கிழமையன்று கொழும்பு நகரப் பூந்தோட்டத்தில் "பரிசுத்த பாரதபூமி" என்னும் விஷயங்குறித்தும், திங்கட்கிழமை நகரசபை மண்டபத்தில் "வேதாந்தம்" என்னும் விஷயம்பற்றியும் இரு நீண்ட உபந்நியாசங்கள் நிகழ்த்தினர். பிந்திய கூட்டத்தில் பெரும்பாலானோர் ஐரோப்பியர்களைப்போல உடை தரித்திருந்ததைக்கண்டு மனம் புண்பட்டு சுவாமிகள் அவர்கட்குப் பின் வருமாறு அறிவுரை புகட்டினார்கள்:-

"ஆடையிலுமா நாம் ஐரோப்பியர்களைப் போன்று நடக்கவேண்டும்? அவர்கள் நம்மைப் போல் உடுப்பதில்லையே! உடையானது தேச சீதோஷ்ணஸ்திதியைப் பொறுத்ததேயன்றி, நாகரீகத்தைச் சார்ந்ததல்ல. அடிமைகளாக முயலாதீர்கள் எதுவரினும் உங்கள் தேச சீதோஷ்ண ஸ்திதியை கைவிடாதீர்கள்"

குறித்த இரு நிகழ்ச்சிகளுக்குமிடையே ஓய்வுநாளான ஞாயிற்றுக்கிழமை வந்து பொருந்தியது. அன்று மாலை அவர் கொச்சிக்கடை சிவன் கோயிலுக்குச் சென்று வழிபட்டார். அக்காலத்தில் தமிழர் வசித்த வீதியான செக்கடித் தெரு மார்க்கம் அவர் அழைத்துச் செல்லப்பட்டார். அவ்வீதியில் வாழ்ந்த ஒவ்வொரு இந்துவின் இல்லமும் புஷ்ப மாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தெருத்திண்ணையெல்லாம் கும்பமும் குத்துவிளக்கும் ஒளிசெய்ய சுவாமிகள் கழுத்தில் மாலைகள் குவிந்தன. அறுபத்தைந்து ஆண்டு எல்லைக்குள் ஒரு நகரமோ, நகர வீதியோ, மனிதரின் பண்பாடோ எவ்வளவு தூரம் மாறிவிடக்கூடும் என்பதற்கு இன்றைய செக்கடித் தெரு ஓர் அரிய எடுத்துக்காட்டாகும்.

19-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை புகை யிரதமார்க்கம் கண்டிக்குப் போய், அங்கு வசிக்கும் இந்துக்களின் வரவேற்பை ஏற்று, அவர்களின் அன்புக்கு நன்றிகனிந்த ஆசிமொழி கூறிவிட்டு, மாலை மாத்தளை சேர்ந்தார். அன்றிரவை அங்கு கழித்து அடுத்தநாட்காலை யாழ்ப்பாணத்திற்குப் பிரயாணமானூர். பிரயாணஞ் செய்த மெயில் கோச்சு வண்டியின் சக்கரமொன்று உடைந்து போனமையால், சிரமப்பட்டு மாட்டுவண்டி ஒன்றை அமர்த்தி அனுராதபுரஞ் சேர்ந்தார். அங்கே போதிமரத்தடியில் சுவாமிகள் பிரசங்கம் செய்யப்போகும் வேளையில் சில மதவெறி பிடித்த அறிவிலிகள் மேளங்களை அடித்தும், தகரங்களைத் தட்டியும் பிரசங்கத்தைச் சனங்கள் கேட்கமுடியாது செய்ய எத்தனித்தனர். அப்போது பக்தர்களின் உள்ளத்தில் ஆத்திரம் பொங்குவதை உணர்ந்த சுவாமிகள், பேச இருந்த 'தெய்வ ஆராதனை' என்னும் விஷயத்தைவிட்டு, 'சமய வாழ்வில் சகிப்புத்தன்மை' என்பது குறித்துப் பேசிக் கூட்டத்தில் அமைதி நிலவச் செய்தார். சுவாமிகளின் இலங்கை விஜயத்தில் நடந்த அசம்பாவிதமான சம்பவம் இது வொன்றேயாம்.

பின்னர் யாழ்ப்பாண யாத்திரை தொடர்ந்து செய்யப்பட்டது. இரண்டு இரவுகள் நித்திரை யின்றிக் கழிந்தன. அந்த நஷ்டத்திற்கு ஈடுசெய் வது போல் வவனியாவில் எதிர்பார்த்திராத ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. அடுத்தநாள் காலை அதேவித ஒரு வாய்ப்பை ஆனையிறவிலுள்ள மக் களும் பெற்றனர். 24ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குச் சுவாமிகளை எதிர்நோக்கிப் பல பிரமுகர்கள் உப்பாற்றுக்கருகில் காத்திருந் தனர். மெயில் கோச்சுப் பிந்திவிட்டபடியால்

அவர்கள் மேலும் ஐந்து மைல் தூரம் சென்று சாவகச்சேரியில் வரவேற்றனர். சுவாமிகள் இரு குதிரைகள் பூட்டி அலங்கரிக்கப்பட்டிருந்த இரதத்தில், சுவாமி நிரஞ்ஜனானந்தருடனும் நியாய துரந்தரர் நாகலிங்கம் அவர்களுடனும் அமர்ந்து முன் செல்ல, ஏனைய பிரமுகர்கள் அந்த இரதத்தைத் தொடர்ந்து இருபது குதிரை வண்டிகளில் பிரயாணமாயினர். காலை பதினொன்றரை மணிக்கு அவர் தங்குவதற்கென ஒழுங்கு செய்யப்பட்டிருந்த புரக்டர் வே. சி. நாகலிங்கம் அவர்களின் இல்லத்தைச் சேர்ந்தனர் அங்கே சுவாமிகள் சிறிது நேரம் ஓய்வு பெற்றனர்.

அன்று இரவு நடந்த குதூகல வைபவம் யாழ்ப்பாணச் சரித்திரத்தில் பொன்னெழுத்தில் பொறிக்கப்படவேண்டிய தொன்றாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் நாலாபக்கங்களிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் வேதாந்தகேசரியின் திருமுகதரிசனம் கோரி வந்து குவிந்தனர். அவர் தங்கியிருந்த இல்லத்திலிருந்து இந்துக்கல்லூரி வரையிலுமுள்ள காங்கேசன் துறை வீதிமுழுவதும் ஓர் ஆலயத்தின் மண்டபம்போல் புனிதமான பூமணஞ் செறிந்து காட்சியளித்தது. இரவு எட்டரைமணிக்கு ஆரம்பித்த தீவட்டி ஊர்வலம் பத்துமணிக்கு முடிவடைந்தது. எள்ளுப்போட இடமின்றி இரண்டு மைல் தூரத்திற்குப் பரந்திருந்த சனசமுத்திரத்தினிடம் காணப்பட்ட அமைதியும் அடக்கமும் கொழும்பில் இருக்கவில்லை; பின்னர் இந்திய நகர வரவேற்பு நிகழ்ச்சிகளிலும் காணக் கிடைக்கவில்லை. செல்லும் வழியில் கதிரேசன் கோவிலிலும் சிவன் கோவிலிலும் இரதத்தை விட்டு சுவாமிகள் இறங்கி வழிபாடாற்றி அங்குள்ள குருக்கள்மார்களால் மாலைகள் சூட்டப்

பெற்றனர். பகிரங்க வரவேற்பு வைபவம் இந்துக் கல்லூரியின்முன் நிறுவப்பட்டிருந்த பந்தரின் கீழ் நடைபெற்றது. இந்துக்கள் மாத்திரமன்றி, கிறிஸ் தவர்களும், இஸ்லாமியர்களும் சமுகமளித்தனர் திரு. எஸ். செல்லப்பாபிள்ளை அவர்கள் தலைமை தாங்கி உபசாரப்பத்திரத்தை வாசித்துக்கொடுத் தார். அதற்கு சுவாமிகள் தகுந்தபடி பதிலளித்த பின்னர் கூட்டங் கலைந்தது அடுத்தநாள் மாலை 7 மணிக்கு அதே இடத்தில் அவர் 'வேதாந்த மதம்' என்னும் பொருள்பற்றி ஓர் நீண்ட சொற்பொழிவு ஆற்றினார். அவரது பிரசங்கம் முடிந்ததும் சபை யோரின் கேள்விக்கிணங்கி சேவியர் துரையவர்கள் தாம் இந்து மதத்தை ஏற்றுக் கொண்ட காரணங் களை எடுத்து விளக்கினார்கள். இத்துடன் இலங்கை நாட்டில் சுவாமிகளின் பதினொருநாள் திக்கு விஜ யம் முடிவாயது. யாழ்ப்பாணத்தின் வெவ்வேறு ஊர்களிலிருந்து அவருக்கு அழைப்புகள் வந்து குவிந்தன. அவரது உள்ளம் தாய்நாட்டில் கால் வைக்கத் துடிதுக் கொண்டிருந்தபடியால் அவற்றை யெல்லாம் மறுத்து, திட்கட்கிழமை இரவே (25-1-1897) பாம்பனுக்குச் செல்ல படகு ஒழுங்கு செய்யுமாறு வற்புறுத்தினார். வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நடுநிசியில் புறப் பட்ட படகு அடுத்தநாள் பின்னேரம் மூன்று மணிக்குப் பாம்பனை அடைந்தது. இராமநாத புரத்து மன்னரான ஸ்ரீபாஸ்கர சேதுபதியவர்கள் தமது சமஸ்தான படகுடன் சென்று சுவாமிகளின் திருவடிகளை மலர் கொண்டருச்சித்து, உள்ளம் உருக, ஆனந்தக்கண்ணீர் வடிய, வணங்கி வரவேற் றார். இந்திய மண்ணில் நடந்த இந்த முதல் வரவேற்பு சேதுபதி மன்னர் தலைமையில் நிறை வேறியது திருவருட் சித்தப்படியாகும். சுவாமி கள் கால்நடையாக இந்தியாவைச் சுற்றி யாத்

திரை செய்தபோது இராமேஸ்வர தரிசனத்தின் பின் அந்த மன்னரைச் சந்தித்த வேளையில்தான் சிக்காக்கோ சர்வமத மகாசபைக்குச் செல்லும் விஷயம் சம்பாஷிக்கப்பட்டது. அதனை உறுதிப்படுத்தி, கட்டாயமாகச் செல்ல வேண்டுமென வற்புறுத்திப் பொருளுதவியும் செய்தவர் அவர். எனவே மேல்நாடுகளில் இந்துமதக் கொடியேற்றி வெற்றியுடன் திரும்பிய அப் பெரியாரின் திருப் பாதங்களை முதலில் தீண்டும் பாக்கியம் அவருக்கே உரித்தான ஒன்றல்லவோ! அம்மட்டோ! சுவாமிகளை இராமநாதபுரப் பட்டினத்தின் முக்கிய வீதிகளில் ஊர்வலமாக அழைத்துப் போனபோது அவர் இவர்ந்து சென்ற இரதத்திற் பூட்டப்பட்டிருந்த குதிரைகளை அவிழ்த்துவிட்டு மன்னரே தமது பரிவாரங்களுடன் அந்த இரதத்தை இழுத்துச் சென்றார். இந்த வைபவத் தொடர்பில் ஸ்ரீ பாஸ்கர சேதுபதி அவர்களால் நாட்டப்பெற்ற ஞாபக ஸ்தம்பத்தில் கீழ்க்கண்ட வசனம் பொறிக்கப்பட்டிருப்பதை அன்பர்கள் இன்றும் காணலாம்.

"ஸ்ரீமத் பூஜ்யபாத விவேகானந்த சுவாமிகள் குட கோளார்த்தத்தில், வேதாந்த சித்தாந்தத்தைப் பரப்புதற் பொருட்டு லோகோபகாரமார்த்தமாக உத்தம சேவைசெய்து, ஆங்குக் குறைபாடில்லாத காரியசித்தியுடன், அழியாப் புகழடைந்து, வெற்றித்தார்சூடி அங்கிருந்து புறப்பட்டு ஆங்கிலேய சீடர்களுடன் பாரத பூமியில் முதல் முதலாக 1897—ம் வருஷம் ஜனவரி மீ 26ந் திகதி அன்று திருவடி சாத்திய புண்ணிய ஸ்தலத்தைக் காட்டும் ஞாபக ஸ்தம்பம்."

சுவாமிகளின் இலங்கை விஜயம் ஈழநாட்டிலுள்ள இந்துக்கள் பலரின் உள்ளத்தில் ஞான

வேட்கையைத் தூண்டியது. அவர்களின் விண்ணப் பத்திற்கிணங்கி. 1897-ம் ஆண்டிலேயே, அவர் தமது சகோதர சீடர்களுள் ஒருவரான சிவானந் தரை இங்கு அனுப்பியிருந்தார். அப்பெரியார் அநேக வேதாந்தப் பிரசங்கங்களைச் செய்ததோடு நின்றுவிடாது தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் ஐரோப்பியர் சிலருக்கும் ராஜயோகம், கீதை இரண்டையும் பாடமுறையில் புகட்டிவைத்தார். இம்முறையில் அவர் தூவிய வித்தின் விளைவே இன்று நாம் காணும் விவேகானந்த சபை, இராம கிருஷ்ண சங்கம் முதலாய இயக்கங்களாகும்.

தத்தர்செய்த தனித்தவத்தால் அவதரித்துத்
தன்மயத்தில் சின்மயமாய் தன்மை பெற்றே
பித்தனென்ற பேர்படைத்த ராமகிருஷ்ணப்
பெருமானின் திருவருளுக் குரியனாகி
அத்துவித நெறிவிளக்கும் குரவனாயெம்
ஆன்றோர்கள் தேடிவைத்த ஞானப்பேற்றை
எத்திசையும் எடுத்தளித்த விவேகானந்த
ஏந்தல்பதம் ஏத்திநாம் வாழுவோமே

— திரு. க.இ.

# குருவழிபாடு

ஆதியும் அந்தமுமற்று, வாக்கு மனம் இரண்டையும் கடந்து தாக்கற்று நிற்கும் தனிப்பரம் பொருளை வெவ்வேறு மதத்தினர் வெவ்வேறு விதமாக உபாசிக்கின்றனர். ஒரு நாமமுமில்லாத அதனை ஆயிரம் திருநாமங்களால் போற்றுவோர் அனேகர். ஒருவடிவிலுமடங்காத அதனைப் பல்வேறு வடிவங்களாகப் பாவித்துப் பரவுவோர் பலர். திருவாகக் கொள்வோர் சிலர். அருவுருவமாகவும் அருவாகவும் வழிபடுவோர் வேறுசிலர். இவ்வித வேற்றுமையான மார்க்கங்களெல்லாம் குருவழிபாட்டில் ஒற்றுமையடைகின்றன. எல்லாமதத்தினரும் ஏற்றுக்கொள்ளும் கொள்கை குருவழிபாடு ஒன்றுதான்.

பௌத்தம், சமணம், கிறிஸ்தவம், இஸ்லாம், சீக்கியம் முதலாய சரித்திரகால மதங்களைத் துருவி ஆராய்ந்தால் குரு வழிபாடே அவற்றின் அடிப்படைக்கொள்கையாக இருந்ததைக் காணலாகும். பகவான் புத்தரை ஆரம்பத்தில் ஆதரித்த மன்னனும் விம்பசாரம், அவரை ஓர் பரமாசாரியராகவே வணங்கினன். வடமொழியில் புத்தருக்குள்ள மறுபெயர்களுள் "சாஸ்தா"வும் ஒன்று. "சாஸ்தா" என்பதற்கு ஐயன், ஆசான், குரு என்பன பொருள். இக் காரணம் பற்றியே திவாகரம்புத்தரை "அருங்கலை நாயகன்" என்றும், சூடாமணிநிகண்டு "நண்ணியகலைகட்கெல்லாம் நாதன்" என்றும் விளம்புகின்றன. பின்னுளில் "சாஸ்தா" தமிழில் "சாத்தன் சாத்தனுர்" எனக்கருத்து மாருமலே திரிபுபெற்றன. வைஷ்ணவர்கள் புத்தரை மகாவிஷ்ணுவின் அவதார

மாக்கி பௌத்த ஆலயங்களை மாற்றிக் கொள்ள, சைவர்கள் அவரை சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் பிறந்த ஐயனாராக்கி (அரிஹரபுத்திரர்) கிராமங்கள் எல்லாம் அவனுக்குக் கோவில்கள் அமைத்தனர். மலையாளத்தில் இன்று காணப்படும் ஐயப்பன் வழிபாடு இந்த முறையில் தோன்றிய தென்பதே ஆராச்சியாளர் தக்க ஆதாரங்களுடன் கண்ட முடிபாகும். குருவணக்கம் நாளடைவில் எவ்விதம் தெய்வ வழிபாடாக மாறியதென்பதை எடுத்துக்காட்டவே இந்த விளக்கம் தந்துள்ளோம்.

இந்து மத சம்பிரதாயத்தை ஆராயும்போது, மேலே தரப்பட்டுள்ள விளக்கத்திற்கு எதிர்மாறான கொள்கையைக் காண்கின்றோம் ஆத்மீகவாழ்வின் ஆரம்பதசையில் பக்தியின் முதற்படியில் கடவுளெனத் தோன்றும் ஆண்டவன் அருளானது இரண்டாவது படியில் குருவாயே வந்து ஆட்கொள்ளுகின்ற தென்பதே இந்து மத சாரம்.

> "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாற் தொடங்கினர்க்கோர்
> வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே".

என்கிறார் தாயுமானவர். எனவே மூர்த்தி வழிபாடு, தலயாத்திரை, தீர்த்தமாடுதல் மூன்றும் முதலில் அத்தியாவசியகமான சாதனைகளாகின்றன. அவற்றினால் மனப் பரிபக்குவம் அடைந்த மாந்தர்க்கே உண்மையான குருவின் கடாட்சம் கிட்டுமென்பதும், அவரின் கருணையும் உபதேசமுமின்றி எவர்க்கும் ஆத்மீக வாழ்வில் பூரணமடைதல் முடியாதென்பதும் வெளிப்படை. மிகச் சில பக்குவிகளுக்கே இறைவன் அறிவுக்கறிவாய் உள் நின்று தத்துவ நிலையை உணர்த்துவதுண்டு. ஏனையோருக்கு

'குற்றமெலாநீக்துக் குணமனைத்துஞ் சேர்ந்தாலும்
சுற்றமெலா நீத்துத் துறந்தாலும் - சொற்றபல
செய்தவங்கள் செய்தாலுந் தேசிகனைக் கூடுமள
வெய்துவரோ வின்ப நிலை.'

என்னும் பொது நியதியே பொருத்தமாகும். சங்கரர், இராமானுஜர், மாணிக்கவாசகர், ஞான சம்பந்தர், மங்கையர்க்கரசியார், மெய்கண்டார், குமரகுருபரர், தாயுமானர், விவேகானந்தர் முத லான மகான்களின் வாழ்விலும் வாக்கிலும் இந்த உண்மை அருமையான விளக்கம் பெற்றுள்ளது. குரு உபதேசமின்றியே கோதவ மெய்ஞ்ஞானக் கொழுந்தாய்த் திகழ்ந்த குருமூர்த்தியான ஸ்ரீரமண தேவர் அருளியுள்ள வாக்கின்படி, சற்குருவானவர் சர்வேச்சுர சொரூபமாவர். பரமபதத்தை அல் லது ஆத்ம ஞானத்தை விரும்பி நிஷ்காமிய பக்தி செய்யும் சீவனுக்கு அனுக்கிரகம் செய்ய சர்வேச் வரனே அப் பக்தியின் முடிவில் தனக்கு இயல்பான சத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்று அம்சங்க ளோடு பெருங் கருணையால் நாமரூபமென்ற மற் றிரண்டு அம்சங்களையும் கொண்டு, மனிதனாய் வெளிப்படுகிறார். எனவே, குருவும் கடவுளும் உண்மையில் வேறல்லர். ரமணரைப் போலவே அவருக்கு ஐந்நூறு ஆண்டுகட்கு முன் அருணஜோதி யிற் கலந்த அருணகிரிநாதரின் வாழ்க்கையோ இந்த இலக்கணத்திற்கு ஓர் ஒப்பற்ற இலக்கியமா கும். அவர் பாடலினால் அர்ச்சித்து முருகப்பெரு மானிடம் வேண்டிக் கொண்ட வரங்களெல்லாம் இறுதி அனுபூதி நிலையில், 'குருவாய் வருவாய் அருள்வாய் குகனே' (கந்தர் அனுபூதி) என்ற ஒரு தனிப் பிரார்த்தனையில் அடங்கிவிட்டன.

உலகின் தொல்பெரும் மக்களான தமிழரின் ஆதித் தெய்வமாம் முருகன், சாதி மத பேதமெல்

லாங் கடந்து நிற்கும் சமரஸக் கடவுளாவர். அவரே உலகின் முதற் குருவுமாவர். ஏனைய குருமார்களெல்லாம் அவரது வழிபாட்டைப் பின்பற்றித் தோன்றியவர்களே. இராமரும், கிருஷ்ணரும், புத்தரும் வருவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே உலகெங்கும் பரவியிருந்த சிவமதம் அவருக்கு 'சிவகுரு' என்ற நாமம் சூட்டியிருப்பதொன்றே முருகப் பெருமானின் தொன்மைக்குப் போதிய சான்றாகும். சனற்குமாரராய் வந்தவர் அவரே; இருபதாம் நூற்றாண்டில் ஜகத்குருவாய் விளங்கிய ரமணரும் அவரே; இவ்விருவர்கட்கிடையே வடக்கே குமரிலபட்டராகவும், தெற்கே திருஞானசம்பந்தராகவும் அவதரித்தவரும் அவரே; சென்ற நூற்றாண்டில் ஞானசம்பந்தப் பெருமானைக் குருவாகக் கொள்ளும் பேறுபெற்ற இராமலிங்க சுவாமிகள், அவர் தம்மையடைவார்க்கெல்லாம் கடவுளைக் காட்டியவண்ணம் என்றும் இருப்பவர் என விளக்கி

> 'பயிலு மூவாண்டிற் சிவைதரு ஞானப்
> பால் மகிழ்ந்துண்டு மெய்நெறியாம்
> பயிர் தழைத்துற வைத்தருளிய ஞானசம்
> பந்தனென் றோங்கு சற்குருவே'

என்று போற்றியிருப்பதை உற்று நோக்குக. சீகாழி கண்ணுடைய வள்ளல் அருளிய 'ஒழிவிலொடுக்கம்' என்னும் நூலின் சிறப்புப் பாயிரச் செய்யுளில் 'வள்ளல் குருராயன் வாது வென்ற சம்பந்தன்' என வரும் முதல் வரியில், சம்பந்தப் பெருமானுக்குச் சிறப்பிற் சிறப்பாய், காரணப் பெயராய், 'குருராயன்' என்பது 'வாது வென்ற சம்பந்தன்' என்பதற்கு மேல் நிற்க வைத்துள்ள சிறப்பின் நுட்பத்தை நோக்கும்போது அவர் சம்பந்தராய் அவதரிக்குமுன் குமாரசற்குருவாய் அர

னுக்கும் அகத்திய முனிக்கும் உபதேசித்தருளிய உண்மை குறிப்பால் அறியக்கிடக்கின்றது. அவர் வேதாகமாதிகளை ஓதாதுணர்ந்த மூதறிவாளரென்பதும், அவற்றை ஓதியுணர்ந்த ஆசாரியர்கட்கெல்லாம் அவரவர் அறிவின் கண் அருளுருவாய் நின்றறிவித்தும், ஆசாரிய வடிவில் வெளிநின்றும் திருநோக்கம் முதலாய அறுவகைத் தீக்ஷைகளால் ஏனைய மக்களுக்கு அநுக்கிரகம் செய்யும் பெருமையரென்பதும், 'குருராயன்' என்னும் திருநாமத்தால் விளங்கும் உண்மைகளாகும்.

இவ்விதம் குருவழிபாட்டுக்குத் தனிப்பெருமை அளித்த தென்னாட்டில் குருவழிபாடு, கடவுள்வழிபாடு, அடியார் வழிபாடு மூன்றையும் ஒன்றுசேர்த்துக் குரு-லிங்க-சங்கம வழிபாடு எனக்கூறும் சைவமரபு வளர்ந்த தமிழ் நாட்டிலே இன்று குருவழிபாடு பெரிதும் மறைந்து வருகின்றது; வடநாடு இவ்விஷயத்தில் அவ்வளவு மோசமான நிலையில் இல்லை. உண்மையான சாதனையற்ற வெறுஞ் சாஸ்திரப் படிப்பே இச்சீர்கேட்டுக்கு முக்கிய காரணமாகும். மகான்கள் மூலமே நமது மத சம்பிரதாயம் நிலைபெற்றிருக்கின்ற தென்பதை இவர்கள் உணருவதில்லை.

புத்தகங்களின் உதவியைக் கொண்டோ அல்லது அவற்றைப்படித்துள்ள பண்டிதர்களின் உதவியைக்கொண்டோ சாஸ்திரங்களின் சாரத்தை அறியமுடியாது; அவற்றின் மூல நோக்கமான ஆத்மீக எழுச்சியையும் பெறமுடியாது. ஒரு மனிதனுக்கு அவனை மேலெழச் செய்யும் உணர்ச்சி என்னும் அருட்பெற்றி இன்னுமொரு மனிதனிடமிருந்தே வரவேண்டும். எந்த மனிதனிடமிருந்து அவ்வித உணர்ச்சி கிடைக்கின்றதோ, எவரது சந்நிதி மாத்திரத்தில் ஆத்மசாந்தியும்

ஞான எழுச்சியும் தோன்றுகின்றனவோ, அவர்களே ஆசாரியர்களாவர். அவர்கள் எதுவும் பேசாரேனும் அவர்கள் எண்ணம் நிறைவேறும். அவர்கள் உண்மை எங்கும் பரவும். அவர்களது உறவால் சீவராசிகள் புனிதமடைகின்றன. அவரவர் அன்பிற்கும் அறிவிற்கும் பக்குவத்திற்கும் பொருந்த ஆத்மவளர்ச்சியும் பேரின்பமும் பிறக்கின்றன. பிரமத்தை அறிந்த ஞானிகள், ஆத்ம சித்தி பெற்ற மகாபுருஷர்கள் என்றும் உளர். நமது உள்ளத்திலிருந்து ஆர்வக்கனல் பொங்கி எழுந்தால் அவர்களது அருள்மாரி இறங்கவே செய்யும். 'தேடுக கிடைக்கும், தட்டுக திறக்கும்' என்னும் கிறிஸ்து நாதரின் திருவாக்கியம் பொய்க்காது.

திடீரெனத் தோன்றும் உணர்ச்சி காரணமாக எவரையும் குருவாக அங்கீகரிக்கவே கூடாது. மெய்யான குருவாக ஒருவரை ஏற்குமுன் அவரை நீண்ட காலம் அவதானிப்பது அவசியமாகின்றது. சுவாமி விவேகானந்தரின் குரு - சிஷ்ய சரிதம் இவ் விஷயத்தில் மிகவும் அருமையான படிப்பினையாகும். ராமகிருஷ்ணர் போன்ற ஓர் அவதார புருஷரைக் குருவாக ஏற்குமுன் அவரை எவ்வளவோ காலம் எத்தனையோ விதத்தில் பரீட்சித்துப் பார்த்தனர். எவரிடத்தில் குருபீட ஆசை, சீடரைச் சேர்க்கும் விருப்பம், பிறர் தம்மை வணங்குவதில் திருப்தி முதலாய குணங்கள் தோன்றுகின்றனவோ அவர்களின் ஆத்மீகவாழ்வின் இலட்சியம் தவறான வழியில் செல்லுகிறதென்பதை அறிந்து கொள்ளவேண்டும். சீலம் நிலைக்குமுன் எழுந்த குண்டலி சக்தியைக் கொண்டு சில்லறைச் சித்திகளால் மக்களின் மனத்தைக் கவரும் ஆசாமிகளும் உளர். அவர்களின் உறவை நாடுமுன் அவர்களின் நடத்தையை நன்கு கவனிப்பதே அறிவுடைமை.

குரு-சீட வாழ்வில் இவ்விதமான படுகுழியில் விழும் அபாயங்கள் எப்போதும் உண்டென்பதை வற்புறுத்தவே திருமூலர்,

'குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே' - திருமந்திரம்

என்று ஈராயிரம் வருடங்களுக்கு முன்னரேயே அரிய உவமானத்துடன் எச்சரித்துள்ளார்.

திடஞானி தெரிசனமே தீர்த்தமாடல்
திடஞானி தெரிசனமே தேவபூஜை
திடஞானி தெரிசனமே ஜெபதபங்கள்
திடஞானி தெரிசனமே செயுமறங்கள்
திடஞானி தெரிசனமே சிவத்தைக்காணல்
திடஞானி தெரிசனமே சிவத்தின்சேவை
திடஞானி தெரிசனமே மேவுதற்கு
திருவிதமா மூலகத்தும் அரிதாமியார்க்கும்.

# பகவான் புத்தர் காட்டிய புனிதப் பாதை

இந்துக்களுக்கும் பௌத்தர்கட்கும் ஒவ்வொரு மாதத்திலும் பூரணைத் திதி புண்ணிய நாளாகும். அவற்றுள் சித்திரா பூரணை விசேடமுடைத்து. சாந்திரமாதக் கணக்கின்படி வைசாகப் பௌர்ணமி என்றழைக்கப்படும் சித்திராபூரணை பகவான் புத்தரின் அவதாரத்தினுலும், அவரது ஞான உதயத்தினுலும், பரிநிர்வாணத்தினுலும் மூன்றுமுறை புனிதமுற்ற காரணத்தினுல் பௌத்தர்கட்கு அந்நாள் மிகவும் விசேடித்த புண்ணிய நாளாகும். புத்த பெருமானின் அற்புத வரலாற்றினைப் படிப்பதற்கும், அவரது அரிய உபதேசங்களைச் சிந்திப்பதற்கும் இப்புனித தினத்தைவிடக் கூடிய சிறப்புற்ற தினம் பிறிதொன்றில்லையெனலாம். இந்த மகா புருஷருடைய குணதிசயங்களைப் படிக்கும் பொழுதும் கேட்கும் பொழுதும் அவர் வாழ்க்கையாலும் வாக்காலும் விளக்கிய வழியை நாம் எவ்வளவு தூரம் பின்பற்றியுள்ளோம் என்பதைப் பரிசீலனை செய்வதற்கேற்ற சந்தர்ப்பம் நமக்குக் கிடைக்கின்றது.

சாக்கிய குலதிலகமான புத்தரின் பழைய பெயர் சித்தார்த்தர். அவர் கி. மு. 563ம் ஆண்டு சித்திரை மாசப் பூரணையன்று காசிக்கு வடக்கே நூறுமைல் தூரத்திலுள்ள லும்பினி என்னுமிடத்தில் சுத்தோதன மன்னனுக்கும் மாயாதேவிக்கும் திருக்குமாரராக அவதரித்தார். பிறந்த ஏழாம் நாள் தாய் மரணமடைய அன்னாரின் சகோதரியும் சுத்தோதனனின் இரண்டாம் மனைவியுமான மஹா பிரஜாபதி என்பவரால் வளர்க்கப்பட்டார். சிறு வயதிலேயே மனப்போங்கில் துறவுக் குணங்களைக்

கண்ணுற்ற தந்தை மிகவும் வருந்துவாஞயினன். பதினெட்டாம் வயதில் பூர்வ ஜென்மத் தொடர்பால் சித்தார்த்தருக்கும் யசோதரைக்குமிடையே நிகழ்ந்த கண் கருத்தொன்றிய காதல் காட்சியால் சுத்தோதனனின் கவலை தீர்ந்ததெனினும், இல்லறத்தில் புகுத்திய மகனை ஓர் இன்பக் கோட்டைக்குள், உலக இயல்பை அறியா முறையில், அடைத்து வைக்கத் தந்தை திட்டமிட்டனன். வாழ்ந்த நகரமாகிய கபிலவஸ்து, உலகத் துயரின் வாடை சிறிதேனும் வீசா விதத்தில் இந்திர லோகமாக அமைக்கப்பட்டிருந்தது. பிணி, மூப்பு, சாக்காடு ஆகிய மூன்றையும்பற்றி மகன் ஒன்றுந் தெரியாமல் வாழவேண்டுமென்பதே மன்னனின் கட்டளை. விதியை யார்தான் வெல்ல முடியும்?

இவ்விதம் இன்பக் கோட்டைக்குள் அடைபட்டு யசோதரையுடன் இல்லறம் நடாத்தி, அந்த நல்லறத்தின் பயஞக ராகுலன் என்னும் செல்வனைப் பெற்ற சித்தார்த்தரின் மனம் உலகமக்களின் துயரத்தைப் பற்றியே சதா சிந்திக்கத் தொடங்கியது. இயல்பாகவே அவர் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த துறவு வேட்கையைத் தந்தையின் சூழ்ச்சிகளும் அவன் சோடித்த இன்பத் தோற்றங்களும் தடுக்க முடியவில்லை. அரசனறியாமல் மாறுவேடம் பூண்டு வந்து, மனித வாழ்க்கையின் இயல்பையும் துக்கத்தையும், நோயாளி, கிழவன், பிணம் மூன்றிலும் கண்டுகொண்டார். மணிமுடி தாங்கி மன்னர் மன்னஞய், நீணிலம் புரக்கும் நினைப்பு இறந்துபட்டது. உலகிலுள்ள உயிர்களெல்லாம் உய்ய நாட்டையிழந்து தன்னந்தனியஞய்த் தரணியில் ஓர் ஆண்டியாக வாழ விரும்பிஞர். "விழி! எழு! துற! அறி!" என அவர் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகள் சரியென்பதை விளக்குவது போல், ஓர் இரவு அரிய மனைவி பயங்கர

மான கனவு ஒன்றைக் கண்டு 'காலம் வந்துவிட்டது காலம் வந்துவிட்டது!' என வாய் விட்டுப் புலம்பிய வார்த்தைகளையே குரு உபதேசமாகக் கொண்டு துறவு பூண்டார். அப்போது அவருக்கு வயது இருபத்தொன்பதாகும். பிறரது துன்பங்களையும் துயரங்களையும் தன்னுடைய சொந்தமானவையாக உணர்ந்து மனம் நொந்து, அரசபோகத்தையும் ஆட்சியையும் மனை இன்பத்தையும் துறந்தவர் சித்தார்த்தர் ஒருவரே. இக் காரணத்தாற்தான் 'புத்தரின் துறவு பெருந் துறவு' எனும் இப் பொன்மொழி இன்றுவரை பெரியோரால் பாராட்டப் படுகின்றது.

ஆறுவாரக் கடுந்தவத்தின் பயனாகக் காயாவிலுள்ள அரசமரத்தடியில் சித்திரை மாசமும் பூரணைத் திதியும் கூடிய சுப வேளையில் சித்தார்த்தர் ஞானக்காட்சி பெற்றுப் புத்தராக மாறினார். புத்தர் என்னும் பதம், பரிபூரண ஞானம் பெற்றவரென்பதைக் குறிக்கும். ஞானசித்தியடையுமுன், அவர் மன்மதனுடைய சோதனைக்குள்ளானார். அப்பொழுது அவர் மன்மதனுக்குத் தொடுத்த துடுக்கான தீரப் பதில் ஆத்மீக சாதகர்களுக்கு எக்காலத்திலும் மலைபோன்ற உறுதியைத் தர வல்லதாகும். அவர் அறைந்த வீரசபதம் பின்வருமாறு:-

'பர்வதராஜனாகிய மேரு தன்நிலை குலையலாம்; அண்டங்களெல்லாம் துகளாகி ஆகாயத்தில் மறைந்துவிடலாம்; சூரியன் சந்திரன் நட்சத்திரங்களெல்லாமும் தத்தம் போக்கிலிருந்து தவறலாம்; உயிர்களெல்லாம் ஒரே மனப்பான்மையைப் பெற்றுவிடலாம்; சமுத்திரங் கூட வரண்டு விடலாம்; ஆனால், ஓ! மன்மதா! நான் தீர்மானித்துள்ள விரதத்தினின்று நீ என்னை அணுவளவேனும் அசைக்க முடியாது'.

இத்தகைய தீர உறுதியில்லாவிடின், துறவு பூண்போர் விசுவாமித்திரர் போன்று நாணிக் கீழான நிலையையே நாளடைவில் நண்ணுவரென்பது திண்ணம்.

காயாவில் போதிமரத்தின்கீழ் ஞானோதயமான பின், புத்தர் பெருமான் காசிக்கருகிலுள்ள சாரநாத்தையடைந்து மான்சோலை என அழைக்கப்பட்ட ஓர் அமைதியான இடத்தில் ஐந்து சீடர்களுக்குத் துன்பத்தின் மர்மத்தையும் துக்கநிவிருத்தி மார்க்கத்தையும் உபதேசித்தருளினார். பௌத்தமத சக்கிரம் முதல் சுழற்றப்பட்ட இடமான சாரநாத், ஆயிரம் ஆண்டுகள் வரை அந்த மதத் தொடர்பில் மிகவும் முக்கிய ஸ்தானம் வகித்துள்ளது. சீடர்கள் பலர் சேர்ந்து உலகெங்கும் பௌத்த மதத்தை ஒருதுளி இரத்தஞ்சிந்தா முறையில் பரவச் செய்தது அங்கிருந்தேயாம். கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் இந்திய யாத்திரை செய்த பாஹியான் என்ற சீனப் பெரியாரின் குறிப்பின்படி, சாரநாத்தில் உயர்ந்த விஹாரையில் பௌத்த விக்ரகம் ஒன்றும் அசோகரால் கட்டப்பட்ட தூபியும் இருந்தன. இவையெல்லாம் தரைமட்டமானது கி. பி. 1194ஆம் ஆண்டில் காசியைக் கொள்ளையடித்த முகம்மதியன் குத்புதீன் காலத்திலாகும். இன்று சாரநாத் செல்வோர் காணக் கூடிய அதிசயமான பொருள், மூலகந்தகுடி விஹாரை மாத்திரமே. இது சென்ற நூற்றாண்டில் பௌத்தமத பிரசாரத்திற்கே தமது ஆயுளை அர்ப்பணஞ் செய்த, அனகாரிகதர்மபாலா* அவர்களால் நிறுவப்பட்ட 'மகாபோதி'க் கழகத்தின் முயற்சியால் கட்டப்பட்டதாகும்.

---

* அன்னாரின் சரிதை பின்னர் காண்க.

புத்த பெருமான் நாற்பத்தைந்து ஆண்டுகளாக எங்கும் தர்மோபதேசம் செய்த பின்னர் தமது எண்பதாவது வயதில் குசிநராவென்னுமிடத்தில் பரிநிர்வாணமடைந்தார். அதற்கருகிலுள்ள தேவிஸ்தானம் என்னும் கிராமம் அவரது உடல் தகனம் செய்யப்பட்ட இடமாகப் பாராட்டப்படுகிறது. புத்தர், மஹாவீரர், சீன ஞானியான கொன்பியூசியஸ் மூவரும் ஒரே காலத்தவர்கள். பிந்தியவருக்கு மென்சியஸ் என்ற உத்தம சீடர் வாய்த்தது போலவே, புத்தருக்கு ஆனந்தர் என்ற அரிய சீடர் கிடைத்தனர். பௌத்த தருமம் பரவுதற்கு அரும்பாடுபட்டவர் அவரேயாம். ஆனால், அந்த மதம் உலக மதமாக மாறியது அசோகச் சக்கரவர்த்தியின் காலத்திலாகும். கடவுளைப் பற்றியோ ஆத்மாவைப் பற்றியோ புத்தர்ஒன்றுமே சொல்லவில்லை. அவர் காலத்திலிருந்த சீலமில்லாப் புரோகிதர்களின் சாதனையற்ற சாஸ்திரப்படிப்பும், வெறும் தத்துவப் பேச்சும், குதர்க்க வாதமும் அவருக்கு, அருவருப்பைக் கொடுத்ததுடன் நடைமுறையிலிருந்த ஜீவகாருண்யமற்ற சிறு வேள்விக் கொள்கைகள் அவரது உள்ளத்தைப் புண்படுத்தின. எனவே, அவர் அருளாழி அந்தணனாய், அறவழியில் வாழ்க்கையை நடத்துவதையே, உண்மையில் தம் தர்மமாகக் கொண்டார் எனப் பகவான் ரமணமூர்த்தி விளக்கியிருப்பதை வாசகர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

பௌத்த மதம் தோன்றிய இந்தியாவில் மறைந்துவிட்ட போதிலும், அதன் உயரிய கொள்கைகளும் அரிய கருத்துக்களும் இந்துமதத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிலைபெற்றுள்ளன

வைணவ மதம் புத்தரை திருமாலின் ஒன்பதாவது அவதாரமாக ஏற்றுப் போற்றுகின்றது. சைவம் அவரை சாஸ்தா, ஐயனர் என்னும் பெயருடன், தனது தேவர்களில் ஒருவராகச் சேர்த்து வழிபடு கின்றது. அம்மட்டோ! வைதிகப் பிராமண மதம் யாகங்களில் பலியிடும் கெட்ட வழக்கத்தை விட்டுக் கொடுத்தது புத்ததர்மம் தோன்றிய பின்னரே யாம். வைதிக மதத்தார் மாமிச உணவை நிறுத் திச் சைவ உணவை உண்ணும் பழக்கத்தைப் பேணி யது, பௌத்தர்களினதும் ஆருகத மதத்தினரதும் கொள்கையான கொல்லாமை இந்தியாவில் பரவிய பின்னரேயாம். இவ்விதம் பழைய பௌத்தர்களைப் பார்த்து இந்துக்கள் சைவ உணவினர்களாக மாற, பௌத்த மதத்தைத் தழுவிய சாதியினரெல்லோ ரும் நாளடைவில் மாமிச போசனிகளாக மாறியது அதிசயமன்றோ? சமயங்களின் சத்தை நழுவவிட்டு சக்கையை மாத்திரம் இறுகப் பிடிக்கும்போது இவ் விசித்திர மாற்றங்கள் நிகழ்வது சகசமேயாம்.

பொருந்து போதியில் இருந்த மாதவர்
திருந்து சேவடி மருந்தும் ஆகுமே
போதி நீழற் சோதி பாதம்
காதலால் நின் றேதல் நன்றே. —வீரசோழிய உரை

உலகமூன்று மொருங்குட னேத்து மாண்
டிலகமாம் திறலரி வன்னடி
வழுவினெஞ் சொடு வாலி தினுற்றவுந்
தொழுவல் தொல்வினை நீங்குக வென்றியான்.

—வளையாபதி.

# ஸ்ரீ சங்கரர் ஜெயந்தி

நமது தாய்நாடுகளான இலங்கையும் இந்தியாவும் அந்நியர் ஆட்சியிலிருந்து பூரண விடுதலையடைந்ததின் பயனாக நாடெங்கும் ஓர் விழிப்பு ஏற்பட்டுள்ளது. மக்களின் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் புதுப்புது இயக்கங்கள் தோன்றியுள்ளன. தங்கள் சொந்தச் சமயங்களிலும் சமயானுஷ்டானங்களிலும் அவர்கள் கொண்டுள்ள அபிமானம், வெறும் மதவெறியாக மாறாவிடின் சுதந்திர வாழ்வுக்கு உரமிடுவதாகும். சமயவாழ்வைப் பொறுத்தமட்டில், இலங்கைவாழ் இந்துக்கள் இந்தியாவிலுள்ள தங்கள் சமயத்தினருக்கு முன்மாதிரி காட்டுகிறார்களென்று கூறுதல் தற்புகழ்ச்சியாகாது. ஆலயங்களிலும், மடங்களிலும், பல இல்லங்களிலும் கூட்டுப்பிரார்த்தனைகள், பஜனைகள் ஒழுங்காய் நடைபெறுகின்றன. கொழும்பிலுள்ள சைவக் கோயில்களில் நடைபெறும் திருவெம்பாவை போன்ற விசேட பூஜைகளையும், அவ்வப்போது அன்பர்கள் பாடும் தோத்திரங்களையும், சிதம்பரம், திருச்செந்தூர், மதுரை, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் வசிக்கும் பக்தர்கள் வானொலிமூலம் கேட்டின்புறுகின்றனர். சிலமுற்ற பழைய ஆலயங்களைப் புனருத்தாரணஞ் செய்வதற்கும், கோயில்கள் இல்லா ஊர்களில் கோயில்கள் அமைப்பதற்கும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இந்த முறையில் நாம் இன்று மகிழ்ச்சியுடன் காணும் மாபெரும் மறுமலர்ச்சியானது வடக்கே ஸ்ரீராமகிருஷ்ணரதும், தெற்கே ஸ்ரீராமலிங்கரதும் வருகையோடு ஆரம்பித்ததெனலாகும். அது மேல்நாடுகளில் பரவத் தொடங்கியது, வேதாந்த கேசரி ஸ்ரீ சுவாமி விவேகானந்தர் ஐம்பத்தேழு ஆண்டுகட்கு முன்செய்த திக்குவிஜயத் தொடர்பிலாகும். அவர் அருளிய

ஞானதீபமானது மங்கிப்போகாமல் மேன் மேலும் சுடர்விட்டெரிந்து உலகின் நாற்றிசையிலும் ஒளி பரப்பச் செய்தவர்களுள் சுவாமி இராமதீர்த்தர், பகவான்ஸ்ரீரமணர், பகவான் அரவிந்தர், மகாத்மா காந்தி, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி, சுவாமி இராமதாசர், சுவாமி சிவானந்தர், கவியோகி சுத்தானந்த பாரதியார் முக்கிய இடம்பெறுகின்றனர்.

இந்து மதத்தின் சரித்திரத்தில் இதற்குமுன் இவ்வித திக்விஜயமும் மறுமலர்ச்சியும் தோன்றியது ஸ்ரீ சங்கராச்சாரியாரின் வருகையினலாகும். அவர் காலத்திற்கும் இருபதாம் நூற்றுண்டிற்குமிடையே தோன்றிய விழிப்புகள், மலர்ச்சிகள் எல்லாம் ஒரு தனிக்கோட்பாட்டையோ, ஒரு மாகாணத்தையோ சமுதாயத்தையோ சார்ந்து நின்றவையாகும். ஆனல், குமரிமுனை தொடக்கம் கௌரி முகடு வரைக்கும், மேற்கே துவாரகையிலிருந்து கிழக்கே ஜகந்நாதம் வரைக்கும் பரந்து கிடந்த கண்டம் ஒரே நாடு என்பதையும் அதில் வாழ்ந்த மக்கள் தழுவிய மதங்களெல்லாவற்றினதும் மூலவேர் உபநிடதங்களென்பதையும் உலகறியச் செய்தவர் சங்கரர் ஒருவரே. தொன்று தொட்டு இன்று வரைக்கும் அறிஞர் உலகால் போற்றப்படும் அவதார புருஷர்களுள் அவரே முதலிடம் பெறுகின்றூர். ஸ்ரீ ஹர்ஸரிலிருந்து ஜவஹர்லால் நேரு உட்பட, அவர் பெருமை பேசிய பெரியோர் கணக்கிலர். பத்தொன்பதாம் நூற்றுண்டில் தோன்றிய ஞானிகள், யோகிகள், பக்தர்கள், தியாகிகள், தேசத் தொண்டர்களெல்லாம் சங்கரரின் ஞான வாரிதியில் திளைத்து, அவர் புகழைப் பேசியுள்ளனர். ஏன்? நவீன விஞ்ஞான உலகுங்கூடப் படிப்படியாக அவரது அத்யாத்மதத்துவ முடிவுக்கே வந்துள்ளது. அவர் பிரம்மஞான முறையில்ஸ்தாபித்தஅத்வைதக் கொள்கையை இன்று அல்பேட் ஐன்ஸ்ரைன் என்

னும் விஞ்ஞானமேதை மிகவும் நுட்பமான கணித சாஸ்திரமுறையில் உண்மையென ஏற்றுள்ளனர். உலகெங்கும் நிறைந்து; எங்கும் ஒன்ருய் அமைந்து நிற்தும் சக்தியின் தத்துவம் ஒன்றே ஒன்று; அதுவே சடஉலகின் காரியங்கள் அனைத்துக்கும் ஆதாரம், இதுவே அவரது விஞ்ஞான ஆராய்ச்சி கண்ட முடிபு. இதில் 'ஒன்றும் ஒன்றுமொன்றுமே உல கனைத்து மொன்றுமே, * என்ற வேதாந்த சாரம் எத்துணை எழிலுடன் பரிணமிக்கின்றது!

வேதாந்தமானது ஆத்மீகவாழ்வின் வெவ்வேறு படிகளில் உள்ளவர்கட்கு, அவரவர் நிலைக்கு ஏற்கப் பல நெறிகளைத் தன்னகத்தடக்கியுள்ள பூரணமத மாகும். சங்கரர் தோன்றுவதற்கு முன் சீர்குன்றி நின்ற புத்தமதம் வேதாந்தத்தின் ஓர் கிளையேயாம். புத்தமதசாரம் உபநிடத உண்மைகளைத் தழுவியதே யாம். மேலும் பழைய இந்துமதத்தின் ஊழல்களைக் களைந்து அதனைத் தூய்மையாக்கத் தோன்றிய ஓர் சீர்திருத்தக்காரரே பகவான் புத்தர். 'உண்மை யான வேதாந்தமதத்தின் உயிருள்ள வடிவாய் விளங்கியவர் புத்தர்', என்கிருர் விவேகானந்தர். 'புத்தர் இந்துவாகவே பிறந்தார்; இந்துவாகவே வளர்ந்தார்; வாழ்ந்தார். இந்துவாகவே இறந் தார்' என்று வரைந்துள்ளார், ஸ்ரீமதி றைஸ் டேவிற் என்னும் ஐரோப்பிய அம்மையார். பக வான் புத்தரின் ஒழுக்கத்தாலும் கருணையாலும் தீவி ரமாகப் பரவிய புதுமதம், மாறும் பிரபஞ்சம் அனைத்திற்கும் அடிப்படையாக மாருத பழம்பொ ருள் என்றும் உண்டென்ற வேதாந்த உண்மையை மறுத்த காரணத்திஞலும், பின்னர், அதனுட் புகுந்த உட்பிரிவினைகள் ஊழல்கள் காரணமாகவும்,

---

* சிவவாக்கியார் பாடல்.

தான் தோன்றிய நாட்டிலிருந்து முழு நும் மறையும் நியதிக்குள்ளானது. சுருங்கக் கூறுமிடத்து, சங்கரரின் வருகையால் மறுமலர்ச்சி பெற்ற இந்து மதம் புத்தமதத்தின் உன்னத கொள்கைகளையெல்லாம் உறிஞ்சிவிட்டதெனலாம்; இன்னோர் கோணத்தினின்று நோக்கும் பொழுது, புத்தமதமென்னும் அக்கினியிற் சுடப்பட்ட இந்துமதத்தை, சங்கரர் புடஞ்செய்து சொக்குத் தங்கமாக ஜொலிக்கச் செய்தனரெனலாம்.

சங்கரருடைய காலத்தை அடுத்த நூற்றாண்டுகளில் அவருடைய தேசிய—சமய—சேவையை இந்துக்கள் எம்மாத்திரம் நன்றி பாராட்டினர் என்பதற்குச் சான்றுகள் பல உள. ஒன்றை மாத்திரம் இங்கு தருவோம். வடமொழியில் நைஷத காவியத்தை இயற்றிய மகாகவி ஸ்ரீ ஹர்ஷர், தமயந்தியின் சுயம்வர நிகழ்ச்சிகளை விபரிக்கும் இடத்தில், நளனைப் போல் உருவெடுத்து வந்திருந்த நான்கு தேவர்கட்கும் உண்மை நளனுக்குமுள்ள வித்தியாசத்தை விளக்கும் பாடல்களில், முதலில் தேவர்கட்கும் நளனுக்கும் அர்த்தமாகும்படி சிலேடையையும், பின்னர் உண்மை நளன் முன்வந்தபோது ஐவருக்கும் பொருந்தும்படி பஞ்சநளீயத்தையும் பாவித்துள்ளார். இங்கு கவி கையாண்ட உவமானம் மிகவும் அற்புதமானது. சாங்கியம், பதஞ்சலியோகம், வைஷ்ணவம், சைவம் ஆகிய நான்கு முக்கியசத்திய மதங்களுக்குள், சத்தியதரமான அத்வைதம் எப்படியிருக்கிறதோ, அதேபோல் ஐந்து நளர்களுக்குள் உண்மையான நளனும் இருக்கிறனென்பதே கவி கொடுத்த அழகிய விளக்கம். அதாவது, பல மதங்களிலும் சத்தியதரமான அத்வைதத்தை விளங்க முடியாமல் மயங்குவதைப் போலிருந்ததாம், தமயந்தி தான்காதலித்த உண்மையான நளனைக்கண்டு கொள்ள முடியாமல் மயங்கியது. "உள்ளது

ஒன்றே மற்றவையெல்லாம் மாயை" என்ற சங்கரர் வாக்கை விளங்கிக் கொள்வது மிகக் கடினம். ''மாயை'' என்றால் ''எது இல்லையோ'' என்பது கருத்து. பரம்பொருளைவிட அது வேறு என்றாலும் சரியல்ல; அதையே பரமாத்மாவென்றுஞ் சொல்ல முடியாது. எனவே, அநிர்வசனீயமாகின்றது. உலகம் பொய்யென்பதல்ல. சர்வவியாபகமான பரம்பொருளுக்கு சகல உயிர்களும் திவ்விய சரீரங்களாய் இருப்பதால், அனைத்தும் உண்மையென்பதே சரியான கருத்து. தந்திர நூல்கள் விபரிக்கும் சக்தியும் சாங்கிய நூலார் கூறும் பிரகிருதியும்; சங்கரர் விளக்கிய மாயையும் உண்மையில் ஒன்றேயாம். பிரம்மம் சுருண்டு அசைவற்றுக் கிடக்கும் பாம்பைப் போலென்றும், மாயை அசைந்து செல்லும் பாம்பைப் போலென்றும் ஸ்ரீராமகிருஷ்ணர் தந்துள்ள அரிய விளக்கத்தைச் சிந்திக்குக. உள்ளது ஒன்றா, இரண்டா, மூன்றா? என்ற வாதம் வீண்பேச்சாகும். ''நான்'' எனும் அகந்தை மனோநாசத்தால் அழியும்போது, ''தான்'' தோன்றும் உண்மையறிவு அதுவே. உலகு, உயிர், இறையாகிய மூன்றும் அதில் அடங்கிவிடும். ''உள்ளது ஒன்றே, பிரம்மமே உண்மை'', என்னும் அநுபவமும், ''எல்லாம் பிரம்மம்'' என்னும் உணர்வும் பெற்ற மெய்ஞ்ஞானி உலகைக் கனவு மாயை என்று வெறுத்துத்தள்ளி தனக்கென ஓர் மோட்சந்தேடிக் காட்டுக் கோடான். வாக்காலும் வாழ்க்கையாலும் சங்கரர் விளக்கியது இதையேயாம். அவருக்குப் பின் அத்வைதநெறியை உபதேசிப்பதே தமது அவதார நோக்கமாகக் கொண்ட ஸ்ரீரமணரும் இன்று அதே விசாரமார்க்கத்தை அருளினார்கள்.

சத்தியத்தைப் பாரமார்த்திகம், வியவகாரம், பிரதிபாஸிக்கம் என மூன்றாகப்பிரித்து சங்கரர்

கொடுத்த அரிய தத்துவ நுட்பத்தை விளங்காத பண்டிதர் பலர் அவரையும் அவரைப் பின்பற்றியவர்களையும் மாயாவாதிகளென அழைத்தனர். அவருக்கு முன் வாழ்ந்து சென்ற மாணிக்கவாசகரின் 'மிண்டிய மாயாவாதமென்னுஞ் சண்டமாருதஞ் சுழித்தடித்தார்த்து' என்ற வாக்கிற்குக் காரணர் சங்கரரேயென்று கூடச் சில தமிழ்நாட்டு துவைத, விசிட்டாத்துவித வாதிகள் வீண்பழி சுமத்தினர். வேதாந்த சித்தாந்த சமரசநந்நிலை பெற்ற வித்தகச் சித்தர்கணத்தைப் போற்றிய மஹரிஷி தாயுமானுர், அவை இரண்டிற்குமிடையே கட்டிய பாலத்தைத் தகர்த்தெறிய அன்னுர் ஆணவக்குண்டு போட்டதுண்டு. தென்னுட்டுப் புத்தகப் பூச்சிகள் சிலர் இவ்விதம் நாசவேலையில் ஈடுபட்டிருந்தபோது ஐரோப்பிய அறிஞர்கள் பலரும் அமெரிக்காவில் தோரோ, விட்மன் எமேர்ஸன் ஆகிய மூன்று மேதாவிகளும் சங்கரர் எழுதிய உபநிடத விரிவுரைகளின் மொழிபெயர்ப்புகளை ஆர்வமுடன் கற்றனர். இப்பெரியார்களின் நூல்களால் பண்படுத்தப்பட்டிருந்த உள்ளங்களிற்தான் விவேகானந்தரின் வேதாந்த கர்ஜனை பசுமரத்தாணிபோற் பதிந்ததாகும்.

தமிழ் நாட்டினதும், முக்கியமாக சைவ நன்மக்களினதும் அதிஷ்டவசமாக, இன்று சைவசித்தாந்தப் பிரச்சாரம் பல்மொழிப் பயிற்சியும் ஆழ்ந்த ஆராய்ச்சி அறிவும், விரிந்த உள்ளமும் படைத்த பெருமக்கள் கையில் உள்ளது. சென்ற மார்கழி மாசத்தில் (7-1-50) கொழும்பில் நடந்த சைவ மகாநாட்டின் தலைவரான திரு. தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர் தமது பேருரையில் சங்கரரைப் புகழ்ந்து பாராட்டியவிதம் மெச்சத்தக்கதாகும்.

''தில்லைத் திருநடனத்திற்கு உருகாதார் யார்? உலகம் பொய்யென்ற கொள்கையைத் தமிழ் நாட்

டிற் பிறந்த சங்கரர் மறுத்துரையாடி; அனைத்தும் ஆனந்தம் பிரம்மமே என நிலைநாட்டுவது எளிதாயிற்று. சண்மதத்தாபனரென அவர் பெயர்பெற்றது தமிழ்மரபுக்கு ஒட்டியதேயாம். வியவகார உண்மையென்றும் பாரமார்த்திக உண்மையென்றும் அவர் கூறிய பாட்டினை மறந்து ''பிரமம் அன்றி ஒன்றும் இல்லை; அறமேது வீடேது எனத் திண்டாடும் நிலைமையும் ஏற்பட்டது'', .............. ..... என அவர் முழங்கியதைக் கேட்டபோது சத்தியத்தை விரும்பும் எந்த உள்ளந்தான் உருகாதிருக்க முடியும்? வைதீகக் கொள்கைகளினாலும், சாதனையற்ற சாஸ்திரப் படிப்பினாலும் அடிக்கடி தாக்கப்பட்ட ஈழத்திற்கூட இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சங்கரரின் பிரதிநிதிபோல் ஸ்ரீ செல்லப்ப சுவாமிகள் வாழ்ந்தது இலங்கை செய்த புண்ணியத்தினாலன்றோ! அவரின் மகாவாக்கியங்களான (1) ஒரு பொல்லாப்புமில்லை (2) எப்பவோ முடிந்த காரியம். (3) நாம் அறியோம். (4) முழுதும் உண்மை, என்ற மந்திர வாக்கு * நான்கிலும் சங்கரர் செய்த உபநிடத பாஷ்யத்தின் சாரத்தையே காண்கின்றோம். இந்த வாக்கியங்களின் விரிவுரையாக ஸ்ரீ யோக சுவாமிகள் ஆசியுடன் வெளிவந்த அரிய சிறு நூலில் + வேதாந்த சித்தாந்த சமரசம்

---

* மந்திரமென்பது நம் வேத மந்திரங்களுடன், உலகின் நிறைஞானிகள் அருள் நிலையினின்றும் மொழிந்த வாக்கனைத்துமாகும். —''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப''. -தொல்காப்பியனார்.

+ குருநாதன் அருள் மொழிகள்.

-யாழ்ப்பாணம், சிவதொண்டன் நிலைய வெளியீடு.

கீழ்க்கண்டவாறு மிகவும் அழகாய்த் திரட்டப்பட்டுள்ளது.

''சீவபோதம் நீ என்றும், அவ்வறிவுக்கு அறிவு செய்பவன் சச்சிதானந்த சொரூபியாகிய சிவம் என்றும், அந்தச் சிவசொரூபத்தைச் சிந்தித்துச் சிந்தித்துத் சிந்தனுதீதத்தையடைந்து, சீவபோதமற்றுச் சிவமாதலேமுக்தியென்றும்கூறும் சைவசித்தாந்தம். வேதாந்தமோ என்னில், சீவபோதம் நீ அன்றெனத் தள்ளிச் சீவபோத சாட்சி நீ என்றும், அச்சீவசாட்சியே சச்சிதானந்த பிரமம் என்றும், அப்பிரமமே நீ என்றும் அறிந்து, நின் நிசசொரூபமாகிய பிரம சொரூபமாயிருத்தலே முத்தியென்றும் கூறும். சீவபோத ஒழிவிலேயே இன்பம் உதிப்பதென்பதும், இன்பாதீதமே முத்தியென்பதும் இருசாரருக்கும் ஒத்த முடிபு. வேதாந்த—சித்தாந்த—சமரசம் இதுவேயாம்''.

சங்கரரின் காலத்தைப்பற்றிப் பல முரண்பட்ட அபிப்பிராயங்கள் உள. அதைக்குறித்த ஆராய்ச்சி நமக்குத் தேவையில்லே. காலத்தை வென்று நிற்கும் அவரது அரியசாஸ்திரங்களும் தோத்திரங்களும் அநேகம் உள. சித்திரை மாதச் சுக்கிலபக்ஷ பஞ்சமியே அவரது ஜென்ம காலமென ஆஸ்திகரால் நிட்சயிக்கப்பட்டுள்ளது. அதனேயே நாம் கொண்டாடுவோம். உலகுய்ய அவதரித்த இவ்வுத்தமரைச் அன்று சிந்தனே செய்து, அவர் பாடல்களேப் பாராயணஞ்செய்து, அவருடைய அருளேப் பெறுவோமாக.

# அருணகிரிநாதரின் அற்புத வாழ்க்கை

மந்தரைமலையை மத்தாகவும் வாசுகியென்னும் நாகத்தைக் கயிறுகவுங் கொண்டு தேவர்களும், அசுரர்களும் அமிர்தம் வேண்டிப் பாற்கடலைக் கடைந்ததாகக் கூறப்படும் புராணக் கதையில் அரிய யோக தத்துவங்களும் மிக நுட்பமான நவீன பௌதிக சாஸ்திரக் கருத்துக்களும் அடங்கியிருப்பது போலவே, இமயம் உயர மேரு தாழ்ந்ததெனவும், விந்தியம் உயர இமயம் தாழ்ந்து, பின்னர் அகத்தியரின்தென்னுட்டு வருகையால் மறுபடியும் இமயம் உயர்ந்ததுஎனவும் கூறப்படும் புராணக் கதைகளில் நுட்பமான ஞான நூல் (Geology) உண்மைகளும், எமது சமயங்களின் ஆரம்பத்தை விளக்கக் கூடிய, சரித்திர ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படக்கூடிய, அருங்கருத்துக்களெல்லாம் அடங்கியுள்ளன. ஆதித்திய வாதிகள் இந்திர வாதிகளானதும், பின்னர் இவ்விரு கூட்டத்தினரும் அக்கினி வாதிகளாய் மாறி, இறுதியில் சிவவாதிகளானதும் இப்புராணங்கள் விளக்கும் நிலை மாற்றங்களில் மறைந்து கிடக்கும் உண்மைகளாகும். அவை கூறும் அதல, விதல சுதலப் பிரதேசங்கள் எல்லாம் பண்டையோர் காலத்து இப்பூமண்டலத்திலிருந்த இடப்பிரிவுகளேயன்றி ஆகாயத்திலோ பாதாளத்திலோவுள்ள இடங்களல்ல.

இன்று ஆசியாக் கண்டத்திற்கு இமயம் முகடாகவும் மத்தியாகவும் இருப்பதுபோல, அன்று விந்தியத்தை வடஎல்லையாகக் கொண்டு மகேந்திரத்தின் தெற்கு முனைவரைக்கும் பரந்து விரிந்து கிடந்த பிரதேசத்திற்கு, அருணுசலமென அழைக்கப்படும் திரு

வண்ணுமலேயே முகடாகவும் பூமத்தியாகவும் அமைந்திருந்ததாகும். இந்த உண்மையை, அருணு சல மகாத்மியத்தில்,

"அதுவே தல மருணுசலந் தலம் யாவிலுமதிக
மது பூமியினிதயம் மறியதுவே சிவனிதயப்
பதியா மொருமருமத்தலம் பதியாமவனதிலே
வதிவா ஞெளிமலேயா நித மருணுசல மெனவே"

என்று திருநந்தி தேவர் வற்புறுத்தியுள்ளார். 'ஆதி யருணுசலம் அமர்ந்த பெருமாளே' யென அருண கிரிநாதர் பாடியிருப்பதும் இங்கு கவனிக்க வேண் டிய விஷயமாகும். இந்தக் கண்டத்தில் ஆதியில் பரவியிருந்தது சிவமதம் ஒன்றே என்பது ஆராய்ச்சி யாளர் முடிபு.

"தென்னுடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்ற மணிவாசகத்திலும் இதே உண்மை மிளிர்கின் றது. இச் சிவமதத்தைச் சுத்தமாக்கி எட்டுத் திக் கிலும் பரப்பிய பரம ஆசிரியனே குமார சுவாமியா வர். அவரால் திருத்தியமைக்கப்பட்ட சமரஸ நெறி அவர் பெயரையே தாங்கி குமார சமயம் என்ற ழைக்கப்பட்டது. பல்லாயிரம் ஆண்டுக்குப் பின் னர் சிவமதம் சைவசமயமாகப் புனருத்தாரணம் செய்யப்பட்டபோது, குமாரசமயம் கௌமாரமாகி சைவசமயத்தினுட் சமயங்களுள் ஒன்ருய் மாற்றப் பட்டதெனலாம். எனினும், கௌமாரமானது வைதீக மதம் என்ற நிலேயை இழக்கவில்லே. சாக் தம், காணுபத்தியம், வைரவம் முதவானவை மலி னப்பட்ட சைவமென அழைக்கப்பட்டபோது, குமார சமயம் கௌமாரம் குற்றம்நீங்கிய சுத்தசிவ அத்துவித மார்க்கமாகவே கருதப்பட்டு வந்தது.

இதுபோன்ற பல காரணங்கள்பற்றியே முதற் குரு வடிவாந் தட்சணுமூர்த்திக்குரிய பெருமையும் மகிமையும் சிவகுருநாதஞன முருகப் பெருமானுக்கும் உரித்தென்றனர் அறிஞர்.

"வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்ய மாமுனி இடைக்காடர் கீரனும்
வகுத்த பாவுறு பொருட்கோலமாய் வரு-முருகோனே"
-திருப்புகழ்

எனக் காலத்தைத் தழுவிய நாம வரிசையைத் தருகின்றது திருக்கோணமலைத் திருப்புகழ். அருணகிரிநாதருக்குப் பின்னரும் பலர் தோன்றி முருகன் பெருமையைப் பாடியுள்ளனர். ஆனுல், அவருக்கு முன்னும் பின்னும் தோன்றிய மகான்களுக்குமிடையே ஓர் பெரிய வித்தியாசம் உண்டு. அவர்கள் முருகனைப் புகழ்வதோடு நின்றுவிடவில்லை; ஏனைய மூர்த்திகளையும் வழுத்தியுள்ளனர். அருணகிரிநாதரோ முருகன்ஒருவனையே போற்றியுள்ளார். இந்த உண்மையை ஸ்ரீ பாம்பன் குமரகுருதாஸர் அருணகிரிநாதர்மீது பாடிய துதியில், ''சேயோன் ஒருவனையே புகழ்ந்தவருளருணகிரி சேவடிப் போதுளத்துள் வைப்பாம்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த முறையில் முருகோபாசனையில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத் தனிச்சிறப்புற்ற நம் அருணகிரிநாதர் பிறந்தது ஞானத் தபோதனரைத் தொன்று தொட்டு இன்று வரைக்கும் தன்னிடம் அழைத்துக் கொண்டிருக்குந் திருவண்ணுமலையிலாகும். அங்கே வசித்த கணிகையொருத்தி வயிற்றில் பட்டினத்துப்பிள்ளையார்க்குப் பிறந்தாரெனத்தமிழ் நாட்டில் வழங்கும் கதை கொஞ்சமும் பொருத்தமற்றதாகும். அவரது பாடல்களைக் கொண்டே

அவரது காலத்தை நாம் நிட்சயிக்க வேண்டும். பிர புடதேவனெனும் அரசனைப் பாராட்டும் வரிகள் திருப்புகழிற் காண இருப்பதால், அந்தப்பேருடைய மன்னன் காலமே அருணகிரிநாதரின் காலமுமாகும். அத்தோடு, அந்த அரசனும் இவரின்புகழுரைகளுக்காளாவதற்கு ஓர் முருகப் பக்தனாய் விளங்கியிருக்க வேண்டும். இம்முறையில் தமிழ் நாடெங்கும் கீர்த்தி படைத்த பிரபுடதேவன் விஜய நகரத்திலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டில் அரசாண்ட மன்னன் ஒருவனே. எனவே, அருணகிரிநாதர் இற்றைக்கு ஐஞ்ஞூறு வருஷங்கட்கு முன்னர் வாழ்ந்தவரெனக் கொள்ளலாம்.

பூர்வ ஜென்ம வாசனையின் பயனாகத் தமது இளமைப் பருவத்தில் விலைமாதர் போகத்தினுழன்று, குட்டம் முதலாய நோய்களால் வருந்தி தமக்கையாரின் உபதேசங் காரணமாக சிற்றின்பத்தில் வெறுப்புற்றுப், பின்னர் முருகன் திருவருள் பெற்று அப்பெருமானைப் போற்றிக் கவிபாட வல்லவராயினரென அவர் சரிதையிற் காணலாம். அவர் இயற்றிய திருப்புகழே இதற்குப் போதிய அத்தாட்சிகளாயுள்ளன. அருணகிரிநாதர் பெண்ணுலகின் மீது வசை புராணம் பாடியுள்ளாரெனப் பலர் குறை கூறுகின்றனர். இக்கூற்று அந்த மகானின் வாழ்க்கை வரலாற்றையும், கழிவிரக்கங் கொண்டு, அவர் அழுத அழுகையையும், அவரது பரோபகார உள்ளக்கனிவையும் விளங்காமையால் உரைக்கும் தவறான அபிப்பிராயமாகும். அவர் இழித்துக் கூறியிருப்பது வேசையர்களையேயன்றிப் பிற பெண்களையல்ல. தம்மைப்போல் பிறரும் காமக்குழியில் வழுக்கி விழுந்து துன்பத்திலழுந்தக் கூடாது, பெண்ணைக் காமக்கூடாகக் கருதப்படாது என்று நல்லறிவுறுத்தவே, அவர் ஆண் பெண், இருபாலாரையுந் தயவு

தாட்சண்யமின்றிக் கண்டித்துள்ளார். போலித் துறவையும் அவர் அதே முறையில் கண்டித்தனர். ஒவ்வொரு மகானும் தமது காலத்திலிருந்த கெட்ட வழக்கங்களையும், கொள்கைகளையும், சமுதாய ஊழல்களையும் ஒழுக்கமின்மையும் கண்டிப்பதைத் தமது முக்கிய கடமையாகவே கருதி வாழ்ந்துள்ளனர்.

அருணகிரி நாதர் அருளிய பாடல்கள் பல. அவற்றுள், திருப்புகழ்களே பதினாறாயிரமாகும். திருவகுப்பு, கந்தரந்தாதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், கந்தரலங்காரம், கந்தரனுபூதி ஆகியவை அவரது ஏனைய பிரபந்தங்கள். அவரது நூல்களைப் படிக்கும்போது, அவர் வடமொழி தென் மொழி இரண்டிலும் பாண்டித்யமுடையராய், மந்திரதந்திர சாஸ்திரங்களெல்லாம் நன்கறிந்தவராய், எல்லாக் கலைகளிலும் விற்பன்னராய், அத்துவித உண்மையை அனுபூதி வாயிலாக உணர்ந்த பெரிய ஞானியாய் விளங்கினாரென்பது துலங்குகின்றது. இச்சிறப்புக் களையெல்லாம் அவர் 'கரவாகிய கல்வியுளார் கடை சென்று, இரவாவகை'*யில் முருகன் அருளாலேயே பெற்றனர். இந்த அரிய உண்மையை 'யாமோதிய கல்வியும் எம்மறிவும் தாமேபெறவேலவர் தந்தது' என நன்றியுடன் வெளியிட்டு, உலகினரையும் அதே முறையில் வரும்படி வற்புறுத்தியுள்ளார்.

இறைவனருள் கொண்டு பாடல்கள் இயற்றும் பக்தர்கள் மீது பொறாமை கொள்வது பண்டித உலகிலுள்ள பெரியதோர் குறையாகும். இது தொன்று தொட்டு என்றுமேயுள்ள கீழ்க்குணம். எமது

---

* கந்தரனுபூதி

மொழியில் யாப்பிலக்கணம் என்னும் நூல் இருப்பதையே கேள்விப்படாத சிலர் தங்கள் பக்தி முதிர்ச்சியிலோ அல்லது விசுத்திச்சக்கர* மலர்ச்சியிலோ, கேட்போர் உள்ளத்தை உருக்கக்கூடிய அரிய தோத்திரப் பாக்களை இயற்றுகிறார்கள். பண்டிதர்கள் அவற்றில் குற்றமே காண்பர். எதிலாவது குணங் காணும் கண் அவர்கட்குக் குருடாய் விட்ட காரணத்தால், பதினைந்தாம் நூற்றாண்டிலும் இவ்விதமே குணம் நீக்கிக் குற்றமே காணுங் குழுவினர் வாழ்ந்தனர். தமிழ்த் தெய்வமாம் முருகனின் கட்டளை கொண்டு அருணகிரிநாதர் அருளிய பாடல்களிற் குற்றங்காணத் துணிந்தனர் பலர். அவர்களுள் இருவர் அவர் சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளனர். ஒருவர் வைஷ்ணவப் பெரும் புலவர் வில்லிபுத்தூராழ்வார்; மற்றையவர் சமண சமயியான சம்பந்தாண்டார். முந்தியவர் கந்தரந்தாதியின் ஐம்பத்துமூன்றும் பாட்டிற்குக் கருத்துச் சொல்ல முடியாமல் மயங்கித் தமது அகங்கார மொழிந்தனர், பிந்தியவரும் வாதில் தோல்வியுற்றனர். ஆனால் கபட முறையில், அருணகிரிநாதரைக் கிளியுருக்கொண்டு பாரிஜாதமலர் தேடச்செய்துவிட்டு, அவரது தேகத்தை எரித்துவிட்டனர். இதுகாரணத்தாற் பெற்ற கிளியுருவிலிருந்து பாடிய பிரபந்தங்களே திருவகுப்பும் கந்தரனுபூதியுமாகும்.

அருணகிரிநாதர் முருகப்பிரானுடைய பூரண அநுக்கிரகத்தைப் பெற்றபின்னர், அவ்வநுக்கிரகப் பிரசாதமாய் எம்மனோர்க்கு அருளிய "கந்தரனுபூதி" என்னும் பாடலையும், அவர் அருட்பெருமையையும் தாயுமானவ அடிகள்,

---

*உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களில் ஒன்று. குண்டலினி சக்தி இச்சக்கரத்தில் எழுந்தவுடன், கவிதா சக்தியும் பிறக்கும்.

"கந்தரனுபூதி பெற்றுக் 'கந்தரனுபூதி' சொன்ன
எந்தை அருள்நாடி இருக்குநாள் எந்நாளோ"

"ஐயா! அருணகிரியப்பா!! உனைப் போல்
மெய்யாக ஓர்சொல் விளம்பினர் யார்....."

என்று நலங்கனியப் போற்றிப் பரவுகின்றனர். பெரியோரைப் பெரியோரே அறிவர்.

அருணகிரிநாதரின் பாடல்களில் சொல்நயம், பொருள்நயம், பத்திரசம், மந்திர சக்தி இவற்றோடு கூடிய சந்தநயம் பொருந்தியிருக்குஞ் சிறப்பைவேறு எந்தத் தமிழ்ப் பிரபந்தங்களிலும் காணமுடியாது.

"வாக்கிற் கருணகிரி வாதவூரர் கனிவில்
தாக்கிற் றிருஞான சம்பந்தர் - நோக்கிற்கு
நக்கீரதேவர் நயத்துக்குச் சுந்தரனார்
சொற்குறுதிக் கப்பர் எனச் சொல்"

- தனிப்பாடல்.

என்பது ஓர் பெரிய அறிஞர் வாக்கு. தேவார திருவாசகங்களின் கவிநயத்தையும் பக்திச் சுவையையும் அனுபவிப்போர் சைவர்கள் மாத்திரமே. அருணகிரிநாதர் பாடல்களோவெனில் திருக்குறளைப் போல் தமிழ் மக்கள் சகலருக்கும் சாதி மத பேதமின்றிப் பொது மறையாய் அமைந்துள்ளதெனலாம். முருகன் எல்லாச் சமயத்தவர்க்கும் உரிய கடவுள் என்பதே அருணகிரிநாதரின் உள்ளக் கிடக்கை. அவர் ஓர் ஒப்பற்ற கௌமாராசாரியராய் விளங்கியதோடு நின்றுவிடாது, உய்ய வழிகாட்ட வந்தவதரித்த சர்வமத சமரசஞான குருவாயும் விளங்கினாரெனலாம்.

# குமரகுருபர சுவாமிகள்

முற்காலத்தில் தமிழ் நாட்டில் தோன்றி அகில இந்தியப் புகழ் படைத்தவர்களுள் மூவர் முக்கிய இடம் பெற்றிருக்கின்றனர். அவர்களுள் ஒருவர் அரசவம்சத்தினர்; மற்றைய இருவர் சமயாசாரியர்கள். ஆத்திமாலையணிந்து, புலிக்கொடியுயர்த்தி, அறம் வளர்த்து, குமரி முதல் இமயம் வரை விரிந்த செந்தமிழ்ச் சாம்ராஜ்யத்தை நிலைநாட்டிய பெருமை கரிகால் வளவனைச் சேர்ந்தது. இதே முறையில், ஆத்மீகத்துறையில் தெந்நாட்டுக்கு என்றுங் குன்றாத பெரும் புகழைத் தேடி வைத்தவர்கள் ஆதி சங்கரரும் குமரகுருபர சுவாமிகளுமாவர். சங்கரர் காவியணிந்து, வேதாந்தக் கொடியுயர்த்தி அத்துவித நெறிவிளக்கி பாரத நாட்டின் நாற்றிசைகளிலும் மடங்கள் நிறுவினர். எமது புராதன இந்து மதம் மறுமலர்ச்சி பெற்றுத் துலங்கியது, அவரது அற்புத சக்தியும் அபார முயற்சியுங் காரணமாகவேயாம். அவர்பிறந்த கேரளம் அக்காலத்துத் தமிழ் நாட்டின் ஓர் பாகமாகும். அவருக்குப்பின் தென்னாட்டுச் சிவஞானப் பொக்கிஷத்தை வடநாட்டவர்க்கு வாரியிறைத்தவர் குமரகுருபரர் ஒருவரே. இவர்கள் இருவர்க்குமிடையே தோன்றிய வைஷ்ணவ ஆசாரியரான ஸ்ரீ ராமானுஜரின் சமயத் தொண்டு தமிழ்நாட்டின் வடமேற்கு இருஎல்லைகளைத் தாண்டியபோதிலும், அது காசிப்பக்கத்தையோ இமயமலைச் சாரலையோ எட்டவில்லை. ஏனைய தென்னாட்டுத் தவப்புதல்வர்களான நாயன்மார்கள், ஆழ்வார்கள், சமயாசாரியர்கள், சந்தனாசாரியர்கள் முதலியோர்களின் தெய்வப்பணி அவர்கள் காலத்தில் தமிழ்மொழி வழங்கும் நாட்டின் எல்லைகளுக்கப்பாற் செல்லவில்லை. இக்காரணம்பற்றியே அவர்களின் திருநாமங்களைத்தானும் வடநாட்டார்

பலர் இன்னும் அறியாமல் இருக்கின்றனர். இந்த உண்மையை முதலில் உணர்ந்து கொண்டாற்தான் குமரகுருபர சுவாமிகள் புரிந்துள்ள அரிய தமிழ்த் தொண்டினது சிறப்பையும், சைவப்பணியின் மகிமையையும் யாம் சிறிதாவது விளங்க முடியும். அவர் தோன்றியிராதிருப்பின், சம்பந்தர், சுந்தரர், சேக்கிழார், கம்பர், அருணகிரிநாதர் போன்ற மகான்களின் நாமங்களையே வட இந்தியர்கள் கேள்விப்பட்டிருக்க மாட்டாரெனத் தயங்காமற் கூறலாம். இற்றைக்கு முந்நூறு வருஷங்கட்கு முன் வாழ்ந்த இப்பெரியாரின் வரலாற்றைத் தமிழ் நாட்டில் இன்று எத்தனை பேர் அறிவார்கள்? சைவர்களுள் எத்தனைபேர் அவர் அருளியுள்ள அரிய பிரபந்தங்களின் பெயர்களைத்தானும் கேள்விப்பட்டுள்ளனர்? காசியில் அவர் நடாத்திய கம்பராமாயண வகுப்பின் பயனாகவே, கீழ்நாடும் மேல்நாடும் போற்றும் துளசிதாஸர் ராமாயணம் தோன்றியதென்ற உண்மையை எத்தனை தமிழர்க்குத் தெரியும்? அக்குமாலை அணிந்து, நமசிவாயக் கொடி உயர்த்தி, வைஷ்ணவர்களையும் இஸ்லாமியர்களையும் தமது அடிபணியவைத்து, சைவநெறி தழைத்தோங்கச் செய்த இந்தப் பரமபுருஷனைப் போற்றுவது சைவர்கள் கடமையாகும்.

வடக்கே துலுக்கர் ஆட்சி வலுப்பெற்றிருந்தபடியால், அவர்களின் படையெடுப்போடு தென்நாட்டில் இஸ்லாமியமும் பரவத்தொடங்கியது. அத்தோடு வியாபாரத்திற்காக ஐரோப்பாவில் இருந்துவந்து தூத்துக்குடியில் குடியேறிய போர்த்துக்கீசரும், திருநெல்வேலிப்பிரிவில் கரையோரமாக வசித்த மக்களைத் தங்கள் கத்தோலிக்க மதத்தில் சேர்த்து வந்தனர். இந்நிலையில் சைவநெறியானது ஆதரிக்க அரசில்லாமையால் தன்பழைய செல்வாக்கை முற்றிலுமிழந்துவிட்டது; சைவக் கோயில்கள்

இருளடைந்தன. அப்பர், சம்பந்தர் காலத்திலோ அல்லது மாணிக்கவாசகர், சங்கரர் காலத்திலோ சிவமதம் இவ்விதமான பல இன்னலடைந்ததெனச் சொல்ல முடியாது நலிவுற்ற சிவநெறியைத் திரும்பவும் செந்நெறியாக விளக்கத் தக்க ஓர் மகா புருஷன் தோன்றுரோவெனச் சைவநன் மக்கள் பரமசிவனை வேண்டி நின்றனர். அப்போது செந் தமிழ் தழைக்கவுஞ் சிவநெறி சிறப்புற்றோங்கவும் தோன்றியவரே குமரகுருபர அடிகளாவர். அவரது காலம் கி. பி. 1625–1688. அவர் பிறந்த ஊர் பொருநைக்கரையிலுள்ளது. அதைச் சைவர்கள் திருக்கைலையெனவும், வைஷ்ணவர் வைகுந்தமெ னவும் அழைக்கின்றனர். இப்பதி திருநெல்வேலியி லிருந்து பதினெட்டுக் கல் தூரமுள்ளது. இவர் தந் தையார் பெயர் சண்முகசிகாமணிக் கவிராயர்; தாயார் சிவகாமி அம்மையார். செந் தூர் முருகனிடம் தவங்கிடந்து பெற்ற அருமைக் குழந்தை, ஐந்து வயதுவரை ஊமையாக இருந்த மையால் பொறுக்கொணுக் கவலையுடன் இருவரும் அப்பெருமானிடமே அக்குழந்தையை அழைத்துச் சென்று, அவர் சந்நிதானத்தில் கடுந்தவஞ் செய்த னர். ஒருநாள் நடுநிசியில், முருகப்பெருமான் அழ கிய குமார வடிவில் குழந்தைக்குக் காட்சியளித்து, ''குமரகுருபரா'' என அழைத்து வாக்கருளி மறைந் தனர். உடனே, குழந்தையின் பெற்றோர் சழிபேரு வகை பூத்துநிற்ப, சைவசித்தாந்த சாஸ்திரத்தின் சாரமாய்ப் போற்றப்படும் 'கந்தர் கலிவெண்பா' என்னும் மெய்ஞ்ஞானத் தோத்திரப் பாடலை, ''பூமேவு செங்கமலப் புத்தேளும்'' என்றுதொடங்கி அக்குழந்தை அருளிச் செய்தது. சைவ நன்மக்கள், பிணி நீக்கம் வேண்டியும், கல்வி வரங்கேட்டும், இக்கலிவெண்பாவை இன்றும் நித்திய பாராயணஞ் செய்துவருகின்றனர்.

குமரகுருபரரின் உள்ளத்தில் ஞானகுருவை அடையவேண்டுமென்ற வாஞ்ஞை குடிகொண்டது அதைக்குறித்து முருகப்பெருமானிடமே விண்ணப்பஞ் செய்தனர். "வடதிசையிற் செல்லுங்கால் உன்வாக்கு எவர்பால் தடைப்படுமோ அவரே உனக்கு ஞானகுரு" என அசரீரியாய் அருளிச் செய்தனர், நஞ்செந்தில்மேய வள்ளிமணாளஞர். அதன் பின், பிறந்த ஊர் திரும்பி அங்கு எழுந்தருளியிருக்கும் கைலாய நாதர்மீது கைலைக் கலம்பகம் பாடியருளினர். பெற்ரேரின் விடைபெற்று வடநாட்டு யாத்திரை செய்யும் வழியில், மதுரையில் தங்கி 'மீனாக்ஷி பிள்ளைத்தமிழ்' பாடியருளினர். இப்பிரபந்தம் திருமலை நாயக்கன் முன்னிலையில் அம்பாள் சந்நிதியில் அரங்கேற்றப்பட்டது. அப்பிரபந்தத்தின் வருகைப் பருவத்தின் ஒன்பதாவது "தொடுக்குங் கடவுட் பழம் பாடற்றொடையின் பயனே" என்று ஆரம்பிக்கும் அருட் பாடலுக்கு குமரகுருபரர் பொருளுரைத்தருளும்போது, அங்கயற்கண்ணி அம்பாள் அர்ச்சகர் மகளாகத் திருக்கோலங் கொண்டு அரசன் அணிந்திருந்த முத்துமாலையைக் கழற்றிச் சுவாமிகள் கழுத்திலிட்டு மறைந்தருளினர். இந்த அருட் செயலைக் கண்ணுற்ற மன்னன், அடிகளின் பெருமையை உணர்ந்து, அவரைச் செம்பொன் அரியணைமீது எழுந்தருளச் செய்து, தனது வீரக் கழலை அவர் திருவடிகளிற் சாத்திப் பூசித்தனன். திருஞானசம்பந்தப் பெருமானுக்குப்போல் சிவிகை, சின்னம் முதலியனவும் அளிக்கப்பட்டன.

அடிகள் மதுரையிலிருந்து வடதிசை நோக்கி வழியிலுள்ள சிவஸ்தலங்களையெல்லாம் தரிசித்துக் கொண்டு தருமபுர ஆதீனத்தை அடைந்தனர். அப்போது, ஆதீனத் தலைவராயிருந்த மாசிலாமணி தேசிகர் அடிகளை நோக்கி, 'ஐந்து பேரறிவு' என்னும் பெரியபுராணப் பாடலுக்கு அனுபவப்

பொருளை வினவினுர். அடிகளுக்கு வாக்குத் தடைப் படவே, செந்தூர்க் கந்தன் குறித்த ஞானுசிரியர் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகரேயென உணர்ந்து, அவர் பாதம் பணிந்து உபதேசம் பெற்ருர்.

குமரகுருபரருக்கு, காசிசென்று சிவத்தொண்டு புரியவேண்டுமென்ற கட்டளை ஸ்ரீலஸ்ரீ மாசிலா மணி தேசிகரிடமிருந்து கிடைத்தது. குருநாதர் கட்டளையைச் சிரமேற்தாங்கி, திருக்காளத்தி, திரு வேகம்பம் முதலாய திருத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு காசியம்பதியை அடைந்த அடிகள்,

''ஆனந்த முயிர்களெய்த ஆனந்த வல்லியோடு
ஆனந்த மகார்களோடும், ஆனந்த வனத்துமேய
ஆனந்த வடிவார்தம்மை யானந்தச் செய்யுள்பாடி
ஆனந்தம் பயப்பப்போற்றி ஆனந்த மெய்துநாளில்''

அங்கே தம்மைக் கருவியாகக் கொண்டு காசி விஸ்வநாதர் செய்தருளப்போகும் பலவித சிவத் தொண்டுகளைப்பற்றிச் சிந்திக்கலானுர்.

சாதியாலும், சமயத்தாலும் மொழியாலும் வேறுபட்ட மக்களிடையே, குமரகுருபர அடிகள் தன்னந்தனி மனிதனுய்ச் சென்று, சைவ சமயப் பெருமையை நிலைநாட்டுவதற்கு அவரது அபார மான ஆத்மசக்தியோடு அவரிடத்தியல்பாகவே யமைந்திருந்த அளவற்ற சித்திகளுங் காரணமாகும். காலமும் இடமும் வேண்டிய முறையில், அவர் பல வித அற்புதங்களைச் செய்திராவிட்டால் அந்நியர் கள் அவரை மதித்திருக்கமாட்டார்கள்; அவர் கோரிய சிவத்தொண்டுகள் செவ்வனே நிறைவேறி யிரா. அவரால் காசியில் நிறுவப்பெற்ற நிலைய மொன்றில் அமைந்துள்ள கல்வடிவம், அவர் உயி ருள்ள சிங்கத்தின் மேலேறி மொகலாய சக்கரவர்த்

தியின் சபையில் அமர்ந்திருந்த உண்மையை நிரூபிக்கின்றது. சகலகலாவல்லியின் கடாட்சத்தால் "வெண்டாமரைக்கன்றி நின்பதந் தாங்க ..." என்று தோத்தரித்து, இந்துஸ்தானி மொழியில் அவர் பெற்ற புலமை அரசனையும் அவனது அரண்மனை வித்துவான்களையும் வியப்புறச் செய்தது. அவர்மீது அரசன் கொண்டிருந்த நன்மதிப்பு நாளுக்கு நாள் வளர்வதைக்கண்ட இஸ்லாமிய குருமார்கள் (மௌல்விகள்) சிலர் பொறாமையுற்று, அந்தமதிப்பைக் குறைப்பதற்குங் கெடுப்பதற்கும் பலவித சூழ்ச்சிகள் செய்தனர். அவற்றையெல்லாம் அடிகள் அற்புதச் செயல்களினாலே வென்றனர். பின்னர் தமது சிவத்தொண்டுகளுக்குத் தேவையான இடங்களையெல்லாம் அத்துலுக்க அரசனிடமே விரும்பிய வண்ணம் பெற்று, காசியில் கங்கைக் கரையில் சிவாலயங்களையும் மடங்களையும் கட்டுவித்தனர். இவற்றுள் சிறந்து விளங்கியவை திருக்கேதாரேசுவரர் ஆலயமும் குமாரசாமி மடமுமாகும்.

இமயமலைச் சாரலையடுத்துள்ள நேபாள நாட்டில் முகரங்கி என்னுமிடத்தில் வாகீச முனிவரால் கட்டப்பெற்ற சைவ மடமும் அடிகளின் கருத்தின்படி நிறுவப்பட்டதேயாம். சைவர் அணியும் சிவக்கண்மணிகள் அங்கிருந்தே காசிக்கு அனுப்பப்பட்டன. காசியில் விஸ்வநாதப் பெருமானைப் போதிய வசதிகளுடன் வணங்கும் பேற்றை நமக்கு அளித்தவர் குமரகுருபரரே. சைவ உலகு என்றைக்கும் அவருக்கு நன்றி பாராட்டுவதற்கு இந்த ஒரு தொண்டே போதுமானதாகும். அவருக்குப்பின் அவர் ஸ்தாபித்த நிலையங்களைப் பரிபாலித்தோர் அவர் காட்டிய செந்நெறியைப் பின்பற்றி இருப்பார்களாயின் வடநாடு எங்கணும் சைவ சித்தாந்தம் பரவியிருக்கும்; காசி சர்வகலாசாலையில் சைவ

மதத்தைப் போதிப்பதற்கென இருபதாம் நூற்றுண்டில் தென்னுட்டிலிருந்து ஓர் ஆசிரியரை அனுப்ப வேண்டிய தேவை ஏற்பட்டிராது. அடிகளால் காசியில் நிறுவப்பட்ட தலைமை நிலையம், அவருக்குப்பின் ஆருவது தலைவராக வந்த தில்லை நாயக சுவாமிகளின் காலத்தில் (கி.பி.1720) சோழ நாட்டிலுள்ள திருப்பனந்தாளுக்கு மாற்றப்பட்டதே வடநாட்டுச் சைவப்பிரசாரத்தளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும். தில்லைநாயகருக்குப் பின் வந்தோரெல்லாம், காசிநிலையத்தைத் திருப்பனந்தாள் மடத்தின் கிளையாகவே கொண்டனர். பிந்திய மடத்தின் இரண்டாவது தலைவர் குருரகுருபர சுவாமிகள் என்னும் நாமத்தையே கொண்டனர். இவர் தாயுமானுர் காலத்தைச் சேர்ந்தவர். இவ்வுண்மையை அறியாது, சிலர் ஆதிகுமரகுருபரரும் தாயுமானுரும் ஒரே காலத்தவரென்று மயக்கமுற்றனர்.

வடநாட்டிலே இஸ்லாமிய மதத்தினர் நடுவில் சைவப் பிரசாரஞ் செய்ததுபோலவே, குமரகுருபரனுர் தென்னுட்டிலுஞ் சிவநெறியை விளக்கினுர்கள். தில்லையில் ஏகான்மவாதிகளுடனும், திருவாரூரில் சிவசமயவாதிகளுடனும், திருச்சிராப்பள்ளியில் வைஷ்ணவர்களுடனும், அன்பான முறையில் வாதித்து, அவர்களின் மயக்கத்தைத் தீர்த்தனர்.

ஸ்ரீ மாசிலாமணிதேசிகரின் கட்டளைப்படி காசியையே வாசஸ்தலமாகக் கொண்டனரெனினும், அடிகளார் மும்முறை தம்குருநாதர் தரிசனத்துக்

காக தென்னாடு வந்து திரும்பியதாக அறிகின்றோம். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சிவசாயுச்சியம் எய்தியது வைகாசித்திங்கள் கிருஷ்ணபட்சத் திருதியையிலாகும்.

குமரகுருபரனார் இயற்றியருளிய பிரபந்தங்கள் பதினாறு. அவற்றில், சங்ககாலந் தொடக்கம் கி. பி. பதினாறும் நூற்றாண்டு வரைக்கும் தமிழ்மொழியில் தோன்றிய சாஸ்திர தோத்திர நூல்கள் அனைத்திலுமுள்ள நயங்களையெல்லாம் ஒருங்கே இப்பிரபந்தங்களிற் சுவைக்கலாமெனலாம். அவர்களருளிய பதினாறு பிரபந்தங்களுள் தலையாயது "பண்டாரமும்மணிக்கோவை"யேயாம்; இதைத் தாம் சரஸ்வதியின் கடாட்சத்தாலேயே பாடியதாகச் சுவாமிகள் உரைத்துள்ளார்கள். இதற்கு மாத்திரந்தான் நூற்சிறப்பும் நூற்பயனுந் தந்துள்ளார்கள்.

சமரசத்துக்கடுத்த மேற்படியாக அடிகளார் உபதேசித்தது மெய்த்தொண்டர் பெருமையாகும்; மேலும் ஒருபடி ஏற்றிவைத்திருப்பது குருபக்தியையெனலாம். இஸ்லாம், கிறீஸ்தவம், சீக்கியம் முதலிய பிறமதங்கள் பரவி இருந்தகாலத்தில் அவதரித்தவராகையாலும், அவர்கள் மத்தியிலே துவேஷமனப்பான்மையின்றி வாழ்ந்த காரணத்தாலும், சைவத்தின் சமரசத்தை, இந்தியா முழுவதிலும் உபதேசிக்கும் அருஞ்சந்தர்ப்பம் அடிகளாருக்குக் கிடைத்தது. இதயேசனாகிய இறைவன் எல்லாருக்கும் பொதுப்பொருளாயும், ஒவ்வொரு சமயத்தோர்க்கும் அவ்வவர் கூறுஞ் சிறப்புப்பொருளா

யும் இருந்து சீவர்களைப் பக்குவப்படுத்தி வளர்க்கின்றானென்ற உண்மையை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அழகொளிர விளக்குகின்றார்கள்:—

"இதுவே பொருளென் றெவர் எவர்
கூறினும் ஏற்பது எது
அதுவே பொருளென் றறிந்து கொண்டேன்;
அப்பொருள் எவர்க்கும்
பொதுவே யென்றானும் பொருந்தும்
எல்லோர்க்கும் பொதுவில் நிற்கும்
மதுவேய் மலர்ப்பொழில் ஆரூரினும்
வைகும் வைகலுமே"

- திருவாரூர் நான்மணிமாலை.

—

# தாயுமானவர் தத்துவம்

இந்தியாவின் சரித்திரத்தில் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் கொடிய இருள் படிந்திருந்த காலம் கி. பி. பதினேழாம் பதினெட்டாம் நூற்றுண்டுகளாகும். மொகலாயரின் அரசாட்சி மிக உன்னத நிலையிலிருந்த காலத்திலுங்கூட அதின் செல்வாக்குச் சிறிதளவேனும் அடிமைப்பட்டிராத தென்னிந்தியா, தன் சீரையும் சிறப்பையும் முற்றுய் இழந்த காலம் அதுவாகும். அப்போது தமிழ் நாட்டில் தாழ்ச்சியடைந்திருந்த நாயக்கர் ஆட்சியை வீழ்த்தும் முயற்சியில் நவாப்பின் படைகளும் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்ட மராட்டியர் சேனையும் ஈடுபட்டிருந்தன. நாட்டிலிருந்த இக்குளப்ப நிலையைத் தமக்கு நன்மையாக்குமாறு செய்து கொள்ளப் பிரித்தானிய பிரான்சிய வியாபாரிகள் சூழ்ச்சிகள் செய்தனர். திருமலை நாயக்கரின் பேரனை விஜயரங்க சொக்கநாதனின் தலைநகரான திருச்சி ஒரு அமர்க்களமாக இருந்ததெனலாம். இந்த முறையில் அரசும், மொழியும், சமயமும், ஆசாரமும், சீர்கேடடைந்திருந்த காலத்திலுங்கூட தாயுமானவர் போன்ற ஒரு மஹாபுருஷனை, தன்னறிவுச் சுடரை, உலகுக்களிக்கும் பாக்கியம்பெற்ற தென்னுட்டின் பூர்வபுண்ணியப் பெருமைதான் என்னே!

நவீன பௌதிகசாஸ்த்திர வளர்ச்சியின் தந்தையென்ற பட்டத்தை இத்தாலிய விஞ்ஞானியான கலிலியோவுக்கு ஆராய்ச்சியாளர் சூட்டியுள்ளனர்; அதுபோல, உலகின் சமயத்துறையில் சமரசக் கொள்கையை ஆராயும்போது, அத்துறையின் தந்தையாம் சிறப்பு தாயுமானவருக்கே உரியதாகும். பல நூற்றுண்டுகளாக வீண்வாதஞ் செய்து

கொண்டிருந்த வேதாந்த சித்தாந்தக் கொள்கை யினர்க்கிடையே, சமரசப் பாலங் கட்டியவர் அவரே. அவர் உபதேசித்த சமரசநெறி எல்லா மதங்களினதும் உண்மையைத் தழுவியதோடு புறத் தொரு மதத்தினரையும் புண்படச் செய்யாவிதத் தினதாகும். அவருக்குமுன் எவராவது அன்பொரு மை, உண்மையொருமை, சமய ஒருமை, என்ற மூன் றிலுஞ் சமரசத்தை விளக்கியதில்லை. சிவத்தோடு சம்பந்தப்பட்டது சைவம். அது மிகவும் தொன் மையானது. ஓர் காலத்திலே உலகெங்கும் பரவி யிருந்தது. நீலநதிக்கரை, மொசப்பெற்றேமியா, அயர்லாந்து, மோல்ரா, சிந்துசமவெளி முதலாய இடங்களில் ஆராய்ச்சியாளரால் கண்டெடுக்கப் பட்ட சிவலிங்கங்களும் ஏனைய புதிய பொருள்களும் அதற்குச் சான்றாகும். இன்று நாம் படிக்கும் சித் தாந்த சாஸ்திரங்களோ அல்லது தேவார திருவாச கங்களோ அக்காலத்திலில்லை. ஆனால், சாதி பேத மற்ற சாஸ்திர கோத்திர உபத்திரவமற்ற சகோத ரத்துவம் செறிந்த சமரச மனப்பான்மை சமய வாழ்வில் நிலவியது. ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்பதே அடிப்படைக் கொள்கையாக இருந்தது. சித்தத்தைச் சிவன்பாலே வைத்து ஆத்ம சக்தி பெற்ற அனுபூதிச் செல்வர்களால் அருளப்பட்ட பழைய ஞானசிதத மார்க்கம் பல பொருளுடைய ஒரு சொல்லான சிவத்திற்கு ''சுத்தம்'' என்னும் கருத் தையேமுக்கியமாகக் கொண்டிருந்தது. நாளடைவில் உலகின் வெவ்வேறு இடங்களில் பல பெயர்களைத் தாங்கிய சமயங்களெல்லாம் அந்தச் சுத்தமான ஞான சித்தர் மார்க்கத்திலிருந்து பிறந்தனவேயாம்.

மிகவும் பழமையானதென்பதற்காக மாத்திரம் ஒரு கொள்கையையோ தத்துவத்தையோ போற்று தல் அறிவுடைமையாகாது பழமையுடன் காலம், அனுபவம், உணர்த்தும் பொருண்மையான புது

மையும் கட்டாயம் வேண்டும். அக்கொள்கை பெருமையுற வேண்டின், முன்னைப் பழமைக்குப் பழமையாயும், பின்னைப் புதுமைக்குப் புதுமையாயும் இலங்கும் சிவத்துடன் தொடர்புற்ற சைவத்திற்கு தனிச்சிறப்பைக் கொடுத்து நிற்பவை, அதனில் போந்துள்ள சமரசப்பான்மையும், அப்பான்மையில் அடங்கியுள்ள அற்புதமான விஞ்ஞான தத்துவங்களுமாகும்.* பிற சமயங்களை 'முற்றும் பொய்' எனத்தள்ளும் எந்தச் சமயமும் சிறந்த சமயமாகாது.

"சென்னியில் வைத்து ராசாங்கத்தில் அமர்ந்தது வைதிக சைவம்'' என்றும், அச்சமயமே 'சமயம்' என்றும் வற்புறுத்திய தாயுமானப் பிரான்:

''வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்கு பரம்பொருளேநின் விளையாட்டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவின் மோன
வாரிதியினதித் திரள்போல் மயக்கிற்றம்மா'' +

என்று பிற சமயங்களைப் பெருமைப்படுத்திய விதத்தை நோக்குங்கள்! அவருக்கு முன் சைவ சமயாசா

---

* சமய மூலவாசகம், கோட்பாடுகளைச் சிதைக்காது, தற்கால பௌதிக – விஞ்ஞான ஆராய்ச்சி உண்மைகளுக்கிணங்க, 20-ம் நூற்றுண்டின் மகான்களும், தத்துவஞானிகளும் அளிக்கும் விளக்கங்களை நோக்குக. —விவேகானந்தர், அரவிந்தர் விநோபாஜி, கலாயோகி டாக்டர் ஆனந்த குமாரசாமி, ஐரோப்பிய மனோதத்துவ ஞானமேதை டாக்டர் காள் ஜுங், ஜோ கோல்ட்ஸ்மித் அளித்த நூல்கள் காலங்கடந்த சான்றுகும். -பதிப்பாசிரியர்.

+ தாயுமானவர் - "கல்லாலின்" என்ற பகுதி.

ரியார்களும் சந்தஞசாரியார்களும் சைவத்தின் சமரசத்தை விளக்கிய துண்டெனினும், அவர்கள் வாக்குகள் அவர்கள் காலத்தின் போக்குக்கும் சூழ்நிலைக்கும் பொருந்தும் அளவில் மாத்திரம் நின்றுவிட்டன தாராளமாய் விரிவடையவில்லை. தாயுமானவர் வாக்குகளோ தீர்க்க தரிசனம் பொருந்தியவையாய் சூழ்நிலையைத் தாண்டியதுடன் காலத்தையும் இடத்தையும் வென்றுள்ளன. அவர் மஹாசமாதியடைந்து நூற்றைம்பது ஆண்டுகள் கழிந்தபின் நடந்த சிக்காக்கோ சர்வமத மகாநாட்டில் வேதாந்த கர்ஜனை செய்த விவேகானந்தர்:

''பிறமத வெறுப்பின்றி சர்வமதசமரசத்தை உலகிற்கெல்லாம் போதித்த சமயம் என்று பெருமையுடன் கூறுகின்றேன். அகில சமரசம் மட்டுமல்ல எல்லா மதங்களும் உண்மையென்பதையும் நாங்கள் நம்புகிரும். மதக்கொடுமையால் வருந்தியோருக்குத் தாயகமளித்த சமுதாயம் எனது என்பதிற் பெருமை கொள்கிறேன். சகோதரர்களே! சிறு வயது முதல் நான் அடிக்கடி சொல்லி வந்ததும், கோடிக்கணக்கான மக்கள் பாராயணஞ் செய்வதுமான தியான சுலோகத்திலிருந்து சில வரிகளை எடுத்துச் சொல்லுகின்றேன்:

'பல்வேறு முகங்களில் உற்பத்தியாகும் வெவ்வேறு நதிகள் முடிவில் ஒரே கடலில் கலக்கின்றன; அதுபோல அவரவர்க்குவந்தவாறு கொள்ளும் பல சமயநெறிகள், வளைந்தும் நேராக நீண்டும் வெவ்வேருகத் தோன்றினும், இறைவனே! எல்லாம் நின்னையே அடைகின்றன'', எனச் செய்த பிரசங்கத்தில் தாயுமானவர் பாடலின் எதிரொலியைக் கேட்கின்ரும்.

தோத்திரத்திற்குத் திருவாசகம், சாத்திரத்திற்குத் திருமந்திரம் என்ற ஓர் தமிழ் வாக்கு உண்டு. அத்துடன் தோத்திரம் சாஸ்திரம் இரண்டிற்கும் தாயுமானவர் பாடல்கள், என்பதையும் அறிஞர் சேர்த்துள்ளார்கள். பூர்வஜென்மத் தேட்டத்தாலும் மௌனகுருவின் ஆசியாலும் தாயுமானவர் வடமொழி தென்மொழி இரண்டையும் நன்கறிந்தனர்.

இவ்விருமொழிகளிலுமுள்ள சமய சாத்திரங்கள் தோத்திர நூல்கள் சகலத்திலும் அவர் நல்ல பயிற்சியுடையவருமானார். எனவே, அவர் பாடல்களைத் தமிழ் உபநிடதம் என்றழைப்பதே பொருத்தமுடைத்து. பழைய பாரத மகரிஷிகள் ஆத்மாவை அறிந்து பாடிய உபநிடதங்களின் கருத்துக்களை தமிழில் தெளிவாக நமக்குத் தந்துள்ளார் தாயுமானவர். திருவருள்விலாசப் பரசிவ வணக்கமாகிய ஆரம்பப்பாடல்கள் இரண்டிலுமே, அதாவது "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்", "அத்துவித வத்துவைச் சொற்ப்ரகாசத்தனியை" என, வரும் இரண்டிலும், முக்கிய உபநிடதங்களின் சாரத்தைக் காணலாம். ஏனைய பாடல்கள் இவற்றின் விளக்கம் போல் அமைந்துள்ளன. அவரது தேவி தோத்திரங்களில், லலிதா சகஸ்ரநாமம் சௌந்தரியலகரி முதலாய நூல்களின் சொற்களும் பொருள்களும் அமைந்துள்ளன.

தாயுமானவர், தமிழில் உபநிடதம் அருளிய முதல் மஹரிஷிமாத்திரமல்ல, அவர் ஓர் யோகியும், ஞானியும், சித்தருமாவார். இல்லறத்திலிருந்த பின்னரே துறவு பூண்ட பெரிராகையால்,

காட்டையிற் பம்பர சாலம்போல் எலாம்
ஆட்டுவான் இறையென அறிந்து நெஞ்சமே

தேட்டமொன்ற வருட் செயலினிற் றியேல்
வீட்டறந் துறவறம் இரண்டும மேன்மையே.

என இரண்டினையும் ஒருங்கே பாராட்டியுள்ளார். அவருடைய இறுதி நாட்களில் அவர் அருகில் இருந்து பணிசெய்த அருளையர், கோடிக்கரைஞானியார் ஆகிய அருமைச்சீடருக்கு அவர் அருளிய கீழ்க் கண்ட கடைசி உபதேசம் ஆன்மப்பசியாளர் சகலருக்கும் ஓர் அரிய விருந்தாகும்:

''அன்பர்களே! இல்லறத்திலிருந்தும் மனமடக்கியோன்மகாயோகி, துறவறத்திலிருந்தும் மனக்குரங்கடங்கான் அறவிலி; மனங்குவிக, சிந்தையடக்கிச் சும்மாவிருத்தலே அட்டசித்திகளிலும் அரியதொன்று. எல்லாவுளத்தும் ஒரு பரமனே சுகநடனம் புரிகிறன். அவனன்றி யானில்லையெனும் அடைக்கலவுணர்ச்சி வரவேண்டும். திருவருளேதாரகமாக வாழுமின். அல்லும் பகலும் அறிவாயிருமின். அமைதி இரக்கம் உண்மை ஈகை நடுநிலைமை இவற்றை வளர்மின்". சிவஞானப் பிரகாசரான இந்த மஹான் சமாதியடைந்தது இற்றைக்கு இருநூற்றிருபத்தைந்து ஆண்டுகட்கு முன் தை மாசப் பூரணையிலாகும். இராமநாதபுரத்தைச் சேர்ந்த லக்ஷ்மீபுரத் தடாகத்தின் கீழ்க்கரையில் அமைந்துள்ள மடாலயத்தில் அவர் திருவுருவம் நிஷ்டைரூபமாய் காட்சி தருகின்றது.

# ஆன்ம நேய ஒருமைப்பாடு
விளக்கும்
# திருவருட்பிரகாச வள்ளலார்

பௌதிக விஞ்ஞான சாஸ்த்திர விருத்தியையும் உலகாயதத்தையும் அடிப்படையாகக் கொண்ட நவீன ஐரோப்பிய நாகரிகமானது மக்களால் நீடித்த காலமாகத் தொடர்ந்து அனுஷ்டிக்கப்பட்டு வந்த பழக்க வழக்கங்களையெல்லாம் தவிடு பொடியாக்கி வருகிறது. இக்காரணத்தால் உலகெங்கும் ஓர் அமைதியின்மை பரவியுள்ளது.

முதலாவது உலக யுத்தத்தின் பயனாக ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களைச் சிந்தித்துப் பார்த்த பல அரசியல் நிபுணர்கள் அதுபோன்ற அழிவுப் போரினின்றும் மனித சமுதாயத்தைக் காப்பாற்றுவதற்கென்று சர்வதேச மகாநாட்டை நிறுவினர். அதை ஆரம்பித்து நடாத்திய வல்லரசுகளிடையே தோன்றிய நிரந்தர சந்தேகமும், அவநம்பிக்கையும், சந்தைப் போட்டியும், பொறாமையும் இரண்டாவது உலகப் போராக முடிந்ததென்பது யாவருமறிந்த உண்மை. அணுக்குண்டின் அபாரமான அசுரத் தன்மையை உலகுக்கு அச்சுறுத்தி முடிவடைந்த இரண்டாவது யுத்தம், மக்கள் உள்ளத்தில் இதற்கு முன் ஒரு காலத்திலும் கேள்விப்பட்டிராத பீதியை உண்டாக்கியுள்ளது. ஐக்கிய தேச சபையின் நடவடிக்கைகளுள் அதன் பாதுகாப்புக் குழுவின் செயல் முறையும் இந்தப் பீதியைத் தீர்க்குந் தரத்தனவாயில்லை.

எந்த அகோர கொடிய சம்பவத்திலும் தெய்வத்தின் கரத்தைக் காணும் அகக்கண் திறந்தோர்க்கு இரண்டாவது யுத்தமானது உலகின் சர்வ மக்களும், சாதியினரும், சகல சமய

உண்மைகளும், வாழ்வுப் பண்புகளும் லட்சியங்களும் ஒன்று படுவதற்கான அரிய சந்தர்ப்பத்தை அளித்திருப்பதாகவே தோன்றுகிறது. விஞ்ஞான சாஸ்த்திர முதிர்ச்சி, நாம்வாழும் பூமியின் அளவை மிகவும் சிறியதாக்கி, எல்லோரையும் அயலாராக்கி விட்டது. மேனுடு கீழ்நாடு, ஆசிய நாகரிகம் ஐரோப்பிய நாகரிகம், என்பன போன்ற பிரிவுகள் இருக்க முடியாமல் செய்கின்றது. எந்த நாடுதானும் இனித்தனித்து வாழவே முடியாது. உலகமக்கள் எல்லாரும் எல்லாரையும் நம்பி, அதாவது பரஸ்பர உதவியுடன் வாழவேண்டிய நிலை தாமே ஏற்பட்டுள்ளது. இது ஒரு தெய்வ சங்கற்பமாகும். எனவே, இன்றைய மனிதனின் உள்ளத்தில் மலரவேண்டியது 'உலக திருஷ்டி'யாகும். இந்த உலக ஞானந்தான் உலக சமாதானத்தை உண்மையாகவே நிறுவி. மக்களின் வாழ்வின் எல்லாத்துறைகளிலும் சாந்தியளிக்க வல்லதாகும்; வேறுவிதத்தில் சுருக்கமாய்க் கூறின், அரசியல் வாதிகள் கூறும் சமுதாயகம் (Socialism) பொதுவுடைமை (Communism), ஆத்ம ஞானிகள் வாழ்க்கை மூலம் விளக்கும் அருளுடைமையாக மாறவேண்டும்.

நாம் எல்லோரும் உலக சமுதாயத்தின் அங்கத்தினர்களாக வாழவேண்டுமானுல், முதலில் ஆத்ம திருஷ்டியில் ஒற்றுமையுடையவர்களாயிருக்க வேண்டும். எல்லோரிடத்திலுமுள்ள ஆத்மா ஒன்றுதான் என்ற உணர்ச்சியைப் பெற்ருலன்றி குறித்த ஒற்றுமை வரவேமாட்டாது. சென்ற நூற்ருண்டில் தமிழ் நாட்டில் தோன்றி இந்த உணர்ச்சியை வளர்க்க அரும்பாடுபட்டவர் திருவருட்பிரகாச வள்ளலார் என்றழைக்கப்பட்ட ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளாவர். சமயவாதம் என்னும் இருளை நீக்கி சமய ஞானம் என்னும் அருள் ஒளியை வீசிய அறிவுக்கதிராய் விளங்கி 'ஆன்ம நேய ஒருமைப்பாடு'

என்னும் பதத்திற்கு அரிய விளக்கந்தந்தவர் அவரே.

"மதமென்பது உலகிற்குப் பொதுவானதாகி விடுமானல், மானிட சமுதாயத்தையும் உலகையுஞ் சுத்தஞ்செய்கின்ற ஜோதியாகி விடுமானல், அப்பொழுதே உலகம் அவதார புருஷர்களை வரவேற்கும் தன்மையுடையதாயிருக்கும். அப்போது உலகத்தில் தேக சம்பந்தப்பட்ட குறைபாடுகளும் மன மாசுகளும் இல்லாத, வியாதியினின்றும் துன்பத்தினின்றும் பொய்மையினின்றும் விடுதலைபெற்ற ஒரு மானிடசாதியினர் வசிப்பார்கள்", என்கிறர் உலக பிரசித்த தத்துவ ஞான சாஸ்திரியான டாக்டர் சர் வேபல்லி ராதாகிருஷ்ணன். இற்றைக்கு நூறு வருஷங்கட்கு முன் இந்த லட்சியத்தை ஒப்பற்ற தீர்க்க தரிசனத்துடன் அருட்பிரகாச வள்ளலார் விளக்கியுள்ளார். தெய்வீகக் கலப்புள்ள சமுதாய வாழ்க்கையே அவர் கண்ட நெறி. சன்மார்க்கத்தின் உயிர்நிலை சீவகாருண்யம்; அது இல்லாமல் தயையே வடிவான ஆண்டவனை அடைய முடியாதென்பதே அவர் போதனை. காந்தியடிகள், ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளின் கொள்கையையே அரசியலிற் கையாண்டு, "அணுக்குண்டை வெல்ல வல்லது ஆத்ம சக்தியே", என்பதை அனுஷ்டானத்தில் காட்டி மறைந்தார். இவ்விருவரின் தவசக்தி மண்ணுலகுக்கு உய்யும் வழிகாட்டும் என்பது திண்ணம்.

திருவருட்பிரகாச வள்ளலாரைப்பற்றி எழுதுவோர், பெரிதும் அவர் செய்த அற்புதங்களை விபரிப்பதில் மகிழ்ச்சியடைகின்றனர். இது அறிவுடைமையாகாது. அப்பெரியார் சித்திகள் பல செய்தது உண்மையே; அவற்றை நாம் மறுக்கவில்லை. ஆனல் அவர் செய்த சித்திகளெல்லாவற்றிலும்

அற்புதமானது, அவர் நிறுவிய சத்திய ஞான சபை என்பதை இங்கு வற்புறுத்த விரும்புகின்றோம். இதுபோன்ற ஆலயம் உலகில் இதுவரையில் தோன்றவேயில்லை. அணுக்குண்டு சகாப்தத்தின் பின் வரப்போகும் புதுயோகத்தில், கடவுள் வழிபாடு எம்முறையில் அமையும் என்பதற்கு இதுவே எடுத்துக்காட்டாகும்.

தென்னாட்டில் ஒரு தனிக் கலைக்கோயிலாக மிளிரும் இச் சத்திய ஞான சபையின் அமைப்பில் அடங்கியுள்ள தத்துவங்கள் மிகவும் நுட்பமானவை; விஷேடமும் அற்புதமும் பொருந்தியவை. முகப்பிலுள்ள மூன்று வாயில்களும் பக்தி, ஞான, கர்ம யோகப் பாதைகளைக் குறித்துநிற்க, உள்ளே ஜோதி ஞான பீடத்தின் நான்கு படிகளும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் பாதங்களை விளக்குகின்றன. பிரகார அமைப்பில் ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கும், வித்தியா தத்துவங்கள் ஏழும், வளைவுகளாகவும், வழிகளாகவும், வாயில்களாகவும் பொருந்தியிருப்ப, சிவ தத்துவங்கள் ஐந்தும் நடுவேயுள்ள அதிட்டான பீடத்தின் படிகளாக உள்ளன. இதய ஞான வெளியில் துவங்கும் அருட்பெருஞ்ஜோதியை மறைக்கும் ஆணவம், கன்மம், அசுத்தமாயை, மிஸ்ரமாயை, சுத்தமாயை, திரோதம் ஆகியவை முறையே கறுப்பு, நீலம், பச்சை, சிவப்பு, மஞ்சள், வெண்மை நிறத் திரைகளாகக் காட்சியளிக்கின்றன. எஞ்சிய தத்துவ நுட்பங்களை மெய்ஞ்ஞானங் கொண்டும் குருவருள் கொண்டுமே உணரமுடியும். கண்ணுள்ளார் வடலூர் சென்று கண்டு களிப்பாராக.

உடல் தழைக்க தருமச்சாலையையும், உணர்வு தழைக்க வேத பாடசாலையையும் நிறுவிய பின்னரே உயிர் தழைக்க ஞானசபையை அமைத்தனர் அருட்

பிரகாச வள்ளலார். இந்த ஒழுங்கே தத்துவமயமா யுள்ளதன்றே? அகத்தே தாம் கண்டின்புற்ற அருட் பெருஞ்ஜோதியைப் புறத்தே அனைவரும் காண வேண்டுமென்று தனிப்பெருங் கருணைகொண்டு வள் ளலார் முன் நிறுவிய இந்த ஞான சபை நாளடை வில்பழுதுபட்டுவிட்டது. அதனைப் புதுக்க அமைத்து 1950-ம்ஆண்டில் ஆறு லட்சம் அடியார்களின் முன் னிலையில் தூபி நீராட்டு விழாவை நடத்திய புண்ணி யம் திருப்புகழ்த்தொண்டர், திருமுருக கிருபானந்த வாரி அவர்களைச் சாரும். லட்க்ஷக்கணக்கான ரூபாய் களின் செலவில் ஒன்பது ஆண்டுகளாக அயரா முயற்சியுடன் அவர் செய்து முடித்த திருப்பணியைத் தமிழ்நாடும், சைவ உலகமும் மறக்கவே முடியாது.

சிவஜோதியைச் சூழ்ந்திருப்பது அருட்ஜோதி; அருட்ஜோதியைத் தாங்கி நிற்பது ஆத்மஜோதி. ''சோதியுட் சோதியுட் சோதி'' என்ற அரும் பெரும் வாக்கியம் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளின் திருவாய் மொழியாகும்.

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அவதார மகிமை

பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் கிடக்கின்றது, அதை வாரியுண்ண ''சேர வாரும் சகத்தீரே!'' என உலகை அழைத்தார் தாயுமானவர். பதினெட்டாம் நூற்றுண்டில் அவரது சூழலும் காலப்போக்கும் அந்த அறைகூவலுக்குச் செவி சாய்க்கவில்லை. சற்றேறக்குறைய நூற்றிருபது வருடங்களுக்குப் பின், அதேயழைப்பு இரு தீர்க்கதரிசிகள் வாக்கிலிருந்து மறுபடியும் வெளிவந்தது. ஒருவர் 1823-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் தோன்றிய இராமலிங்க சுவாமிகள்; மற்றையவர் 1836-ம் ஆண்டில் வங்கத்தில் உதித்த ஞானபானுவான ஸ்ரீ இராமகிருஷ்ண தேவர். இருவரும் உடல் கொண்டுலாவியது ஐம்பது வருஷங்களேயாம். ஆனுல் அந்தச்சுருங்கிய கால எல்லைக்குள், அத்யாத்ம துறையில் அற்புத சேவை செய்துள்ளனர். ஆகையால் இருவரும் இன்று பாரததேசத்தின் பரமார்த்திக விண்ணில் ஜோதியாக விளங்குகின்றனர்.

அருட்பிரகாச வள்ளலார், பரம்பொருளை வள்ளலாகச் சிந்தித்தார்; பரமஹம்ஸதேவர் தாயாக வந்தித்தார். முந்தியவர் ''தில்லையப்பனே! என்னை நீ விடமாட்டாய். நான் உன்னை விடமாட்டேன்'' என்று உறுதி கொண்டு அருட்பெருஞ் சோதி தரிசனம் பெற்றுப் பூரணம் பெற்றுர். அவரது உபதேசங்களடங்கிய அருட்பா அந்த நிறைவிலிருந்து பெருக்கெடுத்து வழிந்ததேயாம். அவரது உபதேசங்கள் பாவடிவில் அமைந்த காரணத்தாலும், தமிழ்நாட்டின் தவக்குறைவால் அவருக்கு விவேகானந்தர்

போன்ற வீரசிங்கம் சீடராக வராமையாலும், தமிழ் வழங்கும் நாட்டின் எல்லைக்குள் தங்கிவிட்டன. எனினும் அவற்றுள் அடங்கிய சமரஸ சன்மார்க்க நெறியும் ஆன்மநேய ஒற்றுமையும், உலகெங்கும் பரவியே வருகின்றன. பரமஹம்ஸதேவர், ''அம்மா! உன்னைக் கண்ணாரக் காணவேண்டும். வா! வா! உன்னைக் காணாது ஒருகணமுந் தரியேன்'', எனக்கதறிப் பராசக்தியைச் சாட்சாத்கரித்தார். கற்சிலையில் ஜகந் மாதாவைக் கண்டார்; அவளுடன் பேசினார். விக்கிரக வழிபாடு அநாகரிகமானதெனப் பிரசாரஞ் செய்த இந்துப் பிரமுகர் பலர்க்குத் தமது அனுபவங் கொண்டு நல்லறிவு புகட்டி அவர்களின் மயக்கந் தீர்த்தார்.

சகல சித்திகளும் கைவரப்பெற்றபின். ''குழந்தைகளே! வாருங்கள். உங்களுக்காக காத்துக்கொண்டிருக்கிறேன்'' என்று தக்ஷிணேச்வர ஆலயத்தின் கோபுரத்திலிருந்து அறைகூவினார். அவர் பணிக்கெனவே பிறவியெடுத்த அநேக இளம் சிங்கங்கள் உற்றார் உறவினர்களையும் உலகபோகத்தையும் துறந்து, அவர் திருப்பாதங்களில் சரண் அடைந்தனர். அவர்களின் தலைவரான விவேகானந்தர் மூலம் குருதேவரின் ஒப்புயர்வற்ற உபதேசமணிகள் உலகில் நாற்றிசைகளிலும் அள்ளி வழங்கப்பட்டன. அதன் பலனாக பிறநாட்டார் நமது சனாதன தர்மத்தின் தனிப் பெருமையை ஒருவாறு அறியத்தொடங்கினர்.

நமது சமய சாஸ்திரங்களை ஆர்வத்துடன் படிக்கவும் ஆரம்பித்தனர். இந்துமதத்தின்மீது நெடுங்காலமாக பிறமதத்தினர் கொண்டிருந்த துவேஷமனப்பான்மையும் தப்பபிப்பிராயமும் நாளடைவில் அருகின. இவ்வளவிற்கும் மூலகாரணம் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் ஆத்மீக சக்தியும் அனுபவ சித்தி

யுமேயாம். எவரும் விளங்கக்கூடிய எளிய இனிய வசனங்களில், உபகதை ரூபமாகவும், சாதாரண உபமானங்களுடனும் அவர் தமது தாய்மொழியாகிய வங்காளத்தில் திருவாய் மலர்ந்தருளிய உபதேசங்கள் எந்தமொழியில் மொழிபெயர்க்கப்பட்டாலும் எழில் குன்றாப் பெருமையுடையன. இக்காரணம்பற்றியே அவை இன்று உலக மக்களின் கவனத்தைக் கவருஞ் சிறப்புடைத்தாகின.

எனவே, 'இராமகிருஷ்ண தேவர் இந்துமக்களின் மூவாயிரம் ஆண்டுத்தவத்தின் பயனாக அவதரித்த மகாபுருஷன்', என்ற பிரெஞ்சு கலாஞான மேதை ரொமெயின் ரோலன்ட் அவர்களின் மன மகிழ்வுரை* முற்றுந்தகும்.

---

* Life of Ramakrishna — by Romain Roland (1866-1944) இவ்வாங்கில நூலின் முன்னுரையைக் காண்க. பக்திரசம் ததும்பும் இன்மொழிகளால் இந்நூலை ரோலன்ட் எழுதியுள்ளார்கள்.

—பதிப்பாசிரியர்.

# யாழ்ப்பாணம் கடையிற் சுவாமிகள்

"தாதையெனத் தண்ணருள் பொழிந்திடர் தடிந்தே,
தீதில் நெறி யுய்த்தெமது பாசமது தீயக்
கோதில் வழி காட்டுகடைச் சாமி, குருவள்ளல்
பாதமலர் சிந்தையிற் பதித்தினிது வாழ்வாம்"

யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணைப் பகுதியை, முக்கியமாகப் பெரியகடையிலிருந்து சிவலிங்கப்புளியடி வரையிலுள்ள நிலப்பரப்பை, புண்ணிய பூமியென அழைக்கலாம். தமிழோடுஞ் சைவத்தோடும் நெருங்கிய தொடர்புடைய கதிரேசன் ஆலயம், வைத்தீஸ்வரன் கோவில், வைத்தீஸ்வர வித்தியாலயம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பள்ளிக்கூடம், சிவதொண்டன் நிலையம், இந்துக் கல்லூரி, சைவப்பிரகாச அச்சகம், முதலாய தலைசிறந்த நிலையங்கள் இந்தப் பிரிவில்தான் மிளிர்கின்றன. ஈழத்தில், வேறு எந்தப் பிரிவிலும் காணமுடியாத திருவருட்காட்சி இது. இத்தனிப் பெருமைக்குக் காரணம், இப்பகுதியில் சென்ற நூறு வருஷங்களாக யோகிகளும், சித்தர்களும், சீவன்முத்தர்களும் இடைவிடாது தொடர்ந்து நடமாடியதால், அவர்கள் திருப்பாதபூதிச் செல்வம் தங்கியிருப்பதாகும்.

இம்மகா புருஷர்களுள், முதன்மை பெறுபவர் கடையிற் சுவாமிகளாவர். அவர் அவதரித்த ஊர்; பெற்றோரின் குலங்கோத்திரம், அவர்களால் இவருக்குச் சூட்டப்பட்ட நாமம், ஒன்றுமே இதுவரையில் தெரியாது. மகான்கள் தமது வாழ்க்கையில் உலகத்தொடர்புடைய பகுதியைப் பிறருக்குச் சொல்லுவது வழக்கமில்லை. அவர்களைப் பொறுத்தமட்டில், அப்பாகம் இறந்துபட்ட ஒன்றல்லவோ?

எனினும், இத்தவ சிரேஷ்டர், கன்னடதேசத்தவர்; யாழ்ப்பாணம் வருமுன்னர், சுவாமி முக்தியானந்தா என்ற தீக்ஷாநாமம் உடையவர் என்பது அறியக்கிடக்கின்றது. ஆங்கிலம், வடமொழி, கன்னடம், தமிழ், ஆகிய நான்கு மொழிகளையும் பயின்றவர். உயர்ந்த உத்தியோகத்தில் இருந்து திடீரென ஏற்பட்ட வைராக்கியங் காரணமாக, அதனை உதறிவிட்டுத் துறவு பூண்டவர் என்பது, அவருடன் ஆரம்பத்திலிருந்து நெருங்கிப் பழகிய அடியார்கள் அறிந்த உண்மையாகும்.

மைசூரைச் சேர்ந்த இம்மகானுக்கு, ஞானோபதேசம் அருளிய குரு எவராக இருக்கலாம் என அறிந்து கொள்வது கஷ்டமான காரியமல்ல. 17-ம் 18-ம் நூற்றுண்டுகள், தென்னிந்தியாவின் இருட்காலமெனலாம். அரசியல் பொருளாதாரத் துறைகளில் அந்த நாடு, மிகவும் சீர்கெட்ட நிலையிலிருந்தது. அந்த இருளையகற்ற, தெய்வத் திருவருள், முதலில் அனுப்பி வைத்தது ஒரு ஞான சூரியனையாகும். அவர்தான் மைசூர் சிருங்கேரி மடத்தின் சங்கராச்சாரிய பீடத்தில் 32-வது தலைவராக வீற்றிருந்து, 1817-ம் ஆண்டு தொடக்கம், 1879-ம் ஆண்டு வரையில், அருட்செங்கோலோச்சிய அற்புத ஞானசித்தர் ஸ்ரீ நரசிம்ம பாரதியாகும். இவர் இணையற்ற ஆத்மசித்தி கைவரப்பெற்றவர்; பல ஞானிகளையும், யோகிகளையும், சித்தர்களையும், சீவன்முக்தர்களையும், சிருஷ்டிக்கக்கூடிய அற்புத சக்திவாய்ந்தவர். தமது அறுபத்திராண்டு திருவருள் ஆட்சிக்காலத்தில், நாற்பது ஆண்டுகளைத் திக்கு விஜயத்தில் கழித்தவர். அதிலும், இறுதிக்காலம் பன்னீராண்டைத் தமிழ் நாட்டின் ஆன்மீகப் பணிக்கே அர்ப்பணித்தவர். தமது உத்தம சீடரும் தம்மைப்போல் ஞானசித்தருமான ஸ்ரீ சச்சிதானந்த சிவா அபிநவ நரசிம்மருடன் ஊர்

ஊராய்க், கிராமங் கிராமமாய்ச் சென்று மக்களுக்கு சமய மறுமலர்ச்சியை உண்டாக்கினர்கள். அப்பணியைமேலுந் தொடர்ந்து செய்ய அநேகப் மகாத்மாக்கள் ஆங்காங்கு தோன்றினர். அவர்களுள் சதாசிவப்பிரமேந்திரா, சுயம்பிரகாசப் பிரமேந்திரா, சுந்தர சுவாமிகள், அப்பையசிவம், திருவருட்பிரகாசவள்ளலார், இல்லறஞானியான ஈரஜு சாஸ்திரிகள், முதலானோரை இங்கு முக்கியமாகக் குறிப்பிடலாம்.

தாய் நாட்டிற்போலவே, சேய்நாட்டிலும், அதே காலத்தில், சமய மறுமலர்ச்சியும் குருபக்தியும், அடியார் பணியும், தலைசிறந்து விளங்கியதைக் காண்கின்றோம். "அண்ணலடியார் தமை அமுது செய்வித்தலே, மண்ணிற் பிறந்தார் பெறும் பயன்", என்ற கொள்கை சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில், யாழ்ப்பாணக் குடா நாட்டின் நாலா பக்கங்களிலும், பரவியிருந்தது என்பதற்குச் சான்றுகள் பல உள. பரமகுருவடிகளின் வரலாற்றுச் சுருக்கத்தை வரைந்த பக்தர் ஒருவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:-

"கடையிற் சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் எழுந்தருளிய சிலகாலத்தில், கீரிமலையில் எழுந்தருளிய அடிகள்மாருளொருவர் பரமகுருவடிகள். கடையிற் சுவாமிகளின் அணுக்க விளக்காகிய குழந்தைவேலடிகளுக்குச் செவ்வியுரை ஆசிரியராக இவர் வாய்த்திருந்தார். கடையிற் சுவாமிகளைச் சிவப்பிழம்பாகவும், குழந்தைவேலடிகளைப் பிள்ளையார்ப்பிழம்பாகவும், பரமகுருவடிகளை முருகப்பெருமானுகவும், அன்றைய ஆன்றோர்கள் கருதிப் போற்றிவந்தனர். குழந்தைவேலடிகள், அருளம்பலவடிகள் இருவரினதும் ஆசிரிய வாழ்த்துச் செய்யுள் வாயிலாக இவ்வுண்மை புலனுகின்றது".

சுவாமி முக்தியானந்தர், அவரது சகோதர சன்னியாசிகளான சின்மயானந்தர், நிரஞ்சனனந்தர் ஆகிய இருவருடன் ஈழத்திற்கு வந்த காலம் நிட்சயமாகச் சொல்ல முடியாது. அது 1862-ம் ஆண்டை அடுத்திருக்குமென யூகிக்க அகச்சான்றுகள் உள. அக்காலத்தில்தான், ஸ்ரீ நரசிம்மபாரதியவர்கள் இராமநாதபுர மாவட்டத்திற் திக்கு விஜயஞ் செய்து கொண்டிருந்த காலம். கடையிற் சுவாமிகளுடைய ஈழத்தின் முதற்சீடரும், அவரை யாத்திரை செய்தபோது தென்னாட்டில் தரிசித்து ஆசிபெற்றவருமான வண்ணார் பண்ணை வயிரமுத்துச் செட்டியார் அவர்களை, குறித்த மகானின் யாழ்ப்பாண வருகைக்குத் துணைக்காரணமானவர். 1860-ம் ஆண்டளவில் கிராமங்களில் தங்கி ஆன்மீகப்பணி, யாத்திரையில் ஈடுபட்டிருந்த அடியார் கூட்டத்தைச் சந்தித்திருக்கவேண்டும். பரமகுரு அடிகள்மீது பாடப் பெற்ற தோத்திரங்கள் சில அவரைக் ''கிடாரிபருப்பதம் மேய பிரானே!'' என்று குறிப்பிடுகின்றது. இந்த இடம் இராமநாதபுரத்துக்கருகிலுள்ள கிடாரிப்பட்டியாக இருக்கலாம். அந்த இடத்தில் பல சாதுக்கள் சத்சங்கம் நடாத்தி வந்தமைக்குச் சான்றுகள் உளதென்று ஓரடியவர் உரைத்தார்.

மேலே குறிப்பிட்ட மூன்று பெரியார்களும், தம்நாட்டில் ஒரே குரு பரம்பரையைச் சேர்ந்திருந்தபோதிலும், சேய்நாட்டில் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட குரு பரம்பரை மூன்று முக்கிய பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஆனல், இந்த அடியார் கூட்டம் முழுவதும் கடையிற் சுவாமிகளுக்கே முதலிடம் வழங்கி வணங்கினர். உதாரணமாக, நிரஞ்சனனந்தரைத் தமது குருவாக ஏற்றுக் கொண்ட குழந்தைவேலடிகளின் பாடல்களில் ஒன்று இந்த உண்மையைத் தெளிவுபடுத்துகின்றது:-

"வீறுபடு பில்லிமுதல், வெஞ்சினப் பசாசும்
வேறுசெய் மருந்து விசர்கொண்டு திரி பித்தம்
நீறுபட வேண்டுமெனில் நீவிர் வந்து செய்மின்
கூறு கடைச் சாமி குருபூசையினை அன்றே"

கடையிற் சுவாமிகளின் புகைப்படம் எவரா லும் எடுக்கப்படவில்லை. இப்போது பலரிடம் இருக் கும் படங்கள் ஓவியக்கலைஞரான ஒரு பக்தரால் வரையப்பட்டதாகும். அதின்படி, அவர் விசால மான தோள்களையும், நீண்ட கரங்களையும் உடைய வரென்பதும், முகத்தில் சதா ஓர் புன்னகை ஒளி வீசிக்கொண்டிருந்ததென்பதும், அந்த முகத்திற்குப் பிறிதோர் அழகுக்குறியாக, நீண்ட நுனியில் வளைந்த மூக்கு அமைந்திருந்ததென்பதும் தெரிய வருகின்றன. துடுக்கான, வேகமான, கம்பீரமான நடையும் ஹாஸ்யப் பேச்சும் அவரது சிறப்பான குணங்களென அவரது நேர் அடியார் பலர் சொல் லக் கேட்டுள்ளோம். அவர்மீது பதிகம் பாடிய பக் தர்ஒருவர், அவரது திருக்கோலத்தையும் உடையை யும்:

"பெரியகடை நாதன், பித்தன் திருக்கோலம்
கரிய வர்ணச் சீலை கரித்தோலெனச் சால்வை"

என வர்ணிக்கின்றார். சிவஞான சித்தியார்—சுபக் கம் எட்டாஞ் சூத்திரத்தில், ஞானமார்க்கத்தையும் அந்நெறிசென்று நிட்டை கூடிய ஞானிகளின் தனிச் சிறப்பையும் விபரிக்கும் அருமையான பாடல்கள் பல உள. அவற்றுள் ஒன்று:-

"ஞாலமதின் ஞான நிட்டை யுடையோருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன்றில்லை
சீலமிலைத் தவமில்லை விரதமோடாச்சிரமச்
செயலில்லை தியானமிலை சித்தமலமில்லை,

கோலமிலை புலனில்லை கரணமில்லைக்
குணமில்லைக் குறியில்லை குலமுமில்லை
பாலருடன் உன்மத்தர் பிசாசர் குணமருவிப்
பாடலினோடாடலிவை பயின்றிடினும் பயில்வர்"

என்பதாம். இப்பாடல் தரும் இலக்கணத்திற்கு இணையற்ற இலக்கியமாய் வாழ்ந்தவர் எங்கள் கடையிற் சுவாமிகள். அவரது பெருமையைத் தமது அடியார் சிலருக்கு விளக்கும்போது, ஸ்ரீ யோக சுவாமிகள் கூறிய அரியபெரிய வாக்கு இவ்விடத்தில் சிந்தனைக்கெட்டுகிறது: ''ஆடையற்ற மாதொருத்தியுடன் கைகோத்து ஆடினாலும், தன் சொரூபநிலையிலிருந்து தழம்பாத தனிப்பெருந் தவத்தோன் அவர்; புத்தர், கிறிஸ்து, முதலாயினோரிலும் பன்மடங்கு பெரியவர் ஆவர் அவர்'', என்பது அப்பொன்னுரை.

அவர் தமக்கு உறைவிடமாகக் கொண்டு உகந்தது பெரியகடைச் சதுக்கம்—பொதுச் சொத்து. அதின் மேற்கு வடக்கு வீதிகளிலிருந்த வியாபார நிலையங்கள் பெரும்பாலும் வாணிபச் செட்டியார்களுக்குச் சொந்தமாயிருந்தன. அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள், இயல்பாகவே, தெய்வபக்தியிலும், அடியார் சேவையிலும், ஆர்வமுள்ளவர்கள். அவர்களிற் சிலரே சுவாமிகளின் மகிமையை முதலில் அறிந்து கொண்டனர். முதன் முதலாக சுவாமிகள் வீடுதேடிச் சென்று உணவு கேட்டருந்தியது, திரு. வைரமுத்துச் செட்டியார் மனையினிலாகும். இவர் ஓர் பழைய தொண்டர். இவரின் குருபக்தியின் சின்னமாகப் பின்னாளில் தோன்றியதே கந்தர் மட அன்னசத்திரம். சுவாமிகளைக் குழந்தையாகப் பாவித்து அவருக்கு அன்னங்குழைத்து ஊட்டிய சின்னச்சிப்பிள்ளை அம்மையார், ஸ்ரீ அருளம்பல சுவாமிகளின் தாயார் ஆவர். அம்மையாரின்

'கடைக்குட்டி'யான அருளம்பலம் மூன்று வயதுப் பாலகனுய்ச் சுவாமிகளுக்கருகிலிருந்து, அவர் உண்ணும்போது பங்கெடுப்பதுண்டாம். இற்றைக்கு ஐம்பது வருஷங்கட்கு முன் அருளம்பல அடிகள் சில அன்பர்கட்கும் எமக்கும் நேரிற்சொன்ன விஷயமிது. எவ்வளவு அன்பாகத்தான் அடியார்கள் அவரை ஆதரித்து அமுது வழங்கிய போதிலும், மறுபடியும் அதே இல்லங்களுக்குச் செல்வது அவர் வழக்கில் இருக்கவில்லை.

தம்மையடைந்தமெய்யடியாரிடையேசாதிபேதம் உயர்வு தாழ்வு செல்வர் வறியர் என்ற வித்தியாசம் பாராது எல்லாருக்கும் ஒரேவித கருணைகாட்டி அவர்களது உடல்நோய்க்கும் மனநோய்க்கும், வறுமைக்கும், பரிகாரஞ்செய்வதில் அநுக்கிரகங் காட்டத் தொடங்கவே, அடியார் கூட்டம் பெருகியது. ஏழைகளின் இல்லங்கட்கும் எழுந்தருளுமாறு அழைப்புகள் அதிகரித்தன. அதற்கிணங்கிச் சென்றபோதெல்லாம், அவர்கள் அவருக்குத் தாம் வழக்கமாகப் பாவிக்கும் மச்சமாமிச மதுசேர்ந்த விருந்தையே அளித்தனர். விருப்பு வெறுப்பற்றவரான சுவாமிகள் அவற்றையும் ஏற்றனர். தனக்கெனவோர் செயலற்றுத் தானதுவாய் நின்ற அருட் பெரியோனின் இந்த முறை, வைதீகச் சைவர்களிடையே குரோதத்தையும் விஷமத்தையும் உண்டாக்கியது. அவர்களையும் அப்பன் தடுத்தாட்கொண்டதன்மை அற்புதத்தின் அற்புதமாகும். உதாரணமாக இணுவில் ஆசிரியர் அம்பிகைபாகரின் மனமாற்றத்தைக் குறிப்பிடலாம். அத்தொடர்பில், ஸ்ரீ யோக சுவாமிகள் எமக்குக் கூறிய ஓர் அருஞ்சம்பவத்தை மாத்திரம் இங்கு சுருக்கமாகக் குறிப்பிடுகின்ருேம்:-

கடையிற் சுவாமிகள் உத்தம சீடர்களுள் ஒரு வரும், யோகரின் குருநாதருமான, நல்லூர் செல்லப்ப சுவாமிகளுக்கே, தமது குருநாதன் மதுபானம் அருந்துகிருரென்பதைப் பிறர் சொல்லக் கேட்கச் சகிக்க முடியவில்லையாம். அது அவரால் நம்ப முடியாத விஷயமாகவும் இருந்ததாம். நேரே பரிசோதிக்கக் கருதி ஒருபோத்தல் சாராயத்துடன் குருநாதரைத்தேடி பெரியகடை சென்ருர். போத்தலைச் சால்வையில் சுற்றி மறைத்துக் கொண்டு அருகில் உட்கார்ந்ததும், ''ஓகோ! நீயும் எனக்குச் சாராய விருந்தளிக்க விரும்பிவிட்டாயா? சரி பின்ருலே மறைத்து வைத்திருக்கும் போத்தலை எடுத்துத் திற. நீயும் நானும் இங்கிருக்கும் அன்பர்களும் எல்லாரும் பகிர்ந்து குடிப்போம்'', என்ருராம். நடுக்கத்துடன் செல்லப்பா சுவாமிகள் போத்தலை முன்வைத்துத் திறந்ததுமே, திராவகம் முழுவதும் ஆவியாக மாறிக் காற்ருேடு கலந்துவிட்டதாம். சீடர், குருநாதரின் பாதங்களை இறுகப் பிடித்துக் கண்ணீராற் கழுவிவிட்டு நல்லூர்த் தேரடிக்குத் திரும்பிவிட்டாராம்.

இதுபோன்ற அற்புத நிகழ்ச்சிகள் அளப்பில. அவரது ஊன் எச்சிலை உண்டு நோய் தீர்ந்தோர் பலர்; சித்திகள் பெற்ருேர் சிலருமுண்டு. சுதுமலையைச் சேர்ந்த ஒருவர் சோதிட வல்லுனராஞர்; இன்ஞெருவர் புகழ்பெற்ற வைத்தியராஞர். மீன் பிடிக்கப் போயிருந்த கரையூர் வாசியான சுவாமிகளது அடியார் ஒருவர், நடுநிசியில், புயல்காற்றிஞலும், பெருமழையிஞலும் தாக்கப்பட்டு ஆழ்கடலில் அமிழ்ந்திப் போகும் வேளையில் வேறு தஞ்சமின்றி, கருணைமலையான சுவாமிகளைச் சிந்தித்து அலறவே, உடனே, அப்பக்தனது குடிசைக்குச் சென்று சவளக் கோல் ஒன்றை எடுத்து, ''ஏலேலோ''ப் பாடி முற்றத்து மண்ணைக் கிளறி, அந்தப்

பக்தனின் உயிரை அவர் காப்பாற்றின அருட் கதையைக் கேட்போர் உளத்தை உருக்குந்தரத்தது.

இவ்விதம் முப்பது ஆண்டளவு யாழ்ப்பாண மக்களுக்கு அல்லல் களைந்து, அளப்பரும் அத்யாத்ம வழிகாட்டி, ஞானகுரு பரம்பரைக்கு வித்திட்ட இந்த மகானுபவர், கரவருடம், புரட்டாசி மாசத்தில், பூரணையும் பூரட்டாதி நட்சத்திரமும் பொருந்திய புண்ணிய வேளையில் மகாசமாதியடைந்தனர். சுவாமிகளுடைய சமாதிக் கோயில் வண்ணார் பண்ணை நீராவியடியில் உள்ளது.

வானொலியில்

(இக்கட்டுரை [redacted] நிகழ்ந்த ஒரு சொற்பொழிவைத் தழுவியது.)

# அருணஜோதி ஓங்கி ஒளிர வந்த ரமணஜோதி

ஜோதி வழிபாடானது பண்டைத் தமிழ் நாட்டின் ஞானப்பிரகாச சித்தர்கள் கண்ட சைவ சமயத்திற்கே சிறப்பாய் உரியதாகும். மாணிக்கவாசக சுவாமிகள், பக்த நந்தனார், தில்லைச் சிதம்பர நடராஜ ஜோதியில் கலந்ததும்; திருஞானசம்பந்த சுவாமிகள், திருமணப்பந்தலில் ஜோதியில் மறைந்ததும், புராணங்களின் கற்பனைகள், புளுகுகள் எனப் பரிகசித்த நாஸ்திகருக்கு இவ்வரிய தத்துவத்தின் அழிவற்ற உண்மை ஞானத்தை விஞ்ஞான ரீதியாக விளக்க அவதரித்த பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள், 1950-ம் ஆண்டு, ஏப்றில் மாதம், 14-ந் தேதி வெள்ளிக்கிழமை இரவு 7.45மணிக்கு, மகா சமாதியாகி, பல இன–மதத்தவர்கள் திருவண்ணமலையிற் கண்டு உள்ளங் குளிர்ந்து ஆர்ப்பரிக்க, அரிய முறையில் ஜோதியிற் கலந்த ஆனந்த அருட்காட்சி ஸ்ரீ ரமண மூர்த்தியினுடைய கருதரிய தவ நிலைக்கும், பரமாத்மஜோதி தத்துவத்துக்கும், அதியற்புத விளக்கமாயிற்று. அத்வைதத்தின் அருங்கருத்தை நவீன உலகுக்கு விளக்கவே, ரமணஜோதி அருணஜோதியுடன் இரண்டறக் கலந்ததாகும். ஆகையால், முன்னரிலும் பன்மடங்காக அருணசல ஜோதிப் பிரகாசத்தை உலகம் உணரும் என்பது திண்ணம்.

அருட்பிரகாச வள்ளலார் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள், தமது பூதவுடல் நீத்து ஒளியுடல் தாங்குவதற்கு முன்பு அருளிய தீர்க்க தரிசன வாக்குகளில் முக்கியமானவை மூன்று:- முதலாவது,

தாம் மறைந்த பின் சிறிது காலத்துள் தென்னாட்டில் ஓர் மஹாஞானி தோன்றுவாரென்றது; இரண்டாவது, அதனைத் தொடர்ந்து உத்தமயோகி ஒருவர் தட்சிணம் வருவாரென்றது; மூன்றாவது, இம் மகான்களின் மகிமையையும் பெருமையையும் தமிழருட் பெரும்பாலார் அந்நியர் வாயிலாகவே, அதாவது மேற்கிலும் வடக்கிலுமிருந்து வந்து தரிசிப்பவர்கள் மூலமே அறிவார்கள் என்றதுமாம். இவ் வாக்குகள் பகவான் ரமணரையும், பகவான் அரவிந்தரையுமே குறிப்பிடுவன என்பது வெள்ளிடைமலே. ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் மறைந்தது, கலியப்தம் 4978-ல். ஸ்ரீரமணமூர்த்தி வேங்கடராமனாய் திருச்சுழியற்பதியில் அவதாரஞ் செய்தது கலியப்தம் 4980க்கு நேரான கி. பி. 1879-ம் ஆண்டு மார்கழி மாசத்திலாகும். கல்கத்தாவில் 1872-ம் ஆண்டு அவதரித்த அரவிந்தப் பெருமான், புதுவை சேர்ந்தது 1910-ம் ஆண்டிலாகும்.

ஸ்ரீ ரமண மஹரிஷிகளின் உயர்வற உயர்ந்த அநுபூதி நிலேயை முதன்முதலாக மேனாட்டார், அறிய ஆரம்பித்தது 1911-ம் ஆண்டிலாகும். வேலூரில் போலிஸ் அதிகாரியாயிருந்து இங்கிலாந்துக்குத் திரும்பிய பக்தர் ஹம்பிரீஸ் (F. H. Humpreys—A S P) அத்தொண்டுக்கு கருவியானார். நாற்பது ஆண்டுக்கு முன்னர், பகவானுடைய கருணேக்குப் பாத்திரரான கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்:— "ரமண முகில் அருள் மழை பொழிந்து, மாந்தர் உள்ளத்தில் ப்ரஹ்மானந்தப் பயிர் வளர்ந்து வாழ்க! தமிழ் நாடே, உனது வற்றாச் செல்வம், ரமண சக்தி! அதை உலகுடன் அனுபவி. எழு! விழி! உழை! ஒளிர்! வெல்! வாழ்!" என்ற ஆவேச வாணியின் தீர்க்க தரிசனம் அழகாக அமைந்துவிட்டதெனலாம். ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில், ஸ்ரீ ரமண பகவானுடைய ஞானப்

பொக்கிஷத்தை, டிக்மன் டாக்டர் மீஸ், சாட்விக், பிளௌற்ஸர், ஜீன் ஹேபேட், டாக்டர் சிம்மர், மொறிஸ் பிறிற்மன், சோமசெற் மோஹாம், போல் ப்றன்டண், கான் ஜுங் முதலான பேரறிஞர்கள் தம் கட்டுரைகளாலும், நூல்களாலும் மேலைத் தேசத்துச் சகல மொழிகளிலும் வாரி வழங்கி ஞானப் பசியாளரைத் தட்டியெழுப்பினர்கள்.

**பகவான் சந்நிதியே சாந்த சுகம். அங்கே, பக்தியுடனும் பணிவுடனும் சார்ந்தார்க்கு இயல்பாகவே உள்ளறிவொளி பிரகாசமடைந்தது. அவர் எழுந்தருளியிருக்கும் மண்டபத்தில் வீசியகாற்றும், அதில் பரவியுள்ள பரமாணுக்களும் அவரது சித்சக்திக் கதிரால் தாக்கப்பட்டு, மிகவும் நுண்ணியதும் பரிசுத்தமுமான தன்மையும் பெற்றதால், அங்கே அமர்ந்ததுமே கேவல கும்பகம் சித்தித்துவிடும்; மனம் லயித்துவிடும். இம்மகத்துவத்தை அனுபவத்தில் அறிந்தே, எண்ணிறந்த அடியார்கள் அவருடைய திருப்பாத நீழலிலேயே அடிக்கடிவந்தும், நிரந்தரமாயிருந்தும் பேரின்பந் துய்த்தனர். கேளாமற் கேட்டார்க்கு அவர் கல்லாமற் கற்றதெல்லாம் சதா சொல்லாமற் சொல்லிக் கொண்டேயிருந்தார். இக் காரணம்பற்றியே, பெரியோர்கள் அவரைத் தக்ஷிணாமூர்த்தியென அழைத்தனர்.**

*''ஆழ்ந்த தியானமே நிராதாரப் பேச்சு. மௌனம் என்றால் எப்பொழுதும் பேசிக்கொண்டிருப்பது....அது வாக்கின் இடைவிடாப் பெருக்கு. அது பேச்சால் தடையுறும். வார்த்தைகள் இந்த மௌனபாஷையைத் தடுக்கின்றன. உபந்நியாசங்கள் ஜனங்களுக்கு யாதொரு பலனின்றியே மணிக்கணக்காய் நடைபெறலாம்; ஆனால், மௌனம் சாசுவதமாயும் மனித வர்க்கம் முழுவதற்குமே பலனளிப்பதாயுமிருக்கிறது.'' எனவிளக்கி சுத்த அறிவிலிருந்து*

அகந்தையும், அகந்தையினின்று எண்ணமும், அதிலிருந்து வார்த்தைகளும் உண்டாவதால் பேச்சென்பதை, ஆதிமூலமான மௌனத்தின் கொள்ளுப் பேரன் என்கிறார் மஹரிஷி.

மெய்யடியார்களின் சந்தேகந் தீர்க்க அவர் திருவாய்மலர்ந்த அருஞ்சிறு மணிமொழிகள் கேட்பவர் இதயத்தில் பசுமரத்தாணிபோற் பதிந்து யாண்டும் பலன்தரும் அபாரசக்தி வாய்ந்தவை. 700 சுலோகங்களில் அடங்கிய கீதையின் கருத்தை மொத்தம் 42 சுலோகங்களில் அடங்கிய ''கீதாசாரக் கலிவெண்பா'' என்னும் நூலை ஸ்ரீ ரமணமூர்த்தி அருளினார்கள்; அதன் கருப்பொருளையும் ஒரே வசனத்தில், ''ஆத்மஞானியே உண்மையான நிஷ்காமிய கர்மயோகியுமாவான்'', என்றருளிய சிறப்பு, சிந்தைனக்கினிய விருந்தாகும்.

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகள் உலகுக்கருளிய முக்கிய போதனை, ''நானார்'' என்னும் விசார மார்க்கமாகும். இதுவே விசேஷ பலனளிக்கும் ஆத்மீக வழியெனப் பகவானே விளக்கியருளினார்:- மனமென்று ஓர் பொருளில்லை. நினைவுக் கூட்டங்களே மனதின் சொரூபம். மன அழிவிற்கு விசாரத்தைவிட உயர்ந்த மார்க்கம் இல்லை. எந்த எண்ணமெழினும், இந்த எண்ணமெல்லாம் யாருக்கு? என விசாரித்தால், எழுந்த எண்ணங்கள் அடங்கிவிடும். மனிதன் எல்லா நினைவுக்கும் ''நான்'' என்னும் நினைவே முதல் நினைவு. இதைத் தொடர்ந்தே ஏனைய நினைவுகள் எழுகின்றன. ஆகையால், ''நானார்'' என்னும் விசாரணையினாலே சப்த தாதுக்களாலாகிய தூலதேகம் நானன்று; ஞானேந்திரியங்கள் நானன்று. மனம், புத்தி, சித்தம், அகங்காரமாகிய அந்தக்கரணங்களும் நானன்று என்று

''நேதி''* செய்து கொண்டு போகும் போது, நினைவுகளுக்கெல்லாம் மூலமான நான் என்பது மறைந்து, எப்பொழுதுமுள்ள தான் மாத்திரம் விளங்கும். இப்படித் தனித்து நிற்கும் அந்த அறிவின் சொரூபம் சச்சிதானந்தம். மனத்தின்கண் எதுவரையில் விஷயவாசனைகள் இருக்கின்றனவோ, அதுவரையில் ''நானார்'' என்னும் விசாரணையும் வேண்டுமென்பதும்; நினைவுகள் எழும்ப எழும்ப அவற்றை உடனே அந்த விசாரணையால் உற்பத்தி ஸ்தானத்திலேயே நசிப்பிக்க வேண்டுமென்பதும் பகவானது அரிய உபதேசம். அன்னியத்தை நாடாதிருத்தல் வைராக்கியம்; அல்லது நிராசை; தன்னை விடாதிருத்தல் ஞானம்; உண்மையில் இரண்டுமொன்றே, இதுவே அவர் அருள் வாக்கு. சுருதி யுத்தி அனுபவங்களுக்கு மிகவும் பொருத்தமான நவீன மனோதத்துவ சாஸ்திரத்துக்குவப்பான இந்த விசார மார்க்கமானது, ஸ்ரீ ரமண மஹரிஷிகளுடைய வாழ்க்கையாலும், வாக்காலும், தேச-கால-ஆச்சிரமம் முதலிய நியமம் எதுவும் தேவைப்படா முறையில், மிகச் சுலபமாகவும், பழைய சாஸ்திரங்கள் விபரிக்கும் முறையிலும் பார்க்கத் தற்காலத்துக்குகந்த தெளிவுடனும் விளங்குகிறது. நாஸ்திகர்தாமும், இதனைப் பின்பற்றி மெய்ப்பொருளை அடைய முடியும். நவயுகத்துக்குகந்த இந்த ஞானவித்தையை தனிச் சிறப்பு வாய்ந்த ''ரமண வித்தை'' என்பது சாலப் பொருந்தும்.

பாரத ஜனதிபதி டாக்டர் இராதாக்கிருஷ்ணன் இருபது வருடங்களுக்கு முன்பு, மஹரிஷியின்

* நேதி—ந + இதி - இதுவல்ல + மெய்ப் பொருள் — (என்று அநித்திய வஸ்துக்களை ஒதுக்கி மெய்ப்பொருளை விசாரம் செய்யும் மார்க்கம்).

பெருமையை விளக்கிய அரிய உரை இங்கு சிந்திக்க இனியது: - ''கடவுளுண்மையைக் கைகண்ட சுயம் பிரகாசப் பொருளாய் உணர்ந்த சுகவாழ்வின் ஒவி யக்காரர் பலவகையினர். ஒரு சிலர் கவிதையுங் கானமும் நிறைந்தவர்கள்; சிலர் ஆற்றல்மிகு கர்ம யோகிகள்; இன்னும் சிலர் எதனிலும் கலவாது தனித்திருப்போர். இத்தனை வேறுபாடு இருந்தா லும், அவர்கள் செல்லுவது ஒரேவழி; பேசுவது ஒரே மொழி; அவர் யாவரும் ஒரு இனத்தினரே. இவ்வுயர் நோக்கமே உருக்கொண்டு அவ்வக் காலத் தில் அவதரித்த ரிஷிகளால் நமது மத சம்பிரதாயம் நிலை பெற்றிருக்கிறது. தெய்வீக உணர்வில் மூழ் கிக் கிடக்கும் மகாத்மாக்கள் இன்றும் நம்மிடையே விளங்குகின்றனர். பிரம்ம நிஷ்டைக்கு ஓர் உதா ரண புருஷராக இலங்கும் ஒருவர் நம்மிடையே விளங்குவது நமது பெரும் பாக்கியப் பயனே. அவரே ஸ்ரீ ரமண மஹரிஷிகளாவர்.''

இவ்வண்ணம் ஞானநெறியை உபதேசிக்கும் பகவானே, பக்தகோடிகளுக்கும் பரிந்து; ''ஆண்ட வனிடம் உன்பொறுப்பைச் சுமத்திவிட்டுச் சாட்சி யாக வாழப் பழகு; அவன் அதனை ஏற்றுக்கொள் வான். அவன் தன்னைப் பூரணமாக நம்பித் தம்மை ஒப்புக் கொடுப்பவரின், கவலைகளைக் களைந்து மனச் சாந்தியளிக்கும் கருணைச் சொரூபன்'', என்றருளித் தெளிவையும் தீரத்தையும் ஊட்டியருளினார்கள்.

ஸ்ரீ ரமண மூர்த்தியின் அருள் மனிதரிடத்தும், பிராணிகளிடத்தும் சமமாகவே சென்றது. அவரு டைய சமதர்மம் இவ்வுலக அற்புதங்களுள் ஒன்று எனலாம். அவர் முன்னிலையில் மகாராசாவும் பிச் சைக்காரனும், பார்ப்பானும் பறையனும் சமசரி யாம். அம்மட்டோ! பசு, நாய் காகம் குரங்கு தானும் அதேவித சமஉரிமையையே அனுபவித்து

அவர்தம் திருக்கரத்தினல் முத்தியும் பெற்றுய்ந் தன. இன்றும் ஸ்ரீ ரமணச்சிரமத்தில், எங்கும் காணக்கிடைக்காத காட்சியாக பசு, காக்கை, குரங் கின் சமாதிகள் விளங்குகின்றன. தன் தாயாருக்கு முத்தியருளிய திருக்கரத்தினலே பிராணிகளுக்கும் பேதமின்றி முத்தியருளிய ரமணமாதேவருடைய கருணைத்திறம் சொல்லுந்தரமோ!

**"உண்ணுரமுத சொரூபம் உலகில் உடற்சட்டை யொன்றணிந்து**
**கண்ணல் அமுதக் களிதருஞானக் கதிராயிரம் பரப்பி**
**அண்ணமலை அடித்தென் பாரிசத்தே அருட்கொலு வீற்றிருக் கும்**
**தண்ணர் கடலாந் தலைவன் பதத்துக்குப் பல்லாண்டு சாற்று துமே."**

— *ஸ்ரீ முகவைக்கண்ண முருகனர்.*

*('ஆத்மஜோதி', 'வீரகேசரி' விஷய தானங்களிலிருந்து தொகுக்கப்பட்டது.)*

நவயுக யோகி:

# பகவான் ஸ்ரீ அரவிந்தரும் அமர வாழ்வும்

பண்டைக்கால மஹரிஷிகளின் மணிவாக்குகளில் ஒன்ருன தேவ ஜீவனம் என்னும் பதத்தை இருபதாம் நூற்ருண்டில் உலகெங்கும் பேசப்படவும், எழுதப்படவும் செய்த பெருமை பகவான் அரவிந்தரைச் சேர்ந்ததாகும். அம்மஹோன்னத வாழ்வைப்பற்றி அவர்மூலம் எழுந்த இலக்கியம் வெறும் புத்தகப்படிப்பிலிருந்து உதித்ததல்ல; உண்மையில், அவரது ஆழ்ந்த தெய்வீக வாழ்க்கையென்னும் கற்பகச் சோலையிலிருந்து மலர்ந்ததாகும். அவர் விளக்கிய பூரண யோகத்திற்கு உதாரணபுருஷர் அவரே. மனித சமுதாயத்தின் நவயுக சிற்பியாக விளங்கிய இந்த மகானை, இருபதாம் நூற்ருண்டு கண்ட ஒரு தனித் தீர்க்க தரிசியென அழைத்தல் புகழ்ச்சி உரையாகாது. ''ஸ்ரீ அரவிந்தர் தெய்வச்சுடர், சித்தபுருஷர், கவியோகி, பாரத ஜோதி, வேதகால ரிஷிகளுக்குப் பின் வந்த பூரண யோக ரிஷியாவர். புதிய ரூபாந்தர சக்தியைப் பெற்ற மஹாபுருஷரவர். அவர் வரலாறு விஞ்ஞான சக்தி விளக்கமேயாம்'', என்று ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அஞ்சலி செய்கின்ருர். வங்காள வரகவி இரவீந்திரநாத தாகூர்: நீயே ஸ்வதேச ஆத்மா......ருத்ர தூதன்..... பாரத வீணைபாணி...... ஹே அரவிந்த! ரவீந்திரன் வணக்கம். ஏற்றருள்'', என்று போற்றினர், அரவிந்தர் வாக்குத் தெய்வ வாக்கு, என்பதை எவரும் மறுக்க முடியாது. இவ்வுண்மையை உலகு நன்கு உணர இன்னும் பல ஆண்டுகள் கழியவேண்டிய தேவை இருக்கலாம்.

ஆனால், அச்சுணக்கத்தால், உலகின் அபக்குவம் வெளிப்படுமேயன்றி, அவரின் மணிவாக்கின் மகிமையும், பெருமையும் குன்றப்போவதில்லை. ''அவற்றின் சிறப்பு, நாட்செல்லச் செல்ல இன்னும் அதிகரிக்கும்'' என்று தேசபந்து சித்தரஞ்சனதாஸ் முழங்கியது முற்றும் பொருத்தமானது. இவ்வாறு, அரவிந்தப் பிரகாசத்தின் அருட்சோபையைக் கண்ணுற்ற பின்னரே, அருளாளரும், கவிஞர்களும் போற்றினார்கள். ஆனால், அரவிந்தரையே காணாது, வடநாட்டில் அவருக்கு இரண்டு வயதாகும்போது, தென்னாட்டில், திருவருட்பிரகாச வள்ளலார் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள், + 'உத்தரயோகி'யின் வருகையைப் பற்றித் தீர்க்க தரிசனமாக அருளினார்கள். இந்த உத்தரயோகியின் இலட்சணங்களை விபரித்த வள்ளலார்: அந்தயோகி ஆண்டவன் தருவதை ஆண்டவனுக்கே மீண்டும் அளித்துவிடும் சர்வத்தியாகம்; ஆண்டவனை நேருக்கு நேராகத் தரிசிக்க வேண்டுமென்னும் வேணவா; ஆத்மசக்தியைக் கொண்டு அன்னியரின் ஆதிக்கத்திலிருந்து பாரத மாதாவை விடுவிக்க வேண்டுமென்ற வீராவேசம், ஆகிய மூன்று பைத்தியங்களை உடையவராய் இருப்பார், என்றனர். அரவிந்தர் தனது முப்பத்திமூன்றும் வயதில், மனைவிக்கு எழுதிய கடிதங்களில் அடங்கியுள்ள இம்மூன்று பைத்தியங்களைப் பற்றிய அரிய விஷயங்களைப் படித்தோருக்கு, இராமலிங்கர் தம்தீர்க்கதரிசனத்தில் கண்ட ''உத்தரயோகி'', பகவான் ஸ்ரீ அரவிந்தர் என்பது ஐயமற விளங்கும்.* இங்ஙனம், ஆங்கிரஸ வருஷம், ஆவணி

---

+ 220-ம் பக்கம் பார்க்கவும்

* புதுச்சேரி அரவிந்தாஸ்ரமம் பதிப்பித்த கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதிய ''ஸ்ரீ அரவிந்தப் பிரகாசம்'' என்னும் நூலில் 28-ம் பகுதி பார்க்க.

—பதிப்பாசிரியர்.

மாதம், முதலாந் தேதி வியாழக்கிழமை மூல நட்சத்திரத்தில், சூரியோதயத்திற்கு முன், சுக்கிரோதய வேளையில், வங்க நாட்டில், புகழ்பெற்ற டாக்டர்: கிருஷ்ணதன கோஷின் மூன்றாவது குமாரராக அரவிந்தர் அவதரித்தபோதே, அவருடன் தீர்க்க தரிசனமுங் கூடவே தோன்றியதெனலாம். அரவிந்தர் தம்வாழ்வில் மிகவும் உயர்ந்த நிலையை அடைந்து தாய் நாட்டுக்கும் உலகுக்கும் மகத்தான சேவை செய்வாரென்பது, அவரது தந்தைகண்ட தீர்க்கதரிசனமாகும்.

''யுகாந்திரம்'' என்னும் வங்கப் பத்திரிகையில் வெளிவந்த அரவிந்தருடைய கட்டுரை சம்பந்தமாக அவர் 1907-ம் ஆண்டில் கைது செய்யப்பட்ட போது நாடெங்கும் துக்கத்திலாழ்ந்தது. அத்தருணம் வங்காள வரகவி இரவீந்திரநாத தாகூர், அரவிந்தருக்களித்த கவிதாஞ்சலி உள்ளத்தை உருக்க வல்லது. (கட்டுரை ஆரம்பத்திற் காண்க) இதன் கண்ணும் ஒரு தீர்க்க தரிசனம் பொருந்தியுள்ளது.

புதுவையில், அவர் யோக நிலையம் நிறுவிய பின்னர், அவரது ஜனனதினமான ஆகஸ்ற் 15-ல் ஜயந்தி விழா நடாத்த விரும்பினர். பல ஆண்டுகளாக அரவிந்தர் விரும்பவில்லை. 1922-ம் ஆண்டு அன்பர்களின் அயராத அன்பு வேண்டுகோளுக்கிணங்கி, ஜயந்தி விழாக் கொண்டாட அநுமதித்த போது, ''நாம் பிறந்த நாளாகிய ஆகஸ்ற் பதினைந்திலன்றே, பாரத நாட்டின் சுதந்திர தினமும் பொருந்தப் போவதால், அதனைக் கொண்டாடலாம்'', என்றனர். பாரத சுதந்திர தினம், 1947ம் ஆண்டு ஆகஸ்ற் 15-ந் தேதியாகும்.

உலக நிலைகுறித்து அவர் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் விடுத்த செய்திகள் எல்லாம் தீர்க்க தரிசனம் அடங்கியவையாகும். தமிழன்பர், ஒருவர் அவரைக் கல்கத்தாவில் சந்தித்துப் பேசியபோது 1907-ம் ஆண்டு முதல், உலகில் ஒரு புதிய காலந் தொடங்கியுள்ளது. உலகில் ஒரு மஹாப்பிரளயம் உண்டாகும். உயர்ந்தோர் தாழ்வர். தாழ்ந்தோர் உயர்வார். நமது ஜனங்களிடையே பெரிய மாறுதல்கள் ஏற்படும். புதிய சிந்தனைகள், புதிய முயற்சிகள் எல்லாச் செயல்களிலும் புதிய வழிகள் ஏற்படும், என்றார் அரவிந்தர். முதலாவது உலக யுத்தம் முடிந்து சர்வதேச சங்கத்தை ஐரோப்பிய அரசியல் தலைவர்கள் கூட்டிய போது, முதலில் உளவளர்ச்சியையும், உள் ஒற்றுமையையும் தேடும்படியும், அவையின்றிப் புறத்தே ஒற்றுமையை நிறுவ முடியாதெனவும் எடுத்துக்கூறி அவர்களின் நடவடிக்கை முறைகள் முந்தியதிலும் பார்க்கப் பெரிய உலகப் போரில் முடியுமென எச்சரிக்கை கொடுத்தார்.

அதே காலத்தில் பொது மக்களின் சமத்துவப் போராட்டத்தைப்பற்றி எழுதியபோது, காலவெள்ளத்தின் தடுக்க முடியாத வேகத்தை அருமையாய் விளக்கியுள்ளார். பொருள் படைத்தோரின், நல வுரிமைகள் பண்டுதொட்டுவரும் புனிதமான உரிமைகளாயிருப்பினும், எதிர்காலமானது இறந்த காலத்தைவிட மகத்தானதாயிருக்கிறதென்றார். "இயற்கையின் பரிணமமானது, தனக்கு உதவாதவைகளையெல்லாம் இரக்கமின்றிக் காலின் கீழ்ப் போட்டு மிதித்துச் சின்ன பின்னப்படுத்தி, தான் ஏற்கனவே வகுத்துக் கொண்ட மார்க்கத்தில் செல்லுகிறது; இப்பரிணமத்திற்கு விரோதமாக நின்று போராடுகிறவர்கள் இறைவனின் திருவுள்ளத்தையும் முன்னலேயே விதிக்கப்பட்டுள்ள ஆக்கினையை

யும் எதிர்ப்பவராவர். இயற்கையன்னே, இப்பிரத்யட்ச உலகில் வேலே செய்யுமுன், எல்லாம் காரண உலகிலேயே அவர்களுக்குத் தோல்வியும், அழிவும் ஏற்கனவே ஏற்பட்டுவிட்டன'', எனக் கூறி குருக்ஷேத்திரத்தில் அர்ச்சுனனுக்குக் கிருஷ்ண பரமாத்மா உபதேசித்த அமிர்தவாசகங்களொன்றின் எதிரொலியை நாமும் கேட்க வைத்து, மனித குலத்தின்முன் ஓர் ஒப்பற்ற தீர்க்கதரிசியாகக் காட்சி தருகின்றார்.

அமைதியாகச் சிறிதுகாலம் வாழும் பொருட்டு 1910-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி இரவு கல்கத்தாவில் கப்பல் ஏறும்போது, அரவிந்தர் புதுவையில் யோகநிலேயம் நிறுவ எண்ணினரா? நல்ல சந்தர்ப்பம் கிட்டும்போது மீண்டும் கல்கத்தாவுக்குத் திரும்பவே அவர் திட்டமிட்டிருந்தார். ஆனல், அவரைத் தன் பணிக்காக ஆட்கொண்ட அன்னே பராசக்தியின் ஆணே வேருய்விட்டது. தென்னட்டுச் சித்தபுருஷர்கள், சீவன்முக்தர்கள், மற்றும் மகான்களுடைய ஆத்மீக சக்தி அவரைப் புதுவையிலேயே தவத்தில் அமர்த்திவிட்டது. பாரததேசம் புண்ணியபூமி; அதின் அத்தியாத்மகற்பகச்சோலே, ஆதிமக்களாந் தமிழர் வாழ்ந்த தென்னடேயாம். எந்நாட்டவர்க்கும் இறையான சிவன், தென்னட்டையே சொந்தமாக உடையவரன்றே? நவீன பௌதிக விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி முறையில் அரவிந்தர் விளக்கும் பூரணயோகம், நமது பழைய சித்தர்கள் ''சாகாக் கலே'', 'இறவா நிலே' என விபரித்துள்ள சித்த மார்க்கத்தைத் தழுவியதாகும். நமது நாட்டுக்குப் 'பரதகண்டம்' என்னும் பெயர் நிலவுமுன், 'நாவலந்தீவு' என்னும் பெயர் வழங்கியபோது, இங்கே நிலவியது சித்த மார்க்கமேயாம்.

வங்காளத்திற் பிறந்து, இங்கிலாந்தில் கல்வி கற்று, வரோடாவில் உத்தியோகம் பார்த்தபின் வடநாட்டில், அரசியற்துறையில் ஈடுபட்டிருந்த ஒருவரைத் தமிழ்நாட்டுக்கு ஈர்த்தது, சித்தமார்க் கத் தொண்டிற்கும் தென்னாட்டிற்கும் தொன்று தொட்டு இருந்துவந்த தொடர்பேயாகும்.

தேவர்போல மானிடரும் வாழவேண்டும்; விண்ணுலக இன்பம் மண்ணுலகிலேயே நிலவ வேண்டும்; துன்பம் விரட்டி ஓட்டப் படவேண்டும். மனித சமுதாயம் அதற்கேற்ற தெய்வீக மாறுதல் அடைந்து பூரணம் பெறவேண்டும், என்ற பெரிய கனவைக் கண்ட அரவிந்தரின் வரலாறு, ஆரம்ப முதல் அந்தம் வரைக்கும் அற்புதம் பொருந்தியதா கும். அதனை இதுவரையில் ஆராயாமல் வாழ்ந்த வர்கள்தாமும், அவரது மகாசமாதிக்குப் பின் அவ ரது உடலில் தெய்வசேதனத்தின் ஒளி வீசுவதைப் பத்திரிகைகள் மூலமும், பார்த்தவர்கள் மூலமும் அறிந்து அவர் வரலாற்றைப் படிக்க ஆவல் கொண்டனர். அம்மட்டோ! "மனவுணர்வு விஞ்ஞான திவ்வியசேதனத்தை எட்டி, அருட் ஜோதி பொலியவேண்டும், அதுபோல் பிராண னும் உடலும் திவ்விய சேதனத்தால், அமரத்தன் மை அடைய வேண்டும்", என அரவிந்தர் விளக் கிய தத்துவம் அவரது மரணத்திற்குப் பின் நவீன வைத்திய சாஸ்திரம் வியக்கும் முறையில் நடந் துள்ள மேற்கூறிய அற்புத சம்பவத்தால், ஒரு சிறி தளவாவது அனுபவரீதிக்கு வந்துவிட்டதாகக் கரு தவுந் தொடங்கியுள்ளனரெனலாம்.

அரவிந்தர் பூதவுடல் கொண்டுலாவிய எழுபத் தெட்டரை ஆண்டுகளை இருகூறுகப் பிரித்தால், முதற் பாகத்தில் அவர் ஆவேசக்கவியாகவும், தேச பத்தனுகவும், தியாகமூர்த்தியாகவும் விளங்குவதை

யும்; இரண்டாவது பாகத்தில், சர்வாத்மதரிசியாக வும், பாரத சமுதாய நபியாகவும், உலகரட்சகனு கவும் பூரணயோகியாகவும் படிப்படியாக ஏறி அவர் காட்சி அளிப்பதையும் காணலாம். புயல் மயமான முதற்பாகத்துக்கும், அமைதி நிறைந்த பிற்பாகத்துக்குமிடையே, வாழ்க்கையின் திரும்பு முனைபோல் அமைந்திருப்பது, அலிப்பூர் சிறைவா சம்.

அவரது காரியம் அத்யாத்ம காரியம். அதில் ஆத்திரத்திற்கும் அவசரத்திற்கும் அணுவளவே னும் இடமில்லை. அவற்றின் இலட்சியத்தை அடை வதற்கு நீண்டகால சாதனையும், பராசக்தியின் திரு வருளும் வேண்டும். திருமூலர் பாடல்களையும், மாணிக்கவாசகரின் திருவண்டப் பகுதியையும் படித்து அவற்றின் பொருளைத் தெளிந்தவர்கட்கு, அரவிந்தர் நூல்களில் அடங்கிய தத்துவங்களை விளங்குவதில் கஷ்டமிராது.

ஸ்ரீ அரவிந்தர் தமது விஞ்ஞான யோக (பூரண யோகம்) தத்துவத்தை விளக்கிய பல அரிய நூல் களுள் முதன்மையான மூன்றும்: Life Divine (தேவ ஜீவனம்), Synthesis of Yoga (யோக சமுச்சயம்), Essays on the Gita (கீதைக் கட்டுரைகள்) ஆகும். இவை மூன்றும், அரவிந்த சித்தாந்தத்தின் "பிரஸ் தானத்ரயம்" என்கின்றனர்.

# ஸ்ரீ அரவிந்தரின் பூரணயோகம்

'கடவுள் பொய்' என்னும் நாஸ்திக வாதத்தை எவ்விதம் கண்டித்தாரோ, அதேவிதம் 'உலகம் பொய்' என்னும் மாயா வாதத்தையும் அரவிந்தர் கண்டித்தார். இறைவன்-உயிர்-உலகம்: இம்மூன்றிற்குமிடையே உள்ள இணைபிரியாத தொடர்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது அவர் கொள்கை. எனவே, இறைவன் எப்போது உண்மையோ அப்போதே அவன் படைத்த உலகும் உண்மையாகின்றது. உயிர்வாழ்வாகப் பொலியும் அந்த இறைவனைக் கண்டு கலப்பதே உயிரின் இலட்சியம். மானிட வாழ்க்கையின் இலட்சியம், தெய்வ நிறைவும், தேவ ஜீவனமும் பெறுதலேயாம். இந்த முறையில் மனிதனைத் தெய்வ—சிகரத்துக்கு உயர்த்துவதே அரவிந்தரின் பூரணயோக இலட்சியம்.

அரவிந்தரின் பூரணயோகம் கடினமானது. அதன் நோக்கமும் கடினமானது. வாழ்வு முழுவதையுமே யோகமாக்கும் அவரது புது நெறியில், உலகில், இதுவரை தோன்றிய மகான்கள் வகுத்த சாதனைகளின் நன்மைகளெல்லாம் ஒருங்கே அமைந்திருப்பதோடு, நவீன பௌதிக சாஸ்திரமுறையில் ஆத்மீக வளர்ச்சியை விளக்கும் சில புத்தம் புதிய தத்துவங்களும் நுட்பமான சாதனு விதிகளும் தரப்பட்டுள்ளன. ஆகையால், அது பூரணயோகமெனஅழைக்கப்படுகின்றது. மனத்தைப் புத்தியில் அடங்கச்செய்து, புத்தியை ஆத்மாவில் ஒடுங்கப் பண்ணிச் சமாதியில் லயித்துப்போய் தனிமுறையில் தப்பித்துக் கொள்ளும் முத்திமட்டும் போதாது என்கிறார் அரவிந்தர். சடத்தில் உருக்கொண்ட மனிதன் உணர்வு முற்றிலும் உயர்ந்து, பரவுணர்வைக் கூடவேண்டும். அப்பரவுணர்வு, பின் கீழி

யல்புகள் அனைத்தையும் விஞ்ஞான சக்தியான சக்தியால் மாற்றி உயர்த்தவேண்டும். இவ்வண்ணம் ஆக்கும் சக்தியையடைய முடியுமென்கிறார் அரவிந்தர்.

உண்மை-அறிவு-இன்பம் ஆகிய மூன்றும் பொருந்திய பொருளான பரமாத்மாவில் இம்மூன்றும் ஒன்றாயிருக்குமேயன்றிப் பிரியமாட்டா. வேறுபாடே தெரியாமல் ஒன்றியிருக்கும் உச்சநிலையை அடைவதற்குச் சாதகன் விஞ்ஞானப் படியைத் தாண்ட வேண்டும். சச்சிதானந்தத்திற்கும் மனம் பிராணன் உடலான மூன்று கீழ்த்த பூமிகட்கும் இடையே இருப்பது விஞ்ஞானம். கடவுளறிவுடன் கூடியதான அவித்தையினின்றும் விடுபட்டிருக்கும் இந்த விஞ்ஞான சக்தி இறங்கினாலன்றி மனம் உயிர் உடலின் கீழியல்புகள் மாறவேமாட்டாது. தெய்வத்தினின்றும் சதா பிரிவுணர்ச்சி கொண்டு இயங்குவது மனம். அதை ஒரே வீச்சில் விஞ்ஞானத்திற்கு உயர்த்துவது கஷ்டமான சாதனை. ஆகையால், மனத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் இடையே அதிமனம் என்னும் தத்துவத்தை அரவிந்தர் விளக்குகின்றார். அதிமனமே ஒருவன் மனத்தினின்று விஞ்ஞானத்திற்குப் போகும் வழியாகும் என்கிறார். உன்னதமான புத்திக்கு அப்பால் உயர்ந்த ஒள்ளிய மனத்தை ஆளும் இந்த அதிமனந்தான் அந்தர்ஞானத்திற்கு வழிதிறக்கிறது. அதன் இருப்பிடம் உச்சியிலுள்ள சகஸ்ராரச் சக்கரமாகும். அரவிந்தர் அருளிய ''தேவ ஜீவனம்'' (Life Divine) என்னும் அற்புத நூலில், இவையெல்லாம் மணிமணியாக அருமையாக விளக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் மனோமய கோசத்திற்கப்பால், செல்லமுடியாமல் வாழும் நிலையிலுள்ள நமக்கு, அவரின் சித்தாந்தம் முதற்கண் மயக்கத்தையே தரும். அடுத்தபடியாக அவரதுகனவு, உலகில் எப்போதாவது நனவாக முடி

யவுங்கூடுமா, என்ற கேள்வியே உதிக்கும். இவையெல்லாம் அவர் கோரிய பூரணவாழ்வின் இலட்சியத்தைக் குறைக்கவோ தடுக்கவோ முடியாது. மனோமயகோசத்தினின்று மனம் இறங்கி எப்படி மனிதனை உண்டாக்குகின்றதோ, அப்படியே ஒருநாள், விஞ்ஞானமும் இறங்கி ஒரு விஞ்ஞான சமுதாயத்தை உண்டாக்கியே தீரும், என்பது அரவிந்தரின் அசைவற்ற நம்பிக்கை. மனித பரிணாமப்படியில் இது ஓர் தவிர்க்க முடியாத நியதியென்பதே அவரது கொள்கை. நானூறு கோடி மக்கள் வாழும் இப்பூவுலகில், ஆர்வம் நம்பிக்கை அடைக்கல உறுதியுள்ள ஒரு நூறு அதிமனிதர்கள் கிடைத்தால் அவர் கோரிய பூரணயோகம் மனித சமுதாயத்திற்கு அன்பு ஒற்றுமை அமைதி சாந்தி சுதந்திரம், சுகம் அளிப்பது திண்ணம் என்கிறார். மனித மூளையின் அவலச் செருக்கால் நேரும் வேற்றுமைகளும் வித்தியாசங்களும் மறையவும், பேராசை பிடித்த அகம்பாவத்தால் வரும் போட்டியும் பொறாமையும் போரும் நீங்கவும் வேண்டின், அதிமன உண்மைகளை வென்ற விஞ்ஞானிகள் உலகில் பரவவேண்டும். மேலும், அரவிந்தரையே ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் இனிய தமிழில் வாசகர்க்குப் பேசவைப்போம்:-

''நமது முன்னோர் கருணையால் நம்மிடம் ஆத்ம உணர்ச்சியுள்ளது. அது எத்தகைய பலத்தையும் ஊதியெறியவல்லது. ஆத்மசக்தி பெறுவதென்றால், சத்தி சாதனம் வேண்டும். சக்தி வழிபாட்டைக் கைவிடுத்தோம்; சக்தியும் நம்மைக் கைவிடுத்தாள். உள்ளக்கிளர்ச்சியால், கூத்தாடுவதில் எனக்கு நம்பிக்கையில்லை. விரிந்த அமைதியே நமது யோகத்திற்கு ஆதாரமாக வேண்டும். சக்திக் கடலில் ஞானச்சுடர் கதிர்விடவேண்டும். இந்தச் சுடர்விரிவில், எல்லையற்ற அன்பும், ஆனந்தமும், நிலைத்த ஒற்றுமையின்பமும் விளையாட வேண்டும். இலட்சக்

கணக்காண சீடர்கள் வேண்டுவதில்லை. சிறுமை அகந்தையின்றி, கடவுட் கருவிகளாக நூறு முழு மனிதர்கள் கிடைத்தாற் போதும். உள் விழி திறந்த தெய்வ சைதன்யர்களே நாட்டை உயர்த்த வல்லவர்கள். தெய்வ வாழ்வை விரும்புவோர் தேவ சங்கம், வாழ்வில் கடவுளை நாட்ட வேண்டும்; உலக வாழ்வையும், ஆன்மாவையும் இணைக்க வேண்டும். விஞ்ஞான நிலைக்கு உயர்ந்தாலே ஜீவ ரகசியம் தெரியும். அப்போது உலகு, நித்திய தெய்வலீலை, ஆன்மா அந்த ஆடல் விளக்கம் என்றறிவோம்; அனைத்திலும், ஜடத்திலும், பிரம்மத்தைக் காண்போம். விஞ்ஞானத்தைப் பெற்ருல் நிலையான ஆனந்தம் எளிதிற் பெறலாம். உடல் உயிர் மனம் உலகு அனைத்திலும் அப்போது ஆனந்தத்தை நாட்டலாம். அப்போது பூரண சச்சிதானந்தம் வாழ்வில் உருவாகும். இதுவே, எனது யோகத்தின் கருத்து". ("அரவிந்தப் பிரகாசம்"—54-ம்பாடம்)

1920-ம் ஆண்டில் அரவிந்தர் விடுத்த ஒரு கடிதத்தின் சாரம் இது. அதிலடங்கிய அழைப்புக்கிசைந்து உலகின் நாற்றிசைகளிலுமிருந்து சாதி மத நிற வித்தியாசம் எதுவுமின்றி வந்து கூடிய அன்பர்களின் சங்கமே பின்னுளில் ஸ்ரீ அரவிந்த ஆச்சிரமமாக விளங்கியதாகும்.

("ஆத்மஜோதி"யிலிருந்து தொகுக்கப்பட்டது.)

நல்லூரில் உதயமான ஞான சூரியன்:

# ஸ்ரீ யோக சுவாமிகள்

நல்லூர் மேற்கு வீதியிலிருந்து நறுமணம் வீசி வரும் இந்த அன்புமலர்* மீது, அதே புனித தலத்தின் கிழக்கு வீதியில் உதயமான ஞான சூரியனின் கதிரொளியும் பரவுதல் சாலவும் பொருத்தமுடைத்து. போக்கும் வரவுமிலாப் புனிதன் ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம், காக்குமெங் காவலனாய், அருளாட்சி புரிந்து, அடியார்களின் கவலை தீர்க்கும் சிவதொண்டாற்றிவிட்டுத் தமது பூதவுடலை நீக்கி+ ஒளியுருத் தாங்கியுள்ளார்.

மெய்ஞ்ஞானிகள், சீவன்முக்தர்கள், பரமபக்தர்கள் தங்கள் வாழ்வின் இலௌகீக பகுதியை ஞாபகத்தில் வைத்திருப்பதில்லை. வெற்றி தோல்வி, இன்ப துன்பம், இகழ்ச்சி புகழ்ச்சி முதலான இரட்டைகளைத் தாண்டிய மகான்களுக்கு அந்தப் பாகம் எவ்வித திருப்தியையோ மகிழ்ச்சியையோ கொடுப்பதில்லை. தங்கள் பிறந்த தினம் ஊர்பேர் உற்றார் உறவினர் விபரங்களைக்கூட அவர்கள் நினைவில் வைப்பதில்லை; அவர்கள் செய்த தவசாதனைகளெல்

---

* மங்கையர்க்கரசி சேவை பாராட்டு மலர் — நல்லூரில் 30-5-64-ல் வெளியானது.

+ பங்குனி மாதம் பூர்வபட்ச ஏகாதசியில் ஆயிலிய நட்சத்திரத்தன்று (24-3-64) சுவாமிகள் மகாசமாதி எய்தினர்.

—பதிப்பாசிரியர்.

லாம் அவற்றை முற்றிலும் மறப்பதற்கன்றோ! தாங்கள் பிறந்த தினங்களில் குருபூசை கொண் டாட வேண்டும், தங்களை உலகம் போற்ற வேண் டுமென்றும் உடைமையான ஆசை பீடித்த கபடவேட ஆசாமிகள் மேலே கூறிய நன்னெறிக்கு முற்றாக முரண்பட்டவர்களாவர். இந்த அவல, அலங் கோல நிலை, திருமூலர் வாக்கில் அழகாக வர்ணிக் கப்பட்டுள்ளது.

"குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவிழுமாறே".

—திருமந்திரம்

இவ்வாறு எச்சரிக்கின்றார் அந்த ஞானசித்தர். அவர் 'வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தகர் கண' த்தைச் சேர்ந்தவர். இருப பதாம் நூற்றாண்டில், எங்கள் முன் உடல் கொண் டுலாவிய உயர் தவஞானச் செல்வரான ஸ்ரீ யோக சுவாமிகளும் இவ்வித்தகச் சித்தர் மரபில் உதித்த வர்களே. இற்றைக்கு நான்கு வருடத்துக்கு முன் னர் அவர்கள் சமாதியடையும் வரை, அவர்களது ஜன்ம தினத்தையோ, பெற்றோர் சூட்டிய திருநா மத்தையோ எவராவது சுவாமிகளிடம் அறிந்து கொள்ள முடியவில்லை. இந்த முறையில் தமது ஜயந்தி விழாவை மக்கள் கொண்டாட முடியாத வாறு அவர் தொண்ணூற்றோராண்டு வாழ்ந்து சமாதியெய்திய வரலாறு சுவாமிகளுடைய மகி மைக்கும், 'திருநின்ற செம்மைக்கும்', சுடர்வீசும் சான்றாகும்.

ஸ்ரீ யோக சுவாமிகள் அவதரித்த திருநாள், ஆங்கீரச ஆண்டு, வைகாசி மாதம், 18-ந் தேதி,

அவிட்ட நட்சத்திரம் (29-5-1872) என்று "சிவ தொண்டன்" பழ அடியார்கள் நிட்சயித்துள்ளார்கள். சுவாமிகளிடத்துத் துலங்கிய அழிவில்லா மெய்ப்பொருள், அவர் உடல் மறைந்த பின்னரும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது; அவர்கள் இறந்துவிட்டார்கள், அல்லது மறைந்து விட்டார்களெனக் கருதுவது அறியாமையாகும். எமது சொந்த ஆராய்ச்சியையும் அநுபவத்தையுங் கொண்டு சொல்லும் போது, ஸ்ரீ யோகர் போன்ற ஞானிகளுடைய ஆத்மசக்தியின் பிரவாகமானது, அவர்களது மகாசமாதியின் பின்பு, முன்னிலும் பன்மடங்காக அதிகரிக்கின்றதென்று தயங்காமற் கூறலாகும். இவ்வுண்மையைப் பலர் இன்றும் நன்கு கனவிலும் நனவிலும் அநுபவிக்கிறார்கள். நாம் எவ்வளவுக்குத் தேகாத்மபுத்தியின்றி வாழப் பயிலுகின்றோமோ, அவ்வளவுக்கு அந்த ஜோதியின் கதிர்கள் நமக்குத் தோன்றி நமது வாழ்விலும் ஒளி வீசச் செய்யுமென்பது துணிபு.

இனி, ஸ்ரீ சுவாமிகள் அருளிய உபதேசங்களை ஆராய்வோம். நால்வர் பாடல்களின் அருங் கருத்துக்கள் காலத்தின் இடத்தின் தேவைக்கு ஏற்பப் பக்தர்க்கும், பண்டிதர்க்கும், பாமரர்க்கும், ஒரு அரும் விருந்தாகும் வண்ணம் பொதியப்பட்டுள்ளன. பாடலும் வாசகமும், எளிய சாதாரண சம்பாஷணைப் போக்கிலேயே அமைந்திருந்தது: உதாரணமாக:-

"என் பிழைகள் பொறுப்பானை எங்குமாயிருப்பானை
அன்பிலரை அடையானை அஞ்செழுத்துப் பொருளானை
நன்மலர் கொண்டெந் நாளும் நாட் கழித்தல் நலமென்றே
சொன்னவர்தந் திருப்பாதம் தொழுவேனே எந்நாளும்"

—நற்சிந்தனை - ப. 93

''இன்றிருளை நீக்கி யெழுந்த கதிரவன் போல்
அன்றென் அகவிருளைத் தீர்ப்பதற்குக்......''

''அனைவருக்கும் தெய்வம் ஒன்றே—அதை
அறிந்துலகில் வாழ்வது தொண்டே''

—நற்சிந்தனை.

சுவாமிகளின் பாடல்களில் வரும் நுட்பமான தத்துவங்களைச் சிறிது நோக்குவாம்.

''என்னை யன்றி வேறொன்றும் இல்லையெனச் சொன்ன''
''அது நானென்னும் அகலாத் தியானம்''
''ஒன்றே இரண்டெனஓத முடியாமல் ஒவியமானேனடி''
''நீயே நானென்று நினைந்துருக வைத்தனன்''
''என்னைத் தானாக்கி எடுத்தாண்டான்''
''நானுமவனே நீயுமவனே கோனுமவனே குருவுமவனே'

இவைபோன்ற பல அருங்கருத்துக்களைக் கொண்டது ''நற்சிந்தனை'' என்னும் ஞானக் களஞ்சியம்.

இத் திருவாக்குகளால் நமக்கு அருளப்பட்ட மார்க்கம் எது? அது வேதாந்தமா, அல்லது சித்தாந்தமா? இப்பிரச்சினைக்கு இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னரேயே,

''வேதாந்த சித்தாந்தம் வேறாகக் காணும்
விட்டு நெறியில் நாட்டம் மிக உள்ள-தொண்டர் நாங்களே''

—நற்சிந்தனை.

என்று சிவதொண்டர்களது குணங்களை உரைக்குமிடத்து மிக அழுத்தந் திருத்தமாக விளக்கம் அருளியுள்ளார்கள். வீட்டு நெறியிலே உண்மையான வேட்கையாளர்களின் உள்ளத்தில் இவ்வாதப்போர் தலைக்காட்டுவது கிடையாது; அது கலக்குவது வெறும்புத்தகப் பூச்சிகளை மாத்திரமேயாகும்.

எமது ஞானமுனிவர் அளப்பருங் கருணையால், நல்லூர்த் தேரடியில் ஸ்ரீ செல்லப்ப சுவாமிகளாம் ஞானதேசிகன், தமக்குபதேசித்தருளிய நான்கு மகாவாக்கியங்களையும்:

"ஒரு பொல்லாப்புமில்லை"
"முழுதும் உண்மை"
'எப்பவோ முடிந்த காரியம்"
"நாமறியோம்"

—நற்சிந்தனை-ப. 155

தமது திருப்பாடலில் அருமையாக விளக்குகின்றார்கள். ஆனால், வேதங்களின் சாரமான நான்கு மஹா வாக்கியங்களையும் அவர் ஒருபோதும் மறக்கவில்லை; அவற்றிற்கும் எடுத்துக்காட்டாக அவர்களுடைய திருவாழ்வும், வாக்கும், பொருந்தியிருந்தன.

(1) ப்ரக்ஞானம் ப்ரம்மம்
(2) அயமாத்மா ப்ரம்மம்
(3) தத்துவமஸி
(4) அஹம் ப்ரம்மாஸ்மி

இம்மகாவாக்கியங்கள் முறையே பிரமத்தினுடைய தாத்பரியம், பிரமாணம், உபதேசம், பலன் ஆகிய நான்கையும் குறிப்பவை.

"அகம் பிரம்மாஸ்மி என்று தம்பி
அனுதினமும் சாதனை செய் தம்பி"

—நற்சிந்தனை-ப. 152.

என வற்புறுத்தி உபதேசிக்கின்றார்கள். மேலும்

"சுவாமி யோகநாதன் சொல்லிய பாட்டு
சுந்தரமான வழிதனைக் காட்டும்

ஆவியுள்ளளவும் அமுதத்தையூட்டும்
அகம் பிரமாஸ்மி என முடிசூட்டும்'

நற்சிந்தனை-ப. 172

என வாக்குறுதியளிக்கின்றார்.

பிரம்மச்சரியம் சந்நியாசம் போன்ற பதங்களைச் சுவாமிகள் போதித்ததில்லை; அதனால் அவை குறிக்கும் தத்துவங்களை அவர் புறக்கணித்தார் என்பதல்ல. வள்ளுவர் மரபில்வந்த நாமெல்லோரும் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, நமது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டுமென்பதே அவரது முக்கிய நோக்கம். வெளி வேடத்திலும் பார்க்க உள்ளத்துறவுக்கே பெருமை கொடுத்த அம் மகானுபவர், நாம் தெய்வபக்தியுடையவர்களாய்ப் பற்றற்று வாழ்ந்து கடைத்தேற வேண்டுமென்று கருணை கொண்டு, அவரவர்க்குப் பொருத்தமான வசனங்களை மலர்ந்தருளினார்கள்.

"இருந்த இடத்தில் எல்லாம் பார்ப்போம்
பொருந்திய வண்ணம் பூமியில் வாழ்வோம்"

—நற்சிந்தனை-ப. 4.

சாதாரண மக்களாகிய நாம் அவரை நம்மிலும் வேறுபட்ட மேன்மகனாகவும், தனிப்பட்ட பெருமகனாகவும் போற்றிப் பணிந்தோம். ஆனால், அவரோ நம்மைப் போன்று ஒரு சாதாரண மனிதனாகவும் இறைவனது அருட்பிரசாதத்தினாலேயே தாம் உயர்ந்த நிலையை அடைந்துவிட்டதாகவும் எம்மனோர்க்குணர்த்தி எமது அகவாழ்விலும், புறவாழ்விலும் இருள்களைந்த ஞானசூரியனாய்க் கருணை பாலித்திருந்தார்கள்.

உலகில், சித்தர்களும் சீவன் முக்தர்களும், பெரும்பாலும் ஒரு இனத்தின் ஒரு குறித்த காலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தோன்றுபவர்கள். பழைய உண்மைகளைப் புதிய முறையில்' காலத்துக்கும், இடத்துக்கும், மக்களுக்கும் ஏற்ற எளிய முறையில் விளக்குவதே அவர்கள் ஆற்றும் அருட்பணியாகும்*. எனவே, அஃ மகான்களுடைய திருவாய்மொழிகள் மக்களின் சமயச் சூழ்நிலைக்கும், காலப்போக்குக்கும் பொருந்தவே அமையும். இவ்வண்ணம், எமது கருணை வள்ளல், ஸ்ரீ யோக சுவாமிகளும், 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பேரருள் நோக்குடனே பாடியும், போதித்தும், எமக்கு யாண்டும் வற்றாத கருணை வளம் வைத்தருளினார்கள்; பெருமானின் பொன்னார் திருவடி வாழ்க! வாழ்கவே!!

*(சில சஞ்சிகைகளுக்குபகரித்த விஷயங்களிலிருந்து தொகுக்கப்பட்டது.)*

---

* இவ்வண்ணமே, பேராசிரியர் டாக்டர். T. M. P. மஹாதேவன் எழுதிய "இந்து சமய தத்துவம்" என்னும் நூலில், அநுபந்தம் 2-ல் கூறுவதும்; தத்துவஞான மேதை டாக்டர். ச. இராதாகிருஷ்ணன் கருத்தும் அமைந்துள்ளன. —பதிப்பாசிரியர்

# அனகாரிக தர்மபாலர்

*1963-ம் ஆண்டு முழுவதும் சுவாமி விவே கானந்தரின் நூற்றுண்டு விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டதை வாசகர்கள் நன்கறிவர். அதைப்போலவே, அவரின் உற்ற நண்பரான அன காரிக தர்மபாலரின் நூற்றுண்டு விழா 1964-ம் ஆண்டு புரட்டாதி முதல் அடுத்த ஆவணி முடியும் வரையில் கொண்டாடப்பட்டது. சென்ற நூற் ருண்டில் விவேகானந்தர் இந்து மதத்திற்குச் செய் துள்ள உன்னத சேவைக்குச் சரிநிகரானது தர்மபா லர் பௌத்த மதத்திற்குப் புரிந்துள்ள அரும்பணி. 1893-ம் ஆண்டில் சிக்காக்கோ நகரில் நடைபெற்ற சர்வமத மகாசபையில், குறித்த இரு பழைய மதங் களின் மகிமையை மேல் நாட்டினர்க்கு எடுத்து* **விளக்கி, பாரதநாட்டின் பரமார்த்திகத்தை உலகறி யச் செய்த பெருமை இவ்விரு வீரபுருஷர்களைச் சேர்ந் ததாகும். இத்தொண்டில் இருவரும் இறுதிவரை யில் போட்டி, பொறுமை எதுவுமின்றி அத்யாத்ம உறவுபூண்டு ஒத்துழைத்தவிதம் என்றும் பாராட்டற் குரிய விஷயம்.**

*''அனகாரிகா'' என்ருல் குடியிருக்க மனையில் லாதவர் என்பது கருத்து. ''தர்மபாலா'' என்ற தும் நமக்கு முதலில் நினைவுக்கு வருவது அறவண அடிகளின் வரலாறேயாம். ஏனெனில், 'தர்மபா லா' என்னும் வடமொழிப் பெயரைச் சுத்தமான தமிழிற் கூறப்புகின், ''அறவண அடிகள்'' எனவே அமையும். காவிரிப்பூம் பட்டினத்தில் புகழ் பெற்ற பௌத்த பள்ளியில் தலைவராயிருந்து மாதவிக்கும், மணிமேகலைக்கும், கோவலன் கொலையுண்டபின், பௌத்த தர்ம உபதேசம் செய்தவர் அறவண அடி கள். அவர் நிர்வாணமடைந்தது காஞ்சிமாநகரத்*

தில். அங்கே, அவர் வாழ்ந்த இடம் 'அறப்பணஞ் சேரி' என இன்றும் அழைக்கப்படுகிறது. இவர் காலம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டு. இவரை விட, கி. பி. ஐந்தாம், ஆறும் நூற்றுண்டுகளில், இரு தமிழ்நாட்டுப் பெரியார்கள் ''தர்மபாலர்'' என்ற பெயருடன் புகழுடன் வாழ்ந்துள்ளார்கள். ஒருவர் தர்மபால ஆசாரியர். மகாயன பௌத்தர் களின் குரவரான இவர் காஞ்சியில் பிறந்தவர்; அக் காலத்தில் உலகப் புகழ்பெற்ற நாளந்தைப் பல் கலைக் கழகத்தின் தலைமைப் பேராசிரியராக இருந்து பெருமை படைத்தவர். மற்றையவர் ஆசாரிய தர்மபாலர். இவர் திருநெல்வேலியில் பிறந்தவர்; காஞ்சியிலிருந்த படராதித்த விகாரையின் தலைவ ராக இருந்தவர்; பாளி மொழியிலிருந்த பல நூல் களுக்கு இவர் உரை தந்துள்ளார். இவருக்கும் அநுராதபுரத்திலிருந்த மஹா விகாரைக்கும் நெருங் கிய தொடர்பு இருந்ததாகக் கருதப்படுகிறது.

இவ்விதம் சென்ற பதினெட்டு நூற்றுண்டு களில் மும்முறை மகிமையைப்பெற்ற 'தர்மபாலா' என்னும பெயருக்குச் சென்றநூற்றுண்டிலும் இந்த நூற்றுண்டிலும் புதுச் சிறப்பைத் தேடிக் கொடுத்த பெருமை முதலியார் டொன் கரோலிஸ் ஹேவ விதாரணையையும், மல்லிகா தேவியையும் சார்ந்த தாகும். அவர்களின் தவப்பயனாக 1864-ம் ஆண் டில் தோன்றிய டேவிற் ஹேவ விதாரணையே, தமது பெயரைத் தாமாகவே, 'அனகாரிக தர்ம பாலா' என்று மாற்றிக் கொண்டார். தாயாரான மல்லிகா தேவியார் கொழும்பில் வியாபாரத் துறை யில் செல்வாக்குடன் வாழ்ந்த தர்ம குணவர்த்தன வின்புத்திரியார். இலங்கையில் முதன் முதலாக நிறு வப் பெற்று, இப்போது சர்வகலாசாலையாக விளங் கும் வித்யோதய பிரிவெனவுக்கு (பௌத்த சந்நி யாசக் கல்லூரிக்கு) காணியும் கட்டிடமும் வழங்கிய

வர் அச்செல்வந்தர். எனவே, அந்தவள்ளலின் உத்தம புத்திரியாக வந்த மல்லிகா தேவியார், தமது முதற் குழந்தை ஆணுகப் பிறக்கின், அக்குழந்தை அக்காலத்தில் மிகவும் மங்கியிருந்த பௌத்த தர்மத்துக்கு மறுமலர்ச்சி தரும் பணியில் உழைக்கும் சந்நியாசியாக வேண்டுமெனக் கர்ப்பவதியாயிருக்கும் போதே தவங்கிடந்ததில் வியப்பில்லை; அவர் ஆர்வம் பூர்த்தியானதிலும் வியப்பில்லை. நாம் எதனைப் பக்திவிசுவாசத்துடன் பரிசுத்தமான உள்ளத்தில் சிந்திக்கின்ருேமோ, அதுவே ஆகின்ருேம். சிந்தனையின் சக்தி அற்புதமானது.

''அன்னையின் திருவடிகளில் உள்ளது சுவர்க்கம்'' என்ருர் முகமதுநபி. அந்த மணிவாக்கின் உண்மையை மல்லிகா தேவியினதும் அவரது புத்திரனினதும் வாழ்க்கையில் நன்கு காணலாம். தாயாரே தனயனுக்கு முதற் குருவுமாளுர். சிறுவனுய் இருக்கும்போதே, பின்னுளில் வாழ்வில் விளங்கிய பெருங்குணங்கள் டேவிற்றில் தலைகாட்டின. பள்ளிக்கூட மாணவனுயிருக்கும்போது, அவன் காட்டிய புத்தி நுட்பமும், ஞாபக சக்தியும், வாக்கு வன்மையும், மன உறுதியும், எதற்கும் அஞ்சா நெஞ்சுரமும், அவனது சகபாடிகளை மாத்திரமின்று உபாத்தியாயர்களையும் பிரமிக்கச் செய்தன. ஒரு உதாரணம் மாத்திரம் இங்கு எடுத்துக்கொள்வோம். பதினேழு வயசுப் பையனுய் கொழும்புக் கிறிஸ்தவக் கல்லூரியொன்றில் மாணவனுய் இருந்த காலத்து, வைகாசி விசாகம் வந்தது, பையனுக்கு அப்புனித தினத்தை தன் அருமை அன்னையின் அருகில் அமர்ந்து புத்தர் தியானத்தில் கழிக்க வேண்டுமென்ற ஆசை பிறந்தது. தலைமை ஆசிரியரிடம் அதிகாலையில் சென்று தனக்கு ஒரு நாள் லீவு கேட்டான். ''லீவு என்னத்திற்காக''? எனவினவிய ஆசிரியருக்கு, ''புத்தர் பிரானின் பிறப்பாலும்

அவரது ஞான உதயத்திலும், பரிநிர்வாணத்திலும், மும்முறை சிறப்புற்ற புனித நாள் இது. பௌத்தர்களுக்கு மிகவும் விசேடித்த இப்புண்ணிய தினத்தை புத்தர் வழிபாட்டில் கழிக்க விரும்புகின்றேன்'' என்றான் பையன். அக்காலத்தில் பௌத்தத்தையும் சைவத்தையும் தூற்றுந் தொழிலைத் தமது சமயப் பணியாகக் கொண்டிருந்த குழுவைச் சேர்ந்த அந்த ஆசிரியருக்கு பையனின் துடுக்கான பதில், விபரீதமாகத் தோன்றியதுமன்றி, ஆத்திரத்தையும் கொடுத்தது. கேட்ட உத்தரவு கடுமையான மொழிகளில் மறுக்கப்பட்டது. ஆனால் பையன் உடனே வீடு திரும்பிவிட்டான். அடுத்த நாள் பள்ளிக்கூடஞ் சென்றதும், பிரம்படித் தண்டனை கிடைத்தது. இதனால் அவனது மன உறுதி பன்மடங்காக்கப்பட்டது. அதன்மேல், வைகாசி விசாக தினத்தன்று பள்ளிக்கூடஞ் செல்வதில்லையென்று தீர்மானஞ் செய்து கொண்டனன்.

*1890*-ம் ஆண்டில் சென்னை அடையாறில் நடந்த பிரம்ம ஞான சபை உலக மகாநாட்டில் கலந்துவிட்டு தர்மபாலர் வட இந்தியாவில் யாத்திரை செய்தார். அந்த யாத்திரையில் அவர் தரிசித்த புண்ணிய க்ஷேத்திரங்களில் புத்த காயா முக்கிய இடம் பெறுகின்றது. அங்கே புனித போதி மரத்தருகாமையில் கண்ட காட்சி அவரைத் திடுக்கிடச் செய்தது. அந்த இடத்தை அதின் பழைய புனித நிலைக்குக் கொண்டு வருவதென விரதம் எடுத்துக் கொண்டனர். அந்தத் தீர்மானத்தைச் செயலுக்குக் கொணரவென்று *1891*-ம் ஆண்டில் 'மகாபோதி சங்கம்' என்ற பெயருடன் ஓர் சபை நிறுவப்பட்டது. அந்தச் சங்கத்தின் நடவடிக்கைகளை உலகறியச் செய்யும் பொருட்டு அதே பெயருடன் அடுத்த ஆண்டில் ஓர் ஆங்கில மாதாந்த சஞ்சிகையும் அவரால் பிரசுரிக்கப்பட்டது. இலங்கை

யில் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் இரு வாரப் பத்திரிகைகளை நிறுவினர்.

சிக்காக்கோ சர்வமத மகாசபையின் நிர்வாகக் குழுத் தலைவரான டக்றர் ஜே. ஆர். வெரோஸ் (J. R. Burrows) அவர்கள் மகாபோதி சஞ்சிகையின் பழைய பிரதிகள் சிலதை தற்செயலாகப் பார்த்தனர். அதின் ஆசிரியரான தர்மபாலரின் கட்டுரைகள் அவர் கவனத்தை ஈர்த்தது. உடனே, இவர் சர்வமத மகாசபையில் ஹினயன பௌத்த மதத்தின் பிரதிநிதியாக வந்து கலந்து கொள்ளுமாறு அழைப்பை அனுப்பி வைத்தார். மகாசபையில் அவர் செய்த சொற்பொழிவு அவருக்கு உலகப் புகழைத் தேடிக் கொடுத்ததெனலாம். அவரது பிரியாவிடைப் பேச்சிலிருந்து கீழ்க்கண்ட வசனம் புத்தர் பிரானின் உபதேசங்கள் முழுவதையும் வடித்தெடுத்துக் கொடுத்த தேன் மொழியாக அமைந்துள்ளது.

"Learn to think without prejudice, love all beings for love's sake, express your convictions fearlessly, lead a life of purity, and the sunlight of truth will illuminate you".

"If theology and dogma stand in your way in the search of truth, put them aside. Be earnest and work out your salvation with diligence and the fruits of holiness will be yours".

பின்னர் அமெரிக்காவில் வெவ்வேறு இடங்களில் பௌத்த மதப் பிரசாரம் செய்துவிட்டுப் பசிபிக் சமுத்திர மார்க்கமாக தாய்நாடு திரும்பினர். அவர் பிரயாணஞ் செய்த நீராவிக் கப்பல் ஹொனலுலுவில் தங்கியபோது அங்குள்ள பிரம்ம

ஞான கிளைச்சபையின் அங்கத்தவர்கள் சிலர் அவரைக் கப்பலிற் தரிசித்து நல்வரவு கூறினர். இச் சிறு கூட்டத்துடன் சென்ற திருமதி மேரி ஃபொஸ்றர் என்னும் செல்வப் பெண்மணிதான் பின்னுளில் தர்மபாலரின் உலக பௌத்த மதசேவைக்கு வேண்டிய பொருளுதவி செய்தவர். அன்னுர் வழங்கிய பத்து இலட்சம் ரூபாய் நன்கொடையின் ஒரு பகுதி சாரநாத்தில் மூலகண்ட குடி விஹாரையை அமைப்பதற்கும், புத்தகாயாவில் பௌத்த யாத்திரீகர்கட்கு விடுதிச்சாலை எழுப்புவதற்கும், செலவிடப்பட்டது. பெருந்தொகையான பணம் இலங்கையில் பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள், ஆலயங்கள் அமைப்பதற்குச் செலவிடப்பட்டது. அந்த நன்கொடைப் பணம், மூல நிதியாக வந்தமைந்த புண்ணியத்திஞல் அவர் தமது சமயத்தொண்டைத் தொடர்ந்து, இங்கிலாந்து, ஜேர்மனி முதலாய ஐரோப்பிய நாடுகளிலும் பரப்பக் கூடிய அரும் வாய்ப்புக் கிடைத்ததெனலாம்.

தர்மபாலரின் அரும்பெருங் குணங்களில் தலையாயது, உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசாத் தன்மையாகும். எதனை நினைத்தாரோ அதனையே தெளிவாகச் சொன்னுர்; எதனைச் சொன்னுரோ அதனையே சட்டதிட்டமாகச் செய்தார். இன்றைய நெருக்கடியான நிலையில் அந்த மஹா புருஷர் திரும்பி வந்தாலோவென பண்புற்ற மக்களின் உள்ளந் துடிக்கின்றது. நேருக்கு நேரே சொல்வதை கேட்போர் என்றும் மறக்க முடியாத விதத்தில் உள்ளத்தில் தாக்கும்படி அவர் சொல்லிவிடுவார். பறங்கிகளைப் போல் பௌத்தர்கள் மரண வீடுகளிலும் கல்யாண வைபவங்களிலும் மதுபானம் வழங்குவதை அவர் அறவே வெறுத்தார். அவர்கள் மாட்டிறைச்சி உண்பதை அவரால் கண்டு சகிக்க முடியவில்லை. ஐரோப்பியர் போல் உடையணிவதில்,

டொன், மாட்டின், ஹென்றி, எட்வேட், மேரி, அலிஸ், கதெறின், லூசியா, போன்ற கிறிஸ்தவப் பெயர்களைத் தங்கள் பிள்ளைகட்குச் சூட்டிக் கொள் வதில், தம் இனத்தார் கொண்டிருந்த அடிமைப் பழக்கத்தை நினைக்கவே அவர் உள்ளம் வெதும்பும். அவரது சொற்பொழிவுகளில் இவற்றையெல்லாம் சிறிதும் தயவு தாட்சண்யமின்றிக் கண்டிக்கும் கடுஞ் சொற்களைக் காணலாம்.

பௌத்த பிக்குகளின் சோம்பேறி வாழ்க்கை யும் அவரது தீவிரமான கண்டனத்திற்கு இலக் காயது. அக் காரணத்தால் அவர்களது எதிர்ப்புக் கும் தூஷணைக்கும் ஆளாயினர். அரசியல் விஷயங் களில் அவர் பெரும்பாலும் அக்கால இந்திய தீவிர தேச பக்தர்களான திலகர், அரவிந்தர், சந்திர போஸ் முதலியோர்களின் கருத்துக்களைப் பின்பற் றினர். ஆகையால், இலங்கை அரசாங்கம் அவர் மீது ராஜத்துரோகியென்ற குற்றத்தைச் சுமத்த வழிவகை தேடியது. பொலிசார் மிகவும் கண் காணிப்பாயிருந்தனர். 1915-ம் வருஷக் கலகத் தில் அவரைக் கட்டாயமாகப் பிடித்துச் சிறை வைத்திருப்பார்கள்; அதிர்ஷ்ட வசமாக அவர் அந் தக் காலத்தில் இந்தியாவில் வசித்தனர்.

அயரா உழைப்பினுலும், நீடித்த பிறநாட்டுப் பிரயாணங்களினுலும் அவரது உடல் நலம் பெரி தும் பாதிக்கப்பட்டது. எடுத்த உடல் விழுமுன் முறையான சந்நியாசம் பெற்றுக் காஷாயம் அணிய வேண்டுமென்று ஆசைப்பட்டார். அறுபத்தாரு வது வயசில் அந்த ஆசை நிறைவேறியது. அதன் மேல் இரண்டாவது சந்நியாச தீக்ஷையும் (உபசம் பத்து) எடுக்க ஆசைப்பட்டார். அந்தப் புனிதச் சடங்கு 1933-ம் ஆண்டு தைமாச ஆரம்பத்தில் சிறப்பாக சாரநாத்தில் நடைபெற்றது. அவருக்கு

எஞ்சியிருந்த ஒரே ஒரு ஆசை, தமது இறுதி நாட்களை சாரநாத்தில் கழித்து அங்கே தாம் எழுப்பிய மூலகண்ட குடிவிஹாரையைத் தரிசித்த வண்ணம் கண்மூட வேண்டுமென்பதாகும். அந்தக் கடைசி விருப்பம் 1933-ம் ஆண்டு ஏப்ரில் மாசம் 29-ந் தேதி நிறைவேறியது. பிக்கு தேவமித்த தர்மபாலா என்ற பெயருடன் அவர் பூதவுடல் மறைந்தது. ஆனால், பௌத்த உலகம் இன்னும் அவரைப் பழைய அனகாரிக தர்மபாலாவெனவே அழைக்கின்றது. சென்ற சில வருஷங்களாக இந்தியாவில் தோன்றியுள்ள பௌத்த மத மறுமலர்ச்சிக்கு அப்பெரியாரது ஆத்ம சக்தியே முக்கிய காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது மீண்டும் பிறப்புண்டேல் அது இந்தியாவின் புண்ணிய மண்ணில் நடக்க வேண்டும்; பௌத்த மதப் பிரசாரமே அப்பிறப்பின் ஒரு நோக்கமாக இருக்க வேண்டுமென்று அவர் அடிக்கடி சொல்வதுண்டு.

இன்றைய தமிழர் பலர் பௌத்தமதம் தமிழ் நாட்டில் சிறப்புற்றிருந்த காலத்தில் அது தமிழ் மொழிக்குச் செய்த அரிய இலக்கியத் தொண்டை மறந்து விட்டனர்; அதே போல், தமிழ் நாட்டுப் பெரியார்கள் பலர், பௌத்த மதத்திற்குச் செய்துள்ள சீரிய சேவையை சிங்கள மக்கள் முற்றிலும் மறந்துவிட்டார்கள்; அதனை அறியவே மாட்டார்கள் என்று கூடச் சொல்லாம். அதிர்ஷ்டவசமாக பிக்கு ஹிஸ்சலே தர்மரத்தின அவர்கள் எழுதிவரும் நூல்கள் மூலம் தமிழ் மொழியிடம் சிங்கள மொழியும், தமிழ் நாட்டுத் தவசிரேஷ்டர்கள் மூலம் பௌத்த மதமும் பெற்ற ஆதரவு படிப்படியாக தெரியவருகின்றது. இவ்வித ஒற்றுமைப்பணி மேலும் மேலும் வளர்ந்தோங்க இக்கட்டுரை உதவி புரிகுக! கதிர்காமத் தெய்வத்தின் கடாட்சம் இரு மதத்தையுஞ் சார்ந்த அறிஞர் பலரை, இத்தொண்டில் ஈடுபடுத்தி ஊக்குக!

திருப்புகழ் அடியார் திருவடிச் சென்னியார்:

# வள்ளிமலைத் திருப்புகழ்ச் சுவாமிகள்

தமிழ் மொழிக்குத் தனிச்சிறப்புத்தரும் சந்தப் பாவில் ஸ்ரீ அருணகிரிநாதர் திருப்புகழைப்பாடி அருளினார்கள். ஏட்டுப் பிரதிகளில் அங்கும் இங்குமாக மறைந்து கிடந்த அப்பாடல்களைத் தேடி எடுத்துத்திரட்டிய பெருமை திரு. வ. த. சுப்பிரமணியபிள்ளையைச் சார்ந்ததாகும்; அவற்றை மூன்று தொகுதிகளாக அச்சிட்டுதவியதோடு நின்றுவிடாது, அப்பாடல்களைப் பன்னிரண்டு திருமுறைகளாக வகுத்து உரையுடன் பதிப்பித்த* தமிழ்த் தொண்டும், சைவத்தொண்டும் அன்னாரின் புத்திரரும், முருகபக்தருமான தணிகைமணி செங்கல்வராயபிள்ளை அவர்களுடையதாகும். தமிழ் மொழியானது தன்னுள் அடங்கியிருக்கும் மந்திரசக்தியால் தன்னை என்றென்றைக்கும் காப்பாற்றவல்லது என்ற பேருண்மை இந்நூலைக் கருத்தூன்றிக் கற்கும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உதயமாகாமல் இருக்க முடியாது.

ஆனால், இருபதாம் நூற்றாண்டில் திருப்புகழின் அருமையையும் அற்புத மந்திர சக்தியையும் தமிழ் நாடு மாத்திரமின்றி இந்தியா முழுவதுமே உணரும்

---

* பதிப்பாளர்: மீனாக்ஷி கல்யாண சுந்தரம், 2 இரண்டாவது தெரு, வடக்கு கோபாலபுரம் சென்னை - 6 தென்னிந்தியா. 6 பகுதிகளாக வெளியிடப்பட்டது. மொத்த விலை ரூ. 47-8-0. முருகபக்தர்கள் வைத்திருக்க வேண்டிய அரிய பொக்கிஷம். —பதிப்பாசிரியர்.

படி செய்த பெருமை வள்ளிமலைத் திருப்புகழ்ச்சுவாமிகள் என்றழைக்கப்பட்ட ஸ்ரீ சச்சிதானந்தரைச் சார்ந்ததாகும். முப்பத்தேழு வயது வரைக்கும் தமிழ் நெடுங்கணக்கின் முதல் எழுத்தான அகாரத்தையே எழுத வாசிக்கத் தெரியாதிருந்த இவர், மூன்றுதொகுதிகளிலுமுள்ள, திருப்புகழ்கள் அத்தனையையும் ஞாபகத்தில் வைத்துப் பாடிப் பதம்பிரித்து விரிவுரை செய்த விதம், அற்புதத்தில் அற்புதமாகும்.

கோயம்புத்தூர் ஜில்லாவில், பூனாச்சியென்னும் கிராமம் ஒன்றுண்டு. அதிலே உத்தியோகம் பார்த்த சிதம்பர ஐயர், நல்ல சிவபக்தர்; சோதிடம், வைத்தியம், மாந்திரிகம் நன்கறிந்தவர். புத்திர பாக்கியம் இல்லாது கவன்றார். திருஞானசம்பந்த சுவாமிகளின் பாடல் பெற்ற திருச்செங்குன்றூர் சென்று, பன்னிரண்டு அமாவாசை விரதத்தை அடுத்தடுத்து முறைப்படி அனுட்டித்ததின் பயனாக 1870-ம் ஆண்டு கார்த்திகை மாசத்தில் மூல நட்சத்திரத்தில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. திருச்செங்குன்றூர்ப் பெருமானின் திருநாமயான "அர்த்த நாரி" யென்னும் பெயரே சூட்டப்பட்டது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழுக்குப் புதுப்புகழ் தேடிக் கொடுக்க அவதரித்த அர்த்தநாரி அருணகிரிநாதரைப் போலவே கார்த்திகை மூலத்தில் தோன்றியது எவ்வளவு பொருத்தமுடையது. பக்திகுன்றிப் பண்பிழந்து பதங்கெட்டு வாழ்ந்த தமிழினத்துக்கு உய்வளிக்கவே, கருணைவள்ளல் அருணகிரிநாதர், வள்ளிமலை வள்ளல் சச்சிதானந்தராக அவதாரஞ் செய்திருக்கவேண்டுமெனக் கூறுதல் மிகையாகாது.

அர்த்தநாரிக்கு அட்சாரம்பம் செய்யுமுன் தந்தை பரகதி அடைந்தனர். குடும்பத்தின் பொரு

ளாதார நிலை மிகவும் கஷ்டமாகமாறியதால், சின்னஞ் சிறு வயதிலேயே வயிற்றுப் பிழைப்புக்காக ஏதாவது ஒரு தொழிலைப் பயிலும் நியதி அர்த்த நாரிக்கு ஏற்பட்டது. சுயம்பாகமே அவர் மகிழ்ந்தேற்ற தொழில்; முப்பத்தேழாவது வயசில் மைசூர் மகாராஜாவின் அரண்மனையிற் தலைமைச் சுயம்பாகுவாகக் கடமை பார்க்கும்போது அவருக்குக் குன்ம நோய் தோன்றியது. எவ்வித வைத்தியஞ் செய்தும் சுகம் பெறாமையால், அரண்மனைச் சேவையினின்றும் விலகி, ஸ்தலயாத்திரையை நேர்த்திக் கடனாகக் கொண்டு தமிழ்நாடுசேர்ந்தார். பழனிப்பதியை அடைந்து, தண்டாயுதபாணியின் பிரசாதம் பெற்றதும் பலவருடங்களாக வாட்டிய குன்மநோய் திடீரென மறைந்தது. அர்த்தநாரி அதன்மேல் தமது பிறவிப்பிணிக்கும் மருந்துநாடி பழனியிலேயே தங்கிவிட்டார்; பழனி ஆண்டவனது அபிஷேகத்திற்காக மலை அடிவாரத்திலிருந்து தீர்த்தம் எடுத்துச் செல்வதைத் தொண்டாகக் கொண்டார். யோக சாதனைகள் செய்தார். காயத்திரி மந்திர ஜெபத்திலும் சித்தியடைந்தார்.

பக்குவ ஆன்மாக்களுக்குப் பரமன் அருள் பாலிக்கும் விதம் பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்தறியும் தரத்ததல்ல. ஏட்டுப் படிப்பை எள்ளளவும் விரும்பாது இதயக்கல்வியையே பயின்ற நானக்கருக்கு, மொகலாயச் சக்கரவர்த்தியின் களஞ்சியத்தில் தானியம் அளக்கும் வேலை கிடைத்தது. ஒரு நாள் தாமாகவே ஏக் *(1)* தோ *(2)* தீன் *(3)* என்று அளந்து கொடுக்கும் போது **13** ஐக் குறிக்கும் "தோரா" என்னும் சொல் வந்தது; அதற்குப் பதின்மூன்று என்ற கருத்துடன், "நான் உன்னடிமை" என்ற பொருளும் உண்டு. அந்த ஒரு சொல்லே அவருக்கு உபதேசமாகி அடைக்கல உறுதியை அளித்தது. கங்கைக் கரையில் காலை ஸ்நானம்

செய்ய இறங்கிய ராமானந்தர் கால்தடுமாறி அங்கே ஸ்நானம் செய்து கொண்டிருந்த கபீர் தாஸரை மிதித்துவிட்டார்; மன்னிப்புக் கேட்கும் முறையில் ராமானந்தர் "ராமா" என்று சொல்லியதை மந்திரோபதேசமாய்க் கொண்ட கபீர்தாஸர் ராம நாம ஜப சாதனையால் உலகம் போற்றும் உத்தமர்களுள் ஒருவரானார். அர்த்த நாரிக்குப் பழனியிற் கிடைத்த உபதேசமும் இதேவிதமானதாகும். ஒரு நாள் அவர் வாகனத்தில் சுவாமியைக் காவிக் கொண்டு வரும்போது, சுவாமிக்கு முன் அபிநயத்துடன் பாடிச் சென்ற கோயில் தேவதாசி "வங்கார மார் பிலணி தாரொடுயர் கோடசைய" என்னும் திருச் செங்காட்டங்குடித் திருப்புகழைப் பாடி, அதன் மூன்ருவதுவரியின் முற்பகுதியான,

> "சிங்கார ரூபமயில் வாகன நமோ நமென
> கந்தர குமாரசிவ தேசிக நமோ நமென
> சிந்தூர பார்வதி சுதாகர நமோ நமென"

என்ற சொற்றொடர்களைப் பலதரஞ் சொல்லி அபிநயஞ் செய்தாள். இதனைக் கேட்டதும் அர்த்த நாரிக்கு திடீரென பவசமாதி நிலை ஏற்பட்டது. அதிலிருந்து தெளிந்ததும், முருகன் தமது திருப் புகழ்ப் பிரசாரப்பணிக்காகத் தன்னை ஆட்கொண்டு விட்டதாக உணர்ந்தார், அப்பெருமானது திருப் பாதங்களில் தமது வாழ்வை அர்ப்பணஞ் செய்து சச்சிதானந்த சுவாமியென்னும் புதுப்பெயருடன் தென்திசை நோக்கினர். திருப்பரங்குன்றம், திருச் செந்தூர் முதலாயஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு தூத்துக்குடி மார்க்கம் கதிர்காமத்தையடைந்து நாற்பது நாள் தவங்கிடந்தார். அங்கு தங்கியிருந்த போது அருணகிரிநாதரின் ஜென்ம பூமியான திரு வண்ணமலைக்கு யாத்திரை செய்ய வேண்டுமென்ற ஆசை பிறந்ததால் தாய்நாடு திரும்பினர்.

திருவண்ணுமலே சேர்ந்ததும் ஸ்ரீரமண மூர்த்தியினதும், ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகளதும் அருளுக்குப் பாத்திரமானுர் சச்சிதானந்தர். முந்தியவரிடத்து "திருப்புகழ்க் குமரன்" என்ற பட்டத்தைப் பெற்றதோடு அவரிடமிருந்தே பல திருப்புகழ்களின் கருத்துக்களேயுங் கற்றுக் கொண்டார். அவ்விதம் இருவருமாகக் கலந்து பாடிக்கருத்துத் தெரிந்த திருப்புகழுள், "ஞானங்கொள் பொறிகள் கூடி" என்ற பழனித் திருப்புகழும் ஒன்ருகும்.

பகவான் ரமணர் வாழ்க்கையாலும், வாக்காலும் விளக்கிய ஞானசாரம் இப்பாட்டில் அமைந்துள்ளதை வாசகர்கள் கவனிப்பார்களாக! ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளோடு உரையாடும்போது, அவர் உபநிடதங்களிலிருந்தோ அல்லது ஏனைய வடமொழி நூல்களிலிருந்தோ எடுத்துக்கூறும் மகா வாக்கியங்களுக்கெல்லாம் சச்சிதானந்தர் திருப்புகழிலிருந்தே அதேகருத்தடங்கிய பதங்களே எடுத்து விளக்குவார். 1916-ம் ஆண்டில், வள்ளிமலேயிலுள்ள பர்வதராயன் குன்றில் சச்சிதானந்தர் தமது ஆச்சிரமத்தை அமைத்துக் கொண்டது சேஷாத்ரி சுவாமிகளின் கட்டளேப்படியாகும். வள்ளிமலே வேலூரிலிருந்து பதினெட்டு மைல் தூரத்திலும், சென்னேயிலிருந்து எண்பத்தைந்து மைல் தூரத்திலுமுள்ள சுப்பிரமணியஸ்தலம் "வள்ளி படர் சாரல் வள்ளிமலே மேவு வள்ளிமணவாளப் பெருமாளே" என அருணகிரிநாதர் இப்பதியில் எழுந்தருளிய பெருமானேப் புகழ்ந்துள்ளார்.

இனிச், சச்சிதானந்தரை வள்ளிமலேத் திருப்புகழ் சுவாமியாகவே காண்போம். ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளாக அவர் திருப்புகழ்ப்பணி செய்துள்ளார். அவருடைய காலத்தில் திருவருணேக்குச் சிறப்பளித்துக் கொண்டிருந்த மும்மூர்த்தி

களான, ரமணர், சேஷாத்திரி சச்சிதானந்தரை உபகுருமாரகவும், அருணகிரிநாதரைக் குருவாகவும் கொண்டு தமது புதுவாழ்வை ஆரம்பித்துத் திருப்புகழ்த் தொண்டை 38 வருடங்களாக பாரதம் முழுவதும் ஆற்றினர்கள்!

திருப்புகழின் அருமை பெருமையைத் தமிழ்நாடு அறியும் சந்தர்ப்பம் வள்ளிமலைச் சுவாமிகளின் சேவையால் கிடைத்ததெனலாம். அவரது சேவை சென்னையின் எல்லைக்குள் அடங்கிவிடவில்லை. கல்கத்தா, பம்பாய் முதலாய நகரங்களிலும் பரவியது, பம்பாய் நகரத்தில் 1923-ம் ஆண்டில் ஸ்தா தாபிக்கப்பட்ட ஸ்ரீரமண சச்சிதானந்த சமாஜம் அவரின் திருப்புகழ்ப் பஜனைகளை நினைவில் வைத்தும், ரமணரின் உபதேசங்களைப் பரப்பும் நோக்குடனும் நிறுவப்பட்டதேயாகும். அவரால் ஆரம்பிக்கப்பட்டதே திருத்தணித் திருப்புகழ்ப்படி விழா.

போலிச்சாமிகளைக் கண்டித்துத் திருத்துவதில் அவர் கையாண்ட முறை கடினமானதாகும். வேடதாரிகளால் நமது சமயத்திற்கு இழுக்கும், பக்தியுள்ள பாமரமக்களின் உள்ளத்தில் அருவருப்பும், ஏமாற்றமும் ஏற்படக்கூடாதென்பதே சுவாமிகளின் கொள்கை.

கன்னியாகுமரியிலிருந்து திருக்கேதாரம் வரையில் அவர் புகழ் பரவியிருந்தும்; பலவிதசித்திகள் அவரது ஆத்ம சக்தியால் நிகழ்வதாக அன்பர்கள் நம்பியபின்னரும், லட்சக்கணக்கான மக்கள் அவரது பாதத்தில் விழுந்து வணங்கிய போதிலும், பணிவையும் அடக்கத்தையும் ஆபரணமாகப் பூண்டொழுகிய இந்த மகானின் தலை அணுவேனும் வீக்கமடையவில்லை. அவர் ஆடம்பரத்தையும் முற்றிலும் வெறுத்தார், "திருப்புகழ் அடியார் திருவடிச்

சென்னியார்'' என்னும் பெயரைத் தாமே தமக்குச் சூட்டிக் கொண்டார். அவரது மெய்யடியார்களுள் ஒருவர் அவரது வரலாற்றைத் தமிழில் விரிவாக எழுதி இருநூறு பக்கங்கள் கொண்ட பெரிய நூலாக அச்சிட உத்தரவு கேட்டபோது அதனை மறுத்துவிட்டார். அவருடைய மகாசமாதிக்குப் பின் ''வள்ளிமலை வள்ளல்'' என்னும் நூலில் சுவாமிகளுடைய அற்புத வரலாறு மிகவும் பக்தியுடனும் இனிமையுடனும் வரையப்பட்டுள்ளது.

22-11-50 அன்று சென்னையில் வள்ளிமலை சுவாமியார் தனது உடலை உதறியபோது அவரது நெற்றியிலிருந்து ஜோதி எழுந்து மேல் சென்றதை அருகிலிருந்த அடியார்கள் கண்டனர்; அவரின் பூதவுடல் அடுத்த நாள் வள்ளிமலையில் அவரது ஆச்சிரமத்திலேயே அபிஷேக ஆராதனைகளுடன் அடக்கம் செய்யப்பட்டது. அப்போது அவருக்கு வயது எண்பதாகும். மகாசமாதிக்குப் பத்துநாட்களுக்கு முன் நிகழ்ந்த கந்தசஷ்டி வாரத்திற்கூட அவர் வழக்கம்போல் திருப்புகழ்ப் பஜனை செய்து ஆயிரக் கணக்கான மக்களைப் பக்திரசம் பருகச்செய்தனர்.

அருணகிரி மாமுனிவன் அந்நாளில் இவைபாடி
அருளினன் அப்
பெருமகனே இன்று வள்ளிமலைச் சாமியாய்ப் பிறந்து
பெட்பிற் பாடிக்
கருகுமுளம் உருகும்வணம் தமிழ்நில மெங்கணும்
பரப்பிக் கருணை செய்தான்
அருமைமிக அருமையென அன்பரெலாம் கரங்
குவிப்ப அருள்பூத்தானே.

—கி. வா. ஜகந்நாதன்

# காந்திஜியும் - விநோபாஜியும்

சாந்திக்கோர் திருவுருவாய்த் தோன்றி சத்தியத்தின் இணையற்ற இலட்சியமாய் வாழ்ந்து திடீரென மறைந்த காந்தியடிகளின் பிறந்தநாள் இது. மாந்தருக்குள் மாமணியாய் மானிலம் போற்றும் அந்த உத்தமரின் தன்னலம் நீத்துப் பிறர் பொன்னலம் பேணிய வாழ்க்கை குறித்துச் சிந்திப்போம்,

இப்புனித தினமானது சென்ற எட்டாண்டுகளாக, காந்தியடிகளின் உபதேசங்களைப் பின்பற்றி வாழும் இந்தியத் தொண்டர்களால் சர்க்கா ஜெயந்தியாகக் கொண்டாடப்படுகின்றது. அவரது உத்தம சீடரான ஆசாரிய விநோபாஜியின் பிறந்த தினமான செப்டெம்பர் பதினோராந் தேதியானது அதே தொடர்பில் பூமி ஜெயந்தியாகக் கருதப்படுகின்றது. அத்தினத்திலிருந்து இன்று (2-10-66) வரையிலுள்ள இருபத்திரண்டு நாட்களும் சர்வோதய இலக்கிய விழாக்காலமாக மிகவும் சிரத்தையுடன் கொண்டாடப்படுகின்றது. காந்தியார் காட்டிய வழியில் வாழ முயலும் இந்த அபிமானிகளின் ஆக்கவேலையும் நிர்மாணத்திட்டமும் எமது உள்ளத்தைக் கவர்ந்துள்ளன.

மகாத்மா காந்தியின் அற்புத வாழ்க்கை உலகம் முழுவதும் நன்கறிந்த ஒன்று. உலகின் பல மொழிகளில் நூற்றுக் கணக்கான நூல்கள் வெளிவந்துள்ளன; 1969-ம் ஆண்டில் நடக்கவிருக்கும் அவரது நூற்றூண்டு விழாத் தொடர்பில் இன்னும் பல்லாயிரக்கணக்கான பக்கங்கள் வரையப்படுகின்றன. இவற்றையெல்லாம் துருவிப்பார்த்து, அருங் கருத்துக்களை வடித்தெடுத்தால், இற்றைக்கு நாற்பத்தைந்து ஆண்டுகட்குமுன் நாமக்கல் கவிஞர்

அவர்களின் அருள்வாக்கிற் தோன்றிய இருபாடல்களில் அழகாய் அடக்கிவிடலாம். அவ்விரண்டு பாடலையும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றோம்:—

"கல்லாலும் செம்பாலும் கடவுளாக்கிக்
கற்பூரம் காட்டிவிட்டால் போதுமென்று
எல்லாரும் நினைத்துவிடச் செய்துநித்தம்
தெய்வத்தை ஏமாற்றி வாழ்ந்தோமென்று
சொல்லாலும் செயலாலும் எண்ணத்தாலும்
சுத்தமுள்ள பக்திநெறி சொல்லித்தந்து
கல்லாத எளியவர்க்கும் கடவுள்தன்மை
கண்ணாரக் காட்டும் எங்கள்காந்தி வாழ்க்கை"

"அன்புதான் தெய்வம் ஏழைக்கருள்வதே தெய்வபூஜை
முன்புநாம் மகமத் யேசு புத்தரும் மொழியக் கேட்டோம்
என்பெலாம் உருக ஏழை எளியவர்க்காக வாழ்ந்த
வம்பிலா மார்க்கந் தந்த காந்தியார் வாழ்க! வாழ்க!!"

இதற்கு மிஞ்சி, எந்த மொழியிலாவது மோகனதாஸ் கரம் சந்த்ர காந்தியின் மகிமையைச் சொல்ல முடியாது. "திலகர் விதைத்த வித்து பாரதியாக முளைத்தது. காந்தி விதைத்த விதை நாயக்கல் கவிஞராகத் தோன்றியது" என ராஜாஜி வாக்கில் வந்த மணிவசனத்தையும் இங்கு நினைவூட்ட விரும்புகின்றோம்.

காந்தி ஓர் இந்துவாகப் பிறந்தார். இறுதி வரையில் இந்துவாகவே வாழ்ந்தார். ஓர் இந்துவின் கையினாலேயே மரணத்தை மகிழ்ந்தேற்றார். சாதிமத பேதமற்ற, சாஸ்திர கோத்திரப் பூசலற்ற சமரஸ சன்மார்க்கத்தை அவர் போதித்தார்; அதனையே சாதனையிலும் கையாண்டார். மத

வெறி பிடித்த வைதிகக் குழுவினர்க்கு அந்த உண்மை விளங்கவில்லை. அப்பெரியார் தமது அஹிம்ஸா தர்மம் உலகில் பரவிச் சிறக்க தமக்கு எவ்விதமான மரணம் நேரவேண்டுமெனத் தெய்வத்திடம் சதாபிரார்த்தித்தார் என்ற உண்மையை நன்குணர்ந்தவர்கள் அவரது அகோர மரணத்திற் கூடத் தெய்வத்தின் திருக்கரத்தையே காண்பார்கள். அவர் கோரிய வரம் இதுவாகும்:—

"குத்தீட்டி ஒருபுறத்தில் குத்தவேண்டும்
கோடாரி ஒருபுறத்தைப் பிளக்கவேண்டும்
ரத்தம்வரத் தடியால் ரணமுண்டாக்கி
நாற்புறமும் பலர்உதைத்து நலியத்திட்ட
அத்தனையும் நான்பொறுத்து அஹிம்சைகாத்து
அனைவரையும் அதைப்போல நடக்கச்சொல்லி
ஒத்துமுகம் மலர்ந்து உதட்டில் சிரிப்பினோடும்
உயிர்துறந்தால் அதுவே என்உயர்ந்த ஆசை"

ஆம்! அவர் புன்சிரிப்புடன் மாத்திரம் மடியவில்லை, கொலை செய்தவனை நோக்கி: "ராமா" என்று உச்சரித்த உதட்டுடனேயே மறைந்தார். எதற்காக தமது வாழ்வு முழுவதையும் அர்ப்பணஞ் செய்தாரோ, அதற்கே இஷ்டம்போல்தமது உயிரையும் ஈந்தார்.

உடலுழைப்பிற்கு முதலிடம் கொடுத்தவர் காந்தியடிகள். உடலுழைப்பின்றி உணவு கொள்வோன் திருடன் என்பது அவர் கருத்து. தென்னாபிரிக்காவிலும் இந்தியாவிலும் நிறுவிய ஆச்சிரமங்களில் எல்லாம் உடலுழைப்பு கட்டாயமாக இருந்தது. இதுகுறித்த ஓர் ருசிகரமான சம்பவம் நினைவுக்கு வருகின்றது. சுகமதவாட்டில் சபர்மதி ஆச்சிரமம் ஆரம்பிக்கப்படுமுன் காந்தியடிகள் தென்னாபிரிக்காவிலிருந்து கூடிவந்த தமது பரிவாரத்து

டன் ரவீந்திரநாத் தாகூரின் சாந்தி நிகேதனத்திற்கு விருந்தினராகச் சென்றிருந்தார். இது நடந்தது 1915-ம் ஆண்டு மாசி மாதம் 17-ந் தேதி. அங்கே ஆசிரியர், மாணவர், விருந்தினர் சகலருக்கும் உணவு சமைக்க, அதனைப் பரிமாற, முப்பத்தைந்து பணி ஆட்கள் இருந்ததைக்கண்டார். எளிமையையும் உடலுழைப்பையும் இலட்சியமாகக் கொண்ட சத்தியாக்கிரக வீரருக்கு இது பிடிக்கவில்லை. கவி அரசர் தலைமையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. காந்தியார், ஆசிரியர் மாணவர்களே சமையற் பணியை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று பேசினார். எவராலும் அவர் கருத்தை எதிர்த்துப் பேச முடியவில்லை. அப்போது அங்கு வசித்த காகா காலேஸ்வர் என்ற பெரியாரையே அப்பணிக்கு மேற்பார்வையாளராகத் தெரிந்தனர். அப்பொறுப்பை ஏற்கத் தனக்குத் தகுதியில்லையெனத் தயங்கினார் அப்பெரியார். இதை அறிந்த தமிழ்நாட்டுப் பெரியார் திரு. ஹரி ஹர சர்மா அப்பணியை ஏற்றார். காகா அவருக்கு உதவியாளராக இருக்க இசைந்தார். இந்தச் சமையற்பணி ஆரம்பித்த தினமான பங்குனி மாசம் 10-ம் தேதி, சாந்தி நிகேதனத்தில் இன்னும் காந்தி தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

காந்தியடிகள், கிராமப் பொருளாதாரத்தோடு பிணைத்து நிர்மாணஞ் செய்தது கதர்த் தொண்டாகும். விநோபாஜியின் நன்முயற்சியால் அது இன்றுந் தொடர்ந்து நடந்து வருகின்றதானது மகிழ்ச்சிக்குரிய விஷயம். கதர் ஊழியர்களிற் பெரும்பாலார் பூதான இயக்கத்தின் முன்னணியில் நிற்க வேண்டிய தேவை ஏற்பட்ட காரணத்தால், கதர் வளர்ச்சி சிறிது தடைப்பட்டது உண்மையே. இதனால் 1964-ம் ஆண்டு நடந்த மகாநாட்டில் செய்து கொண்ட தீர்மானப்படி பூதானத்துடன் கதர்

வேலையும் இணைந்துவிட்டது. ''கிராமதானம் இல்லாமல் கதர் நிலைக்காது'', என்று விநோபாஜி அடிக்கடி தொண்டர்கட்கு நினைவூட்டி வருகின்றார்.

இனி, அரசியற் கொள்கைகளை முன்வைத்து உலக சமாதானத்தின் மீது கருத்தைச் செலுத்தி, காந்தியடிகளின் உபதேசங்களைச் சிறிது ஆராய்வோம்.

''அதிகாரத்தை சிலர் அடைவதனால் அல்ல உண்மை சுயராஜ்யம்; அதிகாரம் துர் உபயோகப்படும்போது அதை எதிர்க்கும் சக்தியை எல்லோரும் அடைவதே உண்மையான சுயராஜ்யமாகும், என்று நிரூபித்துக் காட்ட விரும்புகிறேன். அதிகாரத்தை வரையறுத்து அடக்கும் சக்தி மக்களிடம் இருப்பதை, மக்கள் உணரும்படி செய்வதன் மூலம் சுயராஜ்யம் அடையவேண்டும்'', இதுவே ஜனநாயக ஆட்சி குறித்து காந்தியடிகள் இந்தியாவுக்கும் இந்தியா மூலம் உலகுக்கும் அளித்த சாசனமாகும்.

அவர் மேலும் கூறியதாவது:— ''மதப்பற்றிலிருந்து விளைந்த, என் நாட்டுப்பற்று உயிர்கள் அனைத்தையும் ஒரே வகையில் நேசிப்பதாம். மானிடர் எனப்படுவோருடன் சகோதர உறவை அனுபவிக்கவும் உணரவும் விரும்புகின்றேன். பிறநாடுகளின் துன்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளவோ, அவைகளைச் சுரண்டவோசெய்து, தான் மேன்மையுற விரும்பும் நாட்டுப்பற்று எனக்குத் தேவையேயில்லை'' என்பதாம்.

இந்த உன்னத இலட்சியங்களையெல்லாம் நடை முறையிற் கண்டுகளிக்க விரும்பியே, அவர் இந்தியா சுதந்திரம் அடைந்ததும் அதற்குக் கருவி

யாக இருந்த காங்கிரஸ் மகா சபையை லோக சேவா சங்கமாக மாற்றியமைக்கத் திட்டமிட்டார். உயர் நிலையடைந்த தமது சகாக்கள் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதை அவர் விரும்பவில்லை. அவர்கள், மக்கள் சக்தியை உருவாக்குவதில் தங்கள் அறிவு ஆற்றல் அனுபவம் செல்வாக்கு முதலியவற்றைச் செலவிட வேண்டுமென வற்புறுத்தினர். ஆட்சியில் அவர்களது சக்தி பிரதிபலிக்கவேண்டும், ஆனால் ஆட்சி அவர்கள் கையில் இருக்கக் கூடாது, என மிகத் தெளிவாக எடுத்துக் கூறினர். கேட்பார் ஒருவருமில்லை. முன் வரிசையில் இருந்த தலைவர்களை, அதிகார மோகமும் பதவி ஆசையும் அடிமையாக்கிவிட்டது. பாரதத்தின் இன்றைய பரிதாப நிலைக்கு, காந்தியடிகளின் குரலுக்கு அதிகார பீடத்தமர்ந்த தலைவர்கள் செவிசாய்க்க மறுத்ததே முக்கிய காரணம் என்கிறார் வினோபாஜி. அத்தோடு மேலுங் கூறுவதாவது:— ''காந்தியடிகள் சொன்னபடி லோக சேவா சங்கம் தோன்றியிருந்தால் அது பாரதத்தின் மிகப்பெரிய நிறுவனமாக இருந்திருக்கும். ஏனெனில், காங்கிரசு பாரதம் முழுவதும் பரவியிருந்தது. அதுவே சுதந்திரம் பெற்றுத்தந்தது'', என்பதாம்.

இறுதியாக, பிறதேசங்களில் காந்தீயமும், அடிகளார் அனுஷ்டித்த சத்தியாக்கிரஹமும் எவ்வளவு தூரம் வேரூன்றியுள்ளதென்பதுபற்றியும் சிறிது கவனிப்போம். 1945-ம் ஆண்டு ஆவணி மாசம் 6-ந் தேதி ஜப்பானிலுள்ள ஹிரோசிமா, நகசாக்கி ஆகிய நகரங்களும் அங்கே வசித்த பல்லாயிரக் கணக்கான மக்களும் அணுக்குண்டின் நாசவேலைக்கு இரையான போது, அடிகளார் தமது வர்தா ஆச்சிரமத்தில் தங்கியிருந்தார். இந்த நாசவேலையை வானொலியில் கேட்ட அன்பர் ஒருவர் அவரிடம் ஓடிச்சென்று செய்தியை அதிர்ச்சியுடன் எடுத்துக் கூறினர்.

அதற்குக் காந்தி மகான் அமைதியாக அளித்த பதில்: ''பௌதிக விஞ்ஞானம் கண்டுபிடித்த நாச வேலைக்கருவி உச்சநிலையை அடைந்துவிட்டது. இனியாவது உலகின் அரசியல் தலைவர்கள் போரை வெறுத்து எனது அஹிம்சா முறைக்குச் செவி சாய்த்து, உலகம் முற்றிலும் இப்படி அழிந்து போகவிடாமல் காப்பாற்றுவார்களென நம்புகிறேன்'' என்பதாம். அப்போது காந்தியாரின் கண்ணோட்டம் மனித சமுதாயம் முழுவதிலும் பதிந்திருந்தது.

இந்தப் புவனத்தைப் படைத்துக் காக்கும் பொறுப்பு, மனித சமுதாயத்தைப்பரிணமப்படியில் மேலும் மேலும் முன்னேறிச் செல்லத் தூண்டும் பொறுப்பு, மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஓர் அபார தெய்வ சக்தியிடம் இருக்கின்றது. மனிதனின் பரிணமப்படியை நிர்ணயிப்பதும், அதற்குக் காலதேவி வேண்டுவதற்கிசைய மனிதக் கருவிகளைச் சிருஷ்டிப்பதும் அந்தப் பெரிய சக்தியின் ஆக்கவேலை. காலத்துக்குக் காலம், தேசத்திற்குத் தேசம், அவற்றின் சூழலுக்குப் பொருந்திய தீர்க்க தரிசிகளை அந்தச் சக்தி தவருமல் அனுப்பி வைக்கின்றது. இக்கருத்தை நினைவில் வைத்து, உலகின் விஞ்ஞான, மெய்ஞ்ஞான நிலைகளை நோக்குவோமானல், காந்தியடிகளின் வருகை, தென்னுபிரிக்காவில் இந்தியரின் தன்மானத்தைக் காப்பாற்றுவதற்கு மாத்திரமல்ல, இந்தியநாட்டுக்குச் சுதந்திரம் தேடிக் கொடுப்பதற்கு மாத்திரமல்ல, அணுக்குண்டு சகாப்தத்தில் அதின் நாச வேலையிலிருந்து மனித சமுதாயத்தைக் காப்பாற்றவென்பது தெற்றென விளங்கும். இந்தப் பேருண்மையை உலகின் நாலா பக்கங்களிலுமுள்ள அறிஞர் குழு நன்குணர்ந்து தொண்டாற்றுகிறது. உலகின் வெவ்வேறு நாடுகளுக்கு யான் பலமுறை யாத்திரை

செய்துள்ளேன். ஆங்காங்கே, உலக சமாதானத்திற்கு அடக்கமாக அமைதியாகப் பணிசெய்யும் பெரியார்களுடன் நல்லுறவு பெற்றுள்ளேன். அவர்களின் கருத்தரங்குகளில் கலந்துள்ளேன். அஹிம்சா தர்மத்தைப் பரப்ப அவர்கள் கொண்டுள்ள ஆர்வமும் இலக்கியப் பணியும் எனக்கு அளவற்ற மகிழ்ச்சியைத் தந்தது. முக்கியமாக பெல்ஜியத்தில் வண. பெரியார் டொமினிக் பியர் என்னும் கத்தோலிக்க குருவின் நன்முயற்சியால் நிறுவப்பட்ட காந்தி சர்வகலாசாலை உலக சமாதானத்திற்காகச் செய்யும் பணியை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். காந்தியடிகளுக்குச் சிலையெழுப்புவதையோ அவர் பேரால் மணி மண்டபங்கள் நிறுவுவதில் பணத்தை செலவிடுவதையோ, அவரும் அவர் போன்ற அறிஞர்களும் விரும்பவில்லை. காந்தியின் உபதேசங்களைக் கற்கச் செய்து, அதன் பயனை இளைஞர்களின் உள்ளத்தில் போர் வெறுப்பும் அஹிம்சா தர்மமும் செறியச் செய்யும் முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. சென்ற ஆறு ஆண்டுகளாக இதில் கலந்து கொள்வோர் பெரும்பாலும் உலகின் பல பாகங்களிலுமுள்ள சர்வகலாசாலைப் பட்டதாரிகளாவர். அடுத்தபடியாக அழைக்கப்படுவோர் தொழிலாளர்களும் தொழிலாளர் இயக்கங்களில் பங்கெடுக்குந் தலைவர்களுமாவர். ஃபிருன்சு தேசத்தில் லன்சா டீ வஸ்தா என்னும் காந்தித் தொண்டராலும் அவரது பிரிய பாரியாராலும் நிறுவப்பட்டுள்ள நிலையம் காந்தியடிகளும் ஆசாரிய விேனாபாவும் அருளிய போதனைகளை அணுவேனும் பிசகாமல் பேணித் தொண்டாற்றுகிறது. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலுங்கூட இதேவித இயக்கங்கள் பரவி வருகின்றன. பத்திரிகைப் பிரசாரமற்றவை இவையெல்லாம். பிரசங்க மேடைகளிலும் அவற்றின் வேலை பிரதிபலிப்பதில்லை. மண்ணுலகில் நீடித்து நின்று நன்மை பயக்கும்

அரும்பணிகளெல்லாம் இவ்விதம் ஆடம்பரமற்ற, அமைதியான முறையில் நிகழ்பவையேயாம். நவீன அரசியல் துறையில் நடக்கும் 'புஸ்' வாணங்களைப் போன்றனவல்ல அவை.

கிறிஸ்துமதச் சார்புள்ள அன்பர்கள், காந்திய டிகளின் உபதேசங்களில் ஏசுநாதரின் மலைப்பிரசங் கத்தின் எதிரொலியைக் கேட்கிறார்கள்; இந்துக் கள் பெரும்பாலார் கீதை விளக்கும் சமதிருஷ் டியை அவரிடம் கண்டார்கள்; பழைய தமிழ்மரபில் உள்ளச் செறிவு பெற்ற காந்தியபிமானிகள், அவ ரில் திருவள்ளுவரைக் கண்டார்கள்; அவர் பேச்சில் திருக்குறளின் சாரத்தையே கேட்டார்கள். உலகில் மனிதன் இயற்கையோடியைந்த எளிய வாழ்வு நடாத்தி, இன்பந்துய்த்து தெய்வத் தன்மையடைவ தற்குரிய மார்க்கத்தை வாழ்ந்து காட்டிய இல்லற ஞானி வள்ளுவர் பெருமான். அவரைப் போலவே காந்தியாரும், நவீன உலகில் சத்திய சுத்த சமரச ஞான நித்திய சித்தராய், இன்னு செய்தார்க்கு, இனி யவே செய்து, செயற்கரிய செய்கைகள் பல புரிந்து,

> "உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
> உள்ளத்து ளெல்லா முளன்"

என்னும் திருக்குறளுக்கு ஓர் ஒப்பற்ற இலக்கிய மாகத் திகழ்கின்றார்.

"சத்தியமே மந்திரமாய்ச் சாந்தமதே தந்திரமாய்ச் சமயந்தந்த
உத்தமனுங் காந்திமுனி உச்சரித்த சாத்விகத்தை உறுதி
கொள்வாம்",

(ஆத்மஜோதியிற் பிரசுரித்த வானொலிப் பேச்சைத் தழுவியது)

# தர்ம ராஜ்யம்

சரித்திர காலவெல்லைக்குள் வருவதாக, நவீன ஆராய்ச்சியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் இந்தியாவின் வரலாற்றில், கலிங்கப் போரில் மாண்ட ஒரு லட்சம் மக்களின் பிணக்குவியலைக் கண்டு நெஞ்சடைத்து, மனந்திருந்தி, பகவான் புத்தரின் பக்தராகி அவர் தர்மத்தையும், அஹிம்சா மார்க்கத்தையும் உலகின் நாற்றிசையிலும் பரவச்செய்த அசோகச் சக்கரவர்த்தி விசேட இடம் பெறுகிறார். 'நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே; மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்' என்ற பழந்தமிழ் நாட்டுப் பண்புக்கிணங்க, குடி தழுவிக் கோலோச்சுங் குணம் அவரிடம் நன்கமைந்திருந்தது. பகவான் புத்தர் போதிமரத்தடியில் ஞானோதயம் பெற்ற பின் சரநாத் சென்று முதலாவதாகச் செய்த 'தர்ம பிரவர்த்தன சூத்திரம்' என்னும் போதனையைக் கால வெள்ளங்கரைத்துச் செல்லாவிதத்தில் கல்லில் பொறித்து வைக்கச் செய்தவர் அவரே. மாந்தரின் உடலைவென்று மண்ணைக்கவர்தற்குப் படைத் தலைவர்களை அனுப்பிவந்த அலெக்சாந்தரின் நாட்டுக்குப் புத்தகுருமார்களை அனுப்பி மக்களின் மனத்தைவென்று அவர்களின் உள்ளத்தைக் கவர்ந்த பெருமை அசோகரைச் சேர்ந்ததாகும். 2200 ஆண்டுகட்கு முன்னரேயே அவர் ஸ்தம்பங்களையும் ஸ்தூபிகளையும் நாடெங்கும் எழுப்பியிருந்ததனலன்றோ, இன்று புதிதாகத் தோன்றிய இந்தியக்குடியரசு தனது கொடிச்சின்னமான அவரது தர்ம சக்கரத்தை எடுத்தாளும் பாக்கியம் பெற்று, ஓர் அரசாங்கத்தின் உண்மையான உன்னத லட்சியம் எப்படியிருக்க வேண்டும் என்பதை உலகம் முழுவதற்கும் விளக்கக்கூடிய அரிய சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ளது! அண்ணல் காந்திக்குப் பல்லாயிரக்கணக்

கான பணச்செலவில் ஸ்தம்பங்களை ஏன் எழுப்ப வேண்டுமெனக் குதர்க்கவாதஞ் செய்வோர்க்குச் சரியான பதில் இந்த ஒரு உண்மையிலேயே அடங்கி விட்டது.

அசோகனின் தர்ம சக்கரம் ஓர் சாதாரண வட்டமோ, தேருருளையோ வன்று. தன்னை முற்றிலும் அடக்கியாண்டு, தனது ஆசை ஆணவங்களையெல்லாம் ஒடுக்கி, தன்னுள்ளத்தே சாந்தியைக் கண்ட பின்னரேயே அந்தச் சக்கரவர்த்தி இந்தச் சக்கரத்தின் சுழற்சியைப் பார்க்க ஆவலுற்றனர். அச்சுழற்சியின் தொடர்பாக இந்தியாவின் சரித்திரத்தில் ஓர் ஒப்புயர்வற்ற சகாப்தம் உதயமாயிற்றென்பதே ஆராய்ச்சியாளர்கள் கண்ட முடிபு! புத்தர் தமது உத்தம தர்மோபதேசத்தால் உலக மக்களுடைய உள்ளத்தைவெல்ல ஆர்வமுற்றதுபோலவே, அந்த உபதேசத்தின் புறச்சின்னமான இந்தச் சக்கரத்தின் சுழற்சியால் அன்பும், அஹிம்சையும், சகோதரநேயமும் உலகெங்கும் பரவின. ஜப்பானைக் கிழக்கெல்லையாகவும் எகிப்தை மேற்கெல்லையாகவும் கொண்டு பரந்து கிடந்த கண்டங்களெங்கும் இப்புத்த தர்மக் கொடி பறந்தது; உலகில் அன்று வாழ்ந்த மக்களில் முக்காற் பகுதிக்கு மேலானவர்கள் அதற்கு வணக்கஞ் செலுத்தினர்.

புத்தருக்குப்பின் கருணையின் திருவுருவாக விளங்கியவர் காந்தியடிகள். காந்தீயத்தின் கொள்கைகளையே கடைப்பிடிப்போமெனக் கண்ணீருடன் காந்தியார் மறைவின் பின் கங்கணங்கட்டி எழுந்த இந்தியப் பிரமுகர்கள் தேசீயக் கொடியின் அமைப்பு விஷயமொன்றினலேயே புதிய அரசாங்கத்தின் உயர்ந்த லட்சியம் எதுவென்பதை உலகறியச் செய்துவிட்டனர். உலகின் வல்லரசுக்களைப் பொறுத்தமட்டில் சமாதானம் என்ற சங்கதி

வெறும் பேச்சளவில் மாத்திரம் உள்ளது. செயலளவில் பார்த்தால் முன்னரிலும் படுமோசமான நாசவேலையையே காட்டுகிறது. அவர்களின் விஞ்ஞான விற்பன்னர்களின் மூளை அணுக்குண்டுப் போட்டியைத்தாண்டி, யுரானியம் கொஸ்மிக் கதிர், ஜலமூலசக்தி முதலியவற்றைக்கண்டு ஒரு நொடிப்பொழுதில் ஓர் நாட்டை நாசமாக்கும் வெடிகுண்டுகளைக் கண்டுபிடிப்பதில் முனைந்து நிற்கிறது.

எந்த நேரமும் யுத்த சன்னத்தராயிருப்பதே உலகில் சமாதானத்தை நிறுவுவதற்குச் சரியான மார்க்கமென்னும் கொள்கை வல்லரசுகளிடம் இருக்கும்வரையில், உலகமக்கள் அச்சமின்றிக் கிலேசமற்று வாழவே முடியாது. நாம் வாழும் இந்த உலகமானது நாளுக்கு நாள், நிமிடத்துக்கு நிமிடம் மாறிக்கொண்டே நிலைபெறும் ஓர் நாடகமேடை. காட்சிகள் அடிக்கடி மாறலாம், ஆனால் நாடகம் நடந்துகொண்டேயிருக்கும். காலதேவியானவள் மாந்தரின் முன்னேற்றத்தைக்கருதிப் புத்தம் புதிய சமூகக் கொள்கைகளைப்பரப்பி, அவற்றை நடைமுறைக்குக் கொணர்வதற்கு வேண்டிய கிளர்ச்சிகளையும் இயக்கங்களையும் உண்டுபண்ணிய வண்ணம் இருக்கிறாள். சமயத்துறையில் எத்தனையோ மூடக் கொள்கைகள், பழையஉளுத்துப்போன பழக்கங்கள் காலவெள்ளத்தில் கரைந்துவிட்டன; எங்காவது மூலைமுடுக்கில் எஞ்சியிருப்பன கரைந்துவருகின்றன. அரசியலுலகில் சென்ற கால்நூற்றாண்டுக்குள் பல முடியரசுகள் குடியரசுகளாய் மாறிவிட்டன. தன்னலமென்ற அத்திவாரத்தில் கட்டப்பட்டிருந்த தனியுரிமைக் கோட்டை தகர்ந்துவிட்டது. சர்வசனபொது உரிமையைப்பற்றிய பேச்சையே எத்திசையிலும் கேட்கின்றோம். இப்பொதுவுடைமையாட்சி ஒன்றே, உலகில் சமாதானத்தை நிறுவக்

கூடியதெனப் பலர் எண்ணுகிறார்கள். நாம் நேரிற் காணும்போது உடைமைக் கிளர்ச்சியில் அவ்வித இலட்சியத்தைக் காணவில்லை. முடியாட்சி, குடியாட்சி, ஜனநாயகம் எதுவாயினும், அடிப்படைக் கொள்கைகளாக அறமும், அன்பும், ஆன்மநேய ஒருமைப்பாடும் இருந்தாலன்றி, அதனால் உலகில் அமைதிவரமாட்டாது. எனவே, பொது உடைமை அருளுடைமையாக மாற வேண்டும். இதனையே காந்தியடிகள் ராம இராஜ்யம் என அடிக்கடி எடுத்து விளக்கினார். மனிதனை அடக்கி அடிமையாக்குங் கொடுமை முதலில் ஒழியவேண்டுமென்று அவர் வாழ்நாள் முழுதும் வற்புறுத்தியது அந்த அருளாட்சிக்கு அடிகோலவேயாம். மனிதனின் மனச்சாட்சி அறவழி. அதன்படி அவன் நடந்தால் எவ்வித புறக்கட்டுப்பாடுகளுக்கும் பிறர் சட்டங்களுக்குந் தேவை இராதென வாழ்வில் விளக்கினார். வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் கோனாட்சியிருந்ததெனினும், அவர் விளக்கியுள்ள அரசியல் சாஸ்திரம் பெரிதும் குடியாட்சிக் கொள்கைகளையே அடக்கியுள்ளது. அக்காலத்தில் நாட்டையாண்டது உண்மையில் கிராமப் பஞ்சாயத்துக்களே. தேசத்தின் உயிர்நாடியாய், சமுதாயவாழ்வின் வேராய், தேச சுயராச்சியத்தின் அத்திவாரமாய் இருந்தது இக்கிராமப் பஞ்சாயமாகும். இருபதாம் நூற்றாண்டில் இந்த அரிய உண்மையைப் பூரணமாய் உணர்ந்தவர் காந்தியடிகள் ஒருவரே. ஏழுலட்சம் குடியரசுகள் இந்தியாவில் தோன்ற வேண்டுமென்று அவர் அரும்பாடு பட்டதன் பயனாகவே, சாந்தப் பெரியாராம் ராஜன்பாபு அவர்களை ஜனாதிபதியாகக் கொண்ட இந்தியக் குடியரசு (26-1-50ல்) நாட்டப்பட்டது. 1947-ம் ஆண்டு ஆவணி மாதம் 15-ந் திகதி இந்திய சுதந்திரம் உதயமானதும், புதுவையோகி சுத்தானந்தரால் 'வானரசு' என்ற ஓரங்க நாடகம் எழுதப்பட்டது. 32 பக்கங்களில்

தற்கால உலக நிலேயைச் சரியாகப் படம்பிடித்துக் காட்டியதுடன், எதிர்கால இந்தியாவைத் தீர்க்க தரிசனத்துடன் கற்பனே செய்துள்ளார். நாடகம் முடியுமுன் தேவர்கள், மகாத்மாக்கள், சுத்த யோகிகள் வாழ்த்துகின்றனர். அவர்களுடன் நாமுங் கூடி:

ஞானபூமி இந்தியாவில் நாட்டினேம் சுதந்தரம்
வானரசு வந்து இந்த மானிலம் மகிழவே!
பரமசக்தி ஆடுகின்ற பாரத நன்னுட்டிலே
வரமிகுந்த தீரர்போற்றும் வானரசு வாழ்கவே!

என்று வாழ்த்துவோம்!

நவபாரதத்தின் ஆன்மீக ஒளிவிளக்கு:

# ஶ்ரீ வாஸ்வானி மாமுனி

பாரதத்திலுள்ள பூனவைச் சேர்ந்த சாது வாஸ்வானி இந்த நவீன யுகத்தின் முன்னேடிகளில் ஒருவராகும். அவர் ஒரு ஆன்மீக முன்னேடியாக மட்டுமல்ல, ஒரு ஆன்மீக ஒளிவிளக்காகவும் திகழ்கிருர். அவரது நெருங்கிய சகாக்கள் அனைவரும் அவரைத் 'தாதாஜி' எனஅன்புடன்அழைப்பார்கள். 'தாதாஜி' என்ருல் மூத்த சகோதரர் என்பது கருத்து.

1879-ம் ஆண்டு நவம்பர் 25-ந் திகதி சிந்து ஹைதராபாத்தில் பிறந்த இம்மகான் 1965-ம் ஆண்டுடன் 86 வருட பூவுலக வாழ்க்கையை முடித்தார். சுமார் அரைநூற்ருண்டு காலம் இம்மாமுனியின் ஆன்மீக இலட்சியத்தாலும், போதனைகளாலும் நன்மைபெறப் பாக்கியம் பெற்ற என் போன்ருேருக்கு அவரது ஜனன தினம் விசேட முக்கியத்துவம் பெற்றதாய் விளங்குகிறது.

உலகத்திலேயே மிகப் பழமை வாய்ந்த மொஹன்ஜதாரோ நாகரீகத்தின் வரலாற்றுடன் ஆரம்பமாகும் புராதன சிந்துவின் புகழ், இம்மாபெரும் கவிஞரும், தத்துவதரிசியும், கல்விமானும், அனுபூதிச் செல்வருமான வாஸ்வானி முனியின் பிறப்பினுல் மேலும் மகிமை பெற்றுள்ளது. எல்லோரும் அவரை 'தாதாஜி' என அழைப்பார்கள். ஆனுல் அவரோ தம்மை 'மெய்ஞானம் தேடி அலைபவன்' என அழைப்பதையே விரும்புவார். அவரது இலட்சிய புருஷரான பிரான்சிஸ் (அஸிஸி) புனிதவாளர் போன்று, மனிதர்கள், விலங்குகள், பட்சி

கள் சகலவற்றிற்குமே அவர் உண்மையில் ஒரு சகோதரர்தான்.

தாதாஜியின் எழுத்தோவியங்கள் மூலம் சிந்தி இலக்கியத்தின் 'பஞ்ச ரத்தினங்கள்' பற்றி நாம அறிய முடிகிறது. ஆனுல் அவரோ இரத்தினங் களில் மகிமைமிக்க இரத்தினமாய் மிளிர்ந்து உலகத் தின் நான்கு திசைகளிலும் ஆன்மீக ஒளிச்சுடரைப் பரப்பி நிற்கிருர். இந்தியக் குடியரசின் முதலாவது ஜனுதிபதி டாக்டர் ராஜேந்திரப் பிரசாத்தின் வார்த்தைகளில் சொல்லப் போனுல், இந்தியாவின் அநந்தமான ஆன்மீக கலாச்சாரத்தின் ஒரு சின்ன மாகத் திகழும் "அவரது வாழ்க்கை நம் அனைவருக் கும் உத்வேகம் அளிக்கும் ஒரு ஊற்ருகவும், ஆன் மீகஞானம், பயன்கருதாச்சேவை ஆகியவற்றின்ஒரு வீரவரலாருகவும் விளங்குகிறது".

சுமார் 50 வருடங்களுக்கு முன்பு நமது கல்லூரி வாழ்க்கைக் காலத்தில், சர்வதேசப் புகழ்பெற்ற மூன்று இந்தியர்கள் மட்டும் வாழ்ந்து வந்தனர். விஞ்ஞானி சேர். ஜெகதீஸ் சந்திரபோஸ், கவியரசர் தாகூர், சாது வாஸ்வானி ஆகியோரே இம்மூவரு மாவர். இது காந்தியடிகளின் காலத்திற்கு முற் பட்டது. 1910-ம் ஆண்டு பெர்லினில் நடைபெற்ற உலக மத காங்கிரஸ் மகாநாட்டில் பங்குபற்றிய தன் மூலம் தாதாஜி ஐரோப்பாவுக்கு ஒரு இந்திய ஆன்மீகத் தூதராகக் கருதப்பட்டதுடன், கிழக்கின் தத்துவ தரிசனங்களை மேற்கத்தியோருக்கு எடுத்து விளக்கும் ஒரு மத வல்லுனராகவும் மதிக்கப்பட் டார்.

தாதாஜியைப் போன்று வறுமையை நேசித்து, எளிமைக்கு இருப்பிடமாய், தெய்வீக ஆணைக்குப்பரி பூரணமாய்த் தம்மை அர்ப்பணித்துள்ள ஒருவரை

இந்நவீனயுகத்தில் நாம்காண்பது அரிது. இவை எல்லவற்றையும்விட அவரதுதாழ்மையைவிபரிக்கச்சொற்களில்லை. ''நீங்கள் தாழ்த்தப்பட்ட சமயத்தில் தாழ்மையாக இருப்பது பெரிய காரியமல்ல. ஆனால் நீங்கள் உயர்த்தப்படும் சமயம் தாழ்மையாக இருப்பதுதான் ஒரு பெரிய சாதனை'' என்று பிரபல பிரஞ்சு மத அறிஞர் சென். பர்னட் கூறிய வாக்கியத்தின் உண்மைக்குத் தாதாஜியின் வாழ்க்கை ஒரு எடுத்துக்காட்டு.

எம். ஏ. பரீட்சையில் சித்தி பெற்றதும் கல்வித் துறையில் அவர் முக்கிய பதவிகளை வகித்து வந்தார். அவர் விரும்பியிருந்தால் இன்னும் சிறந்த பெரிய பதவிகளை வகித்திருக்கலாம். ஆனால் அவரோ தெய்வீக அன்புக்குத் தமதுவாழ்க்கையை அர்ப்பணிக்கவும் தியாகத்திற்கும் சேவைக்கும் இருப்பிடமாய் திகழவும் தமக்குக்கிட்டிய சந்தர்ப்பங்களை உதறித் தள்ளிச் சகலத்தையும் துறந்தார். ஒரு சர்வகலாசாலையின் பேராசிரியராகவோ அல்லது ஒரு கல்லூரியின் அதிபராகவோ அவரைப் பதவி ஏற்குமாறு பணித்துவந்த நண்பர்களுக்கு, ''வாழ்க்கை அருளப்பட்டது செல்வத்தைச் சேர்க்கவல்ல'' என்று அடிக்கடி கூறிவருவார். இளம்பராயத்திலேயே, அதாவது நாற்பது வயதிற்கு முன்னராகவே இந்தியாவுக்குத் தொண்டனாகவும், இந்திய ரிஷிகளுக்குச் சீடனாகவும் தம்மை அர்ப்பணிக்க அவர் தீர்மானித்தார். அவர் இந்தியா அடங்கிலும் யாத்திரை செய்து உணர்ச்சி ததும்பும் சொற்பொழிவுகளை நிகழ்த்திவந்ததுடன், பாரதமாதாவுக்குவாழ்க்கையை அர்ப்பணிக்குமாறு இளைஞர்களை வேண்டி வந்தார்.

அந்நிய ஆதிக்கத்திலிருந்து இந்தியாவை விடுவிக்க காந்திமகான் ஒத்துழையா இயக்கத்தை ஆரம்

பித்த சமயம், தாதாஜீ இச்சுதந்திர இயக்கத்திற்குப் பேச்சு மூலமும், எழுத்து மூலமும் தமது ஆதரவை நல்கினார். அவர் ஒரு தடவை கைது செய்யப்பட்டு சிறைக்கும் அனுப்பப்பட்டார். ஆயினும் நான்கு தினங்களுக்குப்பின்னர் கராச்சி அரசாங்கம் அவரை விடுதலை செய்தது. அவர் சிறைவாசம் அனுபவித்து வந்த சமயம் திருடர்களையும், கொலைகாரர்களையும் பாவிகளையும் அவர் சந்தித்தாராயினும் அவர்களிடம் கடவுளின் தரிசனத்தையே கண்டார்.

'சிறை டயரி'யில் அவர் குறிப்பிட்டிருக்கும் அவரது அனுபவங்களும், சிந்தனைகளும் உள்ளத்தை தொடுவனவாக இருக்கின்றன. அவர் குறிப்பிடுவதாவது:- 'சிறை ஒரு அரிய கொடை. இங்கு தங்கியிருந்தால், உங்களைச் சூழவும், உங்களுக்குள்ளும் இறைவனைக் கண்டு பரவச நிலையிலிருக்கலாம்'. பின்பு கூறுகிறார்: 'கடவுளின் அன்புக்கும் தாட்சணியத்திற்கும் ஒரு சாட்சியாய் விளங்க, அவர்கள் மத்தியில் வாழ்வதையே நான் விரும்புவேன்'.

ஸ்ரீ ராஜாஜி அவர்கள் தாதாஜியின் பிறந்த தினத்தையொட்டி அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருப்பதை இங்கு நினைவு மீட்டினால் சுவாரஸ்யமாக இருக்கும். அவர் எழுதுகிறார்: ''காந்தியுடன் கூட்டுச் சேர்ந்த ஆரம்ப காலத்திலிருந்து ஸ்ரீ வாஸ்வானியை எனக்கு நன்கு தெரியும். அவர் இப்பொழுது தமது பூவுலக வாழ்க்கையில் 87 வருடத்தை அணுகுகிறார்; நானும் அப்படித்தான். ஆனால் வாஸ்வானியின் இலட்சிய வாழ்க்கைக்கு நான் எவ்வளவு தொலைவிலிருக்கிறேன். கிருஷ்ண பிரானதும், மற்றும் தெய்வீக புனிதவாளர்கள் மத்தியிலும், அவர் ஆனந்தமாய் வாழ்கிறார். ஆனால் நானோ உலக விவகாரங்களைப் பொறுப்பேற்றிருக்கும் அகங்காரம் பிடித்த மனிதர்கள் மத்தியிலும்,

பிழையான நிர்வாகிகளிடையேயும் கிடந்து உழல் கிறேன்''. ஒரு உன்னத மனிதர்தான் இத்தகைய புகழஞ்சலியைச் செலுத்தமுடியும்.

1919-ம் ஆண்டு தாதாஜி இலங்கைக்கு விஜயம் செய்து சில சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். அவருடன் முதல் தடவையாக எனக்குத் தொடர்பு ஏற்பட்ட சூழ்நிலை இப்பொழுதும் எனது இதயத்தில் பசுமை படிந்திருக்கிறது. கொழும்பு பௌத்த வாலிபர் சங்க மண்டபத்திற்தான் இந்த நிகழ்ச்சி நடந்தது. அவரது சொற்பொழிவைக் கேட்பதற்குப் பெருந்திரளானேர் திரண்டு வந்திருந்தனர். அவரது தெய்வீக ஆளுமையிலிருந்து பிரகாசித்த தூய, மோன ஆன்மீகத்தன்மையை அங்கிருந்தோர் உணர்ந்து கொள்ளாமலில்லை. அவரது வதனத்தில் ஒருவித சோகத்தன்மை இழையோடியிருந்தது. பொதுவாக மனிதசமுதாயம் அனுபவித்துவரும் துன்பங்கள் காரணமாகவும், குறிப்பாக இந்திய கலாச்சார இலட்சிய வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள சீர்கேடுபற்றியும், அவரது இதயத்தில் ஒரு வேதனை வருடிக்கொண்டிருக்கிறதென்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

1933-ம் ஆண்டு தாதாஜி சிந்து ராஜ்யத்தில் கல்வி சம்பந்தமான மீரா இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார். ஆனல் 1947-ம்ஆண்டு இந்தியா பிரிவு பட்டதை அடுத்து எழுந்த அசம்பாவித நிலைமை காரணமாக இவ்வியக்கத்தின் தலைமைக் காரியாலயம் மஹாராஷ்டிரத்திலுள்ள பூனவுக்கு மாற்றப்பட்டது. ஏழை மாணவ-மாணவிகளுக்குப் பாடசாலைகளை நடாத்தும் பணிமட்டுமன்றி, வைத்திய சேவைகளிலும் இவ்வியக்கம் அக்கறை செலுத்தி வந்தது.

சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட விபத்து ஒன்று காரணமாக அவரது தேகநிலை குறித்து அவரின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டிருந்த போதும், மனித சமுதாய சுபிட்சம் குறித்து அவர் இரவும்பகலும் தன்னலம் கருதாது உழைத்து வந்தார். அவரது கடந்த பிறந்ததின விழாவின் போது ரூபா. 132,706 கொண்ட பணப்பை ஒன்று அவருக்கு அன்பளிக்கப்பட்டது. அவர் அந்த முழுத்தொகையையும் சமூக, கல்வி சேவைக்காக பூஞ சகோதரத்துவ சங்கத்திடம் கையளித்தார்.

(வீரகேசரியிலிருந்து தொகுக்கப்பட்டது.)

# ஸ்ரீ ஆனந்தமாயி அம்மையாரின் அற்புத வாழ்க்கை

இன்றைய பாரமார்த்திக விண்ணில் ஞான சூரியனாக விளங்கி, கோடிக்கணக்கான மக்களின் அக விருள் போக்கி ஆனந்தம் அளிக்கும் முறையில், உலகின் நாலா பக்கங்களுக்கும் சக்திக் கதிர் வீசிக் கொண்டிருப்பவர் ஸ்ரீ ஆனந்தமாயி அம்மையார். ஜகன்மா தாவே மனித உடல் தாங்கி இந்த மங்கையர்க்கரசியாக உலாவுகின்றாரெனப் பக்த ஜனங்கள் கொண்டாடுகின்றனர். பராசக்தியின் கல்யாண குணங்களான அன்பு, அழகு, அறிவு, அடக்கம், அமைதி, ஆனந்தம், ஆற்றல், இனிமை, பொறுமை சமரஸம் முதலானவற்றை அவரிடம் காண்கிறோம். நான்கு முக்கிய கிரகங்கள் உச்சமடைந்திருக்கும் சுபவேளையில் அவதரித்த இந்த மாது சிரோன்மணி இன்று உலக மாதாவாகப் பல்வேறு சமயப் பிரிவினரைச் சேர்ந்த மக்களால் போற்றப்படுவதில் வியப்பொன்றுமில்லை.

ஆண்டவன் அடியார்களின் வரலாறுகள் கணக்கில. அவை எக்காலத்திலும், எல்லா நாடுகளிலும், எல்லா மதங்களிலும் எல்லா மொழிகளிலுமுள்ளன. இந்தப் பேருண்மையை அடிப்படையாகக் கொண்டதே, சுந்தரர் செந்தமிழில் வரும், "அப்பாலும் அடி சார்ந்த அடியார்க்கும் அடியேன்" என்ற மணிவாக்கு. இவ்வரலாறுகளில் இன்றைய உலகைப் பொறுத்தமட்டில் சமயத் துறையில் இன்றைய சூழ்நிலைக்குப் பொருந்திய மட்டில், இப்புண்ணியவதியின் புனித சரிதை மிகவும் அற்புதமானது, அழகானது, பக்தியும் ஞானமும் இணைந்தது, கற்போர் உளத்தில் அன்பைப் பெருக்கி

ஆர்வக் கனலைத் தூண்டி ஆத்மஞானம் மிளிரச் செய்யும் அருட்சக்தி வாய்ந்தது.

கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்த திரிபுரா ஜில்லாவிலுள்ள ஓர் குக்கிராமத்தில், தாதா மஹாசயாவின் மகளாய்த் தோன்றி, நிர்மலாதேவி என்னும் பெயர் தாங்கி வளர்ந்து, இளம் பராயத்திலேயே இயல்பாகவே பவசமாதி நிலையை அடையும் பேறு பெற்று, பன்னிரண்டாவது வயசில் ரமணீ மோகன சக்கரவர்த்தியென்னும் உத்தமருக்குப் பிரிய பத்தினியாகி அன்னாருடன் பரிசுத்தமான இல்லற நெறி நின்று, பரிபூரண நிலையடைந்த பின் சதா சகஜ சமாதியில் இருந்த வண்ணம், ஆன்மீகத் துறையில் அருந்தொண்டாற்றி வரும் இப்பக்த சிரோன்மணியின், ஞானச் செல்வியின், மகிமை சொல்லற்கரிது; அன்னையாரின் லீலாமிர்தம் அளப்பரிது. இவரின் குடும்ப வாழ்க்கையில் நடந்த சில அசாதாரண நிகழ்ச்சிகள் காரைக்காலம்மையாரின் இல்லற வாழ்வில். என்றும் பாராட்டப்படும் அரும் பெரும் பண்புகளை நமக்கு நினைவூட்டுகின்றன. அம்மையாரைப் போலவே இந்த அன்னையாரும் தமது சொந்த நாயகனாலேயே குலதெய்வமாகத் தொழப்படும் பெரும் பேற்றையடைந்துள்ளார்.

காரைக்காலம்மையாரின் இறவாத இன்ப அன்புத் திறத்தை உலகுக்கு உணர்த்த வந்த சேக்கிழார் சுவாமிகள்:

"..............குலவிய தாண்டவத்திலவர் எடுத்தருளுஞ் சேவடிக் கீழ் என்று மிருக்கின்றாரை அடுத்த பெருஞ்சீர் பரவல் ஆரளாவாயினதம்மா!" என அவையடக்கம் கூறுகின்றார். அதே போலவே, இன்று ஹிந்தி, ஆங்கிலம், ஃபிரெஞ்சு, ஜேர்மன்

முதலாய மொழிகளில் ஆனந்தமாயியின் சீர்பரவ விரும்புகிறவர்களும் தத்தம் மொழியில் வணக்க மான அடக்கவுரை வரைகின்றுர்கள்.

அன்னையாரின் ஜென்ம ஊர் ஓர் முஸ்லீம் கிராமம். இந்துக்கள் அங்கே சிறுபான்மையினராகவே வாழ்ந்தனர். அவர்கள் எல்லோரும் தேவீ வழிபாட்டினர். திருமணமான பின்னர் டக்கா நகருக்கருகிலுள்ள றம்ஞ என்ற ஊரில் வாழ்ந்த காலத்தில் அவர்கள் குடியிருந்த இல்லமும் தோட்டமும் ஓர் முஸ்லீம் செல்வருடையது. பிறந்த மனையிற் போலவே இங்கும் தேவி உபாசனைக்குப் போதிய வசதிகள் அளிக்கப்பட்டன. அந்தச் சொந்தக்காரனின் மனைவியும் மக்களுங் கூட நிர்மலாவின் ஆத்மசாதனையில் பிரியங்கொண்டு வழிபாட்டில் கலந்துகொள்வதுண்டு.

மேலே குறிப்பிட்ட தோட்டத்தில் ஓர் அராபிய மகாத்மாவின் சமாதிப் பள்ளியுண்டு. அதில் இஸ்லாமிய பக்தர்கள் வந்து நமாஸ் சொல்வதுணடு. அருகில் வசித்த நிர்மலாவிற்கும் அவர்களைப் பின்பற்றி அப்பெரியார் சமாதிமுன் வணக்கஞ் செலுத்த ஆர்வம் உதித்தது. ஒருநாள் அவர் நமாஸ் சொல்லும் வேளையில் ஓர் முஸ்லீம் அருகே வந்துவிட்டார். நிர்மலாவின் வாயிலிருந்து வந்தவை திருக்குரானின் அமிர்த வசனங்களென அறிந்து கொண்ட அந்த முஸ்லீம், அயலாருக்கும் நவாபுக்கும் விஷயத்தை வெளிப்படுத்திவிட்டனர். தாய் மொழியான வங்க பாஷையிலேயே ஒரு வசனத்தை வாசிக்கக்கூடிய போதிய கல்வி அறிவில்லாத நிர்மலா எப்போ எவரிடம் எங்கே திருக்குரானைக் கற்றனர்? என்ற கேள்விகள் கிளம்பின. பலர் முன் நமாஸ் செய்து காட்டுமாறு விண்ணப்பமும் வந்துவிட்டது. இயல்பாகவே நாணம் முத

லிய பெண்மைக்குரிய குணங்கள் அமைந்த நிர்மலா வுக்குத் தனது அத்யாத்ம வாழ்வில் கிடைத்துள்ள அற்புத அனுபவங்களை வாய்விட்டுக் கூற மனம் வர வில்லை. மக்களின் அன்பும் ஆர்வமுமே இக்கேள்வி களை வற்புறுத்துங் காரணமென நன்குணர்ந்த நிர் மலா, தாம் வஜிற்பூரில் வசித்த காலத்திலேயே குறித்த சமாதியில் உறையும் தெய்வ சக்தி அதன் பழைய மானிட உடலில் முன் தோன்றி, தம்மை இந்த இடத்திற்கு வந்து வசிக்குமாறு கேட்டுக் கொண்ட உண்மையைத் தெரியச் செய்தார். இந்த உண்மை வெளியானதும் பக்தர் கூட்டம் பெருகத் தொடங்கியது, நிர்மலாதேவி ஆனந்த மாயியானார். கன்னிமை நீங்காமலேயே பல மக் களைச் சாதி, மத, நிற வேற்றுமையின்றிப் பெறும் பாக்கியத்தைப் பெற்றனர். அவர்களுள் பெரும் பாலானோர் புத்திரிகள். இக்கூட்டத்தில் குருப் பிரியதேவி என்பவர் முக்கிய இடம் பெற்றுள்ளார். ஆனால் நிர்மலாதேவியை ஜகன் மாதாவாகப் பேணி முதலில் வழிபட்ட பெருமை வஜிற்பூரைச் சேர்ந்த ஹரகுமார் வைத்தியரைச் சார்ந்ததாகும். ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகட்கு முன் முழுப் பைத்தியமெனப் பலரால் பரிகாசம் பண்ணப்பட்ட இப்பெரியார் வாக்கிலிருந்து அம்மையாரின் பிற் கால மகிமை குறித்து வெளிவந்த சொற்கள் இன்று தீர்க்கதரிசனம் உபதேசங்களாக அமைந்துள்ளன. தெய்வ சக்தி எந்த நேரத்தில், எவர் வாய் மூலம் பேசும் என்பதைப் புத்தி தத்துவங் கொண்டு நாம் நிர்ணயிக்க முடியாது.

அம்மையார் தமது வாழ்க்கையால் பக்தி மார்க்கத்தை விளக்குகிறார். ஆனால், அவரது உப தேச மொழிகளில் தத்துவ ஞானப் புலமையைக் காண்கிறோம். இரண்டையும் பிணைத்துத் துருவி ஆராயும் போது பரபக்தியும் ஞானமும் வேறல்ல,

இரண்டும் ஒன்றே என்ற உண்மையை உணர்கின் ளேம். உள்ள பொருள் ஒன்று, இரண்டா, அல்லது மூன்று என்ற வாதப்போர் அம்மையார் முன்னிலை யில் தலைகாட்டுவது கிடையாது.

அம்மையார் கைலையிலிருந்து கன்னியா குமரி வரைக்கும் யாத்திரை செய்துள்ளார். தென்னுட் டில் யாத்திரை ஒருதரந்தான்; அதுவும் ஸ்ரீ ரமண மூர்த்தியின் சமாதிக்குமுன் கட்டப்பட்ட தியான மண்டபத்திற்கு அத்திவாரக் கல்நாட்டும் பணிக் கெனத் திருவண்ணுமலைக்கு வந்த தொடர்பிலாகும்.

அம்மையாரின் தலைமை ஆச்சிரமம் காசியில் அமைந்துள்ளது. ஆனுல், அவர் அதில் நிரந்தர மாய்த் தங்குவது கிடையாது. கல்கத்தா, பம் பாய், பூனு, புதுடில்லி, டேராடொன் முதலிய பல பட்டனங்களில் அவர் தங்கிப் பக்த கோடிகட் குத் தரிசனம் கொடுப்பதற்காகக் கிளை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. எனவே, தேவியார் சதா சுற்றிக் கொண்டே வாழ்கிருர். இந்த முறையால், பல கோடிக் கணக்கான மக்கள், ஏழைகள், எளிய வர்கள், பிரயாணச் செலவுக்குப் பணவசதியற்ற வர்கள், அவரது திவ்ய முக தரிசனம் பெறும் பாக்கி யத்தை அடைகிருர்கள். அவர்கள் எல்லோருக் கும் தாம் ஓர் குழந்தையென்ற பாவனையில் நடந்து கொள்கிருர். கல்லூரி மாணவர்களைக்கூட அவர் 'அப்பா' (Baba) எனவே அழைக்கிருர்.

இந்துமத தர்மத்தின் மகிமையை உலகுக்கு பிர காசிக்கச் செய்ய இப் புண்ணியவதி செய்து வரும் சேவையை விபரமாகக்கூற இக்கட்டுரை இடந்த ராது. வெளிப்பகட்டற்ற, அமைதியான, அடக்க மான சிவத்தொண்டு இது; ஈடும் இணையும் அற் றது. இதுவரையில் அவர் ஒருவருக்காவது சந்நியா

சங் கொடுத்ததேயில்லை. குடும்ப வாழ்விலிருந்து கொண்டே நிஷ்காமியமாகக் கடமைகளைச் செய்து படிப்படியாகப் பற்றற்ற நிலையையடைந்து பரம பதத்தைச் சேரமுடியும் என்பதையே வற்புறுத்துகிறார்.

1959-ம் ஆண்டு ஆவணி மாசம் 24-ந் தேதி மாலை புதுடில்லியிலுள்ள அம்மையாரது ஆச்சிரமத்தில் அவரது தரிசனங்கோரி வந்த பிரதமர் நேருவின் கழுத்தில் தமது ஆசிக்கு அறிகுறியாக அன்னை உருத்திராக்ஷ மாலையும் துளசி மாலையும் அணிந்த காட்சி, இந்துக்களின் தெய்வங்களான சிவனும் விஷ்ணுவும் ஒன்றே என்பதற்கு இது ஓர் விளக்கமாக அமைந்தது. இந்து மத சம்பிரதாயத்திலுள்ள யாகம், மந்திர ஜெபம், தீர்த்த யாத்திரை முதலிய வழக்கங்களைத் தயங்காமல் கண்டிக்கும்பிரதமருக்கு அம்மையாரின் முறை வியப்பைக் கொடுத்திருக்கலாம். தேவியாரின் சித்தத்தை யார் அறிவார்? அவர் கட்டளைப்படி இரண்டு பக்கம் நிறைய எழுதப்பட்டு பிரதமர் கையில் நேரே கொடுக்கப்பட்ட கடிதத்திலடங்கிய விஷயங்கள் இன்னும் பரம ரகசியமாயுள்ளன. புதுடில்லிக்கு அம்மையார் விஜயஞ் செய்த போது, பிரதமரின் அழைப்புக்கிணங்க அவரது வாசஸ்தானத்திற்குச் சென்று ஆசி கொடுத்ததாக அறிகின்றோம்.

வியாச முனிவரின் முக்கிய சீடரும், பிரபல தெய்வத்தபோதனருமானசூதமுனிவர், கோமதிநதி தீரத்திலிருந்த தபோவனமான நைமிசாரணியத்தில், அவர் காலத்தில் அங்கு வசித்த இருடிகளுக்கு நாற்பது இலக்ஷத்தெண்ணாயிரம் கிரந்தமுடைய பதினெண் புராணங்களையும் உபதேசித்த கதையை பல நூல்களிற் படித்துள்ளோம். இவ்விதம் தனிச் சிறப்புற்ற அப்புண்ணிய பூமியில் அப்புராணங்

களில் ஒன்றினது பிரதிதானும் அங்கு இருக்க வில்லை. அங்கு குடியிருக்கும் மக்கள் எவராவது அவற்றைப்பற்றிக் கேள்விப்பட்டதுமில்லை. இப் பெருங் குறையை நிவர்த்திசெய்யத் திருவுளங் கொண்ட அம்மையார் அங்கு 1960-ம் ஆண்டில் விஜயஞ் செய்த உடனே கோமதி நதிக்கரையில் புராண மடமொன்றைக் கட்டுவித்துள்ளார்கள். அதில் இப்போது ஒழுங்காகப் புராணங்களைப் படனஞ் செய்ய ஓர் பண்டிதரும் நியமிக்கப்பட்டுள்ளார். இத்தொடர்பில் தேவியார் அடிக்கடி விஜயஞ் செய்யுங் காரணத்தால் அந்தப் பழைய சோத்திரம் பல நூற்றாண்டுகளாக இழந்திருந்த மகிமையை மறுபடியும் பெற்றுள்ளது.

இங்கு தரப்பட்ட இரு நிகழ்ச்சிகளிலிருந்து, பாரத நாட்டின் பழம் பெருமையை நிலைநாட்ட அம்மையார் அடக்கமாகச் செய்துவரும் அத்யாத்ம சேவைகளின் அளப்பருந்தன்மை தெற்றெனவிளங்கும்.

(ஆத்மஜோதியிலிருந்து தொகுக்கப்பட்டது)

அப்பைய தீட்சிதரின் மறு அவதாரமான

# இமயஜோதி சிவானந்தர்

இருபதாம் நூற்றுண்டில் உலகப் பிரசித்தம் பெற்ற மகான்களுள், சுவாமி சிவானந்தரும் ஒரு வர். அவர் புகழ் இன்று பொதுவுடைமைக் கொடி பறக்கும் மாஸ்கோவில் பேசப்படுவதைப் போலவே தனியுடைமைக் கொள்கைக்குத் தலைநகரான நியூ யார்க்கிலும் பேசப்படுகிறது. அம்மட்டோ! இவ் விரு கொள்கைகளுக்கிடையே சிக்கியுள்ள மேற்கே ஜேர்மனி, கிழக்கே ஜப்பான், தெற்கே ஆபிரிக்க, அமெரிக்கா முதலாய தேசங்களிலும் அவர்களது உபதேசங்களடங்கிய நூல்கள் பல்லாயிரக் கணக் கான மக்களுக்கு மனச்சாந்தியளிக்கின்றன. இது வெறும் புகழ்ச்சியுரையல்ல; எமது உலக யாத்திரை யின்போது நேரில் கண்டறிந்த உண்மை.

எழுத்தாணிப் பணியால் உலகின் நன்றிக்கு என்றென்றைக்கும் உரித்தானவர் வியாசமுனிவர். அவர்செய்த அருந் தொண்டை இந்துக்களுக்கு நினைவுறுத்தும் பொருட்டு கி. பி. பதினும் நூற் ருண்டில் பரந்து விரிந்த எழுத்துப் பணியில் ஈடுபட் டவர் அப்பைய தீட்சிதர். அவர் சிவானுபூதிச் செல்வராயும் வேதாந்த கேசரியாகவும் விளங்கிய தோடு, சித்தாந்த சரபமாயும் சிறப்புற்று அக்கா லத்தில் நடந்த சைவ-வைஷ்ணவச் சண்டைகளைத் தவிர்த்துச் சமரசங் கண்டவர். இந்த அரிய சிவபக் தர் அருளிய ''சதுர மதசார சங்கிரகத்தின்'' அருங் கருத்துக்களை தாயுமானவர் பாடல்களிலும், இராம லிங்க சுவாமிகள் அருளிய 'மகாதேவ மாலை'யிலும் பரக்கக் காணலாம், அப்பைய தீட்சிதரின் சமரசப் பணி இந்தியாவின் எல்லைகட்குள் அடங்கிவிட்டது.

இதனால், அவரின் பதின்மூன்றாவது சந்ததியில் தோன்றிய சிவானந்தரது சர்வமத சமரசப்பணி உலகமொழியான ஆங்கிலத்தில் உலகெங்கும் பரவி யுள்ளது. அப்பையரே தாம் ஆரம்பித்த சமரசப் பணியைப் பூர்த்திசெய்ய, சர்வசித்தாண்டு (1887) ஆவணி மாசத்தில் பரணி நட்சத்திரம் பொருந்திய சுபவேளையில், தாமிரவருணி ஆற்றோரத்திலுள்ள பத்தமடைக் கிராமத்தில், பார்வதி கர்ப்பத்தில் குப்புசுவாமியாகத் தோன்றியிருக்கலாம் என்று பலர் கருதுகின்றனர். இதில் வியப்பொன்றும் இல்லை. பாரத நாட்டின் பரமார்த்திகப் பண்பு, காலத்துக்குக் காலம் மறுமலர்ச்சி பெற்று உலகின் கவனத்தை ஈர்ப்பது இவ்வித மகான்களின் அவ தார மகிமை காரணமாகவேயாம்.

சுவாமி சிவானந்தர் உடல் கொண்டு உலாவிய காலம் மொத்தம் எழுபத்தாறு வருஷங்களாகும். அதில் அரைவாசிக்கு மேலான காலம் அத்யாத்ம சேவையில் கழிந்துள்ளது. எஞ்சியதில் பத்தாண்டு கள் மலாயாவில் வைத்திய சேவையிற் சென்றது. அந்தப் பத்தாண்டுகளை அவரது நிஷ்காமிய சேவை அதிகாரமெனன அழைக்கலாம். மருத்துவனாகி மக் கள் உடற்பிணி நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த டாக்டர் குப்புசுவாமி, திடீரென அதைத் துறந்து, துன்பப் பிறவிநோய் துடைக்கும் மருந்தினைத் தேடி நமக்கு அளிக்க முன்வந்தது அற்புதமான முறையி லாகும். ஒன்றே குலமும், ஒருவனே கடவுளும் என்றே நமக்கு நன்குணர்த்தித் தெய்வீக வாழ்வில் புகுமாறு வழிகாட்டியுள்ளார். அவரது உபதேசத் தின் சாரத்தைச் சுருக்கமாகக் கூறின்: 'உள்ளத்தே சிவத்தை இருத்தி உலகிலே ஆருயிர்ப்பணி செய்து வாழுங்கள்' என்று சொல்லலாம்.

சுவாமி சிவானந்தர் வாழ்வில் முக்கிய இடம் பெறுவது அவர் 1950-ம் ஆண்டில் செய்த திக்விஜ

யம்.. இதில் இலங்கையும் இடம்பெற்றது இங்குள்ள இந்துக்கள் செய்துள்ள புண்ணியத்தின் பயனுகவாகும். 12-10-50அன்று, கொழும்பில் மக்கள் கண்ட காட்சிகள் அதற்கு முன்னே, பின்னே கண்டோ, கேட்டோ இராதவை. நமது சமய சரித்திரத்தில் பொன்னெழுத்தில் பொறிக்கப்பட வேண்டிய தினம் அது. 13-10-50 காலை வெளி வந்த 'வீரகேசரி'யைப் பார்த்தால் எல்லா விபரங்களும் அறியலாம். சுவாமிகளை இலங்கைக்கு விஜயஞ் செய்யுமாறு விண்ணப்பஞ் செய்து, அவரை இங்கே வரவேற்று உபசரித்த குழுவின் காரியதரிசியாகப் பணியாற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அப்பெரியாரின் நல்லாசியினுலும், தெய்வத் திருவருளினுலுமாகும்.

கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் இயற்றிய ''பாரத சக்தி மகா காவிய'த்தில், உத்தம குருவின் இலக்கணத்தைப் பின்வருமாறு விளக்குகிறுர்:

''மூடமந்திரமற்றவன்; மூடரின்புகழைத்
தேடுந் தந்திரமற்றவன், சீடரைஆள
நாடு நாடகமற்றவன்; அனைவரு நன்ருய்க்
கூடி ஒன்றினைக் குலவிடக் கூட்டிடுங்குரவன்''

''குருவெனத்தனை மாந்தர்கள் கும்பிடச்சகியான்
அருமையன் பருஞ்சீட ரென்ரு திக்கஞ்செலுத்தின்
கருமிபோலத்தன் சக்தியைக் கரந்துளோகாவான்
வருமவர்க்கதை வனகயுற வழங்கிடும் வள்ளல்''

இந்த அருமையான இலக்கணத்திற்கு ஓர் இணையற்ற எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் சுவாமி சிவானந்தர். அவரது அடிச் சுவட்டைப் பின்பற்றி, இன்று தெய்வநெறிக்கோர் மலைவிளக்காக உலகுக்கு வழிகாட்டுகிறுர் அவரது உத்தம சீடரான ஸ்ரீ சுவாமி சிதானந்த சரஸ்வதி.

இப்பெரியார்களைப்போல் சமயப் பணி செய்ய, யோகம் பயிற்ற முன்வரும் சாதுக்கள், சன்னியாசிகள் சதாநினைவில் வைத்திருக்கும் பொருட்டு சுவாமி சிவானந்தரின் உபதேசங்களிலிருந்து ஒரு மணிவாசகத்தை மாத்திரம் கீழே தருகின்றோம்;—

''சமூகத்திற்குச் சேவை செய்யும்பொழுது ஜாக்கிரதையாக இருக்கவும். மேடைப் பிரசங்கம், சமூகசேவை முதலிய எல்லாவிதச் சுயநலமின்றிய சேவைகளும், பெயரையும், புகழையும் தரும். ஆனால் இந்தப் பெயரும், புகழும் முளையிலே நம்மைக் கெடுத்துவிடும். அவைகளைப் பெரிதாக எண்ணாதீர்கள்; விஷமெனக் கருதுங்கள். மிகவும் பணிவாக நடந்து கொள்ளுங்கள். உங்களது சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்திலும் இந்த உயர்குணம் செறிந்து விளங்கவேண்டும். பெயர், புகழென்ற மதுவால் பலர் மயங்கி மதிகெட்டுப் போயினர். அவர்களது முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது. ஆதலால்தான் நான் உங்களை மிகவும் ஜாக்கிரதையுடன் இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்''.

('வீரகேசரி'யிலிருந்து தொகுக்கப்பட்டது.)

# கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

## ஆற்றிய ஒப்பில்லாத் தமிழ்ப்பணி

### பாருய்ய வழிகாட்டும் "பாரத சக்தி மகா காவியம்" தரும் தனிச் சிறப்பு

"எல்லாரும் அமர நிலையெய்து நன்முறையை இந்தியா உலகிற்கு அளிக்கும்", எனத் தீர்க்கதரிசனங் கூறிய கவிக்குயில் சுப்பிரமணிய பாரதியார், உறங்கியிருந்த தமிழனைத் தட்டி எழுப்பி, உயிர்க் கனலை மூட்டித் தமிழன்னைக்கு,

"ஈன்றவளே பள்ளியெழுந்தருளாயே!"

என அறை கூவினார்.

பல ஆண்டுகளாகப் பண்டிதர் கையிற் சிக்கி, எதுகைமோனை விலங்குகளால் பிணிக்கப்பட்டு, நடை மெலிந்து வருந்திய தமிழன்னைக்கு விடுதலை அளித்து அவளைத் தமது எளிய இனிய கீதங்கள் பாடல்களாகிய பல்லக்கில் ஏற்றி, பாமரரும் பாவலரும் பார்த்து மகிழ ஊர்வலம் வரச்செய்த பெருமை அந்த வரகவிக்குரியதாகும்.

வீராவேசத் திருவுடன் பொலிந்த பாரதியார், கால வெள்ளத்தில் ஒதுங்கிய பின்னர், அவர் ஆரம்பித்த தமிழ்ப் பணியைச் சென்ற ஐம்பது ஆண்டுகளாக ஆர்வத்துடன் தொடர்ந்து செய்தவர் கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் ஒருவரேயாம்.

*"தமிழா எழுந்திரு! பழங்கதை பேசாதே; தமிழோசை உலகமெல்லாம் பரவவேண்டும். மேல் நாட்டு நல்லறிஞர் சாஸ்திரமெல்லாம் எம் தாய் மொழியில் வரவேண்டும்" என்று பாரதியார் போட்ட கர்ச்சனையைத் தமக்கே தனிமுறையில்*

இடப்பட்ட கட்டளைபோற் பேணிப் பணிசெய்துள்ளார் ஸ்ரீ சுத்தானந்தர். "பைந்தமிழ்ச் சோலையில் ஒரு தோட்டக்காரனுவதே என் வாழ்க்கைப்பணி" என அவர் செய்த சத்தியத்தைக் காப்பாற்றிவிட்டார். அவர் இயற்றிய தமிழ்ப் பூஞ்சோலைகள் பல. அவையெல்லாம் அவரது ஆத்ம சக்தியிலிருந்து பெருகிய அருளூற்றில் வளர்க்கப்பட்ட அத்யாத்ம கற்பகச் சோலைகளாகும். தமிழன் ஒவ்வொருவனும் தனது தாய்மொழியைப்பற்றியும் தன் இனத்தின் இனத்தாரின் நாகரிகத்தின் உன்னத நிலையைப் பற்றியும் அளப்பரும் பெருமை கொள்ளக்கூடிய விதத்தில் இந்த நூல்கள் பழமையும் புதுமையுங் கலந்த முறையில் மக்களின் உடல், மனம், உயிர், மூன்றிற்கும் நன்மை பயக்கும் தன்மையுடன் மிளிர்கின்றன.

நானூற்றிருபத்தேழு பக்கங்கள் கொண்ட "யோகசித்தி" யென்னும் அரிய பெரிய நூலை ஆறு வாரங்களுள் எழுதி முடித்த சுத்தானந்தரின் தவசக்தியையும் சித்தியையுங் கண்ட இராஜாஜி, "சுத்தானந்தரைப் போன்று அற்புத நூல்களை யார் செய்ய முடியும்? ஒரு நாளைக்கு ஒரு நூல் எழுதவல்லவர்" எனப் பாராட்டியுள்ளார். இது வெறும் புகழ்ச்சியுரையல்ல; முழுதும் உண்மை. அடிகள் இதுவரையில் தமிழில் எழுதிக்குவித்த நூல்கள் ஐஞ்ஞூற்றுக்கு மேலிருக்கும். அவற்றைவிட ஆங்கிலம், பிரெஞ்சு, தெலுங்கு முதலாய மொழிகளிலும் பல நூல்கள், கவிதைகள் இயற்றியுள்ளார். எல்லாஞ் சேர்ந்தால் ஒரு வாசிகசாலைக்குப் போதுமானவையெனலாம். வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து இம்மண்ணுலகிலேயே விண்ணுலகின்பத்தை நுகர விரும்புவோர் "தியானமாலை", "இன்பமாலை", "யோகசித்தி", ஆகிய மூன்று நூல்களையும் படித்துப் பயன்பெறலாம். சைவ சித்தாந்த சாஸ்த்திர நுட்பங்களை விரி

வுரையாளரின் உதவியின்றிக் கற்றறிய விரும்பு வோர்க்கு 'சிவஞானதீபம்', 'திருமந்திர விளக்கம்' போன்ற நூல்கள் உள்ளன. தமிழ் இலக்கியச் சுவையுள்ளோர்க்கு 'திருக்குறளின்பம்', 'சிலம்புச் செல்வம்' முதலியன கிடைக்கும். ஸ்ரீராஜம் ஐயர் எழுதிய 'கமலாம்பாள் சரித்திரம்', ஸ்ரீ மாதவய்யர் வரைந்த 'பத்மாவதி சரித்திரம்' போன்ற உயர்ந்த நடை நாவல்களைப் படிக்க ஆர்வமுடையோர்க்கு 'அன்பு நிலையம்', 'இதுதான் உலகம்' 'கலைக்கோயில்' முதலாய நவீனங்கள் உள்ளன. இசைத்தமிழ் அபிமானிகட்கு கீர்த்தனாஞ்சலியும், நாடகக் கலைவிளக்கமாக நர்த்தனாஞ்சலியும் உள்ளன. மகான்களின் வரலாறுகளையும் உபதேசங்களையும் அடக்கிய நூல்களோ அளப்பில.

இவையெல்லாவற்றிற்கும் முதன்மையாகவும், அவற்றுள் பலவற்றின் சாரத்தை தன்னுள் அடக்கியதாகவும் விளங்குவது பாரதசக்தி மகாகாவியமாகும். காவிரி முக்கொம்பில் அரும்பி, வீரவிளக்கு வ. வே. சு. ஐயரால் நிறுவப்பட்ட சேரமாதேவி குருகுலத்தில் மலர்ந்து, அருணையில் ஸ்ரீரமணர் அருளால் காய்த்துப், புதுவை அரவிந்தாச்சிரமத்தில் கனிந்து அமரத்தன்மை பெற்றுள்ள இக்காவியம், ஐம்பதினாயிரம் வரிகளுடைத்து. மகாகாவிய நடையில் எழுதப்பெற்ற இந்த அற்புதமான இலக்கிய ரசனையைச் ஸ்ரீ சுத்தானந்தரின் ஆயுட்காவியமென அழைப்பதே பொருத்தமுடைத்து. அவரது பத்தொன்பதாம் வயதில் ஆரம்பிக்கப்பட்ட இக்காவியம் பூர்த்தியாகி அச்சேறியது, 1948-ம் ஆண்டில் நிகழ்ந்த அவரது ஐம்பத்தோராவது வயது நிறைவு தினத்திலாகும்.

"தமிழர் செய்த தவப்பயனாகவே தாங்கள் தோன்றியிருப்பதாக யான் கருதுகிறேன். தாங்

களும் தவம் புரிகிறீர்கள். ''தவஞ் செய்த தவம்'' பெரும் பயனை உண்டாக்குமென்பதில் தடையில்லை''யெனப் பல வருஷங்கட்கு முன் டாக்டர். உ. வே. சுவாமிநாதையர் அவர்கள் சுத்தானந்தப் பெரியாரை நோக்கிக் கூறிய வாழ்த்துரையில் அடங்கிய தீர்க்கதரிசனத்தை உணரவேண்டின், ''பாரத சக்தி மகாகாவிய''த்தை ஒருமுறை பார்த்தாற் போதும். நாகரிக ஏணியின் கீழ்ப்படிகள் சிலவற்றைத் தாண்டியதும் மனிதனின் உள்ளத்தில் உலகு, உயிர், இறை என்ற மூன்றையும் பற்றிய சிந்தனை உதித்திருக்க வேண்டும். அந்தநாள் தொடக்கம் மனித சமுதாயம் தேடித் தந்துள்ள அத்யாத்ம உண்மைகள் சகலதும் இக்காவியத்தில் நன்கு விபரிக்கப்பட்டுள்ளன. உலகின் சமய வரலாற்றில் காணக்கிடக்கும் எந்த நல்ல விஷயமாவது இதில் வரத் தவறவில்லை. வேத கால இருடிகள் அருளிய தத்துவங்களுடன் ஆரம்பித்து, இருபதாம் நூற்றுண்டில் யாம் கண்ணுரக் கண்ட காந்தீயத்துடன் முடிவடையும் இக்காவியத்தில், சைவம், வைணவம், சாக்தம் பௌத்தம், ஜைனம், கிறிஸ்தவம், இஸ்லாம், சௌராஷ்டிரம், சீக்கியம் முதலாய எல்லாச் சமய போதனைகளும் ஒரே தன்மையில் பாரபட்சமின்றிப் படலம் படலமாக விளக்கப்பட்டுள்ளன. சத்திய சுத்த சன்மார்க்கமே அடிகளின் உன்னத லட்சியம். எனவே, நூலின் இறுதிப் பாகத்தில், பதுமலர்ச்சிப் படலம் என்ற தலைப்பின்கீழ் உலகில் இனி நிலவப் போகும் சமய வாழ்வை,

''அந்த மதம் இந்த மதம் என்னுதீர்கள்;
அச்சாதி இச்சாதி என்னுதீர்கள்;
விந்தையுறும் புது மதங்கள் விளைக்காதீர்கள்;
வேற்றுமைசெய் விதிகளையே வளர்க்காதீர்கள்;
வந்திருந்து செல்வாழ்வின் அரங்கந்தன்னில்
வாழ்வாங்கு வாழ்ந்திடுவோம் இயல்பாய்நாளும்

சந்ததமும் சுத்தசுதந்திர சமத்வம்
தருகின்ற சத்திய சன்மார்க்கம் ஒன்றே".

"மனிதகுல மொன்றேநங் குலமதாகும்,
மாசற்ற மனச்சாட்சி சுருதியாகும்,
தனியகந்தை யற்ற சரி சமானராகச்
சன்மார்க்கப் பொதுவெளியிற் சார்ந்தெல்லாரும்,
கனிகுலுங்கும் கற்பகம்போற் கருணை தாங்கிக்
காசினிக்கு நலஞ்செய்யுங் கடமைகாப்போம்,
அனவரதம் தியானத்தால் அன்பேயாகி
ஆருயிரைக் கடவுளுக்கே அருச்சிப்போமே".

என மிக அழகாக அமைத்துள்ளார். ஒவ்வொரு ஊரிலும் ஓர் அழகான தோட்டத்தின் மத்தியில் தியான மந்திரம் எழுப்பி அங்கே அன்பர்கள் சாதி மத வேறுபாடுகள் எதுவுமின்றி ஆன்மநேய உணர்ச்சியுடன் கூடி. அவரவர் உள்ளத்தையே கோயிலாகவும் கொண்டு தியானிக்க வேண்டுமென்பதே அவரது கோரிக்கை.

இன்று நாம் காணும் பலபல அரசியற் கிளற்சிகளும், பொருளாதாரத் திட்டங்களும், சமூகக் கொந்தளிப்புகளும், சமயப் பிரச்சினைகளும் காலதேவி ஓர் புதிய யுகத்தின் உதயத்தை நோக்கிச் செய்யும் முன்னேற்ற யாத்திரையின் பேரொலியென்பதே சுத்தானந்தரின் கருத்து. முடியரசுகள் குடியரசுகளாக மாறியும், தனியுடைமை போய் உலகம் பொதுவுடைமையைப் பேணியும், போட்டி பொறாமைப் பேயும், போர் மோகமும் மாந்தர் உள்ளத்திலிருந்து அகன்றும், இறுதியில் அருளுடைமையே உலகை ஆளும் என்பது அவரது கனவு. இக்கனவு தமது ஆயுட்காலத்திலேயே நனவாகிவிடுமென அவர் கூறவில்லை. "எந்நாளில் மனித சக்தி தெய்வ சக்தியென வளர்ந்து பொலிவதாமோ, அந்

நாளே யான்வாழு நன்னுளாம், சுத்த சக்தி யருள் கமாதோ'' எனத் திருவருள் மேல் அப்பொறுப்பை அடக்கமாய் விட்டுள்ளார்.

சத்தியராசனின் மகனுன சுத்தனே இனிவரும் சத்திய யுகத்தின் இலட்சிய மன்னனுகக் கொண்டு, பாரத சக்தி மகாகாவியம் உலகுக்குபதேசிக்கும் உண்மை இதுவே. மனித சமுதாயத்தின் உண்மை வரலாருகவும், மனிதுான்மாவின் தெய்வ விளக்க மாகவும் பொருந்திக் கவிக்குக் கவியாகவும், கலைக்கு கலையாகவும், வாழ்விற்கு ஓர் ஒப்பற்ற வழிகாட்டி யாகவும், பூரண வாழ்வைத்தரும் அமரானந்த அரு ளூற்ருகவும் விளங்கும் இக்காவியத்தைப் படித்து, பிறரும் படித்துப் பயன்பெறுமாறு தூண்டுதல் ஒவ் வொரு தமிழனின் கடமையாகும். அதிலடங்கிய அருங்கருத்துக்களைப் பிறமொழிகளிலும் பரவச் செய்தல் உயர்ந்த உலக சேவையாகும்.

('தினகரன்' பத்திரிகையிலிருந்து தொகுக்கப்பட்டது)

ஜெகமுழுவதும் சாந்தி நிலவ உழைத்துவரும் தத்துவஞானி:

# கிருஷ்ணமூர்த்தி

திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் உபந்நியாசத்தைக் கேட்பதற்காக கொழும்பு நகரசபை மண்டபத்தில் ஆயிரக்கணக்காகக் குழுமியிருந்த மக்களின் உள்ளத்தில், சிறிது காலமாக மறைந்து கிடந்த நல்லுணர்ச்சிகள் பல மறுபடியும் தோன்றியிருத்தல் வேண்டும். சாந்தி நிலையடைந்த அவரது தூய உள்ளத்தில் உதித்து, உலகமொழியான ஆங்கிலத்தைக் கருவியாகக் கொண்டு வெளிவந்த சொற்கள் அற்புதமான சிற்சக்திக் கதிர்களைப் பரப்பின என்பதற்கு அப்பெரிய கூட்டத்தில் நிலவிய அமைதியும், அடக்கமும், பணிவும் போதிய சான்றுகளாகும். அடுத்த பிரசங்கத்தைத் தவறவிடப்படாதென்று ஆர்வத்துடன் கூறிக்கொண்டு ஆண்களும் பெண்களும் மண்டபத்தைவிட்டு வெளிச் சென்ற காட்சி, அன்றைய (13-1-57) பிரசங்கம் அவர்களின் உள்ளத்தைத் தொடர்ந்து விட்டதென்பதற்கு அறிகுறியாக இருந்தது.

மூன்றாண்டுகளாக இலங்கையிலுள்ள அபிமானிகள் சிலர் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியின் பயனாகவே கிருஷ்ணமூர்த்தி அவர்களை மூன்றாம் முறையாகத் தரிசிக்கும், அவரின் ஞானோபதேசத்தைக் கேட்கும், பாக்கியத்தைப் பெற்றுள்ளது கொழும்பு நகரம். குறித்த கால எல்லைக்குள், இன்றுபோல் நாட்டின் அமைதிநிலை, ஒற்றுமை உணர்ச்சி சீர்கெட்டிருந்த காலம் பிறிதொன்றில்லையெனலாம். சாதி, மத, மொழிப் பிரச்சனைகள் காரணமாக பொறாமையும், ஆத்திரமும், பரஸ்பர

அவநம்பிக்கையும், பீதியும் மலிந்துள்ள இவ்வேளை யில், இப்பெரியார் வருகை சமய சஞ்சீவிபோல் அமைந்துவிட்டது.

1895-ம் ஆண்டில், சென்னை மாகாணத்தில் பிறந்த கிருஷ்ணமூர்த்தி அவர்களின் சாதகம் சோதிட சாஸ்திரத்தில் ஆர்வங் கொண்டவர்கட்கு அரும்விருந்தாகும். அதில் ராமகிருஷ்ணர் விவே கானந்தா, ரமணர், அரவிந்தர், முதலான மகாத் மாக்களின் சாதகங்களில் காணப்படும் யோகங் களில், உள்ள சிறந்த யோகங்கள் செறிந்துள்ளன. பிரம்மஞான சபையைச் சேர்ந்த ஐரோப்பிய சோ திட விற்பன்னர் சிலர் அவரது சாதகத்தை இற் றைக்கு நாற்பதைந்து வருஷங்கட்குமுன் ஆராய்ச் சிக்கு எடுத்ததுண்டு. அவர்கள் கண்ட முடிவின் படி, கும்ப அயன காலத்தில் உதயமாகப் போகும் புதிய சகாப்தத்தின் சமய நிலை குறித்து, இன்றைய மக்களுக்கு வாழ்க்கையாலும், வாக்காலும் விளக் கம் தரும் பொருட்டே கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கும்ப லக்கினத்தில் தனுராசியில் இவ்விரு வீடு களும், தர்மாதிபதி கர்மாதிபதி ஆகிய இருவருடன் கூடியிருந்த ஞானகாரகனை வியாழபகவானின் சுப நோக்கைப் பெற்ற வேளையில், அவதாரஞ் செய் துள்ளனராம். இவற்றையெல்லாம் இப்பெரியார் முற்றிலும் வெறுப்பவர்; எனினும் வரலாற்றுத் தொடர்பில் இதைக் குறிப்பிட வேண்டியது எமது கடமையாகும்.

இவர் வளர்க்கப்பட்டவிதம், கல்வி கற்றமுறை உலகரட்சகராகத் தெரிவு செய்யப்பட்ட வரலாறு, ஏற்பட்ட வழக்கு, முதலானவையெல்லாம் விசித் திரமானவை; இந்தியப் பண்பாட்டிற்கு முற்றிலும் முரணானவையென அக்காலத்தில் சிலரால் கண்டிக் கப்பட்டவை. அன்னி பெஸன்ற் அம்மையாரும் அவரது சகாக்களும் அளித்த குரு பீடத்தையும்,

அதற்கெனக் கிடைத்த அரண்மனேயையும், நிறுவப் பட்ட சங்கத்தையும், சேகரித்துக் கொடுத்த கோடிக் கணக்கான செல்வத்தையும் புறக்கணித்து விட்டு, வாலிபனுன கிருஷ்ணமூர்த்தி தன்னந்தனி யாக வெளிவந்த சம்பவம், அக்காலத்தில் உலகெங் கும் கிளை பரப்பிப் புகழ்பெற்றிருந்த பிரம்மஞான சபை அங்கத்தவர்களிடையே பெரிய பரபரப்பை யும், ஏமாற்றத்தையும், மனக்குழப்பத்தையும் உண்டாக்கியது. ஆனல், இவரின் பிற்கால மகி மையைத் திவ்ய திருஷ்டி மூலம் கண்டு கொண்ட அன்னி பெஸன்ற் அம்மையாரின் தீர்க்கதரிசன வாக்கை இன்று எவர்தான் மறுக்கமுடியும்? மேலே குறிக்கப்பட்ட மகாதுறவே, கிருஷ்ணமூர்த்தி அவர் களின் ஞான வாழ்க்கையின் ஆரம்பமாகும். அத் தோடு, அவரது சகோதரனின் அகால மரணமும் தூண்டுகோலாக அமைந்துவிட்டதெனலாம். அவர் வாழ்வில் அனுபவித்த சோக நிகழ்ச்சி அதுவொன் றே.

உலக ரட்சகராகப் போற்றப்பட்ட ஒருவர் தாமாக விரும்பித் தம்மை உலகப்பிரஜையாக மாற் றிக்கொண்டது உலக சரித்திரத்தில் இதுவே முதன் முறையாகும். அதன்மேல் கிருஷ்ணமூர்த்தி தமது தாய்நாடு இந்தியாவென்பதை மறந்தார். உல கின் எந்த இடத்தில் வசித்தாலும் அந்த இடத் தைத் தமது சொந்த நாடாகவே பாவித்து வருகின் றூர். மனித சமுதாயம் முழுவதும் அவரது உற வினர். தாம் பெற்ற இன்பம் இத்தரணியும் பெற வேண்டுமென்பதே அவரது பேரவா. அதன் பொ ருட்டே தமது வாழ்நாள் முழுவதும் உலகத்தைச் சுற்றி யாத்திரை செய்கின்றூர்.

இவரின் கருத்துக்கள் புரட்சிகரமானவை. சமய வாழ்வு குறித்து, மக்கள் இதுகாறும் கொண்டுள்ள

கோட்பாடுகள் சகலத்தையும் மாற்ற வேண்டுமென் பதே அவரது குறிக்கோள். ''மூவாயிரத்து ஐந்நூறு வருஷங்களாகக் கிருஷ்ணரால் உபதேசித்த கீதையை மக்கள் படித்து வந்துள்ளார்கள். இந்தியாவில் தானும் பயன் கருதாப் பணியும் தெளிவுற்ற ஞானமும் பரவியுள்ளனவா? ஈராயிரத்து ஐந்நூறு வருஷங்களாக புத்தர் உபதேசித்த தம்மபதம் மக்கள் கையில் இருக்கின்றது அவர்கள் உள்ளத்தில் அஹிம்சையும் கருணையும் இருக்கின்றனவா? ஈராயிரம் வருஷங்களாக ஏசுநாதரின் போதனையடங்கிய விவிலிய நூல் நூற்றுக்கணக்கான மொழிகளில் கோடிக்கணக்கான பிரதிகள் வழங்கப்பட்டுள்ளன. அது போதித்த அன்பையும் தியாகத்தையும் காண முடியுமா? பதினன்கு நூற்றுண்டுகளாக குர்ஆன் ஓதப்படுகின்றது சகோதர நேயம் உலகில் பரவி விட்டதா? சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காகத் தோன்றிய சமயங்களெல்லாம் ஒன்ருேடொன்று சண்டையிட்டு, கொலை முதலாய பஞ்சமா பாதகங்களைத் தூண்டி, சத்தியத்தையே கொலை செய்து வருகின்றனவென யான் கூறுவதை நீங்கள் எவராவது உங்கள் இருதயத்தில் கை வைத்து மறுக்க முடியுமா?'' என்பவை போன்ற கேள்விகளை அவர் அடுக்கடுக்காய்ப் போடும்போது, எந்த இந்து, எந்த பௌத்தன், எந்த கிறிஸ்தவன், எந்த இஸ்லாமியன் வெட்கித் தலைகுனியாதிருக்க முடியும்.

''உண்மையான சமய வாழ்வானது மெய்ப்பொருளை நேரில் உணர்தலாகிய அநுபூதி வாழ்வாகும். மற்றவையெல்லாம் போலிச் சமயவாழ்வேயாம்'' என்பது இவர் அபிப்பிராயம். இன்று 'ஞானம்' என்னுஞ்சொல் பெரிதும் மன உலக அனுபவங்களையே குறிப்பதால், அந்தச் சொல்லை விலக்கி 'மெய்ஞ்ஞானம்' (Truth, Realiy) என்னும் பதத்தையே கையாளுகிருர்.

அவரின் முதலாவது பிரசங்க முடிவில் தமக்கு ஓர் 'சிங்கள பௌத்த' அன்பன் அனுப்பிய கேள்வியை வாசித்துவிட்டு, "உண்மையான பௌத்தன் ஒருவன் தன்னை எவ்விதம் 'சிங்களவன்' என அழைக்க முடியும்?" என்ற கேள்வியை எழுப்பி அருமையான விளக்கம் கொடுத்ததை அக்கூட்டத்தில் இருந்தவர்களில் எவர்தான் மறக்க முடியும்? தன்னை 'ஆங்கிலேயன்' என்றோ, 'அமெரிக்கன்' என்றோ அழைக்கிறவன் எவனாவது 'கிறிஸ்தவனாக' இருக்கவே முடியாது என வற்புறுத்திக் கூறினார். இன்றைய உலக நெருக்கடி தீர்ந்து, மனித சமுதாயம் சுமுகமாக வாழ வேண்டுமாயின், 'இலங்கைப் பிரச்சனை', இந்தியர் பிரச்சனை', 'நடுகிழக்கு ஆசியாப் பிரச்சனை' என்பவைபோன்ற சொற்றொடர்கள் மறைய வேண்டும். அவற்றின் இடத்தில் 'மனிதப் பிரச்சனை', 'உலகப் பிரச்சனை' என்ற சொற்றொடர்கள் வரவேண்டுமென்கிறார். மனிதன் மனிதனைப் பிறருடன் உறவு கொண்டு வாழப் பழகும் வரையில் உலகில் அமைதி வரப்போவதில்லையென்கிறார். அதற்கு வழி, ஆன்ம நேய ஒருமைப்பாடேயாம். மனிதன் விரும்பினாலுஞ்சரி, விரும்பாவிட்டாலுஞ் சரி, உலகம் ஒன்றாகப்போகுங் காலம் அண்மையில் உள்ளதெனவும், ஆசியாவென்றும். ஐரோப்பாவென்றும், மேற்கென்றும், கிழக்கென்றும் பிரித்துக் கூறும் வழக்கம் சீக்கிரம் மறையுமெனவும் அவர் கருதுகின்றார். நவீன விஞ்ஞான சாஸ்திரம் அதனைத் துரிதப்படுத்துகிறதென்கிறார். எனினும், அதன் வேகமானது உலகுக்கே நாசத்தைத் தேடா முறையில் காப்பாற்ற வேண்டியது தனி மனிதன் ஒவ்வொருவனின் பொறுப்பிலுள்ளது.

இவர் பிரசங்கம் செய்யும்போதும், அன்பர்களின் சந்தேகந் தீர்க்க விளக்கம் கொடுக்கும்போதும், தம்மைக் குருபீடத்தில் அமர்த்திக்கொண்டு

சபையில் இருப்பவர்களை மாணவர்களாகவோ, சீடர்களாகவோ கருதுவது கிடையாது. சத்திய சோதனையில் ஈடுபட்டுள்ள சகாக்களாகவே எல்லோரையும் பாவிக்கிறார். குருவென்ற பான்மையில் எவராவது தமக்கு மரியாதையோ, வணக்கமோ செலுத்த விரும்புவதை முற்றிலும் தவிர்க்கிறார். முதன்முறை இலங்கைக்கு விஜயஞ் செய்து விட்டுத் திரும்பும்போது, கொழும்புத் துறைமுகத்தில் சில அன்பர்கள் அவரது பாதங்களைத் தீண்ட எத்தனித்தபோது அவர் அதைத் தடுத்த விதம் என்றும் மறக்கமுடியாக் காட்சியாகும்.

மார்க்கம், நெறி, பாதை என்ற பதங்களை இப் பெரியார் புறக்கணித்துப் பேசியபோதிலும், அவரது உபதேசங்களின் சாரத்தை தியான மார்க்கமெனவே அழைக்க விரும்புகின்றோம். அதாவது, சுத்த சமரச சத்திய யோக நெறியென்போம். என் தெய்வம் உன் தெய்வமெனச் சமய கோடிகளெல்லாம் சண்டையிட்டு வழக்குத் தொடரும் மெய்ப் பொருளை அனுபூதியில் உணர்வதற்கு, சமயங் கடந்த, சமரஸ மோன நிலையுற்ற, பரிசுத்த மனமொன்றே கருவியாக வேண்டற்பாலது என அவர் வற்புறுத்துவதைக் கேட்கும்போது, ரமண மஹரிஷிகளின் ''ஐயே அதி சுலபம் ஆத்மவித்தை'' என்னும் அரிய பாடலே நினைவுக்கு வருவதுண்டு. ''அநுபூதி எளிது; ஆனால் அதைப் பிறருக்கு விளக்குவதுதான் கஷ்டம்'' எனக் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தமது இரண்டாவது பிரசங்கத்தின் முடிவில் கூறியதை வாசகர்கட்கு நினைவூட்ட விரும்புகின்றோம். மேலும், அவரிடம் சமர்ப்பிக்கப்படும் கேள்விகளுக்கு அவர் அளிக்கும் பதில்களெல்லாம்,

> **"தன்னையறித லின்றிப் பின்னை ஏதறிகிலென்?**
> **தன்னையறிந்திடிற் பின் என்ன உளதறிய?"**

என்னும் ரமணர் மணிவாக்கின் விரிவுரையையே காண்கின்றோம். ரமணரைப் போலவே கிருஷ்ண மூர்த்தியும் 'குரு' என்னும் பட்டத்தையோ பதவி யையோ ஏற்றுக்கொள்ளாதவர். முந்தியவர் தமி ழில் கூறியவற்றை பிறமொழிகளில் விளக்கும் போது மொழி பெயர்ப்பாளர்கள் தங்கள் சொந்தக் கருத்துக்களையும் புகுத்திவிடக்கூடும். ஆனால், கிருஷ் ணமூர்த்தியின் விஷயத்தில் அவ்வித தப்பான அபிப் பிராயத்திற்கு இடமே வராது. ஏனெனில் சொந்த அனுபூதியில் பெற்ற உண்மைகளை அவரே விளக்கு கிறார் உலகு முழுவதற்கும். ஆங்கில மொழியில் அவருக்குள்ள ஆழ்ந்த அறிவும் பேச்சு வன்மையும் அவரது அருந்தொண்டிற்கு ஓர் தனிச் சிறப்பைக் கொடுக்கின்றன. செக முழுவதும் சாந்தி நிலைய டைய வேண்டுமென்பதையே வாழ்வின் நோக்கா கக் கொண்டு அயராதுழைத்து வரும் இப்பெரியார் இன்னும் பல ஆண்டுகள் பூரண சுகத்துடன் வாழு மாறு எல்லாம் வல்ல பரம்பொருளை மனமார வாழ்த்துவோமாக!

(வீரகேசரியிலிருந்து தொகுக்கப்பட்டது)

யாழ்ப்பாணம்:

# ஸ்ரீ பொன்னப்ப சுவாமிகள்

பங்குனியானது காரைக்காலம்மையார் முதலாய ஐந்து சைவப் பெருமக்களின் குருபூசைத் தினங்களையும், வைஷ்ணவ சமயத்தொடர்பில் ஸ்ரீ ரங்கநாச்சியார் முதலாய ஆறு ஆசாரியார்கள், ஆழ்வார்களின் நட்சத்திரங்களையும் கொண்ட மாசமாகும். இலங்கை வாழ் இந்துக்களைப் பொறுத்தமட்டில், பொன்னப்பசுவாமி, நவநாதசித்தர், பரமகுருசாமி, குழந்தை வேற்சுவாமி ஆகிய நால்வரின் குருபூசைத் தினங்களும் வந்து பொருந்துங் காரணத்தால், பங்குனி மாசம் ஓர் தனிச் சிறப்பைப் பெற்றுள்ளது. இந்த நால்வரின் நட்சத்திரங்கள் முறையே பூரம், உத்தரம், சதயம், உத்திரட்டாதியாகும்.

பங்குனி மாசப் பூரணையும் உத்தரமும் கூடிய நாள் மிகவும் புனிதமான வேளையென்பது சைவ உலகு முழுவதும் நன்கறிந்த உண்மையாகும், உத்தர நாளுக்கு மறு பெயர் பங்குனி. இதிலிருந்தே பங்குனியென்ற மாதப்பெயர் வந்ததாகும். சித்திரை நட்சத்திரத்திலிருந்து சித்திரை மாதமும், விசாகத்திலிருந்து வைகாசி மாதமும், தோன்றிய முறையில், பங்குனி உத்தரத்தில் பிறந்த காரணம் பற்றி அருச்சுனனுக்கு பற்குனன் என்ற நாமம் வந்ததையும் எண்ணுக. ஈழத்துச் சைவர்களுக்குப் பங்குனி உத்தரம் ஓர் விஷேடித்த புண்ணிய தீர்த்த நாளாகும். வண்ணை வைத்தீஸ்வரர், வல்வெட்டித்துறை வைத்தீசுரர், நல்லூர் நல்லநாதர், சுன்னாகம் ஐயனார், இணுவில் சிவகாமியம்மை, கண்டி செல்வ விநாயகர், திரிகோணமலை பத்திரகாளியம்மன், கொழும்பு பொன்னம்பலவாணேசர் ஆலயங்

களில் தீர்த்தத் திருவிழா சிறப்பாகக் கொண்டா டப்படும் நாள் இதுவே. அதற்கு முதல் நாளாகிய பூரத்தில் குறிப்பிட்ட ஆலயங்களிலெல்லாம் தேர்த் திருவிழா நடைபெறும்.

இவ்விதம் இலங்கையின் நாலா பக்கங்களிலும் சைவமணம் கமழ்ந்து கொண்டிருந்த புனித நாள் களாகிய பங்குனிப் பூரத்திலும் உத்தரத்திலும் முறையே பொன்னப்ப சுவாமியும் நவநாதசித்த ரும் மகாசமாதியடைந்தனர். முந்தியவரின் சமாதி வண்ணார்பண்ணை மேற்கு ஒட்டுமடத்திலுள்ளது; பிந்தியவரின் சமாதி நாவலப்பிட்டியை அடுத்துள்ள குயின்ஸ்பரித் தோட்டத்திலுள்ளது. பொன்னப்ப சுவாமியின் சமாதி விபரம் ஓர் பக்தனால் இயற்றப் பட்ட கீழ்க்கண்ட வெண்பாவில் அமைந்துள்ளது.

"சுக்கிலத்துப் பங்குனியிற் றேன்றும் வளர்பிறையாய்ப்
புக்கபதின் மூன்றுதனு பூரம்பொன்—மிக்கதினம்
பொன்னப்ப மாதவனற் பூரணன் விதேக முற்றான்
என்னப்ப னென்றிங் கிசை"

பொன்னப்பர், கருவிலேயே திருவுற்றவர். அவ ரது தாயார் கடையிற் சாமியாரிடம் அளவற்ற பக்தி கொண்டு வாழ்ந்த புனிதவதி. அந்த மகா னின் கடாட்சத்திலேயே பிறந்த குழந்தையான படியால் பொன்னப்பருடன் ஞானமும் வைராக்கிய மும் கூடவே பிறந்தனவெனலாம். பின்னாளில் அவர் வாக்கில் மலர்ந்த மணிவாசகங்களைக் கேட் டோர் அவற்றிற்கு அடிப்படையான ஞானப்பேற் றை எப்போது, எவரிடமிருந்து அவர் பெற்றன ரென வியப்புற்றனர். கருவுற்றிருந்தபோதே குரு உபதேசம் பெற்று விட்டனரெனக் கருதினர் கல்வி யறிவிற் சிறந்த சிலர்.

உபநிடதங்கள், கீதை, வாசிஷ்டம், கைவல்லியம், திருமந்திரம் புராண இதிகாசங்களின் நுட்பமான கருத்துக்களையும், தத்துவங்களையும், மக்களின் பக்குவத்திற்குப் பொருந்த, அவர் எடுத்து விளக்கியமுறை மறக்க முடியாததாகும். அதனைப் பாராட்டிப் புகழ்ந்த ஓர் பக்தன் இயற்றிய நிலமண்டில ஆசிரியப்பாவிலிருந்து சிலவரிகளைக் கீழே தருகின்றோம்.

"பொன்னைப் பாயுயர் பொன்னைப்ப மாமணி!
தன்னை மறந்து தலைவனைக் காணாது
சுழல்காற் சருகெனச் சுழன்று சுழன்று
பிறந்து மிறந்தும் பிணிப்புறு முயிரை
ஆமைமீன் பறவை யாமிவை போல
நினைப்பாற் பார்வையால் நேயமொடு தொடுகையால்
தடுத்தாட் கொண்டு தண்ணளி ததும்ப
அன்பொடு வாரியணைத்துத் தழுவி
அருணூல் பொருணூல் ஆன்றவர் துதிநூல்
இயனூன் முதலா வெத்திற நூலினும்
எடுத்துக் காட்டுக ளியம்பி நுண்பொருள்
வியப்பக் கூறி விளங்கச் செய்தலும்
ஒப்பின் வகையா லுண்மைகள் நுவன்று
கைப்படு நெல்லியெனக்கருத்தினுட் பொருத்தலும்
வேதாந்த சித்தாந்த சமரச மேவி
யார்யார் எதனை விழைவரே லதனைச்
சொல்லின் வாதத் துகளர் போலாஅ(து)
ஈடுமெடுப்பு மில்லா ஆற்ற லொடு
தெள்ளி வடித்துத் திறம்பெறக் காட்டியும்
உள்ளக்கோயிலில் ஒளித்திடுங் கள்வன்"

இந்தப் பெரியாரை, அவர் காலத்திலேயே, யாழ்ப்பாண மக்கள் நன்கறிந்து கொண்டனர் என்று நம்பிவிடவேண்டாம். அறிந்தும் அறிந்தோனுகக் காட்டா ஆசானாய், சாத்திரஞ் சொல்லாது

சித்திகள் எதுவும் செய்யாது, சர்வசாதாரண ஏழை மனிதனைப்போல வாழ்ந்த இந்த ஞானபுருஷனின் பெருமையை உணர்ந்தோர் மிகச்சிலரே. அவரைப் போற்றியவர்களிலும் பார்க்கத் தூற்றியவர் தொகையே அதிகமெனலாம்.

எவ்விதம் சாயா அன்பினை நாடொறுந்தழைப்பவர்கட்கு இறைவன் தாயேயாகி நிற்கின்றான் என்பதனை விளக்கவந்த மணிவாசகப் பெருமான், தாமருளிய போற்றித் திருவகவலில் அந்த மெய்யடியார்களின் தன்மைகளை மிகவும் அழகாக விபரித்துள்ளார். (''கொடிறும் பேதையும் கொண்டது விடாதெனும்'' வரியிலிருந்து, ''தாயேயாகி வளர்த்தனை போற்றி'' என முடியும் வரையிலுள்ள இருபத்தைந்து வரிகளைக் கருத்தூன்றிக் கற்றுக) இப்பாகத்திலடங்கிய, ''சகம் பேய் என்று தம்மைச் சிரிப்ப, நாணதுவொழிந்து நாடவர் பழித்துரைபூணதுவாகக் கோணுதலின்றிச், சதுரிழந்தறிமால் கொண்டு'' என்னும் விளக்கம் முற்றிலும் பொன்னட்ப சுவாமிக்கும் பொருந்தும் என்பது புகழ்ச்சியுரையாகாது. அவர் ஊராரின்வசை மொழிகளைக்கேட்டு வெட்கப்படவில்லை; அவற்றை ஆபரணமாகக் கொண்டாரேயன்றிச் சிறிதும் மனம் கோணவில்லை; அப்படித் தம்மைத்தூற்றியவர்களை வழிப்படுத்துவதற்கான உபாயங்களை இழந்து (சதுரிழந்து) நின்றது மாத்திரமன்றி, எல்லாம் அறிந்தும் அறியார்போல (அறிமால் கொண்டு) வாழ்ந்து சென்றனர். அவரது வாழ்க்கையில் மிளிர்ந்த இந்த அரும் பெருங் குணத்தைப்பேணுவதற்கு ஆர்வமுடன் முயல்வோமாக!

('ஆத்மஜோதி'யிலிருந்து தொகுக்கப்பட்டது)

# ராம நாம மகிமை

எல்லாவற்றையுங் கடந்த நிலை, எல்லாவற்றி லுங் கலந்த நிலையென்ற இரண்டு நிலை மெய்ப்பொ ருளுக்குண்டு. இவற்றை வேதாந்தம் நிர்க்குணம், சுகுணமென அழைக்கும்; சித்தாந்தம் சொரூபம். தடத்தம் அல்லது அகளம் சகளம் என்னும். அங் கிங்கெனுதபடி, எங்கும் நிறைந்த, குணங்குறியற்ற, அறிவே உருவாய பரப்பிரமத்தை வழிபடுதல் முழு ஞானிகளுக்கேயன்றி, ஏனையோர்க்கு இயலாத காரியமாகும். இக்காரணம் பற்றியே, கீதையில் பக்தியோகத்தைக் கூறும் பன்னிரண்டாம் அத்தியா யத்தை உபதேசிக்கும்போது, 'தேகாபிமானங்களு டன் அவ்யக்த மார்க்கமடைவது மிகக் கஷ்டமென' வற்புறுத்தியுள்ளார் கிருஷ்ண பரமாத்மா. சகு ணப் பிரம்மமே வாக்கு மனமுடைய மக்களின் வழிபாட்டிற்குரியதாகும். ஆன்மாக்கள் மீது கொண்ட கருணை காரணமாக, இறைவன் அகள நிலையிலிருந்து இறங்கித் திருமேனி தாங்குஞ் சகள நிலையை அடைகின்ருர்.

"அகள மாய் ஆருமறி வரிது அப்பொருள்,
சகளமாய் வந்த தென்றுந் தீபற;
தன்னையே தந்த தென்றுந் தீபற",

என்கிறது,

திருவுந்தியார். சகுணப்பிரமத்தின் உண்மை யை அறியாது, நிர்க்குணப் பிரம்மோபதேசஞ் செய்யவந்த தோதாபுரிக்கு, ஸ்ரீராமக்கிருஷ்ண பரம ஹம்சர் காளிவிக்கிரகத்தில் ஜெகன்மாதவைப் பிரத் தியட்சமாகக் காண்பித்தனர். சஹஜ நிர்விகல்ப சமாதியிலமர்ந்துகொண்டு, ஞானமார்க்கமாகிய

ஆத்ம விசாரத்தை அருளும் ஸ்ரீ ரமணமூர்த்தியும், சகுண வழிபாட்டின் அத்தியாவசியத்தை, இஸ்லாமிய அன்பர்கட்கும் ஐரோப்பிய பக்தர்கட்கும் மயக்கந்தீர விளக்குகின்றார். மனக்கண்ணைப் புருவமத்தியில் நிறுத்தி யோகஞ்செய்யுஞ் சாதகர்கள் தாமும், நாம ஜெபம் அல்லது மந்திர ஜெபம் செய்தால் தான், தியானலட்சியத்தை இழக்காமல் இருக்கமுடியுமென்பது அவர் கருத்தாகும்.

சகுண வழிபாட்டில் பகவானுடைய அனந்த கல்யாண குணங்களையும், அவருடைய திருநாமங்களையும் இடைவிடாது உச்சரிப்பது விசேடித்த சாதனையாகிறது. இக்கலியுகத்தில் பக்திநெறியைப் பேணுவோர்க்கு நாம ஜெபம்போன்ற எளிதான சாதனை பிறிதொன்றில்லையென்பதே அனுபூதிச் செல்வர்களின் முடிபுமாகும். ''பகவானின் திவ்விய நாமமே பக்திசாரம்; அதனை உச்சரி; பாபம் போகும். அதுவே எளிதான வலுவான சாதனம்'', என்கிறார் ஞானதேவர்.

நமது மனமெனும் தடாகத்தில் உதித்தெழும் ஒவ்வொரு அலையும் நாமரூபக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருப்பதால், ஆத்மீக சாதனைத்திற்குப் பகவானுடைய நாமரூபங்கள் பிரதானமாகின்றன. ஐம்புலன்களுக்கப்பாலுள்ள ஆத்மதரிசனத்திற்கு, நமது அபிப்பிராயங்களின் உருவங்கள்போலமைந்த திருநாமங்கள் உதவி செய்கின்றன. 'உரையில் உன்பெயர், உள்ளத்தில் உனது திருவடிவு' என்கிறார் துக்காராம். நமது நண்பர் ஒருவரின் பெயரைக் கேட்டதும், அவரின் தோற்றம் உடனே நமது மனக்கண்முன் தோன்றுகிறதல்லவா? எனவே, கடவுளின் உருவத்தை நமது உள்ளத்திரையில் வரைவதற்கு, அவரின் திருநாமத்தின் உதவிமுதலில் வேண்டப்படுகிறதென்பது வெளிப்படை. சிவத்

தை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் பாவித்துக் கசிந்துருகிய அப்பர் சுவாமிகள், தமது ஆனந்தானுபவத்தை விளக்கும்போது, 'முன்னம் அவனுடைய நாமங்கேட்டாள்' என முதலில் திருநாமத்தையே வைத்துள்ளார். இக்கருத்தின் விரிவுரை போல் விளங்குகிறது மகாத்மா ஸ்ரீ இராமலிங்க வள்ளலாரின் கீழ்க்கண்ட பாடல்;—

"பெருகியபே ரருளுடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகை யென் கணவர்திருப் பேர்புகலென் கின்றாய்
அருகர் புத்திராதி யென்பேன் அயனென்பேன் நாரா
யணனென்பேன் அரனென்பேன் ஆதிசிவ னென்பேன்
பருகுசதா சிவமென்பேன் சக்தி சிவமென்பேன்
பரமமென்பேன பிரமமென்பேன் பரப்பிரம மென்பேன்
துருவு சுத்த பிரமமென்பேன் துரியநிறை வென்பேன்
சுத்த சிவமென்பன் இவை சித்து விளையாட்டே".

—அனுபவமாலை

இந்தமுறையில், நாம், ஒரு நாமம் ஓர் உருவம் இல்லாய் பெருமானுக்கு அன்பினால், ஆயிரந்திருநாமங்கள் சூட்டி வணங்குகின்றோம். அவரை மங்களப் பொருளாய் மதிக்கும்போது சிவம் என்கிறோம்; எங்கும் வியாபித்துள்ளவராய்க் கருதும்போது விஷ்ணு என்கிறோம்; அழகனாய்க் காணும்போது முருகன் என்கிறோம்; இவ்விதமே ஏனைய நாமங்களும் தோன்றியுள்ளன. அவருக்கு எந்தப் பெயரும் சம்மதமே; பக்தி விசுவாசத்துடன் எப்பெயரிட்டழைக்கினும் அவருக்குத் திருப்தியே, அருள் சுரக்கவே செய்வர். தொன்று தொட்டுள்ள இந்துமத சம்பிரதாயத்தில் பஞ்சாட்சரம், அஷ்டாட்சரம், சடாட்சரம் முதலானவை அவ்வக்காலத்து விளங்கிய மகான்களின் அனுஷ்டிப்பின் பயனாக அபாரசக்தி பெற்றுள்ளன. இதற்கு ஆழ்வார்களதும் நாயன்மார்களதும் வரலாறுகள் போதிய சான்றாகும்.

கவிச்சக்கரவர்த்தியாம் கம்பர் பாடிய ராமாயணந்தோன்றிய பின்னர், ராமநாமமும் நாடெங்கும் பரவி அளவற்ற சக்தியை விளக்கியதெனலாம். கம்பரின் அரிய காவியம், வெறும் வழிநூல் அல்ல வால்மீகியின் கதைப்போக்கை மாத்திரம் அவர் எடுத்துக் கொண்டு, தமிழர் நாகரிகத்தின் உரைகல்லான திருக்குறளின் கொள்கைகளை அடிப்படையாக வைத்து ஓர் புதிய ஆதி நூலையே தந்தனரெனலாம். வால்மீகி ராமனிற் கண்டது, ஓர் வீரபுருஷனையே; கம்பரோ, ராமனை மானிட ரூபமெடுத்த பரம்பொருளாகச் சிருஷ்டித்துள்ளார். ராமாயணமானது புராணக்கதையாகவோ, இலக்கியமாகவோ, சரித்திர நூலாகவோ மாத்திரம் நின்றுவிடாது, ஓர் அரிய பக்தி நூலாகவும் மிளிரச்செய்த பெருமை கம்பருக்கே உரியதாகும். குமரகுருபர சுவாமிகள் மூலம் கம்பராமாயணம் காசிவரைக்கும் செல்லாதிருக்குமேல், இன்று வடஇந்தியா முழுவதும் போற்றிப்புகழும் துளசிராமாயணம் தோன்றியேஇராதெனக் கூறலாம்.

ஸ்ரீராமனிலும் பார்க்க அவனின் திருநாமத்திற்குக் கூடிய மகிமையும் வலிமையும் உண்டென்ற உண்மையை, அனுமானின் வாக்காக, வால்மீகி தந்துள்ளார். அதனைத் தன் சொந்த அனுபவத்தோடொட்டிய உண்மையாக கம்பர் கீழ்க்கண்ட பாட்டில் விளக்குகிறார்:-

"நன்மையுஞ் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து போகுமே
சென்மமும் மரணமும் இன்றித்தீருமே
இம்மையே இ'ராம'வென் றெழுத்திரண்டினால்"

இக்கருத்தைத் துளசிதாசர் தமது பாடல்களில் மிகவும் விரிவாக்கியுள்ளார். "ராமா! நின்பாதந் தீண்

டியதால் ஈடேற்றமடைந்தது அகலிகை ஒருத்தியே; ஆனால் உனது நாமத்தினால் ஈடேற்றப்பட்டவர்களின் தொகையைக் கணக்கிட முடியாது''.

சென்ற நூற்றாண்டில் ஸ்ரீ ராமக்கிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி ராமதீர்த்தர் முதலான மகான்கள் ராம நாம மகிமையைப்பற்றி உபதேசித்தபோதிலும், அதை விளக்குவதே தமது சிறப்புப் பணியாகக் கருதி வாழ்ந்தும் பாடியும் காட்டியவர் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் ஒருவரே. இந்த நூற்றாண்டில் காந்தியடிகளின் பிரசாரத்தால் வடநாடு முழுவதும் சுயரஸ முறையில் ராமநாமப் பெருமை பரவியுள்ளது.

அந்த நாமத்தின் பெருமையையும், மகிமையையும், அதனாற்றாமடைந்த அனுபூதி நிலையையும் வாழ்க்கையாலும் வாக்காலும் உலகுக்கு விளக்குவதே தனித்தொண்டாகப் பிறவியின் ஒப்பற்ற நோக்காகக் கருதி, வாழ்ந்தவர் (கஞ்சன்காடு, தென்னிந்தியா) ஆனந்தாஸ்ரமம் சுவாமி ராமதாஸர் ஒருவரேயாம். அவர்தம் தந்தையுங் குருவுமான ஸ்ரீ பாலக்கிருஷ்ணராவிடம் பெற்ற உபதேசமந்திரம் 'ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெயராம்'. தம்மை அடையும் ஆத்மப் பசியாளருக்கு அவர் உபதேசிப்பது அதையேயாம்.

''நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழுமுண்டாம்
வீடியல் வழியுமாக்கும் வேரியங்கமலை நோக்கும்
நீடிய வரக்கர்சேனை நீறுபட்டழிய வாகை
சூடிய சிலையிராமன் தோள்வலி கூறுவோர்க்கே''

என்ற பாடலில், கம்பர் 'ஜெய ஜெய' என்ற கருத்தை அழகாய் அமைத்துள்ளார். ராமன் தோள் வலி—ராம ஜெயம்.

★ ஓம் ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ராம் ★

அகரமென அறிவாகி அகில சரவசரவுயி
ராக்குவதும் ராம நாமம்
ஆழ்வார்கள் பன்னிருவர் பாடுதமிழ் மாமறைகள்
அறைவதும் ராம நாமம்
உகரமென அண்டபகிரண்டத்துள் உயிர்கடமை
ஓம்புவதும் ராம நாமம்
ஓதரிய நான்மறைகள் உபநிடதம் ஆகமத்து
உட்பொருளும் ராம நாமம்
மகரமென் நின்றுலகின் மன்னுயிர்கள் யாவையு
மறைத்தருள் செய்ராம நாமம்
மாமறைகளேத்தரிய வைகுந்த வீட்டினிடை
வாழ்வதும் ராம நாமம்
நிகரில்பர ஞானமோ னத்தவர் உளந்தனில்
நின்றொளிரும் ராம நாமம்
நேடியதெலாம் உதவு தேவர்துயர் தீர்த்தருள்செய்
நேசராம் ராம ஜெயமே.

—க. இ.

('ஆத்மஜோதி'யிலிருந்து தொகுக்கப்பட்டது.)

# எனது ஜப்பான் தேசத்து யாத்திரை

## அனுபவங்கள்

யப்பான் சனத் தொகையில், நூற்றுக்குத் தொண்ணூறு வீத மக்கள் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். அம்மதம் பல் வேறு பிரிவுகளைக் கொண்டது. அங்கே யான் தரிசித்த ஆலயங்கள் அநேகம்; கண்குளிரக் கண்ட காட்சிகள் கணக்கில. பதினைந்து நிமிட வானொலிப் பேச்சில் அவற்றைப் பற்றி விரிவாக எடுத்துக்கூற முடியாது. முக்கிய மான சில ஆலயங்களைப்பற்றியே இங்கு எடுத்துச் சொல்ல முடியும்.

### பௌத்தம் பரவிய வரலாறு

முதலில், கிழக்கு ஆசிய நாடுகளில் பௌத்த மதம் பரவிய வரலாற்றைச் சிறிது ஆராய்வோம். காஞ்சீபுரத்தை ஆண்ட அரச குடும்பத்தைச் சேர்ந்த போதிதருமர் என்னும் மஹாயன பௌத் தப் பெரியார் கனவில், முதலாவது பௌத்த குரவ ரான காசியப்பர் தோன்றி, அவரைச் சீனு சென்று அங்கே தியான மார்க்கத்தைப் போதிக்குமாறு கட் டளையிட்டார். இது நடந்தது கி.பி. 527-ம் ஆண் டில். அக்கட்டளைப்படி சீனுவில் தியான மார்க்கத்தை நிறுவிய போதிதருமர், ஆதி பௌத்தகுருபரம்பரை யில் 28-ஆவது குரவராகவும், சீனக்குரு பரம்பரை யில் முதலாவது குரவராகவும், இன்று வணங்கப்படு கிறார். சீனுவில் அவர் நிறுவிய மார்க்கம் ''சான்'' மதமென அழைக்கப்படுகிறது. இது 'தியான' என்னும் வடமொழிச் சொல்லின் திரிபு. யப்பா னில் அது 'ஸென்' என வழங்குகிறது. இந்த 'ஸென்' மார்க்கம் சீனுவில் இருந்து சென்ற போதி தருமராலேயே, ஸ்தாபிக்கப்பட்டதாகப் பல வரு ஷங்கட்கு முன் படித்திருந்தேன். இது சரியல்ல வென்பதை யப்பான் தேசத்தில் முதல் முதலாவ

தாகக் கட்டப்பட்ட ஹொறியுஜி என்னும் ஆலயத்தை நேரில் தரிசித்து அதன் வரலாற்றைப் பார்த்ததும் உணர்ந்து கொண்டேன். யப்பானுக்கு பௌத்த மதம் சென்ற வரலாற்றையும், அங்கே வேரூன்றிய முறையையும் குறித்து மிகவும் நுணுக்கமான விபரங்களை அறியும் சந்தர்ப்பம் எனக்கு அந்த இடத்தில் கிடைத்தது. அவை பின்வருமாறு:—

## 2 ஹொறியுஜி ஆலயம்;

சீனத்திலிருந்து கோறியா சென்ற பௌத்த மதம் அந்நாட்டு அரசனை செயிமின் ஆதரவைப் பெற்றது. அந்த அரசனே மிக்கோடா மன்னனுக்கு அதின் மகிமையைப்பற்றிக் கடிதமொன்றை புத்த சிலை ஒன்றுடன் அனுப்பியிருந்தான். இக்கடிதம் 552-ம் ஆண்டில்வரையப்பட்டது. அந்தக் கடிதமானது, சத்தர்ம புண்டரிக சூத்திரத்தின் முதல் பத்து சொற்களுடன்ஆரம்பித்திருக்கின்றது. மிக்கோடா மன்னன் கவனம்செலுத்தாமையால் நாற்பது ஆண்டுகளாக அக்கடிதமும் சிலையும் தேடுவாரற்றுக் கிடந்தனவெனலாம். பின்னர் இளவரசரான ஸொராக்கோ காலத்தில் கவனிக்கப்பட்டன. இவர் ஓர் அரிய மேதாவி. சென்ற பதின் மூன்று நூற்றாண்டுகளாக இவர் புத்தபெருமானின் அவதாரமாகப் போற்றி வணங்கப்படுகிறார். யப்பான் மொழியில் முதன் முதலாகச் சமய தத்துவங்கள் குறித்து நூல் எழுதிய பெருமை இவரைச் சார்ந்தது. இவரால் நிறுவப்பட்ட ஹொறியுஜி என்னும் ஆலயம், உலகத்தில் மரத்தால் கட்டப்பட்ட ஆலயங்களில் மிகவும் பழமையானதாகும். யப்பான் தேசத்து ஏழாம் நூற்றாண்டின் கலைவளர்ச்சியையும் சமயப் பண்பாட்டையும் நமக்கு நினைவூட்ட இந்த ஆலயமானது ஓர் அரிய பொக்கிஷசாலையாக மிளிர்கின்றது. பழைய தலைநகரான

நாருவிலிருந்து இது பன்னிரண்டு மைல் தூரத்தி லுள்ளது.

3 தோடைஜி ஆலயம்:

அடுத்த நூற்றுண்டில் பௌத்த மதம் யப்பா னில் அடைந்த ஆதிக்கத்தையும் சிறப்பையும் நன்கு விளக்க, ஓர் ஒப்பற்ற சின்னமாக இருக்கின்றது நாரு நகரிலேயுள்ள தோடைஜி ஆலயம். ஷோமு சக்கரவர்த்தி காலத்தில், கி. பி. 752-ல் இந்தியாவி லிருந்து சென்ற ஓர் பிரபல மஹாயன பிக்குவால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பிரமாண்டமான தாமிர விக்கிரகம், உலகின் அற்புத காட்சிப் பொருள்களுள் ஒன்றுய் இந்த ஆலயத்தில் காட்சியளிக்கின்றது. பத்மாசனத்தில் அமர்ந்தபடி அதின் உயரம் 53; அடி; முகத்தின் நீளம் 16 அடி; அகலம் $9\frac{1}{2}$ அடி $\frac{1}{2}$ கண்ணின் நீளம் $3\frac{3}{4}$ அடி; காது $8\frac{1}{2}$ அடி; பெருவிரல நீளம் $4\frac{3}{4}$ அடி; இந்த விக்கிரகத்தைச் செய்வதற்கு 500 தொன் நிறையுள்ள செப்புத் தகடுகள் பாவிக் கப்பட்டனவாம். கற்பனையும் கணிதமும் பிணைந்த மூளையுடைய ஒரு யப்பானியப் பெரியாரின் அபிப்பி ராயப்படி இந்தப் பெரிய விக்கிரகமானது உயிர் கொண்டு நம்மைப்போல் எழும்பி நடக்குமானல், நாரு நகருக்கும் ரொக்கியோவுக்குமிடையேயுள்ள 320 மைல் தூரத்தை ஏழு மணித்தியாலத்தில் தாண்டிவிடும். அதாவது குறித்த இரு பட்டினங்க ளுக்குமிடையே இன்று வேகமாகச் செல்லும் புகை வண்டியை (Express Train) க்கூட முந்தி விடும், என் றுர்!

ஆரம்பத்தில் முழு விக்கிரகமும் பொன் முலாம் பூசப்பட்டிருந்தது. பலமுறை அதற்குச் சேதம் வந்து திருத்தி அமைக்கப்பட்ட காரணத்தால் அந்த முலாம் மறைந்துவிட்டது. பழைய விக்கிரகத்தின் எஞ்சிய பாகம், அடித்தளத்திலிருந்து முழங்கால் வரையில் மாத்திரமே. ஏனைய அங்கங்கள் 9-ம்

12-ம் 18-ம் நூற்றுண்டுகளில் புதிதாகச் சேர்க்கப் பட்டவையாகும். தொடக்கத்திலிருந்து 350 வருஷங்களாக, யப்பான் தேசத்தில் நிலவிய சகல பௌத்தப் பள்ளிகட்கும் இது தலைமை நிலையமாக இருந்தும், மக்களின் மதிப்பைப் பெற்று அவர்களின் பக்தி வளர்ச்சிக்கும் ஊற்றுயுமிருந்ததெனலாம்.

நாரு நகருக்குத் தனி அழகு தரும் பிறிதோர் காட்சி, அங்குள்ள நந்தவனமாகும். இதின் விஸ்தாரணம் 1250 ஏக்கர். இந்த நந்தவனத்தின் ஓர் பிரிவில் நூற்றுக் கணக்கான மான்கள் வசிக்கும் சோலையுமுண்டு. புத்தர் பெருமான் வரலாற்றுத்தொடர்பில், சரநாத்தின் மான் சோலையைப்பற்றி புத்தகங்களின் பக்கங்களிலேயே பார்க்கின்றோம். ஆனுல், இங்கே, சென்ற பன்னிரண்டு நூற்றுண்டுகளாக மான் சோலை ஆலயத்திற்கு அணி செய்கின்றது. அங்குள்ள மான்கள் ஆலயப் படிவரைக்கும் அச்சமின்றி வந்து யாத்திரீகர்களுடன் அன்புறவு பூண்டு அவர்களின் கைகளிலிருந்து பலவித சிற்றுண்டிகளை உண்ணுங் காட்சி, பார்ப்போர் உள்ளத்தைக் குளிரச் செய்கின்றது.

## 4 என்றியாகுஜி ஆலயம்

கியோட்டா மாவட்டத்தை விட்டுத் திரும்பு முன், அன்பர்களே! உங்களை மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றுலும் சிறப்புற்ற பிறிதோர் புண்ணிய இடத்திற்கு அழைத்துச்செல்ல விரும்புகிறேன். 'என்றியாகுஜி' என்பது அந்த ஆலயத்தின் பெயர். இது இயற்கை அழகு செறிந்த வீவா வாவிக்கருகில் நிமிர்ந்து உயர்ந்து நிற்கும் ஹைய் மலைச்சாரலில் அமைந்துள்ளது. இந்துக்களாகிய நமக்கு கயிலாயமும் மானச சரோவரமும் எவ்வளவு புனிதமும் மகிமையும் கொண்டனவோ, அதே போல, யப்பானிய பௌத்தர்கட்கு, ஹைய் மலையும் வீவா வாவியும் அமைந்துள்ளன. அங்கு போலவே

இங்கும் மனதிற்கு மிகரமணியமான, வசீகரமான காட்சிகள் பல உண்டு.

இந்த இடத்தில்தான் யப்பானிய பௌத்த மதத்தின் முக்கிய கிளைகளுள் ஒன்ருகிய ரெண்டை மார்க்கம் தோன்றியதாகும். இதின் ஸ்தாபகரின் பெயர் சைகோ. பின்னுளில் அவர் டெங்கியோ டெயிஷி (அதாவது மஹரிஷி) யென்னும் பட்டப் பெயரால் வணங்கப்பட்டார். இவர் தந்தையார் சீன அரசவம்சத்தைச் சேர்ந்தவர். அக்காலக் கலைகள், நீதி நூல்கள் எல்லாம் யப்பானில் சீனமொழியிலேயே இருந்தபடியால், அவற்றைப் பயிற்ற இவர் பேராசிரியராக யப்பானில் குடியேறி, ஓர் யப்பானிய மாதையே மணந்து கொண்டார். இந்தக் கலப்பு மணத்தில் உதித்தவரே சைகோ. இவர் பிறவியிலிருந்தே துறவு மனப்பான்மையும் ஞான வேட்கையும் கொண்டவர். அச்கால சமயக் கொள்கைகள் இவருக்குத் திருப்தியளிக்கவில்லை. அவற்றினிடையே பரவியிருந்த வேற்றுமை உணர்ச்சிகள் வெறுப்பைக் கொடுத்தன. எனவே, அவர் சீஞ சென்று அங்குள்ள நான்கு முக்கிய மார்க்கங்களின் நூல்களை நன்கு பயின்ருர். தாய் நாடு திரும்பியதும், அவற்றின் சாரத்தைத் தழுவி ரெண்டையென்னும் புதிய மார்க்கத்தை நிறுவினுர். இகத்திற்கும் பரத்திற்கும் பயன்படக்கூடிய கல்வியை சமயத்தின் பேரால் மக்களுக்கு அளிக்க வேண்டுமென வற்புறுத்திய முதல் யப்பானியர் இவரே. இந்த மகானது தொண்டைப் பாராட்டும் பொருட்டு, சக்கரவர்த்தி ஷோமு என்பவர் தமது தலைநகரை நாருவிலிருந்து, அவரது நிலையம் அமைந்துள்ள இடத்திற்கு அருகாமையிலுள்ள கியோருவுக்கு மாற்றிக்கொண்டனராம்.

### 5 யாகசாலை

என்றியா குஜி ஆலயத்தில் ஓர் யாகசாலையு முண்டு. அதில் இன்றும் வட இந்தியாவில்போல் அக்கினி வேட்டல் நடைபெறுகின்றது. அங்கே யாகசாலை ஆலயத்தின் ஏனைய மண்டபங்கட்கு இரண்டடி கீழே, அமைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தபோது, சாக்கோரி ஆச்சிரமத்தில் ஸ்ரீ உபாசனி பாவா அவர்களால் கன்னிகள் யாகஞ் செய்ய நிறுவப்பட்ட சாலை நினைவுக்கு வந்தது. யப்பானுக்கு அக்கினி வழிபாட்டை மஹாராஷ்டிரப் பிராமணர் எவராவது சொல்லிக் கொடுத்தாரோ யார் அறிவார்? குறித்த யாகசாலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள 'புத்த-யக்குஷி' சிலை சையிகோ அவர்களின் சொந்தக் கைவேலையெனச் சொல்லப் படுகிறது. மகாநாட்டுப் பிரதிநிதிகள் சகலருக்குமாக 8-9-58-ல் ஓர் விசேட யாகபூசை நடந்தது. அப்போது அடிக்கப்பட்ட உடுக்கின் ஓசையும் நாமாவளியின் ஒலியும் மந்திரசக்தி வாய்ந்ததாகத் தெரிந்தது. காசி விசுவநாத ஆலயத்தில் இரவில் நடைபெறும் சப்தரிஷி பூஜையின் அம்சங்கள் சில பொருந்தியிருந்தன.

### 6 காமக்குரூ நகரம் — பெரிய புத்தர் உருவம்

இனி, பதின்மூன்றும், பதினான்காம் நூற்று ஆண்டுகளில் சிறப்புற்றிருந்த காமக்குரூ மாகாணத்திற்குச் செல்வோம். அங்கு யாம் காணும் அற்புதக்காட்சி 'டைவுற்சு', அதாவது பெரிய புத்தர். இந்த விக்கிரகம் அளவில் பெரியதாக இருப்பது மாத்திரமன்றி அழகிலும் விசேடமாய் அமைந்திருக்கிறது. அதற்குக் காரணம் யப்பானிய சிற்பக்கலையோடு கிரேக்க, இந்தியக்கலை நுட்பங்களும் இணைந்திருப்பதாகும். பத்மாசனத்திருந்தபடியே உயரம் 42 அடி; முக நீளம் $7\frac{1}{2}$ அடி; கண்மலர் 4 அடி; நாசியும், பெருவிரல் சுற்றளவும் $2\frac{3}{4}$ அடி; முழங்கால்களுக்கிடையிலுள்ள தூரம் 30 அடி; இந்தப்

பெரிய விக்கிரகம் அமைக்கப்பட்ட வரலாறும் அற்புதமானது; அது பின்வருமாறு,

1195—ம் ஆண்டில், சக்கரவர்த்தி கோதாபாவல்லவின் ஆதரவில் நாருவிலுள்ள பெரிய விக்கிரகம் திருத்தியமைக்கப்பட்டு நீராட்டு விழா நடந்தது. அதைப் பார்க்கக் கூறு மாகாணத் தலைவரும் சென்றிருந்தார். அவர் பெயர் ரான் - யொறிற்றோமா. அந்த விக்கிரகத்தின் பிரமாண்டமான காட்சி அவர் உள்ளத்தைக் கொள்ளவே, அதைப் போல், அல்லது அதிலும் பார்க்கச் சற்றே சிறிதாய் இன்னுமோர் விக்கிரகஞ் செய்வித்து தமது தலைநகரில் பிரதிஷ்டை செய்ய ஆவல் கொண்டார். ஆனால் விதி கொடுத்து வைக்கவில்லை; சில வருஷங்களுள் இறந்துவிட்டார். அவரது ஆசையை அறிந்தவர்களுள் அவரது அரண்மனையில் பணியாற்றிய இடாஞே-ஞே என்னும் தாதிப்பெண்ணும் ஒருத்தி. அவள், அவர் கோரிய திருப்பணியை நிறைவேற்றத் தீர்மானித்து, பலரின் உதவியைப் பெற்று மரத்தால் ஓர் விக்கிரகம் செய்வித்து 1243-ம் ஆண்டில் அதற்கு ஆலயமும் அமைப்பித்தாள். ஐந்து ஆண்டுகள் கழியுமுன் ஆலயமும் விக்கிரகமும் புயல் காற்றால் மோதப்பட்டுத் தரைமட்டமாயின. ஆனால் மிகவும் துரிதமாக தாமிர விக்கிரகம் ஒன்று அதே இடத்தில் நிறுவப்பட்டு, மண்டபமும் எழும்பியது. யாம் இன்று காணும் விக்கிரகம் அதுவேயாம். ஆனால் மண்டபம் இப்போது இல்லை. அடுத்தடுத்து நான்குமுறை கட்டப்பட்டும், இயற்கையின் நாசவேலையிலிருந்து அது தவறவில்லை. வெட்டவெளியிலிருந்துகொண்டே அடியார்க்கு அருள் சுரக்க வேண்டுமென்பது புத்தர் பெருமான் சித்தம்போலும்! பல செம்புத் தகடுகளால் பிணைக்கப்பட்ட நீண்ட கண் மலர்கள், உதடுகள் மூலம், தியானத்தில் உள்ளடங்கிய சாந்தியை வெளிக்காட்டும் முகப்

பொலிவையும் புன்சிரிப்பையும் மிளிரச் செய்த சிற்பியின் கைத்திறத்தை என் சொல்வது? ஒரு தரம் அந்த முகத்தைப் பார்த்ததுமே, நமது உள்ளத்தில்சாந்தி உணர்ச்சி ஊற்றெடுக்கின்றது. பதின் மூன்றும் நூற்றாண்டின் யப்பானியபௌத்த கலையின் சிகரமாக இந்த விக்கிரகம் விளங்குகின்றது.

## 7 நிச்சிரன் மார்க்க மடம்

காமக்குரு ராஜ்யத்தின் ஆதரவில் இருந்த பௌத்த மதக் கொள்கைகட்கு பதின்மூன்றும் நூற்றாண்டிலேயே தீவிரமான எதிர்ப்புத்தோன்றியது. இதனை ஆரம்பித்தவர் நிச்சிரன் ஷோணன் என்பவர். இந்த அரசாங்கத்தின் சீற்றத்துக்காளாகிச் சிறைவாசமுஞ் செய்துள்ளார். அவரால் நிறுவப்பட்ட புதுமார்க்கம் அவர் பேராலேயே இன்றும் அழைக்கப்படுகின்றது. 1282-ம் ஆண்டில் அவர் இறந்தபோது, அவரது உடலம் ரொக்கியோ நகருக்கருகாமையிலுள்ள இக்கேகாமி என்னும் இடத்தில் அடக்கம் செய்யப்பட்டு ஓர் பெரிய ஆலயமும் அமைக்கப்பட்டது. அதின் பெயர் ஹொம்மோஞ்சி நிச்சிரன் மார்க்கத்தின் தலைமை நிலையமும் இதுவே. இங்கே நடைபெறும் வழிபாடுகளின் தனிமுறையில் கலந்து கொள்ளும் அரிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. ரொக்கியோ மகாநாட்டில் நான் செய்த பிரசங்கம் யப்பானிய பத்திரிகைகளில் முன்னரே வந்திருந்த காரணத்தால் பல பௌத்த ஆலய மடாதிபதிகள் என்னைப் பெயரளவில் அறிந்து கொண்டனர். ஆகையால் இந்த ஆலயத்தில் விசேட விருந்துபசாரங்கூட அளிக்கப்பட்டது. எனது உடைதானும் அவர்களது விசேட கவனத்தைப் பெற்றுவிட்டது! இலங்கையில் ஏதோ ஓர் மடத்தின் அதிபதியாக இருக்கலாமெனக் கூடச் சிலர் தப்பாகக் கருதிவிட்டனர்!! மொழி வித்தியாச மிருந்தபடியால் அதிக நேரம் சம்பாஷிக்கமுடியவில்லை; அத்தோடு, மொழி பெயர்க்க முன் வந்த

அன்பருக்கும் போதிய ஆங்கில அறிவு இருக்கவில்லை. ஆனால், மடாதிபதி அன்பளிப்பாக உதவிய குறுஞ் சுவடிகளிலிருந்து அவரது சமயக் கொள்கைகளை அறிந்து கொண்டேன். இந்தியாவிலிருந்து சீனம், கோறியா வழியே யப்பானையடைந்தசத்தர்மபுண்டரிக சூத்திரம் போதிக்கும் பௌத்த தர்மம், அந்த மூன்று நாடுகளிலும் மங்கிவிட்டன. அதைப் புனிதமாக்கி இந்தியாவுக்கும், இந்தியா மூலம் உலகெங்கணும் திருப்பி அனுப்பவேண்டிய பொறுப்பு யப்பானிய நிச்சிரன் மார்க்கத்தினரைச் சார்ந்ததாகும். இக்கருத்தின் எதிரொலியை இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் கவாக்குச்சியென்னும் யப்பானியப் பெரியார், தீபேத்து தலைலாமாவுக்கு நேர்பாள மன்னர்மூலம் சமர்ப்பித்த விண்ணப்பத்திலுங் கேட்கின்றோம். ''மனிதப் பிறப்பு அரிது, இந்துவாகப் பிறக்கும் புண்ணியந்தானும் கைகூடினபோதும் தமிழனாகச் சைவனாகப் பிறக்கும் பாக்கியம் கிடைக்காவிட்டால், இறையருளைப் பூரணமாகப் பெறவே முடியாது'', என்ற கருத்தில் ஓர் சைவப் புலவர் தென்னிந்திய மாத இதழ் ஒன்றில் வரைந்திருந்ததைக் கண்ணுற்றேன். இந்த நாட்டுப் பௌத்தர்கள்தாமும், பரிசுத்தமான பௌத்த தர்மம் இங்கேதான் பல நூற்றாண்டுகளாகக் காப்பாற்றப்பட்டு வருவதாகப் பறைசாற்றத் தயங்குவதில்லையே! எந்த மதத்திலும், எந்த மொழியிலும், எந்த நாட்டிலும் சரி, சமயமானது சாதனையற்ற சாஸ்திரப் படிப்பாய் இருக்கும் வரையில், மதவெறிக்கும், இவ்வித குறுகிய மனப்பான்மைக்கும் இடமளிக்காமல் இருக்கவே முடியாது.

8 சுகிஜி ஹொங்காஞ்சி ஷின் ஆலயம்

இறுதியாக, ரொக்கியோவிலுள்ள சுகிஜி ஹொங்காஞ்சி ஆலயத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். இது மிகப்பெரிய ஆலயம். ஷின்றான் ஷோனின் என்னும் பிக்குவால் ஸ்தாபிக்கப்பட்ட

ஷின் மார்க்கத்தைச் சேர்ந்தது. கோபுரத்தின் உயரம் 994 அடி; தியான மண்டபம், மகாமண்டபம், முதலியவற்றின் மொத்த விஸ்தாரம் 70,600 சதுர அடி; பழைய இந்தியக் கலையின் சிறப்பை யான் யப்பானில் கண்டது இந்த ஆலயம் ஒன்றிலேதான். அதைச் சுற்றிப் பார்க்கவும், வழிபாட்டில் கலந்து கொள்ளவும் நான்கு முறை இந்த ஆலயத்திற்குச் சென்றிருந்தேன். யப்பானில் பல்வேறு பிரிவுகளில் பரந்துள்ள ஷின்மார்க்க ஆலயங்கள் ஆயிரம் வரையில் உள்ளன. அவற்றிற்கெல்லாம் தலைமை நிலையமாக, ஹொங்காஞ்சி ஆலயம் ஆட்சி புரிகின்றது. கல்வித்தொண்டும், வைத்தியச் சேவையும், அநாதைகள் இல்லமும், கலைப்பயிற்சியும் இந்த ஆட்சியின் கீழ் செவ்வனே நடைபெறுகின்றன. இந்தப் பெரிய ஆலயமானது உள்ளும் புறமும் பரிசுத்தமாகப் பரிபாலிக்கப்படும் முறையைப் பார்த்தபோது, தென்னிந்தியாவிலுள்ள பெரியகோயில்களின் அசுத்தமான நிலை எனது உள்ளத்தில் தட்டியது. அவற்றைக் கண்ணுறும் யப்பானிய மக்கள், நமது சைவத்தைப்பற்றி எவ்வித தப்பான அபிப்பிராயங் கொள்வார்களோ என அஞ்சினேன்.

('ஆத்மஜோதி'யில் பிரசுரமான வானொலிப் பேச்சைத் தழுவியது)

# எனது யப்பான் தேசத்துப் பிரயாண

## அனுபவங்கள்

யப்பான் தேசத்தையும், 1958-ம் ஆண்டில் அங்கு செல்லும் அரிய சந்தர்ப்பத்தை எனக்களித்த சர்வமத சரித்திர மகாநாட்டையும் உன்னும்போது எத்தனையோ பழைய எண்ணங்கள் என் மனக்கண் முன் தோன்றுகின்றன. முதலாவதாக யப்பான் தேசம் ருஷியச்சண்டையில் வெற்றிபெற்று ஐரோப்பிய வல்லரசுகளின் கவனத்தையும் மதிப்பையும் ஈர்த்து நின்றவிதமும், அதனுல் அன்றைய ஆசியமக்கள் உற்சாகத்துடன் பெருமை பாராட்டிக் கொண்டமுறையுமாகும். செயின் நிஹால் சிங்கி என்ற புகழ்பெற்ற நூலாசிரியர் அவற்றைப்பற்றி எழுதிய கட்டுரைகளை வாசிக்கும் பாக்கியம் இளைஞனுக இருக்கும்போதே எனக்குக் கிடைத்தது. இரண்டாவதாக, எனது ஞாபகத்திலுள்ள முக்கிய விஷயம் 1902-ம் ஆண்டில் யப்பானில் நடைபெற வீருந்த சர்வமத மகாநாட்டிற்கு அந்த நாட்டு அரசாங்கமும் பிரமுகர்களும் ஆதரவளிக்கப் பின்வாங்கியதாகும். இது சம்பந்தமான விபரங்களை சுவாமி இராமதீர்த்தர் அவர்களின் வரலாற்று நூலில் காணலாம். வேதாந்த கேசரியாம் விவேகானந்தரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இந்தியப் பத்திரிகைகளில் பிரசாரம் பெற்ற அந்தச் சர்வமத மகாநாட்டில் கலந்துகொள்ள விரும்பி யப்பான் சேர்ந்த இராமதீர்த்தர் ஏமாற்றமடைந்தார். ஆனுல், தெய்வத் திருவருள் அவரை அங்கிருந்து அமெரிக்கா அழைத்துச் சென்று இரு ஆண்டுகட்கு மேல் அவரை அங்கே அரிய அத்யாத்ம சேவையில் ஈடுபடச் செய்துவிட்டது. தன்னலம் நீத்துப் பிறர் பொன்னலத்திற்காகவே வாழும் உத்தமர்களின்

வாழ்க்கையில் காணக்கிடக்கும் அற்புத நிகழ்ச்சி களுள் இதுவும் ஒன்றாகும்.

சென்ற அரை நூற்றாண்டு எல்லைக்குள் உலகில் எத்தனை பெரிய மாற்றங்கள் நேர்ந்துள்ளன? மக் கள் உள்ளத்திலிருந்து என்ன அற்புத முறையில் பழைய கொள்கைகள் மறைந்துள்ளன? அவற்றி னிடத்தில் எத்தனை புதுப்புதுக் கருத்துக்கள் உதித் துள்ளன? 1902-ம் ஆண்டில் மதசம்பந்தமான மகாநாடு எதுவும் முக்கியமானதல்ல எனக்கருதிய ஒரு சாதியினரே 1956-ம் ஆண்டில் சர்வமத மகா நாடு நடாத்த முயற்சி எடுத்தனர். அத்தோடு நின்றுவிடாது, ஆசியாக் கண்டத்தில் முதன் முறை யாக நடைபெறவிருந்த சர்வமத சரித்திர மகா நாட்டையும் தங்கள் தேசத்தின் தலைநகரிலே நடத் துமாறு கேட்டுக்கொண்டனர். இதற்கிணங்கி 1958-ம் ஆண்டில் நடைபெற்றதே உலகின் நாலா பக்கங்களிலுமிருந்து தத்துவ பேராசிரியர்களையும் அறிஞர்களையுங் கொண்ட ரொக்கியோ மகாநாடு. இரண்டாவது உலகப் போரால் நேர்ந்த அழிவும் அனர்த்தமுமே மக்களின் மனதில் ஆன்மீக விஷ யங்களைப்பற்றிச் சிந்திக்கும் ஆர்வத்தைத் தூண்டிய தெனச் சொல்லவும் வேண்டுமோ! தனிமனித வாழ்வில்சரி, ஒரு சமுதாய வாழ்வில்சரி, வாழ்வா னது துன்பக்காட்டில் அலையும்போது அல்லது துய ரக்கடலில் அமிழ்ந்தும் வேளையில்தான் தெய்வத் தைப்பற்றியோ ஆத்மார்த்த உண்மைகளைக் குறித் தோ சிந்திக்கும் சந்தர்ப்பம் மனிதனுக்கு வலிய வந்து சேர்கின்றதெனலாம். நான் யப்பானில் ஏழு வாரங்கள் சுற்றுப்பிரயாணஞ் செய்தது சமய ஆராய்ச்சித் தொடர்பிலாகும். எனவே, எனது பிரயாணக் குறிப்புகள் பெரிதும் அந்நாட்டுப் பழைய நாகரீகம், கலாச்சாரம், சமயம் ஆகிய மூன் றையும்பற்றியே, எனினும் முதலாவதான இப்பேச்

சில் அந்நாட்டு அரசியல், பொருளாதாரம், சமுதாயவாழ்வுபற்றியும் சிறிது கூறவேண்டியது எனது கடமைகளாகும்.

உதயசூரிய நாடாகக் கருதப்படும் யப்பான் 4,200 தீவுகளைக் கொண்டது. அவற்றுள் 500 தீவுகளில்தான் மக்கள் சீவிக்கமுடியும். ஏனையவற்றுள் சில எரிமலைகளிலிருந்து அக்கினியைக் கக்கிக் கொண்டிருப்பதை இன்றுங் காணலாம். கிழக்கு ஆசியா குறித்த பூமிசாஸ்திரப் படத்தைப் பார்க்கும் மாணவன் கண்ணில் யப்பான் தீவுகள் பெரிய, சிறிய மீன்கள்போலவும், சீனு ஓர் பெரிய வாத்தைப்போலவும், கோரியா அதின் மூக்கைப் போலவும் காட்சியளிக்குமெனலாம். யப்பானில் இன்றைய குடிசனத்தொகை மொத்தம் பத்துக்கோடியாகும். அதில் பத்தில் ஒரு பகுதியான ஒரு கோடி மக்கள் அதன் தலைநகரான ரொாக்கியோவில் வசிக்கின்றனர். இலங்கையின் முழுக் குடியிருப்பையும் ஒரு பட்டணத்துள் அடக்கினுல் எப்படியிருக்குமெனச் சற்றே சிந்தித்துப் பாருங்கள். இத்தொடர்பில் பிறிதொரு விஷயமும் சிந்திக்க வேண்டியதாகும். அதாவது இன்னும் ஒரு கோடி மக்களைக் கொண்டிராத நம் சிறு தேசத்தைப்பற்றி நாம் எவ்வளவு பெருமை பாராட்டிக் கொள்கிறோம் என்பபதாம்? ''உலகில் நமக்கு நிகர் எவர் உளர்?'' என்று கூடப் பிரசாரஞ்செய்ய நம்முள் சிலர் பின்வாங்குவதில்லை.

யப்பான் குடிசனத் தொகையைக் குறிப்பிடும் போது கவனிக்கவேண்டிய சில புள்ளிகள் உள. சென்ற மகாயுத்தத்திற்குமுன் இருபது ஆண்டுகளாக சராசரி வருஷம் ஒன்றுக்கு சனத்தொகை பத்து லட்சமாக ஏறிவந்தது. அந்நிய நாடுகளைப் பிடிக்கும் ஆசை அரசியல்வாதிகளின் மூளையில்

முளைத்தது முக்கியமாக இக்காரணம்பற்றியே. யுத்த முடிவில் இந்த நிலைபரம் முற்றிலும் மாறியுள்ளது. 1932-ம் ஆண்டில் குடும்பத்தில் சராசரி ஐந்து பிள்ளைகளாக இருந்தது. இன்று இரண்டாகக் குறைந்துள்ளது. கர்ப்பச் சிதைவுகூட சட்டரீதியாக ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாகச் சென்ற ஆண்டு மாத்திரம் பதினைந்து லட்சம் கர்ப்பச்சிதைவுகள் பதியப்பட்டுள்ளனவாம். ரொக்கியோ நகரின் வீதிகளிலும் புகையிரத நிலையங்களிலும் நமது கவனத்தை முதலில் கவருவது பல்லாயிரக் கணக்கான கன்னிகைகள் காலையில் தத்தம் உத்தியோக நிலையங்கட்கு வரிசையாகப் பிரயாணஞ் செய்யும் அழகான காட்சியாகும். விவசாயப் பண்ணைகளிலும், இயந்திர சாலைகளிலும், மீன்பிடி நிலையங்களிலும் ஆடவர் உழைக்க, ஏனைய துறைகளில் எல்லாம் பெரும்பாலும் பெண்களே கடமையாற்றுகின்றார்கள். இந்தச் சூழ்நிலையில் எதிர்கால இல்லறச் சிறப்பு எப்படி இருக்கப்போகிறதென்பதை அன்பர்கள் யூகித்துக்கொள்ளலாம்.

இந்தியாவோடும், சீனத்தோடும் ஒப்பிடும்போது, யப்பான் மிகவும் இளையநாடாகும். மஹாவீரர், கௌதமபுத்தர், கொன்பியூசியஸ், லவோற்சேபோன்ற மஹா புருஷர்கள் வாழ்க்கைத் தத்துவப்பற்றி சிந்தனையில் ஆழ்ந்து இருந்த காலத்து யப்பானிய மக்கள் பல்வேறு வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாம். ஒவ்வொரு கணமோ குலமோ தனக்கென ஓர் சிறு தேவதையை வழிபடும் இனமாய் நாகரிக ஏணியின் முதல் அடியைப் பற்றியவர்களாய் வாழ்ந்தனரெனலாம். பின்னுளில் சமயத்துறையிலும் கலாச்சாரத்துறையிலும் அவர்கள் அடைந்த முன்னேற்றமெல்லாம் இந்திய—சீன நாடுகளின் தொடர்பால் ஏற்பட்டதேயாம்.

இந்தியாவில்போல நீண்ட நதிகளையும் பரந்து விரிந்த பள்ளத்தாக்குகளையும் அங்கே காணமுடியாது. ஆனுல் பல உயர்ந்த மலைகளையும் இயற்கையாகவே அமைந்துள்ள பல வாவிகளையும் காணலாம். இவற்றின் அழகைப் பன்மடங்காகச் செய்ய நாட்டின் நாலாபக்கங்களிலும் நூற்றுக்கணக்கான நந்தவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. யப்பானின் பழைய தலைநகரான கியோற்ருவில் மாத்திரம் நூறு பெரிய நந்தவனங்கள் உள்ளன, இவற்றுள் முக்கியமானவை அவ்வக்காலத்து அரசபரம்பரைகளை நமக்கு நினைவூட்டும் முறையில் அமைந்துள்ளன. என்னுடன்கூடிப் பிரயாணஞ்செய்த பல ஐரோப்பிய, அமெரிக்க அன்பர்கள் உலகத்தின் அழகைப் பலமுறை சுற்றிப்பார்த்து ரசித்தவர்கள். அவர்களே பியூஜிமலையின் அடிவாரத்தில் இயற்கையாக அமைந்துள்ள பஞ்ச வாவிகளையும் 8200 அடி உயரமுள்ள நந்தைமலை நடுவில் பூகம்பங் காரணமாகத் தோன்றிய சச்சி வாவியையும் பார்த்துவிட்டு, இவை போன்ற இயற்கை அழகை உலகில் வேறு எந்த இடத்திலாவது காணமுடியாது எனப் புகழ்ந்தனர். யப்பான் மொழியில் ''சச்சி'' என்ருல் இன்பம். எனவே இந்த இன்பவாவி ''இகலோக இன்பத்திற்கு இன்று உறைவிடமாக மாறியுள்ளது. பரலோக இன்பத்தையும் இது தரவல்லதென்பதற்கு எனது சொந்த அனுபவம் போதிய சான்ருகும். கீழுள்ள பெரிய வாவியைத் தாண்டி மேலுள்ள சிறு வாவிக்கரையை அடைந்ததும் எவ்வித எத்தனமுமின்றி என் மனது லயமடைந்துவிட்டது. வாய் விட்டுச் சொல்ல முடியாத முறையில் உள்ளத்தில் சாந்தியும் இன்பமும் பொங்கி வழிந்தன. மலையின் மாலைக் குளிர்காற்றின் தாக்குதலையே உணரா விதத்தில் உடல் அசைவற்று நின்றுவிட்டது: அன்பர் ஒருவர் தோளில் தட்டவே, இயற்கை அழகினைக் காண்போர் அவ்வழகே காரணமாக இறைவனைத்

தியானிப்பதையும் அதனால் அடையும் பயனையுஞ் சேர்த்துக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் பாடிய பாடல் நினைவுக்கு வந்தது:

"மரகதச்சயிலம் செந்தாமரை மலர்க்காடு பூத்து
திரை செறிக்கங்கை வீசும் திவலையால் நனைந்து செய்ய
இருகுழை தொடரும் மேற்கண் மயிலொடும் இருந்த
தொப்ப
பெருகிய செவ்வி கண்டார்; பிறப்பெனும் பிணிகள்
தீர்த்தார்".

முற்கால ரிஷிகள், சான்றோர்கள், இயற்கை அன்னை அழகுடன் அரசு புரியும் இடங்களைக் கண்டதும், நிம்மதியுடன் நிச்சிந்தையுடன் இறையைத் தியானித்துப் பிறவிப் பிணிக்கு மருந்துபெறப் பொருத்தமான இடங்களாக எண்ணி அங்கே அறநிலையங்களையோ ஆலயங்களையோ அமைத்துக் கொண்டனர். இன்றைய மனிதரோ அவ்வித இடங்களை இந்திரியங்கள் இன்பம் நுகர்வதற்கு வாய்ப்பானவையாகக் கருதிக் களியாட்டங்களுக்கு வேண்டிய உல்லாச விடுதிச் சாலைகளைக் கட்டிக்கொள்கிறார்கள். பெரிய வாவியான சுசென்ஜின் மத்தியில் தியான மண்டபத்தோடு கூடிய ஓர் ஆலயமும் உண்டென்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அத்தோடு இவ்விரு வாவிகளின் அடிவாரத்தில் அமைந்துள்ள நிக்கோ என்னும் பட்டினம் அருகே புராதன ஆலயங்களைக் கொண்ட இடமுமாகும். நாகரீக வாழ்வில் மனித சமுதாயம் எவ்வளவு தூரம் வெற்றிகரமாகப் பின் சென்றுவிட்ட தென்பதை நன்கு விளக்குவதற்காகவே மறக்க முடியாத சொந்த அநுபவமொன்றை சிறிது விபரமாக இங்கு தருகின்றேன்.

யப்பானின் அரசியல் வரலாற்றைப்பற்றிப் பேசும்போது அதனை முக்கிய மூன்று பிரிவுகளாகக்

கூறலாம். எட்டாம் நூற்றுண்டுக்கு முன், பௌத்த மத வளர்ச்சிக்கு ஊற்றிடமாகவிருந்த நாரு என்னும் இடத்தைத் தலைநகராகக் கொண்டிருந்த இராச்சியம் கி. பி. 784-ம் ஆண்டில் சக்கரவர்த்தி கன்மு என்பவரால் கியோற்ருேவைத் தலைநகராகக் கொண்ட இராச்சியம் நிறுவப்பட்டது. 1868-ம் ஆண்டில் ஆரம்பித்த மெயிஜி ஆட்சி ரொக்கியோவைத் தலைநகராக்கியதும் கியோற்ருேவின் பெருமை குறைந்துவிட்டது. எனினும், அதின் புராதன மகிமை இன்னும் பேசப்படுகிறது.

சர்வமத சரித்திர மகாநாட்டில் கலந்துகொள்ளவந்த பிரதிநிதிகளை வரவேற்றுபசரித்த யப்பானிய விஞ்ஞான சங்கமும், நிர்வாகக் குழுவின் தலைவரான இளவரசர் மிக்காசா அவர்களும் எங்கள் பிரயாண ஒழுங்குகளைத் திட்டம்பண்ணிய விதம் அற்புதமானதாகும். குறுகிய கால எல்லைக்குள் யப்பானின் வெவ்வேறு சமயங்களுடனும் கலாச்சாரத்துடனும் தொடர்புடைய முக்கிய இடங்களையெல்லாம் பார்க்கக்கூடிய முறையில் பிரயாணஞ் செய்பவர் எவர்க்குங் கிட்டாத வசதிகளும் ஆலயதரிசனங்களும் எங்களுக்கு மிகவும் அருமையான முறையில் கிடைத்தன, அக்காட்சிகள் குறித்த விபரங்களை அடுத்த பேச்சில் எடுத்துரைப்பேன். மகாநாடு கூடுவதற்கு மூன்று வாரங்கட்கு முன்னரேயே யப்பானை அடைந்த காரணத்தால் நிர்வாகக் குழு போட்ட அட்டவணைக்கும் அப்பால் பல தவ நிலையங்களைத் தரிசிக்கும் பாக்கியமும் எனக்குக் கிடைத்துவிட்டது. அத்தோடு அக்காலத்தில் நடைபெற்ற மூன்று வேறு மகாநாடுகளின் நிகழ்ச்சிகட்குச் சாட்சியாயிருக்குஞ் சந்தர்ப்பமும் கிடைத்துவிட்டது. இவற்றிற்கெல்லாம் என்னை அழைத்துச் சென்ற அன்பர்களுள் ஒருவர் யப்பானில் பார்க்க வேண்டிய பிரயாண வசதிகள் விபரிக்கப்பட்ட

நூலொன்றை (Tourist Guide Book) எனக்கு அன்ப ளிப்பாகத் தந்துதவினர். அதைத் திறந்து பார்த்த தும் அதிலடங்கிய "மோட்டார் சாரதிகள் பிரார்த் தனை", (Prayer for Motorists) எனக்கு அளவற்ற மகிழ்ச்சியை ஊட்டியது. இப்பேச்சை முடிக்குமுன் அதனை ஆங்கிலத்திலும் தமிழிலும் எடுத்துக்கூறி, எனது மகிழ்ச்சியை உங்களெல்லோருடனும் பங்கிட் டுக் கொள்ள விரும்புகிறேன்.

Teach us to drive through life without skidding into other people's business teach.

Preserve our brake lining that we may stop before we go too far.

Help us to hear the knocks in our own motors and close our ears to clashing of other people's gears.

Absolve us from the mania of trying to pass the other motor car on a narrow road.

Open our eyes to the traffic signs, and keep our feet on the brakes.

பிறர் விஷயங்களில் தலையிட்டுப் பக்கஞ்சாய்ந்து விழாமல் வாழ்க்கை ரதத்தை ஓட்டிச் செல்ல கற் பிப்பாயாக!

வெகுதூரஞ் செல்லாமலே அதை நிற்பாட் டக் கூடியதாய் வேகமடக்கும் கருவியை நல்ல நிலை யில் வைத்துக் காப்பாற்றுவாயாக!

சொந்த இயந்திரங்களின் சத்தத்தையே எங் கள் காதுகள் கேட்கவும் பிறர் ரதங்கள் போடும் சத்

தங்கட்கு அவை செவிடாய் இருக்கவும் அருள்வா யாக!

ஒடுங்கிய பாதையில் முன்செல்லும் ரதத்தைத் தாண்டிச் செல்ல விரும்பும் பைத்தியக் குணத்திலி ருந்து காப்பாற்றுவாயாக!

எங்கள் கண்கள் எப்போதும் பிரயாணக் குறி களைக் கவனிக்கவும், கால்கள் வேகமடக்கும் கருவி யில் தங்கி இருக்கவும் உதவுவாயாக!

இந்தப் பிரார்த்தனையானது இந்த நாட்டில் ஓடும் மோட்டார் ஒவ்வொன்றிலும் கொட்டை எழுத்தில் சாரதியின் பீடத்தின் முன் ஒட்டியிருந் தால் எவ்வளவு நலமாயிருக்கும்?

(‘ஸ்ரீ லங்கா’ என்னும் அரசாங்க சஞ்சிகையில் வெளிவந்த வானொலிப் பேச்சைத் தழுவியது.)

## பூரண வாழ்க்கை போதித்த
# ஜப்பானிய புண்ணியவதி

சென்ற நூற்றுண்டில் உலகின் நாலா பக்கங்களிலும் அறிவுச் சுடர்மணிகள், ஆன்ம வீரர்கள் பலர் தோன்றியுள்ளனர். பாரததேசத்திலும் வட இலங்கையிலும் வாழ்ந்த பெரியார்களின் வரலாற்றை நாமெல்லோரும் நன்கறிவோம். அதேபோல் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தோன்றிய டால்ஸ்டோய் (Tolstoi), கேதே (Geothe), பிளவஸ்க்கி அம்மையார், அப்துல் பகாய் (Abdul Bahai), எமர்ஸன் (Emerson), வில்லியம் ஜேம்ஸ் (William James), விட்மன் (Whitman) முதலாய பெரியார்களின் வரலாறுகளையும், உபதேசங்களையும் ஆங்கிலத்திலும், இந்திய மொழிகள் பலவற்றிலும் படித்தின்புறும் பாக்கியம் பெற்றுள்ளோம்.

ஆனல், இவர்கள் எல்லோரிலும் பார்க்கப் பன்மடங்கு உயர்ந்த மேதாவியாய், அரியதீர்க்கதரிசியாய், இணையற்ற இல்லற ஞானியாய் விளங்கிய ஜப்பானியப் பெண்மணி "மிக்கி நகயாமாவின்" பெயரை இந்தியநாட்டு எம் மொழியினும் இது வரையில் பார்த்ததில்லை. இந்த அம்மையாரின் திருநாடு, நாம் வாழும் ஆசியாக்கண்டத்தைச் சேர்ந்ததென்னும்போது நாம் வெட்கித் தலைகுனியவேண்டிய நிலையில் உள்ளோம். இற்றைக்கு நூற்றறுபது வருடங்களுக்கு முன், அன்னர் அவதரித்த "சோயாஷிக்கி" என்னும் கிராமம், எளிய கமக்காரர் வாழ்ந்த முப்பது சிறு குடிசைகளைக் கொண்டதாய் இருந்தது. இன்று அந்த இடம், ஆன்ம நேய ஒருமைப் பாட்டில் எழுந்த "டென்றி" என்னும் அழகான பெரிய நகரமாய், ஜப்பான் தேசம் முழுவதற்குமே

பெருமை தேடிக் கொடுக்கும் புதிய பட்டணமாய், பல்வேறு நாடுகளிலும் இருந்து யாத்திரீகர்களை அழைத்துக் கொண்டிருக்கும் புண்ணிய நிலையமாய் மிளிருகின்றது. நிரந்தரமாய் அங்கு குடியிருப்போர் தொகை 60,000 ஆகும்.

அம்மையாரின் வாழ்க்கைவரலாறு மிகவும் அற்புதமானது. அதன் முதற் கூறான நாற்பது ஆண்டுகளில் அன்னாரை அரிய புத்திரியாய், பிரிய பத்தினியாய், அன்பே உருவான தாயாகக் காண்கிறோம். அவருக்கு தெய்வீகக் காட்சி கிடைத்தது கி.பி. 1838ஆம் ஆண்டு பொருந்திய நாற்பத்தொராவது வயதில் ஆகும். இவர் குலம், கோத்திரம் சொத்துரிமை, பதவி முதலாயவைகளின் தொடர்புடன் ஆத்மீக வாழ்வில் முன்னேற முடியாது, உண்மையான சமயத் தொண்டும் செய்ய முடியாது என்றுணர்ந்து அவற்றையெல்லாம் முற்றிலும் துறந்தனர். அதன்பின் ஐம்பது ஆண்டுகள் உடலோடு உலாவி, செயற்கரும் செய்கைகள் பல செய்துமுடித்தனர். ஆத்மீக வாழ்வின் ஆரம்ப தசையில் அவர் அருளிய பாடல்கள்,

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே".
"அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

என்னும் தாயுமானவர் திருவாக்கை நமக்கு நினைவூட்டுகின்றது. நம் இனத்தாரைப் பொறுத்த மட்டில் இன்றும் ஏட்டளவில் பாட்டாக இருக்கும் இவ்விரு பாடல்களும் என்ன அற்புதமான முறையில் கருமமாக மாறியுள்ளதென்பதை உண்மையாக உணரவேண்டுமாயின், ஒருவர் 'டென்றி' நகருக்கு

கட்டாயம் யாத்திரை செய்யவேண்டும். எழுத்தாலோ, பேச்சாலோ எவ்வளவு விளக்கினலும் அதனை முற்றிலும் அறிந்துகொள்ள முடியாது.

ஜப்பானில் தொன்று தொட்டு இருந்து வந்த 'ஷின்டோ' மதம், சென்ற நூற்றுண்டில் பதின்மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் கடைசியாகத் தோன்றியது இந்த அம்மையார் நிறுவிய 'டென்றி' மதம் என்னும் அன்பு மார்க்கம். அதன் அடிப்படைத் தெய்வக் கொள்கை அருட்பிரகாச வள்ளலார் விளக்கிய,

"தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்
தன்னை நிகரில்லாத தனித் தலைமைத் தெய்வம்
வாயார வாழ்த்துகின்றேர் மனத்தமர்ந்த தெய்வம்'

என்னும் அரிய தத்துவத்தைப் பூரணமாய் ஒத்துள்ளது. வள்ளலாரைப் போலவே அம்மையாரும் தமது புகைப்படமெடுக்க எவருக்கும் உத்தரவு கொடுக்கவில்லை; வேறு எவ்வித உருவமாவது வரைந்து வழிபாடு செய்யவும் சம்மதிக்கவில்லை. இந்த மதம் பழைய சம்பிரதாயங்கள் பலவற்றிற்கு முரண்பட்டதாயும், சக்கரவர்த்தியைத் தெய்வமாகப்பேணும் நெறியைப் புறக்கணிக்கும் முறையிலும் போதிக்கப்பட்ட காரணத்திஞல், அம்மையாரும், அவரது அடியார்களும் அரசாங்கத்தின் சீற்றத்திற்கு ஆளாயினர். 1875-ம் ஆண்டு தொடக்கம் அம்மையாரின் மகாசமாதித்தினமான 1887-ம் ஆண்டு ஜனவரி 26-ந் திகதி வரையில் உள்ள பன்னிரண்டு ஆண்டு எல்லைக்குள், அன்னார் பதினேழு முறை சிறைவாசம் இருந்து சொல்லொணுத் துன்பம் அனுபவித்ததாக அறிகின்றோம். அம்மையார் மறைந்து 21 ஆண்டுகள் கழிந்தபின்தான் (அதாவது 1908-ல்) அவர் நிறுவிய அன்பு மதம்

அரசாங்கத்திஞல் அங்கீகரிக்கப்பட்டது. 115 ஆண்டுகள் பூதவுடலில் வாழப்போவதாக நம்பி இருந்த அடியார்கள், அவர் தமது 90ஆவது வயதில் உடலேவிட்டுப் பிரிந்தபோது அளவற்ற கவலேக்குள்ளாயினர். அவர்களின் கிலேசத்தை முன்கூட்டியே நன்குணர்ந்த அம்மையார், தாம் உடலே உதறித்தள்ளியபோதிலும் நீடித்த காலம் அந்த இடத்தில் அவர்களுடன் கூடஇருந்து காப்பாற்றப்போவதாக வாக்களித்த பின்னரே மறைந்தனர். அவரின் பூதவுடல் அடக்கஞ் செய்யப்பட்ட இடத்தில் அழகான பெரிய ஆலயம் எழும்பியுள்ளது.

அதனேச் சுற்றி மக்கள் தொண்டிற்காக நிறுவப்பட்டுள்ள அறநிலேயங்கள் அளவற்றன. ஆரம்ப பாடசாலே முதல் சர்வகலாசாலே வரைக்கும் கல்வி நிலேயங்கள் பல உள்ளன. சர்வகலாசாலேக்கருகில் பெரிய நூல்நிலேயமும், நூதனசாலேயும் அமைந்துள்ளன. குறித்த நூதனசாலேயில் அம்மையாரின் சொந்தக் கையெழுத்திலேயே அமைந்த அவர் இயற்றிய 1711 பாடல்கள் நீண்ட கண்ணுடி அலுமாரிகளில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன. 15,000 மாணவ மாணவிகள் தங்கியிருப்பதற்கு ஆறடுக்கு மாளிகையொன்று விடுதிச்சாலேயாய் அமைந்துள்ளது. அநாதைப் பிள்ளேகட்கும், வயோதிகர்கட்கும் தனிப்பட்ட இல்லங்கள் உள்ளன, நோயாளிகளே வைத்துப் பராமரிக்க வைத்தியசாலேயும், க்ஷயரோக ஆராய்ச்சிக் கூடமொன்றும், மருந்துச் சாலேகளும் நிறுவப்பட்டுள்ளன.

சர்வகலாசாலேயில் பிறமொழிப் பயிற்சிக்கூடம் இணேக்கப்பட்டுள்ளது. அதில் சீனம், ஆங்கிலம், ஜேர்மன், பிரைன்சு, ரஷியன், ஸ்பானிஸ், இந்தோனேஷியன், கொரியன் ஆகிய எட்டுப் பிரிவுகள் உண்டு. சர்வகலாசாலேப் படிப்பு, முடிந்து சமயத்

தொண்டுக்கே தம் வாழ்வை அர்ப்பணம் செய்வோர் பயிற்சி பெறுவதற்காக சமயபோதனு பாடசாலையும், தியான மண்டபமும் நிறுவப்பட்டுள்ளன. உடற்பயிற்சிக்கு வேண்டிய நிலையங்கள் நவீனமுறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையத்தில் கொண்டாடப்படும் தினங்கள் மூன்று. அவற்றுள் அம்மையார் தெய்வக் காட்சி பெற்ற தினமாகிய ஒக்டோபர் 26-ந்தேதி, மாதந்தோறும் கொண்டாடப்படும் விழாவாகும், அவரின் பிறந்த தினமாகிய ஏப்ரல் 18-ந் தேதியும் மகாசமாதி தினமாகிய 26-ந் தேதியும் வருடாந்த விழாக்களாகும். இவ்விழாக்களில் கலந்துகொள்ள லட்சக்கணக்கானமக்கள் நாட்டின் நாலாபக்கங்களில் இருந்தும், பிறநாடுகளில் இருந்தும் வந்து கூடுவர். அவர்கள் தங்குவதற்கென மொத்தம் இரண்டு லட்சம் மக்களை ஒரேமுறையில் அடக்கக்கூடிய விடுதிச் சாலைகள் இதுவரையில் 150 அமைக்கப்பட்டுள்ளன. வேறு பல புதுக்கட்டிடங்களும், கட்டப்படுகின்றன; 'அந்தமில்லாக் கட்டிடவேலை' என்பது அங்கு வாழும் அடியார்கள் பலரின் வாயில் அடிக்கடி மிளிரும் வாக்கியமாகும். கட்டிடவேலையில் நிலையத்தின் தலைவர் முதல், ஐந்துவயதுக் குழந்தை வரை மண் சுமந்தும், மரந்தூக்கியும், உடலால் உழைக்கின்றார்கள் என்பது முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய விஷயமாகும். அம்மையார் சாதனை மூலம் விளக்கியபோதனையின்படி, சமய சாத்திரம் சொல்லிக் கொடுப்பதும், சமையல் அறையில் பாத்திரம் கழுவுவதும், இடத்தைச் சுத்தப்படுத்துவதும் ஆகிய எல்லாம் ஒரேவித தொண்டாகும். சேவையில் உயர்வு தாழ்வு என்பதே இல்லை. 'டென்றி' நகரில் வாழும் மக்களின் குறிக்கோள் இதுவாகும்.

இப்புதிய சமயத்தின் பெயரால், ஜப்பானின் பல பாகங்களிலும் வேறு பல நாடுகளிலும் 15,151 கோயில்கள் நிறுவப்பட்டுள்ளன. அவற்றில் தொண்டாற்ற இதுவரையில் ஒரு லட்சத்தோராயிரம் போதகர்கள் போதனைசாலையிற் பயிற்சிபெற்று வெளிவந்துள்ளனர். இந்த ஒரு உண்மையைக் கொண்டே ஒரு தனிப் பெண்ணின் ஆத்மசக்தி எவ்வித அற்புதமான சமயத் தொண்டைப் புரிந்து வருகின்றதென்பதை அன்பர்கள் ஊகித்துக் கொள்ளலாம். விரிவஞ்சி மிகவும் சுருக்கமாகவே விபரங்கள் தந்துள்ளோம். சமயப் பூசலும், சாதிப் பிணக்குகளும், மொழிப்பிரச்சினைகளும் இல்லாத இடத்து, மக்களின் பொதுநல சேவை, அரசாங்கத்தினதும், அரசியல்வாதிகளினதும் தொடர்பெதுவுமேயின்றி, எவ்வாறு மக்களின் வாழ்வை எல்லாத் துறையிலும் முன்னேற்றக்கூடும் என்பதற்கு 'டென்றி' நிலையம் ஓர் ஒப்பற்ற எடுத்துக்காட்டாகும்.

('ஆத்மஜோதி'யிலிருந்து எடுக்கப்பட்டது)

# எனது ஐரோப்பிய யாத்திரை

## அனுபவங்கள்

### 1. முன்னுரை

ஐரோப்பிய யாத்திரை அநுபவங்கள் என்னும் இத்தலையங்கம் சிலருக்கு வியப்பைக்கொடுக்கலாம். வியாபார அலுவலாக ஜேர்மனியில் சுற்றுப்பிரயாணஞ் செய்துவிட்டு, இங்கிலாந்து சென்றுகொண்டிருந்த ஓர் பம்பாய் இந்துவை ஃபிருங்போட் விமான நிலையத்தில் சந்திக்க நேர்ந்தது. நமது நாட்டு வழக்கப்படி, ஊர், பேர் உத்தியோகம் முதலியவற்றை விசாரித்த பின்னர், ''நீங்கள் ஐரோப்பியா வந்த நோக்கம் யாதோ?'' என்று அவர் கேட்டார். ''யாத்திரை செய்கிறேன்'' என யான் இரு சொற்களில் பதில் சொன்னதும் அவர் உண்மையில் திடுக்கிட்டுப் போனார். ''என்ன ஐயா! இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுக்கு யாத்திரைக்காக வரும் இந்துவும் இருக்க முடியுமா?'' என்று இரண்டாம் கேள்வி போட்டார். ''இந்தியாவில் வியாபார நிலையங்களும், இயந்திரசாலைகளும் இருப்பதுபோலவே, ஐரோப்பாவில் யாத்திரைக்குரிய தலங்கள் உள்ளன; தரிசிக்கவேண்டிய பெரியார்கள் உளர்'', என அடக்கமாய்ப் பதில் சொன்னேன். ''உங்கள் சுத்த வெள்ளைப் பருத்தி உடையே இக்கண்டத்திற்கு வித்தியாசமாகத்தான் இருக்கிறது'' எனப் புன்சிரிப்புடன் கூறிவிட்டு, ''முன்னொருதரமும் பரிஸ் நகருக்குப் போயிராத நீங்கள், ஃபிரெஞ்சு மொழி தெரியாத நிலையில், இரவு பிரயாணத்தை எடுத்தது புத்தியான விஷயமல்ல. ஆகையால் நடுநிசியில் பரிஸ் சேர்ந்ததும் கவனமாக இருங்கள்'' என்று எச்சரிக்கை கொடுத்தார். அவர் அன்புடன் கூறிய புத்திமதிக்கு நன்றி கூறி ''உள்ளத்தில் அன்பு

என்னும் மொழி சதா பேசிக்கொண்டிருந்தால் எல்லார்க்கும் அது விளங்கும், எவ்வித தீங்கும் நேராது' எனச் சொல்லிப் பிரிந்தேன். அதே அன்பருடன் பின்னர் ஒரே விமானத்தில் பம்பாய்க்குப் பிரயாணஞ் செய்யும் சந்தர்ப்பத்தை திருவருள் கூட்டியது. அப்போது, ஐரோப்பாவில் யான் பெற்ற சில அற்புத அனுபவங்களைக் கேட்டு அவர் முன்னிலும் பன்மடங்கு வியப்புற்றார்.

எந்த விஷயத்திலும்சரி, நமது நோக்கம் நாம் வாழ்க்கையைப்பற்றிக் கொண்டுள்ள லட்சியத்தைப் பொறுத்தே அமையும். வாழ்க்கையை மக்கள் பல கண்கொண்டு பார்க்கின்றனர். அதை ஒரு பெரும் போராட்டமாகக் கருதுவோருண்டு. களியாட்டமாகவோ, சூதாட்டமாகவோ எண்ணுவோருண்டு. கடுந்திண்டாட்டமாகச் சிந்தித்து வருந்துவோருண்டு, "நாடகமே உலகம்" என்று சொல்லி வாழ்ந்து செல்வோருமுண்டு. இவ்வாறு வெவ்வேறு விதத்தில்கருதும்மக்கள்எல்லாத்தேசத்திலும்உளர். இவர்கள் மத்தியில் வாழ்க்கையை ஓர் யாத்திரையாகப் பேணும் மக்களும் வாழவே செய்கின்றனர். சிவத்திலிருந்து வந்த சீவன், மறுபடியும் சிவத்தை நோக்கிச் செல்வதே மனிதப் பிறவியின் நோக்கம் என்பது அவர்கள் கருத்து. அவர்கள் தொகை சிறிதாயிருக்கலாம் ஆனல் இச்சிறு கூட்டத்தினரை நாம் விரும்பித்தேடின், எல்லா நாடுகளிலும், வெவ்வேறு மொழிபேசும் வித்தியாசமான சமயநெறிகளைப் பின்பற்றும், மக்களிடையே சந்திக்கமுடியும். யான் பெற்ற அநுபவங்கள் இப்பேருண்மையை ஸ்திரப்படுத்திவிட்டன. பரமார்த்திகம் ஆசியாவின் தனித்தர்மமென்றே, உலகாயதமே, ஐரோப்பாவின் சாதாரண தன்மையென்றே இன்று எவராவது கூறமுடியாது. இருபதாவது நூற்றாண்டில் இரண்டும் எல்லாக் கண்டங்களிலும் பரவியுள்ளன.

ஒன்று கூடியும் மற்றையது குறைந்தும் இருக்கலாம்; வித்தியாசம் அம்மட்டே.

அடுத்தபடியாகக் கூறவேண்டிய பிறிதோர் முன்னுரையும் உண்டு. எனது ஐரோப்பியப் பிரயாணம், முக்கியமாக ஜேர்மனியில் மார்பேக் சர்வ கலாசாலையில் நடைபெற்ற சர்வமத சரித்திர மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக என்பதைப்பலர் அறிவார்கள். ஆனால், யாத்திரையின் அட்டவணை அமைப்பதற்குத் தூண்டுகோலாகவிருந்த அந்தரங்கக் கருத்துக்கள் சில உள. தொடர்ந்து வரப்போகும் இக்கட்டுரைகளை அன்பர்கள் வாசித்து ரஸித்துப் பயன் அடைவதற்கு, இக்கருத்துக்களையும் விளக்க வேண்டியது எனது கடமையென நம்புகிறேன். அன்பர்கள் இதனைத் தற்புகழ்ச்சியாகக் கருதார்கள் என்பதும் எனது நம்பிக்கை.

சின்னஞ் சிறு வயதிலிருந்தே என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது அடியார்பக்தி. சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருத்தொண்டத் தொகை முழுவதையும் மனப்பாடமாகச் சொல்லும் புண்ணியம் எனக்கு எட்டு வயதிலேயே கிடைத்த ஒன்று. அக்காலக் கல்விமுறை அளித்த அரும்வாய்ப்பு இது. அப்பதிகத்தின் பத்தாவது பாடல் என்றுமே என் சிந்தனையில் இருந்துள்ளது. அறிவு மலர மலர, ஆராய்ச்சி வளர வளர, அதனால் உள்ளம் விரிய விரிய, ''அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்'' என்ற சுந்தரர் வாக்கின் அருங்கருத்தும் விரிந்து கொண்டே வந்தது. என்னைப் பொறுத்த மட்டில், சைவசமயத்தின் சமரஸ மாண்பின் தனிச் சிறப்பிற்கு வித்திட்டது இந்த ஒருவரியேயாம். இதற்கு விளக்கம் தந்த சேக்கிழார் சுவாமிகள் ''மூவேந்தர் தமிழ் வழங்கும் நாட்டுக்கப்பால், முதல்வனார் அடிசார்ந்த முறைமையோடும்'' என

இடத்தால் அப்பாலாந் தன்மையையும், ''நாவேய்ந்த திருத்தொண்டைத் தொகையிற் கூறும் நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்'' எனக் காலத்தால் அப்பாலாம் இப்பாலாம் தன்மையையும், அருமையாய்க் காட்டிய விதமானது. எனது ஆர்வத்திற்கும் ஆராய்ச்சிக்கும் அரை நூற்றாண்டு காலமாக ஆதரவளித்து வந்துள்ளது.

''அப்பாலும் அடிசார்ந்த அடியார் பெருமை'' சேக்கிழார் புராணம் அருளிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் வாக்கிலும் அருமையான, மிகத்தெளிவான விளக்கம் பெற்றுள்ளது. அவர் பாடல் பின்வருமாறு:—

''தாராரு மூவேந்தர் பயிலுந் தொல்லைத்
　　தமிழ் நாட்டப்புறத் திறைவன் சரணஞ்சார்ந்த
சீராருந் தொண்டர்களு மண்டரேத்துந்
　　திருத்தொண்டத் தொகையருளாற் செப்புங்காலத்
தேராருந் தொடையிலுரு திப்பாலப்பா
　　லெந்தை பிரானடியடைந்த வியல்பினோரு
மாராத காதலுடையவர் களன்றே
　　வப்பாலு மடிச்சார்ந்த வடியார்தாமே.''

அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிற்கும் இறைவன் குருமார் வாயிலாக, அடியார்க்கு அவரவர் பக்குவத்திற்கும் பூர்வ வாசனைகட்கும் பொருந்திய பல நெறிகளை அருளுகிறான். எல்லா மஹான்களிடத்தும் ஒளிர்வது அந்த இறைவன் ஒருவனேயாதலின், அவர்களுள் உயர்வு, தாழ்வு இல்லை. அவர்கள் அனைவரும், பழையவர்களும் புதியவர்களும், உணர்வில் ஒருவரே. இப்பெரியார்களின் வருகை ஒரு தனிச் சாதியினர்க்கோ பொருந்தும் தனிச்சிறப் பல்ல. எல்லா நாட்டினர்க்கும் எல்லா மதத்தினர்க்கும் பொதுவான ஒன்று அது,

கால தேச வர்த்தமானங்கட்குப் பொருந்த உலகுக்கு உய்யுநெறி காட்டிய உத்தமர்களின் சரிதைகளையும் உபதேசங்களையும், சாதி, மத, மொழி நிற வேற்றுமை எதுவுமின்றிக் கற்பது எனது ஆன்மீக சாதனையில் முக்கிய இடம்பெற்ற உண்மையை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். இதன் பயனாக, அஸிசி ஃபிரான்சிஸ் முனிவரதும், அவரது உத்தம சீடரும், உலகப் புகழ்பெற்ற ஞான சித்தருமான செயின்ற் அந்தோனியாரதும் சமாதிக் கோயில்களுக்கு யாத்திரை செய்ய வேண்டுமென்ற பேரவா நெடுங்காலமாக என் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. இப்பிறப்பில் ஐரோப்பா செல்லும் வாய்ப்புக் கிடைப்பின் முதலில் அந்த இரு தலங்கட்குமே செல்வதென விரதமுங் கொண்டிருந்தேன்.

## 2. எகிப்துக்காட்சி

1960-ம் ஆண்டு யூலை 4-ந் தேதி பின்னேரம் றத்மலானையிலிருந்து புறப்பட்ட K. L. M. விமானம் அடுத்தநாள் அதிகாலையில் கெயிரோ நகர் சேர்ந்தது. சூரிய பகவானுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாட கீழ்த்திசை நோக்கி இருப்பதுபோல் அமைந்திருந்த சிங்க சரீரியின் (Sphinx) அற்புதக் காட்சி எனது கவனத்தை முதலில் ஈர்த்தது. அதன்பின் அதன் அருகிலுள்ள பெரிய சூசிகாக்கிரக கோபுரத்தைக் கண்ணுற்றேன். (Great Pyramid) சரித்திர காலத்திற்கு முன் உலகின் மிகவும் தொன்மையான நாகரீகத்தை நிறுவிய மக்களால் கல்லில் சித்திரிக்கப்பட்ட சிங்க சரீரி கடல் கொண்ட அற்லாண்டிஸ் கண்டத்தின் ஞாபகச் சின்னமாய் விளங்குகிறதென்பதே ஆராய்ச்சியாளர்கள் முடிவு. இன்று வனாந்தரமாகவுள்ள சகாரா முன்னர் சமுத்திரமாக இருந்ததாம். சலப் பிரளயங் காரணமாக அற்லாண்டிஸ் கண்டம் அழியுமுன், அங்கு குடியிருந்த பழங்குடிகளில் சிலர் நீல

நதிக் கரையில் குடியேறித் தங்கள் பழைய நாகரீகத்தின் உன்னத சின்னங்கள் சிலவற்றையும், வானூல் சாஸ்திரத்தையும் சமய சாஸ்திரக் கலைகளையும் காப்பாற்றியுள்ளார்கள். கிரேக்க ஞானியான பிளாற்ரோ, எகிப்திலிருந்த புராதன ஹெலியோபொலிஸ் என்னும் சர்வகலாசாலையில் பதின்மூன்று வருஷங்கள் கல்வி கற்றபோது, அக்காலத்தில் அங்கு பேராசிரியர்களாகவிருந்த குருமார்களிடமிருந்து அற்லாண்டிஸ் மக்களின் சமய நெறியைப்பற்றிச் சில நுட்பமான கருத்துக்களை அறிந்து கொண்டதாகத் தெரியவருகின்றது. நீரில் அமிழ்ந்திப்போன கண்டத்தின் நடுமத்தியில், மேல்தளம் தட்டையான ஓர் உயர்ந்த சூசிகாக்கிரக கோபுரம் இருந்ததாகவும் அதன் உச்சிமேல் சூரியபகவானுக்கு ஓர் ஆலயம் அமைக்கப்பட்டிருந்ததாகவும் அறிகின்றோம். இன்று எகிப்தில் நாம் காணும் குறித்த பெரிய கோபுரம் அதின் ஞாபகச் சின்னமாகவே நிறுவப்பட்டதாம். ஆமென்—ரு என அழைக்கப்படும் கதிர்த்தெய்வமே அங்கே தொன்மையாக வழிபட்ட கடவுளாகும். அத்தெய்வத்தைப் பாராட்டும் தோத்திரத்திற்கும் இருக்கு வேதம் மூன்றும் மண்டலத்தில் அறுபத்திரண்டாவது சூக்தத்தில் வரும் காயத்ரி மந்திரத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. அம்மட்டோ! எகிப்தில் வழிபடப்பட்ட ஏனைய தெய்வங்களின் நாமங்களைச் சொல்லிலக்கண ரீதியாக ஆராயும் போது இந்துமதத் தெய்வங்களின் பெயர்களுடன் நெருங்கிய தொடர்பு இருப்பதைக் காணலாம். உதாரணமாக: ஒசிறிஸ்—ஈச்வரன், ஐசிஸ்-ஈச்வரி, ஹொறஸ்—ஹரா, சிறியஸ்—சூரிய, ஒசிறிஸ் வழிபாடு சிந்துவெளி சிவவழிபாட்டைப் பெரிதும் தழுவியுள்ளது. இரண்டிற்கும் இலிங்கக்குறி பொதுவாகும். மிருக உடலில் மனித முகத்துடன் ஓர் பெரிய விக்கிரகத்தைச் சிருஷ்டி செய்த பண்டைக் கால மக்களின் கருத்து எதுவாயிருப்பினும், அதின்

தோற்றமும் அமைப்பும் இன்றைய மனிதனுக்கும் நல்லறிவூட்டும் முறையிலேயே உள்ளதெனலாம். அதாவது, பரிணாமப்படியில் மனிதன் எவ்வளவு தான் வளர்ந்துவிட்டபோதிலும், அவனிடமுள்ள விலங்குக்குணம் இன்னும் அடக்கமுடியாத நிலையிலேயே இருக்கிறதென்பதாம். சிங்கசரீரி கிழக்கு நோக்கியிருக்க எகிப்திய மன்னர்களின் கல்லறைகள் மேற்கு நோக்கியிருப்பதிலும், வாழ்வினதும், மரணத்தினதும் தத்துவங்களை நாம் யூகித்துணர இடமுண்டு. விரிவஞ்சி இத்துடன் நிறுத்திக் கொண்டு, ரோமாபுரிக்குச் செல்வோம்.

## 3, ரோமாபுரி ஸ்தலங்கள்

கெயிரோவுக்கும் ரோமாபுரிக்குமுள்ள தூரத்தை ஆகாயவிமானம் மூன்றரை மணித்தியாலத்தில் தாண்டியது. எதிர்பார்த்த அன்பர்கள் இருவரில் ஒருவர்தானும் விமான நிலையத்தில் என்னைச் சந்திக்க வரவில்லை. அதனால் எனக்கு எவ்வித ஏமாற்றமோ கிலேசமோ ஏற்படவில்லை. திருவருளையே முற்றிலும் நம்பிப் புறப்பட்ட எனக்கு ஆங்காங்கு வழிகாட்ட அன்பாகள் சேர்வார்களென்ற அளவற்ற விசுவாசம் இருந்தது. அடுத்தடுத்து இத்தாலியில் நிகழ்ந்த சம்பவங்கள் எனது நம்பிக்கையை மேலும் ஸ்திரப்படுத்தும் விதத்தில் அமைந்துவிட்டன. இத்தாலிய மண்ணில் கால்பட்டதும், அத்யாத்மத் துறையில் அதன் நடுநாயகமாக விளங்கும் அஸிஸியைப்பற்றிய எண்ணமே முதலில் வந்தது. திரும்பிவரும் மார்க்கத்திலும் ரோமாபுரியில் தங்குவதற்குத் திட்டம் இருந்தபடியால், அடுத்த புகையிரதத்திலேயே அஸிஸிசெல்ல ஆர்வங்கொண்டேன். விமான நிலையத்தில் உத்தியோகம் பார்க்கும் கன்னிகையிடம் எனது உள்ளக்கிடக்கையை வெளியிட்டேன். கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த அப்பெண்

எனது பக்தியைப் பாராட்டிய பின்னர், ''ஐயா முதன் முதலாக ரோமாபுரிக்கு வந்துள்ளீர்கள். இது பார்க்க வேண்டிய பழைய நகரம். பெரிய ஆலயமும் உண்டு. நாளை நடப்பதை ஆர் அறிவார்? திரும்பி வரும் வழியில் சந்தர்ப்பம் கிடைக்காவிட்டால் கவலைப்படுவீர்கள். பெருஞ் செலவில்லாமல் தங்கக் கூடிய விடுதிச்சாலையை நான் ஒழுங்கு செய்கிறேன்'' என்று அன்புடன் புத்திமதி கூறினுள். அக்கன்னியின் பேச்சில் நான் வழிபடும் தேவியின் கட்டளையையே கண்டேன். மொத்தம் முப்பது மணித்தியாலம் கழிக்க ஒழுங்கு செய்து கொண்டு விடுதிச் சாலையையடைந்தேன். இத்தாலிய மொழி தெரியாத காரணத்தால் எவ்வித கஷ்டமுந் தோன்றவில்லை. இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பயனுக ஆங்கில மொழியின் செல்வாக்கு ஐரோப்பாவின் பல நாடுகளிலும் வளர்ந்து வருகிறது. நொவெல் இலக்கியப் பரிசு பெற்ற ஜேர்மன் அறிஞர் தொமஸ்மான் அவர்கள் இந்த நூற்றுண்டு முடிவாகுமுன் உலகின் பெரும்பாலான நாடுகளில் ஆங்கிலம் தாய்மொழியோடு இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்படும் எனக்கூறியிருப்பது இங்கு நினைவுக்கு வருகின்றது. அண்மையில் ஹம்பேக் நகரில் நடைபெற்ற ஐரோப்பிய நாட்டுக் கல்வி மந்திரிகள் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானமும் அதற்கு ஆதரவளிக்கின்றண.

ரோமாபுரியில் முதல் தரிசித்த இடம் செயின்ற் பீற்றர் தேவாலயம். பிரமாண்டமான கட்டிடம். அங்கிருந்து வேறு சில இடங்களுக்குச் சென்று பழைய நாகரீகத்தின் சின்னங்களாகப் பேணப்படும் காட்சிகளைப் பார்த்தேன். சன நெருக்கடியும் சத்தமும் அமைதியை விரும்பும் எனது மனுேநிலைக்குப் பிடிக்கவே இல்லை. தெருக்களின் எந்த மூலைமுடுக்குகளைப் பார்த்தாலும் சிற்றுண்டிச் சாலைகளையும்

அவற்றின் முன்வரிசையாக நிற்கும் ஆண்களையும் பெண்களையும் குழந்தைகளையும் பெருங்கூட்டமாகக் காணலாம். இது ஐரோப்பாவிலுள்ள தலைநகரங்கள் எல்லாவற்றிலும் காண்பதற்குள்ள பொதுக் காட்சியேயாம். இந்தச் சூழலில், 'இல்லம்' என்ற ஒன்று உண்டா? அங்கே சமையல் பாகமும் நடக்கிறதா? என்ற கேள்விகள் எழும்பாமல் இருக்க முடியாது. நவீன நாகரீக வாழ்வு மக்களுக்கு நகர வாழ்வில் அடக்கமுடியாத ஓர் மோகத்தை உண்டு பண்ணி, இறுதியில் ஆறுதலற்ற அமைதியில்லாத நரக வாழ்வாக மாறிவிட்டதெனச் சுருக்கமாய்க் கூறிவிடலாம். இந்தியாவுக்கு யாத்திரை செய்து திரும்புவோர், அங்கே புகையிரதங்களில் இடம்போதாது பிரயாணச் சீட்டுகள் பெறுவதே பெருங்கஷ்டம் என முறையிடுவதை நீங்கள் பலமுறை கேட்டிருப்பீர்கள். உங்கள் சிலரின் சொந்த அனுபவமே அதுவாயிருக்கும். இந்தப் பிரயாணக் கஷ்டம் உலகம் எங்கணுமே பரந்துள்ள ஓர் பெரிய பிரச்சினையென்பது பிறநாடுகளில் பிரயாணஞ் செய்தவர்கட்குத்தான் நன்கு விளங்கும். சின்னஞ் சிறு தேசத்தில் குடியிருந்து கொண்டு அங்கு தோன்றும் அற்பமான தொல்லைகளையெல்லாம் பெரிய பிரச்சினைகளாகக் கருதி அல்லல்படும் மக்களின் மனப்பாங்கு மக்கள் உள்ளத்தைவிட்டு நீங்க வேண்டுமாயின், பிறநாடுகளுடன் நெருங்கிய தொடர்பு வேண்டும். நேரில் அதைப்பெற முடியாவிடின், புத்தகங்கள் அல்லது பத்திரிகைகள் மூலமாகவாவது அங்குள்ள பிரச்சினைகளைப்பற்றிய அறிவைப்பெருக்கிக்கொள்ள வேண்டும். உள்ளத்தில் திருப்தியடைந்து அமைதியாக வாழ்வதற்கு உகந்த வழி இது.

அடுத்தநாள் நான் அஸிசிக்கு யாத்திரை செல்ல இருப்பதை அறிந்த விடுதிச்சாலை அதிபர் நேரத்துடன் பிரயாணச் சீட்டு வாங்காவிட்டால்

போகமுடியாதென எச்சரிக்கை கொடுத்தார். மத்தியானப் போசனம் முடிந்ததும் ரோம் புகையிரத நிலையத்திற்குக் கிளம்பினேன். தனி வாடகை மோட்டார் எடுக்க மனம் வரவில்லை. அதிகசெலவோடு சிரமத்தையும் தரும் ஒன்று அது என்பதை அநுபவத்தில் உணர்ந்திருந்தேன். ஆகையால் மின்சார வஸ்சில் பிரயாணம் செய்தேன். அதிலிருந்து ரோம் புகையிரத நிலையத்தருகில் இறங்க வேண்டிய இடத்தை அறிந்து கொள்வது கஷ்டமாய்விட்டது. ஒருவர்க்கும் ஆங்கிலம் விளங்கவில்லை. 'றெயில்வே' என்ற பதமே அங்கு வழக்கில் இல்லை. இந்தச் சொல் ஐரோப்பாவில் எங்கும் செல்லுமென யான் கொண்டிருந்த அறியாமை உடனே நீங்கிவிட்டது. எனக்கருகில் அமர்ந்திருந்த ஓர் கன்னியாஸ்திரி மடஅம்மையாருக்கு எனது கஷ்டம் விளங்கிவிட்டது. அன்னார் அன்புடன் என் முகத்தைப் பார்த்து ஆங்கிலத்தில் Follow me என்றார். அதாவது தான் இறங்கும் இடத்தில் என்னையும் இறங்குமாறு கேட்டார்.

## 4. இத்தாலி—அஸிசி

அம்மையாரின் வாக்கைத் தெய்வக் கட்டளையாகக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தேன். ஐந்து நிமிஷத்தால் அன்னார் தம்மோடு கூடிவந்த பள்ளிக்கூட மாணவியின் கையைப் பிடித்துக் கொண்டு இறங்கினார். யானும் இறங்கி தாயின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் சேய்போலத் தொடர்ந்து சென்றேன். ரோம்புகையிரத நிலையத்தை அடைந்ததும், அம்மையார் விசாரணைக் கந்தோருக்குள் சென்று ஆங்கிலம் தெரிந்த ஓர் பெண் உத்தியோகஸ்தரை எனக்கு அறிமுகஞ் செய்து வைத்தார். இத்தாலி நாட்டில் நான் செய்யப்போகும் பிரயா

ணம் முழுவதற்கும் தான் இருமொழிகளில் அட்ட வணை போட்டுக் கொடுப்பதாக அந்தப் பெண் பொறுப்பேற்றதும், அம்மையார் பிரியாவிடை கூறும்போது, "I Pray for you" — உங்களுக்காக நான் பிரார்த்திக்கின்றேன் —என்றார். அவரது இந்த இறுதி ஆசிமொழி எதிர்காலம் பற்றியமை யாது நிகழ்காலங் குறித்திருந்த தன்மை என் உள் ளத்தை உருக்கியது. பத்து நிமிட அறிமுகத்தில் பல ஜென்மங்களின் அத்யாத்ம உறவின் அனுப வத்தைப் பெற்று ஆனந்தக் கண்ணீர் விட்டேன். அம்மையாரும் அவருடன் கூடிநின்ற சிறுபெண் ணும் உடனே கலங்கி விட்டார்கள். உண்மை யில் எனக்கு வழிகாட்டியது ஓர் மனிதப்பிறவி தானா அல்லது வழிபடும் தெய்வமே மனித உரு வில் காட்சியளித்து மறைந்ததோ என்ற சந்தே கம் இன்றும் என் மனதில் உள்ளது. இற்றைக் குப் பதினொரு ஆண்டுகட்கு முன் குடும்பத்துடன் வட இந்திய யாத்திரை செய்தபோது வங்காளத் தில் பங்கூரா ஜில்லாவில் தூய அன்னை சாரதா தேவியாரின் பிறந்த கிராமமாகிய ஜயராம்பட்டிக் குச் சென்ற வேளையில் பெற்ற அனுபவமும் ஆத ரவும் சரியாக இதேபோன்ற ஒன்றாகும். நம் உள் ளத்தில் அன்பு என்னும் மொழி சதா பேசிக் கொண்டிருந்தால், நாம் இந்தப் பரந்த உலகில் எந்த மூலைக்கும் போக முடியுமென்ற நம்பிக்கை இவ்வித எதிர்பாராத நிகழ்ச்சிகளால் உரம்பெறு கிறதல்லவா?

அடுத்த நாள் அஸிசிக்குச் செல்வதற்குப் பிர யாணச் சீட்டுப் பெற்றுக் கொண்டு விடுதிச்சாலைக் குத் திரும்பினேன். ரோமாபுரியை விட்டுப் பிரியு முன், ரோம் ராஜ்யத்தைப் பற்றிய சில முக்கிய சரித்திரக் குறிப்புகளை இங்கு தர விரும்புகிறேன். ஐரோப்பாவில் எந்த நகரத்திற்குச் சென்றாலும்

அங்கே நாம் காண்பது ரோமாபுரியின் பிரதிவிம்பத்தையே. ஆனபடியால், இக்குறிப்புகள் வாசகர்கட்கு அறிவும் மகிழ்ச்சியும் அளிக்கக்கூடியவை. ஐரோப்பிய நாகரிகத்திற்கு கிரேக்கர்களின் அறிவுக்கலையும், அழகுக்கலையும், அத்திவாரமாய் அமைந்திருந்த போதிலும், மக்களின் நாகரிக வாழ்வின் ஏனைய துறைகளிலெல்லாம், அதாவது நகர அமைப்பு, அரசியல், சட்டங்கள், போக்குவரத்து வசதிகள் முதலாயவற்றிலெல்லாம், வழிகாட்டியவர்கள் ரோமர்களே. லத்தீன் மொழியிலுள்ள வேட்டஸ் (Virtus), மொடறேற்றஸ் (Moderatus), பயஸ் (Pius), றெஸ்பவிளிக்கா (Respublica) என்ற சொற்களே உண்மையான நாகரிக வாழ்விற்குப் பொருத்தமான அருங்கருத்து வாய்ந்தவை. அவை முறையே குறிப்பது ஆண்மை, அடக்கம், விசுவாசம், எல்லார்க்கும் பொதுவான ஒன்று, என்பனவற்றையேயாம். கி. மு. ஐந்தாம் நூற்றாண்டு தொடக்கம் முதலாம் நூற்றாண்டுவரையில் ரோம் என்பது அந்தப் பெயருள்ள நகரத்தையும் அதின் சுற்றாடலையுமே குறித்திருந்தது; நடைபெற்றது குடியாட்சியே. முடிசூடிய மன்னர்கள் இருக்கவில்லை. செனேற் சபையும், மக்கள் சபையும் இருந்தன. செனேற் என்ற பதம் இன்று உலகெங்கும் பரவியுள்ள ஒன்று. அதின்மூலம் லத்தீன் மொழியிலுள்ள செனெக் (Senex) ஆகும். அதின் கருத்து 'வயோதிப மனிதன்' அல்லது அநுபவம் வாய்ந்த முதியோன் என்பதாம். இவர்கள் கையில்தான் அரசாங்கம் அன்று இருந்தது. கி. மு. முதலாம் நூற்றாண்டில் இந்த அரசின் செல்வாக்கு மத்தியதரைக் கடலைச் சுற்றிய நாடெங்கும் பரவியது; ரோமாபுரி அரசு ரோம் சாம்ராஜ்யமாக மாறியது. முதல் சக்கரவர்த்தியாக முடிசூட்டப்படவிருந்த ஜூலியஸ் சீஸர் கி. மு. 44-ம் ஆண்டில் படுகொலை செய்யப்

படவே, ஆகஸ்றஸ் சீஸர்சக்கரவர்த்தியாக முடிசூட்டப் பெற்ருன். கிறிஸ்தவ சகாப்தத்தில் முதல் இரு நூற்ருண்டுகளில் ரோம் ராஜ்யம் ஐரோப்பாவின் நாற்றிசையிலும் பரவி சீரும் சிறப்பும் பெற்றிருந்தது. வேர்ஜில் (Virgil) ஹொறேஸ் (Horace) ஆகிய இருபெரும் புலவர்கள் தோன்றினர். லத்தீன் மொழி ஓங்கி வளர்ந்து, ஐரோப்பா முழுவதும் செல்வாக்குப் பெற்றது. கி. பி. இரண்டாவது நூற்ருண்டு முடியுமுன் பிறநாட்டுப் படையெடுப்புக்கள் வரவே, உள்நாட்டுக் கலகங்களும் பிரிவினைகளும் தோன்றி, சாம்ராஜ்யத்தின் மங்குதிசை ஆரம்பமாயிற்றெனலாம். அது மறைந்த போதிலும், அதின் பயனுகத் தோன்றிய சட்டமும், திட்டமும், நகராண்மைத்திறனும் இன்று உலகெங்கும் நடைமுறையில் உள்ளன. அன்றிருந்த முதியோர் சபையின் நேர்மையுடனும், ஆட்சித்திறனுடனும், இன்று நாம் காணும் அரசாங்க மன்றங்களின் நடைமுறைகளை ஒப்பிட்டுப்பார்க்கும்போது, நவீன நாடுகள் எவ்வளவு தூரம் அரசியல் துறையில் வெற்றிகரமாகப் பின்வாங்கியுள்ளனவென்பது தெற்றென விளங்கும்.

இனி, ஆவலுடன் தரிசிக்க விரும்பிய அஸிசிக்குச் செல்வோம். ரோம் நகரிலிருந்து என்னுடன் பிரயாணஞ் செய்த இத்தாலியருக்கு ஆங்கிலம் தெரிந்தது. எனது சைவ உணவுபற்றிய பிரச்னையை அவரே தீர்த்து வைத்தார். அத்தோடு நின்றுவிடாது, அஸிசியில் நான் தங்கிய இடத்து அதிபருக்கும் அதைப்பற்றியும் மோட்டார் முதலாய வசதிகள் குறித்தும் சகல விபரங்களும் கூறிச்சென்ருர். எனவே, வாய்திறந்து ஏதாவது கேட்க வேண்டிய தேவையே இல்லாமல் போய்விட்டது. அஸிசி இத்தாலியின் நடுப்பாகத்திலுள்ள ஓர் மலைநாடு. அதின்

நாலா பக்கங்களிலும் இயற்கைவளஞ் செறிந்துள்ளது. தாகம் ஏற்பட்டால் குடிப்பதற்கு திராட்சரசப்பழப்பானமும் (Wine) பாலும் ஏராளமாய்க் கிடைக்கின்றன. ஃபிருன்ஸிஸ் தேவரின் ஆலயம் மலையுச்சியில் அமைந்துள்ளது. பழனி ஆண்டவர் கோயிலை எனக்கு நினைவூட்டியது. ஆனால் ஆலயத்தைச் சுற்றியெழுந்துள்ள பட்டினம் பதினைந்துசதுர மைல் விஸ்தாரமுள்ளது. ஆலயத்தின் மேல்மாடியின் முற்றத்தில் நின்றுகொண்டு பட்டினம் முழுவதையும், அதைச்சூழ்ந்துள்ள பொழில்களையும் நந்தவனங்களையும் பார்த்து இன்புறலாம். நான் இந்தப் புனித ஆலயத்தை அடைந்தபோது நானூறு அமெரிக்க உல்லாசப் பிரயாணிகள் வந்து குழுமியிருந்தனர். முன் அறிவிப்புடனும் அறிமுகக் கடிதங்களுடனும் வந்த பிரமுகர்களானபடியால், அவர்கட்காக ஆலயத்தைத் திறப்பதற்கு ஓர் நேரம் நியமிக்கப்பட்டிருந்தது. அதற்காக அவர்கள் கீழ்மாடியின் முற்றத்தில் புகைப்படம் எடுக்கும் கருவிகளைச் சீர்படுத்திக்கொண்டு காத்திருந்தார்கள். என்னைக் கண்டதும், முக்கியமான எனது சுத்த வெள்ளைப் பருத்தி உடையைப் பார்த்ததும் அவர்கள் பலரின் புகைப்படக் கமெருக்கள் அசையத் தொடங்கின. அந்த இடத்தில் சிறிதும் தாமதிக்காது, விசாரணை எதுவுஞ் செய்யாமல் என்முன்தோன்றிய படிக்கட்டுகளில் ஏறிச்சென்றேன். எவ்வித முன் ஒழுங்குமின்றி ஃபிருன்ஸிஸ் தேவரின் திருச்சித்தத்தையே நம்பிச் சென்ற எனக்கு அறிவுக்கறிவாய் நின்று அவரே அந்த நேரத்தில் இந்த வழியை எனக்குக்காட்டியிருக்கலாம். படிகளில் ஏறிச்செல்லச் செல்ல, உள்ளத்தில் சொல்லரும் அமைதி ஏற்பட்டது. அந்த அமைதி நிலையில்,

"முன்பு செய்தவத்தி னீட்ட முடிவிலா வின்பமான
அன்பினை யெடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி

மன்பெருங் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி
என்பு நெக்குருகி யுள்ளத் தெழுபெரு வேட்கையோடும்''.

என்னும் சேக்கிழாரின் அரிய பாடல் பளிச்சென்று நினைவுக்கு வந்தது. கடைசிப்படியைத் தாண்டி முற்றத்தைச் சேர்ந்த பின்தான் அது அந்த ஆலயத்தின் மேல்மாடியென்ற அறிவு உதயமானது. கையில் இருந்த பத்திரிகையைத் தரையில் விரித்து அதன்மேல் உட்கார்ந்து தியானம் செய்யும்படி உள்ளுணர்ச்சி தூண்டியது. தியானத்தில் ஐந்து நிமிடங்கள் கழிந்திருக்கலாம். எனக்குமுன் நேரே இருந்த கதவு திடீரெனத் திறக்கப்பட்டு, கத்தோலிக்க குரு உடையில் தோன்றிய ஒரு பெரியாரின் அழைப்புங் கிடைத்தது. நான் உள்ளே சென்றதும், அவர் தமது வலக்கரத்தை உயர்த்தி எனது தலைமேல் வைத்து, ஆசி தந்ததும், கதவைச் சாத்திப் பூட்டிவிட்டார். ஒரு சொல்லும் பேசாது அவர் முன்செல்ல, அவர் கையால் செய்தசைகைகளை விளங்கிக்கொண்டு பின்சென்றேன். தெய்வ சாநித்தியமும் அமைதியும் குடிகொண்டிருந்த அந்தப் பெரிய மண்டபத்தின் பின்பக்கத்து மூலையில் சிறிதுநேரம் நின்று வணக்கஞ் செலுத்தினர் எனது வழிகாட்டி. ஃபிரூன்ஸிஸ் தேவரின் கல்லறையென்பதை யூகித்துணர்ந்து அங்கேயே தியானத்தமர விரும்பினேன். ஆனல் கூட நின்றவர் சம்மதிக்கவில்லை. அவசரம் அவசரமாக மூன்ருவது மாடிக்கும் அழைத்துச்சென்று பின்னர் அங்கிருந்துஇறங்கி இரண்டாம் மாடியிலிருந்து நிலமட்டத்திற்குச் செல்லும்படிகள் மார்க்கம் ஓட்டம் பிடித்தார். நானும் அவரைத் தொடர்ந்து இறங்கும்போது, கீழேயுள்ள முன்வாசல் கதவுகள் திறக்கும் சத்தம் கேட்டது. வெளிமுற்றத்தில் காத்திருந்த அமெரிக்கப் பிரயாணிகள் கூட்டமாக உள்புகுந்தனர். அவர்களுக்கு ஆங்கிலத்தில் எல்லாம் விபரமாக

எடுத்து விளக்க, அம்மொழி தெரிந்த ஒரு குருவும் கூடவந்தார். இந்தக் கூட்டநெருக்கடியில் எனக்கு வழிகாட்டிய அன்புப்பெரியார் மறைந்துவிட்டார். அவர் என் வெளிக் கண்களுக்கு மறைந்தபோதிலும் என்றும் என் அகக்கண் முன் நிற்கிறார். அந்தரங்க மான அற்புத அத்தியாத்ம அனுபவங்கள் மிகவும் இரகசியமாகப் பேணப்பட வேண்டியவை.

பின்னர் கூட்டத்துடன் சேர்ந்து யானும் இரண்டாவது முறையாக ஆலயத்தின் எல்லாப் பாகங்களேயும் தரிசித்தேன். ஆங்கிலத்தில் விளக்கப் பட்ட விபரங்களேயும் அறிந்து கொண்டேன். கூடி வந்த குருவானவருக்கு நன்றி கூறி விட்டுக் கூட் டம் கலேந்தது. அவர் தனியாக நிற்கும் சமயம் பார்த்து, தாடியுடன் வந்த என்னே மேல் மாடி வாசலால் ஆலயத்துள் அழைத்துச் சென்ற சுவாமி யாரை நான் மறு படியும் சந்திக்க முடியுமோ வென அவரிடம் விசாரித்தேன். அவர் ''இங்குள்ள குருமார்களெல்லாம் என்னேப் போல் தாடியில்லா தவர்களே'' என்று ஹாஸ்ய நடையில் பதில் இறுத் துவிட்டு அவசரமாக எவரையோ காண்பதற்கா கச் சென்ருர். இந்த நிலேமையில் என்னேக் கவன மாய்ப் பார்த்துக் கொண்டு நின்ற ஓர் அமெரிக்க அன்பரும் அவரது மனேவியாரும் என்னே அண்டி உரை ஆடத்தொடங்கிஞர்கள். நாநூறு பேர்களில் இவ்விருவரே, அவர்களுக்காகக் கதவுகள் திறக்கப் பட்ட வேளேயில், நான் முன்னரேயே ஆலயத்துள் நின்ற உண்மையைக் கவனித்திருந்தார்கள். எல்லா விபரங்களேயும் அவர்கட்கு யான் பக்தி உணர்ச்சி யுடன் எடுத்துக் கூற பரவசத்துடன் கேட்டின்புற் ருர்கள். கூட்டம் முழுவதும் வெளியேறிய பின் நான் முதலில் உட்கார்ந்து தியானஞ் செய்த இடத் தில் என்னே நிற்கச் செய்து படம் எடுக்க விரும் பிஞர்கள். இதுவும் ஃபிரௌன்ஸிஸ் தேவரின் லீலே

யெனக் கருதி உடன் பட்டேன். அவர்களால் ஆல யத்துடன் என்னையுஞ் சேர்த்து எடுத்த இப்படம் எனது அஸிசியாத்திரையின் ஞாபகச் சின்னமாக விளங்குகிறது. அதை எடுத்துதவிய அன்பர்கள் இருவரும் எனது அத்யாத்ம உறவினராய், யான் ஆங்கில சஞ்சிகை மூலம் செய்து வரும் அன்புப் பணிக்கு ஆதரவு தருகிறார்கள். இந்த அன்பர் அமெ ரிக்காவில் ஓர் மாகாண நீதியரசர். அவர் பாரியா ரும் ஓர் அரிய பக்தை. இருவரும் என்னை அமெ க்காவுக்கு யாத்திரை செய்யும்படி கேட்கும் குழு வைச் சேர்ந்த மனித சமூகத்திற்கு ஒளி கொடுக் கும் பெரியார்கள். மிருக சக்தியை நம்பி மண்ணா சையால் மதியிழந்த மன்னர்களல்ல; அரசியல் வாதி களல்ல. முடிசார்ந்த மன்னர்கள் எத்தனையோ பேர் பிடிசாம்பராய் மறைந்தனர். முடியரசுகள் குடியர சுகளாய் மாறலாம். குடியரசுகள் பழையபடி முடி யரசுகளாய்த் திரும்பலாம். இந்த மாற்றங்களை இத் தாலி நாட்டின் சரித்திரத்திலேயே பல முறை காண் கின்றோம். ராணுவப் பெருக்கத்தின் இறுமாப்பால் தலையிழந்த முசோலினியின் பெயரைச் சொல்லும் மக்களை இன்று இத்தாலி நாட்டில் சந்திக்க முடி யாது. அவனுக்கு ஆசியும் ஆதரவும் அளித்த கத் தோலிக்க குருமார்களின் பெயர்களை உச்சரிக்கவே மக்கள் கூசுகிறார்கள். ஆனால் இற்றைக்கு ஏழரை நூற்றாண்டுகட்கு முன் வாழ்ந்த ஃபிரான்ஸிஸ் தே வரின் ஆத்ம ஒளி இன்னும் பிரகாசித்துக் கொண்டி ருக்கிறது. அவரது குருபூசைத் தினம் ஒக்டோபர் 4ந் தேதி பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படு கிறது. இந்த மஹான் புல்லுடனும் பூண்டுகளுட னும், புலியுடனும் நரியுடனும், ஆன்ம நேய ஒரு மைப்பாட்டுடன் வாழ்ந்தவர். கருணையே வடிவான வர். அவரது பாடல்களின் அருங்கருத்துக்கள் அருட் பிரகாசவள்ளலாரின் பாடல்களில் எதிரொலிக்கின் றன. அற்புதமான முறையில் அப்பெரியாரின் காட்

சியும் ஆசியும் பெற்றதும், அவரது உத்தம சீடரான அந்தோனியார் சமாதியடைந்த பாடுவா என்னுந் தலத்தைத் தரிசிக்க என் உள்ளந் துடித்தது.

5. இத்தாலி பாடுவா அர்ச். அந்தோனியார் ஆலயம்

இரு தலங்கட்கும் இடையே நேர்ப் புகையிரதப் போக்கு இல்லை. பழம் புகழ்படைத்த ஃப்ளோரன்ஸ் நகருக்குச் சென்று, அங்கிருந்து புகையிரதம் மாறிப் பாடுவாவை அடைந்தேன். அன்று குரு பூர்ணிமா என அழைக்கப்படும் வியாஸர் பூசை பொருந்திய புனித நாளாக இருந்தது. அத்தோடு அது வெள்ளிக்கிழமையாகவும் வந்து பொருந்தி விட்டது. ஆகையால் அந்த முழுநாளும், அந்தோனியார் ஆலயத்திலேயே வழிபாட்டில் கழிந்தது. அந்தப் பெரிய கோவிலின் பின்புறத்தில் (அதாவது நமது கோவில்களில் பிள்ளையார் சந்நிதானம் இருப்பதுபோல்), ஓர் சந்நிதானம் உள்ளது. அந்தோனியார் வழிபட்ட தேவியின் விக்கிரகம் இதுவெனப் பின்னர் அறிந்தேன். மிகவும் மூர்த்திகரமான தெய்வ விக்கிரகம் இது. முகவிலாசம் பெரிதும் இந்திய முறையில் அமைந்து இருந்ததைப் பார்த்த போது, இந்தியாவிற்கும் இத்தாலிக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்த காலத்தில் இரு நாட்டுக் கலையிலும் விற்பன்னரான ஓர் சிற்பி இதனைச் செய்திருக்கலாம் என எண்ணினேன். பாடுவா தலம் கத்தோலிக்கரின் ஆதிக்கத்தில் இருந்த போதிலும் அது எல்லோரும் வந்து வழிபடும் பொதுத் தலம். பல்லாயிரக் கணக்கான மக்கள் தினசரி வருகிறார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் கூட்டம் மிகப்பெரிது. இரவு பகலாய் வழிபாடு நடக்கின்றது. லக்ஷக் கணக்கான மக்கள் வந்தாலும் எல்லாம் அடக்கமாயும், அமைதியாகவும் சட்ட திட்டமாகவும் நிகழ்கின்றன. ஐரோப்பாவில் வேறெங்

காகிலும் இதுபோன்ற காட்சியைக் காண்பது அரிது. பாடுவாவிலிருந்து வெனிஸ் நகருக்குச் சென்று, அதை அடுத்துள்ள செயின்ற் ஜோர்ச் என்னும்தீவில் அமைக்கப்பட்ட கலா நிலையத்தில் அரை நாள் கழித்தேன். பிரமாண்டமான மண்டபங்கள் உள்ளன. ஒரு தனி மனிதனின் நன்கொடை இது. இப்போது அரசாங்கத்தின் ஆதரவுடன் மேற்கும்—கிழக்கும் இணைந்து, கலை வளர்க்கும் நிலையமாக மாறியுள்ளது. இந்தியாவிலிருந்து பல நூல்களும் சிலைகளும், சித்திரங்களும் வந்துள்ளன, நடராஜப் பெருமான் படமோ, விக்கிரகமோ அல்லது அதைப் பற்றிய நூலோ அங்கு இல்லை. அப்பெரும் குறை பற்றி நிலையத் தலைவியாரிடம் பேசினேன். இலங்கை அன்பர் ஒருவர்க்கும் கடிதம் போட்டேன். குறித்த குறை சீக்கிரம் நிவிர்த்தியாக்கப்படும் என எதிர்பார்க்கிறேன்.

அந்தோனியார் ஆலயத்தில் ஞாயிறுதோறும் நடைபெறும் வழிபாட்டு ஒழுங்கைக் காண விரும்பி மறுபடியும் பாடுவா திரும்பினேன். அன்று மாலை பாடுவா சர்வகலாசாலை வைத்திய மாணவரின் விடுதிச்சாலையில் ஓர் தேநீர் விருந்து எனக்கு அளிக்கப்பட்டது. இந்த இல்லம் கலிலியோ வசித்த வீதியில் நிறுவப்பட்டுள்ளது. அதில் பதினேழு தேசங்களிலிருந்து வந்த மாணவர்கள் வதிகின்றார்கள். இந்தியர்களும் ஆபிரிக்கர்களும் உளர். பல மொழி பேசும் வெவ்வேறு நிறத்தினர் சகோதரர்போல் வாழும் காட்சி எனக்கு ஆனந்தம் அளித்தது.

## 6. இங்கிலாந்து

மூன்று மணித்தியால நேரத்துள் வெனிஸிலிருந்து லண்டன் போனேன். இங்கிலாந்தில் தங்கியிருந்த இருபத்தைந்து நாட்களும் அருமையான

அத்யாத்ம சேவையில் கழிந்தன. நாலா பக்கங்களிலுமிருந்து அன்பர்களின் அழைப்புகள் வந்தன. கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய மூன்று பிரிவுகளிலும் இங்கிலாந்தின் கடற்கரையோரங்கள் வரையில் விஜயம் செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆங்காங்கு பிரார்த்தனைக் கூட்டமும், சிற்றுரையும் சம்பாஷணையுமே நடந்தன. பகிரங்கக் கூட்டத்தையோ, நீண்ட பிரசங்கத்தையோ யான் விரும்பவில்லை. B. B. C. யில் "தர்மம் தலை காக்கும்" என்ற தலைப்பின் கீழ் செய்த பேச்சு ஒன்றே பகிரங்கப் பிரசங்கமாகும். பௌத்த விகாரத்தில் தியானத்தின் பின் சிற்றுரை மாத்திரம் இருந்தது. அதின் தலைவர் வண. பிக்கு ஸதாதிஸ்ஸ அவர்கள் அரிய சமயப் பிரசாரம் செய்கிறார். பிறமதங்களில் நன்மதிப்புள்ள மனப்பான்மையினர், லண்டனில் இராமகிருஷ்ண மிஷனின் கிளைச்சங்கமும் ஒன்று உண்டு. கொழும்பில் முதன் முதலாகச் சங்கம் நிறுவப்பட்டபோது அதின் தலைவராயிருந்த ஸ்வாமி கனந்தா அவர்களே, அதின் அதிகாரியாயிருந்து வேதாந்தப் பிரசாரம் செய்து வருகிறார், லண்டனில் மேற்குப் பிரிவில் வதியும் இலங்கைச் சைவர்கள் ஒரு டாக்டர் அன்பரும் அவர் மனைவியாரும் ஆர்வத்துடன் எல்லா ஒழுங்குகளும் செய்தார்கள். பிரார்த்தனையும் அர்ச்சனையும் புனிதமாக நடைபெற்றது. இறுதியில் என் சிற்றுரையும் இருந்தது. இவ்விதம் வாரத்தில் ஒரு முறையாவது வழிபாடு செய்ய ஓர் பொது இடம் இல்லையே என்ற குறையைப் பலர் உணர்ந்தனர். ஆர்வத்துடன் வேண்டின் திருவருள் வழிகாட்டும் எனக்கூறி முடித்தேன்.

இங்கிலாந்தில்சிறிது காலமாவது தங்கி அதின் சரித்திரத்தை ஐரோப்பிய ஏனைய நாடுகளின் வரலாறுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால்தான் இங்கிலாந்தில் கோனாட்சி நிலைத்து நிற்பதின் இரகசியம்

நமக்கு விளங்கவரும். சென்ற அரை நூற்றாண்டு எல்லைக்குள் ஐரோப்பாவில் எத்தனையோ முடிகள் கவிழ்ந்து கால வெள்ளத்துள் மறைந்துவிட்டன. முடியரசுகள் குடியரசுகளோ பொதுவுடமை அரசுகளாகவோ மாறிவிட்டன. புரட்சிகரமான இந்தச் சூழ்நிலையில் இங்கிலாந்தில் மன்னர் குடும்பத்தினர் இன்றும் நன் மதிப்புடன் வாழ்ந்து அரசாட்சி புரிகின்றனர். பெரும்பாலான மக்களின் அன்பும் விசுவாசமும் முன்னாளில்போல் இன்றும் இருக்கின்றன. முடியாட்சியாயினும் சரி, குடியாட்சியாயினும் சரி, பொது ஆட்சியாயினும் சரி, அரசாங்கமானது நீதியையும் தனி மனித உரிமையையும் பேணி நடந்தால்தான் அது நிலைத்து நிற்க முடியும். இதற்கு ஓர் இணையற்ற உதாரணம் இங்கிலாந்தில் நடைமுறையில் இருக்கும் ஜனநாயகக் கொள்கை.

ஒரு சமுதாயம் முழுவதின் குரலாய் அமைந்து மக்களின் குறைகளை நீக்கி நிறைவை உண்டாக்குவது பத்திரிகை உலகின் கடமை. அப்படிச் செய்வதற்குப் பதிலாக, அரசியல் கட்சிகளின் சொந்த நலனையும் ஆதிக்கத்தையும் வளர்ப்பதற்கு அவை உழைக்குமாயின் நாட்டில் இடதுசாரி வலதுசாரி என்ற வேற்றுமைகளும், கட்சிப் போர்களும் மலிந்து மக்களிடையே பொறாமை போட்டியும் நாட்டில் அமைதியின்மையும் பரவவே செய்யும். அது மாத்திரமன்றி, ஒரு நாட்டுக்கும் பிறநாட்டுக்டுக்குமிடையே வேற்றுமையைத் தூண்டும் விதத்தில் பத்திரிகைகள் பிரசாரம் செய்வதையும் கண்டு வேதனைப்பட்டேன். பத்திரிகைச் சொந்தக்காரர்களின், ஆசிரியர்களின் அறியாமைக்காக இரங்கினேன். பொருளாதாரத்துறையில் சமத்துவம், அரசியல் சமுதாயவாழ்வில் சகோதரத்துவம், சமய வாழ்வில் சமரஸம் என்ற கோஷங்களுடன் காலதேவி மனிதகுலம் முழுவதற்குமே ஓர் புதுச்சகாப்

தத்தைக் காட்ட பவனி வருகிறுள். தன்னலம் என்ற அத்திவாரத்தில் எழும்பி நின்ற தனியுடைமைக் கோட்டை தகர்த்தெறியப்பட்டுள்ளது. ஐரோப்பாவின் பலபாகங்களில் மாட மாளிகைகளும் கூடகோபுரங்களும் பொதுச்சொத்தாய் மாறியிருப்பதைக் காணலாம். இரண்டு அகோர உலகப் போர்களின் விளைவாக காலதேவியின் வேகம் அதிகரித்துக்கொண்டே வருவதை பெரும்பாலான மக்கள் உணர்கின்றுர்கள். மூன்றுவது அணுக்குண்டுப் போர்வந்து உலகம் அழியாமல் இருக்கவேண்டுமென்று மனதாரப் பிரார்த்திக்கிறுர்கள். ஆனுல் சில அரசியல் தலைவர்களின் அதிகாரவெறியும் ஆசை ஆணவமும் எந்த நிமிடத்தில் எங்கோ ஒரு மூலையில் தீ மூட்டிவிடுமோவென்ற பீதியில் வாழ்கிறுர்கள். சர்வகலாசாலைப் பட்டதாரிகளான வாலிபர்களும் கன்னிமாரும் இளம் குடும்பத்தினரும் சேர்ந்த ஓர்கூட்டத்தில் இந்தப்பிரச்சினை எழுந்தது. அங்கே நல்ல விவேக அறிவுபடைத்த ஓர் இளம் பெண் எழுந்துநின்று ''ஐயா உலக சமாதானத்திற்கு ஏதாவது ஒரு சுருக்க வழி உண்டா?'' என்ற கேள்வியை உணர்ச்சியுடன் கேட்டாள். ''ஆம் கட்டாயமாக உண்டு. ஆனுல் மக்கள் அதைக்கையாளுவார்களோ என்பதுதான் சந்தேகம்'' என்ற முன்னுரையுடன்,

''பொறுமையும் போட்டியும் போரும் முதலில் உதயமாவது மனிதர் உள்ளத்தில். அங்கே அவற்றிற்குப் பதிலாக அன்பும் அயலார் நேசமும் சமாதான ஆர்வமும் தோன்றுமாயின் உலக சமாதானம் செயலில்வர நாட்செல்லாது. உலகில் இன்று பிரசுரமாகும் தினத்தாள்கள் அத்தனையும் ஒருநாள் ஓய்வு எடுத்துக் கொள்ளட்டும். அப்பத்திரிகைகளை ஆவலுடன் படிக்கும் மக்கள் அனைவரும் அந்த ஒரு நாளை முற்றிலும் உலக சமாதானம் குறித்த தியா

னத்தில் கழிக்கட்டும். புறத்தே சமாதானம் நிலவ இதைவிடச் சுருக்கமான எளிதான வழிகாண முடியாது என்றேன்''. இதைக் கேட்டதும் பலர் சிரித்தனர். உண்மையில் சமாதானத்தை நாடும் அந்தப் பெண் ''இது சிரிக்க வைக்கும் உபதேசமல்ல. இன்றைய உலக நெருக்கடிக்கு நாம் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகள்'' என்பதையே விளக்குகிறது என்று கூறினுள்.

இங்கிலாந்தின் மேல்கரையிலுள்ள விறிஸ்றல் நகரில், 1833-ம் ஆண்டில் வங்கப்பெரியார் ராஜா ராம் மோஹன்ராய் அடக்கஞ் செய்யப்பட்ட இடத்தில் வரகவி தாகூரின் பாட்டனுரான துவாரகாநாதரால் கட்டப்பெற்ற சமாதிக்கோயிலைத் தரிசிக்க வேண்டுமென்ற அவா எனது உள்ளத்தில் இருந்து வந்தது. ஆனல், காலம் போதாமையாலும், வேறு காரணங்களாலும் அந்த ஆர்வம் பூர்த்தியாகவில்லையெனினும் அதற்குப்பதிலாக, இங்கிலாந்தின் அதிகீழ்க்கரையிலுள்ள ஓர் சாந்தி நிலையத்திற்கு யாத்திரை செய்யும் அரும்வாய்ப்புக் கிடைத்தது. அங்கு பெற்ற அநுபவம், வாழ்க்கையில் என்றுமே மறக்க முடியாத ஒன்ருகும். இவ்வித புனிதமான, அமைதியான, மனித சஞ்சாரமும் சந்தடியற்ற ஓர் குக்கிராமத்தை இங்கிலாந்தில் எவரும் நினைக்க முடியாது. குறித்த ஆரோக்கிய சாந்தி நிலையம் அமைந்திருப்பது, நோர்விச் என்ற நகரத்திலிருந்து இருபது மைல் தூரத்திலுள்ள இற்றெரிங்ஹாம் என்னும் கிராமத்திலாகும். வாரத்தில் இருமுறைதான் இந்தக் குறிச்சிக்கு 'வஸ்' மார்க்கம் செல்ல முடியும். அப்படிப் பிரயாணஞ் செய்தாலும், வஸ் செல்லும் பாதையிலிருந்து இரண்டு மைல் தூரம் கால் நடையாகச் சென்றே நிலையத்தைச் சேரமுடியும். ஜெற் விமானப் பிரயாண காலத்தில், இங்கிலாந்து போன்ற ஓர் முன்னணி நாட்டிலேயே, இப்படியான

ஒருதூர இடம் இருக்கிறதென்று சொன்னால், நம்பு வது மிகவும் கஷ்டமே. இந்த நிலையம் எவ்வித விசித்திரமான முறையில் அமைந்திருக்கிறதோ, அதுபோல், அதைநிறுவிய பெரியாரும் ஓர் அசாதா ரண மனிதரேயாம். அவர் பெயர் டெறெக்நெவில். எமது ஆங்கில "சமய மஞ்சரி" (Religious Digest) படிப்பவர்கட்கு அவரது பெயர் நன்கு தெரியும். அதில் அவரது அருமையான கவிதைகளும், கட்டு டுரைகளும், பன்முறை இடம்பெறுகின்றன. அவர் ஓர் இல்லறஞானி. மனைவியார் திருநாமம் மேரி. இருவரும் வள்ளுவரும் வாசுகியும், காந்தியும் கஸ் தூரிபாயும் போல், எளிய வாழ்க்கை நடாத்துகின் றனர். அவர்களது நிலையத்தின் மேல்மாடியிலி ருந்து பார்த்தால், நாலாபக்கங்களிலும், கண்பார் வைக்கெட்டுந் தூரம்வரையில் வயல்களையும், சோ லைகளையும், பசுக்கள் மேயும் பரந்த புல்தரவைகளை யுமே காணலாம், இந்த விவசாயப் பண்ணைகளி லிருந்தே போதிய உணவுப் பொருட்களை அவர்கள் உற்பத்தி செய்கின்றனர். மீனோ, மாமிசமோ, அங்கே கிடையாது. விஞ்ஞான ரீதியாக அவர்கள் சமைக்கும் மரக்கறி உணவு மிகவும் ருசிகரமாயிருந் தது. சத்தை இழக்காத முறையில் அவர்கள் பாகஞ் செய்யும்முறை சைவர்கட்கு ஓர் எடுத்துக்காட்டா கும். நகரவாழ்வில் அலுப்புற்ற, நரம்புத்தளர்ச்சி யடைந்த மக்கள் நாலாபக்கங்களிலுமிருந்து உட லுக்கு ஓய்வும் மனதிற்குச் சாந்தியும் தேடி இங்கு வந்து தங்கித் திரும்புகின்றனர். இயற்கையோடி யைந்த வாழ்வு நடாத்த, மௌனதியானம் பயில, இந்த இடம் அரிய சந்தர்ப்பம் அளிக்கின்றது. எனது மூன்று மாத ஐரோப்பிய யாத்திரையில் என்னைப்போலவே சுத்தவெள்ளைப் பருத்தியுடை யில் யான் கண்ட சீவன் திருமதி. மேரி நெவில் ஒரு வரே. எனது தோற்றம் அந்த நாட்டுக்குப் புதி தாய் இருந்ததுபோலவே, அவரின் உடையும்,

நடையும் எனக்கு வியப்பைக்கொடுத்தது. ''இந்தப் பூமியில் முதன்முதல் கால்வைத்த ஆசிய மனிதன் நீங்களே! மறுபடியும் வாருங்கள்'', என்று அந்த அம்மையார் அன்புததும்பப் பிரியாவிடை கூறிவழி அனுப்பிய காட்சி என் மனத்தைவிட்டு என்றுமே அகலாது.

## 7. டென்மார்க்

இங்கிலாந்திலிருந்து கிழம்பு முன்னரேயே, வெல்ஜியத்தில், வண. பிதா. பியர் அவர்களால், மகாத்மா காந்தியின் பேரால் நிறுவப்பட்ட சாந்திச்சர்வகலாசாலையில் நடைபெறவிருந்த சர்வதேச இளைஞர் மகாநாட்டில் பங்கெடுக்குமாறு அழைப்பு வந்தது. எனவே, அந்த மகாநாட்டின் கால எல்லைக்குப் பொருந்தவே எனது எஞ்சிய பிரயாணத்திட்டம் நிட்சயிக்க வேண்டியதாயிற்று. லண்டனிலிருந்து விமானமார்க்கம் டென்மார்க்செல்ல இரண்டரை மணித்தியாலம் எடுத்தது. அதின் தலைநகரான கொப்பொன்ஹாகெனில் கால் வைத்த போது, ஐரோப்பிய சரித்திரத்தில் எத்தனையோ பழைய நிகழ்ச்சிகள் என் மனக்கண் முன் காட்சியளித்தன. முக்கியமாக, 1808ம்- ஆண்டில் அந்தத் துறைமுகத்திலிருந்து யுத்தக் கப்பல்கள் திடீரெனப்பறிமுதலான விஷயம்; பின்னர், ஏழாண்டுகள் கழித்து வியன்னாவில் கூடிய அக்கால வல்லரசுகள் செய்து கொண்ட (Holy Alliance) என்னும் திட்டப்படி, நானூறு வருஷங்களாக டென்மார்க்கு ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்துவந்த நோர்வே தேசமானது சுவீடனுடன், இயற்கை அமைப்புக்கும் சரித்திரத்தொடர்புக்கும் முரண்பட்ட முறையில் பிணைக்கப்பட்டவிதம், ஆதியன மனதில் எழுந்தன.

சரித்திரமென்றால், அரசபரம்பரைகளின் வரலாறுகள், அவர்கள் செய்த போர்களிலடைந்த வெற்றி-தோல்விகளின் விபரங்களைத்தரும் நூலாகப் பலர் கருதுவதுண்டு, இது சரியான கருத்தல்ல. ஹெக்கல், ஒஸ்வால்டு ஸ்பெங்கிளர், ஆர்னேல்டு டொயின்டி, அரவிந்தர் போன்ற அறிஞர்களின் ஆராய்ச்சியோடு கூடிய கருத்துக்களின்படி, மனித சமுதாய சரித்திரம், உண்மையில், மனித வாழ்வின் தத்துவ மலர்ச்சியையும், வளர்ச்சியையும் பரிணுமப் போக்கையும் நமக்கு விளக்கும் இலக்கியமாகும். எனவே, உலக நிகழ்ச்சிகளை மேல்வாரியாகப் பாராது வெறும் புள்ளிவிபரங்களைப் பாவியாது, ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும்.

1603-ம் ஆண்டில், முதலாவது எலிசபெத் இராணியின் மரணத்தைத் தொடர்ந்து ஆறுவது ஜேம்ஸ் மன்னன், முதலாவது ஜேம்ஸ் ஆகமாறி, இங்கிலாந்தையும் ஸ்கொற்லாந்தையும் ஆளத்தொடங்கிய காலந்தொட்டு, 1837-ம் ஆண்டில் நாலாவது வில்லியத்தின் மரணத்தின் பயனுக, இளவரசி விக்ரோறியா மஹாராணியாக முடிசூட்டப்பட்ட காலம் வரையிலுள்ள, இரண்டேகால் நூற்றுண்டு கால எல்லைக்குள் ஐரோப்பாவில் நடைபெற்ற அரசியல் சூழ்ச்சிகளையும், புரட்சிகளையும், படுகொலைகளையும், முடிகளின் வீழ்ச்சிகளையும், நாடுகளின் எல்லை மாற்றங்களையும் பட்சபாதமின்றி உண்மையை மாத்திரம், காணும் நோக்குடன் ஆராய்ச்சி செய்தபின் யாத்திரை செய்தாற்தான் நாம் மறக்க முடியாத அனுபவங்கள் பெறலாம். உண்மைகளை உணரலாம். இருபதாம் நூற்றுண்டில் நடந்த இரு அகோர உலக யுத்தங்களின் மூலவேர் அந்த நிகழ்ச்சிகளில் மறைந்துகிடந்ததை அறிந்து கொள்ளலாம். 1919-ம் ஆண்டில், வேர்செயில்ஸில் கூடிய வல்லரசுத்தலைவர்களின் மூளையில் எப்படிக் காலத்தில்

உளுத்துப்போன 1719-ம் ஆண்டின் பழைய மூடக் கொள்கைகளே வேலைசெய்தனவென்பதும் தென்படும். சரித்திர உண்மைகளிலிருந்து, எத்துணை அற்புதமான காரண-காரிய உலகில் நாம் வாழ்கின்றோம் என்ற அருமையான உண்மையும் நமக்கு உதயமாகும்.

நிற்க, டென்மார்க்கில் முன்னர் இரண்டாவது மொழியாக ஜேர்மன் பாஷையே வழக்கில் இருந்தது. இரண்டாவது உலகப்போரில், அந்தநாடு அடைந்த கஷ்டத்தின் விளைவாக, ஆங்கிலம் அந்த இடத்தை எடுத்துள்ளது. ஆகவே, ஆங்கிலந் தெரிந்த பிரயாணிகட்கு மொழிப்பிரச்சினை அங்கே கிடையாது. ஐரோப்பாவுக்கு விவசாயத்துறையில் முன்மாதிரி காட்டிய நாடு டென்மார்க். மக்கள் இன்றும் சந்துஷ்டியுடன் வாழ்கின்றனர். ஜேர்மனியின் தாக்குதல் காரணமாக யூதர்கள் வசித்த இடங்களே அழிந்து கிடக்கின்றன. வேறு இடங்களில் நாசவேலை நடந்த அடையாளமேயில்லை. அங்கு தங்கியிருந்த மூன்று நாட்களில், இருமாலைப்பொழுது தியான வழிபாட்டின் பின் சிற்றுரையும் சம்பாஷணையும் இருந்தன. மூன்றும் நாள் ஊர்க்காட்சிகள் காட்டுவதற்காக அன்பர்கள் மோட்டாரில் அழைத்துச் சென்றனர். அவற்றுள் ஒன்று றொக்கில்டே என்னும் புராதன பெரிய ஆலயம் தற்போது அது ஓர் காட்சிச்சாலையாகவே மாறியுள்ளதெனலாம். ஆலயத்தின் இருபக்கங்களிலும், மன்னர்களின், மஹாராணியார்களின், படைத்தலைவர்களின், சலவைக்கல் பெட்டிகளில் அழகான முறையில் அடக்கஞ்செய்திருப்பதைக் காணலாம். இந்த முறை ஐரோப்பாவில் வேறுபல இடங்களிலும் பேணப்பட்டுள்ளது; பழைய ஆலயங்களிலிருந்த தெய்வ சாநித்தியம் நாளடைவில் அருகியதற்கு, இதுவும் ஓர் காரணமாக இருக்கலாம்.

## 8 ஹொலாந்து

அடுத்து நான் சென்ற தேசம் ஹொலாந்து. சர்வசமய சரித்திர ஆராய்ச்சிக் கழகத்தின் பொதுக்காரியதரிசியான டாக்றர்: விளீக்கா. அம்ஸ்டொம் சர்வகலாசாலேயில் பேராசிரியராக உத்தியோகம் பார்ப்பவர். எனவே, அந்த அன்பரின் இல்லத்தில் ஓர் தேநீர் விருந்திற்குச் செல்ல வேண்டியதாயிற்று. அத்தோடு, அவர் கடமைபார்க்கும் பழைய புகழ் பெற்ற சர்வகலாசாலேயைப் பார்க்கும் சந்தர்ப்பமும் கிடைத்தது. ஹொலாந்து தேச மகாராணி ஜூலியானு அவர்கள் சமயத்துறையில் நல்மதிப்புப் பெற்றவள். உலக சமாதானத்திற்காக உழைப்பவர். ஆங்கில சஞ்சிகை மூலம், எமது சமரஸ சுத்த சன்மார்க்கப் பணியின் ஆரம்பத்திலேயே அதற்கு ஆசிச்செய்தி அனுப்பிய ஐரோப்பியப் பெரியார்களுள் இந்த மகாராணியார் முக்கிய இடம் பெற்றுள்ளார். எனவே, அப்பெருமாட்டியை, கட்டாயமாகச் சந்திக்க வேண்டுமென அன்பர்கள் விரும்பினர். ஆனுல், அப்போது அவர் கிரேக்க நாட்டிற்கு விஜயஞ் செய்திருந்தபடியால், அந்த வாய்ப்புக் கிட்டவில்லே.

## 9 பெல்ஜியம்

இனி, பெல்ஜியத்தில் நடந்த சர்வதேச இளேஞர் மகாநாட்டிற்குச் செல்வோம். தலேநகரான பிறஸ்ஸல்ஸிலிருந்து அறுபது மைல் தூரத்திற்கப்பாலுள்ள நாட்டுப்புறத்தில் மகாத்மா காந்தியின் பேரால், சாந்தி சர்வகலாசாலேயை Peace University நிறுவியவர், பிதா. பியர் அவர்கள். இவருக்கு இப்போ, வயசு 51. நோர்பல் சமாதானப் பரிசுகள் பெற்றவர் குழுவில், வயசால் இளேயவர் இவரே. அந்தப் பரிசு இவருக்கு 1958ம் ஆண்டில்,

இரண்டாவது கொடிய உலக யுத்தத்தின் பயனுக நாடற்ற வீடற்ற வேறு எக்கதியு ம ற் ற அ க தி களுக்கு இவர் பத்தாண்டுகளாகச் செ ய் து வ ந் த அரும்பணியைப் பாராட்டி வழங்கப்பட்டது. அப் பரம தொண்டில், அவர் ஈடுபட நேர்ந்த விதம் ஓர் அற்புதமான வரலாறு. அதைப்பற்றிய விளக்கந் தர நேரம் போதாது. கருணை உள்ளமும், கூர்ந்த மதிநுட்பமும், நிர்வாகத்திறமையும், உடல் வலி யும் இவரிடம் மிகவும் அருமையாகப் பொருந்தி தியுள்ளன. நமது இந்துமத சம்பிரதாயத்தில் அவரை விபரிக்கும்போது அ வ ரை ஒரு பூ ர ண யோகி என்றே அழைக்க வேண்டும். பக்த, ஞான, கர்ம யோகப் பாதைகள் அவர் வாழ்க்கை யி ல் நன்கு இணைந்துள்ளன. எந்த நேரமும் சிரித்தமுக முடையவர். அவரது அகத்தின் அழகை நம க் கு துலக்குவதற்கு இந்த முகக்குறி ஒன்றே போதும்.

அவர் நடத்திய இளைஞர் மகாநாட்டின் முறை கள் எனக்கு ஓர் தனிப்புது அறிவையூட்டின. ஏழு நாட்கள் பிரசங்கங்கள் இருந்தன. ஆ ங் கி ல ம், ஃபிரெஞ்சு, ஜேர்மன் ஆகிய மூன்று மொழிகளில் ஒன்றில் பேசும்திறமை படைத்தவர்கள் எழுவர் வெவ்வேறு தேசங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட் டிருந்தனர். ஒரு நாளுக்கு ஒருவரின் பிரசங்கமே யிருந்தது. அதுவும் ஒரு மணித்தியாலமாத்திரம். பேச்சு முடிந்ததும் தலைவர் முடிவுரையே இல்லா மல் கூட்டம் கலைந்துவிடும். மண்டபத்தின் முற் றத்தில் ஒரு மணித்தியாலம் போல் ஓய்வும் தே நீர் விருந்தும் நடைபெறும். அந்தவேளையில், சபை யோர் பிரசங்கியாரின் கருத்துக்களைத் துருவி ஆராய் வர். தம்முள் கலந்து கொண்டு, கேள்விகள் கேட் பதற்குக் குறித்த சிலர் நியமிக்கப் ப டு வ ர் க ள் . மூன்று மொழிகளில் கிழம்பும் இந்த வினு க் க ள் உடனடியாகவே மொழி பெயர்க்கப்படும். இரண்

டரை மணித்தியாலம் இந்த சம்பாஷணை நடை பெறும். இறுதியில், தலைவர், முடிவுரை கூறுவார். பேசப்பட்ட விஷயம், சந்தேக விபரீதமறத் துருவி ஆராயப்பட்டபின்னர், அதின் நுட்பமான கருத் துக்கள் இளம் உள்ளங்களில் பசுமரத்தாணிபோல், பதிய வேண்டுமென்ற அரிய நோக்குடனே, பிதா பியர் அவர்கள், இந்த அற்புத முறையைக் கை யாளுகிறார்கள். இந்த முறை நம் இனத்தார் நடாத் தும் குருபூஜை முதலாம் விழாக்களில் கையாளப் பட்டால், நன்மையாயிருக்கும். ஆனல், மேலே கூறப்பட்ட நிபந்தனைகட்குட்பட்டுப்பேச எத்தனை பேர் முன்வருவார்கள் என்பதுதான் சந்தேகம். இந்தப் புது ஒழுங்குமுறையைப் பிதா பியர் Dialogue ''சம்பாஷணை'' என்றே அழைக்கிறார். அந்தச்சொல் லே, நமக்கு பகவத்கீதையை நினைவூட்டுகிறதல்ல வோ?

என்னைப் பேசுமாறு கேட்டிருந்த விஷயம், ''உலக சமாதானத்திற்குக் காந்தியடிகள் வாக்கா லும், வாழ்க்கையாலும், போதித்த, சாதித்த அஹிம்ஸாமார்க்கத்தைத் தவிர பிறிதோர் வழி யில்லை.'' என்னும் கருத்தைக் கொண்டிருந்தது. முதன் முதலாகப் பிதா. பியர், என்னைச் சந்தித்து நல்வரவு கூறியவுடன் அவர் கேட்டகேள்வி;, இன் றைய உலகத்துக்கு அத்தியாவசியமாகத் தே வைப்படும் வஸ்து எதுவோ? (What is the greatest need of the times?) என்பதாம். 'அன்பு' (Love) என்று ஒரே சொல்லில் யான் பதில் இறுத்ததும், அப்பெரி யார் என்னைக் கட்டித் தழுவிக் கொண்டார். அவர் கண்டிருந்த உண்மை எதுவோ? அதையே யான் கூறிவிட்டேன். பின்னர், என்பிரசங்கத்துக்கு'அன்பு' என்னும் தத்துவமே பீடிகையாய்விட்டது. காந்தி யடிகளின் மறைவுக்குப்பின் ஆசாரிய விநோபா, அன்பின் மூலம் புரிந்து வரும் அற்புதச் செயல்

களையும் விளக்கினேன். இயற்கை அமைப்பில், பல வகைச் செடிகள், மரங்கள், கொடிகள் உள்ளகாடு அழகாயும் செழிப்பாயும் இருப்பதைக் காண்கின்றோம். பல சாதியினர், வெவ்வேறு மொழியினர், பல சமயத்தவர் சேர்ந்து வாழும் சமுதாயத்தினிடையே அமைய வேண்டிய நியதியும், அதுவேயாம். ஆனால், மக்களிடையே பரஸ்பர அன்பு இல்லாத காரணத்தால், காட்டில், காணும் வனப்பையும், சிறப்பையும் நாட்டில் காண முடியாமல் போய் விட்டது. அன்பில்லாத நிலையில், சாதி-சமய மொழி வேற்றுமைகளால், சண்டையும் சச்சரவுகளுமே வளர்ந்து, எல்லோருக்கும் துன்பத்தைக் கொடுக்கின்றது. ஆகையால், அணுக்குண்டுக்குத் தக்க விடை அன்பை அடிப்படையாகக் கொண்ட ஆத்மக்குண்டேயாம். இந்த மகத்தான உண்மையை நமக்கு விளக்கவே, காந்தி, வினோபா, போன்ற மகாத்மாக்கள் தோன்றியுள்ளாரெனக் கூறினேன். உணர்ச்சி வசப்பட்ட என் பேச்சு சபையில் பலரை உருகச் செய்தது. பேச்சின் இறுதியில்:

> ''ஆண்டவனே, எங்கே பகைமை இருக்கிறதோ அங்கே, எங்கேவேற்றுமை தலைகாட்டுகிறதோ அங்கே ஒற்றுமையையும், எங்கே ஏக்கமும் பீதியும் மக்களை வாட்டுகிறதோ அங்கே, நம்பிக்கையையும், விசுவாசத்தையும் எடுத்துச் செல்லும், உன் கருவியாக என்னை ஏற்றருள்'',

என்னும் அஸிசி பிரான்சிஸ் தேவரின் பாடலுடன் என் பேச்சு முற்றுப்பெற்றது. இதைக்கேட்டதும் தலைவர் உட்படப் பலர் கண்ணீர்விட்டனர். ஓர் அமெரிக்க கன்னி, கதறி அழுதும்விட்டாள். அப் பெண், அமெரிக்கப் பிரபல எழுத்தாளரான திரு. நோர்மன் கசின்ஸின் புத்திரி என்பதைப் பின்னர் அறிந்தேன். மகாநாட்டு முடிவில் அந்த நகரசபை

மேயர் எல்லோர்க்கும் ஓர்விருந்து அளித்தார். அப்போது தத்தம் நாட்டுப் பாடல்களை அவரவர் மொழியில் பாடினர். என்னையும் ஒரு பாட்டாவது பாடும்படி வற்புறுத்தினர்;

"கண்ணனென்றும் கிறிஸ்துவென்றும்
காசினியோர் போற்றிட
மண்ணுலகை உய்யவைத்த மகாத்மா
நாமம் வாழ்கவே"

என ஆரம்பிக்கும் எனது சொந்த காந்தி வாழ்த்துக் கவிதையே பாடினேன். எல்லோரும் கேட்டின்புற்றனர். உள்ளமும், உள்ளமுங் கலந்த நிலையில், மொழி தெரியாப் பிரச்னை தோன்றவில்லை.

## 10. ஜர்மனி ஸ்விற்ஸர்லாந்து

மேற்கு ஜெர்மனியில் யான் சுற்றுப்பிரயாணம் செய்த காலம் நான்கு வாரங்கள். இதில் பத்துத் தினங்கள் மார்பேக் சர்வகலாசாலையில் நடந்த சர்வ சமய சரித்திர மகாநாட்டுத் தொடர்பில் கழிந்தன. எஞ்சிய இருபது தினங்கள், பல பட்டினங்களிலும் நாட்டுப்புறங்களிலும் செலவாகின. முதலில் மேற்குக் கரையோரமாக அதிவடக்கிலுள்ள ஹம்பேக் துறைமுகம்வரையில் சென்று, பின்னர் நடுப்பிரதேசமான ஹனேவர் முதலாய பட்டினங்களில் தங்கிவிட்டு, இறுதியில் கிழக்கு எல்லைமார்க்கம் தென்திசை நோக்கி ஃபிறுங்போட் நகரையடைந்தேன். நகரங்களிலும் பார்க்கக் கிராமப்பகுதியிலேயே மக்கள் திருப்திகரமாய் வாழ்வதைப் பார்த்தேன். தங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள், பால், பழங்கள், மரக்கறிகள் முட்டைகளையெல்லாம், சொந்தப்பண்ணைகளிலேயே மக்கள் உற்பத்தி செய்துகொண்டு, கடவுள் பக்தியுடன் சந்தோஷ

மான வாழ்வு நடாத்துகிறார்கள். விவசாயத்திற்கு விஞ்ஞானம் பெரிதும் உதவியாக இருக்கின்றது. ஒவ்வொரு கிராமமும் ஒரு குடியரசுபோல விளங்கு கிறது. மூன்றாவது யுத்தத்தைப்பற்றிய பேச்சோ பீதியோ அப்பகுதிகளில் கிடையாது. அப்படி நேர்ந்தாலும் தங்களுக்கு ஓர் தீங்கும்வராது, இயந் திரசாலைகள் அருகாமையில் இல்லாதபடியால் என் றார்கள். இன்று இந்தியாவில் விநோபாஜி, பிரசா ரஞ் செய்துவரும் சர்வோதயக் கொள்கை ஐரோப் பாவில் நடைமுறையில் சிற்சில இடங்களில் இருக்க வே செய்கின்றது. இறுதியாக சர்வசமய சரித்திர மகாநாட்டிற்கு வருவோர், அதில் கலந்துகொள்ள, உலகின் சர்வகலாசாலைகளிலிருந்து தத்துவப் பேரா சிரியர்களும், உளநூல் வல்லுநரும் வந்து கூடியிருந் தனர். மொத்தம் 550 பிரதிநிதிகள். இவர்களுள் பெரும்பாலார், ஐரோப்பியர். இந்தியக் குடியர சுத் தலைவர் டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் அவர் களின் ஆசிச்செய்தியுடன் ஆரம்பித்த மகாநாடு உப தலைவரான டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் அனுப்பிய வாழ்த்துரையோடு முடிவடைந்தது. இதுபோன்ற உலக அறிஞர் கூட்டத்தில் தமிழர் கண்ட நாகரிகத்தைப்பற்றியும், அவர்கள் நிறுவிய சமயநெறிகள் குறித்தும், அடியார்கள் பெருமை பற்றியும் பேசும் அரும்பாக்கியத்தை இரண்டாம் முறையாக எனக்கு அளித்த திருவருளின் மகிமை யைப் பாராட்டவும் அதற்கு வணக்கமான நன்றி செலுத்தவும் கடப்பாடுடையேன். "நயந்தோர வையத்து நான்முன் செய்த புண்ணியமே தென்னம் மே! புவி ஏழையும் பூத்தவளே!" என்று அபிரா மிபட்டர் வாக்கையே நினைந்துருகுகின்றேன். தாயு மானார் வரலாறும், அவரது உபதேசமும் என்னும் விஷயம் எனக்குத் தரப்பட்டிருந்தது. இதைத் தெரிந்தெடுத்தவர் மகாநாட்டின் காரியத ரிசியாகத் தொண்டாற்றிய பேராசிரியை டாக்டர்

அன்னேமேரி ஸ்சிம்மெல் அவர்கள். என் பிரசங்கத்தில் தாயுமானுர் அருளிய மெய்ப்பொருள் விளக்கம், தேவி தோத்திரம், குருமரபு, அடியார் வணக்கம், மௌனேபதேச தத்துவம், சர்வமத சமரசம் முதலியன அடங்கியிருந்தன.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறென்றறியேன், பராபரமே!"

"கொல்லா விரதங் குவலயமெல்லா மோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பராபரமே"!

என்ற பராபரக் கண்ணிகளின் கருத்துக்கள் என் பிரசங்கத்தின் இறுதியில் விளக்கம்பெற்றன. மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிய டாக்டர் ஃபிறெடிறிக் ஹெயிலர் உலகப் பிரசித்திபெற்ற தத்துவ ஞானி; பலமொழிப் புலவர்; அன்பும் அடக்கமும் பொருந்தியவர். மாக்ஸ் முல்லரின் இடத்தைப் பெற்றவர். இந்துமதப் பற்றுடையவர். அவரது முடிவுரையில் யான் வற்புறுத்திய முக்கிய கருத்துக்கள் சில இடம்பெற்றன.

எனது யாத்திரையின் இறுதிப் பாகம் நவராத்திரி பூசையோடு பொருந்தியது. முதல்நாள் தேவி ஆராதனை அன்பர்கள் சிலருடன் ஜேர்மனியில் நடந்தது. சரஸ்வதி பூசை சுவிற்ஸலாந்து சூறிக்நகரில் மிகவும் விசேடித்த முறையில் கொண்டாடப்பட்டது. அந்த நாட்டில், சரஸ்வதி பூசை நடந்தது, இதுவே முதன்முறையென அன்பர்கள் ஆனந்தமுற்றனர்.

('ஆத்மஜோதி'யில் வெளிவந்த வானெலிப் பேச்சைத் தழுவியது.)

# புதுவருடப் பிறப்பில் அடங்கிய வானூல் தத்துவங்கள்

## இந்துக்களின் மதி நுட்பத்துக்கு பஞ்சாங்கம் ஒரு எடுத்துக்காட்டு

தமிழ்ப் பஞ்சாங்கத்தில் வருஷப் பிறப்புக்கருமத்தை விபரிக்கும் பக்கத்தில் 'விஷு புண்ணிய காலம்' என்னுஞ் சொற்றொடர் தவருது வருவதை வாசகர்கள் கவனித்திருப்பார்கள். இதனுல் இச்சொற்றொடரில் அடங்கியுள்ள மிக நுட்பமான வானூல் உண்மையை உணர்ந்தவர்கள் மிகச் சிலரேயாவர். நமது மூதாதையர்கள் கணித்து வைத்துப் போன சூரிய சித்தாந்தத்தின் அருமைக்கும் பெருமைக்கும் இது ஒன்றே போதிய சான்ருகும்.

மேல் நாட்டு நவீன வானூல் சாஸ்திரத்தில் அயன சலன அல்லது கிராந்திபாதகதி (Precession of the Equinox) மிகவும் முக்கிய இடம் பெறுகின்றது. விஷுவரேகையும் சூரியன் செல்லும் பாதையும் குறுக்கிடும் இடம் சதா பிந்திச் சென்று கொண்டிருப்பதை மேல்நாட்டு வானூல் விற்பன்னர் நிச்சயம் பண்ணியது சென்ற நூற்றுண்டிலேயாம். பெரிய தூரதிருஷ்டிக் கண்ணுடி மூலம் பல வருஷந் தொடர்ந்து பார்த்துக் கவனித்து, குறித்த சந்திப்பிடம் ஒரு பாகை பின் செல்ல எழுபது வருஷங்கள் எடுக்குமெனக் கணித்துள்ளார்கள்.

இக்கணக்கின்படி ஒருமுறை சந்தித்த பாகையில் மறுபடியும் சந்திக்க 25,200 வருஷங்கள் செல்லுமென்பது தெளிவாகின்றது. பழைய இந்திய

வானூல் சாஸ்திரமானது இதனை 25500 ஆண்டுகளை அடக்கிய ஒரு பெரிய வருஷமென்றும், அதின் பன்னிரண்டு மாசங்களில் ஒவ்வொன்றும் 2125 ஆண்டுகளை உடைத்து எனவும் கணித்துள்ளார்கள். புறக்கருவி எதுவும் உதவிக்கில்லாது, விண்ணை அளந்து கட்டிய அவர்களின் மதிநுட்பத்தை என்ன சொல்லிப் பாராட்ட முடியும்?

விஷுவம் இரண்டு: மகா விஷுவம், (Vernal Equinox): விஷுபதம். (Autumnal Equinox). இதைப் போலவே, அயனகாலமும் இரண்டு: கோடைக்கால அயனம், (Summer Solstice); மாரிக்கால அயனம், (Winter Solstice) இந்த நான்கும், பகலும் இரவும் ஒரே அளவுள்ள காலத்தையும், பகலானது இரவிலும் பார்க்க நீடித்த வேளையைக் கொண்ட காலத்தையும், பகலிலும் பார்க்க இரவு கூடிய நேரத்தையுள்ள காலத்தையும் குறித்து நிற்பவையாகும்.

விண்ணில் நடைபெறும் இந்த மாற்றங்களெல்லாம் சூரியனின் நிலைகொண்டு கணிக்கப்படுவதால் பண்டைக்காலச் சமயங்களெல்லாம் சூரிய வழிபாட்டை ஆதிவழிபாடாகக் கொண்டிருந்தன. வானூல் ரீதியில் மாரிக்கால அயனத்துடன் தொடர்புடையன கிறிஸ்தவர்களின் நத்தார் பண்டிகையும் இந்துக்களின் பொங்கல் பண்டிகையும். ஆரம்பத்தில் இவ்விரண்டும் சூரியவழிபாட்டிற்குரிய தினங்கள். ஆனால், முந்தியதில் சூரியவழிபாடு (Sun-Worship) தேவ குமாரவழிபாடாக (Son-Worship) மாறிவிட்டது. பிந்தியதில் சூரியவழிபாடு இன்னும் பிணைந்துள்ளது· சங்ககால இலக்கியமான திருமுருகாற்றுப்படையில்;

"உலகம் உவப்ப வலன் ஏர்புதிரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டா அங்கு
ஓவற இமைக்கும் சேண் விளங்கு அவிரொளி"

யென, தூரத்தில் விளங்கும் மிக்க பிரகாசத்தை யுடைய சூரியனை எல்லாரும் போற்றிப்புகழ்ந்தனர் என்ற உண்மை விளங்கப்படுகிறது. இளவேனிற் காலத்தையும் இந்திர விழாவையும் சிறப்பித்துக் கூறும் சிலப்பதிகாரங்கூட, அதின் மங்கல வாழ்த் துப்பாடலில் "திங்களைப் போற்றுதும்" "ஞாயிறு போற்றுதும்" என வற்புறுத்தியிருப்பதை உற்று நோக்குக! சூரியனைப் பற்றிய நக்கீரர் வர்ணனை யில் எவ்வளவு தூரம் இளங்கோவடிகளின் உள்ளம் ஈடுபட்டிருந்ததென்பதற்கு அவர் இயற்றியுள்ள:
—மண்ணகமடந்தை.

"புதையிருட் படா அம்போக நீக்கி
உதையமால்வரை உச்சித் தோன்றி
உலகு விளங்கு அவிர் ஒளி மலர் கதிர் பரப்பி"

எனும் வரிகள் போதிய சான்றாகும்.

நிற்க, வருஷப்பிறப்புகள் அநேகம். அவை எல்லாச் சாதியினர்க்கும், எல்லாச் சமயத்தினர்க் கும் குதூகலம் கொடுக்குங் கொண்டாட்ட தினங் கள். அவை நிர்ணயஞ் செய்யப்பட்ட வரலாற் றைத் துருவி ஆராய்ந்தால் மிகவும் விசித்திரமான ருசிகரமான உண்மைகள் வெளிவரும்.

உதாரணமாக, ரோமாபுரியை ஸ்தாபித்த ரோ முலஸ் மொத்தம் 304 நாட்கள் கொண்ட பத்து மாச வருஷத்தை நிர்ணயித்தான். அந்த வருஷம் மார்ச் மாதத்தில் ஆரம்பித்தது. இது எமது புது வருஷம்போல மகா விஷுவத் தொடர்பில் என்பது

வெளிப்படை. அவனுக்குப் பின் ரோமில் ஆட்சி புரிந்த ஜூலியஸ் சீசர் எகிப்தியரின் சரியான பஞ்சாங்கத்தைப் பின்பற்றினன். (இது இன்றுபோல் $365\frac{1}{4}$ நாட்களைக் கொண்டது.) ஜூலாய் மாசம் (July) சீசரால் தன் சொந்தப் பெயரால் சூட்டப் பெற்றதாகும். அவனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த ஆகஸ்று சீசர், அடுத்த மாசத்திற்கு (August) தன் பெயரைச் சூட்டி வைத்தனன். மார்ச் மாதத்துக்கு முன் இரு மாசங்கள் சேர்க்கப்பட்டன. வருஷத்தை $365\frac{1}{4}$ நாட்கள் கொண்ட காலமாகக் கொண்டு வருவதற்கு மகாவிஷுவத்துடன் தொடர்புற்றிருந்த புதுவருஷப்பிறப்பு, கி. மு. 46-ம் வருஷம் ஜனவரி மாதம் முதலாந் தேதி தொடங்கிய ஜூலியஸ் சீசரின் அப்தத்திற்குமாற்றப்பட்டது. இந்தவிதத்திலாகும். இன்று உலகெங்கும் வழக்கிலுள்ள வருஷப் பஞ்சாங்கம் கி. பி. பதினறும் நூற்றுண்டில் போப்பாண்டவராக இருந்த கிறெகறி, (Pope. Gregory) அவர்களால் நிர்ணயிக்கப்பட்டதாகும்.

அவர்செய்த மாற்றத்தினல் மொத்த நாட்களில் வித்தியாசம் ஏற்படாதிருக்க, ஒக்டோபர் 5-ம் தேதியிலிருந்து சில தினங்கள் விலக்கப்பட்டன. இந்த சந்தர்ப்பத்தில் ஓர் பழைய பேருண்மையைக் குறிப்பிட விரும்புகின்றேன். அதாவது, தெண்மெக்ஸிக்கோவில் வாழ்ந்தநாகரிகமக்களான மாயாசாதியினர், போப் கிறேகறி அவர்கட்கு ஆயிரம் ஆண்டுகட்கு முன், சௌரமாச ரீதியாகக் கணித்த பஞ்சாங்கம் 374,400 வருஷங்களில் ஒருநாள்கூட பிசகாமல் அமைந்திருந்ததாம். புதைபொருளாராய்ச்சியாளர் அண்மையில் கண்டுபிடித்த உண்மையிது. பழைய மாயா சாதியினர் தற்போது அமெரிக்க இந்தியரென அழைக்கப்படுகின்றனர். இவர்களின் சாமுத்திரிகா லட்சணம் இந்த மக்கள் மிகப்பழங் குடியினர் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

இந்துக்களாகிய நமக்கு இதைப் போன்ற பல சகாப்தங்கள் வழக்கில் உள. இவற்றுள் முதலில் வருவது கலியுகம். பிறக்கப்போகும் பராபவ ஙூ கலி. 5068-ம் வருஷம் ஆகும். கலியுகஆரம்பம், கி. மு. 3102-ம் ஆண்டு பெப்ரவரி மீ 18-ம் தேதியாகக் கணிக்கப் பட்டுள்ளது. அடுத்து வரும் சகாப்தம் கி. மு. 57-ம் வருஷத்தில் தொடங்கிய விக்கிரம சகாப்தம். இது புது ஆண்டில் 2023ம் இலக்கத்தைப் பெறுகின்றது. அதற்கு அடுத்து வருவது, இந்தியாவில் எல்லா மாகணங்களும் ஏற்றுக் கொள்வது, சாலிவாகன சகம். இது கிறிஸ்து சகாப்தத்திலிருந்து 77 வருஷங்கள் பிந்தியதுவே. பராபவ வருடம் சாலி வாகனசகம் 1889 ஆகும். இத்துடன் கொல்லம் வருஷத்தையும், முஸ்லிம் சகோதரர்களின் மொகரம் மாசத்தில் பிறக்கும் ஹிஜிரி சகாப்தத்தையும் நமது பஞ்சாங்கக்காரர்கள் சேர்த்துக் கொள்கிறார்கள். புது ஆண்டில் இவைமுறையே 1142-ம், 1386-ம்வருஷங்களாகும் கொல்லாம் புதுவருஷம் ஆவணி மாசம் முதலாம் தேதியாகும். ஹிஜிரிசகாப்தம் நபி நாயகம் அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்குத் தப்பியோடிய யாத்திரைக் காலமான கி. பி. 622-ம் ஆண்டிலிருந்து கணிக்கப்படுவது.

இம்முறை மேடரவி 13-4-66 புதன்கிழமை இரவு 8-10 மணிக்குப் பொருந்தி யுள்ளது. வடமொழியில் இது மேஷவிஷுவென அழைக்கப்படுகின்றது. விஷு என்பதற்கு மறு பெயர் சமராத்திரம். அதாவது, இரவும் பகலும் மணிக்கணக்கில் ஒத்தவை என்பது கருத்து. உண்மையில் வருஷப் பிறப்பன்று அப்படியிருக்கவில்லை. சமராத்திரமானது, கிறீன்விச் சோதிமண்டல ஆராய்ச்சிக்கணிதப் படி, இருபத்து நான்கு தினங்களுக்கு முன் அதாவது மார்ச் மாதம் 21ந் திகதி நடந்து விட்டது.

சாயன ஸ்புடப்படி மேஷ விஷுவானது மேடராசி யின் முதலாம் பாகையிலிருந்து இருபத்து மூன்று பாகைகளுக்கு மேல் பின் சென்றுள்ளது. மீன ராசியில் உள்ளது. நமது பஞ்சாங்கங்கள் நட்சத் திர மண்டலத்தை அடிப்படையாகக் கொண்ட நிராயணரீதியாக கணிக்கப் படுவதால் வந்துள்ள வித்தியாசம் இது. இளவேனிற் காலத்தின் முதலா வது மாசம் சித்திரை யென்னும் பெயர் பெற்றது. துலாராசியில் ஒளிரும் சித்திரை நட்சத்திரத்திலி ருந்த தென்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

தமிழர்களைப் போலவே தெலுங்கர்களும், கன் னடர்களும் மேட விஷுவையே புது வருடத்தின மாகக் கொண்டாடுகிறார்கள். வங்காளத்தில் கூட இளவேனிற்காலமே வருடப் பிறப்பாக கருதப் படுகிறது. ஆனால் ஆண்டுதோறும் நாட்களில் வித் தியாசம் உள்ளன. இதற்குக் காரணம் சிலர் சூரிய கதியைக் கொண்டும், வேறு சிலர் நட்சத்திர மண் டலத்தையோ, சந்திரகதியையோ கொண்டும் கணிப்பதினாலேயாம். இளவேனிற் காலம் பனி நீங்கிவிட்டகாலம். சகல சீவராசிகளுமே-ஏன் மரம் செடி கொடிகள் தாமும்-குதூகலமாய்த் தோற்ற மளிக்கும் வேளை. இவ்விதம் இயற்கை முழுவது மே சேர்ந்து கொண்டாடக் கூடிய ஓர் காலத் தைப் புது வருடப் பிறப்பாகத் தெரிந்தெடுத்த பழந்தமிழனின் மதி நுட்பமும், பண்பட்ட உள்ள மும் போற்றத் தக்கன. அவர்கள் வருடப் பிறப்பு விருந்திற்கு என முக்கியமாகச் சேர்த்துக் கொண்ட பச்சடி மிகவும் அருமையான வாழ்க்கைத் தத்து வத்தைத் தன்னுள் அடக்கியுள்ளது. அந்தப் பச் சடியானது வேப்பம் பூவும், மாம்பழமும், புளியும். சர்க்கரையும் சேர்த்து செய்யப்பட்ட ஒன்று வரு டப் பிறப்பு கொண்டாட வரும் சுற்ற மித்திர

ருக்கு முதலில் இதையே வளங்கினர்களாம். வருடம் பிறக்கும் அன்றே வாழ்வானது கசப்பும், புளிப்பும், இனிப்பும் கலந்துள்ள தென்பதை மறக்க முடியா முறையில் மக்களுக்கு நினைவூட்டுவதை தங்கள் முதல் கடமையாக நமது மூதாதையர்கருதினர் போலும்!

> "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல்
> வேறொன்றறியேன் பராபரமே"

என்னும் தாயுமானவர் மணி வாக்கைப் பேணி அன்பும், அறமும் பெருகி, வறுமையும் பிணியும் அருகி, ஆன்மநேய ஒருமைப்பாடு எங்கும் பரவி எல்லோரும் வாழ்க! இன்பமே சூழ்க! என்று பிரார்த்திப்போமாக!

('வீரகேசரி' யிலிருந்து தொகுக்கப்பட்டது.)

# உரிமையும் கடமையும்

உரிமையென்னும் பதம் அன்பு, சிவம், முருகு என்பன போன்ற பழைய தனித்தமிழ்ச் சொல். அதன் பல கருத்துக்களுள் 'கடமை'யும் ஒன்ருக அமைந்திருப்பதால் அதுமிகவும்பெருமையுடைத்து. ஒன்றினுக்கொன்று எதிரானவை போலத்தோன்றும் இருகருத்துக்களை ஒருங்கே பெறும் இந்த அருமைவேறு எம்மொழியிலும் இல்லையெனலாம். நல்வாழ்வுக்கு வள்ளுவர்பெருமான் வகுத்த வழியைத் துருவி ஆராய்ந்து பார்த்தால் உரிமையும் கடமையும் எப்படி ஒன்றுடன் ஒன்று பிரிக்கமுடியாது பிணைந்திருக்கின்றதென்பதும், உரிமையே கடமையாகவும், கடமையே உரிமையாகவும் எவ்விதம் மாறுகின்றனவென்பதும் தெற்றெனவிளங்கும். ஒரு தனி மனிதனுக்குள்ள உரிமையே பின்னர் அவன் சமுதாய மனிதனுகை மாறும்போது கடமையாய் விடுகின்றது. முந்திய நிலையில் பிறப்புரிமைகளாகக் கருதப்பட்டு வந்தனவற்றையே, ஒருவன் தனது சமுதாயத்தின் நன்மைக்காகத் தியாகஞ் செய்வது அவனின் முக்கிய கடமையாகின்றது. எனவே உரிமைக்குப் புனிதமும் பிரகாசமும் அளிப்பது கடமையேயாம். தன் கடமையைச் செய்யாத மனிதனுக்கு, உண்மையில், உரிமைக்கு உரிமையில்லையெனவுங் கூறிவிடலாம்.

ஒருவன் தன்மகனுக்குச் செய்யவேண்டிய கடமை அவனைக் கற்றவர் கூட்டத்தில் முந்தியிருக்கும்படி கல்வியில் மேம்படச் செய்வதாகும். எனக் கூறிய வள்ளுவர் அதே அதிகாரத்தில், மகன் தன் தந்தைக்குச் செய்யவேண்டிய கைம்மாறு "இவன் தந்தை இவனை மகனுகப் பெறுவதற்கு என்னதவஞ் செய்தானே!" எனப் பிறர்புகழ்ந்து பாராட்டுஞ்

சொல்லாகும் என்றனர். இங்கே உரிமையும் கடமையும் மிக உயர்ந்தபடியில் அழகாக விளக்கப்பட்டுள்ளன. சிறுவயதில் குழந்தையைக் காப்பாற்றிக் கல்விகொடுத்துவளர்ப்பது பெற்றோரின் கடமையும் குழந்தையின் உரிமையும் ஆகிறது. அதே கடமையும் உரிமையும், பிற்காலத்தில் பிள்ளை வளர்ந்து பெற்றோர் முதியவர்களானபோது, முறையே உரிமையும் கடமையுமாக மாறிவிடுகின்றன.

இதிலடங்கியுள்ள தத்துவத்தின் வாழ்வு வட்டமானது, குடும்பத்திலிருந்து குலமாகவும், குலத்திலிருந்து சமுதாயமாகவும், சமுதாயம் நாடாகவும், இறுதியில் நாடுகள் உலகமாகவும், விரிந்து விரிந்து பெரிதாகும்போது, பரிணமித்தால்தான் உலகில் அமைதியும் சாந்தியும் நிலவக்கூடும். ஆசான்-சீடன் அரசன்-பிரஜை, முதலாளி-தொழிலாளி முதலாய உறவுகளிலெல்லாம் உரிமையின்றிக் கடமையும், கடமையின்றி உரிமையும் இருக்கமுடியாது. ஒன்றைவிட்டு மற்றையதைப் பிரிக்கமுடியாது. அப்படிப் பிரித்தபோதெல்லாம் அழிவும் அமைதியின்மையுமே ஏற்பட்டனவென்பதற்கு உலக சரித்திரம் சான்றாகும். உலகில் தோன்றிய எத்தனையோ நாகரிகங்களுஞ் சாம்ராஜ்யங்களும் மண்ணோடு மண்ணானது, கடமையைக் கைவிட்டு உரிமையை மாத்திரம் வற்புறுத்திய காரணத்தினாலேயாம். இந்தச்சட்டத்திற்குச் சமயங்களும் உட்பட்டனவே. இந்துமதம் பௌத்தம், சமணம், கிறிஸ்தவம், வெவ்வேறு காலங்களில் செல்வாக்கிழந்து சீர்குன்றியதற்குக் காரணம் அம்மதக்குருமார்களும் புரோகிதர்களும் தங்கள் கடமைகளில்தவறி, அரசியல் விஷயங்களில் உரிமை பாராட்டி ஆதிக்கம்பெற முயற்சித்ததினாலேயன்றோ?

பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஐரோப்பாவின் இயந்திர நாகரிக முதிர்ச்சியின்பயனுக, பெரும்பாலான மக்கள் பெற்றது, உரிமையின்றிக் கடமை மாத்திரஞ் செய்யும், அடிமைவாழ்வு. இந்த அடிமைவாழ்வினது பொருளாதாரச் சூழ்ச்சியினரால் தேசபக்தியெனும் பொன்முலாம் பூசப்பட்டு, ஒவ்வொருநாடும் தனது அயல் நாடுகளுடன் இருக்க வேண்டிய அன்புறவைப் புறக்கணித்துக் கடமையைக் கைவிட்டு உரிமையையேபேசி, போட்டிபொருமைப் பூசலை வளர்க்க இறுதியில் உலகம் முழுவதையும் அடுத்தடுத்து இரு அகோரயுத்தங்களுக்கிரையாக்கிவிட்டது. இதன் பயனுகத் தோன்றியதே இன்று நாம் நேராகக்காணும் கடமையைக் கைவிட்டு உரிமையைமட்டும் கோரும் புரட்சிக்கொள்கை. நெடுங்காலமாக அடக்கப்பட்டு ஒடுங்கியிருந்தவர்கள் உரிமை வேட்கை பிறந்ததும், தங்கள் கடமையை மறப்பதில் வியப்பொன்றுமில்லை. அவர்களும் ஏனையவர்போல் சொந்த அனுபவம் மூலமாகவே பாடம் படிக்கமுடியும். மனிதரின் உரிமை வேட்கை நாடியின் ஓட்டத்தை நன்குணர்ந்த பரம வைத்தியரான காந்தியடிகள்தமது பூத உடலைவிட்டுப் புகழுடம்பு எடுப்பதற்குச் சிலதினங்களுக்குமுன் புதுடெல்லியில் நடத்திய பிரார்த்தனைக் கூட்டமொன்றில் செய்த உபதேசம் உலக சமாதானத்தை விரும்பும் ஒவ்வொருவரதும் நித்திய சிந்தனைக்குரியதாகும். அது பின்வருமாறு:

"உலகிலேயுள்ள மக்கள் யாவரும் தங்கள் உரிமைகளை நிலைநாட்டுவதில் இன்று அதிகம் சிரத்தை கொண்டுள்ளனர். ஆனுல் எவராவது அவ்வுரிமைகளுடன் சம்பந்தப்பட்ட கடமைகளைப்பற்றிச் சிந்தித்திருக்கிறுர்களில்லை. எல்லோரும் தத்தம் உரிமையை மாத்திரம் வற்புறுத்திக்கொண்டு போனுல் சமூகத்தில் குழப்பந்தான் ஏற்படும். மக்கள் தங்

கள் உரிமைகளை வற்புறுத்துவதிலும் பார்க்கத் தங்கள் கடமைகளைச் செய்வதிலேயே அதிக கவனம் செலுத்தினல், எங்கள் சமூகநிலமைஉன்னதமாகும். ஒரு சிலர் தமது உரிமைகளை மாத்திரம் அனுபவிக்க மற்றவர்கள் கடமைகளை மாத்திரம் செய்யமுடியாது. உரிமைகளைப் பிரயோகிக்குமுன் ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளையும் செய்தாகவேண்டும். கடமைகளைச் செய்யாமல் உரிமையை மாத்திரம் பாராட்டுவோன் தனக்கே அநர்த்தம் தேடியவனுவான். கணவன் -- மனைவி, முதலாளி — தொழிலாளி, ஜெமின்தார்—குடியானவர்கள், அரசன்—பிரஜைகள் என்பவர்களுக்கிடையே இப்படியாகக் கடமையும் உரிமையும் சரியாக இருத்தல் வேண்டும். கடமையைச் செய்யாமல் உரிமையை மாத்திரம் அனுபவிக்கக்கூடாது''.

இந்தியக் குடியரசுத்தினக் கொண்டாட்டத்தில் ராஜாஜீயின் பேச்சிலும் அவர் எழுதிய கட்டுரைகளிலும் காந்தியடிகளின் மேற்கூறிய உபதேசத்தின் விரிவுரையைக் காண்கின்றோம். தருமத்துக்குப் பயந்து ஆத்ம சுதந்திரத்துடன் தத்தம் கடமைகளை நிறைவேற்றுவதே மேலான நெறியென்பதை வற்புறுத்தி ''சுதந்திரம் பெற்றதின் முடிவு அனைவரும் தத்தம் சுயநலங்களைப் பெருக்கிக்கொள்வதல்ல. குடியரசில் உரிமைகள் பல உண்டு. ஆனுல் அவை அனைத்தும் கடமைகளின் நிழல்களேயன்றி வேறல்ல ..... கடமைகளைச் செய்வதில் மனம் வெறுக்காமல் உரிமைகளை எண்ணி மனம் வாடுவது, மரத்தை வெட்டித் தள்ளிவிட்டு நிழலை விரும்புவது போலாகும்'' என்ருர் ராஜாஜீ. காந்திஜியும் ராஜாஜியும் கண்ணன் காட்டிய வழிசென்ருேர். அவர்கள் வாழ்க்கையாலும் வாக்காலும் உலகுக்குபதேசித்தது கீதையின் சாரத்தையேயாம்.

உரிமைகாரணமாக உதித்த பாரதப்போரின் நடுவே தோன்றிய கீதை, கடமையை விளக்குவது போல் வேறு எந்தச் சமய சாஸ்திரமும் விளக்க வில்லை. இன்றைய உலக நோய்க்கு அதுவே சஞ்சீவியென வற்புறுத்துவதை யோகி ஸ்ரீசுத்தானந்தபாரதியாருடைய அழகிய கீதாயோக முன்னுரையிற் காணலாம். கீதாயோகம் மனிதன் தன்னைத் தானுணரும் ஆத்மீக வாழ்வை மாத்திரங் குறித்ததல்ல. மனையாட்சி, உலகாட்சி எல்லாவற்றினதும் கருமங்களையெல்லாம் அதின் முறைப்படி நன்கமைக்கமுடியும்.

('ஆத்மஜோதி'யிலிருந்து எடுக்கப்பட்டது.)

# ச ர ணா ஞ ச லி

திருக்கேதீச்சரநாதர்*

விண்ணோரும் விளங்கரிய விமலன் றன்னை
வெற்றிவேல் முருகனையன் றளித்த நெற்றிக்
கண்ணனைக் கௌரிமகிழ் கணவன் றன்னைக்
கடல்சூழ்ந்த கவின் நகராய் விளங்கிப் பின்னல்
மண்ணோடு மண்ணான மாதோட் டத்தில்
மறைந்திருந்த தேன்பொந்தை மா மருந்தைக்
கண்ணாரக் கண்டுகவல் நீங்குங் காலங்
கைகூடி வீட்டதென்று களிகொள் வீரே.

## கதிர்காமக் கந்தன்

சந்ததமு நினதருளைச் சார்ந்து வாழ்ந் திடுகின்ற
சற்சனர் தம் உறவுவேண்டும்
'சரவண பவாகுகா சண்முகா' வென்றுநிதம்
சாற்றடியார் நேயம்வேண்டும்

சிந்தனையி லுந்தனது சித்துரு தியானிக்குஞ்
சிவயோகர் ஆசிவேண்டும்.
சீவர்களின் சேவையே சிவபூசை யாய்க் கொண்ட
சீலர்களின் சேர்க்கை வேண்டும்

பந்தம தகன்றிட்ட பரமஞா னியர்பதம்
பற்றிப் பிடித்தல்வேண்டும்

---

* திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை ஆரம்பிக்குமுன் இயற்றப்பட்ட இப்பாடலில் அடங்கியுள்ள தீர்க்கதரிசனம் குறிப்பிடத்தக்கது. அஷ்டகமாக அச்சேறவிருந்த அச்சிறுநூல் பதிகமாக மாறியது- கௌரி அம்பாள் அருட்பெருக்கால் நிகழ்ந்த அற்புதமாகும்.

பாரெங்கு மவர்மொழி பரவிடும் பணியில் யான்
பங்கெடுத் துய்யவேண்டும்

'கந்தா! விசாகனே! கருணாகரா!' வென்று
கதறுநெறி தருதல்வேண்டும்
கதிர்காம க்ஷேத்திரந் தனிலமர்ந் தன்பர்க்குக்
கருணைமழை பொழிதெய்வமே!

### நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்

எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என் இனத்தார் வாழ்வொன்றே கருதவில்லை
உனக்கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற
உண்மையை யான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்குந் தீயர்தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டுகின்றேன்
தனக்கொருவ ரொப்பில்லாத் தாயே! இந்தத்
தாரணியில் சாந்தியையே தருவாய் நீயே.

### பகவான் ரமண மகரிஷிகள்

ஆர்வமிலார் தமையணுக மாட்டான் கண்டாய்
ஆருமிலார்க் காருயிரே போல்வான் கண்டாய்
பார்வையினாற் பவமொழிக்கும் பகவன் கண்டாய்
பக்தர்களை யீடேற்றும் பரமன் கண்டாய்
சூர்தடிந்த செவ்வேளின் றேற்றங் கண்டாய்
சுருதிகளின் முடிவான பொருடான் கண்டாய்
பார்புகழுந் திருவருணைப் பதியில் வாழும்
பரமகுரு வாம்ரமண மூர்த்தி தானே.

### மகாத்மா காந்தி

சாந்திக்கோர் தனியுருவா யுதித்தோன் கண்டாய்
சகமுழுதுஞ் சுகமுறவே வாழ்ந்தோன்கண்டாய்

வேந்தரெல்லாம் வணங்கிநின்ற விறலோன் கண்
டாய்
வேற்றுமைகள் அணுவுமிலா விமலன் கண்டாய்
மாந்தருளக் கோயிலிலே வதிவோன் கண்டாய்
மன்னுயிரைத் தன்னுயிர்போல் மதித்தோன்
கண்டாய்
காந்தியெனுந் திருநாமந் தன்னைத் தாங்கிக்
காசினிக்கா யுயிர் நீத்த கர்த்தன்றானே.

## அன்னை கஸ்தூரிபாய்

வள்ளுவர்க்கு வாசுகிவந் தமைந்தாற்போல
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்துகாட்ட
பள்ளத்தைப் பார்த்தோடும் வெள்ளமென்னப்
பல்லுயிர்மே லிரங்குபெரும் பரிவுகொண்ட
வள்ளலாங் காந்திமஹான் மனையாளாகி
வறுமையுற்ற பாரதத்தின் தாயுமாயெம்
உள்ளத்தில் நீங்காது உறைந்துநிற்கும்
உத்தமியாங் கஸ்தூரி கழல்கள்போற்றி.

## பகவான் அரவிந்தர்

சலிப்பென்ப தணுவுமின்றிச் சுயேச்சைப் போரில்
சாத்வீக நெறியளித்த சதுரன் கண்டாய்
அலிப்பூரிற் சிறைக்கோட்ட மமர்ந்த காலை
அமரநிலை தனையடைந்த அண்ணல் கண்டாய்
கலியுகத்திற் சத்யயுகங்காண வேண்டிக்
கடுந்தவங்கள் புரிந்த கர்மயோகி கண்டாய்
புலிப்பாணி பதஞ்சலிபோல் தமிழ்நா டுற்றே
புதுவை யொளிர் அரவிந்தப் புனிதன்றானே.

## சுவாமி ஸ்ரீ இராமதாசர்

முன்னொருநாள் மன்னவனுஞ் சிவாஜிகோரும்
முழுவரமு முவந்தளித்த முத்தன் கண்டாய்
பன்னெடுங்கால் கன்னடஞ்செய் பாக்கியத்தால்
பத்தனுய் வந்துதித்த வித்தல் கண்டாய்
அன்னையாங் கிருஷ்ணபா யார்வந்திர
ஆனந்தா ச்ரமமது அமைத்தான் கண்டாய்
தன்னையடை அன்பர்க்குத் தாயாய் ராம
தாசனெனத் தனையழைக்குந் தந்தை தானே.

## அன்னை கிருஷ்ணபாய்

மாயையெனுந் திரையையறுத் துண்மைகாண
மனங்கொண்டு அங்குமிங்கும் ஓடிவாடி
ஓயாத கவலையினே டுன்னைநாடி
உன்னடிகள் சார்ந்ததுமே உறுதிகூறி
'தாயே' என்ற டியார்குழாந் தாழும்வேளை
தானுவந் தெனையாண்ட கிருஷ்ணபாயே
வாயார நின்புகழே வழுத்துகின்ற
வரமெனக்கு உவந்தளித்தால் போதும்அம்மா.

## சுவாமி ஸ்ரீ சிவானந்தர்

மோனமாங் கைலாயத்தின்
முகட்டி லூற்றெடுத்து வேத
கானத் தோடிறங்குங் கங்கைக்
கரைதனில் தவத் தமர்ந்தே
தீனரைக் காப்பதற்காய்த்
திவ்ய ஜீவியத்தை நாட்டி
ஞான முதளிக்குஞ் சுத்த
சிவானந்தர் திருத்தாள் போற்றி.

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்

காயாவிலினிதமர்ந்தே காசினியைக் காக்கும்
கதாதரரின் கருணையினுற் கருச்சேர்ந்தானைச்
சேயாய்அத் திருப்பெயரே சூடினுனைச்
ஸ்ரீராம கிருஷ்ணரெனத் தேவர்போற்ற
ஓயாது காளியன்பில் உருகினுனை
உலகுக்கு உய்யுநெறி காட்டினுனைத்
தாய்போலத் தரணியைஆள் தயாளன்றன்னைத்
தட்சணேஸ் வரத்திலென்றுங் காணலாமே.

## ஸ்ரீ சாரதாமணி தேவியார்

பாரதத்தின் வேதாந்தப் பதியில்வந்து
பாரெல்லாம் ஒளிவீசும் பரமஹம்சர்
தாரமதாய் வைத்துகந்த தையலாளைத்
தாரணிக்கோர் தனியணங்காய்த் தோன்றினுளை
நாரதர்போல் பக்திநெறி நல்கினுளை
நரேந்திரனுக் கருள்சுரந்த நங்கை தன்னைச்
சாரதையாந் திருநாமம் படைத்துளாளைச்
சரண்புகுவார் சாந்திநிலை யடைவர் தாமே.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

அச்சமுற்று அடிமைகளாய் அயலார்க்கஞ்சி
அந்நியர்தம் மதம்புகுந்து அவர்தங்கையால்
பிச்சைபெறும் நிலையடைந்த பேதைமக்கள்
பிறப்புரிமை சிறப்பாக எடுத்துக்காட்டி
பச்சைமரத் தாணிபோற் பதியுஞ்சொல்லால்
பாதிரிமார் வாயடங்கப் பதிலுங்கூறி
இச்சகத்தில் எம்சைவம் தழைக்கச்செய்த
எழில்நல்ல நாவலன்றுள் ஏத்துவோமால்.

## கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

எத்தாலுந் தமிழ்ச்சாதி இனியுறங்கா
தென்ற பெரும் உறுதி கொண்டே
முத்தான தமிழ் மொழியின் முப்பெருமை
மூவுலகும் முழங்கும் வண்ணம்
பத்தாவதாண்டு தொட்டுப் பயன் கருதாப்
பணியொன்றே தவமாய்க் கொண்ட
சுத்தானந்தப் பெரியார் சுகுணமல
ரிணையடிகள் சிரமேற் கொள்வாம்.

ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம், நாவலப்பிட்டி.